உ

கடவுள் துணை

பீதாம்பரஐயர் ஜாலம்

2000

இஃது

கய்யனூர் - கன்னியப்பமுதலியார் பௌத்திரரும்

தக்கோலம் இராமசுவாமிமுதலியார் மாணவருமாகிய

க. அருணாசலமுதலியார் குமாரர்

க. ஆறுமுக முதலியார் அவர்கள்

இயற்றியது.

C. A. சிவபூஷண முதலியார் அவர்களிடம்

சர்வ சுதந்தரமும் பெற்று,

A. முத்துவடிவேல் முதலியாரால்

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை

1934

இதன் விலை] ரிஜிஸ்டர் காபிரைட் [ரூபா 1

ரிஜிஸ்டர் காபிரைட் அறிவிப்பு

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்:— இந்த "பீதாம்பர ஐயர் ஜாலம் - 2000" என்னும் நூலை, ம-௱-௱-ஸ்ரீ க. அருணாசலமுதலியார் குமாரர் க. ஆறுமுக முதலியார் அவர்களால் எழுதி, ம-௱-௱-ஸ்ரீ C. A. சிவபூஷண முதலியார் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு, ஷை யார் தமது திருவள்ளூர் ஆனந்தா பிரிண்டிங் ஒர்க்ஸில் அச்சிட்டு விற்பனைசெய்து தான் அனுபவித்து வந்ததை, அடியிற்கண்ட யான் சகல உரிமையும் ஷை C. A. சிவபூஷண முதலியார் அவர்களிடம் கிரயத்திற்குப்பெற்று என்பெயரால் ரிஜிஸ்டர் காபிரைட் செய்து அச்சிட்டிருப்பதால் இப்புத்தகத்தை என்னுடைய அனுமதியின்றி யாரும் அச்சிடக்கூடாது என்பதை இதனால் அறிவித்திருக்கிறேன்.

இப்படிக்கு,

அ[illegible]க[illegible]டிவேல் முதலியார்

நெ. 24, [illegible]ண்டவ[illegible]யப்பிள்ளைத்தெரு, சென்னை.

உ

விநாயகர் துணை

ரீ தாம்பரஜயர் ஜாலம் 2000

விநாயகர் துதி

சீர்நிறைந்த சதுர்மறைகள் துதிக்குஞ்சோதி
திருநுதலில் விழியுடைய தெய்வக்கோவே
கார்நிறைந்த பவமொழித்துப் பேரையீயுங்
கற்பகமே கனிரசமே கடலேபாகே
ஏர்நிறைந்த விடையூர்தி பாகத்தாயி
யீன்றெடுத்த கணபதியே யெந்தாயெந்தாய்
நேர்நிறைந்த ஜாலத்தின் காப்பாயுன்னை
நினைவுகொள்ள யென்னுவில் நில்லுநில்லே.

1 விநாயகர் மாயமாய்ப்போகும் ஜாலம்

ஓர் பெரிய படிகாரத்துண்டை நெருப்பிலிட்டுப் பொரிக்க அது உப்பிப் பருமனாகத் தோன்றும். அதையெடுத்து சிறிய கத்தியால் விநாயகரைப்போல் அங்கங்களமைத்து பத்திரமாக வைத்துக்கொள்ளவும். பின்பு சபையில்வந்து மேற்படி விநாயகரைக் காட்டி சபையோர்களை நோக்கி நான் இந்த விநாயகரை பாதாளத்திற்குப் போகும்படிச் செய்கிறேன் பாருங்களென்று சொல்லி சபைமத்தியில் விநாயகரை வைத்து சோடசோபசாரத்துடன் பூஜைமுதலியனவுஞ்செய்து இனி நீர் பாதாளம் போகலாமென்று விநாயகரை மண்ணினால் மூடுவது போல் மூடி தூபதீபங்கொடுத்து விநாயகமந்திரத்தைச் சொல்லிக்கொண்டே ஜலந்தெளித்து கொஞ்சநேரம் பொறுத்துப்பார்க்க விநாயகர் தோன்றாமல் வெரு மணலாயிருக்கக்கண்ட எல்லோரும் உனக்கு விநாயகர் வசியமென்று சொல்லுவார்கள்.

2 மாயமாய்ப்போன விநாயகர் மறுபடியும் தோன்றும் ஜாலம்

வெள்ளைமெழுகினால் விநாயகர் உருவஞ்செய்து முன்போல் சபையில்காட்டி இதோ பாதாளம்போன விநாயகரை மறுபடியும் அழைக்கி...ன் பாருங்களென்று மந்திரம் ஜெபித்துக்கொண்டே கையடக்கமாக ...ாயகரை மணலில் வைத்துவிட்டு தூபதீபம்காட்டி மணலைக்கிளறி ...நாயகரைக் கையிலெடுத்துக் காண்பிக்கவும். எல்லோரும் உன்

மகா மந்திரவாதியென்று மெச்சிக்கொள்ளுவார்கள். ஆனால் விநாயகர் வித்தியாசப்படாமல் உயரம், பருமன் முதலிய அங்கங்களைச் சரியாக அமைத்துச் செய்துக்கொள்ளவேணும்.

3 விநாயகர் அந்தரமாகப் போகும் ஜாலம்

அத்திமரத்தினால் விநாயகர் ஒன்றுசெய்து அதின்தலையில் ஊசி பிடிக்கும் காந்தத்தைத் தெரியாமல்வைத்து அந்த விநாயகருக்குப் பலவித வர்ணங்கள் கொடுத்து வைத்திருக்கவும். ஜாலமாடும்சபையில் மேலே இரும்பாணி இருக்குமிடமாகப் பார்த்து கூடாரமடித்து மேற்படி ஆணிக்குச்சரியாய் விநாயகரைவைத்து தூபதீபம் கொடுத்து இதோ விநாயகர் அந்தரமாகப் போகிறார் பாருங்களென்றுசொல்லி திரையை யெடுத்துவிட விநாயகர் அந்தரமாகப் போவதை அனைவருங் கண்டு ஆச்சரியமடைந்து உன்னைச் சித்துபுருஷனென்பார்கள்.

முக்கிய கவனிப்பு

மேற்சொன்னவிதமாக உன் சாமர்த்தியத்தால் எத்தேவதையைப் போலேனும் செய்துக்கொள்ளலாம். ஆனால் கற்கடகம், சிங்கம், கன்னி துலாம் அல்லாது எக்கடையோர்க்குண்டோ என்ற மூதோர் வாக்கியப்படி நடக்குமேயொழிய, மற்ற ஏனையோர்களுக்கு நடவாதெனவறிக. ஒவ்வொரு வேலைகளையும் கைப்பிரட்டாகவும் முன் ஜாக்கிரதையாகவும் கைப்பழக்கமாகவும் பிறருக்குத்தெரியாமலும் ஜனங்களிடம் வார்த்தை சொல்லிக்கொண்டே விளையாடவும்.

4 தேவர்களைக் காட்டும் ஜாலம்

சிறுமுன்னைச்செடிக்கு ஆதிவாரத்தில் காப்புகட்டி பொங்கல் பலி தூபதீபம் முதலியதும் செய்து வேரைப்பிடுங்கிவந்து உலர்த்தி பொடி செய்து மெல்லிய சீலையில்பரப்பி திரிசெய்து ஐங்கோலத்தைலம்பூசி ஓர் அகலில் காராம்பசுவின் நெய்விட்டு மேற்படி திரியைப்போட்டு எவ்விடத்திலேனும் விளக்கேற்றிப்பார்த்தால் எந்தெந்த தேவர்கள் வேணுமானாலும் தோற்றுவார்கள், அதைப் பார்ப்பவர்கள் எல்லாம் பிரமித்து உன்னை யோகபுருஷனென்பார்கள். விளக்கின்வத்தியை யணைத்துவிட தேவர்களெல்லாம் மாயமாய் மறைந்துப்போவார்கள். ஆகையால் தைரியத்துடன் பக்தியாகச் செய்யவும்.

5 அஞ்சனம் செய்யும் வித்தை

வெள்ளைமயிர் இல்லாத கரும்பூனை, கீரிப்பிள்ளை, இரட்டைவாலை, திகைப்பூண்டு பூச்சி, பேய்ப்பீர்க்கன்விரை, புல்லாமணக்கை

விரை, இவையெல்லாம் சமயெடையாக நறுக்கிப் பேய்ப்பீர்க்கன் சாற்றில் 1-சாமம் ஊரப்போட்டு எடுத்து உலர்த்தி பின்பு ஆற்றுத் தும்மட்டிக்காய்ச் சாற்றில் 1-சாமம் ஊறப்போட்டு அதன் பிறகு மேற்சொன்னவைகளை யெல்லாம் குழித்தயிலமாக வாங்கி, அதற்கு சரியெடை ஐங்கோலத்தைலஞ் சேர்த்து ரசம், சங்குபாஷாணம், முப்பூ, இவைகள் வகையொன்றுக்கு கழஞ்சு சேர்த்து மைபோலரைத்து வைத்துக்கொண்டு ஜாலக்காளைப் பூசித்து ஸ்ரீரீம், கிரீம், கிலியும், சவ்வும், ஐயும், அவ்வும், உவ்வும், அவ், கூ, கூ, நீலகண்டியென்று லக்ஷத்தியெட்டு உருசெபிக்க அஞ்சனத்திற்கு உயிருண்டாகும். அதை எடுத்து பதனப்படுத்திக் கொள்ளவும்.

6 இந்த்ர ஜாலம்

மேற்படி மையைத் திலர்தமிட்டுக்கொண்டு நூலேணியை விசறிவிட மெத்தைப்படியைப்போ விருக்கும். கையில் மையைப் பூசிக்கொண்டு இதோ பார் சேனைகளை வரவழைக்கிறேனென்று நான்கு திக்குகளிலும் போட பார்ப்பவர் கண்களுக்கு வெகு சேனைகள் வருகிறதைப்போல் தோன்றும். சல் பகவதீ இந்த நூலேணியை வாங்கிக்கொள்ளென்று ஆகாயத்தில் விட்டெறிந்தால் அது மேலேயே நிற்கும். பிறகு மையைத் திலர்தமிட்டுக்கொண்டு ஓர் வாழைக்கட்டையைக் கத்திகொண்டு வெட்ட ஆனை, குதிரை, பன்றி, மனிதன் முதலிய தலைகள் வந்து விழும். இதன்றி கல்யாணப் பூசனிக்காயை வெட்ட ஆனைத்தலையும், நல்லபூசனியில் குதிரைத்தலையும், கெச்சைக்காயை வெட்ட மனிதன் தலைகளும் வந்து விழும். அதுகளை யெல்லாம் கும்பலாகச் சேர்த்து போவென்று சொல்லி மையைக் கலைக்க போய்விடும்.

7 மஹேந்த்ர ஜாலம்

மேற்படி மையை கையில் பூசிக்கொண்டு மண்ணையள்ளி அஷ்ட திசைகளிலும் போட மகாமேரு முதலிய மலைகள் காணப்படும். அதுவுமன்றி, அதில் வாசஞ் செய்யப்பட்ட ஜீவராசிகள் முதலியதுந் தோன்றும்.

8 சமுத்ர ஜாலம்

மேற்படி மையை கையில் பூசிக்கொண்டு ஜாலக்காளை தியானஞ் செய்து மண்ணையள்ளி திக்குகளில் போட தீவாந்திரங்களுள்பட சத்தசமுத்திரமும், ஸ்ரீமகாவிஷ்ணுவுடன் லக்ஷுமியும், கப்பல், மச்சங்கள் முதலிய நீர்வாழ்வன வெல்லாந் தோன்றும். அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

9 கத்தி ஜாலம்

மேற்படி மையை கையில் தடவிக்கொண்டு பெரிய பட்டா ஒன்றை சனங்களுக்குக்காட்டி வாய்மேல் வைத்துப் பின்புறம் போட்டுவிட்டால் யாவரும் நீ கத்தியை விழுங்கிவிட்டாயென்றே நினைத்து மலைப்பார்கள். இதே மாதிரி இன்னும் எந்த வஸ்துவை யேனுஞ் செய்யலாம்.

10 பட்டணந் தோன்றும் ஜாலம்

இரவு வந்தவுடன் ஊருக்கு வெளியில் சென்று மையைக் கையில் பூசிக்கொண்டு சகலரும் பார்க்க மண்ணையள்ளி திக்குகளில் போட மனுஷாள் கூட்டத்துடன் வீதிகள், ஆலயங்கள் முதலிய ஓர் பெரிய பட்டணந் தோன்றும். அனைவரும் உன்னை மெச்சுவார்கள்.

11 ஜனங்கள் ஆடும் ஜாலம்

ஓர் சிறிய கொம்பில் சாம்பிராணியுடன் ஐங்கோலத் தைலத்தை யும் பூசி 'நமசிவய' ஓம்-கிலீம்-சவ்வும்-ஐயும் சர்வபசாசுகள் ஆக்ருஷணி என்று லக்ஷமுரு செபித்து தூபதீபங்கொடுக்க அந்த புகைப்பட்ட ஜனங்களெல்லாம் ஆடுவார்கள்.

12 கோகர்ன ஜாலம்

ஓம்-அவ்வும்-உவ்வும்-மவ்வும்-ஸ்ரீரீம்-இரீம்-கிலியும்-வயநமசி ஓம் குறளி வருவாய் வந்து நான் சொன்னதெல்லாம் செய்வாயென்று லக்ஷமுரு ஜெபித்து பலி பூசைகள் செய்து மையை விரலில் தொட்டுக் கொண்டு நீ நினைத்தவிடத்தைத் தொட அவ்விடமெல்லாம் கிழியும்.

13 கேஜகர்ன ஜாலம்

மேற்படி மையை எடுத்து குறளியைத் தியானித்து உன் இரண்டு காதுகளைத் தொடுவாயானால் உடனே இரண்டும் ஆடும். பார்ப்பவர்க ளுக்குத் தமாஷாக இருக்கும்.

14 பார்வை மை

ஆமை-1, மண்தவளை-1, கன்னிகோழி முட்டை-1, புதைத்த பிணத்தின் யெலும்பு 2-பலம், ஈசல் 2-பலம், நிலவாகைவிரை 2-பலம், மாக்கொடி 3-விராகனெடை இவைகளை யெல்லாம் பூந்தயிலமாக வாங்கி, கல்வத்திலிட்டு அஞ்சனக்கல் விராகனெடை-1, ஆள்காட் டிக் கருவுங் கூடவிட்டு 1-சாமமரைத்து சிமிளில் வைத்துக்கொண்டு

ஆஞ்சநேயருக்கும் அஞ்சனுதேவிக்கும் பூசைசெய்து வெள்ளிமலையில் தடவிப்பார்க்க களவு, ஏவல், தெய்வம், பூதம், பசாசு முதலியவைகள் தோன்றும். கைகண்டது.

15 பாதாள மை

காந்தம், நீலம், ஊமைகைமஞ்சள், தேவடியாள் கைவெற்றிலை செங்கழுநீர்வேர், தலைமஞ்சம்மாவு, கோரோசனை, குங்குமப்பூ இவைகள் வகைக்கு விராகனிடை-1, கல்வத்தில்போட்டு மாடப்புரா இரத்தம் விட்டு, சிகப்புநெய் 12-விராகனெடை சேர்த்து மூன்றுநாள் அரைத்து ஓர் சிமிளில் பதனஞ்செய்து காளிமுன் புதைத்து எட்டுநாளான பிறகு எடுத்து சவ்வாது, புனுகுவகைக்கு விராகனெடை-1, சேர்த்து மத்தித்து சர்வலோக வசிகரி, கிரீம், ஓம் என்று 1008-உருசெபித்து திலர்தமிட ஸ்திரீ புருஷர்களிருவரும் நீ கேட்டதைக் கொடுத்து வசமாவார்கள். கைகண்டது.

16 வேறு முறை

10-விராகனெடை வேர்ப்பலாக்கொட்டைக் கருக்கினதூள், அஞ்சனபாஷாணம் விராகனெடை-1, இவைகளைக் கல்வத்திலிட்டு விளக்கெண்ணை வார்த்து 1-சாம மரைத்து சிமிளில் வைத்து மேற்படி பூசைசெய்து வெற்றிலையில் தடவி யார் பார்த்தாலும் பூமியிலுள்ள சகலமுந் தெரியும். ஆனால் இதை 1-வாரம் வரையில் பூமியில் புதைத்து எடுக்க மிகவும் நல்லது. வேலைகளும் சீக்கிரமாய் முடியும்.

17 நெருப்பு உண்டாகும் ஜாலம்

தீமுறுகல் பாஷாணத்தைக் கடுகுபிரமாணமாக நறுக்கித் தாடையிலடக்கிக்கொண்டு, ஜாலமாடுமிடத்தில் கொஞ்சம் வரகுவைக்கோலைக் கும்பலாகப்போட்டு எல்லோரும் பார்க்க சபையோர்களே! இந்த வைக்கோலை நெருப்பில்லாமல் கொளுத்துகின்றேன் பாருங்களென்று சொல்லி அக்கினிதேவனைத் துதித்து வாயினுல் மேற்படி பாஷாணம் வைக்கோலில் விழும்படியூத திக்கென்றெரியும். அனைவரும் உனக்கு அக்கினிதேவன் வசியமென்று சொல்வார்கள்.

18 நெல்லைப் பொரிபொரிக்கும் ஜாலம்

முன்னதாக கால்படி நெல்லைச் சுண்ணும்புகாளவாயின் கீழ்ப் புதைத்துவைத்து காளவாய் சுட்டபின் எடுத்து ஈரம் படாதபடி பதனப்படுத்திக்கொண்டு, ஜாலமாடுமிடத்தில் மேற்படி நெல்லை ஒரு பிடி எடுத்து முறத்தில்போட்டு சபையோர்களுக்குக்காட்டி ஓ சபையோர்

களே! இந்த நெல்லைப் பொரிசெய்கிறேன் பாருங்களென்று அவ்விடத்திலேயே ஒரு வஸ்திரத்தை நான்கு மூலைகளிலும் நான்குபேரை பிடிக்கச்சொல்லி மேற்படி நெல்லைக்கொட்டி ஓம் கங்காளி, சாமண்டி, மயானருத்திரி, சீக்கிரமாக இந்தநெல்லை பொரிப்பாயென்று சொல்லிக்கொண்டே கொஞ்சம் ஜலந்தெளித்துத் துழாவ நெல் பளபளவென்று பொரியும். அனைவரும் பிர்மித்துச் சந்தோஷப்படுவார்கள்.

19 வஸ்திரத்தைக்கொளுத்தி பின்னமில்லாமல் காட்டும் ஜாலம்

ஜாலமாடும் சபைக்கு வருமுன்னமே ஒருபாண்டத்தில் ஸ்பிரிட்டை சேகரஞ்செய்து வைத்துக்கொண்டு சபையில்வந்து ஒரு கைகுட்டையை கொளுத்திக் காட்டுவதாக வாங்கி எண்ணெயில் தோய்க்கிறேனென்று ஸ்பிரிட்டில் நனைத்துக் கொளுத்த திக்கென்றெரியும். பார்ப்பவர்கள் துண்டு அக்கினிக்கிறையாகி விட்டதென வருந்துவார்கள். உடனே நீ அனைவரும் பார்க்க ஓம் மாடா, ஓங்காரமாடா, ஆகாயமாடா, அந்தரமாடா, சந்திப்பொழுதில் சாய்ந்தாடுமாடா, இவ்விடத்தில் சீக்கிரத்தில் வாடா என்று சொல்லிக்கொண்டே மேற்படி குட்டையை சீக்கிரம் எடுத்து அணைத்து உடனே ஜலத்தில் தோய்த்துப் பிழிந்து விரித்துக்காட்ட மேற்படி குட்டை பின்னமாகாமலிருக்கும். பார்ப்பவர்கள் ஆனந்தமடைவார்கள்.

20 முள்ளின்மீது உட்காரும் ஜாலம்

ரத்தன்புருஸ் என்னுஞ் செடிக்கும், செப்புநெரிஞ்சிக்கும் ஆதிவாரத்தில் காப்புகட்டி வேர் அராமல் பிடுங்கிக்கொண்டுவந்து வௌன்றுக்கொன்று தலைமாற்றிச் சத்தியில் அடைத்து பூசையில்வைத்து 'நமசிவய' என்று 1008-உரு செபித்து வாயில் அடக்கிக்கொண்டு முள்ளின்மீது உட்கார முள் தைக்காது. ஆனால் வேர் பிடுங்கும்போது தன்னுடைய பட்சி அரசாயிருக்கவேண்டும்.

21 சர்வ வசிய ஜாலம்

றீம்-ஐயும்-கிலியும்-ஸ்ரீம்-சவ்வும்-இறீம்-கிலீம்-ஓம் என்றுசொல்லி லக்ஷ உருசெபிக்க சித்தியாகும். இதனால் தரித்திரமெல்லாம் ஒழிந்து யாவரும் உனக்கு வசியமாகி நீகேட்டதை கொடுப்பார்கள்.

22 வாயில் தீவட்டிவைக்கும் வித்தை

ஜாண் அளவுள்ள இரண்டு குடைக்கம்பிகளை யெடுத்து அதன் நுனியில் பெரு நெல்லிக்காயளவு பந்தம்சுற்றி மண்ணெண்ணெயில்

தோய்த்து கைவசத்தில் வைத்துக்கொண்டு, சபைக்குவருமுன் ஆலாத்திபூரத்தை வாயில்போட்டு மென்று குழப்பி சற்றுநேரம் பொறுத்து வாயிலுள்ள எச்சிலை உமிழ்ந்துவிட்டு மேற்படி பந்தத்தைக்கொளுத்தி சபையோர்களைப்பார்த்து இப்பந்தத்தை வாயில்வைக்கிறேன் பாருங்களென்றுசொல்லி வாயில் வைத்துக்காட்ட ஆச்சரியப்படுவார்கள் வாய் சுடாது.

23 ஓட்டமாக ஓடும் ஜாலம்

விழுதியிலையைக் கொஞ்சம் வாயில்போட்டுமென்று தாடையில் அடக்கிக்கொண்டு எவ்வளவுதூரமானாலும் களையாமல் ஓடலாம். நிற்கவேணுமானால் ஏதாகிலும் ஓர்மரத்தைப் பிடித்துக்கொண்டுதான் நிற்கவேண்டும்.

24 சீசாவோட்டை மெல்லும் வித்தை

நாயுருவியிலையைப்பறித்து வாயிலிட்டுமென்று குழப்பிக்கொண்டு சீசாவோடுகளை வாயிலிட்டு அவலைப்போல் மெல்லலாம். ஆனால் சற்று பொறுத்து சுட்ட அன்னம் மூன்றுபிடி விழுங்கவும்.

25 கண்களில் மணலைக்கோட்டிக் கொள்ளும் வித்தை

நத்தைச்சூரி செடிக்கு சுக்கிரவாரம் காப்புக்கட்டி வேரறுமல் பிடுங்கிவந்து அதில் ஓர் துண்டை வாயிலிட்டு மென்று அடக்கிக்கொண்டு மணலைக் கண்களில் கொட்டிக்கொள்ள கண் அருகாது.

26 கரைத்தமஞ்சளை எடுக்கும் வித்தை

மஞ்சள் கொஞ்சம் அரைத்து நீரில்கரைத்து எல்லோருக்கும் காட்டிவிட்டு மறுபடியும் கரைத்தமஞ்சளை எடுக்கின்றேன் பாருங்களென்றுசொல்லி நீர்முள்ளி விதையை தூளாக்கி விபூதியுடன் கலந்து வைத்துக்கொண்டு விபூதிபோடுவதுபோல ஒருபெருஞ் சிட்டிகைப் பொடியைப்போட்டு துழாவியெடுக்க உருண்டையாக கையில் வந்துவிடும் பார்த்தவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

27 வீடெங்கும் பச்சோந்தியாடும் வித்தை

பச்சோந்தியைக் கொண்டுவந்து அதின்வாயினுள் ஆமணக்கன் கொட்டையை ஒன்றின்பின் ஒன்றாய் வேண்டிய அளவுசெலுத்தி பூமியில்புதைத்தால் அது சிலநாளைக்குள் செடிவளர்ந்து காய்காய்க்கும்போது அந்தக் காய்களை அறுத்துலரவைத்து எண்ணெயாடி வைத்துக்கொண்டு வேண்டும்போது மேற்படி எண்ணெவிட்டு தீபமேற்றிப்

பார்த்தால் வீடெங்கும் பச்சோந்திகளாகத் தோன்றும் விளக்கை அணைத்துவிட மறைந்துபோகும் கண்டவர்கள் பிரமிப்பார்கள்.

28 மணலை மெல்லும் வித்தை

குண்டுமணியிலையை வாயிலிட்டு நன்றாய்மென்று தாடையில் அடக்கிக்கொண்டு எவ்வளவு மணலையேனும் மெல்ல பல் கூசாது.

29 வசிய வித்தை

சூரியகாந்தி, செங்கழுநீர், முல்லை, கோழியவரை, வெள்ளைக் காவளை, செவ்வலரி, கரியசாலை, இவைகளின் பூச்சாறு சமனெடையாக எடுத்து, கொம்புத்தேன்சேர்த்து அரைக்கும்போது கோரோஜனம், புழுகு, பச்சைக்கற்பூரம், இவைகள் வகைக்கு கால்விராகனெடையும் பெண்ணின் மதுவுங்கூடச்சேர்த்து மைபோலரைத்து மோகினி மந்திரத்தைச்செபித்து வைத்துக்கொள்ள சகலரும் உன்னைவணங்கி நீ கேட்டதைக் கொடுப்பார்கள்.

30 வேறு வசிய வித்தை

புதியகஸ்தூரிமஞ்சள், ஊசிக்காந்தம், கோரோசனை, லவங்கம் பச்சைகற்பூரம், சாதிக்காய், இவைகள் வகைக்கு கால் விராகனெடையாக எடுத்து சுத்த வெள்ளைத்துணியில் தலைப்பிண்டக் கொடிவைத்து திரித்து அதன்மேல் கருப்புதுணி சுற்றி மண்டையோட்டில் காராவின் நெய்யூற்றி மேற்படி திரியைப்போட்டுக் கொளுத்தி மைவாங்கி அதில் புனுகு, சவ்வாது சேர்த்துக்குழைத்து திலர்தமிட்டால் மனிதர், தேவர், பைசாசுகள், முதலியதும் வசியமாகும்.

31 வேறு முறை

அழிஞ்சல் சமூலத்தைச் சூரணஞ்செய்து பெண்ணின்சீலையில் வைத்துத் திரியாக்கி மேற்படி நெய்முதலானதுகள் விட்டு கொளுத்தி மைவாங்கி நெற்றியிலிட கடலாடையுடுத்த இப்பிரபஞ்சத்தில் வசியமாகாததுமுண்டோ.

32 வேறு முறை

முத்தித் தேறின ஆடாதோடைக் கிழங்குக்கு மந்திரபூசைசெய்து எடுத்துக்கொண்டு மேற்படி பழமும் கோரோசனையும் கூட்டி அரைத்துத் திரியாக்கி சாரைப்பாம்புநெய்யை மண்டையோட்டிலிட்டுத் திரியைப்போட்டு கொளுத்தி மைவாங்கி அத்துடன் புத்துத்தேனைவிட்டு அரைத்தால் கல்வம் வெடித்துக்காணும் அதுசமயமெடுத்துப் பாணை

யில் வைத்துக்கொண்டு கணபதியுடன் அஞ்சனுதேவி, ஆஞ்சநேய ரைப் பூசைசெய்து மசி, நசி, என்று எட்டுநாள் விடாது செபித்துக் கண்களில் தீட்டினுல் உலகிலுள்ள சகல நிதிகளும் கண்ணுக்குத் தோன்றும்.

33 வேறு முறை

வெள்ளிக்கிழமை தன்னுடைய பக்ஷி அரசா யிருக்கும்போது மிளகுசாறணை செடிக்கு காப்புகட்டி, பொங்கல் பலி முதலானதுகள் செய்து வேரைப்பிடுங்கிவந்து குளிசத்திலடைத்துக் கட்டிக்கொண் டால் ஸ்ரீவ்சியமாகும்.

34 வேறு புருஷ வசியம்

ஊமத்தை, செம்முள்ளி, பொன்னுங்கண்ணி, சிகப்புகஞ்சா, செங் குவளை, பொன்னுவாரை, புல்லாமணக்கு, சென்னுயுரிவேர் இவை களின்சாறு வகைக்கு ஒரு விராகனெடை யெடுத்து புனுகு, சவ் வாது, கோரோசனை, இதுகளும் மேற்படி எடைசேர்த்து கொம்புத் தேன் காராவின் வெண்ணை, சிற்றண்டகரு இவைகள் கூடச்சேர்த் தரைத்து டப்பியில்வைத்து திலர்தமிட்டுவர கோரரூபமுள்ள மாத ராயிருந்தாலும் புருஷர்கள் மோகித்து கேட்டதை தருவார்கள்.

35 வேறு லோக வசியம்

றீம், ஐயும், கிலியும், ஸ்ரீம், சவ்வும், இறீம், கிலீம், ஓம் என்று சொல்லி லக்ஷம் உருசெபிக்க உன் தரித்திரமெல்லா மொழிந்து எல் லாகாரியமுங் கைகூடும். கைகண்டது.

36 ஜாலக்காள் வேறு வசியம்

ஓர் மஞ்சள்கிழங்கை பெண்போல உருவஞ்செய்து சித்திரமூலக் கொடியை மேலேசுற்றி சத்திபூசைசெய்து ஜாகினி, டாகினி, ஜாலக் காள்தேவி றீ ரா, ரா, ரா, என்று லக்ஷமுறு செபித்தால் அவள் உன்னுடன் சதா விளையாடிக்கொண்டிருப்பாள்.

37 வேறு கண்கட்டு மை

பத்துகுன்றியிடை பாதரசத்தைக் கால் கழஞ்சி சங்குபாஷாணத் தோடு சேர்த்தூ ஊர்க்குருவி வாயிலிட்டு தைத்து அபானவாயுந் தைத்து சிறிய குடுவையில் போட்டு ஒருபடி கள்ளுவார்த்து மூடி ஓர் மரத்துவிறகினுல் எட்டிலொன்றுய்க் காய்ச்சி எடுத்து அஸ்தி முதல் ரோமங்களையும் நீக்கி மைபோல் பேய்க்கருப்பன் சாற்றுலாட்டி வெள்ளைத்துணியில் தடவி நிழலிலுலர்த்தித் திரிசெய்து தலையோட்

டில் ஐங்கோலத்தைலம் விட்டு மேற்படி திரிபோட்டு தீபமேற்றி மையைவாங்கி ஜாலக்காளைத் துதித்துச் சிமிளில்வைத்துக்கொள்ளவும்.

38 பாம்பாகும் ஜாலம்

மேற்படி மையைத்தொட்டு வைக்கோலில்தடவி சபையில்போடப் பாம்பாகும்.

39 குளவியாகும் ஜாலம்

மேற்படி மையைத்தொட்டு புளியன் இலையில் தடவிப்போட குளவியாகும்.

40 பலவித பக்ஷிகளாகும் ஜாலம்

ஓம் என்று மையைக் கையில்தொட்டு பக்ஷிகளின் இரகில் தடவிக் கீழேபோட்டு நீ எந்தபக்ஷிகளை மனதில் நினைக்கிறாயோ அவ்வித மாகவே பார்ப்பவர் கண்களுக்குத் தோன்றும்.

41 தேளாகும் ஜாலம்

மேற்படி மையை வேப்பிலைக்குத் தடவிப்போட தேள், நட்டு வாக்காளி முதலியதுகள் ஆகும்.

42 முப்பூசெய்யும் முறை

தலைமண்டையோட்டை சின்னஞ் சிறுதுண்டுகளாக நறுக்கி அதனுடன் உழமண் அதாவது (தை மாசி மாதங்களில் உவர்நிலத்தில் பூர்க்கும்) மண்ணைக்கொண்டுவந்து கரைத்து வடிகட்டி அதில் மேற்படி ஓட்டைப்போட்டு, நீர்சுண்டக் காய்ச்சிப் பிறகு நல்லஜலம் விட்டு அலம்பி உலரவைத்துப் பின் சுண்ணும்புக்கல் நாலுபடிகொண்டு வந்து கரைத்துத் தெளிவையிறுத்து வேறு பாண்டத்திலூற்றி மேற்படி உலரவைத்த ஓட்டை முன்சட்டியில்போட்டு நீர்வற்றக் காய்ச்சியெடுத்து கல்வத்தில்போட்டு அரைக்கும்போது முன் தெளிவிறுத்த நீரையூற்றி மைபோலரைத்துப் பில்லைசெய்து காயப்போட்டுக் கருமானுலையில் வைத்து ஊதச் சுண்ணமாகும். அப்படிச் சுண்ணமாகாவிட்டால் மறுபடியும் அரைத்தரைத்து உலையில்வைத்து ஊதிச் சுண்ணமாக்கவும். பிறகு அதை நீரில்கலக்கி சுண்ணும்புக்காரையால் பாத்திகட்டி அதில்விட்டுக் கொஞ்சம் ஜலம்வரண்டபின் மறுபடியும் கரைத்து ஊற்றவும். இதேபிரகாரம் 9-தினம்செய்து வெய்யலில் உலரவைத்து சத்திக்குப் பூசைபோட்டு பதனம்செய்துக்கொண்டு சுடுகாட்டுப் புழுதி சாம்பலைக்கொண்டுவந்து சிறுநீரில் கலக்கித் தெளிவிறுத்து முன்போல் 9-நாள்வரை உலர்த்தினல் உப்பாகும். இத்துடன் முன் முப்பூவைச்

சேர்த்து நாதநீரினல் அரைத்து உலர்த்தி முழப்புடம்போட்டு ஆறின பின் எடுத்து டப்பியில்வைத்து உன்னிஷ்டபூசை தேவதைக்குச் செய்வாயானல் நீ நினைத்த தொழில்களெல்லாம் சித்தியாகும் இதுவே முப்பூமார்க்கம்.

43 ரசமணி செய்யும் ஜாலம்

அதிகாலையில் பன்றிக்குட்டிகளை யெல்லாம் பால்குடிக்க ஒட்டாமல் ஓட்டிவிட்டால் சிலநேரத்திற்குள் தாய் பன்றிக்குப் பால் மூக்குவழியாகச் சிந்தும், அதுசமயம் அந்தப்பாலை வரவொட்டாமல் பிசைந்தழுத்தி 51-விராகனெடை சுத்திசெய்த ரசத்தையும், 1-விராகனெடை முப்பூவுஞ்சேர்த்து சத்திபூசையுடன் அதன் வாயிலிட்டு வாய்-மூக்கு-காதுகளைத்தைத்து ஓர் புதிய பாண்டத்திலிட்டு மூடி 1-மாதஞ்சென்று எடுத்துப்பார்க்க ரசம் மணியாகயிருக்கும். அந்த ரசக்கட்டு 1-எடையும், நாகம் 1-எடையும், தங்கம் 1-எடையு மெடுத்து முதலில் தங்கத்தை உருக்கும்போது மற்ற இரண்டு சரக்கையுஞ் சேர்த்துக் களங்காக்கி வைத்துக்கொண்டு 10-எடை செம்பை யுருக்கி அதில் மேற்படி களங்கை 1-எடை கொடுக்க ஒன்பதரை மாற்று காணும்.

44 வேறு ரசமணி ஜாலம்

பாம்பின்வாயில் சுத்திசெய்த பாதரசத்தை வார்த்து அதில் முப்பூ ஒரு கழஞ்சுபோட்டு வாயைத்தைத்து மேலே தூக்கிக் கட்டிவிட்டு அதற்கடியில் ஒரு பானையை வைத்தால் பாம்பானது அழுகி பானையில் விழும். அதுசமயம் நாம் வார்த்த ரசமானது மணியாகக் கட்டி யிருக்கும். அதை யெடுத்துக் கொதிக்கவைத்து செந்தூரஞ் செய்துக்கொண்டால் சகல லோகத்தையும் வேதிக்கலாம்.

45 பாலைக் கடம்பாக்கும் ஜாலம்

பசு கன்றுபோட்டவுடன் கறக்கும் கடம்புபாலை ஓர் மெல்லிய துணியில் நனைத்து காயவைத்துக்கொண்டு, ஜாலமாடுஞ்சபையில் ஓர் செம்பில் பாலைக்கொண்டுவரச் சொல்லி மேற்படி துணியால் வடிகட்டித் துணியையும் அதில் பிழிந்துவிட்டுக் காய்ச்சக் கடம்பாகும். இதைப் பார்த்தவர்கள் வெகு ஆச்சரியப்படுவார்கள்.

46 மஞ்சளை சிகப்பாக்கும் ஜாலம்

சங்குநீரை விபூதியுடன் போதுமான அளவுகலந்து முன்னடி வைத்துக்கொண்டு, சபையில் அரைத்த மஞ்சளைக் கொண்டுவரச்

சொல்லி, அனைவரையும் பார்த்து இம்மஞ்சளை நான் மந்திரத்தினால் சிகப்பாக்குகின்றேன் பாருங்களென்று விபூதியைக் கையிலெடுத்து ஓம், றீம், ஸ்ரீம் என்று சொல்லிக்கொண்டே மஞ்சளைப் பிசைய சிகப்பாகும். பார்ப்பவர்கள் இது குட்டிச்சைத்தான் வேலையென்று சொல்லுவார்கள்.

47 பானைகள் உடையும் ஜாலம்

வெள்வேலன் பட்டையைக் கொண்டுவந்து அதற்கு கருச்சீலை யைச் சுற்றி காளிகோயிலின் முன்வைக்க பானைகளெல்லாம் உடையும். அதனால் வியாபாரங்கெட்டு வருந்துவார்கள். அதுசமயம் நீ புதைத் ததை எடுத்துவிட்டால் உடைந்த பானைகளெல்லாம் மறுபடியு மொன் றாகக்கூடும். இது அனுபோக சூக்ஷம முறையானதால் குருவின் முகாந்தரமாய் தெரிந்துக்கொண்டு செய்வது விசேஷம்.

48 சண்டைகள் நடக்கும் ஜாலம்

ஈசஞ்செடியினருகி லிருக்கும் காக்கைப்பூண்டும், குரங்குமூலிகை யும் சேகரித்து ஒன்றை ஒரு கடையிலும் மற்றொன்றை இன்னொரு கடையிலும் வைக்க, அண்ணன் தம்பியாயிருந்தாலும் விடாசண்டை பிடிப்பார்கள். அதை எடுத்துவிட்டால் சண்டை நிற்கும்.

49 இரும்புகுண்டு அந்தரமாக நிற்கும் ஜாலம்

சுவாதி நக்ஷத்திரங்கூடிய ஆதிவாரத்தில் நத்தைச்சூரி செடிக்கு காப்புக்கட்டி, சிம்மலக்கினங் கூடிய மறு ஆதிவாரத்தில் பொங்கல், பலி தூப தீபங்கொடுத்து; வேரை இரும்புபடாமல் எடுத்துக்கொண்டு வந்து பொன்னாற்செய்த கடயத்திலடைத்து வைத்துக்கொண்டு ஜால மாடும் சபையில் ஓர் இரும்புக்குண்டை ஆகாயமார்க்கம் விட்டெறிந்து வலதுகையிலுள்ள கடயத்தை இடதுகையால் பூமி மட்டத்திற்குத் தாழ்த்திப் பிடிக்க குண்டு அந்தரத்திலேயே நிற்கும். நீ உடனே சல் எக்ஷணி குண்டைக் கிழேபோடு என்று இடது கையிலுள்ள கட யத்தை வலதுகையில் வாங்கி மேலேயிருக்கும் குண்டுக்குத் தூக்கிக் காண்பிக்க குண்டு கிழேவிழும் கடயத்தில் வேரை அடைக்கும்போது பூமிமட்டத்திற்குத் தரித்துவிட்டு அடைக்கவும்.

50 எக்ஷணி வசிய ஜாலம்

பச்சோந்திப்பிச்சில் திசைமயக்குப்பொடியும், மதிமயக்குத் தூளை யுங்கூட்டி, ஐங்கோலத்தாலரைத்து, மோகினியுடன் ஜாலக்காளைத் துதித்து மையையெடுத்து மாயமோகினி நமஹாவென்று சொல்லிப்

பொட்டிட நீ ஒரு வாலிபப்பெண்ணைப்போல் காணப்படுவாய், உன்னைக்கண்ட புருடரெல்லாம் புத்திமயங்கி நீ கேட்டதைக்கொடுத்து அடிமையாவார்கள். உடனே நீ பொட்டைக்கலைத்துவிட அனைவரும் தெய்வமே! இப்போதிருந்த பெண் எப்படிப்போனாளென்று ஏங்குவார்கள்.

51 ஜலத்தில் அல்வாசெய்யும் ஜாலம்

முன்னதாகக் கட்டுக்கொடியைச் சூரணஞ் செய்து வைத்துக் கொண்டு, ஜாலமாடுஞ் சபையில் ஜனங்களைப்பார்த்து நான் இந்த ஜலத்தை அல்வாசெய்கிறேன் பாருங்களென்று சொல்லிக்கொண்டு சர்க்கரையில் மேற்படி தூளைக்கலந்து நீரில் கொட்டிக்கிளறி மூடி ஓம், தத், சத், ரீம், வசி, வசி யென்று செபித்து மூடியைத் திறக்க ஜலமெல்லாம் சர்க்கரையுடன் அல்வாயைப்போல் கட்டியிருக்கும். அதையெடுத்து சபையோர்களுக்குக் கொடுத்து தின்னச்சொல்ல, அவர்கள் உன்னை மகாவேலைக்காரனென்று சொல்வார்கள்.

52 பலவித காசுகள் உண்டாகும் வித்தை

பானையோட்டை காசுகள்போல் வட்டவடிவாக நறுக்கி, மேற்படி மையை உன்னிஷ்ட தேவதையை நினைத்துத் தடவிப்போட்டு பொன் காசுக ளாகவேணுமென்று நினைத்தால் மற்றவர் கண்களுக்கும் அவ்விதமே புலப்படும்.

53 அம்மி நடக்கும் ஜாலம்

பெரிய அம்மியை சபையில் கொண்டுவந்து வைத்து இதோ இந்த அம்மியை நடக்கும்படி செய்கிறேன் பாருங்களென்று மேற்படி மையை விரலில் தொட்டுக்கொண்டு அம்மியில் தடவி சல் மலையாளபகவதி சீக்கிரம் நடந்தோடிவா என்று அழைக்க அம்மி நடக்கும் அதைப் பார்த்தவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

54 கேச்சக்காய் சண்டை ஜாலம்

கொஞ்சம் கழற்சிக்காயை சபையில் கொண்டுவந்து இதுகளை சண்டைவிடுகுறேன் பாருங்களென்று மையைவிரலில்தொட்டு தடவிக்கீழே போட ஒன்றோடொன்று மோதி சண்டைசெய்வதைப் பார்க்க விநோதமாயிருக்கும். ஆனால் நீ ஜாலக்காளை தியானிக்கவும்.

55 கூழாங்கல்லு சண்டை சாலம்

கூழாங்கற்களை வேண்டியவரை சபையில் கொண்டுவந்து ஓம், ஜாலக்காள் ரா ரா வென்றுசொல்லி மேற்படி மையைத்தடவி கீழே போட வெகுதமாஷாக கல கலவென்று மோதிவிளையாடும்.

56 கண்ணுடிபுட்டிகளை அறுக்கும் வித்தை

காட்டு முருக்கிலையை சார்பிழிந்துக்கொண்டு அதில் வெள்ளை நூலை ஊரவைத்து நன்ருயுலர்த்தி வைத்துக்கொண்டு எந்த புட்டியேனும் தாராளமாக அறுக்கலாம். ஆனல் நூலை துண்டாக்காமல் உலர்த்த வேண்டும்.

57 குட்டை குடைபிடிக்கும் வித்தை

திக்குபந்தனத்துடன் கருவிழுதியிலைக்குக் காப்புகட்டி பொங்கல் பலி முதலானதும் செய்து வேரைப்பிடுங்கி அதன் கிழங்கை ஓர் சவுக்கத்தின் முனையில் முடிந்து மேலே எறிய அது குடைபிடித்து வருவதைப்பார்க்க விநோதமாக இருக்கும்.

58 எலுமிச்சம்பழ வித்தைகள்

கழுதைகள் ஒன்றுடனென்று சம்போகிக்கும்போது அவைகளின் வால்மயிரைத் தனித்தனியாகக் கத்தரித்து ஒன்றுடனென்று சேராமல் தனித்தனியே மோதிரம்போல் சுற்றி, ஐங்காயம்பூசி தங்கத் தகட்டினுல் மோதிரம்போல் மூடி, வலது விரலில் ஆண்மயிர் மோதிரமும், இடது விரலில் பெண்மயிர் மோதிரமும் போட்டுக்கொண்டு பிறகு ஓர் எலுமிச்சம்பழத்தை துவாரஞ்செய்து அதனுள் $1\frac{1}{4}$-விராகனெடை பாதரசததைச் செலுத்தி வெள்ளை மெழுகினல் மூடி, மூடுவாய் தெரியாமல் அரிதாரம் பூசி வைத்துக்கொண்டு சபையில் நின்று இதோ ஆகாயத்தில் எலுமிச்சங் கனியை நிற்கவைக்கிறேன் பாருங்களென்று சொல்லி, இடக்கையைத் தொங்கவிட்டு மூடிக்கொண்டு வலக்கையினுல் கனியை ஆகாயத்தில் விட்டெரிய கனி கீழே விழாது, சல் ஜகஜால எக்ஷணி கனியைக் கீழேபோடு என்று இடக்கையை தூக்கிக் காண்பிக்க கனி கீழேவிழும். இந்த ஜாலம் ஆடும்போது வெய்யல் அதிகமாயிருத்தல் உத்தமம்.

59 இரும்புக்கம்பியை உடைக்கும் வித்தை

தாயைக்கொன்ருன் செடியில் ஆதிவாரம் காலை ஓர் இரும்புக் கம்பியை சொருகி வைத்து மறுநாள் சாயங்காலம் எடுத்து வைத்துக் கொண்டு சபையோரைப்பார்த்து இதைத் துண்டாக ஒடிக்கிறேன் பாருங்களென்று ஒடிக்க கம்பி துண்டுதுண்டாக ஒடிந்துபோகும்.

60 சங்கிலி ஜாலம்

ஓர் பெரிய இரும்பு சங்கிலியை நன்ருய்க் காயவைத்து எடுத்து பச்சைத் தவளையின் நெய்யைக் கையில் பூசிக்கொண்டு சங்கிலியைக் கையால் உருவ கைவேகாது. சங்கிலி மாத்திரமெரியும்.

61 நெருப்புச் சட்டியை ஏந்தும் ஜாலம்

ஓர் சட்டி நிறைய நெருப்பைக் கொட்டி கைகளில் ஷை நெய்யை பூசிக்கொண்டு, ஓம் சாமுண்டி, காளபயிரவி, வராகி என்று சொல்லிக் கொண்டே நெருப்புசட்டியைக் கையில் ஏந்த கைசுடாது அனைவரும் நீ அக்கினியைக் கட்டிவிட்டாயென்று சொல்வார்கள்.

62 இரும்புக்குண்டை பல்லால் தூக்கும் ஜாலம்

ஷை எண்ணெயை வாயிலூற்றிக் குதப்பி உமிழ்ந்துவிட்டு ஓர் இரும்புக்குண்டைச் சிவக்கக்காய்ச்சி வாயில் கடித்துத் தூக்த வாய் சுடாது. பார்த்தவர்களெல்லாம் ரொம்பவும் சந்தோஷப்படுவார்கள்.

63 வைக்கோல் வேகாதிருக்கும் ஜாலம்

ஷை எண்ணெயை வைக்கோலில் தடவி நெருப்பைப் போட்டால் வைக்கோல் வேகாது. அதை எடுத்துவிட்டு வேறு வைக்கோலில் போட்டால் உடனே தீப்பிடித்து எரியும்.

64 நெருப்பைக் கையில் அள்ளும் ஜாலம்

தவளைநெய்யைக் கைநிறையப் பூசிக்கொண்டு எவ்வளவு நெருப்பையேனும் சுலபமாகக் கையில் அள்ளிக்கொட்டிவிடலாம் கைசுடாது. ஆனால் மேற்சொன்ன எல்லாவித வேலைகளுக்கும் குருவின் அருள் வேண்டும்.

65 ஜலத்தின்மேல் நடக்கும் ஜாலம்

ஜலந்திரட்டி என்னும் மூலிகைக்கு செவ்வாய்க்கிழமை காப்பு கட்டி பொங்கலிட்டுப் பிடுங்கிவந் துலர்த்தித் தூளாக்கி, ஐங்கோலத் தைலஞ் சேர்த்தரைத்து பாதக்குரட்டின்மீது தடவி ஜலத்தின்மேல் நடக்க வெகு விநோதமாயிருக்கும். இதைப் பெரிய பலகையின் பேரில் பூசி ஜலத்தின்பேரில் படுத்துக்கொள்ளலாம். இந்த வேலைக்கு ஆறு நீங்கலாக, குளம், கிணறுகளில் செய்யலாம்.

66 சோறு வேகாதிருக்கும் ஜாலம்

கஞ்சாவிரை, வெண்காந்திவேர் இவைகளில் ஐங்கோலஞ் சேர்த்து உலையரிசியில் போட்டால் எவ்விதமும் சோறு வேகாது.

67 நெருப்பில்லாமல் சோறுக்கும் ஜாலம்

சதுரக்கள்ளிப்பாலை ஒரு பாண்டத்தில் கறந்துக் கொண்டுவந்து அதில் அரிசியைக் கழுவி நீரை யிறுத்துவிட்டு போட்டு மூடிவைத்து

கால்நாழிகை பொறுத்துப் பார்க்க சோறு வெந்திருக்கும். ஆனால் அதைப் புசிக்கக்கூடாது.

68 விநோத முட்டை வித்தை

முட்டையின் உள்ளிருக்கும் அம்பிலியை போக்கிவிட்டு அதினுள் வாழைமர அட்டையைவிட்டு ஷை ஜவ்வினால்மூடி மஞ்சள் குங்குமம் பூசி கேணி குளம் இதுகளில்விட விநோதமாக விளையாடும்.

69 வாயில் நெருப்பு கக்கும் வித்தை

திமுருகல் பாஷாணத்தை பயரளவு உதட்டில் தடவிக்கொண்டு ஒருவருக்குந் தெரியாமல் இலவம்பஞ்சை வாயிலடக்கி காற்றுவாட்டமாகநின்று வாயை மூடிமூடிவூத, குபீர் குபீரென்று புகையுடன் பொரிபரக்கும். அக்கினிதேவன் வசிய மென்பார்கள்.

70 நெருப்பின்மேல் நடக்கும் ஜாலம்

பச்சைத்தவளையின் நெய்யை கால்களில் பூசிக்கொண்டு அக்கினி தேவனைத் துதித்து அக்கினியிலிரங்கி நடக்கலாம்.

71 தீவட்டி ஜாலம்

பச்சைதவளையின் நெய்யை வாயிலூற்றி குழப்பி துப்பிவிட்டு பந்தம்கொளுத்தி வாயில் வைத்துக்காட்ட வாய்சுடாது. பார்ப்பவர்கள் பிரமிப்பார்கள்.

72 கிணற்றில் புழுக்கள் மேயும் வித்தை

முன்னதாய் கற்பூரத்தை நகச்சந்துகளில் இடுக்கிவைத்துக்கொண்டு தாம்பாளத்தில் விபூதிகொண்டு வரும்படிச்செய்து அதில் அறுகோணங் கிரி மந்திரம் செய்வதுபோல்நடித்து கையில் அடக்கியிருக்கும் கற்பூரத் தோடு கொஞ்சம் விபூதியள்ளி கிணற்றில்போட புழுக்கள் கும்பல் கும்பலாக மாரிமாரி சுழலும் மிகவிநோதம்.

73 ஒருபசுவில் இரண்வேித பால்கரக்கும் வித்தை

சித்திரமூலவேரை அரைத்து பசுவின் ஒருகொம்பில் முன்னதாகத் தடவி ஆறவிட்டுப் பின்பு சபைக்குக் கொண்டுவந்து நிறுத்தி வேர்பூசிய பக்கம் பால்கறக்க உதிரம்போலிருக்கும். மற்றொரு பக்கம் வெண்மையாக விருக்கும். உடனே பசுவை மறைவாகக் கொண்டுபோய் வேர்பூசியகொம்பை அலம்பி பின் பால்கறக்க சுத்தமாய் கறக்கும்.

74 பாம்புகள் உண்டாகும் ஜாலம்

கன்னிகழியாமல் இறந்த சவத்தின் வாயில் இரும்பாணியும், மார்பில் வெள்ளியாணியும், உந்தியில் செப்பாணியுமாக பொதிந்து வைத்துவிட்டு மறுநாள் காடாற்றுமுன் யெடுத்து வைத்துக்கொண்டு ஒற்றைக் கணுவுள்ள பிரம்புக்கு இரும்பை ஒருமுனையிலும் தாம்பிரத்தை மற்றொருமுனையிலும், வெள்ளியை நடுகட்டாகவும் போட்டு ஐங்கோலத்தைப்பூசி ஜாலக்காள் பூசைசெய்து வைத்துக்கொண்டு விளையாடும் சபையில் ஓர் பெட்டியை வைத்து பெட்டியின்பேரில் செம்பிருக்கிற பக்கம் பிரம்பால் தட்ட கணக்கில்லாத பாம்புகள் வெளியே வரும். மறுபடியுமிரும்பிருக்கும் பக்கமாகத் திருப்பித்தட்ட சர்ப்பங்கள் மாயமாகப்போகும்.

75 வியாதி யுண்டாகும் ஜாலம்

ஆதிவாரத்தில் ஒரு மூஞ்சூரைப்பிடித்து அதன் குடல்முதலானவைகளைப்போக்கி எதிரியின் மலமும் நீரையும் அதில்விட்டு பஞ்சுகொட்டும் நரம்பினுல் நன்ருக இழுத்துக்கட்டி ஒரு மண்டலம் வரைக்கும் ஓம் நமோ, பகவதி, காளி, ஓம் மோகினி, என்று லக்ஷமுரு ஜெபிக்க அவன் பலவித வியாதிக்கு ஆளாவான்.

76 அதிகபாரஞ் சுமக்கும் ஜாலம்

கிரகணம் பிடித்துவிடுமுன்னம் மலைத்தாங்கி என்னுஞ்செடிக்குக் காப்புகட்டி, வேரை அறுமல் பிடுங்கிவந்து குளிசமாடி சிரசில் வைத்துக்கொண்டு எவ்வளவு பளுவைச் சுமந்தாலும் பளுவு தோன்ருது. எந்த கனமான சாமானைக் கையிலெடுத்தாலுங் கனக்கமாட்டாது. ஒரு ஆனையைப்பிடித்து இழுத்தாலும் அது நகர்ந்துவரும்.

77 இதுவுமது

மலைத்தாங்கிச் செடியென்பது கொழிஞ்சிசைப்போல் எங்கும் விசேஷமாக இருக்கும். அதைக் கண்டுபிடித்துப் பிடுங்கி வேரை சுருட்டி ஒரு பெருங்கல்லை அதன்மீது வைக்கின், அது நகர்ந்து அப்புபுறம் விழுந்துவிடும். அதைத்தேடி காப்புக்கட்டி மற்றய வேலைகளைச் செய்யவும்.

78 இருட்டுவீட்டில் சூரியனைக் காட்டும் ஜாலம்

ஒரு சிறிய இருட்டறையில் தீமுறுகல் பாஷாணத்தால் சூரியனைப்போல் முன்னதாகவே சுவற்றில் எழுதிவைத்து கதவை மூடிக்கொள்ளவும். பிறகு ஜனங்களை வரவழைத்து நான் இந்த வீட்டில்

சூரியனைக் காட்டுகிறேனென்று உரைத்து ஓர் பெரிய கர்ப்பூரக்கட்டியைக் கொளுத்தி சூரியமந்திரத்தைச் சொல்லிக்கொண்டே கதவைத் திறக்க வெறும்வீடாகத் தோன்றும். மறுபடியும் கதவைமூடி வெளியில்வந்து சற்றுநேரங் கழித்து யாவரையும் பார்த்து இச்சமையம் கதிரவன் அங்கு வந்திருப்பானென்று சொல்ல அனைவரும் பார்த்து சந்தோஷப்படுவார்கள்.

79 வைகுண்டத்தைக் காட்டும் ஜாலம்

ஸ்ரீ மஹாவிஷ்ணுவுடன் லட்சுமியையும் தாமரைக் கமலத்தில் பிர்மாவையும், ஏகாதச ருத்திரர் பன்னிருவரையும், ஐதீகப்படி முன்போல் எழுதி, ஸ்ரீ விஷ்ணு மந்திரத்தைச் செபித்துக் கதவைத் திறந்துகாட்ட வெகு விநோதகரமாக விருக்கும்.

80 பிர்மலோகம் காட்டும் வித்தை

பிர்மா, சரஸ்வதி, பிர்மாவினது மானஸபுத்திரர்கள் இவர்களை சாஸ்திரப் பிரகாரம் முன்போல்எழுதி பிர்மமந்திர உச்சாடனம் செபித்துக்கொண்டே அனைவர்களையும் அழைத்துக்காட்ட சபையார் யாவரும் சந்தோஷமுறுவர்.

81 போது ஜாலம்

இவ்வண்ண முனது சாமர்த்தியமுள்ளளவு வேலைகள் செய்யலாம் ஆயின் மனோதைர்யம், தபம், ஜெபம் இதுகள்யாவும் சதா கையாடிக் கொண்டே வரவேண்டும்.

82 சந்திரனைக் காட்டும் ஜாலம்

முன்மாதிரியாகவே ஓர் சிறு அறையின்கண் திருப்பாற்கடலும் சந்திரனும் வரைந்து தூப தீப நைவேத்தியத்துடன் ஆராதனை செய்துக்காட்ட அனைவரும் ஆச்சரியமுறுவர்.

83 சீட்டு சுழலும் ஜாலம்

காகிதத் துண்டுகளைச் சதுரமாக நான்கு கத்தரித்து, அதில் மூன்றை, மூன்றுபேரிடங்கொடுத்து, நீ ஒன்றை வைத்துக்கொண்டு, ஏனையோரைப் பார்த்து, நான் இந்தத் துண்டில் ஓர் மந்திரமெழுதி இக்கிணற்றில் போடுகிறேன். அது சுழலும் விந்தையைப் பாருங்களென்று சொல்லி உன்னிடம் இருக்கும் கடுதாசியில் ஏதாகிலுமோர் மந்திரமெழுதி உன் காதுகுரும்பியை யாருக்கும் தெரியாதபடி இருபக்கந் தடவிவைத்து கிணற்றில்போட அது கிறுகிறுவென்று சுழலும். மற்றத் துண்டுகள் சுழலாது.

84 கொள்ளிமலை குழை சர்ப வித்தை

ஒருபக்கம் கணுவும், நான்குஅங்குல நிகளமுமுள்ள மூங்கில் துண்டொன்றை யெடுத்து, அதன் சரிபாகத்தில் ஓர் துளைசெய்து அதில் நல்ல முருக்கேற்றின நூலை மேல்வழியாகக் கோர்த்து வாங்கி அந்நூலில் ஓர் சடைமுடிந்து உள்ளுக்கிழுத்து அதை அடியில் படும் படிச் செய்து, அவ்வளவில் ஓர் தடைக்கட்டி வைத்துக்கொண்டு, மூன்றரை அங்குல நிகளத்தில் நாகப்படமொன்று செய்து அதினுள் போட்டு சபைமுன் வந்து மேற்படி குழையை உன்னிருகரத்தால் பிடித்துக்கொண்டு சபையிலுள்ள ஒருவரை அழைத்து குழையை ஊதும்படிச்சொன்னால் அவர்கள் ஊதுவார்கள். அதுசமயம் நீ நடுத் துவாரத்தின் தடையை விரலிடுக்கில் பிடித்து மெதுவாகத் தலை வெளிப்புரம் வரும்படி கயிற்றை அசைத்தால் தலை வெளிப்படும். ஊதவந்தவன் அதைப் பார்த்து பயந்தோட அங்கிருப்பவர்கள் சந்தோஷப்படுவார்கள்.

85 ஆடாத பேய்களை ஆட்டும் ஜாலம்

சொரியாந்தவளையைப் பிடித்து அதின் வாயில் வேண்டிய வரைக்கும் சாம்பிராணியை அடைத்துப் பின்னங்காலை மேலே தூக்கிக் கட்டி தொங்கவிட்டு ஒரு மண்டலங் கழித்து சாம்பிராணியை யெடுத்து அதனுடன் தலையையும், மஞ்சங்கொடியையும் சேர்த்து "ஓம்" என்று புகைப்பிடிக்கும்படிக்குச் செய்ய, பேய் பிசாசு பிர்ம ராக்ஷசன், முனி, கருப்பன், லாடன் முதலிய எவ்வித விடாமுனியாய் இருந்தாலும், புகைபட்ட மாத்திரத்தில் ஓடிப்போகும்.

86 இதுவுமது

மனிதர் எலும்பு, கழுதை தந்தம், மானிடாது குளிச்சீலை, மனிதர் மலம், பன்றியின் எலும்பு, காக்கட்டான் வேர், சீந்தில்தண்டு, குப்பைமேனி இவைகள் சமயெடையும், வரட்டி கொஞ்சமும் ஆகிய இவைகளை யெல்லாம் யிடித்துப் புகைபோட, மேற்சொன்னவைகளெல்லாம் ஓடிப்போகும்.

87 தேள்கடி யிறங்கும் ஜாலம்

கள்ளிக் காக்கை நாக்கு, உடும்பு நாக்கு, கீழாநெல்லி வேர், இவைகள் வகைக்கு விராகனெடை ஒன்றெடுத்து, ஆண் கச்சக்காயிலிருக்கும் பருப்பை நீக்கிவிட்டு, கிரகணம் பிடித்திருக்கும்போது அதற்குள் அடைத்து கொசுகின் மெழுகால் மூடி தேள்கொட்டி வந்த

வர்கள் கையில் கொடுத்து அதை இன்னொருவர் கையில் கொடுக்க வாங்கினவர்களுக்கு விஷமேறும். பிறகு கீழேபோட்டால் விஷமிறங்கிவிடும்.

88 பேயாட்டும் ஜாலம்

யங், சிங், வய, நம வென்று உரு கொடுத்தவுடன் பிசாசு பூதங்களெல்லாம் ஒன்ருய்க்கூடும். மறுபடி வங், மங், சிங், சிவாய நமசியென்று செபித்தால் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் ஓடிப் போகும்.

89 உடுக்கையைக் கட்டும் ஜாலம்

ஐயும், கிலியும், சவ்வும் உடுக்கையைக் கட்டு ஐயும், கிலியும், சுவஹா வென்று ஜெபிக்க உடுக்கை கட்டிவிடும்.

90 சர்வ வியாதிகளையும் போக்கும் ஜாலம்

வியாதியானது அநேக குடும்பங்களை சதாகாலமும் வருத்திக் கொண்டேயிருக்கும். அதற்குத் தந்திரமாக சுவாமியாணை போவென்று பஞ்சாக்ஷரத்தைத் தியானித்துக் கொடுக்க எவ்வித நோய்களும் ஒழிந்து சுகமடைவார்கள்.

91 மாஞ்செடி முளைக்கும் ஜாலம்

எரழிஞ்சி விதையை பூந்தயிலமாக வாங்கி, ஐங்கோலக் கருவையுங் கூட்டி, மரத்திலேயே கனிந்த ஒரு மாங்கனியைக்கொண்டு வந்து சாறு பிழிந்து தோலைப் போக்கி அதை ஒருநாள் ஷை தைலத்தில் ஊரவைத்து மறுதினமெடுத்து நிழலிலுலர்த்திவைத்துக்கொண்டு ஜாலமாடும் சபையில் ஷை வித்துவைக்காட்டி நான் இதைச் செடியாக முளைக்கச் செய்கிறேன் பாருங்களென்றுச்சொல்லி மண்ணைத்தோண்டி புதைத்து நான்குதரம் மூடிமூடித் திறந்து ஜலம்விட்டால்செடியானது இலை, கொழுந்து, காய், கனி முதலியவைகளுடன் வெளிப்படும்.

92 தீவட்டி ஜால வித்தை

வெட்டுண்ட முண்டத்தின் மாமிசமும், திகைப்பூண்டு பொடியும், ஐங்கோலத் தைலத்தாட்டி தீவட்டியில் தடவிச் சுற்றி வைத்துக் கொண்டு இரவில் ஜாலமாடுமிடத்தில் கொளுத்த யாவரும் ஒருவருக் கொருவர் முண்டங்களாகவே காணப்படுவார்கள். சபையிலும் இதைப் பற்றி பலர் பலமாதிரி பேசி தலை யிருக்கின்றதா? இல்லையா? என்று சந்தேகத்துடன் தடவிப்பார்த்துக் கொள்ளுவார்கள்.

93 சொம்பின்மீது நடக்கும் ஜாலம்

ஒரு பஞ்சாக்ஷரப்பையை கள்ள அறையுடன் தயார் செய்து ஒரு அறையில் விபூதியும், மற்றொரு அறையில் வேலன்பிசின் தூளும் வைத்துக்கொண்டு, சபையிலுள்ளோரைப் பார்த்து இரண்டு சொம்புகள் கொண்டுவரச் சொல்லி அதை அவர்களெதிரிலேயே முழுதும் துடைத்து, நான் இந்த பாத்திரங்களின்மீது நடந்து காட்டுகிறேனென்று கை கால்களை துடைத்துக்கொண்டு விபூதிப் பையைத் திறந்து அதினுள்ளிருக்கும் விபூதியை மந்திரத்துடன் உன் நெற்றியில் பூசிக்கொண்டு, கள்ளறையிலிருக்கும் விபூதியை ஓர் சிட்டிகை சொம்பின்மீது போட்டு உன்னிருகால்களையும் படிமானமாக வைத்து ஒரு ஐந்துநிமிஷம் முருகனை தியானிப்பதுபோல் நடித்து கையில் வேலாயுதத்தைப் பற்றி நடக்கவும்.

94 துட்டு எடுக்கும் மோடி

கல்லின்மீது சிறிய படிகாரத் துண்டொன்றை வைத்து, அதின் பேரில் ரூபா முதலிய நாணயத்தைப் பொருத்தி ஓர் நெருப்புத் துண்டை நாணயத்தின்மேல் வைத்தால் அது சூடேறிக் கல்லுடன் காரமும் ரூபாயும் ஒட்டிக் கொள்ளும். அதைச் சற்றுநேரம் ஆறவிட்ட பின்னர் நீ சபையில் யாரையேனும் பார்த்து அந்த நாணயத்தை எடுத்துவரச்சொல்ல அதை யாரெடுத்தாலும் வராது. அது சமயம் நீ நேமநிஷ்டையுடன் கை கால்களை அலம்பிக்கொண்டு கையில் கொஞ்சம் நீருடன் நாணயத்தைத் தொட்டால் உடனே வந்துவிடும். அனைவரும் ஆச்சரியமடைவர்.

மோடி எடுக்கும் வித்தை

மோடிவித்தைதன்னை முழுதுமியம்பிட
மோசமில்லாமலே காப்பதற்கு
ஆடியேஆகு வாகனமேறிடும்
ஐய்யன்கணபதி காப்பாமே. 95

காப்பாச்சிதம்பரச் சக்கரத்தைக்கீறி
கட்டானவக்ஷர பீஜமெல்லாம்
பூப்பாகதானடைத் தாதியைநினைந்துப்
போற்றியேவங்கரந் தானேதி 96

ஓதவேஓம்ஸ்ரீம் கிலியும்அவ்வும்
உவ்வும்மவ்வுங்கூட சிவ்வுடனே
நாதநாம்நமசிவய சுவ்ஹாயென்று
நாடியேவுருலக்ஷந் தானேதி 97

ஓதியேசக்கரந் தன்னைப்பதனமாய்
உத்தமனேகையில் வைத்துக்கொண்டு
சோதியாஞ்சோடசப் பூசையுடனே
சுத்தமாய்மோடியுந் தான்வைக்க 98

வைக்குமிடத்தை வகையாகக்கேளு
வாகானகோயி லம்பலமுந்
திக்கில்லாத்தடாகத் தெருவினிலப்பா
தீங்கிலாமோடி தானுஞ்செய்ய 99

செய்யுதற்கு குருபாதந்தன்னுடன்
சித்தர்முத்தர் பதமும்போற்றி
அய்யமில்லாமலே செய்துவந்தாயானு
லலறிடுமேவல் கணங்களெல்லாம் 100

எல்லாவிடத்தையுஞ் சுத்திசெய்துப்பின்னு
மேந்தலைச்சித்தத்தில் தானிறுத்தி
பொல்லாப்பொழிக்கும் விக்னவிநாயகன்
பொன்னடிசரணஞ் சொல்லி 101

சொல்லியேமோதகந் தேங்காய்தன்னுடன்
தூபதீபமுந் தான்வைத்து
அல்லலையொழிக்கும் ஆண்டவன்பாத
மடியினைத்தொழுது தான்வணங்கி 102

வணங்கியலரிட வாளுமுலக்கையும்
வாகானதேங்காய்க் குறடாவுடன்
சுணங்கமிலாப்பாத.ரட்சையுடனே
சொகுசுள்ளதுடப்பம் வாழையுடன் 103

உடனுடனொன்று வரிசையாகநாட்டி
உறுதியாய்மகர தோரணமும்
திடமுள்ளபூசை பலியுடனேநீயுந்
தீரமாய்ச்செய்யுங் கருக்கேளு 104

கேளுமேயட்டி முளைசீவியதில்
கெட்டியாயைங்கோலந் தான்பூசி
ஆளுமேயட்ட திக்கினிலடித்து
அப்பனேகோடேழு கீறிப்போடு 105

போடவேகாளியைத் தியானித்துநீயும்
பின்னமில்லாத் திறையைத்தூக்கி
ஆடவேகக்கு கக்குகாளிதூக்கி
அரிஅம்உம்ஓ மென்றேதே 106

ஓதியேகண்கட்டு மையைக்கைதனில்
உத்தமனேநீயும் பூசிக்கொண்டு
ஆதிவேப்பிலேத் தன்னைப்போட்டிட
அப்பனேதேள்கொட்டி மயங்குவார் 107

மயங்குவான்ரங்ரங் சூலியென்றால்
மகத்தானவக்கினி சூழ்ந்தவன்போல
வயங்கும்வரிவரி மரிமரிசண்டாளி
வாகானஅம்அம்அம் என்றுசொல்ல 108

சொல்லியேவிபூதியைத் தான்போடஅவன்
தொலையாப்பாடு பட்டுவீழ்வான்
மெல்லியேஓம்படு சுவாஹாவென்றோதி
மேன்மையாய்தூளிதந் தான்போட 109

போடவேதிரேக முழுதுமெரிச்சலாய்
பொட்டென்றுகீழே தான்வீழ்ந்து
ஆடியேயிங்கு மங்குமலைந்துமே
அலைச்சலுடனே திரிந்திடுவான் 110

திரிந்திடநீயும் அம்மம்ரீம்ஓம்என்று
திடமுள்ளஉளுந்துடன் வேப்பிலையும்
அரிந்துவிபூதி யரிசியுடனோதி
அப்பனேயவன் முன்புபோட்டிடவே 111

போட்டிடவவன்வாயி லுதிரமுங்கக்கியே
பொல்லாதமூர்ச்சை வந்துவிழ
நாட்டியவுலக்கை தேங்காய்முதலெல்லாம்
நாடியேயிவனையும் புடைக்க 112

புடைக்கவந்தசாமான் தனைவெல்ல
பூலோகத்திலே யாருமில்லை
அடைக்கலமென்று வந்தடிபணிந்தால்
அப்பனேயபயஸ் தங்கொடுத்து 113

கொடுத்துமேஓம் வங்ரம்முடனே
குணமானஅம்அம் அம்மென்று
விடுத்தேநங்மங் சிங்யங்கென்றே
விதமானஅங்அங் ஆங்சுவஹாவென்றே 114

என்றுலக்ஷமுரு செபித்துப்போட
எல்லாந்தப்பித்து நில்லுமென்று
அன்றுசொன்னதை சொல்லிவிட்டேநானு
மன்புடனென்னை யாதரிப்பீர். 115

துஷ்டவேலைதன்னை யடியாமலேசெய்து
துலையாயபகீர்த்தி பெற்றுயானல்
கஷ்டமாகவேயுன்னை யுஞ்சபிப்பார்
காரணங்கொண்டுமே செய்திடுநீ. 116

117 தீவட்டி குதிக்கும் வித்தை

ஜாலமாடும் சபைக்கு வருமுன் உயிருள்ள ஒரு விராலைப் பிடித்து அதற்குத் தலையிலிருந்து வால்வரைக்கும் துணியைப் பிரியாமறபடி இலேசாகச் சுற்றி, மண்ணெண்ணையில் நனைத்துவிட்டுப் பிறகு ஓ சபையோர்களே! இந்ததீவட்டியின் விந்தையைப் பாருங்களென்று வால் பக்கமாக கொளுத்த அது எரிய ஆரம்பிக்கும்போது எகிரி எகிரி குதிக்கும். விரால் குட்டியாக இருக்கவேண்டும்.

118 பேயாட்டும் ஜாலம்

கடலாடை யுடுத்த இவ்வுலகின்கண் இயற்கையாகிய அறிவைக் கொடுத்து மயக்குகின்ற கொடிய பேய்களை யெல்லாம் விரட்டுதற்கு மந்திரமுண்டு. அதாவது (வய நமசி) என்று சொல்லும் மந்திரத்தைக் குற்றமறத் தெரிந்துக்கொண்டு பின்னர் வெட்பாலை பலகையிற் சக்கர மெழுதி முருகக் கடவுளைத் துதித்து எழுபத்தோராயிரம் உரு செபித்தால் அடங்காத கொடிய பிசாசுகளாயிருந்தாலும் இருந்த விடந்தெரியாமல் ஓடிப்போகும்.

119 இதுவுமது

அரை உளுந்தளவு அபினியை வெற்றிலையில் வைத்து மடித்துத் தெரியாமல் உள்ளுக்குக் கொடுக்க, இயற்கை அறிவைக் கெடுத்து கணங்களுக்குப் போதையுமுண்டாக்கி ஊர், பேர், இருப்பிடம் போகுங்கால முதலியவற்றை பகிரங்கமாகச் சொல்லும். பிறகு தகுந்த வேலை செய்துக் கொள்ளவும். மயக்கந் தீருவதற்கு வாழைப் பட்டைச்சாறு கொடுக்கவும்.

120 இதுவுமது

அப்பைக்கிழங்கு, பேயத்திவேர், பேயாலன்வேர், ஊமத்தன் விரை, இதுகளை வகைக்குப் பலமொன்றாக யெடுத்து, நிழலிலுலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்துக்கொண்டு பிறகு காலி மாட்டின் சாணத்தைக் கொளுத்தின சாம்பலைத் தெள்ளி மேற்படி தூளுடன் ஷை தூளைக் கலந்து கையிருப்பாக வைத்துக்கொண்டு பேய் பிடித்தவர்கள் எப்படியிருப்பினும் அப்படியே அழைத்துவந்து ஸ்நானம் செய்விக்காமலே தூளை கையிலெடுத்துக் கொண்டு உனக்கு

தெரிந்த மந்திரத்தைச் சொல்லி சிரசில் போட்டவுடன் பேய்பிடித்த வர்கள் தலையைச் சுற்றியாடுவது மல்லாமல் வாயிற்கு வந்தபடியெல் லாம் கோர்வையாக பழைய கதைகளைப்போல் சொல்லுவார்கள் அது சமயம் முடியறுத்துத் தலையில் ஜலம்விட மயக்கந்தெளியும்.

121 கை கால்களை முடமாக்குதல்

காட்டு முருக்கமரத்தினால் ஒரு பதுமை செய்து அப்பதுமையின் வயிற்றில் மூன்சூரின் பக்க எலும்பும், மலமும், ரோமமும், எதிராளி யின் பெயரை ஒரு கருக்கிலும் எழுதிவைத்து, அரிசிமாவினால் பதுமை யின் வயிற்றை மேலேமூடி, யாவருக்குந்தெரியாமல் பயிரவ மந்திரத் தைப் பதினாராயிரம் உரு செபித்து பதுமையுடன் வைத்திருக்கின்ற முள்ளில் ஒன்றையெடுத்து எதிராளியின் கையிலாகிலும், காலிலாகி லும், அடிக்க அவனுக்குப் பிடிப்புநோய் வந்ததைப்போல் விழுந்து அழுவான். மறுபடி முள்ளைப்பிடுங்க சொஸ்தமடைவான்.

122 பாம்பின் வேடிக்கை ஜாலம்

பச்சைப் பாம்பொன்றை யெடுத்து ஒரு முற்றின தேங்காய்க்குள் அடைத்துப் பூமியில் புதைத்து ஒரு மண்டலம் சென்றெடுத்துப் பார்த்தால் தேங்காயும் பாம்பும் அழுகி எண்ணெயு மெலும்புமாகப் புலப்படும். பிறகு திந்தத்தைத் தள்ளி எண்ணெயை குவளையிலெடுத்து எம்பெருமானை நினைத்து தூப தீப நைவேத்தியங்கள் கொடுத்து பத னப்படுத்தி வைத்துக்கொண்டு கலியாணங்கள் முதலிய காலங்களில் பந்து மித்திரர்களுக்குத் தெரியாமல் 'இவ்வெண்ணெயை விட்டு விளக் கேற்ற வீடெங்கும் பச்சைப்பாம்பாகத் தோன்றும் அச்சமயம் எல் லோரும் பயந்தோடிப்போவார்கள். அச்சமயம் நீ அவர்களுக்குத் தைரி யம்சொல்லி, இதோ நான் மந்திரத்தினால் இப்பாம்புகளை யோட்டிவிடு கிறேன். பயப்படவேண்டாமென்று விளக்கை அணைத்து வேறு விளக் கேற்ற ஒன்றும் இராது. உன் சாமர்த்தியத்தை மெச்சுவார்கள்.

123 இதுவுமது

முத்தின இலுப்பக்கொட்டையுடன் பச்சைப் பாம்பைப்போட்டு எண்ணெய் ஆடி வைத்துக்கொண்டு முன்னசொன்ன மாதிரியாகவே செய்யவும். இதைக்கண்டவர்கள் பயத்துடன் ஆச்சரியமுறுவர்.

124 மாரண வித்தை

மாரணச் சக்கரமொன்று தயார்செய்து எதிரியின் நீரும், மலமும், காலடி மண்ணும் சேகரித்துக் கருவுடன் பேருமெழுதி அரவத்தின்

வாயினுள்ளடைத்து தலைகீழாகத் தூக்கிக் கட்டிப் பிறகு வேப்பன் எண்ணெயால் தெற்கு முகமாக இருந்துக்கொண்டு மசி, நசி, என்று தினமொன்றுக்கு 1008-உரு விகிதம் 8-நாள் செபிக்க எதிரி மாரணமாவான்.

125 பேதன வித்தை

இரட்டை ஊமத்தன்காயைப் பிளந்து, அதில் எதிரியின் காலடி மண்ணை வைத்து அவன் பெயரை எழுதி மற்றொரு பிளப்பை அதின் மேல் வைத்து, நூலினால் அப்பிளப்புகளை வைத்துக்கட்டி பேதன மந்திரத்தைச்சொல்லி, அவனிருக்கும் ஊரைச்சுற்றி மயானத்திற்கு வந்து கருவையுங் கூடக்கட்டி புதைத்து விடவும். உடனே அவனுக்குப் பயித்தியம் தோன்றி ஊரூராகவலைந்து, கண்டவர்களை யெல்லாம் சண்டைக் கிழுத்துக்கொண்டு வருந்துவான்.

126 இதற்குச் சாந்திசெய்யும் வித்தை

நீ செய்தாயென்று தெரிந்துக்கொண்டு அவனுடைய பந்துஜனங்கள் வந்து பரிதபித்து உன்காலில் விழுந்தால் நீ சுடுகாட்டில் புதைத்து வைத்திருக்கிற காயையெடுத்து, ஜலமோடுகிற ஆற்றில் கரைத்துப் போட அவன் பழயபடி ஆவான்.

127 வித்துவேஷண வித்தை

வேப்பமரத்திலிருக்கிற காக்கைக்கூண்டும், கழுதைஜடையும் அறுத்த தாலிக்கயிறும், அறுந்துபோன பஞ்சுகொட்டு நரம்பும், பன்றி மயிரும், பயித்தியக்காரன் நகமும், அவனுடைய துணியும், சலாயன் விறகுஞ் சேர்த்து முச்சந்திக் கூடுமிடத்தில் ஒரு அடுப்பைவைத்து அந்த அடுப்பில் மேற்படி சரக்கெல்லாம் போட்டு நீ தெற்குமுகமாக நிர்வாணத்துடனிருந்து எரித்துச் சாம்பலின்மேல் ஆறுகோணம் போட்டு, அதன் நடுவில் தூமசி, என்று எழுதி தூம் தூம், சீ சீ, ஓம் நசி நசி, என்று 1008-விசை செபித்து, எதிரி நாமதேயத்தை நருக்கலில் எழுதி அச்சாம்பலை வைத்துமூடி, மறைவாக இரப்பில் சொருகி வைத்துவிட, அவ்விரப்பை அன்னவன் தாண்டினால் இருவரும் பிரிந்து போவார்கள்.

128 இதுவுமது

பஞ்சுகொட்டுநரம்பு, பன்றியெலும்பு, மயிர், சுடுகாட்டுச்சாம்பல், உடும்புதலை, நாய்ப்பல்லு, இவைகளைச் சேகரித்துக்கொண்டு எட்டி மரத்தினால் மாடனைப்போல் உருவம்செய்து புதிய கலசத்தில் இவைகளைப்போட்டு மாடனை மந்திரத்துடன் துதிக்க எதிரி மாரணம்.

129 இதற்கு சாந்தி

ஷ்டி கலசத்திலிட்டிருந்த எதிரியின் பெயர் வரைந்த காரீயத் தகட்டை பாலில் கழுவி ஓடும் ஜலத்தில் விட்டுவிட சுகமாகும்.

130 கள்ளனைப் பிடிக்கும் வித்தை

10-பலம் பெரும் நிலவாகைவித்துடன் தலைமஞ்சங்கொடியும் மாவும் முப்பூவும் வகைக்கு விராகன் ஒன்று எடுத்து விரையுடன் சேர்த்தரைத்து பில்லைசெய்து உலரப்போட்டு பாண்டத்திலிட்டு குழித் தயிலம் வாங்கி ஆள்காட்டி முட்டையை அண்டத்தயிலம் இறக்கிக் கொண்டு முன்மருந்துடன் இதை சேர்த்துவைத்துக்கொண்டு ஆண் வெற்றிலையில் போட்டுப் பார்க்க களவு, சூனியம், ஏவல் முதலியதும் கண்ணுக்குத் தோன்றும்.

131 குறி சொல்லும் ஜாலம்

புனுகு, கோஷ்டம், பச்சைக் கற்பூரம், சந்தனம் இவைகளை சம யெடை எடுத்து குளிர்ந்த ஜலத்தினுலாட்டி, குறிமேடையில் பூசி, ஸ்ரீம் என்பதுடன் முக்கோணம் வரைந்து, புஷ்பத்தால் அலங்கரித்து மூன்று வேளைகளிலும் ஓம் நமோ, பகவதி, ஓம் உக்கிர மாகாளி, சாமுண்டி, ஆயி, வயிரவி, சாம்பவி, ஓங்காளி, நிமிலி, மகா சத்தி, நமஹாவென்று லட்சத்து ஆயிரத்தெட்டு உரு செபிக்க சித்தியாகும். தினம் ஸ்நானபானத்துடன் ஒரு வேளை புசித்து வஸ்திரத்தில் படுக்க வும். புகை உதவாது. காகத்திற்கு போஜனத்தில் முந்தியும் பிந்தியும் கவளமிடவும். பிறகு குறி பலிக்கும்.

132 பேதன வித்தை

சதுரமான சிறிய வேங்கைப் பலகைக்கு ஒணுன் தோலையுரித் துக்கட்டி, பேதன மந்திரச் சக்கரத்தைப் போட்டு, சலாகையினுல் சக்கரத்தைச்சுற்றி உள்ளே பதிந்து அடைக்க எதிரிகளெல்லாம் புத்தி மயங்கித் தவிப்பார்கள்.

133 சோக்குத் தூள் வித்தை

சொக்குப்பாக்கு, அப்பைக்கிழங்கு, நிலப்பனங்கிழங்கு, தாளி வேர், பேயத்திவேர், ஆலம்வேர், குப்பைமேனிவேர், வேளைவேர், கெச்சக்காய்வேர், ஊமத்தன்விதை இவைகளுடன் நஞ்சுக்கொடி மாத விடாய்சீலை பயித்தியக்காரனைக் கொளுத்தினசாம்பல், ஊமைமண்டை ஓட்டுப்பொடி இவைகளை பொடிசெய்து பேயத்தி ஆலன் பால்களில் விட்டு ஆட்டி காயவைத்துப் பொடிசெய்து வைத்துக்கொண்டு ஒருவர்

மீது தூவ பிறகு அவர்கள் உன்னிஷ்டப்படி ஆடுவார்கள். பிறகு கொஞ்சம் அவர்கள்மீது நீரைத்தெளிக்க மயக்கந் தெளியும். ஆயினும் இது கொடிய பாபமானது.

134 போது

இதிலுள்ள வேலைகளெல்லாம் அனுபோகசித்தி யுடையது. ஆதலால், யாருக்குச் செய்யலாம் யாருக்குச் செய்யக்கூடாது என்பதை அறிந்து செய்யவும்.

135 பல்விழும் ஜாலம்

உக்கானைப் பிடித்து பகைவனுடைய தம்பலத்தை அதின் வாயிலடைத்தும் அதனுடன் பேரையும் கருவையும் சேர்த்து அவன் தலைவாசலில் வைத்த ஒரு மண்டலத்திற்கெல்லாம் அவன் பற்கள் உதிர்ந்துப் போகும்.

136 கண்கேடும் ஜாலம்

குளத்தட்டை, அரசமரத்துப்பால் இவைகளை ஒரு சீலையில் வைத்துத் திரியாக்கி 32-நாள் தன் எதிரி வீட்டு விளக்கில் போட்டு எரிப்பாயாகில் அவனுடைய கண்கெட்டு குருடாகிப்போகும்.

137 தீராத வியாதியுண்டாகும் ஜாலம்

அமாவாசை ஆதிவாரமுங் கேட்டையுங்கூடிய தினம் மூஞ்சூரைப் பிடித்துவந்து அதின் குடல் முதலானவைகளைப் போக்கி, எதிரிமலமும், நீரையும் அதில்விட்டு பஞ்சுகொட்டும் நரம்பினுல் நன்ருக யிழுத்துக்கட்டி, 40-நாள் வரைக்கும், ஓம் நமோ பகவதி, காளி ஓம் யோகினி சுவாஹாவென்று லக்ஷுரு செபிக்க எதிரிக்குப் பலவித வியாதிகளுண்டாகி அவஸ்தைப்படுவான்.

138 இதுவுமது

கருநாபி, பச்சைநாபி இவைகளை காற்று வாட்டமாக ஊருக்கு வெளியில் வரட்டியில் கொளுத்தி அந்தப் புகையை ஊருக்கு வரும்படிச் செய்ய, அவ்வாசனைப்பட்ட ஜனங்களெல்லாம் வியாதியால் வருந்துவார்கள்.

139 மேற்படி வியாதியை நிவர்த்திசெய்யும் ஜாலம்

வியாதியால் வருந்தும் ஜனங்களுடைய ஊருக்கு நீயேபோய் இவ்வியாதியை நான் சொஸ்தப்படுத்துகிறேன் என்றுசொல்லி நீலிவேர், சிறுகீரைவேர், மிளகு இவைகளைக் கியாழமிட்டு அதில் பற்பம் போடு

வதுபோல் விபூதியைப்போட்டு மூன்றுநாள் ஆறுவேளை கொடுக்க நிவர்த்தியாகும்.

140 இதுவுமது

கள்ளிச்சாறு, கார்த்திகைக்கிழங்கு, வெள்ளைப்பாஷாணம், துத்தம், நேர்வாளம், கருநாபி, இவைகளை யெல்லாம் ஒன்ருக யிடித்து ஒரு சீலையில் முடிந்து கலசத்தில்போட்டு வாய்ப்புரங்கட்டி, கழுத்தளவு சலத்தில் கிணறு, குளம், இதுகளில் விட்டுவிட்டு வந்துவிட்டால் அந்த சலத்தை யார்யார் குடிக்கின்ருர்களோ அவர்களுக்கெல்லாம் வாந்தியும் பேதியுமுண்டாகி வருந்துவார்கள்.

141 இதற்கு சாந்திசெய்யும் ஜாலம்

அப்படிவருந்தும் ஊருக்கு நீயேபோய் அவ்வூராரைப் பார்த்து இவ்வூரில் கடினமான தேவதை ஒன்று சிலநாளாக வந்திருக்கின்றது. அதினுடைய சேஷ்டைதான் இவ்வளவும் என்று நீ சொல்வாயானல் அவர்கள் உன்னையே அதுபோகும்படியான வேலைகளைச் செய்யென்று சொல்வார்கள். அதுசமயம் நீ மேற்படி கிணற்றருகில் ஓர்பிள்ளையாரை வைத்து நான் அத்தேவதையை ஓட்ட முதல்முதல் பூசை விநாயகருக்குச் செய்யவேண்டியது ஆகையால் வீடொன்றுக்கு 200-குட ஜலம் இப்பிள்ளையாருக்குக் கொட்டவேண்டும் என்று சொல்வாயானல் அவர்கள் அப்படியே செய்வார்கள். அதுசமயம் நீ யாவருக்குந் தெரியாதபடி கொஞ்சம் அவுரிவேரை இடித்துக் கிணற்றில் அல்லது குளத்தில் போட்டு எல்லோருக்கும் சுவாமி பிரசாதங் கொடுத்தனுப்பிவிட்டால் மறுநாள் முதற்கொண்டு யாவருக்கும் வியாதி சொஸ்தமாகிவிடும். ஆனல் உனக்குத் தேவையான பணத்தைமாத்திரம் முன்னுடியே வாங்கிக்கொள்ளவும்.

142 அஷ்டகர்ம ஜாலம்

தலைமஞ்சங்கொடியில் மாவுபூசி உலரவைத்து முப்பூ, ரவிபீஜம் மதிபீஜம் இவைகளைச் சேர்த்துத் தயிலம் வாங்கி, இறீம், கிலீம், ஓம் என்றுசொல்லி லக்ஷமுருசெபிக்க சித்தியாகும். இந்தமந்திரத்தால் அஷ்டகர்மமும் ஆடலாகும். இது சர்வ வேலைகளுக்கும் முக்கியமானதாதலால் குருமுகாந்திரமாய் தெரிந்துசெய்வது உத்தமம்.

143 முடமாக்கும் ஜாலம்

கிராணம்பிடித்து இருக்கும்போது எட்டிமரத்திற்கு காப்புகட்டி வேரைப்பிடுங்கி வைத்துக்கொண்டு பிறகு கிராணம் விடும்போது இன்

ஞெரு வேரைப்பிடுங்கி, ஒரு வேரில் உருவஞ்செய்து மற்றவேரில் ஆணிபோல் முனையுள்ள ஊசி ஒன்று செய்துக்கொண்டு, வெள்ளைச் சாவலுடன் தண்ணீருக்கருகில் சென்று மேட்டில் வெள்ளைச்சாவலை வைத்துவிட்டு நீ தண்ணீரில் இரங்கி ஸ்நானமுதலியது செய்துப் பிற் பாடு கழுத்தளவுஜலத்தில் நின்றுக்கொண்டு (ஆ) என்னும் மந்திரத் தைச் செபிப்பாயானால் மேட்டிலிருக்கும் சாவலானது இறந்துவிடும். அதுசமயம் நீ முளையைக் கையிலெடுத்து எதிரியின் கடவுளைச்சேர்த்து துவாரத்திலெல்லாம் முளையினால் குத்த குடமாய்ப்போவான். ஆனால் நீ செபஞ்செய்யும்போது மேற்படி பதுமையைக் கையில்வைத்துக் கொண்டு செய்யவேண்டும்.

144 இதற்கு நிவர்த்திசெய்யும் ஜாலம்

மேற்படி எதிரியானவன் உன்னைவணங்கி வருவானானால் நீ மேற் படி பதுமைக்குக் குத்தியிருக்கும் முள்ளைப் பிடுங்கிவிட்டு நீரில் சுத்தஞ் செய்தால் நிவர்த்தியாகும்.

145 கேண்டபேரண்ட மந்திரவித்தை

ஆம், ஓம், அகோர பிரபல கெண்டபேரண்ட ரீங்கார வியாக்ரக வாசா, சர்வமிருககாலா, காற்றுடுபல்லா, அஷ்டவஜ்ரதேகா, சங்கு, சக் கரம், சூலம் அன்றி தாதுப்பிரானே, மாலிதாகா, கெஜபக்ஷ நாரசிம்மா கற்பாந்தகாலா, அகணித லீலாவினோத வச்ரகுண்டா, தாஷ்டிகவுக்ரா, பக்ஷமாறுத மச்சாந்த உத்தமா, உத்தண்டவஸ்திராலங்காரா, நான் இப்பாரதகண்டத்தில் உனையேநம்பினேன் என்னப்பனே என்று மானச பூசையை மகா தைரியத்துடன் செய்துவந்தால் கொஞ்சநாளில் சித்தி யாகும்.

146 இதற்கு மூலமந்திரம் சேபிக்கும் வித்தை

ஓம், இரீம், கிலீம், ஐயும் சுவஹாயென்று பதினாயிர உருவுடன் (ஓம்)-என்ற தனி உருவை ஆயிரஞ்செபித்து, சுமார் 10-தினம்வரை 100-பிராமணர்களுக்குப் பஞ்சகச்சாயத்துடன் அன்னம் அளித்து பூசையை நிறைவேற்றினால் சித்தியாகும் உனக்குள்ள சகல பகையாளி களுமொழிந்து நீ நினைத்த காரியமெல்லாம் கைகூடும்.

147 புலியாகும் ஜாலம்

மலைகளிலும், காடுகளிலும் பயிராகப்பட்ட இருளியென்னும் மூலிகைக்கு சுவாதி நக்ஷத்திரங்கூடிய ஆதிவாரத்தில் காப்புகட்டி அதின்வேரை அராமல் எடுத்துவந்து வைத்துக்கொண்டு சமயம்

வரும்போது தமாஷாக நீ புலியாகவேணுமென்று நினைத்துக் காதில் வைத்துக்கொண்டால் பார்ப்பவர் கண்களுக்கு நீ புலியைப்போலவே தோற்றப்படுவாய்.

148 கரடியாகும் ஜாலம்

அஸ்த நக்ஷத்திரங்கூடிய ஆதிவாரத்தில் மேற்படி மூலிகைக்கு பொங்கலிட்டு காப்புக்கட்டி எடுத்துவந்துக் காதில் வைத்துக்கொண்டு நீ கரடியாகவேணுமென்று நினைப்பாயானால் அதைப்போலவே பார்ப்பவர்கண்களுக்குத் தோற்றப்படுவாய்.

149 குரங்காகும் ஜாலம்

அனுஷம் கூடிய ஆதிவாரத்தில் மேற்சொன்ன பிரகாரம் மூலிகையை யெடுத்துக் காதில் வைத்துக்கொண்டால் குரங்காவாய்.

150 கழுதையாகும் ஜாலம்

பூராடங்கூடிய ஆதிவாரத்தில் மேற்சொன்ன பிரகாரஞ் செய்தால் கழுதையாவாய்.

151 கோவேறுகழுதையாகும் ஜாலம்

ஆயிலியங்கூடிய வெள்ளிக்கிழமையில் மேற்சொன்ன பிரகாரம் செய்தால் கோவேறு கழுதையாவாய். மந்திர முதலியதுகளில்லை. ஆனால் செய்தவர்களுக்கே இதனுண்மை தெரியவரும்.

152 ஆனையாகும் ஜாலம்

அஸ்தங்கூடிய செவ்வாய்க்கிழமையில் மேற்சொன்ன விதமாக செய்தால் ஆனையாவாய்.

153 குதிரையாகும் ஜாலம்

சுவாதிகூடிய சுக்கிரவாரத்தில் காப்புக்கட்டி மேற்சொன்னபடி செய்தால் குதிரையாவாய்.

154 சிறுத்தையாகும் ஜாலம்

கேட்டை நக்ஷத்திரமும், வியாழக்கிழமையும், பௌர்ணமியுமாயிருக்கப்பார்த்துச் செய்து வேரைக் காதில் வைத்துக்கொண்டால் சிறுத்தையாகத் தோன்றுவாய்.

155 பன்றியாகும் ஜாலம்

பரணியுடன் ஆயில்யமும் அமாவாசையுங் கூடிய தினத்தில் செய்தால் பன்றியாவாய்.

5

156 காட்டுப்பன்றியாகும் ஜாலம்

பரணியுடன் துவாதசியும், அமாவாசையும், செவ்வாய்க்கிழமையுங் கூடிய தினத்தில் மேற்சொன்ன விதமாகச் செய்தால் காட்டுப்பன்றி யாவாய்.

157 எருமையாகும் ஜாலம்

சுவாதிகூடிய சோமவாரத்தில் காப்புக்கட்டி மேற்சொன்னபடி செய்தால் எருமையாகத் தோற்றப்படுவாய்.

158 எருதாகும் ஜாலம்

சோதியுடன்கூடிய சனிவாரத்தில் வேருக்கு காப்புக்கட்டி செய்தால் எருதாகத் தோன்றுவாய்.

159 பசுவாகும் ஜாலம்

அஸ்தங்கூடிய புதன்கிழமையில் மேற்படி வேலையைச்செய்து வைத்துக்கொண்டால் பசுவாகத் தோன்றுவாய். ஆனால், மிகவும் சுத்தியுட னிருக்கவேண்டும்.

160 நாயாகும் ஜாலம்

பூராடங்கூடிய செவ்வாய்க்கிழமையில் செய்தால் நாயாவாய்.

161 பூனையாகும் ஜாலம்

கேட்டையைக்கூடிய ஞாயறில் பயபத்தியுடன் மேற்சொன்ன விதஞ்செய்தால் பூனையாவாய். பூராடநக்ஷத்திரமாகில் கட்டுப்பூனையும் புனுகு பூனையுமாவாய்.

162 கோழியாகும் ஜாலம்

உத்திராடங்கூடிய திங்கட்கிழமை சூரியன் புறப்படாததற்கு முன்னமேயே மேற்சொன்னவிதம் பூசை முதலானதுடன் பலியுங் கொடுத்து வேரைப்பிடுங்கி சமயம்வரும்போது வேடிக்கையாக நாம் கோழியைப்போல் இவர்களுக்குத் தெரியவேணுமென்று மனதில் நினைத்துக் காதில் வைத்துக்கொண்டால் உன்னைப் பார்ப்பவர்களுக்கு நீ கோழியைப்போலவே தென்படுவாய்.

163 மானுகும் ஜாலம்

அஸ்தங்கூடிய ஆதிவாரத்தில் மேற்சொன்ன விதமாகச்செய்தாயானுல் நீ பார்ப்பவர்களுக்கு மானைப்போலவே தென்படுவாய்.

164 ஆடாகும் ஜாலம்

கிருத்திகையும், வெள்ளியுங்கூடிய அமாவாசையில் செய்தால் ஆடாகத்தோன்றுவதற்குத் தடையில்லை.

165 மரமாகும் ஜாலம்

மகநக்ஷத்திரத்துடன் சிம்மலக்கினமும் செவ்வாய்க் கிழமையுமாயிருந்து பொங்கலிட்டு வேரையெடுத்துக் காதில் வைத்துக்கொண்டால் நீ மரமாவதுடன் பூ, காய், பழம், முதலியதளிரோடு காணப்படுவாய்.

166 கல்லாகும் ஜாலம்

பூர நக்ஷத்திரங்கூடிய சனிக்கிழமையில் காப்புகட்டி காதில் வைத்துக்கொண்டால் கல்லாகத் தோற்றப்படுவாய்.

167 மனிதனாகும் ஜாலம்

ரேவதிகூடிய ஆதிவாரத்தில் பகல் 12-மணிக்கு காப்புகட்டிச் செய்தால் நீ மனிதனைப்போலாவாய். ஆனால் துஷ்டகாரியஞ்செய்தால் மறுபடியும் பலிக்காது.

168 பெண்ணாகும் ஜாலம்

ரோகணியுங் கிருத்திகையு மிருக்கின்ற வெள்ளைக்கிழமை காலை முதல் சாமத்திற்கு பலிகொடுத்து காப்புகட்டிக்கொண்டு வந்தால் பார்ப்பதற்கு அருமையான பெண்ணைப்போலாவாய்.

169 இராஜனாகும் ஜாலம்

பூராடமும் சிங்கலக்கனமும் சோமவாரமுங் கூடியதினம் சரியான பகல்உச்சியில் சாதாரண பூசையுடன், சுத்தியாக இருந்துக்கொண்டு வந்தால் இராஜனாவாய்.

170 குருவாகும் ஜாலம்

கும்பலக்னமும் உத்திரமும் ஞாயிறுங்கூடிய தினத்தன்று மேல் சொன்னவிதமாகச் செய்தால், சகல கலைகளையுமுணர்ந்த குருவாவாய்.

171 சித்தர்களாகும் ஜாலம்

சித்திரைமாதம், சுக்கிலபட்சம், வியாழக்கிழமை, ரோகிணியும், கிருத்திகையும்கூடிய சுபதினத்தில், விரதமிருந்துப் பூசையும் அபிஷேகமும் செய்துக்கொண்டுவந்தால் தன்னைத்தானுணர்ந்த சித்தர்களாவதற்கு ஆக்ஷேபனை இல்லை.

172 குளமாகும் ஜாலம்

கற்கடகமும், சித்திரையும் கூடிய தினத்தில் மேற்சொன்ன முறைப்படி செய்தால் குளத்தைப்போல் தென்படுவாய். ஆனால் குள மென்று நம்பி இறங்கக்கூடாது.

173 கிணராகும் ஜாலம்

அஸ்தமும் அமாவாசையுங்கூடிய தினத்தில் கொண்டுவந்தால் கிணராவாய்.

174 பக்ஷிகளாகும் ஜாலம்

ரேவதியுடன் சித்திரை நக்ஷத்திரமாகப் பார்த்து காப்புகட்டி வேரையெடுத்துவந்துக் காதில் வைத்துக்கொண்டால், பார்ப்பவர்களுக் குப் பக்ஷிகளாகவே தென்படுவாய்.

175 பாம்புகளாகும் ஜாலம்

சுவாதியும் வெள்ளிக்கிழமையும் கூடிய சுபதினத்தில் சூரியோத யத்திற்கு பொங்கலிட்டு எடுத்துப்பார்க்க பாம்புகளாக பார்ப்பவர்களுக் குத் தென்படுவாய்.

176 தானியமாகும் ஜாலம்

மிருகசீரிஷமும் சனிக்கிழமையுமாய் பார்த்துப் பகல் பன்னிரண்டு மணிக்கு கொண்டுவந்தால் நீ எந்த தான்யத்தை நினைத்துக் காதில் வைத்துக்கொள்ளுகிறாயோ அவ்வகைத் தான்யமாகவே காணப்படு வாய்.

177 கருடனாகும் ஜாலம்

வெள்ளிக்கிழமை இரவு பன்னிரண்டுமணிக்குக் காப்புகட்டி, பொங்கல் பலி முதலியதுடன் தூபதீபங் கொடுத்துப் பிடுங்கிவந்தால் பார்ப்பவர் அனைவர்களுக்கும் நீ கருடனைப்போலவே தென்படுவாய். ஆனால் ஆகாயத்தில் பறக்கமுடியாது.

178 காக்கையாகும் ஜாலம்

பூசமும், அமாவாசையும் கூடியதினம் காப்புகட்டிக்கொண்டுவந் தால் பார்ப்பவர்கள் கண்களுக்கு நீ காக்கையாகவே தோற்றப்படுவாய்.

179 கள்ளிக்காக்கையாகும் ஜாலம்

ஞாயிற்றுக் கிழமையும் சுவாதியுங்கூடிய தினத்தினன்று மேற் சொன்னவிதமாய்ச் செய்தால் கள்ளிக்காக்கையாகவே நீ பார்ப்பவர்கள் கண்களுக்கெல்லாம் தென்படுவாய் பறக்கமுடியாது.

180 போது

எங்கெந்த நக்ஷத்திரத்தில் எப்படி எப்படிச் செய்யவேண்டுமோ அதின்பிரகாரம் சரியாகச் செய்துவந்தால் சகலமுங் கைகூடும். ஒவ்வொரு வேலைக்கும் காப்புகட்டி, பொங்கல், பலி முதலியனசெய்து தான் வேரை எடுக்கவேண்டும். பலி சொல்லாததற்குப் பலி கொடுக்கவேண்டிய அவசியமில்லை. நாம் எப்படி பயபக்தியுடன் அதை அனுசரிக்கின்றோமோ அப்படித்தான் அது நம்மையும் காப்பாற்றும். ஆனால் இம்மூலிகையின் வேலை காமிகளுக்கு ஒருபோதும் கிட்டாது. மேற்படி மூலிகையைப் பிடிங்கிவந்து சார்பிழிந்து காற்றில்வைத்தால் வீரமாகும்.

181 விபூதி விநாயகரைக் கட்டவைக்கும் ஜாலம்

உனக்கு வேண்டிய அளவு பிளாஸ்டர்பாரீஸ் மாவைத் தயாரித்து, பஞ்சாக்ஷரத்துடன் கலந்து வைத்து சபையில் வந்து தரணிதனிலுள்ளோரைப் பார்த்து ஷை விபூதியை தாம்பாளத்தில் போட்டு, விநாயக மந்திரத்தைச்சொல்லி, சூடமேற்றி வானத்தைப் பார்த்து நைவேத்தியம் செய்தபின்னர் தண்ணீர்தெளித்து கையைத் துடைக்காது ஷை விபூதியைப் பிசைந்து விநாயகரைப் பிடித்து, கொஞ்சநேரம் பொருத்து ஜலம் மெதுவாகவிட கரையாது.

182 சிகையில் கல்லைத்தூக்கும் ஜாலம்

குண்டுமணி பிரமாணமான வெள்ளைக்குழியான்கல்லை எடுத்து மண்ணில்லாமல் துடைத்துவிட்டு, தலையிலிருந்து வேராமல் ஒரு மயிரைப் பிடுங்கி, வேரைக் கல்லில் ஒட்டவைத்து கொஞ்சநேரம் பொருத்து மயிரைத் தூக்க, கல் கூடவே வரும்.

183 பேன் மாரணவித்தை

சிரசிலுள்ள பேன் ஒன்றை யெடுத்து, அதன்பேரில் ஒரு சிட்டிகை பொடியைப்போட்டுப் புரட்ட மாரணமாகும்.

184 தேங்காய்மீது ஆள் சுழலும் ஜாலம்

கடையிலிருந்து உரித்த தேங்காயைக்கொண்டுவந்து மஞ்சள் பூசி தூபதீபம் கொடுத்து சமநிலத்தில்வைத்து அதன்மீது ஒரு ஆளை குந்தக்காலுடன் உட்காரவைத்து கைகளை நிலத்தில் ஊனாமல் சில நிமிஷம் உட்காரச்செய்ய கிறு கிறுவென்று சுழலுவான்.

185 நூலில் தம்படியைக்கட்டி கொளுத்திக்காட்டும் வித்தை

ஒருமுழம் பால்திரட்டுநூலை வடிசாத்துடன் உப்பிட்டுக் கரைத்து அதில் ஊரவைத்து பிசுவாய் உலர்த்தி ஒருமுனையில் சல்லியைக் கட்டி

மற்றொருமுனையை காற்றில்லா இடத்தில் கட்டி கொளுத்த நூல் எரியும். தம்படி விழாமல் நிற்கும்.

186 ஜலத்தில் துடப்பம் நிற்கும் வித்தை

நான்கங்குல நிகளத்தில் ஒரு கனத்த துடப்பத்தை ஒடித்து ஒருமுனையில் குண்டூசி ஒன்றைக்குத்தி டம்ளர் ஜலத்தில் போட நிமிர்ந்து நிற்கும்.

187 வெற்றிலை சுழலும் வித்தை

ஒருமுதிர்ந்த வெற்றிலையைத் திருகலாக முறுக்கி ஒருசாண உண்டையில் சொருகி சிறிதளவு ஜலம்விட சுழலும்.

188 திரேகம் புகைக்கும் வித்தை

கந்தகத் தீக்குச்சை ஜலம்சேர்த்து தேய்த்து திரேகத்தில் பூசிக் கொண்டு இருட்டில் நிற்க திரேகம் புகையும்.

189 நீர்மேல் மிதக்கும் ஜாலம்

குளம், ஏரி இதுகளில் நீரில் இறங்கி வானத்தைப் பார்த்து மல்லார்ந்துப் படுத்து இருகைகளையும் பின்புரமாகக் கட்டி திரேகத்தை விறைப்பாக்கி கண்களைமூடி சுவாசத்தைச் சாந்தமாக்கி மனதை ஒரு வழிப்படுத்தி 30-நாள் துணைவனோடு பழகிவர திரேகம் மிதக்கும். இது சித்தாதிகள் செய்யக்கூடியது.

190 ஆண்வெற்றிலை பெண்வெற்றிலையைத் தேடிவரும் வித்தை

ஒரு பெண் வெற்றிலையை பூசையில் மல்லாத்திவைத்து ஆண் வெற்றிலையைக் கையில்பிடித்து வாவென்று கூப்பிட நகர்ந்துவரும். ஆனால் இதற்கு இரண்டுமுழக்கூந்தல் ஒன்றில் சிறிதளவு மெழுகை முனையில் தொடுத்து தந்திரமாக பெண்வெற்றிலையின் பின்புரம் ஒட்டி விட்டு மற்றொரு முனையைப்பற்றி நடித்துக் காண்பிக்கவும்.

191 பூனகம் உற்பத்தி வித்தை

பூமியில் பாத்திக்கட்டி அரிசிநொய்யை விரைபோல் விதைத்து ஜலம்தெளித்து வைக்கோலால் மூடி 10-தினங்கள்வரை தண்ணீர் விட்டு வந்து பின்பு பாத்தியைக் கிளரிப்பார்க்க பூனகம் காணப்படும்.

192 செங்கல்லின் தேள் உற்பத்தி வித்தை

புதிய செங்கலொன்றை ஜலத்திலூரவைத்து கையினால் கூடெ மழத்தேய்த்து, அதை பூமியிலமுத்தி செத்தைக் குப்பைகளைப்போட்டு மூடி நாலைந்துநாள் சென்று திரந்துப்பார்க்க தேள் தோன்றும்.

193 வானவில் தோன்றும் வித்தை

சூரியன் உதித்த பின்னர் சூரியனுக்கு நேர்முகமாக நின்று வாயில் ஜலத்தைஊற்றி கொப்பளித்து சிறகத் துப்ப, பஞ்சவர்ணங்க ளாக வில்வடிவுத்தோன்றி மறையும்.

194 பூதக்கண்ணுடி வித்தை

ஓர் தாம்பாளத்தின் மத்தியில் ஊசிமுனைத் துவாரஞ்செய்து அத்தட்டை ஜலத்தில் தோய்த்துப்பார்க்க எவ்வஸ்துவும் பெரியதாகத் தோன்றும்.

195 ரோஜா புட்பம் மஞ்சளாகும் வித்தை

மலர்ந்த ரோஜா புஷ்பமொன்றை எடுத்து கெந்தகத் தீக் குச்சிப் புகைப்பிடிக்க உடனே மஞ்சளாக மாரிவிடும்.

196 மோட்டுப்பூச்சி சாகும் வித்தை

தாமரையிலையை தொன்னைபோல் தைத்துக்கொண்டு பூச்சியைப் பிடித் ததில்போட சற்றுநேரத்தில் உயிரை யிழக்கும்.

197 தேங்காயை உடைத்து முட்டைக் காட்டும் ஜாலம்

கோழி முட்டை ஒன்றை காடியில் ஊரவைத்து, பிறகு எடுத்து தேங்காயை கண்திறந்து முட்டையை அதினுள்ளே செலுத்தி மெழு கினல் மூடிவிட்டு மஞ்சள் குங்குமமிட்டு சபையிலுடைக்க, உள்ளே முட்டைக் காணப்படும். தேங்காய் குடுமியுட னிருக்கவேண்டும்.

198 கோலில் ரத்தம் காட்டும் ஜாலம்

முக்கால் அடி சோத்துப் பிரம்புத் துண்டொன்றை, சிகப்புப் பௌடரைக் கரைத்த ஜலத்தில் ஊரப்போட்டு எடுத்து வைத்துக் கொண்டு, தேவையானபோது வாயில்கொஞ்சம் ஜலத்தை விட்டுக் கொண்டு, ஷடி பிரம்பை வாயில் வைத்து ஊத, உதிரமாகத் தோன் றும். இதை வெகு சாமர்த்தியமாகச் செய்யவேண்டும்.

199 துணியில்கட்டிய எலுமிச்சம்பழத்தை துணியறுமல் வெட்டும் ஜாலம்

ஒரு சவுக்கத்தில் ஒரு கனியை வைத்து மெலுக்காகக் கட்டி மணலை ஒரு குப்பல் செய்து அதின்பேரில் வைத்துப் பட்டாவால் வெட்ட பழம் இரண்டுத் துண்டாக இருக்கும் துணி அறுது.

200 ரொட்டியைப் பிட குருவி பறக்கும் வித்தை

ஒரு அரை ரொட்டியைப் பின்புறத்தின் மத்தியில் சிறிதளவு அறுத்துத் திறந்து, உள்ளிருக்கும் மெல்லிய பாகத்தைச் சிறிதளவு எடுத்துவிட்டு, ஓர் சிட்டுவை உள்ளே அடைத்து, வாய்புறத்தை பிசினியால் தடவி ஒட்டி சபைக்குக் கொண்டுவந்து, அதை ஆகாயத்தில் விட்டெறிந்து, கீழே விழுந்தவுடன் மெதுக்காகக் காலினால் எட்டி உதைத்து, தந்திரமாக மிதித்து, கையில் எடுத்துச் சுருட்டி நசித்துக் காட்டி, பிறகு இரண்டுத் துண்டாகப்பிட, உள்ளே யிருந்து குருவி வேகமாகப் பறந்தோடும். வெகு தந்திரமாகச் செய்யவேண்டும். சபையிலுள்ளோரும் பிரமிப்பார்கள்.

201 தேங்காய் புரளும் வித்தை

தேறினதேங்காய் யொன்றை குடுமியோடு சமமாக உடைத்து அடிமுடியைத் திருகி பருப்பை எடுத்து விட்டு, ஒரு எலியைத் தேங்காய்க்குள் போட்டு, இரண்டு முடியையும் வஜ்ரத்தால் பொருந்த மூடி உலர்த்தி, வேண்டும்போது தரையில் வைத்துக் கர்ப்பூர சுடர்காட்ட தேங்காய்ப் புரளும்.

202 வயத்தைக் கீறி நூல் எடுக்கும் ஜாலம்

பலவித வர்ண நூல்களை வட்ட வடிவமாகச் சுற்றித் தன்வயற்றின்மீது வைத்து மான்ஜவ்வைக் கொண்டு மூடி, வேண்டும்போது கத்தியால் கீறி முனையைப்பற்றி இழுக்க, நூல்வயற்றிலிருந்து வருவதைப்போல் தோற்றும். பார்ப்பவர் பீதியடைவர்.

203 கற்களைக் கடிக்கும் வித்தை

எத்தைச் சொன்னாலும் கேட்கும் நத்தைச் சூரி செடிக்கு செவ்வாயில் காப்புக்கட்டி வேரைப் பிடுங்கிவந்து வாயிலிட்டு மென்று அடக்கிக்கொண்டு கற்களைக் கடிக்க, உடையும். சாப நிவர்த்திவேண்டும்.

204 ரத்தப் புனையன் உற்பத்தி வித்தை

எள்ளருத்தச் சுமையைப் போராகப் போட்டு 6-தினங்கள் விட்டுவிட, பிறகு பிறித்துப் பார்க்க, மிகுதியான ரத்தப்புனையன்கள் ஜனித்திருக்கும். கடித்தால் கொடியவிஷம்.

205 அவல் மேல்லாதிருக்கும் ஜாலம்

ஆழாக்கு அவலுடன் உழக்கு நெய்யை விட்டுப் பிசைந்து, ஊரிய பின்னர் ஜீவர்க்கேனும் தின்னக்கொடுக்க, அவர்களால் இதை மெல்ல முடியாது அவஸ்தைப் படுவார்கள்.

206 இதுவுமது பல்லுதிரும்

அவல் மென்றவர்களுக்கு உடனே ஒருமுழக் கரும்பைக் கொடுத்துத் தின்னும்படிச் சொன்னால், அவர்கள் அவ்விதம் தின்ன, வாயிலிருந்து உதிரமும், பற்களும் கழண்டு விடும். இதை தன்னுயிரைப் போல் மன்னுயிரைப் பார்க்க.

207 எலி பூனையை வெல்லும் ஜாலம்

எலிபோனை வைத்து ஒரு எலியைப் பிடித்து, அதன்மீது மினுமினுப் பூச்சியை அரைத்துப் பூசி, இரவில் பூனை எதிரில்விட, பூனை எலியைப் பிடிக்காமல் பயந்து ஓடிவிடும்.

208 மோட்டுப்பூச்சி நசியும் வித்தை

காக்கி வெல்லத்தை ஒரு ஏனத்தில் பாகுபோல் கரைத்துக் கொண்டு, மோட்டுப்பூச்சியுள்ள தடங்களில் தெளித்து வைக்க எறும்புகள் கூடி ஷை பூச்சிகளை நாசம் செய்ய தொந்திரவு அடங்கிவிடும்.

209 சீட்டு நடக்கும் வித்தை

நாய்பேரில் இருக்கும் ஒருஉண்ணியைப் பின்னப்படுத்தாமல் பிடித்து மெழுகை இரண்டு குண்டுமணி எடை உருட்டி, உண்ணிமுதுகில் ஒட்டி வைத்துக்கொண்டு, ஒரு காகிதத்துண்டில் லிபி எழுதி, அக்காகிதத் துண்டை ஷை மெழுகில் பதிந்துக்கொண்டு, அதை பூமியில் கவிழ்த்து வைக்க ஊர்ந்து செல்லும்.

210 திரேகத்தில் அல்பநாத்திக் குத்தும் ஜாலம்

ஒரு குண்டுமணி குடும்பியை எந்தபாகத்தில் அல்பநாத்தியை ஏற்றவேண்டுமோ, அந்தப்பாகத்தில் அறக்கித் தேய்த்துவிட்டு ஒரு அல்பநாத்தியை வைத்து ஆமரால் அடித்து ஏத்தினால், வலி இராது.

211 துடப்பம் நெளியும் வித்தை

ஒரு கனத்த துடப்பத்தை 4-அங்குல நிகளத்தில் எடுத்து கயறைப்போல் முருக்கிவிட்டு கீழேவைத்து சிறிது ஜலம்தெளிக்க நெளிவதைப்பார்க்க வியப்பாயிருக்கும்.

212 மடியில்கட்டிய தேங்காயை உடைக்கும் ஜாலம்

ஓர் உரித்த தேங்காயை மடியில் கட்டிக்கொண்டு இருகரங்களின் பெருவிரலையும் சேர்த்து பின்புரம் கட்டிக்கொண்டு ஒரு தனி அரைக்குள் சென்று கதவை மூடிக்கொண்டு கீழேஉட்கார்ந்து கைகளைப் பின்புறமிருந்து முன்புறமாக வாங்கிக்கொண்டு தேங்காயை யவிழ்த்து

உடைத்து மடியில் கட்டிக்கொண்டு முன்போல் கையை பின்புறம் வாங்கிக்கொண்டு மறுபடியும் ஜனங்களை அழைத்துக்காட்டவும், சமத்துவமாகச் செய்யவேண்டும்.

213 பூமியில் புதைத்தமுட்டை மாயமாக மறையும் ஜாலம்

ஒருபடி காரத்துண்டை அனலில் வெதுப்பி முட்டையைப்போல் செய்துக்கொண்டு அனைவருக்கும் காண்பித்து, பூமியில் இலேசாகப் புதைத்து மேலே ஜலம்விட்டு, சற்றுப்பொறுத்து தோண்டிப்பார்க்க காணாமல் போகும்.

214 கசகசாவில் மீனுக்கும் வித்தை

மச்சத்தின் சினையை எடுத்து, பனிநீரில்போட்டு ஊரவைத்து கதிரவனது கிரணங்கள் காணுதபடி காலையிலுலர்த்தி, பட்சம்சென்ற பின், கசகசாவுடன் கலந்து வைத்துக்கொண்டு, சிறிதளவு ஜலத்தில் போட்டு, பத்துநிமிஷம் பொறுத்துப்பார்க்க மீன்குஞ்சுகள் மேயும்.

215 வயிற்றில் டம்ளர் ஒட்டும் ஜாலம்

பூடம்ளர் ஒன்றை எடுத்து அனைவருக்கும் காட்டி கணேசரை துதிப்பதுபோல் தூபதீபம் செய்து கற்பூரத்தை மிகுதியாகவைத்துக் கொளுத்தி அப்புகையில் டம்ளரைக்கவிழ்த்து புகையை நிறையப் பிடித்து உடனே வயிற்றினடிபாகத்தில் வைத்தழுத்தி விட்டுவிட கீழே விழாது. சாய்த்தெடுத்த கையோடு வந்துவிடும்.

216 பத்திரிக்கை யடிக்கும் வித்தை

சிறு குழந்தைகளுக்கு உண்டாகும் தோஷங்களை நிவர்த்திக்க வேண்டுமானுல் குழந்தையை முன்னே வைத்துக்கொண்டு வேப்பிலையைக் கையிலெடுத்து ஜலத்தில்தோய்த் துதரிவிட்டு இஷ்டதேவதையை மனதிலெண்ணி 20-நிமிஷமளவும் விடாது மந்திரித்தால் சுகமாகும். ஆறுவேளை இவ்விதமே செய்தல்வேண்டும். இது வேப்பிலையின் சக்தி சுவாமிபக்தியோடு செய்தல் மிக நன்று.

217 இரகசியகடிதம் எழுதும் வித்தை

ஓர் விராகனிடை படிகாரத்தை ஜலத்தில் கரைத்துப் பேனுவினுல் தொட்டு காகிதத்தில் எழுத, எழுத்துக்கள் தெரியாது. பின்பு ஜலத்தில் தோய்த்துப் பார்க்க, இங்கியில் எழுதியதுபோல் தோற்றும். பார்ப்பவர் வியப்படைவர்.

218 ரசகுண்டு பார்க்கும் வித்தை

காட்டாமணக்கன்பாலே ஒரு தொன்னையில் கறந்து அதில் அருகன்புல்லால் ஒருபக்கம் துவாரம்விட்டு மூடிந்துப்போட்டு எடுத்து சிறுக இத்துவாரவாயிலாக ஊத ரஸகுண்டுகள்போல் வெகு தமாஷாக புறப்படப் பார்க்க விந்தையிலும் விந்தையே.

219 உலர்ந்த எராவை மேயவிடும் ஜாலம்

கிளுவைஇலே ரசம் பிழிந்து காய்ந்த இராக்களை ஊரவைத்து உலர்த்தாமல் கொண்டுபோய் கேணி அல்லது குளங்களில் போட்டுப் பார்க்க ஜலத்தில் ஓடியாடி கிறுகிறுவென்று சுழன்றுமேயும்.

220 குளிஸம் குதிக்கும் ஜாலம்

செம்பினால்செய்த குலிசத்தில் பாதரசம்விட்டு வாய்மூடி வைத்திருந்து ஜாலமாடும்போது ஷை குலிசத்தை அனலில்போட எகிரிஎகிரி விழும் ஆச்சரியப்படுவார்கள்.

221 கோழிமுட்டை கண்ணில் ஒட்டும் ஜாலம்

ஒரு கோழிமுட்டையின் அம்பிலியைப்போக்கி, துவாரத்தை மூடிவிட்டு ஒருபக்கத்தில் வெண்பிசினியைபூசி காயவைத்து வைத்துக்கொண்டு ஜாலமாடும்போது முட்டையை அனைவருக்குங் காட்டி, சல் மலையாளபகவதி ஒட்டிக்கொள்ளென்று வாயில் ஊதுவதுபோல் நடித்து ஈரம் செய்துக்கொண்டு, மூக்கிற்கும் கண்ணிற்கும் நடுவில் அழுத்திக் காட்ட விழாது.

222 மீன் மாரண வித்தை

கிணறு குளங்களில், மீன் மிகுதியாக இருந்தால் அதுகளில் துண்டு துண்டாக வெட்டி போட்டுவிட்டு விடியற்காலே பார்க்க மீன்களெல்லாம் மிதந்திருக்கும்.

223 இதுவுமது

மச்சமுள்ள குளம், கிணறு, முதலியவைகளில் கொட்டைக்கரந்தையை கத்தை கத்தையாகக்கட்டி ஜலத்தின்மீது போட்டுவைக்க மீன்களெல்லாம் மிதந்து கிடக்கும்.

224 காகிதத்தைக் கொளுத்தி பிம்பம்காட்டும் வித்தை

ஒரு காகிதத்துண்டில் அம்மான் பச்சரிசிபாலால் ஓர் உருவம் வரைந்து உலர்த்தி, கொளுத்திக்காட்ட ஷை உருவம் தோன்றும்.

225 சென்னுகோன்னி மேயும் ஜாலம்

வேண்டியவளவு சென்னுகோன்னிகளை எடுத்துக்கொண்டு கற்பூரத்தைப் பொடிசெய்து அதில் போட்டு நன்ருகப்பிசைந்து கிணற்றில் போட, மேய்ந்து உள்ளேபோகும்.

226 செந்தேள் ஜனிக்கும் வித்தை

ஓர் பழய ஈச்சன்பாயை ஜலத்தில் அமிழ்த்தி ஊரவைத்து சாம்பல் கொட்டிய குப்பையின்பேரில் விரித்துப்போட்டு 4, 5, தினஞ்சென்று பாயை எடுத்துப்பார்க்க, நூற்றுக்கணக்கான தேள் உண்டாகும். கொட்டிஞல் அதிக விஷம்.

227 சாம்பலைக் கரைத்தெடுக்கும் ஜாலம்

ஒரு பாண்டத்தில் ஜலம்விட்டு, சாம்பலைக்கரைத்து நெருஞ்சி முள்ளைப் பொடித்து விபூதியில் போட்டுக் கலந்து ஒரு சிட்டிகை போட்டுத் துழாவிஎடுக்க கையோடு வரும்.

228 பொய்க்காலிரு உற்பத்தியாகும் ஜாலம்

நீர்சுண்டிய ஓர் குட்டையில் சேற்றைக்குழப்பி, வைக்கோலின் கூளத்தை வேண்டியவளவு கொண்டுபோய் அமிழ்த்திக் கலக்கி 5, 6, திவசங்கள் கழித்துப்பார்க்க, வேண்டுமான எருக்கள் உற்பத்தியாகும்.

229 தம்படி நகரும் வித்தை

நன்ருக யிழைத்த ஓர் மரப்பலகையின்மீது, முத்தெண்ணெயை ஒரு விரல்பிரமாணம் தளும்பப்பூசி, அதிலொரு முனையில் சல்லி ஒன்றை வைத்து, சூடம் கொளுத்தி காசின்மீது வைக்க நகர்ந்து போகும்.

230 காகிதத்தில் அப்பஞ்சுடும் வித்தை

முறட்டுக் காகிதத்தால் தொன்னை ஒன்று தயாரித்து அதின் பின்புறம் பிரண்டையை அரைத்து தளும்பப்பூசி உலர்த்தி வைத்துக் கொண்டு, சிறு கற்களை வைத்துக்கொண்டு, சிறு கற்களைக்கொண்டு அடுப்பு ஒன்றமைத்து, அதில் ஷை தொன்னையைவைத்து, எண்ணெய் விட்டுக்காய்ச்சி அப்பஞ் சுட்டுக்கொள்ளலாம்.

231 தேங்காயை கையால்குத்தி உடைக்கும் ஜாலம்

ஷை இம்மாதிரியாகவே உப்புக் கல்லைவைத்து உரித்த தேங்காயை இதன்பேரிலமைத்து கையிஞல் ஓங்கி குத்த உடையும். ஆயினும் சாதகம் வேண்டும்.

232 துட்டு எகுரும் வித்தை

2-அல்லது 3-முழ நீள சிகையொன்றை யெடுத்து, ஒரு முனையில் மெழுக்கையுருட்டி, மற்றோர் முனையில் ஒரு அங்குல துரும்பைத் தொடுத்து, சையில் ஓர் காலணுவைக்காட்டி சிகையை கீழேநீட்டிப் போட்ட பின்னர் கரத்திலுள்ள காலணுவைக்கீழேவிசிறிவிட்டு திரும்ப மெழுகில் ஒட்டி, துரும்பைக்கட்டியைக் கால்விரலில் பிடித்து, சீக்கிரம் தள்ளிப்போவென்று நீ ஓர் புரம்போக துட்டு ஓர் புரமாக விழும்.

233 ரப்பர் செய்யும் வித்தை

குதிரைவாலி புல்லின்பாலை தன் முழங்கையில் தளும்ப மேலும் மேலுமாகப் பூசி, சற்று உலர்ந்த பின்னர் கையை ஜலத்தில் தோய்த்துப்பிரித்து, ஒன்றன்மேலொன்றாக மடித்து எவ்விதமேனும் செய்துக் கொள்ளவும்.

234 பழத்தையறுத்து உதிரம் காட்டும் ஜாலம்

ஒரு கத்தியில் செம்பருத்தி புஷ்பத்தின் ரசத்தைப்பூசி உலர்த்தி, சபையில் ஓர் எலுமிச்சங் கனியை ஷை சூரியால் அறுக்க ரத்தம் காணப்படும்.

235 அதிகமாய் சாப்பிடும் ஜாலம்

சிவிங்கியின் சூக்கை சிறிய துண்டாக அறுத்துக் கைக்குட்டையின் ஒரு முனையில்முடிந்து வைத்துக்கொண்டு, உண்ணும்போது ஷை முடியை முகர்ந்து எவ்வளவேணும் உண்ணலாம்.

236 சபையோருக்கு பானகம் கோடுக்கும் ஜாலம்

ஒரு குடம் ஜலத்தை சபையில் கொண்டுவரச் செய்து । அதை சிலருக்கு குடிக்கக் கொடுத்த பிறகு ஓ சபையோரே பாருங்கள். இதை பானகமாகச் செய்கிறேனென்று சொல்லி, விபூதி போடுவது போல் இரண்டொரு சிட்டிகை சாக்கிரீம் தூளைப்போட்டு மறுபடி கொடுக்க பானகம்போல் இருக்கும்.

237 கையில் வெற்றிலை, சுன்னம் சிவக்கும் ஜாலம்

வேலன் கொழுந்தை உன்னிரு கரங்களிலும் கசக்கித் தேய்த்துக்கொண்டு வெற்றிலையில் சுன்னத்துடன் வைத்துக் கசக்க உடனே சிவந்துவிடும்.

238 கரைத்தமணலை எடுக்கும் வித்தை

ஆற்றுப் பெருமணலோடு வேலன் பிசினியைப் பொடிச் செய்துக் கலந்து சபையில் காட்டி, ஜலத்தில் கரைத்துவிட்டு கைவிட்டு துழவியெடுக்க உருண்டையாக கையோடுவரும்.

239 கிளிஞ்சி உற்பத்தி வித்தை

மக்கிப்போன ஊமச்சியைப் பொடித்து ஒரு பாத்திரத்தில் ஜலம் விட்டு, அதில் ஒரு சிட்டிகை தூவி பத்து நிமிஷம் பொறுத்து பார்க்க கிளிஞ்சி மேய்ந்துக் கொண்டிருக்கும்.

240 குயவன் சூளையைச் சிதர வைக்கும் ஜாலம்

குயவன் பாண்டங்களை அடுக்கி சூளையில் தீயிடுமுன்னர் 4-புறங் களிலும், கெச்சக்காய்களை சூளைக்குள் வைக்க, குயவன் தீயிட்டால் சூளை சிதறும்.

241 கயிற்றின்மேல் நடக்கும் ஜாலம்

நூலினால் திரித்து நன்றாய் முறுக்கேற்றின வரிக்கயிற்றை தயார் செய்துக்கொண்டு, உனக்கு வேண்டிய உயரத்தில் இரண்டு மூங்கில் களைச் சேர்த்துக் கட்டி, இவ்வித மின்னொன்றுஞ் செய்துக்கொண்டு, அதை ஒன்றுக்கொன்று 20-அடி தூரத்தில் நிறுத்தி முன் தயாரித்த வரிக்கயிற்றை அதின்பேரில் போட்டு, பூமியில் இரண்டு கட்டப்பாரை களை அடித்து அதில் பிகுவாகக் கயற்றைக் கட்டிவிட்டு, 7-அடி உயர முள்ள மூங்கில்வாரை யொன்றைக் கைபிலேந்திக்கொண்டு கயிற்றின் பேரில் உட்கார்ந்து, வாரையை மார்போடணைத்து உன்னிரு கரங்களா லும் பிடித்து, கயிற்றின்பேரில் நடந்து மையஞ் சென்று ஊஞ்சலில் ஆடுவதைப்போல் ஆடலாம். அனுபோகமும் தைரியமும் வேண்டும்.

242 ஈயம் உருக கைவிடும் ஜாலம்

மூசையொன்றை சபையில் கொண்டுவந்து (ஃ) இவ்விதமாக மூன்று கல்லை வைத்து அதின்பேரில் மூசையை வைத்து தீக்கொளுத்தி காரீயக்கட்டிகளை அதில் போட்டு உருக்குவதுபோல் பாவித்து, மேல் மூடும் மூடியில் இரண்டு சேர் பாதரசத்தை அடக்கஞ் செய்து வைத்திருந்து, அம்மூடியை மூசை மேல் மூடுவதுபோல் நடித்து ரசத்தை அதில் இரக்கிக்கொண்டு, உடனே சபையிலுள்ளவர்களைப் பார்த்து ஈயம் நன்றாக உருகிவிட்டது. இதை நான் கையிலெடுக்கிறே னென்று சொல்லி, மூடியைத்திறந்து மூசையிலுள்ளதை கையிலெ டுத்து, ஆற்றிக் காண்பிக்க சபையிலுள்ளவர்கள் உன்னை ரொம்பவும் மெச்சிக் கொள்வார்கள். ஆனால் சூடெரிப்பது சூக்ஷமம்.

243 குழை மாற்றும் ஜாலம்

நிகளம் முக்காலடியும், உள் ஒரு அங்குல அகலமுள்ள மூங்கில் குழைகள் இரண்டு தயார்செய்து, இரண்டிற்கும் தலைப்புறத்தில் ஒரு

துவாரஞ் செய்து, அதற்குத் தகுந்த நூல்கயிறுகள் இரண்டு துண்டெடுத்து கயிற்றின் ஒவ்வொரு முனையிலும் சுங்குகள் கட்டி அதன் அடி முனைகளில் களிமண் குண்டுகள் தொடுத்து குழைக்குள் இதுகளை பதனஞ் செய்து, குழையின் அடிப்பாகத்தைக் கார்க்கடைத்து, சபையில் இஷ்டம்போல் ஒரு குழையை யெடுத்துக் கையில் வைத்துக்கொண்டு, கயிற்றை யிழுத்து வெளியில் தொங்கவிட்டு, ஒரு குழையை பூமியில் வைத்து அதன் கயிற்றைக் கையிலெடுத்து வெளியே யிழுத்தால் உன் கையிலிருக்கும் கயிறு உட்செல்லும். பார்ப்பவர்கள் உனக்குக் குரளி வசியமென்று சொல்லுவார்கள். இதைப் பற்பலவிதமாக உன்னிஷ்டம்போல் சபையில் விளையாடிக் காட்டலாம்.

244 சீலை அவிழ்க்கும் ஜாலம்

கர்த்தபங்கள் ஒன்றுடனொன்று சேரும்போது, ஆண் கழுதையின் வால்மயிரைப் பிடுங்கிவந்து வைத்துக்கொண்டு, கண்ணில்லாத புற்றின்மேல் படர்ந்திருக்கும் கட்டுக்கொடிக்கு கிராணத்தில் காப்பு கட்டி பலி பொங்கல் தூபதீபம் முதலியதுடன் வேரைப் பிடுங்கிவந்து, அந்த பேரை வளையமாடி இதில் கழுதை மயிருஞ் சேர்த்துச் சுற்றி, அதின்மேல் ஐங்காயம் பூசி, தங்கக் கம்பியும், வெள்ளிக் கம்பியும், வேரின்மேல் சுற்றி, ஜாலக்காளை எட்டுநாள் தியானித்துப் பூசை செய்து கையில் வளையத்தைப் போட்டுக் கொண்டு மேற்புரத்தில் தள்ள சீலை அவிழும். கீழ்புறந்தள்ள எப்போதும் போலாகிவிடும்.

245 சர்வ வசிய ஜாலம்

விழுதியிலையையும், அதின் கிழங்கையும் ஒருமண்டலம் வரை ஆவின்பாலிலரைத்து அந்தி, சந்தியில் தின்று வந்தால் காயசித்தியுண்டாகி, சரீரத்திலுள்ள நோய்களெல்லாம் விலகி, தேவர்களெல்லாம் வசியமாவார்கள். சித்தர்களெல்லாம் வசியமாகி நீ கேட்டதை யெல்லாம் கொடுப்பார்கள். உலகமெங்கும் வசியமாகும்.

246 இதுவுமது

வெள்ளறுகு சமூலத்தைக் கொண்டுவந்து பசும்பாலிலரைத்து மேற்சொன்ன விதமாகச் சாப்பிட்டு வந்தால் இதுவும் மேற்சொன்னபடி செய்யும்.

247 இதுவுமது

(கொத்தான்) என்கிற செடிக்கு வேறில்லாமல் இருந்தாலும் அது எவ்விடத்தில் படர்ந்திருக்கின்றதோ அதன் கீழ் எங்கு அக்கொடி

நின்று விடுகிறதோ அதற்கு நேராக அக்கிழங்கிருக்கும். அதைக் கண்டுபிடித்து அவ்விடத்தில் வாருவைக்கோலைப் போட்டு கொளுத்தி விட்டு அப்புறம் தோண்டினால் கிழங்ககப்படும். அதைக்கொண்டு பாலி லரைத்து ஒரு மண்டலம் தின்று வந்தால் காயசித்தி யுண்டாகி சகல மும் வசியமாகும்.

248 இதுவுமது

பொற்சீந்தில் கிழங்கைக் கொண்டுவந்து பாலிலரைத்து 40-நாள் சாப்பிட காயசித்தி யுண்டாகி மேற்சொன்னவைகள் வசியமாவதுடன் நரை திரைகளும் மாறும். இதைச் செய்தவர்களுக்கே இதன் உண் மை தெரியும்.

249 எக்காளம் வாசிக்கும் ஜாலம்

ஆம் ஓம் சுவஹா வென்று லட்சமுரு செபித்து ஜாலக்காளை பூசைசெய்து நத்தைச்சூரிவேர் கொண்டுவந்து ஐங்கோலம் பூசி அதை உன்னிரு கைகளாலும் பிடித்துக்கொண்டு ஷை மந்திரஞ் சொல்லி மண்ணெடுத்து எதிரே போட்டுவிட்டு நீ கைகளை நீக்கி நீட்டி முறுக்கி னால் எக்காளம், காரை, சின்னம், கர்நாடக வாத்தியம் முதலிய எல்லா வித சப்தங்களு மொலிக்கும்.

250 சகல வாத்திய ஜாலம்

கையில் இரும்பு வளையம் போட்டுக்கொண்டு ஒரு வகை ஜாதியார் கிராமங்களில் வசிப்பர் அவர்களைக் கண்டு பிடித்துக்கொண்டு அவர்கள் மரணமடையும்போது, அவர்களை கையிலிருக்கும் இரும்பு வளையத்து டன் தகனஞ் செய்வார்கள். அந்தச்சமையம்அவர்கள் காடாற்றும் முன் நீ சென்று அந்த இரும்பு வளையத்தைத் தேடி யெடுத்துக்கொண்டு வந்து அதனைப் பாக்கு வெட்டியைப்போல் செய்துக்கொண்ட பிறகு கிராணம் பிடிக்கும்போது சங்கம்வேருக்குக் காப்புகட்டி, பலி பொங் கலுடன் தூபதீபங் கொடுத்து கிராணம் விடுவதற்குள்ளாக அதன் வடக்கே போகிற வேரை யெடுத்துவந்து அதற்கு ஐங்கோலம் பூசி அதை மேற்படி பாக்குவெட்டியில் வைத்து நறுக்க மேற்சொன்ன சகலவித வாத்தியத்தினுடைய நாதமும் செவிக்கினிமையாய்க்கேட்கும். ஆனால் இவ்வேலைகளின் காலம் இடம் முதலியவைகளைக் குரு முகாந் திரமாய்க் கேட்டு செய்வது மிக நல்லது என்று தேர்ந்த பெரியோர் சொல்லுவார்கள்.

251 எக்ஷணி வசிய ஜாலம்

ஸ்ரீம், இரீம், கிலீம், அவ்வும், வுவ்வும், மவ்வும், நமசிவய, ஓம் என்று செபித்து சாதிக்காய், கிராம்பு, வால்மிளகு, கற்கண்டு, பழம்,

பால், இதுகள் வேண்டுமென்று எக்ஷணியைத் தியானித்தால் சகலமும் வரும் எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள்.

252 வேறு ஜாலம்

தெப்பக்கால் மூலிகைக்கு வெள்ளிக்கிழமையில் காப்பு கட்டி, எட்டு நாள் காலை மாலை விடாது மேற்சொன்ன மந்திரத்தைச் செபித்துத் துதிசெய்து பொங்கல் பலி தூப தீபங்கொடுத்து அதன் வடவேரை வாங்கி ஐங்கோலத்தைப் பூசி, அதன்மேல் கருச்சீலை சுற்றி தங்கக் கடயத்தில் போட்டு லட்சமுரு செபித்து சித்தியாக்கி வைத்துக் கொண்டு ஜாலமாடும் சபையில் முக்காடுபோட்டு உட்கார்ந்துக்கொண்டு நீலகண்டியைத் தியானஞ் செய்தால், எக்ஷணியானவள் சகல தின்பண்டத்தோடும் வருவாள். அதை நீ வாங்கி சபையிலுள்ளவர்களுக் கொடுக்கலாம். ஆனால் நீ மாத்திரம் சாப்பிடக்கூடாது.

253 இதுவுமது

பாம்பு மண்டூகத்தைப் பிடித்திருக்கும்போது தலைகீழே விழும்படியாக ஒரே வெட்டாக வெட்டித் துணித்து இரண்டு தலைகளையும் எடுத்துக்கொண்டு, ஐங்கோலத் தைலத்தில் தோய்த்து, சிகப்புக் கம்பளியில் பையொன்றுத் தைத்து அப்பைக்குள் இத் தலையைவைத்து, வாயைத் தைத்துவிட்டு உரலில் வைத்துக் குத்தினுல் அதன் காற்று என்னும் வாயு போகும். அதை யெடுத்து வைத்துக்கொண்டு சகல வித்தையும் அதன் மூலமாய் ஆடலாம்.

254 மணலை அல்வாசெய்யும் ஜாலம்

பாதம்பிசின், சீனுகற்கண்டு வகைக்குப் பலம்-1, குங்குமப்பூ விராகனெடை அரிக்கால் இம்மூன்றையும் மணல்போல தூள் செய்து வைத்துக்கொண்டு ஒருதட்டில் மணலைப்போட்டு சபைக்குக் காட்டி இந்தமணலை அல்வாசெய்கிறேன் பாருங்களென்று, ஒரு பெரிய துணியைவிரித்து மூடி, தந்திரமாக அம்மணலை கீழ் நழுகவிட்டு, மணல் கொட்டுண்டது தெரியாமல் கலைத்துவிட்டு மேல்மூடியதுணியில் யாருக்குந் தெரியாமல் ஒரு கள்ளஅறை செய்து அதில் முன் சேகரித்த சாமானை ஒளித்துவைத்திருந்து, சாக்கிரதையாக அதைப் பீங்கானில் கொட்டிக்கொண்டு, உனக்கு வாயில்வந்த மந்திரத்தைச் சொல்லிக் கொண்டு, துணியைத் திறந்து சபையோர்களுக்குக் காட்டுவாயானுல் மணல்போலவே இருக்கும். அச்சமயம் யாவரையும் பார்த்து இங்கு யாரோ கட்டிவிட்டார்களென்று பாசாங்குத்தனம்பண்ணி, ஆகிலும்

பரவாயில்லை, நான்தானு விட்டுவிடப்போகிறேனென்று மந்திரம்சொல்லிக்கொண்டே ஜலத்தை அள்ளித் தெளித்து மூடி, கொஞ்சநேரம் கழித்துத் திறந்துபார்க்க அசல் அல்வாவாகவே இருக்கும். ஆனுல் ஜலத்தைமாத்திரம் நிதானமாய் பிரயோகிக்கவேண்டும்.

255 காளி ஜாலவித்தை

அரிகாளி, ஓடிகாளி, சூலகபாலகாளி, மோடிதேவி, பூமிகாளி ஓம் மாகாளி, ஓம்பிடாரி, மாகாளி, மோடிகாளி, மந்திரமாகாளி, ஓம்ஆம், கோதண்டரூபி, ஆளிவாகனத்தின்மேலேறி என்னை யாவரும்மெச்ச குடை, கொடி, சாமரத்தோடு ஆங்காரசத்திகொண்டு வருவாயென்று லட்சமுரு செபித்தபிறகு வெள்ளிக்கிழமைதோறும் விடாது நேம நிஷ்டையுடன் பூசித்தால் சித்தியாகி, சதா உன்னுடன் விளையாடிக் கொண்டிருப்பாள்.

256 பந்தாட்ட ஜாலம்

செம்பருத்திப்பஞ்சினுல் ஐந்து பந்துசெய்து அதன்கொம்பினுல் பந்தையடிக்கும் கோலும் செய்துக்கொண்டு உன்னுடன் விளையாடுங் காளியைத் தியானஞ்செய்து ஜாலமையைக்கொஞ்சம் கோலிற்றடவி, பந்துகளைத் தட்டி ஆட்டினுல் உன்னுடன் அநேகபந்துகள் ஆடுகிறமாதிரி பார்ப்பவர்களுக்குத் தோற்றும்.

257 எட்டிமுளை யடிக்கும் வித்தை

கொடி, சீலை, சவத்தின்தைலம், ஐங்கோலம் இவைகளை ஒன்ருய்ச் சேர்த்து கருக்கிக்கொண்டு, மறுபடியும் கல்வத்தில்வைத்து அரைத்தெடுத்து சிமிளில்வைத்து, யநம, யங், வங், சிங், சுவஹாவென்று லக்ஷம் உருசெபித்து எட்டிமுளையைக் கூருகச்சீவி, மேற்படி கருவைத்தடவிப் பூசைசெய்து வைத்துக்கொண்டால் சகல வித்தைகளுமாடலாம்.

258 சேக்கில் எண்ணேய் வராமல் செய்யும் ஜாலம்

ஞாயிற்றுக்கிழமை துவாதசியாகப் பார்த்து மேற்படி முளையை செக்காடுமிடத்தில் புதைத்துவிட்டால், அவன் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் செக்கில் எண்ணெய் வராது.

259 கரும்பாலையில் ரசம்வராத வித்தை

வியாழக்கிழமை கேட்டை நக்ஷத்திரமாகப் பார்த்து கரும்பாலையில் புதைத்துவிட்டால் சாறுவராது.

260 திராவகங்கள் இறங்காத வித்தை

சுவாதியுடன்கூடிய திங்கட்கிழமையதினம் திராவகங்கள் இறக்குமிடத்தில் வைத்துவிட்டால் எவ்வளவு நாளானபோதிலும் ஒருதுளிகூட இறங்காது.

261 சுண்ணும்புக்காளவாய் வேகாத ஜாலம்

சனிக்கிழமை பூராட நக்ஷத்திரத்தில் மேற்படி மூளையைப் பூசை செய்து சுண்ணும்புக்காளவாயில் வைக்க சுண்ணும்பு வேகாது.

262 கோல்லனுலே வேகாத ஜாலம்

ஞாயிற்றுக்கிழமை திரயோதசியாகப் பார்த்து காலே முதல்சாமத்திலேயே வேரைக் கொல்லனுலேயில் வைத்தால் அவன் எவ்வளவு கரியைப்போட்டு ஊதினுலும் நெருப்பும் பிடிக்காது இரும்பும் வேகாது.

263 செங்கல்சூளே வேகாத ஜாலம்

செவ்வாய்க்கிழமை சுவாதிநக்ஷத்திரத்தில் வேரை செங்கல்சூளேயில் வைத்துவிட்டால் கல்லுகள் எல்லாம் வேகாமல் பச்சையாகவேயிருக்கும். அதைக்கண்ட சொந்தக்காரன் பிர்மித்து ஒன்றுந் தோன்றுமல் வருத்தப்படுவான்.

264 வேள்ளாய் வேகாத ஜாலம்

வியாழக்கிழமை பூசநக்ஷத்திரத்தில் வெள்ளாயடுப்பில் வேரை அடித்துவிட்டால் வெள்ளாய் வேகாமல் வண்ணுன் குய்யோமுறையோவென அலறுவான்.

265 கடைகளில் வியாபாரமில்லாத ஜாலம்

செவ்வாய்க்கிழமை, பூசநக்ஷத்திரம், கன்னியாராசியாகப்பார்த்து, ஓர் பலசரக்குகடையில் இவ்வேரைப் புதைத்துவிட்டால் அவன் கடையில் ஒன்றும் வியாபாரமாகாது. மற்ற கடைகளெல்லாம் வியாபாரமாகும் இவன் அதைப்பார்த்து வயிறெறிந்து தன்னுடைய சாமானேக் குறைத்து விற்றபோதிலும் வாங்குவாரின்றி ஏங்கியிருப்பான் அதைப் பார்க்க ரொம்பவும் பரிதாபமாயிருக்கும்.

266 போது

மேற்படி தம்பனவித்தையில் இன்னும் எவ்வளவோ வேலேகளேச் செய்யலாம். ஆனுல், அவ்வேலேகளே யெல்லாம் குருமுகாந்திரமாய்த் தெரிந்துக்கொண்டு செய்வது ரொம்பவும் உத்தமம். இதன்றி

மேற்படி வேலையை தமாஷாக செய்யலாமே யொழிய ஸ்தாபனமாகச் செய்யக்கூடாது. அப்படிச்செய்தால் பெரியோர்கள் நம்மைச் சபித்து விடுவார்கள். ஆதலால், ஷை வித்தையை யாருக்குச் செய்யலாம் யாருக்குச் செய்யக்கூடாதென்று அறிந்து செய்வது உத்தமம்.

267 நிவர்த்தி செய்யும் வித்தை

மேற்சொன்ன தம்பனவித்தைக்கும், மற்றவித்தைக்கும் நாம் அடிக்கும் முளையை எடுத்து ஜலத்திற் கழுவிவிட எப்போதும்போ லவே சொஸ்தமாகிவிடும்.

268 புருஷ வசிய ஜாலம்

புல்லாமணக்குச் சமூலத்தைக் கொண்டுவந்து மாதவிடாயான மூன்றுநாளும் அல்குலில் வைத்துக் கொண்டிருந்து நாலாம்நாளில் அதில் விராகனெடை-1 எடுத்து, அத்துடன் மாக்கொடி 1-விராகனெ டையும், முன் சமூலம்வைத்திருந்த ஓலை 1-விராகனெடையும் சேர்த்து அவளுடைய சிறுநீரினுலரைத்து, துவரைப்பிரமாணமுள்ள மாத்திரை களாகச் செய்து நிழலிலுலர்த்தி தாம்பூலத்திலாவது, சாப்பாட்டிலா வது, பாலிலாவது ஒரு மாத்திரைகொடுத்தால், புருடர்கள் அறிவு கெட்டுப் புத்திமயங்கி உன்னைவிட்டுப் பிரியாமல் நீ கேட்டதைக் கொடுத்து உனக்கு அடிமைவேலைகளைச் செய்வார்கள்.

269 சாதம் வேகாத ஜாலம்

நான்குவகைச் சாதியர்களில் எவர்கள் வீட்டடுப்பில் இதைப் புதைத்து விடுகிறுயோ அவர்கள் வீட்டில் என்னபாடுபட்டு தீக்கொ ளுத்தினுலும் அடுப்பில் ஒன்றும் வேகாது இதற்கு வெள்ளிக்கிழமை யும், அஸ்தநக்ஷத்திரமும் வேடிக்கையான நாளாகும்.

270 மாடன் வசிய ஜாலம்

விஷந்தின்று இறந்துபோன மனிதனுடைய கரியைக் காடாற்று முன்னமே எடுத்துக்கொண்டு அதனுடன் ஐங்கோலம்விட்டரைத்து, அதில் ஆகாயம்போல் மண்டையை எழுதி எதிரியின்பேரை அதின் கீழ் எழுதி முகத்தைமாத்திரம் வீங்கினுப்போல சுவாலையில் எழுதி, ஆகாயமாடனுடன் அந்தரமாடனைத் துதித்து லக்ஷமுருசெபித்துப் பிறகு, காரியத்தகட்டில் (ஓம் நமோ பகவதே, ஓம் படு சுவஹா) என்று சொல்லி பூசை பலி முதலியதுகளைச் செய்து வைத்துக் கொண்டு அதில் எதிரியின் பேரை நாட்டி ஐங்கோலஞ்சேர்த்து மேற் படி தகட்டிற்குப் பூசி மாடனைத் தியானஞ்செய்து உன் வசமாக்கிக்

கொண்டு, ஓஆகாயமாடா! இந்தா கல்லென்று சொல்லிக் கல்லைத் தகட்டின்பேரில் வைத்துவிட்டால் அது கோடிபேர்கள் பார்த்திருந்தாலும் கல்லையும், மணலையும், மண்ணையும் சேற்றையும் வாரி வாரி யிறைக்கும். இதல்லாமலின்னும் குப்பை, மலம், ரோமம், எலும்பு முதலிய வைகளையும் வாரி வாரி எரியும். அந்த சமயம் உன்னெதிரி எங்கு போனாலு மவனுடன்கூட இதுவும் இன்னல்கள் விளைத்துக்கொண்டே போகும் ஐந்து நிமிஷமாகிலும் அவனைச் சும்மாவிடாது.

271 நிவர்த்தி வித்தை

இதில் கஷ்டப்படும் எதிரியானவன் உன்னை வணங்கிவந்து நீகேட்டதைக்கொடுப்பானாகில், நீ முந்தி உருவெழுதியதை அழித்துவிட்டு சக்கரத்தைக் கழுவி, மாடனைத்துதித்துப் பூசைபோட்டு முன் தகட்டின்பேரில் வைத்த கல்லைக்கேட்டு வாங்கிக்கொள்வாயானால் நிவர்த்தியாகுமென்று தேர்ந்த முன்னோர்கள் சொல்லினர்.

272 இருதலைக்கொள்ளி ஜாலம்

சிவ வசி, என்று லக்ஷத்தியெட்டு உருசெபித்து அக்கினியைத் துணியிற்சுற்றி, தகட்டைக்கீறி, மேற்படி அட்சரத்தைப் போட்டு, அதன் ஐங்கோலம், சுடலைக்கரு இவைகளைப்பூசி, எதிரியின் பெயருடன் பூசைசெய்து, முன்சொன்ன அக்கினிபந்தத்தைத் தகட்டில் வைத்து இருதலைக்கொள்ளி நீ உடனே பகைவர்களுடைய வீட்டைக் கொளுத்தென்று சொன்னால் தவராது கொளுத்திவிடும்.

273 மலக்குட்டி ஜாலம்

ஓம், இரீம், வா, வா குட்டிச்சாத்தானென்று பூசை செய்தால் அது பிரசன்னமாகும். நீ அப்போது அதை வணங்கி ராஜபலிபூசை செய்து வைத்துக்கொண்டால் அதனால் உனக்கு அனேக தந்திரமான வேலைகளெல்லாம் நடக்கும்.

274 வேறு ஜாலம்

குட்டிச்சாத்தானை மந்திரத்தினால் வசியஞ்செய்து வைத்துக் கொள்ள வேணுமென்றால், ஒரு தேவாங்கை வாங்கி வளர்த்துக்கொண்டே வந்து அதன் கண்ணில் திரளும் பூளையைத் தினதினம் நம் கண்ணிலிட்டுப் பழக்கிக் கொண்டபிறகு, மடியில் கொஞ்சம் நெல்லுப் பொரியுடன் மேற்படி தேவாங்கைக் கையிலெடுத்துக்கொண்டு, ஊர் மாடுகள் மேய்ந்துவிட்டு வீட்டிற்கு வரும்வழியில் காத்துக்கொண்டிருக்கவேண்டும். அப்போது அம்மாடுகளில் எந்தக் காளைமாடு முந்தி

வருகிறதோ அதன் இரண்டு கொம்புகளுக்கும் மத்தியில் இது குந்திக் கொண்டுவரும். அந்த சமயம் நம் கையிலிருக்குந் தேவாங்கு கண் களில் நீர்விட்டழுகும். அது தெரிந்து நாம் அதன் பூனையைக் கண்ணி விட்டுக்கொண்டு பார்த்தால் அது குந்திக்கொண்டு வருகிறது நமக்கு நன்ருகத் தெரியும். அதுசமயம் மடியிலிருக்கும் பொரியை எடுத்துப் பூமியிலிறைத்தால் அதைப் பொறுக்க மேற்படி சைத்தான் கீழேயிறங் கும் அப்போது நம் மந்திரத்தினுல் அதை வசப்படுத்தி வைத்துக் கொண்டு நம்மிஷ்டம்போல் எவ்விதவேலைகளையும் நடத்தலாம்.

275 இதுவுமது

ஓம், இரீம், வா, வா யென்னும் மந்திரத்தைத் தகட்டிற்கீறி, ஐங் கோலம், சுடுகாட்டுக்கரு இவைகளைச்சேர்த்து மத்தித்து எதிரியின் பேரைத் தகட்டில்வரைந்து லக்ஷுருசெபித்து, பூசை, பலி முதலிய வைகளைச் செய்து எதிரியின் மலத்தையெடுத்து தகட்டில் வைத்து, ஓ மலக்குட்டி! இந்தாமலம்யென்று முன் மந்திரத்தைச் சொல்லிப்பிறகு வலதுகையில் மலத்தைவாரி நீ நினைத்தயிடத்திற் போடென்றுசொல்லி விட்டால் அது அப்படியே செய்யும்.

276 இதற்கு நிவர்த்தி வித்தை

பகையாளியானவன் உன்னை வணங்கிவந்தானுனல், நீ உடனே தகட்டிலிருக்கின்றதை யெல்லாம் ஒன்ருய்ச்சேர்த்து ஆற்றுநீரில்போட் டுக்கழுவிவிட, எல்லாம் மாயமாய்ப்பறக்கும்.

277 சத்திசிவ ஜாலம்

இம், உம், கம், ரமாங், சிங், ஆயி, டாகினி, மாகினி, விஷ்ணு சகோதரி, சர்வாணி, உமை, தேவி, பராசத்தி, ந, வ, சி, யென்று வெள்ளிக்கிழமை பூசநக்ஷத்திரத்தில் லக்ஷத்தியெட்டு உருசெபித்து, ரீங்காரத்துடன் சத்தி சிவபூசைசெய்து, விபூதிபூசி, ஏவல், பிசாசு, பார்வை, பூதமிவைகளுக்கு வேர்பிடுங்கிக் கருவைத்தடவி சக்கரங்கள் போட்டு ஆட்டினுல் எப்பேர்ப்பட்ட பூதப்பசாசுகளெல்லாம் கதறியோ டும். மந்திரத்தைமட்டும் தகட்டில் எழுதிக்கட்டவும்.

278 இதுவுமது

அமாவாசையும், ஞாயிற்றுக்கிழமையும், கிராணமும் சம்பவிக்குந் தினம் ஒண்டிமூலிகைச்செடிக்குக் காப்புகட்டி, பொங்கல், பலி, பூசை முதலியனவுஞ்செய்துக் குளிசமாடி கட்டிக்கொண்டால் பார்வைமுதலி யது தீரும்.

279 கார்த்திகைவீரியார்ச்சுன வசியம்

ஓம், ஆம், ஸ்ரீம், கிலியும் கார்த்திகை வீரியார்ச்சுன சுவஹா வென்று லக்ஷத்தியெட்டுரு செபிக்கச் சித்தியாகி நீ நினைத்தபடியெல்லாஞ்செய்யும். ஆனால், இதற்கு தர்ப்பணம் முதலிய யாகாதிகருமங்கள் செய்யவேண்டும்.

280 விளைவுகள் பெருகும் ஜாலம்

நாயுருவிசெடிக்குசெவ்வாய்க்கிழமைதினங் காப்புகட்டி, பொங்கல், பலி, தூபதீபங்கொடுத்து (ஸ்ரீம்) என்று லக்ஷத்தியெட்டு உருசெபித்து வேரைப்பிடுங்கிவந்து ஐங்கோலக் கருவைப்பூசி, தோட்டக்கால், கொடிக்கால், வயல் இதுகளில் ஓர் குடுவையில் போட்டுப் புதைத்தா யானால் விசேஷித்தப் பலனைக் கொடுக்கும்.

281 வேடிக்கை ஜாலம்

பிராமணரில் யிறந்துபோன பிரம்மசாரியைக் கொண்டுபோய் கொளுத்திக் காடாற்றுமுன்பாக அவனுடைய எலும்பொன்றை யெடுத்துவந்து வஸ்து சேர் ஒன்றுவாங்கி, சிதம்பர உச்சாடனசக்கரத் தைக்கீறி, மேற்சொன்னவைகளை எதிரில்வைத்து லக்ஷத்தியெட்டு உருசெபித்து பிறகு தேவர்கள்முன்பு அஸ்தியைவைத்துப் பலி, பூசை செய்து வந்தால் சக்கரத்தினுடைய மகிமை திருநடனமாடி நீ கேட்ட வரத்தைத் தடையின்றிக் கொடுப்பார்கள்.

282 தேள் விஷமேறும் ஜாலம்

கெச்சைக்காயி னுள்ளிருக்கும் பருப்பை எடுத்துவிட்டு, செம் போத்துக்காக்கை நாக்கு, உடும்புநாக்கு, கீழ்க்காநெல்லிவேர், காமப் பால் இவைகளைச் சமயெடையாக கிராணம் பிடித்திருக்கும்போது ஷெ காய்க்குள் செலுத்தி துவாரத்தைக் கொசுகின் மெழுகால்மூடி, வைத் துக்கொண்டு தேள்கடித்து வந்தவர்களுக்குக் கையில்கொடுத்து அதை இன்னொருவர்கையில் கொடுக்கச்சொல்ல, விஷம் இவனைவிட்டு அவ னைப்பற்றும். இம்மாதிரி எத்தனைப்பேரானாலும் காயை மாற்றிமாற்றிக் கொடுக்க, வாங்கினவர்களெல்லாம் விஷத்தாலலைந்து மிகவும் வருத்தப் படுவார்கள். அப்புரம் காயைக்கீழே போட்டுவிட்டால் விஷம் இறங்கி விடும். இது ஒரு தமாஷானவித்தை.

283 வராகி வசிய ஜாலம்

சிவன், காளி, கணபதி, கந்தன், வயிரவன், பெருமாள், ஐயன், அநுமார், கறுப்பன் ஆகிய இவ்வொன்பது பேருடையமெழுகும்

வகைக்கிரண்டு விராகனெடையாகப் பதினெட்டு விராகனெடை யெடுத்து, அதனுடன் ஐங்கோலம், ஐங்காயம், சுடலைக்கரு இவைகளைக் கூட்டி உருவஞ்செய்து மயானருத்திரனை யம், பம், யம், பம் மயான ருத்திரா கட்டு, கட்டு, குட்டியே எரி, எரி, யென்று லக்ஷத்தியெட்டு உருசெபித்துப் பகைவரைப்போலுருவஞ்செய்து 1008-உரு செபித்து பூசைசெய்து முப்பத்திரண்டு குப்பியில் முடக்கிவைக்க முடமாவான். மேலும் இவைகளை ஊசியால் குத்தும்போது விரல், நகம், காது இவைகளில் ஊசியைச் சொருகிவைக்க மகாகுத்தலெடுத்து அலறுவான்.

284 இதை நிவர்த்தி செய்யும் வித்தை

ஷை வேலையை நீ செய்தாயென்று எதிரியானவன் தெரிந்துக் கொண்டு உன்னைவந்து வணங்கி நிற்பானாகில் நீ பதுமைக்குக் குத்தியிருக்கும் முள்ளை யெடுத்துவிட்டு பாவையை நீரில் கரைத்துவிட எப்போதும்போல சுகமாகிவிடு மென்பதற்குத் தடையில்லை.

285 இதுவுமது

கறுப்புநாயின் விலாவெலும்பு, காக்கைநரம்பு, சுடலைக்கரு, ஐங்கோலக்கரு இவைகளை ஒன்றாய்ச்சேர்த்தரைத்து, நாணத்திற்பூசி, மந்திரம் ஓம், ரீங், கங், சங், ஐயும், ரீம், ரங், லா, லீ, லூ, மங், சிங், சிவயநம என்று லக்ஷமுரு செபித்துப் பூசை, பலி முதலியனசெய்து எதிரியின்பேரைத் தியானிக்க எதிரி மாரணமாவான்.

286 இதுவுமது

1-மண்டலம் வரைக்கும் அந்தி சந்திகளில் சத்திபூசையுடன், ஐயும், கிலியும், சுவஹாவென்று லக்ஷத்தியெட்டு உருசெபித்தால் வராகியானவள் வசியமாவாள். அப்போது உனக்கு இவ்வுலகமெல்லாம் வசியமாகி நீ கேட்டதைக் கொடுப்பார்கள்.

287 இதுவுமது

ஷை பூசையைச் செய்துக்கொண்டே நரிபாலில் அரிசியைக் கலந்து சுடலைக்கருசேர்த்து, நிழலிலுலர்த்தி அன்னஞ்சமைத்துப் பகைவனுக்கிட்டால், அவனுக்குப் பித்தமேறி பயித்தியம் பிடித்தவனைப் போலலைவான்.

288 இதற்கு நிவர்த்தி வித்தை

பிறகு, சத்துரு உன்னை வணங்கி வருவானாகில், மிளகு தக்காளிச் சார் இவைகளை மூன்றுநாள் ஆறுவேளை கொடுக்கத்தீரும். ஆனால், உப்பு புளி முதலியதுகளை நீக்கி 7-நாள் ஸ்நானஞ்செய்து வைத்து எட்டாநாள் எல்லாவற்றையும் கூட்டிக் கொள்ளவும்.

289 வேறு பேயாட்டும் ஜாலம்

பேய்பிடித்தவர்கள் எதிரில் ஓர் தட்டில் விபூதியைப்போட்டு அதில் யங் சிங் வய நம வென்று செபித்துக்கொண்டிருக்க எவ்வளவு கொடூரமான பேயாயிருந்தாலும் உடனே ஓடிப்போய்விடும்.

290 இதுவுமது

வங் மங் சிங் சிவயநமசி யென்று அவர்களை உட்காரவைத்து செபித்து விபூதியை அள்ளிப்போட்டவுடன் முடியைக் கொடுத்துவிட்டு சொல்லாம லோடிப்போய்விடும்.

291 உடுக்கையை உடைக்கும் ஜாலம்

ஐயும் கிலியும் சவ்வும் உடுக்கையைக்கட்டு, ஐயும் கிலியும் சுவஹா வென்று செபித்துக்கொண்டிருந்தால் உடுக்கையானது கட்டிவிடும். ஆனுலிது மகா கொடுமையான தொழில்

292 வீட்டைவிட்டு வெளிவரும் வித்தை

கால் பெருவிரல்களையும் கைபெருவிரல்களையுங்கட்டி மல்லாந்துப் படுத்துக்கொண்டு தன்மனதைப் பூரணத்தில் நிறுத்தியிருக்க, மனஞ் சொக்கி, மவுனத்திலூன்றிச் சுழுத்தியி லடங்கிவிடும். பின்பு தெளிந்தவுடன் கட்டுகளை யவிழ்த்துவிட்டு வெளியில் வந்துவிடவும். இப்படி 12-வருடஞ் செய்துவந்தால் சித்தியாகும். அதன் பிறகு உன்னை எவ்விடத்தில் போட்டு அடைத்து விட்டாலும் வெளிவர சுவரிடங்கொடுக்கும். இது யோகிகள் சித்தர்கள் முதலியவர்கள் செய்யும் பரகாயப் பிரவேசமென்று அறிந்தவர் சொல்லுவார்.

293 வேறு

நாபியைச்சுட்ட கோலில் முளை செதுக்கி ஐங்கோலக் கருவைப் பூசி, எதிரியின் மலத்தில் போட அவனுக்கு மலசலங்க ளடைத்துவிடும்.

294 விளைவுகள் நஷ்டமாகும் ஜாலம்

ஆதிவாரத்தில் சித்திரமூலச் செடிக்குக் காப்புகட்டி (தா) யென்னும் மந்திரத்தை லக்ஷத்தியெட்டு உரு செபித்து வேரைப்பிடுங்கி ஒரு கலசத்தில் வைத்து, கருவையுங்கூட வைத்து மூடி, வயல், தோட்டம், கொடிக்கால் முதலிய பலிதமாகு மிடத்தில் வைத்தால், அவ்விடத்தில் யாதும் பலிதமின்றி நஷ்டமடையும்.

295 இதற்கு சாந்தி வித்தை

முன் புதைத்ததை யெடுத்துவிட்டு பசுங்கோமயத்தை மூன்றுநாள் தெளிக்க எப்போதும்போல் பலனுண்டாகும்.

வசிய ஈடுமுறை கும்மி

சத்திவிநாயகன் தாள்போற்றிநிதம்
சாரங்கபாணி தனைப்போற்றி
இத்தரைமீதினி லீடுமுறைசொல்ல
எல்லோருமொன்றாகக் கூடுங்கடி. 296

சித்தர்கள்நூலின் முறைப்படியேயானும்
சீராகஜாலத்தைச் சொல்லுதற்கு
மத்தகத்தில்கங்கை வைத்திடும்பரமன்
மாமலரடியைப் போற்றுங்கடி. 297

சிட்டுக்குருவியைத் தான்பிடித்துஅதைச்
சிறக்கவபானந் தைத்துவிட்டு
அட்டியில்லாம லூசிக்காந்தத்தை
அப்போதே வெள்ளையுடன்சேர்த்து 298

சரியிடையாகவே தான்போட்டுஅதன்
சந்தாகும்வாயைத் தைத்துவிட்டு
சரியானவஸ்துவுந் தென்னையாம்படியுஞ்
சாந்தமுடனே தான்சேர்த்து 299

மண்பாண்டந்தனி லெல்லாவற்றையும்
மயங்காதுசேர்த்து சீலைசெய்து
கண்யமுடனொரு மரத்துவிறகினால்
காலாக்கினிமூட்டி வற்றியபின் 300

குழியம்மிதன்னில் தான்போட்டுஅதன்
கூடியவஸ்தி ரோமம்போக்கி
அழியாதமாக்கொடி யூமத்தைவித்துட
னறுதிசுழல்வண்டுக் குழியானை 301

மின்மினிப்பூச்சி யிந்திரகோபமும்
மேவியதொட்டால் வாடிமூலஞ்
செந்நாயுருவி கையான்வேருடன்
சாரமுள்ளதிகைப் பூண்டுபூச்சி 302

ஆடையொட்டியுட னேவிராலிகெஞ்சா
ஆனயீப்புலி யீயுடனே
வாடையாஞ்சாறு பேய்க்கருப்பந்தன்னில்
வகைவகைசரியிடை தான்தூக்கி 303

தூக்கிமைபோ லாட்டியேகுளிகை
துவரையதுபோல தான்செய்து
ஊக்கமுடனிழல் தன்னிலுலர்த்திப்பின்
னுரைக்குமந்திரஞ் சொல்லக்கேளு 304

இங்இங்சிங்சிங் சுவஹாவென் றுநீ
இயன்றமட்டும் நாதஞ்சேர்த்து
மங்கைதனக்கறு சுவையிலீந்திட
மாறுமலெந்நாளும் வாழ்ந்திருப்பாள் 305

வாழ்ந்திடமுன்னே றுரைத்தமுறையிந்த
வையகத்தில்பலர் தானறிய
ஆழ்ந்தயோசனை யுடனேஷண்முக
னச்சடிதானிதைப் பாருங்கடி. 306

307 இதுவுமது

பொன்னுவாரை வேரைப் பிடுங்கி நிழலிலுலர்த்திக் குழித்தயிலம் வாங்கி, அதனுடன் கோழிமுட்டை வெண்கருவும், மாக்கொடி புனுகு, பச்சைப்பூரம், கோரோசனை இவைகள் வகைக்கு 1-விராகனெடையாகச் சேர்த்து அரைத்துத் திலர்தமிட புருஷர்களெல்லாம் வசியமாகி கேட்டதைக் கொடுப்பார்கள். அரை நிமிஷம் அவளைப் பாராவிட்டால் மகா வருத்தப்பட்டு அலேவார்கள்.

308 பெண்களைப் பிரிக்கும் ஜாலம்

காடாற்று முன்னெடுத்த மயானச் சாம்பல், குடிபோன வீட்டின்மண், ஆதிவாரமிரவில் கழுதைப் புரண்டமண் தச்சன் உளிச்செதில், முச்சந்தி கூடுமிடத்தின்மண் இவைகளை யெல்லாம் ஒன்றாய்க் கலந்து, ஓம், ஸ்ரீம், பிரிய நசி நசி யென்று இரண்டு பேருருடைய பேரையும் மேற்படி சாம்பலில் எழுதி செபித்துக் கலேத்து எப்போதும்போல் வைத்துவிட்டு மறுபடியும் பேரைமாற்றி ஓர் ஓட்டிலெழுதி அதற்கு ஐங்காயம்பூசி, ஆயிரத்தெட்டுரு செபிக்க சீலேயில் வைத்துக்கட்டி பூசைசெய்து, ஒருவருக்குந் தெரியாமல் எதிரியின் வீட்டிறப்பில் சொருக இருவரும் ஒருவரைவிட்டொருவர் பிரிந்துப் போவார்கள்.

309 வசிய முறிவு வித்தை

உயிர்போன ஆட்டுணியும், விடத்தேர்பட்டையும், தண்ணீரில் அரைத்து துவரைபோல் குளிகைசெய்து நிழலிலுலர்த்தி அறுசுவையில் கொடுக்க மருந்துவேகம் முறிந்துபோகும்.

310 சர்வவசிய ஜாலம்

கண்ணுடிபித்தன் கருங்குரங்குடனே
  காட்டானைதன்னையுஞ் சேர்த்துக்கொண்டு
மண்ணுளுமரசனை மறவாமல்கூடவே
  மத்தித்தபிற்பாடு செய்வதைக்கேள்.

கேளும்பயரளவாகவே மாத்திரை
  கெட்டியாய்ச்செய்து நிழலிலுலர்த்தி
நாளுமொவ்வொன்று நலமுள்ளசுண்ணும்பில்
  நாட்டமாய்க்குழைத்துக் கொடுத்திடுநீ. 311

கொடுத்திட்டபிற்பாடு கோதைமாரெல்லாருங்
  கூடியேயுன்னைப் பிரிந்திருக்க
அடுத்திட்டயேமன் வந்தபோதேயல்லா
  லையோயுன்னைப் பிரிவார்கள். 312

313 இதன் கருத்து

மின்மினிப்பூச்சி, சுழல்வண்டு, தலைப்பேன், குழியானை இவைகளைப் பேய்க்கருப்பன் சாற்றுலாட்டி, பயறளவாக மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு வேண்டுமானபோது ஸ்திரீகளுக்குப் புருஷர்கள் நாதத்தில் குழைத்துக்கொடுக்க வசியமாகி நீ கேட்டதைக் கொடுப்பார்கள்.

314 இதுவுமது

இதில் சொல்லியிருக்கப்பட்ட வசியம், மந்திரம் முதலியவைகளைச் செய்து பணஞ் சம்பாதிக்கலாமேயொழிய, மற்றப்படி அவர்களைக் கெடுத்து மோசஞ்செய்வதற்கல்ல.

315 இதுவுமது

பதக்கு பசுங்கோமயத்தைப் பாண்டத்திலிட்டு வாய்மூடி அடுப்பிலேற்றி ஓர் விறகால் யெரிக்க அதுசுண்டி உப்பாகத்தேறும் அதையெடுத்து டப்பியில்வைத்துக்கொண்டு, வேண்டுமானபோது நாதத்தில் குழைத்துக்கொடுக்க வசியமாவார்கள்.

316 இதுவுமது

மேற்படி உப்பில் நாதஞ்சேர்த்து அதனுடன் களிப்பாக்கை ஊறவைத்துக் கொடுக்க வசியமாவார்கள்.

317 இதுவுமது

குண்டுமணிப்பருப்பு, பேய்ப்புடல்விரை, நாய்ப்பாகல்விரை, சாதிக்காய், கோரோசனை, காந்தம் இவைகளைப் பொன்னுவாரைத்

தைலத்தாலாட்டி அதனுடன் வெள்ளைச்சாவல் ரத்தமுஞ் சேர்த்து மைபோலரைத்துச் சிமிளில் வைத்துக்கொண்டு (வசி) யென்னும் மந்திரத்தை 1008-செபித்துப் பொட்டிடக்கண்ட மாதர்களெல்லாம் வசியமாவார்கள்.

318 இதுவுமது

களிப்பாக்கை கள்ளிக்கட்டையைத்துணித்து அதில் மூன்றுநாளூரவைத்து நாலாநாளெடுத்து நாதத்தில் நனைத்துக் காயவைத்து பாக்குடன் கலந்துக்கொடுக்க வசியமாவார்கள்.

319 இதற்கு சாந்தி வித்தை

ஷெமுறை கெர்ப்பஸ்திரீகளுக்காகாது தவறி தெரியாமல் கொடுத்துவிட்டால் அவர்களுக்கு வெள்ளையைப்போல் நீர்வடியும் அதற்கு மாற்று எப்படியென்றால், பாலில் சீரகமிட்டுக் காய்ச்சி குடிக்கவும், அல்லது 15-நாள் வெந்நீரில் ஸ்நானஞ்செய்ய சாந்தியாகும்.

320 போது

சாதாரணமாய் ஸ்திரீவசியஞ் செய்வது எதற்கென்றால், அவனவன் தன் இல்லறத்தாளால் தனக்கு யாதொரு அபவாதமும் நேரிடாவண்ணம் தன்னவளை வசியஞ்செய்துக்கொள்ளச் சொன்னதேயல்லால், அயலான் மனைக்கிழத்தியைக் கெடுக்கின்றதற்கல்ல. அப்படி துஷ்டத்தனமாய் உலகத்திலுள்ள பத்தினிப்பெண்களைக் கெடுக்கும் கெட்ட எண்ணமுள்ளவர்களுக்கு மேற்படி மருந்து ஒருபோதும் பலிக்காது. அப்படி ஒருக்கால் விட்டகுறை தொட்டகுறையிருந்து பலித்தாலும், அப்பெண்கள் நாயகத்தால் இவனுக்குவருங் கொடியசாபத்தை விலக்குவதற்கு இப்போதிருக்கும் பிர்மதேவனாலும் முடியாதென்று நூல்வல்லோர் கூறுவாராயினர்.

321 நீலகண்ட ஜாலம்

ஓம் நீலகண்டமித்ரா, மங், சிங், சர்வமனோகண்டா, உம் படு சுவஹாவென்று லக்ஷத்தியெட்டு உருசெபித்து, தர்ப்பண முதலிய தானதர்மங்களைச் செய்து, 100-பிராமணர்களுக்கு சந்தர்ப்பனையுடன் சாப்பாடுபோடுவித்தால் மேற்படிமந்திரமானது சித்தியாகும். இதனால் ஸ்தம்பனவித்தையை வெகுசுலபமாகஆடலாம். சுவாமியும் பொன்னிறமாகத் தோற்றப்படுவார்.

322 இதுவுமது

மேற்சொன்ன நீலகண்ட மந்திரஞ்செய்யும் விதமெப்படியென்றால், உன்மனதிலே எண்கோணம்போட்டு, அதில் அம்மாரோ என்று நாட்டிச் செபித்தால் தங்கமாய் ஸ்தம்பித்து நிற்பார்.

323 இதுவுமது

சுவாமியை வெண்ணிறமாகயெண்ணி, விபூதியில் வட்டமாகக் கீறி, (அம்மாரே) யென்னும் மந்திரத்தை ஆயிரத்தெட்டுரு செபித்து மேற்படி விபூதியையெடுத்து நீ யாருக்குக் கொடுக்கின்றாயோ அவர்களெல்லாம் உன்பின் வருவார்கள்.

324 இதுவுமது

சுவாமியை செந்நிறமாகத் தியானித்து, முக்கோணம் போட்டு, கிலியும், ரோம் என்று 1008-உருசெபித்து விபூதியை நீ அணிந்து கொள்ள சகலமும் வசியமாகும். இதை வேறு யாருக்குக் கொடுத்தாலும் அவர்களும் வசியமாகி வணங்குவார்கள்.

325 இதுவுமது

சுவாமியைப் பளிங்குநிறமாக மனதிலெண்ணி பிறைபோற் சக்கரங்கீறி (அம்மாரோ) என்னும் மந்திரத்தை 1008-செபித்து விபூதியைப் பூசிக்கொண்டால் சகல போகபாக்கியமுங் கைகூடும்.

326 இதுவுமது

சுவாமியை மேகநிறமாக மனதில் எண்ணிக்கொண்டு நாற்கோணங் கீறி அதில், ஓம், ரம், ஹ்ரோம் என்று தென்னோலையில் எதிராளியின் பேரைப்போட்டு, 1008-உருசெபித்து, எதிரி வீட்டிரப்பில் வைக்க இருவரும் பிரிந்துபோவார்கள்.

327 இதுவுமது

சுவாமியைப் புகைநிறமாக யெண்ணித் தியானஞ்செய்து ஐங்கோணங்கீறி, யம், ரோம் என்றெழுதி 1008-உருசெபித்து விபூதியைப் போட்டவுடன் சகலமும் ஓடிப்போய்விடும்.

328 இதுவுமது

சுவாமியைப் பிரளயகால ருத்திரனாகத் தியானஞ்செய்து முக்கோண சக்கரமெழுதி ரோம் என்று அதில் நாட்டி, விரோதியின் எழுத்தைமாறி, தணல்காட்டச் சகலமும் மாரணமாய்ப்போகும்.

329 இதுவுமது

சுவாமியைக் கறுப்புநிறமாக எண்ணி முக்கோண சக்கரம் போட்டு பம் என்று அதில் ஸ்தாபித்து 1008-உருகொடுத்து வெண்ணீற்றை நெற்றியில் தரித்தால் சர்வமும் பேதனமாகும்.

330 போது

மேற்படி நீலகண்ட மந்திரத்திற்கு மிஞ்சின மந்திரம் இவ்வுலகத்திலில்லையென்று முன்னோர்களெல்லாம் சொல்லிவிட்டுப் போயினர். ஆதலால், அதை குருமுகாந்திரமாய்ச் சரிவர காலம், இடம், வேளை, ஆசனமுதலியவை தெரிந்துக்கொண்டு செய்தால் ரொம்பவும் விசேஷமாகும். தவிர 100-பிராமணர்களுக்குச் சமாராதனை செய்து மேற்படி மந்திரத்தைச் சித்திசெய்தால் 1000-விசை செய்ததற்குச் சமானமாகும். இதை யாரொருவர் பழிக்கின்றார்களோ அவர்களெல்லாம் கூன், குருடு, செவிடு, ஊமை, நொண்டி, குட்ட முதலிய விகாரரூபமடைந்து நாசமாவார்கள். அவர்கள் பெண்டுபிள்ளைகள்கூட அவ்விதமே நாசமாவார்கள். தவிர ஐயும், நமோ, பகவதே ஓம், மகாரூபி, மகாமாயி, மகத்துவசத்தி, சர்வதாரணி சுவஹாவென்று லக்ஷமுருசெபித்து தர்ப்பணம், அன்னதானம் முதலியவைகளைச்செய்து சோடசோபசாரத்துடன் பணிந்தால் சொல்லவொண்ணாத சித்தியாகும்.

331 வயிற்றில் பட்டாக்கத்தி குத்தும் ஜாலம்

ஒரு பட்டாக்கத்தியை நடுபாகத்தில் இரண்டாய்வெட்டி, ஸ்பிரிங் தகட்டை மூன்றாம் பிறைபோல் வளைத்து ஒருபக்கம் அடிகத்தியையும், மற்றொருபக்கம் முனைக்கத்தியையும் வைத்துப் பத்தவைத்து, வைத்திருந்து ஜாலமாடும் சபையில் வேறொரு பட்டாவை கையிலெடுத்துவந்து உனக்குள்ள கையாளின் வயிற்றில் குத்திக்காட்டுவதாகச் சொல்லித் திரைவிட்டு, அப்பட்டாவை மறைத்துவிட்டு, ஸ்பிரிங் பட்டாவை அவன் வலதுபாகத்தில் முதுகிலிருந்து வயிற்றின் பாகம்வரையில் இழுத்துவிட்டு கத்திமுனையில் ஒரு எலுமிச்சம் பழத்தைச் சொருகி, சிகப்பு சாயத்தை ஓர் வஸ்திரத்தில் நனைத்து அக்கத்தியில் பூசி ஆளைப் பூமியில் படுக்கவைத்து அனைவர்களுக்குங் காட்டவும். காட்டும்போது படுத்திருக்கும் ஆள் நாக்கைவெளியில் நீட்டிக் கண்களைமூடி அசையாமலிருக்கத் திட்டஞ்செய்துவிட்டு திரையைத் தூக்கிக் காண்பித்துவிட்டு மறுபடியும் விட்டுவிடவும்.

332 நாரசிங்க வசிய வித்தை

இந்த வசியத்திற்கு நேமநிஷ்டையுடன் தர்ப்பணம், யாகம், ஓமம், அன்னதானம், தேவதாபூசை இதுகளைச்செய்து, பிறகு ஓம் சிங்கமுகவா, ஓம் ஓம், பிசாசுபேய் பொடிபட்டோட நரசிங்க ராஜா ஆணை, ஸ்ரீம், கிலீம் சுவஹாவென்று லக்ஷத்தியெட்டுரு செபிக்கச் சித்தியாகி நீ நினைத்ததெல்லாங் கைகூடும்.

333 இதுவுமது

ஷை மந்திரத்தை ஒரு நறுக்கிலெழுதி துஷ்டமிருகங்கள் வாசஞ் செய்யும் காட்டில்வைத்தால் அவைகளெல்லாம் அவ்விடத்திலில்லாமல் ஓடிப்போய்விடும்.

334 இதுவுமது

ஷை மந்திரத்தைச் செபித்து தானதர்மங்களைச்செய்து வைத்துக் கொண்டால் உன்னைப்பார்த்த பேய்பிசாசுகளெல்லாம் கதறியோடும் கைகண்டது.

335 கருந்தேள் ஜனிக்கும் வித்தை

ஒருபாண்டத்தில் எருமை சாணத்தைக் குழம்பாகக் கரைத்து விட்டு, மேல்மூடிபோட்டு மண்சீலைசெய்து 40-நாள் சமாதிவைத்து எடுத்துத் திறந்துபார்க்கக் கருந்தேளாகவே காணப்படும்.

336 சீலைத்திரையும் வித்தை

புடலன் விதையை மங்களவாரம் பூமியில்நட்டு ஒரு முழக்கொடி யாக வளர்ந்தபிறகு, ஷை வாரத்தில் காப்புகட்டி அடுத்தமங்களவாரம் வரை பூஜைசெய்து வேரைவாங்கி குளிசத்திலடைத்துத் தன்கையி லிட்டுத் திருப்ப ஆடை அவிந்துவிடும்.

337 கரும்பாம்பு உற்பத்தியாகும் ஜாலம்

ஒரு பாண்டத்தில் பசு, எருமை இதுகளின் சாணத்தை குழம் பாகக்கரைத்து கந்தத்துணிகளை விரலகலம் கிழித்துப்போட்டுக் கலக்கி, மேல்மூடி சீலைசெய்து 40-நாள் சமாதிவைத்து எடுத்துப்பார்க்க கரும் பாம்புகள் மிகுதியாகக் காணப்படும். இது கடித்தால் கொடிய விஷ முண்டாகும்.

338 செந்தேள் உண்டாகும் ஜாலம்

பசுஞ்சாணத்தை குழம்பாகக்கரைத்து பாண்டத்திலிட்டு வாய் மூடி, 40-நாள் சென்றெடுத்துப்பார்க்க அநேகமான செந்தேள்கள் உற்பத்தியாகிக் கிடக்கும்.

339 ஜலத்தில் விளக்கெறியும் ஜாலம்

வெண்மையாகிய சீலைத்துண்டொன்றில் அத்திப்பாலைத் துவட்டி, நிழலிலுலர்த்தி திரியாக்கி நடு உயரமுள்ள அகலிலிட்டுத் தண்ணீரை யூற்றி விளக்கேற்ற நன்றாக எரியும் கைகண்டது.

340 சொம்பிலிருக்கும் ஜலத்தைக் கோட்டும் ஜாலம்

சிறியவாயுள்ள ஒருசொம்பில் நிறைய ஜலத்தைநிரப்பி, சல்லாவை மேல்போட்டு, தலைகீழாகக்கவிழ்க்க ஜலம் சிந்தாது.

341 பீநாற்ற முண்டாகும் ஜாலம்

எருமுட்டைப் பீநாறி செடியின் விதையை வஸ்திரகாயஞ்செய்து ஷை மூலத்தை அரைத்து அதில்சேர்த்து, குண்டுமணிபோல் உருட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு, சபையில் ஒருமாத்திரையெடுத்து ஒருவர்மீது தேய்க்க பீநாற்ற முண்டாகும்.

342 சபையோர்களுக்கு பன்னீர்தெளிக்கும் வித்தை

ஒரு பாத்திரத்தில் சுத்த ஜலத்தைக் கொண்டுவந்து சபையிலுள்ள ஒருவர்க்குப் பரிட்சிக்கக்கொடுத்து மறுபடி அனைவர்க்குங்கொடுக்க பன்னீரைப்போல் பரிமளமுண்டாகும். இதற்கு ரோஜா, அத்தரை குண்டு மணிப்பிரமாணம் உன் நக இடுக்கில் வைத்திருந்து ஷை ஜலத்தில் விட்டுக்கொள்ளவும்.

343 உலக்கை நிற்கும் வித்தை

ஒரு அகல போகணியில் கொஞ்சம் ஜலம்விட்டு பூண்கட்டிய உலக்கையை அதன் மையத்தில் லெவலாக நிறுத்தி விட்டுவிட அசையாது நிற்கும்.

344 பச்சைசோளம் பொறியும் வித்தை

சுண்ணும்புக் காளவாயினடியில் கொஞ்சம் முழுசோளத்தை பள்ளந்தோண்டி புதைத்துவிட்டுக் காளவாய் எரித்தபின் எடுத்து வைத்துக்கொண்டு, கொஞ்சம் வஸ்திரத்தில் போட்டு சிறிது ஜலந் தெளித்துத் துழாவ, படபடவென்று பொறிகள் பொறியும்.

345 சாராயம் அதிகமாகக்குடிக்கும் வித்தை

நெல்லித்தொக்கை வாயிலிட்டுமென்று கொஞ்சம் ரசத்தை விழுங்கி, மற்றதைக் கன்னத்தி லடக்கிக்கொண்டு எவ்வளவு சாராயத்தையேனும் ஜலத்தைப்போல் சாப்பிடலாம். போதையிராது.

346 கருங்கல் உடைக்கும் வித்தை

உடைக்கவேண்டிய கருங்கல்லின்மீது முருக்கன் ஆவரை வேலன் இந்த விறகுகளைப்போட்டு தீக்கொளுத்தி தணியுஞ்சமயத்திற் சுண்ணும்புகரைத்த ஜலத்தால் ஆற்றிவிட்டு இலேசாகத்தட்ட உடையும்.

347 சபையில் வாழைப்பழத்தை பரிமாறும் வித்தை

உனக்கிஷ்டமான வாழைப்பழமொன்றெடுத்துச் சபையில் ஒருவரிடங் கொடுத்துக் கத்தியின்றி பில்லைபில்லையாகப் பரிமாறச்சொல்லி அவ்வாறே அவர்கள் பரிமாறப்பார்ப்பவர்கள் உனக்குக் குரளிவசியமெனச் சொல்லுவார்கள். இதற்கு 6-அங்குலநிகளமுள்ள மெல்லிய இரும்புக்கம்பியை டகரம்போல் வளைத்துப் பழத்தின் காம்புபுறம் நுழுத்தி திருகிக்கொண்டே மூனைவரைசெலுத்தி மறுபடியும் அவ்வழியே வெளியில் வாங்கிக்கொள்ளவும்.

348 இலுப்பைப் புண்ணாக்கு இனிக்கும் வித்தை

வேண்டியமட்டும் புண்ணாக்கையிடித்து அதனுடன் நரிவிளாந்தழையை சமனாகக்கலந்து (புட்டுவைத்தவித்து) எவ்வித பதார்த்தத்தோடும் சேர்க்க இனிப்பாயிருக்கும்.

349 கத்தரிக்காயில் ஏந்திரம் தோங்கவிடும் ஜாலம்

முக்காலடி நிகளமும் ஒரு அங்குல அகலமும் உள்ள இரண்டு போல்தகடு கத்திகளைத் தயாரித்து வைத்துக்கொண்டு, நாலங்குலம் ஸ்பிரிங் தகட்டின் மையத்தில் மூன்றங்குல நீளத்திற்குக் காடித்துவாரமெடுத்துக் கத்தரிக்காயினுள் பொதிந்து ஷை கத்திகளைத் தலைமாற்றிச் சொருகி ஒருகத்தியில் உக்கம்போட்டு மேலேகட்டிவிட்டு ஏந்திரக்கல்லை உக்கம்போட்டு கீழ்க்கத்தியில் தொங்கவிட அப்படியே நிற்கும். பார்ப்பவர்கள் இது காளிவசியமென்று சொல்லுவார்கள். இந்த வேலைகள் செய்யும்படி நேரிட்டால் ஆள் உயரத்திற்குமேல் தொங்கவிடவேண்டும்.

350 இதுவுமது வெற்றிலையில் அம்மி தோங்கும் வித்தை

கால்கவுளி வெற்றிலையை இரண்டாகப்பிரித்து முன்புறம் ஒன்றுகச் சேர்த்து ஜலத்தில்தோய்த்து முன்சொன்ன முறைப்படி செய்து கொள்ளவும்.

351 சுரைக்காயில் குந்தாணி தோங்கும் ஜாலம்

குண்டுசுரைக்காயில் மேற்சொன்ன விதமாகச் செய்து மரக்குந்தாணியைக்கட்டி காய்க்கு மஞ்சள் குங்குமம் பூசிவிடவும்.

352 இதுவுமது புடலங்காயில் பாராங்கல்லை தோங்கவிடும் வித்தை

பண்ணிப் புடலங்காயில் மேற்சொன்னவிதம் செய்து கட்டிக் காண்பிப்பதை,ஒருவருக்கும் தெரியாவண்ணம் செய்யவும்.

353 இதுவுமது வண்டைக்காயில் கல்வம் தொங்கவிடும் வித்தை

நீட்டு பால்வண்டைக்காயில் மேற்சொன்ன விதம்செய்து கல்வத்தைக் கட்டித் தொங்கவிடவும்.

354 பீர்க்கங்காயில் அம்மிக்குழவி தொங்கும் வித்தை

முத்தித்தேரிய பீர்க்கங்காயில் ஷை முறையாகச்செய்து அம்மிக் குழவியை கட்டித் தொங்கவைக்கவும்.

355 வாழைக்காயில் தவலை ஜலத்தைக் கவிழ்த்துக் கட்டும் ஜாலம்

தேரிய வாழைக்காயிற்கு மேற்சொன்ன விதமாகச் செய்து ஒரு தவலையில் ஜலத்தை நிரப்பி சல்லாவைப்போட்டு வாயைக்கட்டி கவிழ்த்துத் தொங்கவிட்டால் ஜலம் கீழேசிந்தாது.

356 தோசையில் அம்மிக்கோழவி தொங்கும் வித்தை

முன்சொன்ன முறைப்படி ஸ்பிரிங்தகட்டை தோசையில் வைத்துச்சுட்டுக் கத்திகளைக் குத்திக் கட்டிவிடவும்.

357 பணிகாரத்தில் பாக்குரல் தொங்கும் வித்தை

மேலேசொன்னவிதமாக பணிகாரம் தயாரித்து பட்டாவைக்குத்தி பாக்குரலைக்கட்டித் தொங்கவிடவும்.

358 பரோட்டாவில் பாராங்கல் தொங்கும் வித்தை

இதற்கு சந்திரபிறைபோல் 2-அங்குல அகலத்தில் செய்து நேருக்குநேர் கத்திபொருந்த காடிசெய்து பரோட்டாவில்வைத்துச் சுட்டு பட்டாவைக்குத்தி பாரத்தைக் கட்டிக்கொள்ளவும்.

359 முருக்கில் அடியேந்திரம் தொங்கும் வித்தை

மூன்றுநூல் கினத்தில் இரும்புக்கம்பியை முருக்கைப்போல்சுற்றி மாவில் கினக்கத்தோய்த்து சுட்டுப் பட்டாயில்லாமல் மேலும் கீழும் கயிற்றைக்கொண்டே பாரத்தைக்கட்டித் தொங்கவிடவும்.

360 சப்பாத்திமடலில் குண்டாங்கல் தொங்கும் வித்தை

மேல்சொன்னவிதம் சப்பாத்திமடலில் பட்டாகுத்தி குண்டாங்கல்லைக் கட்டிவிடவும்.

361 சோற்றுக்கற்றாழையில் மண்குண்டு தொங்கும் வித்தை

மேற்சொன்னவிதமாக முதிர்ந்தமடலொன்றில் பட்டாக்களை தொடுத்து மண்குண்டை கட்டித் தொங்கவிடவும்.

362 ஷை வெள்ளரிக்காயில் பாரம் தொங்கும் வித்தை

காய்க்கு மேல்சொன்னவிதமாகப் பட்டாக்களைத்தாக்கி பாரத்தை கட்டித்தொங்கவிடவும்.

363 காகங்கள் தியங்கும் வித்தை

கல்தாரத்தைப் பொடித்து நெய்விட்டரைத்து அன்னத்துடன் சேர்த்துப்பிசைந்து காகத்திற்குவைக்க தின்று தியங்கும் அதின்மேல் ஜலந்தெளிக்க குணமடையும்.

364 கோழி மரண வித்தை

ஒரு சிமிட்டா மூக்குத்தூளை கோழியின்வாயிலிட பிராணனைவிட்டதுபோலாகிவிடும் உடனே அதின்பேரில் ஜலம்தெளிக்க கொக்கரிக்கும்.

365 பாம்பு மயங்கும் வித்தை

பாம்புகட்டிடங்களுக்குள் தவறிவந்துவிட்டால் உடனே உப்பையும் வெள்ளுள்ளியையும் நசுக்கி அதின்பேரிலெரிய ஓடாமல் தடைப்பட்டு மயங்கிவிடும். அல்லது கருப்புக்கம்பளியை மேலேபோட்டாலும் போடலாம்.

366 கடலெண்ணெய் நெல்லெண்ணெயாகும் வித்தை

வேண்டியமட்டும் கடலெண்ணெயை அதேஅளவு சுத்தசலத்தில் கலந்து தெளியவைத்து எண்ணெயை வடித்துக்கொண்டு அதில் எள்ளை வறுத்துப் பொடித்து வஸ்திரத்தில் பொட்டளங்கட்டி ஷை எண்ணெயில் ஊரப்போட்டுவைக்க நல்லெண்ணெ மணமாகும்.

367 புதியனு உண்டாகும் ஜாலம்

வைக்கோலின் கூளத்தை பனைவெல்லத்தில் கலந்து ஊறவைத்து பின்பு மண்பாத்திகட்டி அதில் மேற்படி வைக்கோலைப்பரப்பி வெல்லத்தண்ணீர் தெளித்துவர சிலநாளில் செடிமுளைத்துக் கொடியோடும். இது புதியதாய் உற்பத்தியாகிறதினால் (புதியனு) என்று பெயர் பெற்றது.

368 தலையில் அடுப்புவைத்து எண்ணெய்காய்ச்சும் ஜாலம்

ஆனைலத்தி, சிமட்டி, சாம்பல்பொடி இவைகளை ஜலம்விட்டு அறைத்து பாக்குரல்போல் அரையடி உயரமும், நான்கு அங்குள அகலமுமாக மூன்று குமிள்வைத்து அடுப்புபோல்செய்து நிழலிலுலரவைத்துக்கொண்டு, சபையில் ஒருவன் சிரசில் மேற்படி அடுப்பை

வைத்துப் பந்தங்கொளுத்திப்போட்டு தகரடமரம் ஒன்றுவைத்து கிரோசன் எண்ணெய்விட்டுக் கொதியெழும்பும் சமயம் ஜலத்தை அள்ளி அதன்மேல் தெளிக்க குபீலென்று எரியும் பார்ப்பவர்கள் பிரமிப்பார்கள். இதற்கு அடுப்பைவைத்துக்காட்டும் ஆளை துப்பட்டி யால் அடுப்பின் அடிப்பக்கத்தைச்சுற்றிக் காற்றுப்படாமல் மூடிவிட வேண்டும்.

369 மரம் படும் வித்தை

மரத்தில் ஆணிவேரை ஆக்கரால் துளைசெய்து பாதரசம்விட்டு கார்க்கடைத்துவைத்தால் சிலநாளைக்குள் மரம் பட்டுவிடும்.

370 தென்னைமரம் படும் வித்தை

தென்னைமரத்தின் குருத்தில் கடுக்காயைப் பதியவைத்து சிறிது ஜலம்விட்டுவைக்க மரம் உலர்ந்துபோகும். இது பாதகத்தொழில்.

371 பனைமரம் படும் வித்தை

மேற்சொன்னவிதமாக பனைமரத்திற்குச் செய்தாலும் செய்ய லாம் இதுவும் பாதகத்தொழில்.

372 தீபத்தைப்பார்த்தவுடன் கூத்தாடும் ஜாலம்

ஆதிவாரத்தில் பிறந்தகோலமாக இருந்து இரட்டைவால் பல்லி யைப்பார்த்து அதின்வாலைக் கத்தியால் துணித்தவுடன் அது கீழே விழுந்து துடிக்க ஆரம்பிக்கும். அதுசமயம் (ஜிம்) என்னும் மந்திரத் தைசொல்லிக்கொண்டே உன்னிஷ்டம்போல் வாலுடன் நீயுங்குதித்து அது குதிப்படங்கினவுடன் நீயும்நின்று பிறகு அவ்வாலைத் திரியில் வைத்துத்திரித்து விளக்கில்போட்டு தீபமேற்ற அவ்விளக்கை பார்ப்ப வர்களெல்லாங் கூத்தாடுவார்கள்.

373 ஜடைவளர்க்கும் வித்தை

சன்யாசியைப்போல் ஜடைவளர்க்கவேண்டுமானால் ஆலம்பால், அத்திப்பால், அரசன்பால் இவைகளைக்கறந்து தலைமயிரில்பூசி வேறு ரோமங்களை ஒட்டவைத்து விபூதிபூசித் திரித்துவிட உண்மையான ஜடையைப்போலிருக்கும்.

374 புகைமோதிர வித்தை

நான்கு அங்குல சதுரஅளவுள்ள அட்டைப்பெட்டியைக் காற்று வெளியே போகாமல் நான்குபக்கமும் பந்தோபஸ்துசெய்து ஒரு பக்கத்தில் சுண்டுவிரல் துவாரஞ்செய்து அதில் சுருட்டின் புகையை

உள்ளேநிரப்பி அப்படியேவைக்க மோதிரங்கள்போல் அடுக்கடுக்காக வெளியே போவதைக்கண்ட ஜனங்கள் ஆச்சரியப்படுவார்கள்.

375 பகலில் நக்ஷத்திரந் தோன்றும் ஜாலம்

ஆழமான கிணற்றில்முழுகி அசையாது மல்லாந்து கண்களைத் திறந்துபார்க்க நக்ஷத்திரந்தோன்றும். அனுபவம் வேண்டும்.

376 நெய் பரிமாறும் ஜாலம்

வேண்டிய அளவு நெய்யில் இளநீரை விட்டுக்காய்ச்சி சூட்டில் எத்தனைபேருக்கானாலும் தாராளமாகப் பரிமாறலாம்.

மந்திரத்திற்கு எழுத்துகள் அறியும் விபரம்

வசியம்

மூலமாஞ்சக்கர முறைப்படிகூறியே
சாலவேயிருபத் தஞ்சரைக்குள்ளே
கோலமாயநமசிவ வென்றேவசீகரம்
சாலவேபோட்டுச் சாதிப்பீரே. (யநமசிவ) 377

மோகனம்

மாறிடுமோகன மசிவயநவென்றே
கூறியயெழுத்தைக் கொண்டேயோத
வீரியம்பேசம் விசும்பில்கிரியை
யேரியசித்தரெனக் குரைத்தாரே. (வசிவயந) 378

தம்பனம்

உரைத்ததம்பன மோதும்நமசிவய
விரைத்துமேலோக மேவிடுமிதுதான்
பரைக்குரையாணிப் பகராரிதனைத்
திரைக்கடலெழுத்தைத் தினங்கொண்டோதே (நமசிவய) 379

உச்சாடனம்

பாரிலுச்சாடனம் பகரிடக்கேளு
சீருறுவயநமசி வென்றேசேர்த்து
ஓரொருநாளு முறுதியாய்ச்செபிக்க
கூறுமுச்சகடனங் குலாவுமுனக்கே. (வயநமசி) 380

மாரணம்

படிமீதில்மாரணம் பாரடாஞானி
மடியவேசிவயநம வென்றேதினமுந்
துடியாமலோதுச் சூரையிடாமல்
படியானபாதக்கடை யெழுத்தோதே. (சிவயநம) 381

பேதனம்

தேவையாம்பேதனஞ் செப்பவேகேளு
வாயென்னும்யவசிநம வென்றோதச்
சீயெனப்பேதிக்குஞ் சிரநடுமார
மாயென்னயின்னம் வகையறியாரே. (யவசிநம) 382

ஆக்ருஷணம்

அறியார்கேளு மாக்ருஷணவித்தையை
விரிவாகச்சொன்னேன் விசனப்படாதே
நெறியாகவசிமயந வென்றேயோத
குறியாகுமெழுத்தைக் கொண்டோதிப்பாரே. (வசிமயந) 383

வித்வேஷணம்

விடுத்திடும்வித்வேஷ ணத்தையுங்கேளீர்
யடுத்திடும்நயவசிம வென்றுபாரில்
அடுத்திடுமெழுத்தை யசையாதுவுன்னி
தொடுத்திடுஞ்சூட்சஞ் சொல்லார்கள்பாரே. (நயவசிம) 384

வசியமுதலியதுகளுக்கு வாரமறியும் வித்தை

385 ஞாயிறு—வசியமும்,
386 திங்கள்—மோகனமும்,
387 செவ்வாய்—ஏடணையும்,
388 புதன்—தம்பனமும்,
389 வியாழம்—உச்சாடனமும்,
390 வெள்ளி—ஆக்ருஷணமும்,

391 சனி—மாரணத்திற்கும் தகுதியானநாளென்று முன்னோர்கள் சொல்லினர்.

392 மேற்சொல்லிய வாரங்களில் வியாழக்கிழமை மாத்திரம் எந்தவேலைகளைச் செய்தாலும் பச்சைமரத்தில் ஆணி ஏறுவதுபோல உடனுக்குடன் தவறாது பலிக்கும்.

மந்திரத்திற்கு திசையறியும் வித்தை

393 கிழக்கு—வசியமும்,
394 தெற்கு—மோகன, மாரணமும்,
395 மேற்கு—உச்சாடனமும்,
396 வடக்கு—பேதனமும்,
397 தென்மேற்கு—ஏடணையும்,

398 தென்கிழக்கு—தம்பனமும்,

399 வடமேற்கு—ஆக்ருஷணமும்,

400 வடகிழக்கு—சகலவேலைகளுக்கும் நல்லதென்று பெரியோர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது.

மந்திரத்திற்கு உடுப்புகளறியும் வித்தை

401 சிவந்த வஸ்திரம்—வசியமும்,

402 மஞ்சள் வஸ்திரம்—மோகனமும்,

403 தனிப்பட்டு வஸ்திரம்—சகல கர்மமும்,

404 வெள்ளை வஸ்திரம்—பேதனமும்,

405 பச்சைப்பட்டு வஸ்திரம்—உச்சாடனமும், செய்ய உதவுமென்று நூல்வல்லோர் சொல்லினர்.

சகல கர்மத்திற்கும் உலோகமறியும் வித்தை

406 காரீயம்—வசியமும்,

407 வங்கம்—மோகனமும்,

408 பொன்—அழைப்பும்,

409 செம்பு—தம்பனமும்,

410 வெள்ளீயம்—உச்சாடனமும்,

411 குருத்தோலை—வித்வேஷணமும்,

412 இரும்பு—பேதனமும்,

413 வெள்ளி—மாரணமுஞ் செய்யும்.

வசியத்திற்கு எண்ணெய்முதலியதறியும் வித்தை

414 நல்லெண்ணெய்—மோகனமும்,

415 ஏரண்டெண்ணெய்—ஆக்ருஷ்ணமும்,

416 ஆவின்நெய்—வசீகரமும்.

417 வேப்பெண்ணெய்—மாரணமும்,

418 புங்கெண்ணெய்—உச்சாடனமும்,

419 புன்னையெண்ணெய்—பேதனமும்,

420 ஆதளையெண்ணெய்—தம்பனமும்,

421 மேதி, ஆடு, பன்றி—வித்வேஷணத்திற்கும்,

422 வன்னி, ஆல், விளா இவைகள்—சுபகர்மத்திற்கும்,

423 கள்ளி, எருக்கு, எட்டி, அத்தி, இச்சி, விடத்தலை—இவைகள் அசுபகர்மத்திற்குமாகும்.

424 மேற்சொன்ன விதமாக ஒவ்வொன்றையும் ஆசானின் மூலமாக தெளிவறக் கற்றுக்கொண்டு செய்வது உத்தமம். அப்படிச் செய்யாமல் தான்தோன்றித் தம்பிரானாய் இஷ்டம்போல் செய்து பெரியோர்களின் வாக்கைப் பழித்தவர்கள் தீராத நரகத்திற்கு ஆளாவார்கள்.

425 கஸ்தூரி செய்யும் வித்தை

ரத்தபாளம், வீரம், வேங்கைமரப்பிசின், பழந்தின்னும் வௌவாலெச்சம் இதுகளைச் சமயெடையாகக் கலைமானின் ரத்தத்தாலாட்டி, உருண்டை செய்து தாழைப்பூவினுல் கவசஞ்செய்து சட்டிக்குள் வைத்து மேல் மூடி, ஒரு மண்டலஞ்சென் றெடுத்துப்பார்க்க கஸ்தூரி தோன்றும். அதை எடுத்து ஜலத்தில் போட்டுப்பார்த்தால் அசல் ரத்தம்போல் தோன்றும்.

426 இதுவுமது

8-படி காண்டாமிருகத்தின் இரத்தத்தில் கருங்காலிப்பட்டைத் தூள், காசிக்கட்டி, கிராம்பு, ஏலம் இவைகளைச் சரியெடையாய்க்கூட்டி, ஒரு ஜாடியில்போட்டு அதின் நிறையப் பன்னீர்விட்டு மேல் சீலை செய்து மூன்றுநாள் எரித்தால் சரக்கெல்லாம் ஒன்ருகக்கட்டி கஸ்தூரியாக நிற்கும்.

427 இதுவுமது

இரத்தபாளம், கார்போகரிசி, வாலுளுவை, கூகைநீர் இதுகளைச் சமயெடை எடுத்துப் பன்னீராலரைத்துப் பாண்டத்திலிட்டு பூமியில் புதைக்கத் தண்ணீரெல்லாஞ்சுண்டி கஸ்தூரி கட்டியிருக்கும் அதை எடுத்து முகர்ந்தால் மூச்சுத் திணரிக்காட்டும்.

428 இதுவுமது

காசிக்கட்டி, கருவாப்பட்டை இவைகளைச் சமயெடை யெடுத்து அவுரிச்சாற்ருலரைத்து மறுபடியும் ஒட்டகத்தின் இரத்தத்தா லரைத்து பிறகு பன்னீராலரைத்து முன்போல் பாண்டத்திலிட்டுப் புதைத்து 40-நாள் சென்றெடுத்துப் பார்க்க கஸ்தூரி கட்டியிருக்கும்.

429 போது

இதில் சொல்லியிருக்கப்பட்ட வைப்புசரக்கான கஸ்தூரி முதலியது ரொம்பவும் அசலாகையால் எல்லா வித்தைகளுக்கும் இதையே சேர்த்து செய்கிறது மிகவும் நல்லது.

430 வேறு கண்ணாடி மெல்லும் ஜாலம்

அக்கிராகாரத்தை சிறிய துண்டாக நறுக்கி கசகசவென்று தாடையிலடக்கிக்கொண்டு கண்ணாடியைக் கூச்சமில்லாது மெல்ல, வாய் அறுக்காது.

431 சங்கிலியுருவுஞ் ஜாலம்

கற்றாழைச்சோற்றை பில்லைபில்லையாக அறுத்து விளக்கெண்ணெயிற்கலந்து வைத்துக்கொண்டு சங்கிலியைக்காயவைத்து கொச்சிமாட்டிப் பிடித்துக்கொண்டு ஒருகையில் கத்தாழையோடு எண்ணெயைவாரி சங்கிலியையுருவினால் குப்பென்றெரியும் கைசுடாது.

432 ஜலத்தைக் கட்டும் வித்தை

நருவிலிப்பழத்தை நன்றாய்ப்பிசைந்து புதிய தோண்டியின் உள்புறம் மூன்றுதடவைப்பூசி காயவைத்து பிறகு தோண்டிநிறைய தண்ணீர்விட்டு மேலே தூக்கிக்கட்டிவிட்டுப் பிறகு ஓட்டையெல்லாம் தட்டிவிட்டால் தண்ணீர் அந்தரமாக நிற்கும்.

433 சில்லிகுடம் தண்ணீர் தாங்கிநிற்கும் வினோதம்

ஒருகுடத்தை எழுத்தாணிகொண்டு துவாரஞ்செய்து துத்தியிலையும் நருவிலிபழமுஞ் சேர்த்து ஒன்றிரண்டுமாயரைத்து உள்ளே சரியாய்ப்பூசி கொஞ்சம் ஆறவிட்டு பிறகு ஜலம்வார்க்க ஒருதுளிகூட கீழே விழாது.

434 சர்ப்ப வித்தை

பொற்றலைக்கையான், தும்பைமூலம், நிலப்புரண்டி, சிறுகீரை, கரிசாலை, நாயுருவி, தொட்டால்வாடி, பொற்சீந்தில், ஆடையொட்டி இதுகளைச் சமயெடையாக யெடுத்து அரைத்துத் திலர்தமிட கண்ட சர்ப்பமெல்லாம் வசியமாகும்.

435 சத்துரு வசிய வித்தை

பொற்றலைக்கையான்வேர், வெள்ளெருக்கன்வேர், விஷ்ணுகாந்தி இம்மூன்றையும் சமயெடைசேகரித்து காராவின் நெய்விட்டு மைசெய்து திலர்தமிட எவ்வளவு பகையாளியாயிருந்தாலும் வணங்குவார்கள்.

436 இதுவுமது

நிண்ணசுணுங்கி, செவ்வகத்தி, சுழலாவாரை, முல்லை, கொழுந்தெட்டு, கூத்தன்குதம்பை இதுகளைப் பன்னீர்விட்டு அரைத்துத் திலர்தமிட சர்வமும் வசியமாகும்.

437 இதுவுமது

வெள்ளி, ஞாயிறு-தேனிலும், திங்கள், வியாழம் - நெய்யிலும், செவ்வாய், புதன்-காராவின் பாலிலும், சனி-தயிரிலும் ஆவின் புல்லுருவியைக் குழைத்துத் திலர்தமிட தேவர்முதல் யாவரும் வசியமாவார்கள்.

438 வேறு-ஸ்ரீவசியம்

பாக்கை ஐங்கோலத்தில் நனைத்து, யமவநசி, சியமவந, நமசிவய, வமநசிய என்று செபித்துக்கொடுக்க வசியமாம்.

439 வசியம் சகலத்திற்கும் பொது மந்திரம்

ஓம், ஆம், ஜெய, ஜெய, வா, வா, அவ்வும், உவ்வும், வசிய, வசிய, சுவஹாவென்று 1008-உரு கொடுக்க நல்லது.

440 தீபங்காட்டும் ஜாலம்

குங்கிலியமும் கற்பூரமும் பொடியாய்ச் செய்து ஒரு கந்தையைப் பரப்பி திரியாய்த் திரித்து விளக்கெண்ணெயில் தோய்த்துக்கொண்டு தடையுள்ள கலசத்தில் வத்திபோட்டு தடைக்கு கொஞ்சங் குறைவாகவே ஜலம்விட்டு கொளுத்தி சபையில் வைத்தால் இரண்டுநாழிகையெரியும் இதைப் பார்த்தவர்கள் காளிவசியமெனச் சொல்லுவார்கள்.

441 இதுவுமது

திருகுகள்ளிப்பாலே கரண்டியளவெடுத்து அதனுடன் கற்பூரம் அதுஅளவே யெடுத்து இரண்டையும் அரைத்துச் சீலையில் தடவி உலர்த்தித் திரிதிரித்து மேற்படி கலசத்தில் போட்டு ஜலத்தையூற்றிக் கொளுத்த யெரியும் ஆச்சரியப்படுவார்கள்.

442 குளத்திலிறங்கி விபூதியிடும் ஜாலம்

கொடிக்கள்ளிப்பாலே விபூதிபோல் குழைத்து தேகமுழுதும் யோகியைப்போல பூசிக்கொண்டு உலரவைத்துவிட்டால் யாருக்குந் தெரியாது. பிறகு குளத்திலிறங்கி சற்றுநேரம் சலத்தினுள் இருந்து வெளிவந்தால் பார்ப்பவர்கள் உன்னை சித்துபுருஷனென்றே சொல்வார்கள்.

443 ஒருவித ஜலத்தை இரண்டுவிதமாக காட்டும் ஜாலம்

போகணிநிறைய ஜலத்தைக் கொண்டுவந்து சபையைப்பார்த்து நான் இந்த ஜலத்தை இரண்டுவிதமாகக் காட்டுகிறேன். பாருங்கள்

என்று சொல்லிக்கொண்டே விட்மஸ் பவுடரைக் கொஞ்சம் போட்டால் குபீலென்று நீலநிறமாகும். அதை அனைவர்களும் பார்த்தபின்பு இதை மறுபடியும் செகப்பாகச் செய்கிறேனென்று சொல்லி கொஞ்சம் கெந்தக திராவகத்தைத் தெரியாது விட்டுவிட்டால் சிகப்பாக மாறிவிடும் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

வேறு பாம்பு வசிய வித்தை

444 உம், எ, ஓ வென்று செபித்தால் ஓடுகின்ற அரவமானது மயங்கி நிற்கும்.

445 அம், ஏ, ஓ வென்று உருகொடுக்க எப்பேர்ப்பட்ட சர்ப்பமானாலும் அடங்கி நிற்கும்.

446 நம், கிலீ யென்று சொல்லிச் செபிக்க அரவங்களெல்லாம் படமெடுத்தாடி நிற்கும்.

447 வம், யா, யா வென்று செபித்தால் சர்ப்பங்களெல்லாம் ஓடி வந்து நிற்கும்.

448 சீ, யாம் யென்று செபித்தால் சீறி கடிக்கவரும்.

449 நவ் யென்று உரு வேத்திக்கொண்டுவர பயந்து அடங்கி ஒடுங்கி போய்விடும்.

450 கிலீம் என்று செபிக்க வாயில் ரத்தங்கக்கும்.

451 வா, வா யென்று உருசெபிக்க சர்ப்பங்களெல்லாம் நகர்ந்து கொண்டே போகும்.

452 நங், சிங் கென்று சொன்னால் அதன் வாயிலுள்ள விஷங்களை யெல்லாம் கக்கிவிடும்.

453 அங், உங் கென்று மந்திரமோத ஏறின விஷமெல்லாம் இறங்கும் மேற்படி மந்திரத்தை யெல்லாம் முன்னதாகச் செபித்து சித்திசெய்து வைத்துக்கொண்டால்தான் பிற்பாடு உன்னுடைய சமயத்திற்கு உதவும் திடீரென்று மந்திரம் சொன்னால் யாதொரு வேலையும் நடக்காது. ஆகையால் தகுந்த ஆசானைக்கொண்டு முன்னடியே ஒவ்வொன்றையும் உபதேசம் பெற்றுக்கொள்ளல்வேண்டும்.

454 பசியாதிருக்கும் ஜாலம்

நீர்முள்ளிஇலையை அரைத்து பாலில் கலக்கிப் பருக 10-13-நாட்கள்வரை பசி எடுக்காது. வீண்காலம் போக்காமல் யோகசாதனஞ் செய்வது நலம். பேதிக்கு சாப்பிட்டால்தான் உடம்பு குணமடையும்.

455 நெருப்பின்றி வஸ்திரங் கொளுத்தும் வித்தை

உளுந்தளவு தீமுருகல் பாஷாண மெடுத்துக்கொண்டு சபையில் கையைக்காட்டி பஞ்சை பந்துபோல் சுருட்டி காற்றுவாடையாக நின்று ஷெடி பாஷாணத்தை அதில் நுழைத்து ஊத குபீலென்றெறியும்.

456 பாலை சர்க்கரையாக்கும் வித்தை

பசும்பாலை அடுப்பிலிட்டு துத்திவேர்களை துடுப்பாகக்கொண்டு துழாவி சிவக்கக்காய்ச்சி சீசாவில் அடைத்து 4 அல்லது 5 தினம் பொறுத்து பார்க்க சக்கரைபோல் கட்டியிருக்கும் ஆனால் பாகம் தவறினால் கெடும்.

457 கதவில் ஊசி நிற்கும் வித்தை

தையல் ஊசியில் ஒரு முழம்நீளம் நூலைக்கோர்த்து கதவின் சற்று தூரத்தில் இருந்து விட்டெறிய ஊசி போய் குத்திக்கொள்ளும் நூலில்லாமல் போட்டால் ஊசி கீழேவிழுந்துவிடும்.

458 தலையில் தேங்காயுடைக்கும் ஜாலம்

கரும்முள்ளிக்கு ஆதிவாரம் காப்பிட்டு வேரைவாங்கி வாயிலடக்கிக்கொண்டு தேங்காயைத் தூக்கிப்போட்டு தலையால் தட்ட உடையும், ஆனால் தன் பக்ஷி அரசில் வேரை வாங்கவேண்டும் தேங்காயை உடைத்து சாதனமும் வேண்டும்

459 புட்டியில் முட்டைகாட்டும் வித்தை

கோழியின் அண்டத்தை உயர்ந்த சரக்காயுள்ள காடியில் ஊரப் போட்டு பின்னர் துள்ளிதமான வெண்ணிற புட்டியில் முட்டையை ரப்பர்போல் இழுத்து உள்ளே செலுத்த சுத்தஜலம் விட முட்டைபோல் கட்டிவிடும்.

460 காதவழிநடக்க கால்வலி தோற்ற ஜாலம்

ஆலமரத்தின்கீழ் முளைத்திருக்கும் ஆலங்கண்ணைக் காப்பிட்டு பூசித்து வேரை வாங்கி புதிய பாதரட்சைக்குள் வைத்து தைத்து காலில் போட்டுக்கொண்டு நடக்க சீக்கிரமாக சிரமமின்றி சுலபமாக நடக்கலாம். சுத்தியாக வைத்திருக்கவேண்டும்.

461 வேறு சோறு வேகாதிருக்கும் வித்தை

அத்தித் துண்டொன்றை தீயெறித்து கழுதை மூத்திரத்தாலவித்து எடுத்து, கதிரவன் தினத்தன்று மீனத்தில் நத்தைச்சூரிக்கு காப்பிட்டு, அடுத்துவரும் இத்தினத்தன்றே துலா லக்கினத்தில் நிர்

வாணமாக காயமின்றி உச்சிவேரறுமல் பிடுங்கிவந்து டி கரி அடுப்பி லும் இதை பாண்டத்துள்ளேயும் போட்டால் எதுவானாலும் வேகாது திரும்பவும் அடுப்பை சாணமிட்டு சுத்திசெய்தாலொழிய வேகாது.

462 கற்கண்டு செய்யும் வித்தை

வேண்டியவளவு வெண்மையான சர்க்கரையை ஜீராகாய்ச்சி சரியான பதத்தில் இறக்கி வாய்கட்டி 4-தினம் பொறுத்து பிரித்துப் பார்க்க கற் கண்டு கட்டியிருக்கும். அதை ஓலைப்பாயில் போட்டு உலர்த்தி எடுத் துக்கொள்ளவும்.

463 சாணவுண்டை ஜலத்தில் மிதக்கும் வித்தை

சடையென்னும் வஸ்துவை ஒரு பந்துபோல் செய்துக்கொண்டு அதின்மேல் சாணத்தைப் பூசி ஜலத்தில் விட மிதந்திருக்கும்.

464 அவித்த நண்டு ஓடும் வித்தை

நண்டுகளைப் பிடித்து பாத்திரத்தில் போட்டு மஞ்சள் மசீண்டா பௌடரும் பொடியும் போட்டு ஜலம் சிறுகவிட்டு வைத்திருந்து பிறகுவிட ஓடும். சபையார் ஆச்சரியமடைவார்கள்.

465 செல்லுகள் சிதறும் வித்தை

செல்லுகளுள்ள விடங்களில் நவாச்சாரத்தை கம்பி கம்பியாக பிரித்து துருத்திவிட நாசமடையும்.

466 கிணற்றினுள்ளே சாதம் சமைக்கும் வித்தை

நீ சபையில் ஒரு குடுவையை வைத்து அதில் பாதி அரிசியைப் போட்டு எடுத்துக்கொண்டு ஆ சபையோர்களே நான் இதை கிணற்றி விறங்கி நீரில் சமைத்துக்கொண்டு வருகிறேனென்று சொல்லி கிணற்றி விறங்கி அரிசிக்குத் தகுந்த நீரைவிட்டு குடுவையைத் தண்ணீருக்கு மேலே பிடித்து வைத்திருக்கவேண்டும். இப்படிவைத்திருக்கும்போது அரிசி வெந்து சாதமாகிவிடும். கிணற்றிலிருந்து ஏறும்போது முழுகி எழுந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் சபையார் உன்னை நீரி விறங்கி சமைத்தானென்று சொல்லுவார்கள். இதற்கு கொஞ்சம் அரி சியை மூன்றுதரம் வஸ்திரத்தில் மூட்டைகட்டி சுண்ணாம்புக்கால்வாய் கீழே வைத்து கால்வாய் வெந்தபிறகு எடுத்து வைத்துக்கொண்டு இவ்விதம் செய்யவும்.

467 தீபம் ஜோலிக்கும் வித்தை

கிரிசினையல் விளக்குகளில் சாப்பிடும் உப்பைப் பொடித்துப் போட்டு தீபமேற்றிப் பார்க்க ஜோலிப்பாக இருக்கும்.

468 ஜீவஜோதி வித்தை

லைட், லஸ்தர் முதலிய விளக்குகளில் கிரிசனைவிட்டு கற்பூரத்தைப் பொடித்துப் போட்டு தீபம் ஏற்றிப் பார்க்க ஜோதி ஜொலிக்கும்.

469 கடலைக்கோட்டை கசக்கும் வித்தை

சபையில் கடலைக் கொட்டையை உரித்து ஒரு தட்டில் போட்டுக் கொண்டு, அதில் வேப்பங்கொட்டை உரித்த பருப்பை கொஞ்சம் சேர்த்துக்கொண்டு, ஒருவருக்கு மணிலாகொட்டையை வாயில்போட்டு, மற்றொருவருக்கு வேப்பம் பருப்பைப் போட, கசப்பாகவிருக்கிறது வென்பான். வேடிக்கையாக இருக்கும்.

470 ரோஜா அத்தர்செய்யும் ஜாலம்

ரோஜா புஷ்பங்களை இதழ் இதழாகப் பிரித்து பாத்திரத்தில் போட்டு சுத்தஜலம் விட்டு பனியில்வைத்துவர தைலம் மிதக்கும். பஞ்சால் துவட்டி சீசாவில் அடைத்துக் கொள்ளவும்.

471 விரலைக்கொளுத்தி காட்டும் ஜாலம்

அசல் சாராயத்தை விரலில் தோய்த்துக் கொண்டு விளக்கில் கொளுத்திக் காட்ட எரியும். சீக்கிரம் அணைத்துக்கொள்ளவும்.

472 ஆட்டுதலை கத்தும் வித்தை

கடையில் ஒரு ஆட்டுத் தலையை வாங்கிவந்து மூளை பாகத்தைத் திறந்து மூளையை யெடுத்துவிட்டு தவளையை உள்ளே வைத்து மூடி மஞ்சள், குங்கமம் பூசி சபையில் வைத்து அதின் முகத்திற்கு நேராக சாம்பிராணி புகைகொடுக்க ஆடு கத்துவதுபோல் கத்தும்.

473 நரைமயிர் கருக்கும் வித்தை

தவஸ்முருங்கை யென்னும் மூலிகைக்கு மங்களவாரம் காப்பிட்டு வேர் பிடுங்கி குலிசம் கட்டிக்கொள்ள நரை மாறும், இதற்கு சாபநிவர்த்திவேண்டும்.

474 மூலிகை சாபநிவர்த்தி செய்யும் வித்தை

எவ்வித வேலைகளுக்கும் மூலிகை வேர் பிடுங்கவேண்டுமாயின் காப்பிட்டு தூபதீபம் கொடுத்து ஓம் மூலி சர்வ மூலி, சர்வசாபம், நசி, மசி, என்று 16-உரு செபித்து எடுத்துக்கொள்ள உத்தமம்.

475 மூலிகை உயிர் கொடுக்கும் ஜாலம்

அவசியமான மூலிகைகளுக்கு உயிர் கொடுக்க வேண்டுமானால், தூபதீபமிட்டு தேங்காயுடைத்து ஓம் மூலி, சர்வ மூலி, உன்னுயிர் உன்னுடலில் நிற்க, சுவஹா வென்று 32-தரம் சேவிக்க வேண்டும்.

476 கோழிகள் சண்டைபோடும் ஜாலம்

நத்தைச்சூரி சமூலங்கொண்டுவந்து நீரில்போட்டு ஒருமாதஞ் சென்றெடுத்து சண்டைசாவலுக்குக் கொடுத்து கத்திகட்டி விட்டால் தோற்காது எதிர் சாவலினுடைய கத்திப்பட்டாலும் அறுபடாது கைகண்டது ஆனால் நத்தைச்சூரியை காப்புகட்டி வேரறுத்து எடுக்க வேண்டும்.

477 ஆடு பின்வரும் ஜாலம்

கோவைவடக்குவேரும் இலையும் கொண்டுவந்து சிறுநீர்விட்டரைத்து இரண்டு கைகளிலும் தடவிக்கொண்டு ஆடிருக்குமிடத்திற் போய் இரண்டு கைகளையுந்தட்டி வாவென்று சொல்லிவிட்டுவர ஆடு உன் பின்னே தொடரும்.

478 ஆடுகள் எழுந்திராத ஜாலம்

தேவாங்குத்தோலை ஆடிருக்குமிடத்தில் கொண்டுபோய் ஒருவருக்குந்தெரியாது புதைத்துவிட்டு வந்துவிட்டால் அங்கு எவ்வளவு ஆடு படுத்திருந்தபோதிலும் எழுந்திருக்கமுடியாது அவஸ்தைபடும் இவ்வேலை செய்யும்போது தன்னுடையபக்ஷி அரசாயிருக்கவேண்டும்.

479 குறிப்போடும் வித்தை

காட்டாமணக்கன்பாலில், துத்தம் தூரிசியைக்கலந்து புட்டியில் வைத்துக்கொண்டு துணிகளுக்கு மார்க்குப்போடக்கலையாது.

480 தும்பலும் குசுவும் விடும்படிசெய்யும் வித்தை

சுண்டச்செடியின்வேரை தூள்செய்து வஸ்திரகாயம்பண்ணி கூட ஆனைத்திப்பிலி பொடிகூட்டி ஜாலமாடும்சபையில் காற்று வாட்டத்தில் தூவ இது யார்யாருக்கு மூக்கில்படுகிறதோ அவர்களெல்லாம் தும்பலும் குசுவும் விடுவார்கள் பார்ப்பவர்களுக்கு வேடிக்கையாயிருக்கும்.

481 வெறும்பலகைமேல் நடக்கும் ஜாலம்

சாதாபலகை ஒன்றெடுத்து குமிளில்லாத மிதியடியைப்போல் செய்துக்கொண்டு பின்பு விளாம்பிசினியைத் தூளாக்கி வஸ்திரகாயஞ் செய்து விபூதியுடன் கலந்து ஜாலமாடும்சபையில் அனைவரும் பார்க்

கும்போதே ஷடி விபூதியை பலகையின்மேல்தூவி காலையலம்பிவிட்டு தாராளமாய் ஏறிநடக்கலாம்.

482 ஜனங்கூட்டும் ஜாலம்

ஆமையோடு மான்கொம்பு கற்பூரசலாசத்து இதுகளைச் சமயெடையாகத் தனித்தனி பஸ்பமாக்கி ஒன்றுகச்சேர்த்து சிட்டிகைகொடுக்க சிறிய வியாதிகளெல்லாம் போகும்.

483 பசியில்லாமல் இருக்கும் ஜாலம்

பாலில் நாயுருவி விரையையரைத்துக் கூழாக்கிச்சாப்பிட பசியில்லாது எத்தனைநாளானாலு மிருக்கலாம்.

484 சுண்ணும்பு தின்னும் ஜாலம்

சுண்ணும்பு தின்னவேணுமானால் கொஞ்சம் சங்கம்விரையை நன்றுகமென்று துப்பிவிட்டு தின்னலாம். வாய்வேகாது.

485 இதுவுமது

ஷடி வித்தையில் சுண்ணும்பை அதிகமாய் மென்று வாய்வெந்துவிட்டால் உடனே கொஞ்சம் மஞ்சளையாவது தேங்காய்ப்பில்லையையாவது மென்றுல் சுண்ணும்பினுடைய வேகந்தணியும்.

486 வேறு வாட்டிலோடுமேல்லும் ஜாலம்

வேளை வடக்கேபோகிறவேரைமென்று அடக்கிக்கொண்டு எவ்வளவு சீசாக்களானாலும் முருக்கைப்போல் மெல்லலாம். வாய்அறுக்காது சீசா வயிற்றில் போயிருக்குமென்று சந்தேகமிருந்தால் மூன்றுருண்டை சுடசுட கேழ்வரகு களியைவிழுங்கவும்.

487 கோழிமுட்டை உருளும் ஜாலம்

வெள்ளைக்குண்டுமணி வடக்கேபோகிறவேரும் வெள்ளைமாடப்புறு வெச்சமும், பொன்னரிதாரமும், பாவட்டையிலையும், சமயெடையாகச்சேர்த்து அரைத்து முட்டைமேல்தடவி விட்டுவிட்டால் புரண்டுக்கொண்டேயிருக்கும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

488 தண்ணீர் விழாத ஜாலம்

அரசன்வடவேர், மயில்ரோசனை, நாற்கரந்தைவேர், கோரைக்கிழங்கு இதுகளைச் சமயெடையாயரைத்து புதுதோண்டிக்குள் பூசிக்காயவைத்து பிறகு அதில் ஜலத்தைமொண்டுவந்து சபையில் கவிழ்த்

தால் துளிஜலங்கூட கீழேவிழாதென்று அகஸ்தியமாமுனிவர் சொல்லுகிருர்.

489 வாயுஸ்தம்பன ஜாலம்

ஓர் சிறிய வீட்டின் நடுமைய தூலத்தில் ஏழு ஊசிபிடிக்கும் காந்தத்தைப் பொருத்தி வைத்துவிட்டுப் பிறகு யோகியைப்போல் விபூதி ருத்திராக்கம் முதலிய சிவசின்னங்களைச் செய்துக்கொண்டு ஷை காந்தத்திற்குநேராக இருப்புப்பலகையின்பேரில் குந்திக்கொண்டு பூமியில் கால் பெருவிரலை யூன்றி யோகத்திலிருப்பவனைப்போல் காட்டி நடித்த பிறகு பெருவிரலைத் தளர்த்தப் பலகையுடன் அந்தரமாகக் கிளப்பும் பார்ப்பவர் நீ வாயுவைப் பந்தனஞ் செய்துக்கொண்டு மேலே போகிருயென்று சொல்லுவார்கள். காந்தம் வைக்கிறது முதலான வேலைகளை ஒருவருக்குந் தெரியாது சாமார்த்தியமாய்ச் செய்துக் காட்டவேண்டும்.

490 வீரியவிர்த்தி செய்துக்கோள்ளும் வித்தை

ஆழாக்குப் பசும்பாலில் ஜாதிக்காயைப் பொடிசெய்து 4-5-சிட்டிக் கைப்போட்டு சிவக்கக் காய்ச்சி சாப்பிட்டுவர வீரியவிர்த்தி யுண்டாகி திரேகம் வலுக்கும்.

491 காதுநோய் போகும் வித்தை

திருநீற்றுப்பத்திரியைக் கசக்கி நோயுள்ள காதில் விட்டுக்கொண்டு வர குணமாகும்.

492 மரக்கிளி பறக்கும் ஜாலம்

தேக்கமரத்தில் கிளியைச்செய்து அதற்கு வர்னமுதலானதும் பூசிக் காயவைத்து (இரக்கைகள் ஆடும்படியாக இரும்பில் கீல்வைத்து செய்யவும்) காந்தக்கம்பி இருக்கிற வீட்டினுள் சென்று அனைவரையும் பார்த்து மரத்தினுல் செய்த இக்கிளியைப் பறக்கவிடுகிறேன் பாருங்களென்று சொல்லி விபூதியையெடுத்து ஓம் ரீம் சொர்னபயிரவா இக்கிளியை ஆகாயம் கொண்டுபோவென்று சொல்லிக்கொண்டே விபூதியைப் போட்டு கிளியைக் கையிலேந்தினுல் அந்தரமாகக் கிளம்பும். இதைப் பார்த்தவர்களெல்லாம் நீ என்னமோ மந்திரஞ்செய்தாயென்று பிரமிப்பார்கள். ஆனுல் இவ்வித தந்திரவேலைகளையெல்லாம் வெகு தந்திரமாகவும் சாமார்த்தியமாகவும் செய்துக் காட்டவேண்டும்,

493 வேறு சர்ப்ப வசியம்

பொற்றலைக்கையான், தும்பைமூலம், நிலம்புரண்டி, சிறுகீரை, கரியசாலை, நாயுருவி, தொட்டால்வாடி, பொற்சீந்தில், ஆடையொட்டி,

இதுகளை சமயெடையாக யெடுத்து அரைத்துத் திலர்தமிடக்கண்ட சர்ப்பமெல்லாம் வசியமாகும்.

494 வேறு சத்துருவசியம்

பொற்றலைக்கையான்வேர், வெள்ளெருக்கன்வேர், விஷ்ணுகாந்தி இம்மூன்றையும் சமயெடையாக காராவின் நெய்யில் மைசெய்து திலர்தமிட எவ்வளவு பகையாளியாயிருந்தாலும் வசியமாவார்கள்.

495 வேறு சர்வ வசியம்

நிண்ணுசுணுங்கி, செவ்வகத்தி, சுழலாவாரை, முல்லை, கொழுந்தெட்டு, கூத்தன்குதம்பை இதுகளைப் பன்னீர்விட்டு அரைத்துத் திலர்தமிட சர்வமும் வசியமாகுமென்று மேலோர் சொல்லினர்.

496 குடத்தின்மேல் தேங்காயுடைக்கும் ஜாலம்

குப்பைமேனி செடிக்கு ஆதிவாரமும் சுவாதிநக்ஷத்திரமுங் கூடிய தினத்தன்று காப்புகட்டி பொங்கல் பலிமுதலானதுஞ்செய்து வடக்கே போகிறவேரை யெடுத்துவந்து பானைக்குள்போட்டுக் கவிழ்த்துவிட்டு தேங்காயை ஓங்கி அதின்மேல் உடைக்கத் தேங்காய் சூரைவிட்டது போல் உடையுமேயொழிய பானை யுடையாது. ஆனால் இவ்வேலையைச் செய்யும்போது தன்னுடைய பக்ஷி அரசாயிருக்கவேண்டும்.

497 ஆடுகள் மேயாத ஜாலம்

ஞாயிற்றுக்கிழமையதினம் வீட்டில் வாழும்படியான மூஞ்சூறு ஒன்றைப்பிடித்து ஓடுகின்ற ஜலத்தில்விட்டால் இது எதிர்நோக்கியோடும். அதுசமயம் கத்தியினால் ஒரேவெட்டாக வெட்டித் தலையைமாத்திரம எடுத்துவந்து ஆடிருக்குமிடத்தில் புதைத்துவிட்டால் ஆடானது எழுந்து தழைமேயப் போகாது. அப்புறம் புதைத்ததை எடுத்துவிட்டால் எழுந்து மேய்ச்சலுக்குப்போகும்.

498 நினைத்தயிடத்திற்குப் போகும் ஜாலம்

ஆலமரத்தின் கீழிருக்கும் ஆலங்கண்ணுக்கு ஆதிவாரமும் ரோகணிநட்சத்திரங்கூடிய தினத்தில் காப்புக்கட்டி தூபதீபங்கொடுத்து மறு ஆதிவாரத்தில் பொங்கலிட்டுப் பலிகொடுத்து தூபதீபத்துடன் வேரறுமல் பிடுங்கிவந்து தீட்டுப்படாதவிடத்தில் வைத்திருந்து அடுத்த வெள்ளிக்கிழமை வீட்டைச் சுத்தமாகமெழுகி பிள்ளையார் பிடித்துவைத்து நேமநிட்டையுடன் மேற்படி செடியை எதிரில்வைத்து தூபதீப முதலான சோடசோபசாரத்துடன் நைவேத்தியஞ் செய்துப் பணிந்து வேரையெடுத்துத் தீட்டுப்படாமல் வைத்து

இருந்து தினந்தினம் ஸ்நானஞ்செய்து ஞாபகமாய் நட்சத்திரம் விழு கிறதைப் பார்த்துக்கொண்டே யிருந்து விழும்போது வேரைக் கீழேபோட்டு வலதுகாலால் மிதித்துக்கொண்டு உன்னிஷ்டதெய்வ த்தை நினைத்து யெடுத்து அதை செருப்புக்குள்வைத்து தைத்துக் கொண்டு தீட்டில்லாவிடத்தில் வைத்திருந்து எப்போதாகிலும் நினை த்தவிடத்திற்குப் போகும்போது இச்செருப்பைக் காலில் மாட்டிக் கொண்டு நடந்தால் எவ்வளவு காதமானாலும் இளைப்பில்லாது நடக்க லாம். இதை எப்போதும் தீட்டுப்படாமல் பத்திரமாகக் காப்பாற்ற வேணும். இதற்கு மந்திரமில்லை தந்திரந்தான் செய்துபார்த்தால் உண்மை தெரியவரும்.

499 வேறு விளக்குபார்க்கும் ஜாலம்

நிகளமாயுள்ள மயிலிறகு ஒன்றையெடுத்து அதன்கீழ் துவாரஞ் செய்து கால்களஞ்சு பாதரசம்விட்டு களிமண்ணால்மூடிப் பிறகு பட்டுக் கந்தையை மேலே திரியைப்போற்சுற்றி நெய்யில்தோய்த்துக் கொளுத் திப் பார்க்க உண்மை தெரியவரும்.

500 கோழிமுட்டை வெடிக்கும் ஜாலம்

கோழிமுட்டைக்குள்ளிருக்கும் வெள்ளை அம்பிலியை யெடுத்து விட்டு அதில்நிறைய தக்காளிச்சாறு கல்சுண்ணாம்பு கெந்தகம் இதுகளை வெவ்வேறு சமமாயரைத்து ஒருமிக்கச்சேர்த்து முட்டைக்குள்ளிட்டு கொசுகின்மெழுகால் மூடி குளம் கிணறு முதலிய தண்ணீருள்ள விடத்தில் போட்டுவைத்தால் சிறிது நேரத்திற்கெல்லாம் வெடிசப்தங் கிளம்பும்.

501 வேறு போது வசியம்

சென்னயுருவி வேரில் பல்துலக்கிவர இலட்சுமி வசியமுண் டாகும்.

502 இதுவுமது

ஆலம்விழுதில் பல்விளக்கிவந்தால் நாபி குளிரும். இலட்சுமி வசிய முண்டாகும்.

503 இதுவுமது

புங்கன் குச்சியால் பல்லைத்தேய்த்துவர பல்லொளி யுண்டாகி மேகவியாதிகள்போம்.

504 இதுவுமது

கரியசாலையை சூரியோதயத்திற்கு முன்னெடுத்து சாஸ்திரப்பிர காரம் தந்தசுத்தி செய்துவந்தால் கண்ணொளியுண்டாம்.

505 இதுவுமது

நீர்ப்பூலாக் குச்சியைக்கொண்டு பல்லைத்தீட்டிவர தாதுவிர்த்தி யுண்டாகும்.

506 இதுவுமது

வேம்பின்குச்சியால் பல்லைத் தினந்தினம் துலக்கி வந்தால் பல் முத்தைப்போன்ற பிரகாசமாகி, முகத்தில் இலட்சுமி விலாசங்கொடுக்கும். ஆனால் முன்கோபம் அதிகமாயிருக்கும்.

507 இதுவுமது

செங்கல், சாம்பல், பாளை, சுத்தமில்லாதமண், உதிர்ந்தமாவிலை, ஈச்சங்குச்சு முதலியதுகளைக்கொண்டு தந்தசுத்தி செய்துவந்தால் ஸ்ரீதேவியானவள் விலகி சதா மூதேவிவாசமாயிருப்பாள்.

508 காகிதத்தில் விசித்திரங்காட்டும் ஜாலம்

திமுருகல் பாஷாணத்தை ஸ்டீலில் குத்திக்கொண்டு வெள்ளை கடிதத்தின்பேரில் விசித்திரமெழுதி வைத்துக்கொண்டு இருட்டறையில் அனைவரையும் வரவழைத்துக்காட்ட விசித்திரந்தோன்றும். பிறகு வெளியில்வந்துக் காட்ட வெறுங்கடிதமாயிருக்கும். பார்த்தவர்கள் சந்தோஷப்படுவார்கள்.

509 புட்டியில் தீபங்காட்டும் ஜாலம்

வெள்ளையாகயிருக்கும் புட்டியில் பயிரளவு ஷை பாஷாணத்தைப்போட்டு ஆளிவிரை யெண்ணெயைக் காய்ச்சிவிட்டு கார்க்கு மூடினால் தீபம்போல் பிரகாசந் தோன்றும். கார்க்கைத் திறந்தால் ஒன்றுமிராது.

510 புட்டியில் புஷ்பங்காட்டும் ஜாலம்

ஒரு வெள்ளைப் புட்டியில் தண்ணீர்வூற்றி சுகர்லட் கொஞ்சம் போட்டு துத்திநாகத்தைக் கயற்றில்கட்டி தண்ணீரில் தாங்கும்படியாய் தொங்கவிட்டு கார்க்குமூடி நாலுநாள் வைத்திருந்து எடுத்து பார்த்தால் புஷ்பங்களைப்போல் வெகு விநோதமாயிருக்கும்.

511 தண்ணீரில் முழுகி கடுதாசியெழுதும் ஜாலம்

படிகாரத்தில் எலுமிச்சம்பழரசம் விட்டுக் குழைத்து வெள்ளைக் கடிதத்தில் உன் மனம்போனபடி யெழுதி வைத்துக்கொண்டு பின்பு ஷை காகிதத்தை அனைவருக்குங்காட்டி இந்த வெறுங்காகிதத்தில் நான் நீரில்முழுகி எழுத்துகள் எழுதிவருகிறேன் பாருங்களென்று

அனைவருக்குஞ்சொல்லி சல் எக்ஷணி ஓடிவந்து இக்காகிதத்தைச் சீக்கிரமாக எழுதென்று நீரில்மூழ்கி வெளிவந்து எழுத்துகளைக் காட்டப் பார்த்தவர்கள் பிரமித்து உனக்கு எக்ஷணி வசியமென்று சொல்வார்கள்.

512 தண்ணீரில் பாணவேடிக்கை காட்டும் ஜாலம்

ஒருகோப்பையில் ஜலம்வார்த்து (பிபாஸ்பைறட் ஆப்லைன்) என்னும் மருந்தைக் கொஞ்சம் போட்டால் பொதபாணம்போல் கிளம்பும் பார்ப்பவர்கள் வெகு ஆச்சரியப்படுவார்கள்.

513 தீயில் குதிக்கும் ஜாலம்

சங்கன் செடியின்கீழ் பூத்திருக்கும் காளானைக்கொண்டுவந்து பாண்டத்திலிட்டு வெய்யலில் வைத்தால் உருகி எண்ணெய்வரும். அதை எடுத்து திரேகமாதியந்தமும் பூசிக்கொண்டு அனலில் குதிக்கலாம் சுடாது. ஆனால் கௌபீனமுதலானதும் அவிழ்த்துவிட்டுதான் குதிக்கவேண்டும் கைகண்டது.

514 ஜாலமாடும் சபையில் ஒருவர்முகத்தை ஒருவர் பார்த்தால் விகாரமாய்த் தோன்றும் ஜாலம்

ஒரு பித்தளைப்பாத்திரத்தில் ஓயின் அரைபாட்டலைக் காய்ச்சிவிட்டு கொஞ்சம் உப்பைப்போட்டால் புகையெழும்பும். அந்த சமயம் சபையில் ஒருவர்முகத்தை ஒருவர் பார்த்தால் விகாரமாய்த்தோன்றும்.

515 வேறு செக்கில் எண்ணெய் வராத ஜாலம்

நாயுருவிவேரைத் தூளாகச்செய்து செக்கு ஆடுகிறபோதுபோட்டுவிட்டால் எப்பொழுதும் எண்ணெய் வராது.

516 வேறு சாதம் வேகாத ஜாலம்

நிலவேம்புவேரைச் சிறிய துண்டுகளாகநறுக்கி அரிசி கொதிக்கும்போது போட்டுவிட்டால் சாதம் வேகாது.

517 வேறு நெருப்பைக் கையிலள்ளும் ஜாலம்

கருப்பு பசலை செடிக்கு காப்பிட்டு பிடுங்கி அரைத்து கையில் பூசிக்கொண்டு நெருப்பை கையில் அள்ள சுடாது.

518 வேறு நெருப்பைக் கையிலள்ளும் ஜாலம்

உத்தாமணிவேரையும் கொழுந்தையும் அரைத்துக் கையில் பூசிக்கொண்டு நெருப்பை வாரினால் சுடாது.

519 நெருப்பில்லாமல் வெண்ணெய் உருகும் ஜாலம்

ஜாலமாடும் சபையில் நாலைந்து கல்சுண்ணும்புக்கட்டியை பூமியில் புதைத்து மண்ணைமூடிவிட்டு பிறகு ஒரு கிண்ணத்தில் வெண்ணெய் கொண்டுவரச்சொல்லி அதன்மேல்வைத்து ஓம் காளி வெண்ணெய் உருகவேணுமென்று சுற்றிலும் ஜலம்விட்டு நமஸ்கரிக்கவும். சில நிமிஷத்திற்கெல்லாம் வெண்ணெய் உருகிவிடும். இந்த அருமையான ஜால வித்தையை யாவரும் பார்த்து ஆனந்தமடைய முன்னோர்களின் ஆதாரங்களைக்கொண்டு எழுதப்பட்டது.

520 விஷமேற்றும் ஜாலம்

முருக்கமரத்திலிருக்கும் கம்பளிப்பூச்சி மயிரும் தம்மலிவிரையும் வீட்டில் சமைக்கும் பாத்திரத்தின் அடிக்கரியும் நல்லெண்ணெயும் சேர்த்து அரைத்து மைபோல் வைத்துக்கொண்டு ஜாலமாடுஞ்சபையில் ஒரு கல்லையெடுத்து ஒருவர்கையில் கொடுக்கிறமாதிரி மையைத் தடவி விட்டால் விஷமேறும். அதைக்கண்டவர்கள் கல்லிலிருந்துதான் விஷமேறுதென்று சொல்வார்கள்.

521 நெருப்பு மிதிக்கும் ஜாலம்

தாளிச்சமூலம், கொத்தான் சமூலம், மருக்காரைப்பூ, உப்பு இவைகளைப் பசும்பாலில் அரைத்து உள்ளங்காலில் பூசிக்கொண்டு தீ அடங்கினபின் கட்டை நெருப்பைப் பரப்பி அதன்மீது சாதாரணமாய் நடக்கலாம். அனல் சுடாது. பார்ப்பவர்கள் அக்கினிபந்தம் செய்தானென்று சொல்லுவார்கள்.

522 சுதி கூட்டும் வித்தை

ஒருதவலையில் முக்கால்பாகம் ஜலத்தைவிட்டு ஒரு முழப்பிரம்பை தண்ணியில் தோய்த்து தவலைமீதில் ஊன்றி இருகரங்களாலும் மேலிருந்து கீழ்நோக்கி விடாது உருவிவர நாதமுண்டாகும்.

523 கோல்சுழட்ட கீதம்பாடும் வித்தை

1-அங்குல உள்வீத்துள்ளதும் ஐந்தடி நீளத்தில் தகரக்குழை தயாரித்து அதின் இரண்டு துவாரத்திலும் பில்லைகளைப் பொருந்த வைத்து ஒருபுரத்தில் விரல்நுழையும் துவாரம்செய்து சுழட்ட நேர்த்யாகக் கீதம் வாசிக்கும்.

524 அணில்போல் கத்தும் வித்தை

அரசு துளிப்பின் மத்தியிலுள்ள அரும்பைக் கிள்ளி அதின் ஆடையை வாயிலிட்டு முன்பல்லால் பிடித்து உரிஞ்ச அணில்போல் கீச்சிடும்.

525 பிறந்த குழந்தைபோல் கத்தும் வித்தை

வெற்றிலையை ஒருதுண்டு கிள்ளி இரண்டுகை பெருவிரலின் இடுக்கில்வைத்து உதட்டை மூடி கையை வாயில்வைத்தூத பிறந்த குழந்தை அழுவதுபோலிருக்கும்.

வசியம்

கேளேதான் பாரிலுள்ள மாணுக்காளே
கெவனமுட னுந்தமக்கு கூறுவேன்யான்
பாரேதான் செகவசியந் தன்னிலப்பா
பாங்குபெறக் கருமூலிக் காப்புகட்டி
நாளேதான் போகாமல் வராகந்தன்னை
நளினமுடன் பட்சமது சென்றபின்பு
வீளேதான் முதநாளில் காப்புக்கட்டி
விருப்பமுட னிரண்டாநாள் காப்பைவாங்கே. 526

வாங்கியே ரொகமென்ற பலிதான்கொண்டு
வளமுடனே வடக்குவேர் தன்னைவாங்கி
பாங்குபெற குளிசமது வாடியல்லோ
பட்சமுட னுருவதுவும் லட்சங்கொண்டு
தீங்கில்லா பஞ்சாட்சர வட்சரத்தை
தீர்க்கமுட னேதியல்லோ வுருவுங்கொண்டு
ஏங்கியே திரியாதே மைந்தாகேளு
எளிதான பூரணத்தில் வாசிபூட்டே. 527

பூட்டியே நிற்கையிலே வட்சரத்தையோது
புகழான வட்சரத்தி னுயிரைக்கொண்டு
மாட்டியே பிரணவத்தை மாறிமாறி
மகத்தான வசியத்துக் குறுதிதேடு
தாட்டிகமாய் வுறுதியது பூண்டபோது
தன்மையுடன் வசியமது மாற்றந்தோன்றும்
நீட்டியதோர் மூலிதனை யுச்சரிக்க
நிலையான கருமூலி வசியமாச்சே. 528

ஆச்சப்பா கருமூலி வசியமானால்
அவனிதனில் ராசரெல்லாம் வசியமாவார்
மாச்சலுடன் துரைத்தனத்து மாண்பரெல்லாம்
மகத்தான வசியமதுக் குள்ளேயாவார்
மூச்சடங்கிப் போனதொரு சித்தர்தானும்
மூதுலகில் வசியமதுக் குள்ளாவார்பார்
ஏச்சலுடன் சித்தாதி முனிவரெல்லாம்
எழிலான கருமூலிக்குள் ளாவாரே. 529

ஆவாரே கண்டதொரு மிருகமெல்லாம்
அவனிதனி லுந்தனுக்கு வொடுக்கம்பாரு
மேவலுடன் செகவசிய முனக்குள்ளானல்
மேதினியில் சித்தர்முத லுனக்கீடுண்டோ
ஏவலது செய்வதற்கு வுலகமெல்லா
மெழிலாக வுந்தனுக்குக் கீழேயாவார்
நாவதுவும் பொய்யாது மாணுக்காகேள்
நாகமென்ற விஷம்போலே கூறுவாரே. 530

கூறவே கருமூலி தன்னலப்பா
கொப்பெனவே சகலசித்துங் கைக்குள்ளாகும்
ஆறவே சித்தர்முனி ரிஷிகளெல்லாம்
அன்புடனே யுந்தனுக்குப் பணிகள்செய்வார்
சீறிவரு மிருகமெல்லா மடக்கமாகும்
சிறப்பான வசியமெல்லா முன்னடக்கம்
மாறலென்ற வட்சரமு முனக்கடக்கம்
மகத்தான வசியமென்ற மூலிகாணே. 531

குறிசோல்லும் வித்தை

காணவே வுலகுதனி லுள்ளமைந்தா
கண்மணியே குறிசொல்லு மார்க்கங்கேளு
தோணவே யஷ்டாங்க யோகக்கற்றுத்
தாரணியில் மாந்திரீக நூலும்பெற்று
பேணவே குறளியென்ற தெய்வந்தன்னல்
போக்கான வதர்வணத்தை மாறல்செய்து
நாணவே நினைத்தவண்ணங் கூறுதற்கு
நலமான குறளியென்ற பில்லியாமே. 532

பில்லியாங் தேவனு பூதமாகும்
போான வசுவனு பூதத்தோடு
கொல்லியா முதிரமென்ற மாடன்தானுங்
கொள்ளிவாய்ப் பூதமென்ற மயானருத்திரன்
சல்லியங்க ளறிந்துமல்லோ வேதங்கற்று
சாந்தமுட னஷ்டாங்க யோகனுகி
வல்லியதோர் பிறப்பங்கோல் கைபிடித்து
மாறியல்லோ வட்சரத்தை மாறுவாயே. 533

மாறவே வேதாள பூதந்தானும்
மகத்தான குறளியென்ற பூதத்தோடும்
சீறலென்ற பதினறு ரெட்டிப்பான
சிறப்பான தேவதா பூதத்தோடும்
கூறவே கைமசக்கு செய்துக்கொண்டு
கொற்றவனே லோகமது திரிந்துமல்லோ

ஆறவே நினைத்ததொரு வண்ணந்தன்னை
அப்பனே யுந்தனுக்குக் கூறும்பாரே. 534

பாரேதான் நினைத்ததொரு வாக்யந்தன்னைப்
பாங்குடனே யுந்தனுக்குக் கூறும்பாரு
நேரேதான் லாடமதில் திலர்தமப்பா
நேரான முடிமீதில் கச்சைபூண்டு
சீரேதான் வஸ்திரமு முழந்தானுறு
சிறப்பான மாத்திரைக் கோலுங்கொண்டு
தீரேதான் பாதமதில் யெட்டிமரக்குறடும்
திசுழான செந்தூரப் பொட்டுமாமே. 535

சகல வித்தைகளும் ஆடுதற்கு சித்தர்களின் ஆனந்த கற்ப வித்தை

பாரேதா னின்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
பாங்கான லோகபதி தன்னிலப்பா
நேரேதா னென்குருவுஞ் சொன்னமார்க்கம்
நேர்மையுட னுந்தனுக்குச் சொல்வேன்கேளு
தீரேதான் கலியுகந் தன்னிலப்பா
தீர்க்கமுடன் சித்தர்களுங் கொண்டகற்பம்
வீரேதான் கற்பமது யேதென்றுக்கால்
வித்தகனே சொல்லுகிறேன் விபரங்கேளே. 536

கோளப்பா கோரக்கர் மூலிதானும்
கெடியான தும்பலென்ற பூண்டுதானும்
ஆளப்பா நிழல்வணங்கி யென்றமூலி
வப்பனே தொட்டாவின் சிணிங்கியோடும்
மாளப்பா தும்பையென்ற மூலியோடும்
மகத்தான சிரியானி நங்கையோடும்
சூளப்பா திகைப்பூடு மூலியோடும்
சுந்தரனே மலைதாங்கித் தானுங்கூட்டே. 537

கூட்டவே மலைவேம்பு நிலவேம்புதானும்
குணமான கருவேம்பு நல்வேம்புதானும்
நாட்டமுடன் கோரையது ரெண்டுங்கூட்டு
நலமான கௌதாரி ரெண்டுஞ்சேரு
தேட்டமுடன் தும்பையது ரெண்டுங்கூட்டு
தெளிவான விளாவதுவும் ரெண்டுஞ்சேரு
வாட்டமுடன் பசலையது ரெண்டுஞ்சேரு
வளமான முருங்கையது ரெண்டுந்தானே. 538

தானான முருக்கையுடன் வேலிமூன்று
தாக்கான சாரையது ரெண்டுஞ்சேரு

தேனான சூரையது ரெண்டுங்கூட்டு
தெளிவான மணியதுவும் பஞ்சமாகும்
கோனான காளியது ரெண்டதாகும்
குருவான கண்ணியது பஞ்சமாகும்
மானான நங்கையது மூன்றுமாகும்
மகத்தான யாவாரை யைந்துங்கூட்டே. 539

கூட்டவே மத்தையது மூன்றுமாகும்
குணமான இலுப்பையது ரெண்டுமாகும்
நீட்டமுடன் வந்தியது ரெண்டுமாகும்
நிட்களங்க மானதொரு காந்தைரெண்டு
கூட்டமுட னலரியது ரெண்டுஞ்சேரு
குணமான வகத்தியது பஞ்சமாகும்
வாட்டமுடன் நந்தியது ரெண்டதாகும்
வளமான வேளையது நாலுமாச்சே. 540

ஆச்சப்பா கள்ளியது யெட்டுமாகும்
வழகான முள்ளியது நாலதாகும்
பாச்சலென்ற கூந்தலது மூன்றுமாகும்
பாங்கான தாழையது மூன்றுமாகும்
வீச்சலென்ற தகரையது ரெண்டுமாகும்
விசையான தாமரையு மைந்துமாகும்
மாச்சலுடன் தொட்டியது ரெண்டதாகும்
மகத்தான மல்லியது சமூலமாமே. 541

ஆமேதான் வகைவகைக்கு ரெண்டதாகும்
வப்பனே முத்தியதோர் தழைகள்கொண்டு
நாமேதான் சொன்னபடி வருண்மைந்தாகேள்
நயமுடனே ரவிதனிலே காயப்போடு
போமேதான் கல்லுரலில் போட்டிடித்து
பொங்கமுடன் சூரணமாய்ச் செய்துகொண்டு
வேமேதான் கடைசரக்கை யியம்பக்கேளு
வித்தகனே யென்மகனே யின்னங்கேளே. 542

கற்பஞ்செய்யும் வித்தை

காணவே யின்னமொன் றறைவேன்கேளு
கருவான கற்பத்துக் குறுதிசொல்வேன்
தோணவே சுக்கதுவு மொன்றேயாகும்
துகளான மிளகதுவு மிரண்டேயாகும்
நீணவே விளங்கமது வொன்றேயாகும்
நெடிதான மூலமது வொன்றேயாகும்
மாணவே யரத்தையது வொன்றேயாகும்
மகத்தான ரோசனையு மொன்றுபாமே. 543

ஒன்றான பூமிசர்க் கரைக்கிழங்கு
வுத்தமனே பரங்கியென்ற பட்டைதானும்
நன்றான லவங்கமுடன் லவங்கப்பட்டை
நலமான ஜாதிக்காய் ஜாதிபத்திரி
குன்றான குராசாணி வோமந்தானும்
கூரான வால்மிளகு வோமமோடி
தன்றான வசம்புடனே மிளகுதாளி
தாக்கான கச்சோலமதி விடையந்தானே. 544

தானான தான்றிக்காய் நெல்லிதானும்
தாக்கான கொடிவேலி கடுக்காய்பூவும்
கோனான வால்மிளகு யேலங்கூட்டு
கொடிதான கருஞ்சீரங் காட்டுச்சீரம்
பானான தேசாவரதக் கோலந்தான்
பாங்கான பேரரத்தை மாசிக்காயும்
மானான சரக்கெல்லாம் பலந்தான்காலாய்
மார்க்கமுடன் சூரணமாய் செய்துக்கொள்ளே. 545

கொள்ளவே யக்கினியில் வாட்டிமைந்தா
கொடிதான சூரணத்தைச் செய்துக்கொண்டு
மெள்ளவே முன்செய்த சூரணத்தில்
மேன்மையுடன் தான்கலந்து யெடுத்துமைந்தா
விள்ளவே கோரக்கர் மூலிதன்னால்
விருப்பமுடன் கியாழமது செய்துக்கொண்டு
தள்ளவே யாவின்பால் தானுஞ்சேர்த்துத்
தளராமல் சரக்கையெல்லாங் கலந்துக்கொள்ளே. 546

கலந்துமே சூரணத்துக் கிடைதான்ரெட்டி
கலக்கமில்லா சீனியது தான்கலந்து
சலந்திரள பாகுபத மாகுமட்டும்
தாக்கான ஆவின்நெய் நாலுக்கொன்று
மலந்தவொரு சிற்றேனும் நாலுக்கொன்று
மகத்தான மெழுகுபதந் தன்னிலாட்டி
அலந்தசெந் தாமரைப்போல் குங்குமப்பூ
வப்பனே பலமதுவுந் தானுங்கூட்டே. 547

கூட்டவே வாடையென்ற கஸ்தூரியப்பா
குணமான கோரோசனந் தானுஞ்சேரு
வாட்டமுடன் வகைவகைக்குப் பலங்காலாக
வளமுடனே தான்சேர்த்து மைந்தாகேளு
நீட்டமுடன் பச்சையென்ற பூரந்தானும்
நீதியுடன் பலமதுவுங் காலதாகும்

தாட்டிகமாய்த் தான்கூட்டி வாசனையுங்கட்டி
தப்பாமல் தாளிதனை யிறக்கிடாயே. 548

இறக்கியே வானந்த கற்பந்தன்னை
யெழிலாகக் கணபதிக்குப் பூசைசெய்து
சிறக்கவே சோடசமாம் பூசைதானும்
சீருடனே மனோன்மணியைத் தொழுதுபோற்றி
உறக்கமது வாராம லுண்மைமைந்தா
வுத்தமனே யாதிமுதல் தேவர்தம்மை
திறமுடனே யவர்பாதந் தான்வணங்கி
தீர்க்கமுடன் பூசைமுகம் நிற்பீர்தானே. 549

பூசிக்குங் காலமதில் தேவர்தாமும்
புகழாக வுந்தனுக்கு நிர்த்தஞ்செய்வார்
மாசுபடாத் திருமேனி காவலோனே
மகிமைகளு முந்தனுக்கு வோதுவார்பார்
ஆசுகவி பாவாணர் செய்தமார்க்கம்
வப்பனே யுந்தனுக்கு வாய்க்கும்பாரு
வீசுபுகழ் சித்துமுனி ரிஷிகள்தேவர்
விண்ணுடர் மண்ணுடர் போற்றுவாரே. 550

போற்றியே பூசைமுகம் முடிந்தபின்பு
பொங்கமுடன் கற்பமதை யெடுத்துமைந்தா
ஆற்றலுடன் சிவயோகந் தன்னிற்சென்று
அப்பனே சமாதியாம் பீடந்தன்னில்
நாற்றிசையில் சித்துமுனி பிரமித்தேங்க
நலமான கற்பமதை யெடுத்துபாலா
கூற்றனுக்கு யிடமதுவும் நேராமற்றுள்
கொற்றவனே யோகமதில் களஞ்சிகொள்ளே. 551

களஞ்சியென்ற கற்பமதைக் கொள்ளும்போது
கைலாய முடிவரைக்குங் காணலாகும்
தளர்ந்ததொரு மேனிதனில் கற்பமூர
தாக்கான சின்மயத்தி லறிவுநின்று
வளர்ந்துமே பஞ்சபூத மொன்றேயாகி
வாகான சிகாமது மேலேயேகி
குளம்போன்ற சின்மயத்தில் சிகாரமிஞ்சி
கொடியவா ராதாரங் காணலாச்சே. 552

காணவே யாராதா ரத்தையப்பா
கருவான கோட்டைவழி வாசல்நின்று
பூணவே நாகதத்தி லிருந்துக்கொண்டு
புகழான வாசிநிலை காணலாகும்

தோணவே வணுகதத்தை மாட்டியல்லோ
துப்புரவாய் சுவாதிட்டான மறியலாகும்
வேணவே கலையிரண்டு மாறிக்கொண்டு
வேகமுடன் குதிரையென்ற வாசிபூட்டே. 553

பூட்டவே கேசரத்தை மேலேநோக்கி
புகழான வாசியைநீ பூட்டுபூட்டு
நீட்டவே மேல்நின்ற வாராதாரம்
நிட்களங்க மாகியல்லோ வொடுங்கும்பாரு
வாட்டமுடன் வாசலது மேல்நோக்காது
வளமுடனே அங்கென்று வழுத்தும்போது
தாட்டிகமாய்ப் பிணைமாறி கணையுமாறி
தண்மையுடன் பதினாறு கலையில்தாக்கே. 554

தாக்கவே சோடசமாங் கலையில்நின்று
தன்மையுடன் வங்கென்று வோதும்போது
நோக்கமுட னிதழதுவு முப்பத்திரண்டு
நுணுக்கமுடன் கும்பகத்தி லிருந்துக்கொண்டு
சீக்கிரமாய் மலர்ந்ததொரு யிதழில்நின்று
சீருடனே சிதாபாசக் கலையில்நின்று
தூக்கமது வாராமல் துய்யபாலா
துப்புரவாய் மௌனநிலை சாதிப்பாயே. 555

சாதிக்க வட்டாங்க யோகந்தன்னில்
சாங்கமுடன் கலைபீடந் தமர்பீடமாகும்
பேதிக்க சமாதியது பீடந்தன்னில்
பேரான வமுதநிலை நின்றுக்கொண்டு
வாதிக்கக் கண்ணுக்கு ளாராதாரம்
வளமுடனே கலைமாறி யோகஞ்செய்யில்
சாதிக்குஞ் சின்மயத்தி னட்டபாட்டஞ்
சதுரான கேசரத்தின் மகிமைபாரே. 556

கற்பமுண்ணும் விதி

பாரேதான் புலத்தியனே மைந்தாகேளு
பாங்குடனே யெந்தன்குரு சொன்னநீதி
நேரேதான் கற்பமது கொண்டுமென்ன
நெடிதான யோகமது செய்துமென்ன
தீரேதா னுதகத்தி லிருந்துமென்ன
தீர்க்கமுடன் கும்பகத்தை யடைந்துமென்ன
தேரேதான் சுவாதிட்டானம் பெற்றுமென்ன
தேற்றமுடன் பூதமதை யொடுக்கார்தானே. 557

தானான பூதமதை யொடுக்கியென்ன
தாக்கான கமலமது கொண்டுமென்ன

கோனுன யிதழதுவும் பெற்றுமென்ன
கோசரத்தி னபசாரங்கள் பெற்றுமென்ன
தேனுன மவுனநிலை யறிந்துமென்ன
தேஜொளியின் பதாம்புயத்தைக் கண்டுமென்ன
பானுன பராபரத்தின் பதாம்புயத்தைப்
பாருலகில் கண்டவர்க ளில்லைகாணே. 558

காணவே தத்துவத்தில் வல்லோர்தம்மைக்
காசினியில் வெகுமாந்தர் சித்தர்கூடி
பூணவே கற்பமது பூண்டுகொண்டு
புகழான லாகிரியாம் வஸ்துபூண்டு
தோணவே மௌனநிலை யறிந்தோர்போலும்
தோன்றுமல் வஸ்துவென்ற மயக்கந்தன்னுல்
வேணபடி வாசிதனை நடத்துவோன்போல்
வேகமுடன் வையகத்தில் மிரட்டுவாரே. 559

மிரட்டுவார் கற்பமென்ற குளிகைபூண்டு
மிக்கான நோக்குவித்தை காட்டுவார்பார்
சரட்டுடனே ருத்திராக்ஷங் கையில்கொண்டு
சாங்கமுடன் மணிபூரக மென்றுகூறி
கரந்தனிலே மும்மணியாங் கோர்வைதன்னை
கருத்துடனே செபிப்பவர்போல் கபடுகூறி
வரமுடைய தத்துவத்தில் கியானிபோல
வாகுடனே மகிமையது புரிவார்பாரே. 560

புரிவாரே லோகபதி மாண்பருக்கு
புகழான வானந்த கற்பத்தாலே
சரியான வேதமது வோதுவார்பார்
தரணியில் மாண்பரெல்லாம் மயங்குவார்கள்
உரிமையுடன் கற்பமதைக் கொண்டாலல்லோ
வுத்தமனே யுலகுதனில் நெடுங்காலந்தான்
தெரியவே சமாதிமுக மிருந்துக்கொண்டு
தேற்றமுடன் வயதுதனை வளர்த்தலாமே. 561

ஆனந்தக் கற்பத்தால் ஆயுளை விர்த்திசெய்யும் வித்தை

வளர்த்தலாங் கற்பமது கொண்டபோது
வாகான சட்டையது தள்ளும்பாரு
களரான திரேகமது ரோகம்நீங்கி
கனத்ததொரு விழியிரண்டுஞ் சிகப்புமெத்த
பளபளத்த திரேகமது காந்தளில்லை
பாங்கான வயததுவும் லக்கோயில்லை

குளவிந்தம் போலாக திரேகந்தானும்
கொற்றவனே யிறுகியல்லோ யிருக்கும்பாரே. 562

பாரேதான் சிவயோகஞ் செய்தபேர்க்குப்
பாங்கான கற்பமது கொடுத்தாயானால்
நேரேதா னுந்தனுக்கு மகிமைசொல்லி
நேர்மையுடன் சமாதிமுகம் வளவுகூறி
சேரேதான் கிட்டிருந்து மனோலயத்தை
சிறப்புடனே சிதாபாச நிலையிற்செல்ல
ஆரேதான் கற்பமது வுண்டபேரும்
அப்பனே யுந்தனுக்கு வுதவுவாரே. 563

உதவவென்றால் காயாதி கற்பத்தாலே
வுத்தமனே யுந்தனுக்கு யெல்லாஞ்சித்தி
சதகோடி நெடுங்கால மிருக்கலாகும்
சாங்கமுடன் வாசிமுக மேறலாகும்
பதமான நாற்பதவி யுந்தனுக்கு
பாங்குடனே வாய்ப்பதுவு மெய்யேயாகும்
இதமுடனே மௌனத்தின் சோதிதன்னை
யெழிலுடனே சதாகாலந் துதிப்பீர்காணே. 564

காணவே குளிகையது கொண்டபோது
கனமான கற்பத்தின் குளிகையாலே
வேணபடி கண்ணபிரான் திருக்கூத்தெல்லாம்
விட்டகுறை யிருந்ததொரு புண்ணியத்தால்
மாணமரும் மங்கையோ டிணங்கியல்லோ
மகத்தான கலையறு பத்துநான்கும்
பாணமது கொண்டதொரு மன்மதன்போல்
பாருலகில் சித்துவிளை யாடலாமே. 565

ஆடலாம் மாணுக்கா யுந்தனுக்கும்
அன்பான சமுசாரி யானவர்க்கும்
மாடமாளிகை நிறைந்த மன்னருக்கும்
மகத்தான சிவயோகி மாந்தருக்கும்
தேடரிய கீர்த்திகொளும் மாந்தருக்கும்
தேசமசந்நியாசி வேஷத்தோர்க்கும்
சூடலாங் காயாதி கற்பந்தன்னை
சுந்தரனே புலத்தியனே மொழிந்திட்டேனே. 566

மொழிந்தேனே யெந்தன்குரு தன்னாலேதான்
முனையான பதாம்புயத்தைப் போற்றியேதான்
வழிபாடு குணபாடு தேவபாடு
வளம்பெரிய யோகத்தின் பாட்டையெல்லாம்

அழியாத காயாதி கற்பத்தாலே
அப்பனே யுந்தனுக்கு யெல்லாஞ்சித்தி
விழியிருக்க விளக்கேற்றி கேணிதன்னில்
விழுந்திறந்த கதைபோல மொழிந்தார்தானே. 567

தானான சூட்சாதி சூட்சந்தன்னைத்
தண்மையுள்ள புலஸ்தியனே சித்தரெல்லாம்
பானான பனியைநம்பி விழுதுகெட்ட
பாங்கான சண்டாள மாந்தர்போல
தேனான குருவிருக்க மருவிருக்க
தேசமதில் வெகுமாந்தர் ஞானங்கொண்டு
கோனான குருபரனைத் தேடாமற்றான்
குவலயத்தில் வெகுமாந்தர் கெட்டார்தானே. 568

கெட்டதொரு ரிஷிதேவர் முனிவரெல்லாம்
கெடியான சாஸ்திரத்தின் மறைவுதன்னை
விட்டகுறை தானிருந்தும் நூல்பாராமல்
விதியாளி யாயிருந்து மதியுங்கெட்டு
தொட்டகுறி போலாக வாசான்வார்த்தை
தொடர்ந்துமே பற்றாமல் கெட்டார் மாந்தர்
சட்டமுட னெந்தன்குரு வுபதேசித்த
சகலமுமே யுந்தனுக்கு வோதினேனே. 569

570 கழுத்தில் கத்தி குத்தும் ஜாலம்

ஒருகத்தியை இரண்டுதுண்டாகவெட்டி அதை கழுத்தில்படிய ஸ்பிரிங்தகட்டில் பற்றவைத்து ஜாலமாடுமிடங்களில் முன்னதாய் ஒரு கத்தியைக்காண்பித்து குத்துவேனென்று ஒருவனைப் படுக்கவைத்து மேலே துணியைப்போட்டு மூடி முதல் பத்தவைத்த கத்தியை மாட்டி மற்றொருகத்தியை மறைத்துவிட்டு ஆட்டு இரத்தத்தை துணி யில் தோய்த்து உலரவைத்திருந்து ஜாலமாடுமிடத்தில் அந்ததுணியை நனைத்து கழுத்தில் பிழிந்தால் இரத்தமாகவேயிருக்கும் எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள்.

571 வலைசிக்கத்தில் மனிதனைக்கட்டி பெட்டியில் போடும் ஜாலம்

வலைமாதிரி சிக்கம் ஒன்றுசெய்து அடியில் சுருக்குவைத்துக் கயர்கோத்துச் சுருக்கி முடிபோட்டு வைத்திருந்து அனைவருக்குங்காட்டி இந்தச்சிக்கத்தில் மனிதனைக் கட்டிப்போடுகிறேன் என்றுசொல்லி அந்தசிக்கத்தை விரித்துப்போட்டு ஒரு மனிதனைக் கை பெருவிரல் ரெண்டும் கழுத்துடன் சேர்த்துக்கட்டி சிக்கம் மத்தியில் குந்தவைத்து தலைமுதல் திரேகமாதியந்தமும் நன்றாய் வளைத்துக்கட்டி கெட்டிமுடிக

ளாகப்போட்டு 3-அடி நிகளமும் $1\frac{1}{4}$-அடி அகளமுமுள்ள ஒருபெட்டியில் மேல்மூடியை ஒருவரைப் பிடிக்கச்சொல்லி துப்பட்டியால் மறைத்துவிடவும். முன்னதாக பெட்டியிலிருப்பவனுக்கு சொல்லிவைக்க வேண்டிய தென்னவென்றால் விரலைமடக்கி இழுத்துக்கொண்டு மேற்படி சிக்கத்தின் அடிசுருக்கை யிழுத்தால் சிக்கமானது அடியோடே கழன்றுவிடும். மறுபடியும் சுருக்கைக் கோர்த்துகட்டி வெளியில் போட்டுவிடவும். கட்டினபிரகாரம் சிக்கமிருக்க ஆளைக்காணோமென்று ஆச்சரியப்படுவார்கள் பெட்டியில் மனிதன் ஒருபக்கம் உஷாராய் பதுங்கியிருந்து கத்திகுத்திக்காட்டும்போது சமயத்தைப்போல் தப்பித்துக் கொள்ளவும்.

572 குடத்தில் தண்ணீரை ரோப்பி பட்டாவைக்குத்தி தூக்கிக்காட்டுஞ் ஜாலம்

ஒரு குடத்தில் நிரைய ஜலத்தைரொப்பி மேல்மூடும் சானகிக்குக் கத்திபூர துவாரஞ்செய்து மேலேமூடி பட்டாக்கத்தியின் முனையில் சிறிய துவாரஞ்செய்து சானகி துவாரத்திற்குச் சரியாய் யெலுமிச்சம் பழத்தைவைத்து கத்தியை யதில் நுழைத்து கத்தியில் கம்பிகோர்த்து கொடம் உள்தட்டில் தாங்கும்படியாய் ஒருகொம்பை கட்டிவிட்டு மேலேதூக்கி கட்டிவிடவும் கத்தியடியில் துவாரமாவது வளையமாவது முன்னடியே வைக்கவேண்டும்.

573 விலங்கு தெரிக்கும் ஜாலம்

கருடன் முட்டையிட்டுக் குஞ்சுபொரித்திருக்குஞ் சமயம், அக் குஞ்சிற்குக் காலில் இரும்புவளையத்தைப் போட்டுவிட்டு வந்தால், அந்த இரும்புவளையந் தெரிக்க தாய்ப்பறவையானது சஞ்சீவியைக் கொண்டுவந்து கூண்டில் வைக்கும். அதை நாம் ஜாக்கிரதையாகப் பார்த்திருந்து அக்கூண்டை எடுத்துவந்து ஓடுகின்ற ஜலத்தில் போட்டால் அதிலிருக்கும் சஞ்சீவிப் புல்லானது ஜலத்தில் எதிர்நோக்கியோடும். அதைக் கண்டு எடுத்துவைத்துக்கொண்டு விலங்கின்பேரிலும், பூட்டின்பேரிலும் வைத்தால் படீரென்று வெடித்துவிடும். அதை எடுத்துப் பத்திரமாய் வைத்துக்கொண்டு வேண்டிய வேலைகளையெல்லாம் உன் சாமர்த்தியத்தினால் செய்துக் காட்ட உலகோர் ஆச்சரியப்படுவார்கள்.

574 வேறு வியாதியுண்டாக்கும் ஜாலம்

இந்திரகோபப்பூச்சி, புறாமுட்டை, வல்லூரின்பிந்து இதனுடன் கருவைச் சேர்த்தரைத்துக் காளிக்குப் பூசைசெய்து பகையாளியின்

வீட்டில்வைக்க தீராத நூதன வியாதிகளெல்லாஞ் சம்பவித்து நாசப் படுத்தும்.

575 உருமாற்றும் ஜாலம்

வாகைப்பிசின், அத்திவிரை, வாழைரசம், கரும்பூனைபீசம் இது களை அரைத்துச் சத்திக்குப் பூசைசெய்து ஒரு உருண்டைக் கொண் டால் பார்ப்பவர்களுக்கு நீ பூனைமாதிரித் தோன்றுவாய்.

576 சத்துருவை ஜெயம்பண்ணும் ஜாலம்

சுடலைக்கருவினால் முட்டையின்பேரில் எதிரியின் உருவத்தை எழுதிக் காளியைத்தியானிக்க எதிரியானவன் வணங்கிவருவான்.

577 வேறு வியாதிநீங்கும் ஜாலம்

நாய்ப்பாலில் பாம்பின் ஊனைச்சேர்த்துக் கருவாலரைத்துக் காளியைத் தியானிக்க வியாதிகளெல்லாம் உன்னைவிட்டு ஒழியும்.

578 வேறு புருஷவசியம்

புல்லாமணக்கன் விரையைக் கொண்டுவந்து நெய்யில் வறுத்து மாதச்சீலையில் நனைத்து அறுசுவையில் கொடுக்க வசியமாம்.

579 இதுவுமது

சென்னயுருவி, செம்முள்ளி, சிகப்பு கஞ்சா, செங்குவளை, பொன் னாங்காணி, சுழல்வண்டு, திகைப்பூண்டுபூச்சி, புனுகு, கஸ்தூரி மஞ் சள், சுடலைக்கரு இதுகளையெல்லாம் ஒன்றாகக்கூட்டித் திலர்தமிட வசியமாம்.

580 இதுவுமது

தீட்டுச்சீலையைப் பேய்க்கருட்பன்சாற்றி லூரவைத்து அதனு டன் களிப்பாக்கைப்போட்டு எடுத்துலர்த்தி தாம்பூலத்தில் கொடுக்க வசியமாவார்கள்.

581 இராஜவசியம்

ஆனைவணங்கி, நிலப்பனை, வெள்ளெருக்கன், குப்பைமேனி, காஞ்சொறி, ஆவாரை, முசுமுசுக்கை, சுழலாவாரை, பொற்றலைக் கையான், வேம்பு இவைகளின் வேரை சமயெடையாக எடுத்து தேனில் குழைத்துத் திலர்தமிட வசியமாம்.

582 வேறு ஸ்ரீ வசியம்

அரிதாரம், துருசு, சந்தனம், சவ்வாது, கற்பூரம், குப்பை மேனி, கொன்றை இதுகளைச் சமயெடையாகத் தேனில் திலர்தமிட வசியமாம்.

583 வேறு மிருகவசியம்

விஷ்ணுகரந்தைவேர், விஷங்கொல்லி, காடுகட்டி, தொட்டால் வாடி, நாயுருவி, முன்னை, சங்கன்விரை, ஏரழிஞ்சில் இவைகளைச் சம யெடையாகத் தேனிலரைத்துத் திலர்தமிட வசியமாகும்.

584 வேறு சர்ப்பவசியம்

பொற்றலைக்கையான், தும்பைமூலம், நிலம்புரண்டி, சிறுகீரை நீலி, கரியசாலை, நாயுருவி, காஞ்சொறி, பொற்கொடி, ஆடையொட்டி இதுகளைப் புத்துத் தேனிலரைத்துத் திலர்தமிட்டுக்கொண்டு வர வசியமாகும்.

585 வேறு சத்துருவசிய ஜாலம்

பொற்றலைக்கையான், வெள்ளெருக்கு, விஷ்ணுகாந்தி இவைக ளின் மூன்று வேரையும் காராவின் நெய்யில் குழைத்துத் திலர்தமிட வசியமாம்.

586 உலகவசிய ஜாலம்

நிண்ணுசிணிங்கி, செவ்வகத்தி, ஆவாரை, முல்லை, கொழுந்தெ ட்டு, கூத்தன்குதம்பை இவைகளின்வேரை கொன்றைப்பன்னீரால் அரைத்துத் திலர்தமிட சர்வ லோகமும் வசியமாகும்.

587 சர்வ மோகனம்

ஆம்பல், அல்லி, அதிமதுரம், கோஷ்டம், ஆலமரப்புல்லுருவி, வெண்குன்றிவிரை இதுகளை முலைப்பாலி லரைத்துத் திலர்தமிட சர்வமும் மோகனமாகும்.

588 இராஜ மோகனம்

குங்குமம், ஆவின்புல்லுருவி இதுகளை நெய், தேன், ஆலம்பால் இவைகளைச் சமன்சேர்த்து அரைத்துத் திலர்தமிட இராஜமோகன மாகும்.

589 புருஷ மோகனம்

செவ்வாமணக்கு, செவ்வகத்தி, சென்னுயுருவி, செம்முள்ளி, புல் லுருவி, மானைத்தேடிச் சென்றான் இவைகளில் கருவைச்சேர்த்து திலர் தமிட புருஷமோகனமாம்.

590 ஸ்திரீ மோகனம்

குங்குமம், வாழை, அல்லி, மாவி, சந்தனம், நீலி, கோடாசூரி, செங்குன்றி, மண்டூகம் இவைகளை யெல்லாம் புத்துத்தேனு லரைத் துத் திலர்தமிட ஸ்திரீகள் மோகனமாம்.

591 மிருக மோகனம்

வெண்குன்றி, முத்தக்காசு, கெச்சைக்காய் இவைகளில் நரித்தலை யோட்டைக்கூட்டி முலைப்பாலில் அரைத்துத் திலர்தமிட மிருகமோக னமாம்.

592 சொர்ன மோகனம்

மருதன், ஊமத்தை, மருளூமத்தை, நன்னாரி இவைகளின் வேரை வெள்ளூமத்தன் சாற்றிலரைத்துத் திலர்தமிட சொர்ன மோகனமாம்.

593 சத்துரு மோகனம்

சென்னாயுருவி, வெண்குன்றி, பொன்னாங்காணி, செங்கழுநீர், தூதுவேளை, சிறுபுன்னை இவைகளைக் கோ[illegible]சூரிச் சாற்றில் அரைத்துத் திலர்தமிட சத்துரு மோகனமாம்.

594 லோக மோகனம்

முல்லை, வெண்கொழிஞ்சி, காயம், நரிப்பயறு, குன்றி, நொச்சி, கையாந்தகரை, ஐவிரலிவேர், சோம்பு, கெஞ்சா இவைகளை நன்னாரிச் சாற்றுலரைத்துத் திலர்தமிட லோகமோகனமாகும்.

595 தம்பனம்

கருங்குன்றி, சதுரக்கள்ளி, ஆவாரை, கருப்புகெஞ்சா, ஊமத்தை திகைப்பூண்டு, சுவரொட்டி, நிலத்தம்பி இவைகளைக் கொசுகின் தேனி லரைத்துத் திலர்தமிட தம்பனமாகும்.

596 சுக்கிலத் தம்பனம்

விஷ்ணுகிரந்திமூலம், விளாம்பிசின், சிவந்தகஞ்சா, ஊமத்தை, கருப்புகஞ்சா, மருளூமத்தன் இவைகளைப் பசுநெய்யிலரைத்துத் திலர் தமிட சுக்கிலத் தம்பனமாகும்.

597 ஆயுதத் தம்பனம்

நத்தைச்சூரிவேர், பொன்முசுட்டைவேர், வாழைவேர், பேவா ழைத்தண்டு, பச்சைப்பாம்பு, பருத்தி, கண்டங்கத்திரி, மூங்கில் இலை இவைகளைத் தேனிலரைத்துத் திலர்தமிட ஆயுதத்தம்பனமாகும்.

598 மிருகத்தம்பனம்

பச்சோந்தி, கன்னிமூலம், இருள்மூலிவேர், நன்னாரி, பாலை, பேய்ப்பீர்க்கு இவைகளைப் பசுநெய்யி லரைத்துத் திலர்தமிட மிருகத் தம்பனமாம்.

599 ஜலத்தம்பனம்

நீர்மேல் நெருப்பு, வன்னி, கட்டுக்கொடி, நிண்ணுசுணுங்கி, நிலம்புரண்டி, பேய்முசுண்டை, தூதுளை, சீரகம், இருபிரம்பு, சுளத்தி, முடக்கொத்தான் இதுகளை அரைத்துத் தேன்கூட்டி திலர்தமிட ஜலத் தம்பனமாகும்.

600 அக்கினித் தம்பனம்

சங்கம்வேர், கற்றாழைவேர், தாமரைக்கிழங்கு, குப்பைமேனி, வெள்ளைக்காக்கட்டான், செவ்வகத்தி, சுண்டை, செங்கொடி, வட்டத் துத்தி,ஓரிலைத்தாமரை, இரசம் இவைகளை அரைத்துத் திலர்தமிடஅக் கினித் தம்பனமாகும்.

601 தேவ தம்பனம்

கொத்தான், கொளுஞ்சி, நிலவாகை, ஆலம்வேர் இவைகளைப் பாலிலரைத்துத் திலர்தமிட தேவதம்பனமாகும்.

602 சர்வ தம்பனம்

சிறியாநங்கை, நந்தியாவட்டை, சின்னி, பெருஞ்சின்னி, முகமினுக்கி, நாகவல்லி, ஆத்திவேர், செவ்வாமணக்கு, சுவரொட்டி, கருங்குன்றி, தண்ணீர்விட்டான் இவைகளை அரைத்துத் திலர்தந் தீட்டிவர சர்வமும் தம்பனமாகும்.

603 சர்வ உச்சாடனம்

தடையத்தான், பாம்புகண்ணி, சாத்திரபேதி, நத்தைச்சூரி, குடியோட்டி, நாய்மயிர், கழுதைப்புட்டை, விடையம் இதுகளைத் தேனிலரைத்துத் திலர்தமிட சர்வமும் உச்சாடனமாகும்.

604 மிருக உச்சாடனம்

நரிமிரட்டி, இருவரைமிரட்டி, எருமைப்புட்டை, புலையரைச்சுட்ட சாம்பல், சீதாதேவி, செங்கழுநீர், இவைகளைத் திலர்தமிட மிருகங்கள் உச்சாடனமாகும்.

605 சத்துரு உச்சாடனம்

இலைக்கள்ளிவேர், திசைப்பூண்டு, அரமுரித்தான், காக்கைக்கூடு, வேம்பு, பிணஞ்சுட்ட யெலும்பு, தூரச்சீலை இவைகளைச் சத்துரு உச்சாடனஞ்செய்ய நல்லது.

606 தேவ உச்சாடனம்

காக்கைக்கூண்டு, கழுதைப்புட்டை, தூரச்சீலை, துருசு, சடை சுடுகாட்டுச்சாம்பல் இவைகளைச் சேர்த்துச்செய்ய கெணங்கள் பூதங்கள் உச்சாடனமாகும்.

607 விஷ உச்சாடனம்

நீலிவேர், நீர்மேல் நெருப்புவேர், மாவிலிங்கன்வேர், விஷ்ணு காந்திவேர், பாம்பின்பிச்சு, நாபி, நேர்வாளம் இவைகளைக்கூட்டி அரை த்து (லங்-மங்) கென்று மந்திரமோதி வைத்துக்கொள்ள விஷ உச்சா டனமாகும்.

608 ஸ்திரீ உச்சாடனம்

பூனைவணங்கி, கௌதும்பை, பச்சை ஓணான் முதுகெலும்பு, வாழை, தோள்கொடுக்கிலை, தூரச்சீலை, திகைப்பூண்டு இவைகளைச் சேர்த்துச் செய்ய ஸ்திரிகளையெல்லாம் ஓட்டிவிடும்.

609 சர்வவியாதி உச்சாடனம்

கரந்தை, திரிகடுகு, சித்திரமூலம், மிளகு, சீந்தில், மஞ்சள், மிளகா இவைகளெல்லாம் வியாதி உச்சாடனமென்று சொல்லுவர்.

610 பில்லி, சூன்யம் இதுகளுக்கு சிலகைமந்திரம்

கொன்றை, செங்கழுணி, கோஷ்டம், வெண்குன்றி, மாடப்புறு, யெச்சம், விந்து, நகம் இதுகளைப் பழச்சாற்றாலரைத்து வைத்துக் கொண்டு மந்திரம் செபிக்கும் விதம்.

ஆனந்தக்களிப்பு

ஓம்பரிசினைசர்பனை அந்தத்தெகுதெகு சிங்ரங் சித்திரரூபி சிஷ்ட பரிபாலணியாம் அத்துடன் ரங்ரங் வாங்குவாங்கு உருளுருளு சோரத கனியுடன் அங்கேசொல்லுஞ் சித்ரதகனி சூட்சமதாய் ரரிட்டா ஓடு வோடு நயமான உங்உங் எங்எங்கும் ஐயும் சுவ ஹாவென்று ஆயிரத் தெட்டுருபாயமதாய் சாயாமல் மாட்டிடுவாய் சத்தியம் தப்பாது சித்திய தாம்.

611 போத லேபனம்

குண்டுமணிவிரை, நீர்முள்ளிவிரை, அரிதாரம், கோஷ்டம் இவை களை முலைப்பாலிலரைத்துப் பெண்ணின்தலையிற் றேய்த்து அவளுடன் போகித்தால் என்னாளும் உன்னைப்பிரியமாட்டாள்.

612 ஸ்திரீ லேபனம்

பொன்னாவாரை, வசம்பு, விஷ்ணுகிரந்தி இவைகளை நல்லெண் ணெயிற்காய்ச்சி பூசிக்கலந்தால் ஆயுள் பரியந்தம் பிரியமாட்டாள்.

இவை இரண்டிற்கும் தனி மந்திரம்

அரி, ஓம், லம், லம், சர்வம் வணங்கு, மாதங்கி, சிங், ஐ, மோகி மோகி, ஔவும் ஸ்ரீயும், நம நமா வென்று ஆயிரத்தெட்டு உரு செபிக்கவும்.

613 போத ஏடனை

கொற்றான், கொழுஞ்சி, வண்ணை, புன்னை, வெள்ளாமணக்கு, கருங்கண்ணி, செம்போத்தெச்சம், பிராயிறகு, நல்லதாமரைநூல், ஜாதிலிங்கம் இவைகளைச் சேர்த்து அரைத்து மந்திரமோத ஏடனையாகும்.

614 இராஜ ஏடனை

காக்கைப்பூண்டு, கருங்குன்றி, கொல்லைக்கம்பு, நாகத்தினூண், லிங்கம், அரிதாரம், கோட்டம் இவைகளைச் சேர்த்து மயானபூசை செய்ய இராச ஏடனையாகும்.

615 புருட ஏடனை

திருகுகள்ளி, வெள்ளைக்காக்கட்டான், செம்முள்ளி, தகரை, கொழுஞ்சி, ஆரை, கோஷ்டம், சுக்கு இவைகளைச் சேர்த்துச் செய்ய புருட ஏடனையாகும்.

616 ஸ்திரீ ஏடனை

சித்திரமூலம், ஆமணக்கு, கோஷ்டம், வாழைபூநீர், பாம்பு, தவளையூண் இவைகளால் ஸ்திரீ ஏடனையாகும்.

617 மிருக ஏடனை

பூனைக்காலி, செங்கத்தார், அறுகன்வேர், 'முத்தக்காசு, இருவரையொட்டி, 'காஞ்சொறி இவைகளில் நாயூண் கூட்டிச்செய்ய மிருகம் ஏடனையாகும்.

618 தேவ ஏடனை

கருப்புக்காக்கட்டான், திருகுகள்ளி, செங்கத்தாரி, வெள்ளைக் காக்கட்டான், குப்பைமேனி, திகைப்பூண்டு, தொட்டால்வாடி, பன்றி இரத்தம், நாரை ரத்தம், இதுகளைக் கலந்து அரைத்துக் கொண்டு தேவஏடனை செய்யவும்.

619 லோக ஏடனை

ஆடுதீண்டாப்பாளை, வடக்கு வேருடன் கள்ளி, கொத்தான், தும்பை பால், பன்றிநெய் இவைகளைக்கூட்டி லோக ஏடனைசெய்ய உத்தமம்.

620 சர்வ பூதப்பசாசு ஏடனை

கிலுகிலுப்பை ஆடுதீண்டாப்பாளை கீழ்க்காய்நெல்லி சிறுகீரை பொற்றலைக்கையான் பயித்தியம் பிடித்தவன் மண்டையோடுஞ் சேர்த்துச் செய்ய சர்வபூதபிசாசு ஏடனையாகும்.

621 சர்வபூத ஆக்ருஷ்ணம்

கற்ருழை பாதிரி முல்லை காக்கணம் கோழியவரை காக்கணங் குருவி செம்மைபவித்து உப்பு சுண்டை நாகப்பூச்சி இவைகளைச்சேர்த்துத்தீட்ட சர்வ ஆக்ருஷ்ணமாகும்.

622 இராஜ ஆக்ருஷ்ணம்

தலைச்சுருளி முள்ளி சத்திச்சாரணை ஆந்தைக்கண் நீர்மேல் நெருப்பு செம்பூலா இவைகளைப் புத்துத்தேனில் தீட்ட இராஜர்கள் ஆக்ருஷ்ணமாகும்.

623 புருஷ ஆக்ருஷ்ணம்

சிறுபுன்னை விஷ்ணுகாந்தி கொத்தான் குறுந்தொட்டி வசம்பு குன்றி மஞ்சள் காக்கைப்பூண்டு விலாமிச்சு வெட்டிவேர் இவைகள் வகைக்கு ஒருவிராகனெடை யெடுத்துத் திலர்தமிட புருஷ ஆக்ருஷ்ணமாகும்.

624 ஸ்திரி ஆக்ருஷ்ணம்

உள்ளொட்டி, புன்னை, கொன்றை, உப்பு, செம்போத்துவால், அரணைவால், பிருயெச்சம், நாகத்தின்சட்டை இவைகளை ஒன்ருய்க் கூட்டிச் செய்ய ஸ்திரீ ஆக்ருஷ்ணமாகும்.

625 மிருக ஆக்ருஷ்ணம்

நன்ஞரி, துடரி, மேனி, சிறுகீரை, கொன்றை, பொன்னுவாரை, முட்டை, கஸ்தூரிமஞ்சள், பிருயெச்சம், இவைகளை யொன்ருய்க்கூட்டிச்செய்ய மிருக ஆக்ருஷ்ணமாகும்.

626 தெய்வ ஆக்ருஷ்ணம்

குப்பைமேனி, சிறுபுன்னை, பொற்கொன்றை, சிவனுர்வேம்பு, சென்னுயுருவி, மருளூமத்தை இவைகளை முலைப்பாலிலரைத்திட தெய்வ மோகனமென்று செப்புவர்.

627 லோக ஆக்ருஷ்ணம்

தொட்டால்வாடி, வெள்ளெருக்கு, கலப்பைக்கிழங்கு, பால்குரண்டி, சிறுபுன்னை, ஐங்கோலம், பிருயிரகு, தூரச்சீலை இவைகளைச் சேர்த்துச்செய்ய சர்வலோக ஆக்ருஷ்ணமாகும்.

628 சர்வ பேதனம்

கோட்டான்முட்டை, மடிக்குருவி, செம்பருத்தி, வெண்கொழு ஞ்சி, செவ்வாலி, கோட்டம், துளசி, நெடுவாலம், தலையில்லாடி இவை களை ஒன்றாய்ச்சேர்த்துச்செய்ய ஒருவர்க்கொருவர் முறியுண்டாகி வில கிடுவர்.

629 இராஜ பேதனம்

கோழியவரை, காக்கைக்கூண்டு, தேள்முதுகெலும்பு, சீந்தில், தும்பை, முசுட்டை, காஞ்சிரை, பச்சோந்தி இவைகளைச்சேர்த்துச் செய்ய இராஜபேதனமாகும்.

630 புருட பேதனம்

ஆடுதின்னாப்பாளை, கௌதும்பை, நச்சுப்பல்லி, பெருந்தும்பை, பகையாளியின் வாய்ச்சோறு இவைகளை முலைப்பாலிலரைத்துச்செய்ய புருடபேதனமாகும்.

631 ஸ்ரீ பேதனம்

சீதாதேவி, செங்கழுநீர், வாழை குடியனைத்தான், பெருந்தும்பை, காந்தல், காக்கைக்கூண்டு, கழுதைச்சடை இவைகள் மாதர் மனத்தை முறித்தோட்டுமென்று சொல்லினர்.

632 மிருக பேதனம்

சங்கு, கருங்குன்றி, எட்டி, முசுட்டை, கழுகொம்பு, செம்போ த்து, கருங்காக்கைமண்டை, முசுருமுட்டை இவைகளைப் பதியலைத் தானிலாட்டிக் குளிகைசெய்துப் பிரயோகிக்க மிருகபேதனமாகும்.

633 தேவ பேதனம்

கழுதைக்குளம்பு, கழுதைசடை, கழுதைப்புட்டை, புலிக்கொழு ப்பு, பாதரி, மாவிலங்கு, பூதமடைத்தான், ஆடுதின்னாப்பாளை, வித்து சாக்குருவி இவைகளை ஆலம்பாலிலரைத்து உபயோகிக்க தெய்வ முத லியவைகளைப் பேதனஞ்செய்யும்.

634 அக்கினி பேதனம்

தாளி, செவ்வகத்தி, ஆலங்கொழுந்து, சுண்டை, வாழைக்கிழங்கு, துத்தி, சிறியாநங்கை, கற்றாழை, பச்சோந்தி, கொத்தான்விரை, குப் பைமேனி, சங்கு, ஓரிதழ்தாமரை இவைகளை யெல்லாம்சேர்த்து உப யோகிக்க அக்கினி பேதிக்கும்.

635 லோக பேதனம்

நச்செலி, நச்சுப்பல்லி, வேப்பமரக்காக்கைகூண்டு, பச்சோந்தி, இந்திரகோபம், சுண்டை, தும்பை, ஆவாரைப்பூச்சி, தூரச்சீலை இவைகளால் லோகத்தைப் பேதிக்கலாம்.

636 மாரணம்

மஞ்சள்கிழங்கில் பாவுசெய்து மாக்கொடிச்சுற்றி அதன்கூட இருமலமும் ஐங்காயமுஞ் சேர்த்துக் குழைத்துப் பூசி மயானத்தில் பலியுடன் மசி, நசி யென்றுப் பூசைசெய்து வைத்துவிட்டுவர எதிரி மரணமாவான்.

637 சர்வ மாரணம்

சிகப்புதும்பை, சிவந்தபூச்சி, ஏழு முள்ளு, காக்கைமுட்டை, கொத்தான், ஊமத்தை, செருப்படை, வெட்டிவேர் இவைகளை ஒன்றாய்ச் சேர்த்துச் செய்ய சர்வமாரணமுஞ் செய்யும்.

638 இராஜ மாரணம்

அரசு, புரசு, அருணி, பிணத்தின்பல் மண்டையோடு இவைகளைக் காலமறிந்து உபயோகிக்க இராஜமாரணமாகும்.

639 சத்துரு மாரணம்

நஞ்சு, புங்கு, ஐங்காயம், காகத்தின் தலையெலும்பு கொளுஞ்சி இவைகளை யெட்டிமுளையி லடித்துவைக்க சத்துரு மரணமாவான்.

640 பூத மாரணம்

நச்சுப்பல்லி, நாவிற்பசை, கழுதைக்குளம்பு, கழுதைவிழி, கடுகு, முருங்கைவிரை, கழுதைச்சடை, பன்றிபுட்டை, கருநாபி, கள்ளி, ஐங்காயம் இவைகளைச் சேர்த்துச் செய்ய பூதமாரணமாகும்.

641 ஜீவஜெந்துக்கள் மாரணம்

கொல்லுமூலி, கும்மட்டி, குழந்தைமலம், குழந்தைநகம், குழந்தைப்பல், கல்நெருக்கி, கடுகொட்டி, திகைப்பூடு, கருநாபி, சொல்மயக்கு பிணமயக்கு இவைகள் வகைக்கு விராகனெடையாகச் சேர்த்துச்செய்ய ஜீவஜெந்துக்களை மாரணஞ்செய்யும்.

642 தெய்வ மாரணம்

காரெள்ளெண்ணை, தலைமண்டை, காக்கையெச்சம், புறாயெச்சம், அரிதாரம், மயிர்மாணிக்கம், தேவாங்கு, பச்சோந்தி இவைகளைக்கலந்து செய்ய தெய்வங்களெல்லாம் மாரணமாகும்.

643 சர்வரிஷி மாரணம்

கொத்தான்விரை, ஐங்கோலம், புராப்பிச்சு, புராயெச்சம், கருங்குைக்குருவி, தெள்ளிமருட்டி, பகல்மருட்டி, குழந்தையெச்சம் காஇரத்தம் இவைகளை அரைத்துத் திலர்தமிட்டால் சர்வரிஷிகளும் மாரணமாவார்கள்.

644 பூத மை

தேற்றான்விரை, கௌதும்பை, குப்பைக்கீரைவித்து, கரிசலாங்கண்ணி, மஞ்சள், காக்கைக்கண் இவைகளையெல்லா மரைத்துத் திலதமிட பூதகணங்களினுடைய கூட்டமெல்லாந் தோன்றும்.

645 பாதாள மை

மஞ்சள், சாதிக்காய், துளசிவிரை, தும்பை, பொற்றலைக்கையான், பசுங்கண், தேற்றான்விரை இவைகளை ஆமணக்கெண்ணெயில் மைசெய்து தீட்டிப்பார்க்க பாதாளத்திலுள்ள நதிகளெல்லாம் கண்ணுக்குத் தோன்றும்.

646 துலைதூரம் பார்க்கும் மை

ஈசலிறகு, சிறுகீரை, ஆடுதீண்டாப்பாளை, காக்கைநெஞ்சு, காக்கைப்பிச்சு, குரங்குபஞ்சுமண்டை, செம்போத்து இவைகளை யெல்லாம் நெய்யினால் மைசெய்து தீட்டிப்பார்க்க துலைதூரத்திலுள்ள பொருள்கள் தோன்றும்.

647 நீர் மை

கோசம், பச்சோந்திப்பிச்சு, பச்சோந்திக்கண் கீழாநெல்லி நரியொட்டி, கையாந்தகரை இதுகளைத் தேன்கூட்டி அரைத்துப்பார்க்க நீரில் உள்ள சகலமுந்தோன்றும்.

648 குறிசொல்லும் மை

கூகைக்கண், கூகைப்பிச்சு, கூகைத்திரட்சி, தக்காளி, புன்னை, வானைவேர், பொற்றலைக்கையான், தக்காட்டின்வேர், நாகனழைத்தான் வேர், தும்பை, இவைகளை நெய்யில்கூட்டி அரைத்துத் திலர்தமிட்டுக் குறிசொல்ல யாதொரு தடையுமில்லை.

649 சர்வவித மை

பூனைவணங்கி, கிலுகிலுப்பை, ஓரிலைத்தாமரை, கீழ்க்காய்நெல்லி, மானைக்கட்டி, ஆடுதீண்டாப்பாளை, நீலிதும்பை, நீர்விலக்கி துங்கன், கௌதும்பை இதுகளைச் சேர்த்து மைசெய்துப்பார்க்க சகலமுந் தோன்றும்.

650 போது மை

ஆள்காட்டிக்குருவியின் முட்டையைக் கொண்டுவந்து ஓர் புதிய சட்டியில் குழப்பித்தடவி விட்டு கற்பூரம்புகைப்பிடித்து வழித்து டப்பியில் வைத்துக்கொண்டு அஞ்சன தேவியையும் ஆஞ்சநேயரையும் போற்றித் திட்டிப்பார்க்கத் தெரியும்.

651 பறவை மை

வேர்ப்பலாக்கொட்டையைக் கருக்கிப் புத்துத்தேனில் அரைத்துத் திலர்தமிட்டுப்பார்க்க பறவையஞ்சனமாகும்.

652 மோகனங்களுக்குப் போது மூலமந்திரம்

ஆரே, ஆரே, அரி, அரி, மோகாய், மோகாய், மோகினி, ஊங், ஊங், ல, ல, ல என்று நூற்றுயெட்டுதரம் செபிக்கச் சித்தியாகும்.

653 தம்பனங்களுக்குப் போது மூலமந்திரம்

நிங், வங், சிங், லங், மங், மங், லங், வங், லங், யங், லங், தம்பாயா, தம்பாயா, அரே, அரே, நிர்சிய, நிர்சிய, நீலகண்டரூபி, சரணம்ரூபி, ஆதியானந்தி, ஆத்தாள், தம்பனபாராயணி, ஐயுங், கிலியும், சுவஹா வென்று லட்சமுரு செபிக்கச் சித்தியாகும்.

654 உச்சாடனங்களுக்குப் போது மூலமந்திரம்

ஆம், ஓம், குரோங், அரங், அரங், ரா, ரா, சீக்கிர, சீக்கிர, உச்சாடாய, ஆதிபைரவி, தூளி, தூளி, தூக்கு, தூக்கு, அருணி, அருணி, ஆங்காராட்சி, அகோரரூபி, சுவஹாவென்று ஆயிரத்தெட்டுரு செபிக்கச் சித்தியாகும்.

655 ஏடணைகளுக்குப் போது மூலமந்திரம்

ஓம் காட்டேரி, சாமுண்டி ஆத்தாள், காமரூபி, அங், அங், நாரி, நாரி, எந்து, எந்து, வகையா, எகையா, அவடே, அவடே, ர, ர, ரர, சிங், சிங், சிங், வங், வங் சுவஹா என்று செபிக்கச் சித்தியாம்.

656 ஆக்ருஷ்ணங்களுக்குப் போது மூலமந்திரம்

மாகாளி, வைரவி, முக்கண்ணி, ஆக்ருஷ்ணதூளி, ஆனந்தவல்லி, நீலி, பகவதி, ஜெய, ஜெய, வெசயா, வெசயா, ஆக்ருஷ்ணயா, ரங், ரூங், கிலிங், லிங், கிமடி, கிருடி, யீம், யீம், லா, லா, லங், நங், பாரா பாரா, ரா, ரா, சுசீ, சுசீ சுவாஹா வென்று ஆயிரத்தெட்டுரு செபிக்க சித்தியாகும்.

657 பேதனங்களுக்குப் போது மூலமந்திரம்

அரகர, வயநம, திரிபுரதகனி, தேவி, காரணி, செந்தாமரையே ஆத்தாள், ஏறிட்ட பார்வையாளே, நீலி, முக்கண்ணி, பாங், டாங், குங், டுங், சரூபி, சக்ரூபி, ஆபி, பிரத்தியங்கிரே, ஜெய, ஜெய, பேதையா, பேதையா, சிங், சிங், யங், யங், லங், லங், மங், மங், யா, யா சுவஹாவென ஆயிரத்தெட்டு உருசெபிக்க சித்தியாகும்.

658 சர்வ மாரணங்களுக்கும் போது மூலமந்திரம்

மாரி, பகவதி, அம்பாள், திரிசூலி, டாகினி, டாகினி, சாடு, சாடு, அய்யா, அய்யா, சர்வமாரணி, ஆபி, சீ, போ, தேவி யென்று ஆயிரத்தெட்டுருசெபிக்க சித்தியாகும்.

659 முருங்கக்காயில் புழுநெளியும் வித்தை

தேரின முருங்கக்காய்க்கு கல்சுண்ணும்பை கனக்கப்பூசி வெய்யலில் வைக்க சூடேரியபின் புழுவைப்போல் அதிலிருந்து வெளியே கிளம்பும்.

எக்கலாதேவி மந்திரம்

ஏங்கிலியுங்காளிகாளி யெக்கலாதேவி ரா ரா
ஆங்குரோம்சௌவும் அம் ரா ரா ரா ராவென்று
பாங்குறுசத்திரெண்டும் பதிப்பதுகிழக்குத்தானே
நீங்கவேநிலேக்குமென்று நிலேபெறச்சொல்கின்ருரே. 660

ஆயிடாகினியுஞ்சுத்தி ஆறியேயாறியாறி
மாயுமாகாளிதல்லி மல்லம்மாள் ரா ரா ரா ரா
சாயினிலாங்கிலாங்கி ஜாலக்காள் ரா ரா ரா ரா
வேயதோர்சத்திரண்டும் விளம்பியதெற்கதாமே. 661

உம்ஆங்காரிஓங்காரி வீரம்மாள் ரா ரா ரா ரா
ஓம் ஹ்ரீ நீலகாளி ஆயிலக்க ரா ரா ரா ரா
சிம்உரைசத்திரெண்டும் இருப்பதுமேற்கதென்றும்
மும்மறைசல்யனை முனிவனும்மொழிந்தவாரே. 662

வாருநீசத்திதாயி மகமாயிபுட்டியம்மாள்
நீருநீலிநீலிநீலம்மா ரா ரா ரா ரா
சூரியசத்திரெண்டுங் குறிப்பதுவடக்கதாகும்
சீரியமுகமாயம்மா நின்றனன்சக்காதேவி. 663

தேவியின்னுருவைத்தொட்டு ஜெபிப்பதுதன்னேக்கேடாய்
யேவியமந்திரங்கள் இருபத்தெண்ணுயிரத்தில்
ஓவியதொட்டியப்பெண்போ லுருவெளியாய்த்தோன்றும்
ஆவியாஞ்சயவேருக் கவள்ளெனவுரைக்கலாமே. 664

மேத்திசையிருந்துநோக்கி ஜெபிப்பதுச்சாடனங்கள்
வாத்திடும்வடக்குத்தானே வந்திடும்பேதனங்கள்
தோத்தியகிழக்குமோகம் வசியமாஞ்சொல்லலாகும்
ஏத்தியதிசையாங்தெற்கில் இயம்பெட்டாங்கர்மமென்றே. 665

கன்னிமாமூலைதானே கருதுமேடனையதாகும்
மன்னியவாய்வுமூலை வந்தவர்கருணையாகும்
சொன்னதோரீசான்யத்தில் சொல்வதுசகலகர்மம்
என்னவேமுன்னோர்தாமு மியம்பினாரின் னூல்தானே. 666

தானெனச்சுழித்துவாங்கித் தனித்துனல்சுழியுமிட்டு
ஆனதோர்வட்டமிட்டு அப்புரஞ்சூலமிட்டு
ஊனெனவெழுத்துமிட்டு ஒழிவதுசக்கரங்கள்
மேனெனுஞ்சக்காதேவி மந்திரமெழுதினாரே. 667

ஆரேறுங்கர்மந்தன்னில் ஆயிரங்கர்மமாகும்
ஆரொருரண்டுசத்தி அவளொடுசகியேயாகும்
ஆரொருகருக்கள்மூன்றும் அவளுக்குவுடலதாகும்
ஆரொருசல்யமூலம் அவளுக்குவயிரதாமே. 668

ஆக்கிளமந்திரங்கள் ஆதரித்துருவேயானல்
வாக்கினல்மனத்தினாலும் மருளருமொழியினாலும்
நோக்கினல்நோக்கும்போது நொடியினில்கர்மஞ்செய்யில்
வாக்கினல்மனத்தினாலும் மதித்தவர்பெருமைபெற்றார். 669

பெற்றவோங்காரமுன்னே வைக்கில்பேதனமாஞ்சொன்னேன்
மற்றதுமோகமாகும் மருவுஐங்காரஞ்சேரில்
சொற்றதுகர்மமாகுந் தொகுத்தவுகாரஞ்சேரில்
கற்றதுயெல்லாமிந்தக் கருத்தினாலாடிநிற்கும். 670

நின்றிடுநகாரஞ்சொல்ல நிலைக்குமுச்சாடனங்கள்
வென்றிடுஞ்சிகாரஞ்சேரில் விளைந்தஆக்ருஷ்ணமாகும்
ஒன்றினிலிகாரஞ்சொல்ல ஒத்தாடுமெட்டாங்கர்மம்
மன்றினில்செய்துபார்த்து வகையதாய்த்தெரிந்துக்கொள்ளே. 671

வண்ணமாங்கோலப்புள்ளி சித்தாடைமருங்கில்சாத்தி
எண்ணெயுந்தலையுமாக இந்தனக்குச்சிமோந்தி
வெண்ணிறத்தந்தம்கொண்டு மெய்யெல்லாம்வேர்வையாக
கண்ணதுசிவப்பதாகக் கைதனில்வளையடக்கே. 672

அடுக்கியசிவந்தபாசி மாலையாபரணமாக
இடுக்கியதூசுமாக ஏமனுமொழியுமாக
கொடுக்கியகொடுக்குமாகா கோனெருநொண்டியாக
வெடுக்கெனநடையுமாக மேல்முகம்பார்வையாமே. 673

674 வேறு வசியம்

(தூம்) என்ற மந்திரத்தை வெள்ளிக்கிழமை நடுமத்தியானத்தில் சொல்லி யிடதுகால் மண்ணையெடுத்து மயானங்கொண்டுபோய் மஞ் சள்பாவைசெய்து மேற்படி மந்திரத்தை 100-உரு செபிக்கச் சித்தி யாம்.

675 வேறு மோகனம்

உடன்கட்டை யேறினவர்களுடைய கருவில் இடதுகால் மண் ணைச்சேர்த்து (தூம்) என்று 1008-உரு செபிக்கச் சித்தியாம்.

676 நயனங்கெடுக்கும் ஜாலம்

அன்னியர் வாய்ச்சோற்றில் மின்மினிப்புழுவைச் சேர்த்தரைத்து அவர்கள்வீட்டு விளக்கில் கடுகளவுபோட்டு வைத்துவிட்டால் கண் கெட்டுவிடும். ஆனால் இது மிகவும் பாபமானது.

677 நயனங்கெட்டுவிட்டால் நிவர்த்தி

புளியங்தேனில் மிளகிட்டு அரைத்து அஞ்சனம்போட எப்போ தும்போலாகும்.

678 மோரைக் குழம்பாக்கும் ஜாலம்

படித்தயிரை ஒரு குடம்மோராக ஜலம்விட்டுக் கலக்கி அதில் கொத்தானைப்போட்டுக் கரைத்துப் பிழிந்தெடுத்துவிட மோர் திக்காக இருக்கும். சாப்பிடலாம்.

679 தீபம் பலுக்காத ஜாலம்

தீபம்வைத்து குறிபார்த்து சொல்லுமிடத்தில், சுடலைப் பானை யோட்டில் சிறிய துண்டை விளக்கின்கீழ் வைத்துவிட தீபம் கட்டி விடும்.

680 புகைக்கூண்டு வித்தை

கோழிமுட்டைக்காகிதத்தில் இரண்டரையடி உயரமும், இரண் டரையடி வட்டமுமுள்ளதாக காற்று வெளியே போகாதபடி ஒட்டி வாய்ப்புரத்தில் மூங்கில் பத்தையை வட்டமாகக்கட்டி அதில் தந்திக் கம்பியை நடுவில்கட்டி பந்தஞ்சுற்றி ஸ்பிரிட்டால் நனைத்து கொளுத்தி பூமியில் கவித்து புகைநிறைந்தபின் மேலேதூக்கி விட்டுவிட ஆகாயத் தில்பறக்கும். இது பார்ப்பவர்களுக்கு வெகு ஆச்சரியமாக யிருக்கும்.

681 தாள்குத்தும் வித்தை

திருப்பதிக்கு தாள் குத்துவதுபோல் நடிக்க வேண்டுமானால், ஒரு தாடையில்காது குத்துவதுபோல குழி சடைபோட்டு துவாரம்வளர்த்

துக்கொண்ட பின்னர் வெள்ளியால் தாள்செய்து மாட்டிக்கொண்டு நடிக்க.

682 முட்டைகளைப் பரிக்ஷிக்கும் வித்தை

முட்டைகளை நல்லது கெட்டதென்று சோதிக்க வேண்டுமானால் ஜலத்தில் கொஞ்சம் உப்பைக் கரைத்துவிட்டு முட்டையை அதில் போட்டால் நல்லமுட்டை அமிழ்ந்து கெட்டமுட்டை மேல்கிளம்பும்.

683 ருசிமாறும் வித்தை

ஒருவன் கண்ணைக்கட்டிவிட்டு நாக்கைநீட்டி கடித்துக் கொள்ளச் சொல்லி, ஏதாமொரு பழத்தை நாவின்மேல் வைத்து எடுத்துவிட, இன்னபழத்தின் ருசி யென்று சொல்லமாட்டான்.

684 தோல்பந்து ஆகாயத்தில் பறக்கும் வித்தை

ஆட்டின் மூத்திரப்பையை கொண்டுவந்து அதை வாயினால் ஊதி, அதில் சிறிது பாதரசமும் ஊசிநீரும் விட்டு காற்றுப்போகாமல் கட்டி வெயிலில் வைக்க ஆகாயத்தில் எழும்பி பறந்துபோகும்.

685 பாக்குமரம் மாரணவித்தை

பாக்குமரத்தின் குருத்தில் ஒரு கடுக்காயை சொருகிக் கொஞ்சம் ஜலம்விட்டு வைத்தால் சிலநாளையில் மரம் பட்டுப்போகும் ஆனால் இது பாதகத்தொழில்.

686 சுரைவிரையில் கத்தரிமுளைக்கும் வித்தை

சுரைவிரையைத் தண்ணீரிலூறப்போட்டு உள்ளிருப்பதை யெடுத்துவிட்டு கத்தரிவிதையைத்துருத்துப் பிசினியால் ஒட்டவைத்து நட்டுவிட கத்தரிச்செடி முளைக்கும்.

687 பீப்பாய் வேடிக்கும் ஜாலம்

ஒரு பீப்பாய்நிறைய ஜலம்நிரப்பி கார்க்கிட்டுப் பின்பு அரை அங்குல துவாரமிட்டு ஒரு அடி நீளகுழாயொன்றைச் சொருகி ஜலம் விட்டுக்கொண்டேயிருக்க வெடித்துவிடும்.

688 கற்பூரம் செய்யும் வித்தை

10-படி வாழைக்கிழங்கு தண்ணீரில் 40-பலம் வெடியுப்பைப் பொடிசெய்து செப்புப்பாண்டத்தில்போட்டு, அடுப்பிலிட்டுக் காய்ச்ச குழம்புபோல்வரும். அதுசமயம் கருவாப்பட்டையையிடித்துத் தைலங் காய்ச்சி கூடவிட்டு புட்டைப்போல் வருஞ்சமயம் இறக்கி வைத்துக் கொள்ளவும். பிறகு மற்றொரு செம்புப்பாத்திரத்தில் கொஞ்சம் ஜலம்

விட்டு வாய்கட்டி அதன்மேல் மேற்படி புட்டைக்கொஞ்சம் வெட்டி வைத்து அதின்பேரில் வேறொருசட்டி மூடி கமலாக்கினியாக யெரித்தால் கற்பூரமானது கட்டிநிற்கும். (அதாவது பதங்கஞ்செய்கிற முறையைப்போல் செய்யவும்)

689 பச்சைக்கற்பூரம் செய்யும் வித்தை

கற்பூரம் பலம்-1, சீனக்காரம், பூநீர், சாம்பிராணி, மதியுப்பு தாழையுப்பு இவைகள் வகைக்குப் பலம் கால், கோரைக்கிழங்கு, கஸ்தூரிமஞ்சள், ஏலக்காய், வீரம், சந்தனம், கிளியூரல்பட்டை, பச்சிலைக்கிச்சிலிக்கிழங்கு இதுகள் வகைக்கு விராகனெடை-1, சேர்த்து எல்லாவற்றையுங் கல்வத்திலிட்டு காராவின் நெய்யில் 8-சாமம் மெழுகுபோலரைத்துப் பீங்கானில்போட்டு, மேல் பீங்கானுக்குப் புனுகுபூசி, அகல சட்டியில் மணல்கொட்டி சரக்கிருக்கும் பீங்கானைவைத்து அதின்மேல் புனுகுபூசிய பீங்கானைமூடி கமலாக்கினியாக ஒரு சாமமெரித்தால் பச்சைக்கற்பூரம் பதங்கம்போல் மேற்பீங்கானில் ஏறி நிற்கும்.

690 கையில் பந்தமேந்தும் ஜாலம்

கற்றாழைச்சோற்றை பில்லைபில்லையாயறுத்து உள்ளங்கையில் வைத்துக்கொண்டு மேலே துணியைமூடி பந்தங்கொளுத்திவைத்து ஏற்றினால் பிரகாசமாயெரியும் கையுஞ்சுடாது துணியுமெரியாது.

691 நெருப்பில்லாமல் கற்பூரங்கொளுத்தும் ஜாலம்

கடுகளவு தீமுறுகல் பாஷாணத்தைக் கற்பூரக்கட்டியுடன்வைத்து சபையிலெல்லோருக்குங்காட்டி இதை என் தேவதைக்கு அர்ப்பணமாகக் கொளுத்துகிறேன். பாருங்களென்று சொல்லி வாயினலூத திக்கென்றெரியும் இதைக்கண்டவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

692 தண்ணீருடன் குடத்தையும் தின்னும் ஜாலம்

சிறுபூளைவேரையும், குப்பைமேனி வேரையும் காப்புக்கட்டிக் கொண்டுவந்து மென்று வாயில் அடக்கிக்கொண்டால் குடந்தண்ணீரையுங் குடித்துவிட்டு தோண்டியையுந் தின்றுவிடலாம்.

693 பாலை உதிரமாக்கும் ஜாலம்

புல்லில் தம்பலப் பூச்சியைக் கலந்து பசுவிற்குக் கொடுத்தால் அதைத்தின்றவுடன் பால் இரத்தமாகக் கறக்கும். யாவரும் ஆச்சரியப் படுவார்கள்.

694 இதற்கு நிவர்த்தி ஜாலம்

சுக்குத்தூளை ஜலத்துடன் கலந்து குடிப்பாட்ட எப்போதும் போல் வெண்மையாகக் கறக்கும்.

695 பிராந்திபுட்டி வேடிக்கும் வித்தை

ஒரு பிராந்திபுட்டியைத் திறந்து சிறிதளவு கடுகைப்போட்டு கார்க்கைப் பிகிந்துவைக்க சற்று நேரத்தில் புட்டி வெடித்துவிடும்.

696 நரித்தோலில் தீப்பறக்கும்வித்தை

ஒரு நரித்தோலைக் கையிலெடுத்து தலைமுதல் வாலுவரை அரக்கித் தேய்த்து வாலுபக்கம் உருவிவிட தீப்பொரிபறக்கும்.

697 சபையோர்க்கு புஷ்பச்செண்டு அளிக்கும் வித்தை

கறுப்புத் துணியினால் கை, கால் முதலிய அங்கங்களை பொம்மையைப்போல் செய்து கால் வழியாக துவாரம்விட்டு ஸ்பாக்கிங்கைத்து மூடிவிடவும். அதினுள் புஷ்பங்களை இரண்டுகால்வழியாக வயர்வரையில் துருத்து மூடி சபையில் கொண்டுவந்துஒ எட்சணி! புஷ்பச்செண்டுகளைக் கொடுவென்று துப்பட்டியால் மறைத்து உள்ளிருப்பதை யெடுத்துக்கொடுத்து பின்பு பொம்மையை எடுத்து வெளியில் போடவும்.

698 பாலைக்கட்டும் ஜாலம்

எவ்வித பாலையேனும் பாத்திரத்தில் வைத்து, குட்டிப்பிலாபால், அல்லது இலை இதுகளைப்போட்டு மூடிவிட்டு சற்றுநேரம் சென்றெடுக்க அல்வா மாதிரி கட்டியிருக்கும்.

699 விரோதியைக் கெடுக்கும் ஜாலம்

தம்பலம் வேண்டுமான அளவெடுத்து, வல்லூரின் நஞ்சைச் சேர்த்து அரைத்து பாவைசெய்து கிராணத்தில் லாடயிரும்பால்செய்த ஆணியால் கீல்களில்குத்தி மாடனுக்கு வெள்ளைச்சாவல் பலிகொடுத்து வேப்பெண்ணெயில் விளக்கேற்றிவைத்து மயானத்தில் மசி நசி என்று 1008-உருசெபித்து சிலைப்புகைகாட்ட அவன் நிலைகெட்டு தவிப்பான்.

700 பிரிவு ஜாலம்

மாட்டுணிரத்தமும், அட்டைரத்தமும் சேர்த்து அறுசுவையில் தாக்கப் பெண் புருடனைவிட்டு விலகி விடுவாள்.

701 வேறு பேதனம்

செப்புத்தகட்டில் சிகாரம்வரைந்து அதனுடன் பேரையுமெழுதி முப்பூவில் ஐங்கோலஞ்சேர்த்துத்தடவி பலிகொடுத்து (நசிமசி) யென்றுச் செபிக்க ஊரைவிட்டு ஓட்டிவிடும்.

702 நிவர்த்தி

ஷெ வேலை மிகவும் பாதகமாதலால் மறுபடியும் தகட்டைக் கழுவி தூபங்கொடுக்க நிவர்த்தியாம்.

தேரிசிங்கி செய்யும் வித்தை

கும்மியடிப்பெண்கள்கும்மியடி-உங்கள்
கூந்தலசைந்தாடக்கும்மியடி
இம்மையில்தெரிசிங்கியானுமியம்பிட
எல்லோருஞ்சேர்ந்து அடியுங்கடி. 703

முன்னோர்கள்சொன்னமுறையதனை-யிந்த
மூதுலகோர்களுந்தானறிய
இன்னாளில்சொல்லிடுஞ்சண்முகன்பாதத்தை
யேத்திகும்மியடியுங்கடி. 704

பாலாந்தில்லையுங் கள்ளியுங்கூடவே
பகர்ந்ததிருகுக்கள்ளியுடன்
மாலாஞ்சேங்கொட்டைத்தைலமதனை
மன்னவனேசேர்த்துசெய்திடக்கேள் 705

கேளுஞ்சரியிடைதான்சேர்த்து-அதில்
கெட்டியாய்க்கௌரிகருநாபி
மாளவேநீர்மேல்நெருப்புச்சாறிட்டுமே
மாறுசெவிநெஞ்சுதான்சேர்த்து 706

சேர்த்திடமுப்பூவாநஞ்சுடனே
தீட்டுவாய்த்தேளின்சுணைதனையும்
பார்த்திடசெந்தொட்டிதொட்டிதிராவகம்
பாங்குடன்சேர்த்துயரைத்திடுநீ 707

அரைக்கின்றபோதுநட்டுவக்காளியை
அட்டியில்லாமலேவிட்டாட்டி
உரைக்கும்பாத்திரஞ்செப்பாம்டப்பியில்
வுத்தமனேபத்திரப்படுத்தி 708

படுத்திட்டப்பிறகுபாங்குடன்காளியை
பணிந்தபிற்பாடுசெய்வதைக்கேள்
அடுத்திட்டப்பகையாளியானவனுக்கு
அப்பவேயெடுத்துத்தாக்கிடுநீ 709

தாக்கிட்டவுடன்சகிக்கமாட்டாமலே
சத்ராதிதானும்படும்பாடு
ஆக்கைதனில்சொறிசிரங்குமாகியே
அழியாதகுட்டமும்வந்துவிடும் 710

விட்டபிறகுநேத்திரங்கள்ரெண்டும்
வீணாகக்கெட்டுஅழுகிவிடும்
மட்டுப்படாததோர்சீழுஞ்சிலைத்தண்ணி
மாறாதுவீழ்ந்துநொந்திடுவான். 711

நொந்துவிழுந்துயலறிடுவானவன்
நேரானதெய்வத்தைநொந்திடுவான்
தொந்திரவுபட்டுமுடியாமலிவனும்
துக்கித்தழுவான்சதாகாலம் 712

சதாகாலம்பெருங்குட்டந்தனிலிவன்
சார்ந்திடுந்தடிப்புத்தனுடனே
நிதமுமிம்சைகள்தன்னைப்பொறுக்காது
நிஷ்டூரமாகவேவைதிடுவான் 713

வைதிட்டப்பிறகுன்னைப்பணிந்திட்டால்
வாயவனுக்குச்செய்யும்வகை
ஐதீகமாகயரைந்துவருகிறேன்
அய்யனேகேட்டுச்செய்திடுநீ 714

செய்யவேமலைத்தாங்கிவேருடனே
தீர்க்கமுள்ளவிடத்தோலிவேரும்
பையவேகொண்டுபலகாலுமீய்ந்திட
பார்தனில்பிழைத்துவந்திடுவான். 715

வந்திடுவானென்றுவாகுடன்நீயும்
வாலாயமாகச்செய்துவந்தால்
நொந்திடுமுலகோர்சாபம்விலக்குவே
நூறாண்டுசென்றாலுமுடியாதப்பா. 716

முடியாதென்றுமுன்னோர்களெல்லாம்
மொழிந்திட்டவார்த்தையுந்தப்பாது
துடியாதுநீயுஞ்சுழுத்தியில்மனதைச்
சுருக்கியிருக்கவேதேடிடுவாய். 717

தேடிடுபெரியோர்களின்பாதத்தைத்
தினந்தினமுந்தப்பாது
வாடியேயலையாமலிந்நூலையும்
வகுத்தனர்வகுத்தபடியுரைக்க 718

உரைக்கக்கற்றவர்தங்களின்பாதத்தை
உறுதியாய்த்தினமுநினைந்து
திரைக்கடலுலகில்திரிந்திடும்ஜாலத்தைச்
சுருதிவழிப்படியானுரைத்தேன். 719

உரைத்ததில்குற்றமிருந்தாலும்நீங்கள்
உள்ளபடியேபொறுப்பீரென்று
பறையரை யாதுபாடிவிட்டேன் நானும்
பாவலர்க்கெல்லாஞ் சரணமையா. 720

721 வீடேல்லாம் குரங்காகும் ஜாலம்

இறந்துபோன ஓர் குரங்கைக்கொண்டுவந்து அதின் அபான வாயின்மூலமாய் முத்துக்கொட்டையை வேண்டுமானவரை துணித்து புதைத்துவிடவும். அது சிலநாளைக்குள் முளைத்துக் காய்காய்க்கும். அந்தக் கொட்டையை எடுத்து எண்ணெயாடி விளக்கேற்ற வீடெல்லாம் குரங்குவிளையாடும்.

722 மர அன்னம் விளையாடும் ஜாலம்

நூக்கமரத்தினால் அன்னமொன்று செய்து அதற்குப் பலவித வர்னங்கள் கொடுத்து தலையில் தெரியாமல் ஏழூசிபிடிக்குங் காந்தத்தைப்பொருத்தி வைத்துக்கொண்டு ஜாலமாடும்போது சபையில் ஓர் மரத்தொட்டில் ஜலம்விட்டு அதில் ஷை அன்னத்தைவிட்டு இரும்புப் பிடிபோட்ட மாத்திரைக்கோலை நெற்றிக்கு நேராகக்காட்டி உன்னிஷ்டம்போல் திரும்ப அதுவும் ஜலத்தில் விளையாடுகிறமாதிரி கோலுடன் திரியும் பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

723 நாய் கடிக்காதிருக்கும் ஜாலம்

எருக்கிலை, நாயுருவியிலையும், கொழுந்தும் ஒன்றாக அரைத்து கடிக்கவரும் நாய் முகத்திலெரிந்தால் அது அதை முகர்ந்தவுடன் பிரமைகொண்டு அசையாமல் நின்றுவிடும். இது மிகவும் பாதகமான தொழில்.

724 கிணற்றில்முழுகி நாமமிடும் ஜாலம்

நாமத்திற்குப்பதில் கொடிக்கள்ளிப்பாலை திரேகத்தில் பூசிக்கொண்டு, ஸ்ரீசூர்ணத்திற்குப்பதில் பிர்மதண்டிப்பாலையிட்டுக்கொண்டு காய்ந்தபிறகு கிணறு குளம் முதலியவைகளில் முழுகினால் பட்டை பட்டையாய் நாமமிட்டதைப்போலிருக்கும். ஆச்சரியப்படுவர்.

725 பூனையை எலிவேல்லும் ஜாலம்

வீட்டில் வாழும்படியான எலியைப்பிடித்துத் திரேகமாதியந்தமும் எருக்கன்பாலும், குப்பைமேனிச் சாறும்பூசி பூனை எதிரில்விட்டால் பூனையானது மயங்கிவிடும்.

726 சகல விஷமும் நீங்கும் ஜாலம்

எட்டிமரத்தைத் துளைசெய்து அதில் சொட்டையில்லாத பழம் புளியைத் துருத்தி ஷெடி எட்டிமரத்தினுல் தமர்போட்டு 40-நாள் சென்றெடுத்து, பிறகு எட்டிமரத்திஞல் பாணைசெய்து அதில் ஷெடி புளியை வைத்துக்கொண்டு, (நல்ல சர்ப்பம்-சாரை) இதுகள் நீங்கலாக மற்ற சில்லரை விஷங்களுக்கெல்லாம் குண்டுமணிப் பிரமாணங் கொடுக்க விஷம் பறக்கும் கைகண்டது.

727 வழக்கு வெல்லும் வித்தை

நெருஞ்சிவேர் மயில்ரோசனை இவைகளைச் சமயெடையெடுத்துக் கணேசனெதிரில் வைத்துப் பூசைசெய்துப் பிறகு வீட்டுக் குலதேவதையையும் பூசித்து வணங்கி வாயிலிட்டுக்கொண்டு எதிரிமுகம்நோக்கிச்செல்ல எதிரியானவன் வணங்கிவருவான்.

728 விஷமிரங்கும் ஜாலம்

பாம்புகடித்து விஷமேறினவர்களின் உச்சந்தலையில் மூன்றுகீறல் கீறி தக்காளிச்சாறுபிழிந்து உள்ளங்கையினுல் சூடெழத்தேய்க்க விஷமிறங்கும்.

729 இதுவுமது

கீழ்க்காய்நெல்லி, மேனி இதுகளைத் தேய்த்தாலும் விஷமிறங்கும். தெளிந்தவுடன் கோதுமைக்கஞ்சி கொடுக்கவும்.

730 இதுவுமது

சிறியாநங்கைக்கு ஆதிவாரத்தில் காப்புக்கட்டி மறு ஆதிவாரத்தில் எடுத்து நிழலிலுலர்த்தித் தூள்செய்து வைத்துக்கொண்டு உள்ளுக்குக்கொடுத்தால் வெகு சீக்கிரத்தில் விஷமிறங்கும்.

731 பூமியில் வெடிகிளம்பும் ஜாலம்

இரும்புத்தூளில் கெந்தகபொடியைச் சேர்த்துக்கலந்து பூமியில் புதைத்துவிட்டால் சூரியவெப்பம் ஏறினவுடன் புதைபாணம்போல் கிளம்பும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

732 அஞ்சனம் பார்க்கும் ஜாலம்

காரெள்ளெண்ணெய், தூக்கணாங்குருவி முட்டை, கழுதைத் தண்டு, வெட்டுண்டவன் மண்டையோடு இதுகள் வகைக்குச் சமயெடையெடுத்து செருப்படைச்சார், மேனிச்சார் இவைகள் வகைக்குப்படி 1-ம், கன்னிக்கோழி முட்டையும், ஏழிஞ்சில் தைலமும்

நாய்கடியாதவன் கையழுக்குச் சேர்த்துக் காய்ச்சி மைகூட்டி அஞ்சனுதேவியைத் துதித்துப் பார்க்கப் புதையல்களெல்லாந் தோன்றும்.

733 வாள் அறுபடும் ஜாலம்

சங்கஞ்செடிக்குக் கிராணத்தில் காப்புகட்டி அதன்வேரை யரும லெடுத்து மந்திரத்துடன் சுடலையை மூன்றுசுற்று சுற்றிவந்து யிரண்டாகவெட்டி குளிசஞ்செய்து கட்டிக்கொண்டு எதிரிகளுடைய வாள் கத்தி முதலியவைகளைவெட்ட இரண்டுதுண்டாக விழும்.

734 பூட்டுத் தெரிக்கும் ஜாலம்

கள்ளிக்காக்கைகூண்டை தன்னுடையபக்ஷி அரசாயிருக்கும்போது எடுத்துவந்து ஓடுகின்ற ஜலத்தில்விட்டால் எது எதிர்த்தோடுகின்றதோ அம்மூலியை யெடுத்து பூட்டின்பேரில்வைக்க பூட்டு உடைந்து விடும்.

735 வீரியவிர்த்தி ஜாலம்

பாலில் முருங்கைவித்தைப்போட்டுக் காய்ச்சிக்குடிக்க யானைப்பல முண்டாகும்.

736 மாரண ஜாலம்

வெட்டுப்பட்டவன் சிரசை நாய்முகராதமுன் கொண்டுவந்து வேப்பெண்ணெயில் ஐங்கோலம்பூசிக் கலக்கி எட்டிமுளைக்குத் தடவி அவன் பேரை ஓலையில்யெழுதி வாயில்போட்டு அவ்வெழுத்தின்மேல் மேற்படி முளையைக்குத்த மாரணஞ்செய்யும்.

737 இதற்கு நிவர்த்தி

எதிரிவணங்கி வருவானுகில் அதையெல்லா மெடுத்துக் கழுவிவிட சுகமாகும்.

738 வேறு மாரணம்

கத்திரிக்காயின்மேல் மாக்கொடிசுற்றி ஐங்காயம்பூசிக் கருவைத் தடவி பேரைச்செபித்தால் அவனுக்குப் பிளவைகண்டு துளைகள் விழுந்து அவஸ்தைப்படுவான்.

739 இதற்கு நிவர்த்தி

ஷெியான் வணங்கி வருவானுகில் அதைக் குளிர்ந்தநீரில் கழுவி சுத்தஞ்செய்யச் சுகமாகும்.

740 ஐங்கோலத்தைலம் செய்யும் முறை

ஐந்தாந்திங்களில் கருவழிந்த ஆண்பிண்டத்தைக் கண்டெடுத்து பதனமாகக் கொண்டுவந்து, கல்லுரலிலிட்டு இருப்புலக்கையால் சிதைத்து புதியபாண்டத்திலிட்டு ஆல், அரசு, அத்தி, முருக்கு, நாயுருவி, தர்ப்பை,எட்டி, முதலிய சமித்துகளால் எரித்து குழித்தயிலமாகயிறக்கி அதில் பூனீர், பூரம், வீரம், புனுகு, ஜவ்வாது, கொச்சிமஞ்சள், பச்சைக்கற்பூரம், ஆலாத்திப்பூரம் இதுகள் வகைக்கு முக்கழஞ்சி சேர்த்து மத்தித்துச் சத்திபூசை செய்து யானைத் தந்தச்சிமிளில் பதனஞ் செய்துக்கொண்டு இதில் சொல்லியிருக்கும் வேலைகளுக்கு உபயோகப் படுத்திக் கொள்ளவும்.

741 இதுவுமது

மேற்படி ஐங்கோலம் வடித்தக்கடுகைப் பீங்கானில் வழித்துவைத்து கொச்சிமஞ்சள், கோரோசனம் இவைகள் வகைக்கு நாற்கழஞ்சு சேர்த்து பன்னீர்விட்டு கல்வத்திலாட்டி மைபோலரைத்து மயானத்தில் புதைத்து மயானபூசைசெய்து வைத்திருந்து பிறகு வேண்டும்போது மேற்படி மையை அட்டமாசித்துகளுக்கு உபயோகித்துக் கொள்ளவும்.

742 பூசனிக்காயைவெட்ட யானைத்தலையாகும் ஜாலம்

கல்யாணப் பூசனிக்காயை சபையில் கொண்டுவந்து மாயாசத்தி மையைப் பட்டாவில் தடவி வெட்ட யானைத்தலையாகத்தோன்றும்.

743 வாழைத்தண்டைவெட்ட ரிஷபத்தலையாகும் ஜாலம்

மாயாசத்திமையை விரலில்தொட்டு தண்டில் பூசி பட்டாவில் வெட்ட ரிஷபத்தலையாகத் தோன்றும்.

744 மண்ணையள்ளிப்போட பட்டணமாகும் ஜாலம்

மாயாசத்தி மையை விரலில் தொட்டுக்கொண்டு மண்ணையள்ளி குபேரதிக்கில் போட்டால் பட்டணமாகும்.

745 கருங்கல் நடக்கும் ஜாலம்

மாயாசத்தி மையை கருங்கல்லின்மேல் தடவி சீக்கிரம் நடந்து வாவென்று சொன்னால் நகர்ந்துவரும்.

746 பட்டாகத்தி சண்டை ஜாலம்

ஐங்கோலத்தையும்; மாயாசத்தி மையையும் விரலில் தொட்டு பட்டாக்களில் தடவி ஆகாயத்தில் விட்டெரிய விநோதமாய் சண்டை செய்யும். பார்ப்பவர்களுக்கு ஆச்சரியமாயிருக்கும்.

747 பாணுத்தடி சுழலும் ஜாலம்

மேற்படி மையுடன் ஐங்கோலத்தையும்சேர்த்து பாணுத்தடிகளில் தடவி விட்டுவிட சுழன்றுக்கொண்டே யிருக்கும்.

748 கள்ளிக்காக்கைகளாகும் ஜாலம்

அடப்பமரத்தின் இலைகளில் மாயாசத்தி மையைத்தடவி கீழே போட கள்ளிக்காக்கைகளாக மேயும்.

749 நூலேணி ஏறும் ஜாலம்

வலிக்கயற்றில் மாயாசத்தி மையைப்பூசி ஆகாயத்தில் விட்டெறிந்து விட்டு மறப்புமையைத் திலர்தமிட்டுக்கொண்டு பூமியில்நடக்க ஏணியில் ஏறுவதைப்போ லிருக்கும்.

750 தீவட்டி சண்டை ஜாலம்

கருச்சீலையை தீவட்டியாகக்கட்டி ஐங்கோலத்தில் நனைத்துக் கொளுத்தி ஆகாயத்தில் விட்டெறிய 1000-ம் தீவட்டிகள் சண்டை செய்வதாகப் பார்ப்பவர்களுக்குத் தோன்றும்.

751 சகல ஜாலமாடுதேற்கும் மாயாசத்தி மை செய்யும் விதம்

ஏரழிஞ்சிமூலமும், சுணங்கன்மூலி சமூலமும் நிழலிலுலர்த்தி மண்பாண்டத்திலிட்டு அதில் மரவெட்டை சமன்கூட்டி குழித்தயிலம் இறக்கி கல்கார்க்குச் சீசாவில் பதனஞ்செய்துக்கொண்டு மேற்படி தயிலத்தில் மயிர்முளைச்சான்கட்டை, சூதம், புழுகு, பூரம், கஸ்தூரி, தேவாங்கின்கண், கரும்பூனைக்கண், சுழல்வண்டு, குழியானைக்கண், இதுகள் வகைக்கு காற்கழஞ்சுகூட்டி மைபோலாட்டி பரணியில்வைத்து தூபதீபம் கொடுத்துப் பின்பு சத்திபூஜை பலக்கச்செய்து வைத்துக்கொண்டு சகல வித்தைகளுமாடச் சித்தியாம்.

752 மறைப்பு மை

சிருத்தைவிரையை இரண்டாய்ப் பிளந்து பீங்கானிலிட்டு ரவியில் வைத்துவர தயிலம் வடியும். மேற்படி தயிலத்தில் ஏரழிஞ்சி சமூலம் கருக்கிக்கூட்டி மைபோலாட்டி பரணியில் வைத்து வயிரவரைத் தியானித்துத் திலர்தமிட தன்னை ஒருவரும் காணார்; திலர்தத்தை அழிக்கக் காணப்படுவாய்.

753 காக்கைகளாகும் ஜாலம்

பூவரசனிலையைப் பரித்து ஐங்கோலமும், மாயாசத்தி மையும் பூசிப்போட காக்கைகளாகத் தோன்றும்.

754 கழுகாகும் ஜாலம்

மந்தாரை இலைகளைப்பரித்து மேற்படி மையைப் பூசிப்போட கழுகாகத்தோன்றும்.

755 நாரையாகும் ஜாலம்

கொக்குமந்தாரை இலையைப்பரித்து மேற்படி மையைத் தடவிப் போட நாரைகளாகமேயும்.

756 பருந்தாகும் ஜாலம்

கல் தேக்கிலைகளைப்பரித்து மேற்படி மையைத் தடவிப்போடப் பருந்துகளாகும்.

757 மைனாவாகும் ஜாலம்

நுணாயிலையைப் பரித்து மேற்படி மையைத் தடவிப்போட மைனாவாகும்.

758 கிளியாகும் ஜாலம்

முள்ளிலவன் இலையைப்பரித்து மேற்படிமையைத் தடவிப்போட கிளிகளாகும்.

759 தேனீயாகும் ஜாலம்

குண்டுமணியிலையை உருவி மேற்படி மையைப் பூசிப்போடத் தேனீக்களாகும்.

760 கருவண்டாகும் ஜாலம்

புளியன் இலையை உருவி மேற்படி மையைப் பூசிப்போட கருவண்டுகளாகும்.

761 நட்வோக்களியாகும் ஜாலம்

வேப்பிலையை உருவி மேற்படி மையைத் தடவிப்போட நட்டுவாக்களியாகும்.

762 குளவியாகும் ஜாலம்

கழற்சி இலையைப்பரித்து மேற்படி மையைத் தடவிப்போட குளவிகளாகும்.

763 தும்பியாகும் ஜாலம்

ஆவாரம் தழையை உருவி மேற்படி மையைத் தடவிப்போட தும்பியாகும்.

764 மண்ணுளிப்பாம்பாகும் ஜாலம்

ஈச்சன் ஓலையில் மேற்படி மையைத் தடவிப்போட பாம்பாகும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

765 பச்சைப்பாம்பாகும் ஜாலம்

தென்னம் ஓலையைக்கிழித்து மேற்படி மையைத் தடவிப்போட பச்சைப்பாம்பாகும்.

766 சாரைப்பாம்பாகும் ஜாலம்

பனையோலையில் மேற்படி மையைத் தடவிப்போட சாரைப்பாம் புகளாகும்.

767 தலையில்லாக்குருவியாகும் ஜாலம்

நொச்சி இலையைப்பரித்து மேற்படி மையைத் தடவிப்போட தலையில்லாக் குருவியாகும்.

768 கருங்குருவியாகும் ஜாலம்

கருநொச்சியிலையைப் பரித்து மேற்படி மையைத்தடவிப்போடக் கருங்குருவியாகும்.

769 கருடனுகும் ஜாலம்

ஆலனிலையைப்பரித்து மேற்படி மையைத்தடவிப்போட கருடனு கும்.

770 சிட்டுக்குருவியாகும் ஜாலம்

கல்லாலன் இலையைப்பரித்து மேற்படி மையைத்தடவிப்போடச் சிட்டுக்குருவியாகும்.

771 ராம்ஞத்தியாகும் ஜாலம்

அரசன் இலையைப்பரித்து மேற்படி மையைத்தடவிப்போட ராம் ஞத்திகளாகத்தோன்றும்.

772 மணிப்புருவாகும் ஜாலம்

அத்தியிலையைப்பரித்து மேற்படி மையைத்தடவிப்போட மணிப் புருக்களாகத்தோன்றும்.

773 பச்சைப்புருவாகும் ஜாலம்

புன்னை இலையைப்பரித்து மேற்படி மையைத்தடவிப்போட பச்சைப் புருக்களாகத்தோன்றும்.

774 மீன்குத்தியாகும் ஜாலம்

எருக்கிலையைப்பரித்து மேற்படி மையைத்தடவிப்போட மீன் குத்திகளாகத் தோன்றும்.

775 குயில் பக்ஷிகளாகும் ஜாலம்

புரசன் இலையைப்பரித்து மேற்படி மையைத்தடவிப்போட குயில் களாகத்தோன்றும்.

776 தவிட்டுக்குருவிகளாகும் ஜாலம்

புங்கன் இலையைப்பரித்து மேற்படி மையைத்தடவிப்போட தவி ட்டுக்குருவிகளாகும்.

777 கவுதாரிகளாகும் ஜாலம்

பலாயிலையைப்பரித்து மேற்படி மையைத்தடவிப்போட கவுதாரி களாகும்.

778 காடையாகும் ஜாலம்

கோங்கிலவன் இலையைப்பரித்து மேற்படி மையைத்தடவிப்போட காடைகளாகத் தோன்றும்.

779 மயிலாகும் ஜாலம்

பலாயிலையைப்பரித்து மேற்படிமையைத்தடவிப்போட மயிலா கும்.

780 தீக்கோழியாகும் ஜாலம்

வெட்பாலையிலையைப்பரித்து மேற்படி மையைத்தடவிப்போட தீக்கோழிகளாகும்.

781 கானுங்கோழியாகும் ஜாலம்

பேயத்தியிலையைப்பரித்து மேற்படி மையைத்தடவிப்போட கானுங்கோழிகளாகும்.

782 காட்டுக்கோழியாகும் ஜாலம்

ஏரழிஞ்சி யிலையைப்பரித்து மேற்படி மையைத்தடவிப்போடக் காட்டுக்கோழிகளாகும்.

783 நீர்க்கோழியாகும் ஜாலம்

பாவட்டன் இலையைப்பரித்து மேற்படி மையைத்தடவிப்போட நீர்க்கோழிகளாகும்.

784 நாமப்பக்ஷியாகும் ஜாலம்

மாவிலையைப்பரித்து மேற்படி மையைத்தடவிப்போட நாமப் பக்ஷிகளாகும்.

785 வான்கோழியாகும் ஜாலம்

வாழையிலையைப்பரித்து மேற்படி மையைத்தடவிப்போட வான் கோழிகளாகும்.

786 கருங்கோழியாகும் ஜாலம்

சுண்டக்கா இலையைப்பரித்து மேற்படி மையைத்தடவிப்போடக் கருங்கோழிகளாகும்.

787 விச்சுளியாகும் ஜாலம்

முள்ளிலவன் இலையைப்பரித்து மேற்படி மையைத்தடவிப்போட விச்சுளிகளாகும்.

788 தூக்கணாங்குருவியாகும் ஜாலம்

சீத்தாயிலையைப்பரித்து மேற்படி மையைத்தடவிபோட தூக்க ணாங்குருவிகளாகும்.

789 பஞ்சுவெட்டானகும் ஜாலம்

எலுமிச்சன் இலையைப்பரித்து மேற்படி மையைத்தடவிப்போட பஞ்சுவெட்டானகும்.

790 இராஜாளியாகும் ஜாலம்

பாலமரத்து இலையைப்பரித்து மேற்படிமையைத்தடவிப்போட இராஜாளிகளாகும்.

791 புல் புல் குருவிகளாகும் ஜாலம்

மல்லிகை இலையைப்பரித்து ஷெ மையைத்தடவிப்போட புல்புல் குருவிகளாகும்.

792 தவிட்டுகுருவிகளாகும் ஜாலம்

பூனைக்காலி இலையைப்பரித்து மேற்படி மையைத் தடவிப்போட தவிட்டுக்குருவிகளாகத் தோன்றும்.

793 அண்டங்காக்கையாகும் ஜாலம்

காட்டுத்தமர்த்தன் இலையைப்பரித்து மேற்படி மையைத் தடவிப் போட அண்டங்காக்கைகளாகும்.

794 நல்லபாம்பாகும் ஜாலம்

தாளிப்பனையோலையில் மேற்படி மையைத் தடவிப்போட நல்ல சர்ப்பமாகும்.

795 ஓணாகும் வித்தை

இலைக்கள்ளி இலையில் மேற்படி மையைத் தடவிப்போட ஓணாகும்.

796 அணிப்பிள்ளையாகும் வித்தை

அலரியிலையைப்பரித்து மேற்படி மையைத்தடவிப்போட அணிப்பிள்ளைகளாகத் தோன்றும்.

797 கீரிப்பிள்ளையின் தோல் கீரிப்பிள்ளையாகும் வித்தை

கீரிப்பிள்ளையின்தோலை சபையில்காட்டி இந்தத்தோலை கீரிப்பிள்ளையாக்குகின்றேன் பாருங்களென்று மாயாசத்திமையைத் தந்திரமாகத் தடவிப்போட உயிருடனுள்ள கீரிப்பிள்ளையாகவே பார்ப்பவர் கண்களுக்குத் தோன்றும். ஆனல் இவ்வேலைகளுக்கெல்லாம் மூன்றே முக்கால் நாழிகை வரையில்தான் வலுவிருக்கும் அதன்பிறகு ஒன்றுமிருக்காது.

798 நரித்தோல் நரியாகும் வித்தை

நரித்தோலில் மேற்படி மையைத்தடவிப்போட நரியாகும். பார்ப்போர் ஆச்சரியப்படுவார்கள்.

799 நாயாகும் வித்தை

நாய்த்தோலில் மேற்படி மையைத்தடவிப்போட நாயாகும். பார்ப்பவரை பிர்மிக்கச்செய்யும்.

800 குரங்காகும் வித்தை

குரங்குத்தோலில் மேற்படி மையைத் தடவிப்போட குரங்காகும்.

801 மானகும் வித்தை

மான்தோலில் மேற்படி மையைத்தடவிப்போட மானகும். பார்ப்பவர்கள் சந்தோஷப்படுவார்கள்.

802 சிறுத்தைத்தோல் சிறுத்தையாகும் வித்தை

சிறுத்தைத்தோலில் மேற்படி மையைத்தடவிப்போட சிறுத்தையாகும்.

803 புலியாகும் வித்தை

புலித்தோலில் மேற்படி மையைத்தடவிப்போடப் புலியாகும். பார்ப்பவரை பிர்மிக்கச்செய்யும்.

804 கரடியாகும் வித்தை

கரடித்தோலில் மேற்படி மையைத்தடவிப்போட கரடியாகும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

805 வேங்கையாகும் வித்தை

வேங்கைத்தோலில் மேற்படி மையைத்தடவிப்போட வேங்கை யாகத்தோன்றும்.

806 சிவிங்கியாகும் வித்தை

சிவிங்கித்தோலில் மேற்படி மையைத் தடவிப்போட சிவிங்கி யாகும்.

807 முள்ளம்பன்றியாகும் வித்தை

முள்ளம்பன்றித்தோலில் மேற்படி மையைத்தடவிப்போட முள் ளம்பன்றியாகும்.

808 காட்டுப்பன்றியாகும் வித்தை

காட்டுப்பன்றித்தோலில் மேற்படி மையைத்தடவிப்போட காட் டுப்பன்றியாகும்.

809 முயலாகும் வித்தை

மரக்கட்டையில் முயல்போல்செய்து வர்னங்கொடுத்து மேற்படி மையும், மறைப்புமையும் தொட்டுத் தடவிப்போட முயலைப்போலக் காணப்படும்.

810 பூனையாகும் வித்தை

மேற்சொன்னவிதமாகச் செய்துக்காண்பிக்க பூனையாகும். பார்ப் போர் ஆச்சரியப்படுவார்கள்.

811 குளிநரியாகும் வித்தை

குளிநரித்தோலில் மேற்படி மையைத்தடவிப்போட குளிநரி யாகும்.

812 பழுதையை மலைப்பாம்பாக்கும் வித்தை

நீளமான பழுதை ஒன்றையெடுத்து மேற்படி மையைத்தடவிப் போட மலைப்பாம்பாகும்.

813 கழுதையாகும் வித்தை

ஒரு கழுதையைப்பிடித்து அதின்மேல் மறைப்புமையைத் தட விச் சபைக்குக் கொண்டுவந்து மையைத் துடைத்துவிட கழுதை தெரியும்.

814 கையிலிருக்கும் இரும்புகுண்டு மாயமாய்ப் போகும் வித்தை

ஒரு இரும்புக்குண்டைக் கையிலெடுத்து இந்தக் குண்டு மாய மாய்ப்போகுது பாருங்களென்று மறைப்பு மையைத்தடவிக் கீழே போட மாயமாகும்.

815 கையிலிருக்கும் பட்டாக்கத்தி மாயமாகும் வித்தை

பட்டாக்கத்தியில் மறைப்பு மையைத்தடவிப்போட மறைந்து போகும்.

816 கையிலிருக்கும் பாணுத்தடி மாயமாகும் வித்தை

பாணுத்தடியில் மறைப்புமையைத்தடவிப்போட மாயமாகும். பார்ப்பவர்கள் மனதை பிரமிக்கச்செய்யும்.

817 கையிலிருக்கும் உலக்கை மாயமாய்ப்போகும் வித்தை

உலக்கையில் மறைப்புமையைத் தடவிப்போட மாயமாகும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

818 கையிலிருக்குந் தேங்காய் மாயமாகும் வித்தை

தேங்காயின்மேல் மறைப்புமையைத் தடவிப்போட மாயமாகும். பார்ப்பவர்கள் மனதை பிரமிக்கச்செய்யும்.

819 கையிலிருக்கும் எலுமிச்சம்பழம் மாயமாகும் வித்தை

எலுமிச்சம் பழத்தின்மேல் மேற்படி மையைத் தடவிப்போட மாயமாகும்.

820 கையிலிருக்கும் ரூபாய் மாயமாகும் வித்தை

ரூபாயின்மேல் மேற்படி மையைத் தடவிப்போட மாயமாகும். பார்ப்பவர்கள் மனதை பிரமிக்கச்செய்யும்.

821 கையிலிருக்கும் கண்ணுடிப்புட்டி மாயமாகும் வித்தை

கண்ணுடிப் புட்டியின்மேல் மையைத் தடவிப்போட மாயமாகும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

822 கேச்சக்காய் மாயமாகும் வித்தை

கெச்சக்காயின்மேல் மேற்படி மையைத் தடவிப்போட மாயமாகும்.

823 கைக்கேடியாரம் மாயமாகும் வித்தை

கைக்கெடியாரத்தின்மேல் மேற்படி மையைத்தடவ மாயமாய்ப் போகும்.

824 மோதிரம் மாயமாகும் வித்தை

மோதிரத்தின் மேல் மேற்படி மையைத் தடவிப்போட மாயமாகும்.

825 பன்னீர்சோம்பு மாயமாகும் வித்தை

பன்னீர் சொம்பின்மேல் மேற்படி மையைத்தடவ மாயமாகும். பார்ப்பவர்கள் மனதை பிரமிக்கச்செய்யும்.

826 தாம்பாளம் மாயமாகும் வித்தை

தாம்பாளத்தின்மேல் மேற்படி மையைத் தடவிப்போட மாயமாகும்.

827 வில்லு மாயமாய்ப்போகும் வித்தை

மேற்படி மையை வில்லின்மேல்தடவ மாயமாய்ப்போகும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

828 சந்தனக்கிண்ணம் மாயமாகும் வித்தை

மேற்படி மையை சந்தனக்கிண்ணத்தின்மேல் தடவ மாயமாகும். பார்ப்பவர்கள் மனதை பிரமிக்கச்செய்யும்.

829 கோட்டாப்புளி மாயமாகும் வித்தை

மேற்படி மையை கொட்டாப்புளிமேல் தடவ மாயமாகும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

830 புஷ்பச்சேண்டு மாயமாகும் வித்தை

மேற்படி மையை புஷ்பச்செண்டின்மேல் தடவ மாயமாகும். பார்பவர்கள் மனதை பிரமிக்கச்செய்யும்.

831 கட்டப்பாரை மாயமாகும் வித்தை

மேற்படி மையை கட்டப்பாரையின்மேல் தடவ மாயமாகும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

832 கத்தி மாயமாகும் வித்தை

மேற்படி மையை பேனுக்கத்தியின் மேல்தடவ கத்தி மாயமாகும்.

833 நூலுருண்டை மாயமாகும் வித்தை

மேற்படி மையை நூலுருண்டைமேல் தடவ மாயமாகும். ஆச்சரியப்படுவார்கள்.

834 குடை மாயமாகும் வித்தை

மேற்படி மையை குடையின்மேல் தடவ குடை மாயமாகும். பார்ப்பவர்கள் மனதை பிரமிக்கச்செய்யும்

835 கோட்டைப்பாக்கு மாயமாகும் வித்தை

மேற்படி மையை கொட்டைப்பாக்கில் தடவ பாக்கு மாயமாகும்.

836 உடுக்கை மாயமாகும் வித்தை

மேற்படி மையை உடுக்கையின்மேல் தடவ மாயமாகும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

837 புள்ளாங்குழல் மாயமாகும் வித்தை

மேற்படி மையை புள்ளாங்குழல்மேல் தடவ மாயமாகும். பார்ப்பவர்கள் மனதை பிரமிக்கச்செய்யும்.

838 கடாரங்காய் மாயமாகும் வித்தை

மேற்படி மையை கடாரங்காயின்மேல் தடவ மாயமாகும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

839 குட்டிச்சாத்தான் மாயமாகும் வித்தை

மேற்படி மையை குட்டிச்சாத்தி பொம்மையின்மேல் தடவிப் போட மாயமாகப்போகும்.

840 வாசிக்கும் டோல் மாயமாகும் வித்தை

மேற்படி மையை வாசித்துக்கொண்டிருக்கும் டோலின்மேல்தடவ டோல் மாயமாகப்போகும்.

841 பலகரை மாயமாகும் வித்தை

மேற்படி மையை பலகரைமேல் தடவ பலகரை மாயமாகும். பார்ப்பவர்கள் மனதை பிரமிக்கச்செய்யும்.

842 சங்கு மாயமாகும் வித்தை

மேற்படி மையை ஊதிக்கொண்டிருக்கும் சங்குமேல்தடவ சங்கு மாயமாகும்.

843 கொம்பு மாயமாகும் வித்தை

மேற்படி மையை சபையில் ஒலிக்கும் கொம்புமேல்தடவ கொம்பு மாயமாகும்.

844 ஓலைச்சுவடி மாயமாகும் வித்தை

மேற்படி மையை ஓலைச்சுவடிமேல்தடவ சுவடி மாயமாகும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

845 காதிலிருக்கும் குண்டலம் மாயமாகும் வித்தை

மேற்படி மையை காதிலிருக்கும் குண்டலத்தின்மேல் தடவ குண்டலம் மாயமாகும்.

846 பாதக்குரடு மாயமாகும் வித்தை

மேற்படி மையை பாதக்குரட்டின்மேல் தடவ பாதக்குரடு மாயமாய் போகும்.

847 துணிகள் மாயமாகும் வித்தை

மேற்படி மையை துணிகள்மேல் தடவ துணிகள் மாயமாகும். பார்ப்பவர்கள் மனதை பிரமிக்கச்செய்யும்.

848 பேய்க்கூட்ட மழைப்பிக்கும் வித்தை

மாயாசத்திமையும், திசைமயக்குப் பொடியும், ஐங்கோலக்கடுகும் சமனாகக்கூட்டிச் சிமிளில் வைத்துக்கொண்டு சபையில் மண்ணையள்ளி நாலு திக்குகளிலும் தூற்ற பேய்க்கூட்டங்களெல்லாம் கூத்தாடும்.

849 திசைமயக்குப்பொடி செய்யும் முறை

மருளூமத்தன்காயும், பேயத்திக்காயும், பேய்ப்புடலன் விரையும், பேய்ப்பீர்க்கன் விரையும், பேய்மிரட்டிவேரும், பேய்த்துமட்டிவேரும், காடாற்றுமுன்னெடுத்த எலும்பும், மயானச்சாம்பலும், பயித்தியம்பிடித்து இறந்தவனைச்சுட்ட பல்லும், தேவாங்கின் மண்டையோட்டுப் பொடியும், கூட்டிப்பொடித்து ஐங்கோலத் தைலமுஞ் சேர்த்து சிமிளில் வைத்துக்கொண்டு ஜாலமாடும் சபையில் கொஞ்சந் தூவிவிட சபையைமயக்கி கண்ணைக்கட்டிவிடும்.

850 தீவட்டிகளை அழைப்பிக்கும் வித்தை

ஒரு தீவட்டியைக் கொளுத்தி சபையில் வைத்துவிட்டு மேற்படி மையைத் தொட்டு மண்ணையள்ளித் தூவ தீவட்டிகளாகத்தெரியும்.

851 ஜனக்கூட்டம் காட்டும் ஜாலம்

சபையில் மேற்படி மையைத்தொட்டு மண்ணையள்ளித் திக்குகளில்போட பலகோடி ஜனங்கள் தோன்றும்.

852 ஆனைக்கூட்டம் காட்டும் ஜாலம்

மேற்படி மையைத்தொட்டு மண்ணையள்ளித் தூற்ற ஆனைக்கூட்டங்கள் தோன்றும்.

853 அஸ்வக்கூட்டங்கள் மாயமாகும் வித்தை

மேற்படி மையைத் தொட்டு மண்ணை யள்ளிப்போட அஸ்வக்கூட்டங்கள் தோன்றும்.

854 ரிஷபங்களாகத் தோன்றும் வித்தை

மேற்படி மையைத்தொட்டு மண்ணையள்ளித் தூற்ற பார்ப்ப வர் கண்களுக்கு ரிஷபங்களாகவே தோன்றும்.

855 மான்கூட்டங்கள் தோன்றும் வித்தை

மேற்படி மையைத்தொட்டுத் திசைகளில் போட பார்ப்பவர் களுக்கு மான்கூட்டங்கள் தோன்றும்.

856 ஆடுகள் தோன்றும் வித்தை

மேற்படி மையைத்தொட்டு மண்ணை யள்ளி திசையில்தூற்ற ஆடுகளாகத் தோன்றும்.

857 நாய்கள் தோன்றும் வித்தை

மேற்படி மையைத்தொட்டு மண்ணையள்ளி வாயுதிக்கில்போட செந்நாய்களாகத் தோன்றும்.

858 வானரங்கள் தோன்றும் வித்தை

மேற்படி மையைத் தொட்டு மண்ணள்ளி தெற்கு முகமாக வீச வானரங்களாகத் தோன்றும்.

859 ஒட்டைகள் தோன்றும் வித்தை

மேற்படி மையைத் தொட்டு மண்ணள்ளி வடக்குமுகமாகத் தூற்ற ஒட்டைகளாகத் தோன்றும்.

860 மலைகள் குன்றுகள் தோன்றும் வித்தை

மேற்படி மையைத்தொட்டு மண்ணள்ளி ஆகாயத்தில்போட் டால் மலைகளும், குன்றுகளும் தோன்றும்.

861 பனைதோப்புகள் காணும் வித்தை

மேற்படி மையைத்தொட்டு மண்ணள்ளிப்போட பனைத் தோப்புகளாகக் காணப்படும்.

862 புலிகள் தோன்றும் வித்தை

மேற்படி மையைத் தொட்டு மண்ணள்ளித்தூவ புலிகளாகத் தோன்றும்.

863 சிங்கங்கள் தெரியும் வித்தை

மேற்படி மையைத்தொட்டு மண்ணள்ளித்தூவ சிங்கங்களாகத் தெரியும்.

864 யாளிகள் தோன்றும் வித்தை

மேற்படி மையைத்தொட்டு மண்ணள்ளித் தூவ யாளிகளாகத் தோன்றும்.

865 கரடிகள் தோன்றும் வித்தை

மேற்படி மையைத் தொட்டு மண்ணள்ளித்தூவ கரடிகளாகத் தோன்றும்.

866 கோனுய்கள் தோன்றும் வித்தை

மேற்படி மையைத்தொட்டு மண்ணையள்ளி இந்திரன்திக்கில் தூவ கோனுய்களாகத் தோற்றும்.

867 பூதங்கள் தோன்றும் வித்தை

மேற்படி மையைத்தொட்டு மண்ணையள்ளி எமன்திக்கில்வீச பூதங்களாகத் தோற்றும்.

868 மலைப்பாம்புகள் தோன்றும் வித்தை

மேற்படி மையைத்தொட்டு வைக்கோலில் பூசிப்போட மலைப் பாம்பாகத் தோற்றும்.

869 காளிரூபம் தோன்றும் வித்தை

மேற்படி மையைத் தொட்டு மண்ணையள்ளித் தூற்ற காளி ரூபமாகத் தோற்றும்.

870 பாதாளம் தோன்றும் வித்தை

மேற்படி மையைத் தொட்டு மண்ணையள்ளி பூமியில்போட பாதாளமாகத் தோற்றும்.

871 பட்டணம் பற்றிஎரியும் வித்தை

மேற்படி மையைத் தொட்டு மண்ணையள்ளிவீச பட்டணம் பற்றி எரியும்.

872 காடு தோன்றும் வித்தை

மேற்படி மையைத் தொட்டு மண்ணைத்தூவ காடாகத்தோற்றும்.

873 காடேல்லாம் பட்டணமாகும் வித்தை

மேற்படி மையைத்தொட்டு மண்ணையள்ளிவீச காடெல்லாம் பட்டணமாகும்.

874 ஆற்றில் வெள்ளம்வரும் வித்தை

மேற்படி மையைத்தொட்டு மணலையள்ளி ஆற்றில்போட வெள்ளம் வரும்.

875 தேர் நடக்கும் வித்தை

மேற்படி மையைத் தேரின்மேல் தடவிவிட தேர் நடந்து வரும்.

876 மாதர்கள் நடனம்செய்யும் வித்தை

மேற்படி மையைத்தொட்டு வருணன்திக்கில் தெளிக்க மாதர்கள் நடிப்பார்கள்.

877 வாத்தியம் முழங்கும் வித்தை

மேற்படி மையைத்தொட்டு ஆகாயத்தில் தெளிக்க வாத்தியம் முழங்கும்.

878 எருமைக்கூட்டங்கள் தோன்றும் வித்தை

மேற்படி மையைத்தொட்டு கிழக்குதிக்கில் தெளிக்க எருமைக் கூட்டமாகத் தோற்றும்.

879 தடாகமாகும் வித்தை

மேற்படி மையைத்தொட்டு மைதானத்தில் தூவ தடாகமாகும்.

880 ஏரியாகும் வித்தை

மேற்படி மையைத்தொட்டு மைதானத்தில் தெளிக்க ஏரியாகத் தோற்றும்.

881 நரிகள் தோன்றும் வித்தை

மேற்படி மையைத்தொட்டு மண்ணையள்ளி வீச நரிகள் தோன்றும்.

882 கிளைமான்கூட்டங்கள் தோன்றும் வித்தை

மேற்படி மையைத்தொட்டு மண்ணையள்ளி வீச கிளைமான் கூட்டங்கள் தோன்றும்.

883 வரிக்குதிரை தோன்றும் வித்தை

மேற்படி மையைத்தொட்டு மண்ணள்ளிவீச வரிக்குதிரையாகத் தோன்றும்.

884 நாய்களாகும் வித்தை

நாய் இறந்துபோனதா யிருந்தாலும்சரி அல்லது உயிருடனிருந்தாலும் சரி ஓர் பெண் நாயை அஸ்தநக்ஷத்திரத்தில் பிடித்துவந்து அதின் அபானவாய் வழியாக எவ்வளவு நுழைகிறதோ அவ்வளவு இலுப்பைக்கொட்டையைத் துருத்து, பூமியில் சதுரத்திற்குச்சதுரம்

ஒரு அடி ஆழக் குழிவெட்டி அதில் மேற்படி நாயைப்போட்டு மூடி விடவும். அது சிலநாளைக்கெல்லாம் மக்கி எருவாகிவிடும். அதுசமயம் நாம் திருத்த கொட்டையானது செடிமுளைத்து வரும். அந்தசெடியைப் பத்திரமாகக் காப்பாற்றிவந்து அதில் காய்க்கும்படியானகாயை எடுத்து எண்ணெய் ஆடி அதில் ஐங்கோலத்தைலத்தையுஞ்சேர்த்து வைத்துக் கொண்டு இரவில் தமாஷாக வீட்டில் விளக்கேற்றினால் அவ்வெளிச்சம் எவ்வளவுதூரந் தெரிகிறதோ அவ்வளவுக்கும் பார்ப்பவர்கண்களுக்கு அநேக நாய்கள் உலாவுகின்றமாதிரி தோன்றும்.

885 பூனைகளாகும் வித்தை

முந்திரிக்கொட்டையை மேற்படி மாதிரி பூசநக்ஷத்திரத்தில் பூனைக்குச்செய்து விளக்கேற்றினால் வீடெல்லாம் பூனைகளாகத் திரியும்.

886 முள்ளம்பன்றிகளாகும் வித்தை

கொட்டை முந்திரிகையை மேற்படி மாதிரி ரோகணிநக்ஷத்திரத்தில் முள்ளம்பன்றிக்குச் செலுத்தி விளக்கேற்றினால் வீடெல்லாம் முள்ளம்பன்றிகளாகத் திரியும்.

887 ஆடாகும் வித்தை

கேட்டை நக்ஷத்திரதினம் ஆட்டுக்கு முத்துக்கொட்டையை மேற்படி மாதிரிசெய்து விளக்கேற்ற வீடெல்லாம் ஆடாகும்.

888 கோழிகளாகும் வித்தை

மேற்படிமாதிரி கோழிக்கு விசாக நக்ஷத்திரத்தில் எள்ளைப் போட்டுச்செய்தால் இரவில் வீடெல்லாம் கோழிகள் மேயுகிறதைப் பார்ப்பவர்கள் ரொம்பவும் உன்னை மெச்சி மகா வேலைக்காரனென்று சொல்லுவார்கள்.

889 சிட்டுக்குருவிகளாகும் வித்தை

சுத்தமான எள்ளைச் சிட்டுக்குருவியின் அபானவாயினால் உள்ளுக்குச்செலுத்தி புதைத்துவிட்டால் அது சில நாளைக்குள் செடியாக முளைத்து வளர்ந்துக் காய்காய்க்கும். அப்போது அதிலிருக்கும் எள்ளையெடுத்து அஸ்தநக்ஷத்திரத்தில் எண்ணெயாடி மேற்படி விதமாக தீபமேற்றினால் வீடெல்லாம் சிட்டுக்குருவிகளாகத்தோன்றும்.

890 மைனுக்களாகும் வித்தை

எட்டிக்கொட்டையை பூசநக்ஷத்திரத்தில் மேற்படி மாதிரி செய்து ஐங்கோலத்தைலமுஞ்சேர்ந்து விளக்கேற்ற வீடெல்லாம் மைனுக்களாகத்தோன்றும்.

891 காடைகளாகும் வித்தை

சாதிக்காயை மகநக்ஷத்திரத்தில் காடைக்குச்செலுத்தி மேற்படி மாதிரிசெய்து விளக்கேற்ற காடைகளாகத்தோன்றும்.

892 கவுதாரிகளாகும் வித்தை

குடியோட்டிவிரையை உத்திரத்தில் கௌதாரிக்குச்செலுத்தி மேற்படி மாதிரிசெய்து விளக்கேற்ற கவுதாரிகளாகும்.

893 புல்புல் குருவிகளாகும் வித்தை

சேராங்கொட்டையை கேட்டை நக்ஷத்திரத்தில் புல்புல்குருவிக்குச்செலுத்தி மேற்படி தைலஞ்சேர்த்துச்செய்ய புல்புல்குருவிகளாகத்தோன்றும்.

894 நாராயணபக்ஷிகளாகும் வித்தை

காரெள்ளை நாராயணபட்சிக்கு விசாகநக்ஷத்திரத்திற் செலுத்தி மேற்படி மாதிரி ஐங்கோலத்தை சேர்த்துசெய்ய நாராயணபட்சிகளாகும். ஆனால் இந்த வித்தைமாத்திரம் செய்யும்போது தன்னுடைய பக்ஷி ஊணில் இருக்கவேண்டியது.

895 பருந்துகளாகும் வித்தை

காட்டாமணக்கன் கொட்டையை சோதிநக்ஷத்திரத்தில் பருந்துக்கு உள்ளுக்குச்செலுத்தி மேற்படி மாதிரி செய்ய வீடெல்லாம் பருந்துகளாகத்தோன்றும். ஆனால் அந்த வேலையை சம்சாரம் செய்யுமிடத்தில் நடத்தக்கூடாது.

896 கருடன்களாகும் வித்தை

முள்ளங்கிவிரயை உத்திராட நக்ஷத்திரத்தில் கருடனுக்குச் செலுத்தி மேற்படி மாதிரிசெய்ய வீடெல்லாம் கருடன்களாகத் தெரியும்.

897 செம்போத்துகளாகும் வித்தை

வெண்பருத்தி விரையை அமாவாசை தினம் ஞாயிற்றுக்கிழமையாகப் பார்த்து செம்போத்துக்குச் செலுத்தி மேற்படி மாதிரி எண்ணையாடித் தைலமுஞ்சேர்த்து செய்தால் செம்போத்துகளாகும்.

898 ஆலாக்குருவிகளாகும் வித்தை

காய்க்கடுகை அனுட நக்ஷத்திரத்தில் ஆலாக்குருவிக்குச் செலுத்தி மேற்படி மாதிரி செய்தால் வீடெல்லாம் ஆலாக்குருவிகளாகத் தெரியும்.

899 அண்டங்காக்கைகளாகும் வித்தை

கொத்து முந்திரிகியை சித்திரை நக்ஷத்திரத்தில் அண்டங் காக்கைக்குச் செலுத்தி விளக்கேற்றினால் அண்டங்காக்கைகளாகத் தோன்றும்.

900 தேன்சிட்டுகளாகும் வித்தை

தாமரைவிரையை திருவோண நக்ஷத்திரத்தில் தேன்சிட்டுக் குச் செய்து விளக்கேற்ற தேன்சிட்டுகளாகும்.

901 அன்னங்களாகும் வித்தை

அவுத்திவிரையை சதையத்தில் செலுத்தி விளக்கேற்றினால் அன்னங்கள் தமாஷாக மேயும்.

902 வாத்துகளாகும் வித்தை

துத்திவிரையை வாத்துகளுக்கு ஆதிவாரத்தில் போட்டு விளக்கேற்றினால் பார்ப்பவர்களுக்கு வாத்துகள் மேயுவதைப்போலிருக் கும்.

903 குயில்களாகும் வித்தை

பூவரசன் விரையை மூலநக்ஷத்திரத்தில் செலுத்தி விளக்கேற்ற குயில்களாகத் தோன்றும். ஆனால் தன்னுடையபக்ஷி அரசா யிருக்க வேண்டும்.

904 கருங்குருமானாகும் வித்தை

குசும்பா விரையை கருங்குருமானுக்கு கன்னியாராசியில் செலு த்தி விளக்கேற்ற கருங்குருமானைப்போலவே தோன்றும்.

905 நாய்களாகும் வித்தை

தட்டைப்புங்கனைப் பயித்தியம் பிடித்த நாய்க்கு கேட்டைநக்ஷத் திரத்தில் செலுத்தி விளக்கேற்றினால் வீடெல்லாம் நாய்களாகும்.

906 முயல்களாகும் வித்தை

அழிஞ்சி விரையை ரோகணியில் முயலுக்கு செலுத்தி விளக் கேற்றினால் முயலாகும்.

907 புனுகுப்பூனைகளாகும் வித்தை

சாரப்பருப்பை புனுகுப் பூனைக்குப் பரணி நக்ஷத்திரத்தில் செலுத்தி எண்ணையாடி விளக்கேற்றினால் வீடெல்லாம் புனுகு பூனை யாகத் தோன்றும். பார்ப்பவர்கள் சந்தோஷப்படுவார்கள்.

908 கஸ்தூரிபூனைகளாகும் வித்தை

வெள்ளைக் காட்டாமணிக் கொட்டையை கஸ்தூரி பூனைக்குச் செலுத்தி மேற்படி மாதிரி விளக்கேற்றினால் வீடெல்லாம் கஸ்தூரி பூனையாகவே தோன்றும்.

909 சவ்வாதுபூனைகளாகும் வித்தை

முள்ளங்கி விரையை மக நக்ஷத்திரத்தில் சவ்வாது பூனைக்குச் செலுத்தி மேற்படி மாதிரி விளக்கேற்றினால் சவ்வாது பூனையாகவே தோன்றும்.

910 மாடுகளாகும் வித்தை

முழுத்தேங்காயை மட்டையுடன் அமாவாசையும் பௌர்ணமியுமாகப் பார்த்து மாட்டுக்கு அபானவாயு வழியாகச் செலுத்தி முளைத்த பிறகு எண்ணெயாடி மேற்படி மாதிரி விளக்கேற்றிப் பார்க்க வீடெல்லாம் மாடுகள் குதிக்கும்.

911 யானைகளாகும் வித்தை

மேற்படி தேங்காயை விசாக நக்ஷத்திரத்தில் ஆனைக்குச் செலுத்திச் செய்ய மேற்படி ஆனைகளாகத் தோன்றும்.

912 முள்ளம்பன்றிகளாகும் வித்தை

செந்துருக்கம் விரையை அஸ்வனி நக்ஷத்திரத்தில் முன்சொன்ன விதமாகச் செய்துக் காட்டினால் முள்ளம் பன்றிகளாகும்.

913 காட்டுப்பன்றிகளாகும் வித்தை

ஊமத்தை விரையை திருவாதிரையில் காட்டுப் பன்றிக்குச் செலுத்தி மேற்படி மாதிரி செய்து விளக்கேற்றக் காட்டுப்பன்களாகும்.

914 மான்களாகும் வித்தை

கொடிமுந்திரி விரையை உத்திர நக்ஷத்திரத்தில் மானுக்குச் செலுத்தி மேற்படி மாதிரி விளக்கேற்ற மான்களாகத் தோன்றும்.

915 கடம்பைகளாகும் வித்தை

புங்கங் கொட்டையை புனர்பூசத்தில் செலுத்தி மேற்படி மாதிரிச் செய்ய கடம்பைகளாகத் தெரியும்.

916 சிறுத்தைகளாகும் வித்தை

தேக்கங் கொட்டையை ஆதிவாரம் ரோகணியில் சிறுத்தைக்குச் செலுத்தி மேற்படி மாதிரி தைலங்கூட்டி விளக்கேற்ற வீடெல்லாம் சிறுத்தைகளாகும்.

917 புலிகளாகும் வித்தை

பேய்க்கொம்மட்டி விரையைக் கேட்டையில் புலிக்குச் செலுத்தி முன்மாதிரி கூட்டி விளக்கேற்ற புலிகளாகத்தோன்றும்.

918 நரிகளாகும் வித்தை

முருங்கை வித்தை மிருகசீரிடத்தில் நரிக்குச் செலுத்தி முன் போல் செய்ய நரிகளாகும்.

919 குள்ளநரிகளாகும் வித்தை

குருக்கத்தி வித்தை சுவாதி நக்ஷத்திரத்தில் முன்சொன்னமாதிரி செய்து விளக்கேற்ற குள்ளநரிகளாகவே வீடெல்லாந் தோன்றும்.

920 வெள்ளேலிகளாகும் வித்தை

நரிமிரட்டி விரையை ரேவதி நக்ஷத்திரத்தில் வெள்ளெலிக்கு போட்டு முன்மாதிரிசெய்து விளக்கேற்ற வீடெல்லாம் குசகுசவென்று வெள்ளெலிகள் மேயும்.

921 எலிகளாகும் வித்தை

வெள்ளரி விரையை மகநக்ஷத்திரத்தில் எலிக்குச் செலுத்தி முன் சொன்ன மாதிரி செய்ய வீடெல்லாம் எலிகளாகும்.

922 பூனைகளாகும் வித்தை

மேற்படி விரையை மூல நக்ஷத்திரத்தில் மேற்படி மாதிரி செய்ய வீடெல்லாம் பூனைகளாயிருக்கும்.

923 எலி ஓடுகிறதும் பூனை குதிக்கிற வித்தை

மேற்படி எலி எண்ணெய் ஒரு விளக்கும், மேற்படி பூனை எண்ணெய் ஒரு விளக்குமாக ஏற்றி இரண்டு விளக்iகயும் ஒரேவீட்டில் வைத்துவிட்டால் எலி ஓடுகிறதும் பூனை குதிக்கிறதுமாக யிருக்கும். பார்ப்பவர்கள் வெகு சந்தோஷப்படுவார்கள்.

924 புறுக்களாகும் வித்தை

கஞ்சா வித்தை பூராடத்தில் புறுவிற்குச் செலுத்தி முன்போல பிசகாது செய்ய புறுக்களாகும்.

925 ஆட்டப்புறுக்களாகும் வித்தை

சிறுசனல் விரையை முன்மாதிரி மூலநக்ஷத்திரத்தில் செய்து விளக்கேற்ற ஆட்டப்புறுவாகும்.

926 மணிப்புருக்களாகும் வித்தை

வேப்பன் கொட்டையை பரணி நக்ஷத்திரத்தில் முன்சொன்ன மாதிரி செய்தால் மணிப்புருக்களாகும்.

927 பன்றிகளாகும் வித்தை

நிலக்கடலைக் கொட்டையை புனர்பூசத்தில் பன்றிக்குச் செலுத்தி முன்போல் செய்ய பன்றியாகத் தோன்றும்.

928 எருமைகளாகும் வித்தை

காட்டுக் குருந்துக் கொட்டையை மேற்படி நக்ஷத்திரமாகப் பார்த்து எருமைக்குச் செலுத்தி முன்போல்செய்ய எருமைகளெல்லாம் வீட்டிற்குள்ளேயே உலாவும்.

929 பெருச்சாளியாகும் வித்தை

நேர்வாளத்தை மூல நக்ஷத்திரத்தில் பெருச்சாளிக்குச் செலுத்திச் செய்ய பெருச்சாளிகளாகத் தோன்றும்.

930 கழுதைகளாகும் வித்தை

ரேவதி நக்ஷத்திரத்தில் எள்ளெ மர எண்ணெயுடன் கலந்து, அத்துடன் கழுதைக்கண் சேர்த்துக் குழித்தைல மிறக்கி விளக்கேற்ற வீடெல்லாம் கழுதைகளாகத் தோன்றும். ஆனால் இவ்வேலையைக் குடியிருக்கும் வீட்டில் செய்யக்கூடாது.

931 கடம்பைகளாகும் வித்தை

அல்லிவிரையைக் கிருத்திகை நக்ஷத்திரத்தில் முன் சொன்ன மாதிரி செய்து விளக்கேற்றினல் வீடெல்லாம் கடம்பைகளாகத் தெரியும்.

932 காட்டெருமைகளாகும் வித்தை

காசனி விரையை விசாக நக்ஷத்திரத்தில் முன்சொன்ன மாதிரி செய்தால் காட்டெருமையாகும்.

933 காக்கைகளாகும் வித்தை

நாய்க்கடுகை ஆதிவாரமும் சுவாதி நக்ஷத்திரமுங் கூடிய தினத்தில் முன்போல் செய்ய வீடெல்லாம் காக்கைகள் மேயும்.

934 நாரைகளாகும் வித்தை

முசுகொட்டையை திருவாதிரையில் நாரைக்குச் செலுத்தி முன் சொன்ன மாதிரி விளக்கேற்றிப் பார்க்க வீடெல்லாம் நாரைகளாக உலாவும்.

935 கருங்கோழிகளாகும் வித்தை

கசகசாவை அஸ்த நக்ஷத்திரத்தில் கருங்கோழிக்குச் செய்து விளக்கேற்ற மாளிகையில் எங்கு பார்த்தாலும் கருங்கோழிகளாகத் திரியும்.

936 கிளிகளாகும் ஜாலம்

செம்பருத்தி விரையை வியாழக்கிழமை அஸ்த நக்ஷத்திரமாகப் பார்த்து முன்சொன்னவிதஞ்செய்து தீபமேற்றிப்பார்க்க வீடெல்லாம் கிளிகளாகத் தோன்றும்.

937 சண்டை சாவல்களாகும் ஜாலம்

இலவம்பருத்தி விரையை மேஷலக்கினத்தில் சாவலுக்குச் செலுத்தி முன்போல் செய்து விளக்கேற்றிப் பார்க்க வீடெல்லாம் சண்டை சாவல்கள் கொக்கரித்து நிற்கும்.

938 கானுங்கோழிகளாகும் ஜாலம்

வெள்ளை எள்ளை திருவாதிரை நக்ஷத்திரத்தில் கானுங்கோழிக்குச் செலுத்தி முன் மையைக்கூட்டி விளக்கேற்ற வீடெல்லாம் கானுங்கோழிகளாக மேயும்.

939 வானம்பாடிகளாகும் ஜாலம்

காட்டெள்ளை பூசநக்ஷத்திரத்தில் வானம்பாடிக் குருவிக்குச் செலுத்தி விளக்கேற்ற மாளிகையில் வானம்பாடிகள் வெகு தமாஷாக உலாவும்.

940 கோவேறுகழுதைகளாகும் ஜாலம்

பாதம்பருப்பை கேட்டை நக்ஷத்திரத்தில் கோவேறு கழுதைக்குச் செலுத்தி எண்ணையாடி விளக்கேற்ற வீடெல்லாம் கோவேறு கழுதைகள் அளவில்லாதது தெரியும்.

941 இதுவுமது

புன்னைக் கொட்டையைக் குதிரைக்கு புனர்பூசத்தில் செலுத்தி அஸ்த நக்ஷத்திரத்தில் புதைத்து முன்போல் விளக்கேற்ற கோவேறு கழுதைகள் மேயும்.

942 நினைப்பது தோன்றும் ஜாலம்

மரயெண்ணையுடன், எள்ளு நான்கும், கடுகு நான்கும், கத்திரி விரை நான்கும், ஊமத்தை ஆறும், எட்டியும் சேர்த்துக் குழித்தைல மிறக்கி அதனுடன் சுடலைக்கருவும் ஐங்காயமும் சேர்த்து வைத்துக்

கொண்டு மாயாசத்தியை மனதினிடமாகப்பூசித்து நீ எண்ணினைத்துத் தீபமேற்றுகிறாயோ அதுகளெல்லாந் தோன்றும். ஆனால் குருவின் பலன் வேண்டும்.

943 அடைக்கலாங் குருவிகளாகும் ஜாலம்

கடுகை ஆயில்ய நக்ஷத்திரத்தில் அடைக்கலாங் குருவிக்குச் செலுத்தி முன்போல் செய்ய அடைக்கலாங் குருவிகள் மேயும்.

944 பச்சோந்திகளாகும் ஜாலம்

வெண்கடுகை ஆதிவாரமும் அமாவாசையும் கூடிய தினத்தில் பச்சோந்திக்குச் செலுத்தி எண்ணெயெடுத்து முன் மையைக்கூட்டி விளக்கேற்ற வெறும் பச்சோந்திகள் காணப்படும்.

945 ஓணான்களாகும் ஜாலம்

கிரும்பை அஸ்வனி நக்ஷத்திரத்தில் ஓணானுக்குச்செலுத்தி முன்போல் செய்ய கணக்கில்லாத ஓணான்கள் ஓடும்.

946 கருங்குருமான்களாகும் ஜாலம்

சாதிபத்திரி விரையை சதையநக்ஷத்திரத்தில் கருங்குருமானுக்குச் செலுத்தி முன்போல்செய்ய கருங்குருமான்கள் தென்படும்.

N. B. மேற்சொன்ன வேலைகளையெல்லாம் புத்திசாலியானால் சுலபத்தில் செய்யலாம். ஆனால் ஒவ்வொருவேலைகளுக்கும் எண்ணெயுடன் ஐங்கோலத்தையும் கலந்துதான் விளக்கேற்றவேண்டும். தவிர மேற்படி நக்ஷத்திரங்களும் சரியாக யிருக்கவேண்டும். அப்படி செய்யாமல் தாறுமாறாய் செய்து முன்னோர்களின் நூலை தூஷணஞ் செய்தால் தீராத நரகத்திற்கு ஆளாவார்கள்.

947 கோட்டைகட்டி ஆடும்வித்தை

60-அடி நீளமுள்ள ஓர் பெரிய மூங்கில்வாரையின் முனையில் காந்தம் வைத்து, மூங்கிலின் நான்குபக்கமும் நான்கு வலுவானகயிறுகட்டி பிறகு ஏறுகிறவன் இரும்பினால் சட்டைபூண்டு, ஐங்கோலத் தைலம் பொட்டிட்டு தலையின்மீது அடுக்கடுக்காய் பானைகளை ஒன்றின்மேல் ஒன்றாக பத்துவரையிலும் அடுக்கி அதற்கும் ஐங்கோலம்பூசி, இடுப்பில் கச்சைபூண்டு கெடையின்மேல் உச்சிவரை யேறலாம். பார்ப்பவர்கள் வெகு ஆச்சரியங் கொள்வார்கள். ஏறினபின் வாசியைக் கீழ்நோக்காமல் காலைமாற்றிக்கொண்டு எவ்வளவு வித்தைகள் வேண்டுமானாலும் ஆடலாம். துத்தாரிகொண்டு நாகவராளி முதலிய வாத்தியங்களும் வாசிக்கலாம்.

948 சகல ஜாலத்திற்கும் வசிய மை

அழுகண்ணி, தொழுகண்ணி, நீர்மேல்நெருப்பு, பசளை, கரும் பசளை, ஆள்காட்டியிலை, அழுஞ்சி, கருமூலி, இருள்மூலி, பேய்மிரட்டி, முசுட்டை, கருந்தும்பை, விளாத்தி, கருடன்மூலி, கருங்குவளை, பொன்முசுட்டை, கருமூலிச்சாறு, ஆதளைப்பால், கெச்சக்காயிலை, பசி மூலிபுன்னை, சிற்றண்டத்திலை, பேரண்டத்திலை, நரிமிரட்டி, பேய்மூலி, திகைப்பூண்டு, ஊமத்தை, தொன்னை, கடம்பை முதியார்கூந்தல், ஆள் மிரட்டி, கருங்காலி, சாரை, திமிர்க்கோடான், மதிப்பூண்டு, கூத்தன் குதம்பை, நன்னாரி, ஆடுதின்னாப்பாளை, கருங்கோவை, சிவனார்வேம்பு, மரமல்லி, செவ்வல்லி, ஊமத்தைவேர், இதுகளைச் சரியெடையா யெடு த்து சாறுவாங்கிச் சீலையில் நனைத்து காயவைத்துப் பிறகு எரழிஞ்சித் தைலத்தில் நனைத்துக் கொளுத்தி தைலத்தை ஓர் பீங்கானில் வைத் துக்கொண்டு ஆந்தை, செம்போத்து, வல்லூறு, காட்டோணான், வாய சம், சாரை, காடை, கருங்குருவி, மீன்குத்தி, தேவாங்கு, கருங்குரங்கு, நாரை, மாடப்புறு, பூனை, பாம்பு, அரணை, கருஞ்சாரை, இதுகளின் பிச்செடுத்து அதில் புனுகு, பச்சைப்பூரம், கோரோசனை, குங்கு மப்பூ, சவ்வாது, கஸ்தூரி, முதற் றீட்டுசேலை, இதுகளில் மேற்சொ ன்ன சாமான்களை யெல்லாம் போட்டு, எரழிஞ்சித் தைலத்தால் மை போலரைத்து ஓர் தந்தச் சிமிளில் வைத்துக்கொண்டு ஆஞ்சநேயரை யும் அஞ்சனாதேவியையும் பூசித்து வைத்துக்கொண்டால் அஷ்டமா சித்து முதலிய வசியம், மோகனம், ஏடனை, தம்பனம், உச்சாடனம், ஆக்ருஷ்ணம், மாரணம் இதுகளும் இன்னும் புத்திசாலியானால் மறை ப்பு முதலிய வேலைகளும் செய்யலாம். ஆனால் குருவருள் வேண்டும்.

949 வேறு சோக்குப்போடி ஜாலம்

சொக்குப்பாக்கு, அம்பைக்கோவைக்கிழங்கு, நிலப்பனக்கிழங்கு, பேயத்திவேர், தாளிவேர், சிருமீன்வேர், குப்பைமேனிவேர், தாளி வேர்விதை, நஞ்சுக்கொடி, மாதவிடாய்சீலை, சுடுகாட்டுச் சாம்பல், ஊமைமண்டை, ஓட்டுப்பொடி இவைகளை ஓர் அளவாகத் தூள்செ ய்து பேயத்திப்பால், சிறுமீன் முதலிய பால்களில் கலந்து அரைத்து காயவைத்து தூளாக்கிவைத்துக்கொண்டு உபயோகப்படுத்திக் கொள் ளவும்.

950 கீரைமுளைக்கும் ஜாலம்

புத்தீசல் ஒருமரக்கால் கொண்டுவந்து குழித்தையிலமிறக்கி அதில் முளைக்கீரை விதையைப் பிரட்டிக் காயவைத்து வைத்துக்

கொண்டு பிறகு சபையோரைப்பார்த்து கீரை இப்பொழுதே முளைக்கும் வித்தையைப் பாருங்களென்றுசொல்லி மணல் பாத்திகட்டி விரையைப் போட்டு தண்ணீர் தெளித்த அரைமணி சாகவாசத்திற்குள் முளை கிளம்பி செடியாகும் பார்ப்பவர்கள் ரொம்பவும் ஆச்சரியப்படுவார்கள்.

951 வேறு இராஜவசியம்

சூரி, கருங்கொன்றை, கொல்லன்மூலி, பேய்மிரட்டி, கருவாலி, வெள்ளெருக்கன், விஷ்ணுகிரந்தி, அழிஞ்சி, காட்டாத்தி, பிராயன், மேனி, குமிழின் இதுகளைக் காப்பிட்டு முப்பொலியும் கொடுத்து வடவேர்களை வாங்கிக்கொண்டு அதில் தலைப்பிள்ளைக் கொடியைச் சேர்த்துக் குழித்தைலமிரக்கிக் கொள்ளவும். பிறகு சுழல்வண்டு, குழியானை, மரவெட்டை, செவ்வட்டை, மரவுணி, தம்பலபூச்சி இதனைச் சேர்த்தபின்பு வல்லூறு, செம்போத்து, தேவாங்கு, ஆந்தை, சாரை, மயில், கரும்பூனை, வௌவால், பாம்பு, அரணை இதுகளின் பிச்சை முன் தைலத்தில் சேர்த்துக் கல்வத்திலரைத்து மண்டையோட்டில் பூசி மைவாங்கி சிமிளில் வைத்துக்கொண்டு நிர்வாணமாகயிருந்து பூசை செய்து உருவேற்றிப் பதனம்பண்ணிக்கொண்டால் உலகிலுள்ள யாவரும் வசியமாவார்கள்.

952 ஈடுமோரகம்

சிகப்புஅட்டை, சிவப்புபூநாகம், குழியானை, தம்பலப்பூச்சி, பச்சோந்திப்பிச்சு, கருங்குருவிபிச்சு, கெவுரிபட்சிபிச்சு, சுழல்வண்டு, புனுகு, பச்சைப்பூரம், கஸ்தூரி, கோரோசனை, காரம் இதுகளில் தேன்கூட்டி கருவாலரைத்து சிமிளில் வைத்துக்கொண்டு அறுசுவையில் பயிரளவு கொடுக்க வசியமாம்.

953 கெச்சக்காய் கோட்டையை யிடிக்கும் வித்தை

கெச்சக்காயை வேண்டுமானவரை கொண்டுவந்து லோகத்தைப் பொடிசெய்து பழச்சாற்று லரைத்து அதுகளுக்குப்பூசி கோட்டையைப்போல் அழகாக கட்டிவிடவும். பிறகு சபையோரைப்பார்த்து நான் இந்தக் கட்டடத்தை யிடித்துவிடுகிறேன் பாருங்களென்று சொல்லி பிரம்பையெடுத்து மந்திரஞ்சொல்லிக்கொண்டே மேற்படி கோட்டைமேல் காட்ட கோட்டை யிடிந்துவிடும். ஆனால் நீ வைத்திருக்கும் மாத்திரைக்கோலுக்கு காந்தத்தை முன்னுடியே சொருகி வைத்திருக்கவும்.

954 வேறு மோடி வித்தை

படிகாரத்தைப் பொரித்து முட்டையைப்போல் சீவிக்கொண்டு சபையிலுள்ளவர்களைப் பார்த்து இந்த முட்டையை மோடி வைக்கி

றேன் பாருங்களென்று மணலில் மறைத்துவைத்துவிடவும். பிறகு மந்திரங்கள்சொல்லி ஜலம் தெளிக்க முட்டை மாயமாய்போகும். அதன் பிறகு சனங்களைப்பார்த்து மாயமாய்ப்போன முட்டையைக் கொண்டு வருகிறேன் பாருங்களென்றுசொல்லி தொலைதூரத்தில் மணல் மறைவில் இருக்கும் முட்டையைக் கையிலெடுத்துக்கொண்டுவர பார்ப்பவர்கள் மகா வேலைக்காரனென்று சொல்வார்கள்.

955 கோழிமுட்டை குதிக்கும் வித்தை

ஓர் நல்ல கோழி முட்டையை எழுத்தாணியால் துவாரஞ் செய்து அதற்குள் பனிநீரும் செந்தாழம்பூ ரசமுஞ்செலுத்தி சூரியனெதிரில் பூமியில்வைக்க எகிரி கூத்தாடும்.

956 நாவடக்கும் ஜாலம்

அரி ஓம் நாவடங், நமசிவயநமநடங்க, நமசிவய பேயடங்க, நமசிவய பிசாசடங்க, நமசிவய அடியேன் முகம் கண்டபேர்களுக்கு கண் கெட்டு, கை மாண்டு, பல்கிட்டி, சொல் செத்து தனக்குள்ளேதான் அடங்க சுவஹா.

957 இதற்கு மூல மந்திரம்

சந்திர பிறையைப்போல் கீழ் மேல், மேல் கீழாக சக்கரம் வரைந்து அதில் (யநமசிவ) என்ற அட்சரத்தைப்போட்டு, ஓம் அங் அடங்க நங்கடங்க லங் கடங்க லங் கடங் அடங் அடங் நமசி வய என்று 108-உரு செபிக்க சித்தியாம்.

958 வேறு குட்டிச்சாத்தான் வசியம்

அரி ஓம் கனகமுடி சாத்தான், கருங் குட்டிசாத்தான் அகோர குட்டிசாத்தான், ஆ வெடு, கல்லெடு எதிர்த்த பேர்போடு, தீயெடு பீயெடு நான் நினைத்தபேர்மேல் போடு, இரக்கம்பாராதே, என்னை நினையாதே, என்பேரை தெரிவிக்காதே, சீக்கிரம், சீக்கிரம், ஓம் சுவஹா என்று 108-உரு செபிக்க சித்தியாகி உன் வேலைகளைச் செய்யும்.

959 மோகினி கணபதி ஜாலம்

அரி ஓம், விருவிரு கணுகணு வாவா கணபதி அரிங்றங்அங்சிம் என்று எதிரிபேரைச் சேர்த்து என்மேல் மோகங்கொண்டுவர வசிய சிவய சிவய சுவஹா என்று 1008-செபிக்க சித்தியாம்.

960 கணபதி வசிய ஜாலம்

ஓம், ஆம், ஊம், ஐயும், கிலியும், சவ்வும், சிகாரவகார, சின்மயா னந்த சிவசிவ ஏகாட்சர பிரணவ சிவசுத்த கணபதியே நமஹா என்று கலையாசனத்தில் குந்தி 108-உரு செபிக்கச் சித்தியாம்.

961 ஆஞ்சநேயர் வசிய ஜாலம்

பஞ்சாட்சர சக்கரத்தை வரைந்து ஆஞ்சநேயரைத்துதித்து செபிக்கும் விதம். ம்க்கிரம் ம்க்கிரம், சந்தில் நிற்கும் சாமபேயை வழியில் நிற்கும் மகாமுனியை தூக்கு தூக்கு என்று செபிக்கச் சித்தியாகும்.

962 கேழ்வரகு முளைக்கும் ஜாலம்

முட்டையை அவயவம் வைக்கும் சமயம் ஓர் முட்டையை எடுத்து எழுத்தாணியால் துவாரம் செய்து அம்பிலியைபோக்கி அதின் நிறைய கேழ்வரகைக் கொட்டி துவாரத்திற்கு மெழுக்கை யடைத்து மற்றமுட் டைகளுடன்அவயவத்தில் வைத்துவிடவும் மறுபடியும். கோழியானது குஞ்சு பொரிக்கும் சமயம் நாம் வைத்த முட்டையை யெடுத்து அதிலி ருக்கும் கேழ்வரகை ஓர் புட்டியில் போட்டு வைத்துக்கொண்டு ஜால மாடும் சபையில் அனைவர்களையும் பார்த்து உங்கள் கண்ணின் முன்பாக இக்கேழ்வரகை வெகு சீக்கிரத்தில் முளைக்கவைக்கிறேன் பாருங்கள் என்று சொல்லி பாத்திகட்டி ஜலம்விட்டு விதைத்து மேலே ஓர் துணியைமூடி சற்றுநேரம் கழித்து அனைவர்களுக்கும் திறந்துக்காட்ட செடிகதிர்விட்டிருக்கும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

963 எலியைக்கண்டு பூனை ஓடும் ஜாலம்

வீட்டில் வாழும் எலியைப்பிடித்து அதன் தேகத்தில் குப்பை மேனிச் சாறும், எருக்கம்பாலும் சமயெடையாகக் கலந்து பூசிப் போ னில் வைத்திருந்து பூனை எதிரில் காட்ட பூனையானது இதைக் கண்ட வுடன் ஓடிப்போகும்.

964 பாரம் சுமக்கும் ஜாலம்

கோபுரந்தாங்கிச்செடிக்கு ஆதிவாரம் கிராணம் பிடித்திருக்கும் போது முப்பெலியுடன் காப்புகட்டி மறு ஆதிவாரத்தில் பொங்கலிட்டு பிடுங்கிவந்து குளிசமாடி வைத்துக்கொண்டு சபையில் அனைவர்களையும் பார்த்து நீங்கள் எல்லோரும் சேர்ந்து எவ்வளவு பளுவை என்சிரசின் மீதில் வைக்கின்றீர்களோ அதை நான் சுமக்கின்றேன் என்றுசொல்லி பெரிய கல்லை தூக்கிவைக்கச் சொல்லவும் உனக்குப் பளுவுதோன்றுது. ஆனால், முன் குளிசமாடிய வேரை சுமைதாங்க சுற்றும் வஸ்திரத்தில்

வைத்து ஒருவருக்கும் தெரியாமல் சுற்றி தலையில் வைத்துக்கொள்ள வும்.

965 பாராங்கல் தானுக நகரும் ஜாலம்

மேற்சொன்னமாதிரி வேரை குளிசமாடி வைத்திருந்து சபை யோர்களைப் பார்த்து நான் இந்தக் கல்லை நகரும்படி செய்யும் வித்தை யைப் பாருங்களென்று சொல்லி மேற்படி குளிசத்தைக் கல் அடிப்பு ரத்தில் வைக்க கல் தானுய் நகர்ந்து அப்புரம் போய்விடும் பார்ப்பவர் கள் ஆச்சரியப்படுவார்கள்.

966 மனிதனை உட்காரவும் எழுந்திருக்கவும் செய்யும் ஜாலம்

முச்சந்திக்கூடு மிடத்திலிருக்கும் அரசமரத்திற்கு காப்புக்கட்டி நேமநிஷ்டையுடன் 40-நாள் காலை மாலை சுற்றிவந்து 41-வது நாள் முன் கட்டிய காப்பை அவிழ்த்து வடக்கேபோகும் வேருக்குக்கட்டி அதை எடுத்துவந்துக் குளிசமாடி கடகத்தில் போட்டுக் கூட ஐங்கோ லத்தையும் வைத்துக் கையில் மாட்டிக்கொண்டு சபையில் ஒரு மனி தனை வரவழைத்து அவன் உச்சியிலிருந்து கால்வரையில் ஒருபக்கம் உன்கையால் தடவி உட்கார வைத்துவிட்டால் மறுபடியும் எழுந்திருக்க மாட்டான். பத்துபேர்பிடித்திழுத்தாலும் எழுந்திருக்கமாட்டான். நீ மறுபடியும் எழுப்புகிறமாதிரி முன்போல் தடவி எழுப்பி நிற்கவைக்க எழுந்திருப்பான். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

967 ஒரு மனிதனை இருபது மனிதனுகச் செய்யும் ஜாலம்

அரசுக்கு முன்போல் குளிசமாடி ஐங்கோலமும், கருவும் கூட்டி வைத்துக்கொண்டு சபையில் அனைவர்களும் பார்க்கும்படியாக ஒரு வனை அழைத்து நிற்கவைத்து நீ எந்தக்கையில் குளிசம் வைத்திருக் கின்ருயோ அந்தக் கையினுல் மண்ணையள்ளி நீ இருபது தலையாகப் போகக்கடவதென்று அவன்மேல் போட்டால் பார்ப்பவர்களுக்கு அவன் இருபது தலையாக தோற்றப்படுவான். மறுபடியும் குளிசமில் லாத கையில் விபூதியையெடுத்து எப்போதும்போல் ஆகக்கடவ தென்று போட்டால் எப்போதும்போல் ஆய்விடுவான். இது வெகு ஆச்சரியமான வேலை செய்ததாகத் தெரியும்.

968 மனிதர்களைச் சிரசில்லாமல் செய்யும் ஜாலம்

வெட்டுண்ட மனிதனுடைய சிரசைக் கொண்டுவந்து அதன் எலும்பை யெடுத்துப் பொடித்து அதனுடன் ஐங்கோலம் சேர்த்துக் கொண்டு தீவட்டியில் வைத்துச் சுற்றி இரவில் ஜாலமாடும் சபையில் கொளுத்த, பார்த்தவர்களுக்கு எதிரியின் தலை தெரியாது. அவர்கள்

தங்கள் தலேயிருக்கிறதாவென்று தடவிப் பார்த்துக்கொள்ளுவார்கள். அதுபோலவே மற்றவர்களும் பிரமித்து ஒருவர்தலேயை ஒருவர் தடவிப் பார்ப்பது வெகு தமாஷாக இருக்கும்.

969 கருவாடு தண்ணீரில் விளேயாடும் வித்தை

உலர்ந்த கருவாட்டிற்கு புலிதொடக்கியிலேயும், கிளுவையிலேயும், ஒன்ருகச் சார்பிழிந்து ஊரவைத்து காய்ந்தபிறகு அதை நீரில்விட உயிருள்ளதைப்போல் ஓடியோடி மேயும்.

970 நெல்லு பயிர் உண்டாகும் ஜாலம்

ஜாலமாடுமிடத்தில் பூமியைச் சமமாக வெட்டி எருவு தழை முதலானதும் போட்டு சபையிலுள்ளவர்களேப் பார்த்து நான் இந்தநெல்லே முளேக்கவைக்கிறேன் பாருங்களென்று சொல்லி ஐங்கோலத்தை நெல்லில் கலந்து விரைத்துவிட்டு மேலே ஓர் துணியை மூடி சற்றுப்பொறுத்து திறக்க முளேகள்கிளம்பும். மறுபடியும் சற்றுப்பொறுத்துத்திறந்து காட்ட நெல்லுபயிர் தோன்றும். அதைக் கண்டவர்கள் வெகு ஆச்சரியப்பட்டு உன்னேச் சித்துபுருடனென்று சொல்வார்கள். ஆனல் இந்த வேலேக்கு நெல் சிறுமணி நெல்லாகவும் நாள் திங்கட்கிழமையாகவும் இருக்கவேண்டும்.

971 சடைச்சேம்பா உண்டாகும் ஜாலம்

மேற்சொன்ன மாதிரி ஆதிவாரத்தில் சடைச்செம்பா நெல்லுக்குச் செய்ய அதுவும் மேற்படி பயிராகும்.

972 சீரகசெம்பா ஜாலம்

சீரக செம்பாவிற்கு சித்திரை நக்ஷத்திரத்தில் செய்துக்காட்ட பயிர் வெகு ஆச்சரியமாக யிருக்கும்.

973 மணக்கத்தை பயிராகும் ஜாலம்

மணக்கத்தை நெல்லுக்கு ஐங்கோலமும் அழிஞ்சி தைலமும் சேர்த்து விதைத்துகாட்ட பயிர் வெகு விநோதமாக யிருக்கும்.

974 மிளகுசெம்பா உற்பத்தி ஜாலம்

ஐங்கோலத்தில் ஆள்காட்டி முட்டைக்கருவைச் சேர்த்துத் தடவி மிளகு செம்பாவை விதைக்கப் பயிராகும்.

975 கார்நெல் உற்பத்தி ஜாலம்

மேற்படி தைலத்தில் கார்நெல்லே ஊரவைத்து விதைக்க சற்று நேரத்திற்குள் செடியாகி கதிர் விடுவது ரொம்பவும் ஆச்சரியமாக யிருக்கும்.

976 காடைக் கழுத்தான் நெல் ஜாலம்

காடைக் கழுத்தான் நெல்லிற்கு ஐங்கோலமும் அழிஞ்சி தைலமும் சேர்த்து ஊரவைத்து விதைக்க பயிராகும்.

977 வாடஞ்செம்பா ஜாலம்

மேற்சொன்ன மாதிரி ஆதிவாரத்தில் வாடஞ்செம்பா நெல்லுக்குச்செய்து விதைத்துக் காட்டப் பார்ப்பவர்களுக்கு நெல் பயிர் தோன்றும்.

978 ஈசுரக்கோவைநெல் பயிர் வித்தை

மேற்படி நெல்லுக்கு ஐங்காயமும் ஐங்கோலமும் சேர்த்துத்தடவி விதைத்து துணியைமூடித் திறக்க பயிர் விநோதமாக இருக்கும்.

979 இரங்கமாட்டான் பயிர் வித்தை

இரங்கமாட்டான் நெல்லுக்கு ஏரழிஞ்சி தைலத்தைத்தடவி மூன்றுநாள் வைத்திருந்து பிறகு ஐங்கோலத்தைத் தடவி விதைத்துக்காட்ட அனைவர்களுக்கும் பயிர் தோன்றும்.

980 செம்பாளைப் பயிர் ஜாலம்

மேற்சொன்னமாதிரி செம்பாளைக்குச் செய்தால் உடனே பயிராவது வெகு ஆச்சரியமாக யிருக்கும்.

981 நாசுக்சம்பா பயிர் ஜாலம்

ஐங்காயம், ஐங்கோலம், திசை மயக்குப்பொடி இவை மூன்றையும் மேற்படி நெல்லுக்குத் தடவி விதைக்க மூன்று நிமிஷத்திற் பயிர்கள் தோன்றுவது வெகு ஆச்சரியமாக இருக்கும்.

982 கம்பு முளைக்கும் ஜாலம்

கம்பை மேற்சொன்ன மாதிரி செய்ய உடனே முளைத்துக் கதிர் விடும்.

983 கேழ்வரகு ஜாலம்

கேழ்வரகை மேற்படி விதம் செய்துத் தண்ணீர் தெளிக்க முளைக்கும். பார்த்தவர் மிகவும் ஆச்சரியப்படுவார்கள்.

984 சோளப்பயிர் ஜாலம்

சோளத்தை முன்சொன்ன மாதிரி செய்ய முளைக்கும் பார்த்தவர்களெல்லாம் மிகவும் பிரமிப்பார்கள்.

985 தினைப்பயிர் உற்பத்தி ஜாலம்

தினையரிசியை ஐங்காயத்தில் தடவிக் காய்ந்தபிறகு ஐங்கோலம் தடவி விதைக்கப் பயிராகும்.

986 போது ஜாலம்

மேற்சொன்ன விதமாக பயிர் விளையச் செய்தாலும், மூன்றேமுக் கால் நாழிகைக்குள் எல்லாவிதமுஞ் செய்து முடித்துவிடவேண்டும். தைல முதலானதுகளெல்லாம் முன்னுடியே ஊறவைத்துவிட வேண் டும். தவிர நெல்பயிர் முதலானதுகளெல்லாவற்றிற்கும் நீ உன் மன தில் நினைத்துக்கொள்ளவேண்டும். நினைக்கிறதுடன் எந்தப் பயிரினு டைய நெல்லைப் போடுகிருயோ அந்தப் பயிர்தான் முளைக்கும்.

987 கோதுமைப் பயிராகும் ஜாலம்

கோதுமையைக் கொண்டுவந்து ஐங்கோலத்தில் நனைத்துக்கொ ண்டு பூமியில் பாத்திகட்டி விதைக்க மூன்றேமுக்கால் நாழிகைக்குள் முளைத்துப் பயிராகிவிடும்.

988 கடலையாகும் ஜாலம்

கடலைக்கு ஐங்கோலமும், கண்கட்டுமையும்சேர்த்து தடவி விதை க்கச் செடியாகும்.

989 மோச்சைக் கோட்டையாகும் ஜாலம்

மொச்சைக்கொட்டைக்கு ஐங்கோலமும் மாயாசக்திகருவுந் தொட் டுத்தடவி விதைத்து ஜலந்தெளிக்கச் செடியாகிக் காய்க்கும்.

990 காராமணியாகும் ஜாலம்

ஐங்காயமும் ஐங்கோலமும் தடவி விதைத்துத் தண்ணீர் தெளிக் கக் காராமணி பயிராகும்.

991 கோள்ளு பயிராகும் ஜாலம்

ஏராழிஞ்சித் தைலத்தை ஐங்கோலத்துடன் கலந்துகொண்டு கொள்ளுக்குத் தடவி விதைக்க மூன்றேமுக்கால் நாழிகைக்குள் கொள் ளுச்செடி தோன்றும்.

992 எள்ளுச் செடியாகும் ஜாலம்

எள்ளை ஏராழிஞ்சித் தைலத்தில் ஊறவைத்து விதைக்க எள்ளுச் செடியாகும்.

993 பட்டாணியாகும் ஜாலம்

கண்கட்டு டையுடன் ஐங்காயஞ்சேர்த்துப் பட்டாணிச்குத்தடவி விதைக்கப் பட்டாணி செடியாகும்.

994 பச்சைப்பயருகும் ஜாலம்

ஐங்கோலத்தை பச்சைப்பயறுக்குத் தடவி விதைத்துக்காட்ட பச்சைப்பயருகத் தோன்றும்.

995 உளுந்துச் செடியாகும் ஜாலம்

உளுந்தை ஐங்கோலத்தில் நனைத்துக் காயவைத்து வைத்திருந்து பாத்திகட்டி விதைக்கச் செடியாகும்.

996 கோத்தமல்லிச் செடியாகும் ஜாலம்

மேற்சொன்னமாதிரி கொத்தமல்லிக்குச்செய்ய செடியாகும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

997 பொது ஜாலம்

எல்லாவிதமான தான்யங்களுக்கு மேற்படி ஐங்காயத்தைத்தடவி மாயாசத்தியை வணங்கித் துதித்து விதைக்கவேண்டியதை விதைத்தும் நடவேண்டியதை நட்டும் நாத்துவிடவேண்டியதை நாத்துவிட்டும் செய்யவேண்டும். ஆனல் நடவு செடிகளுக்கெல்லாம் ஐங்காயத்துடன் மாயாசத்திக் கருவும் நாத்துகளுக்கெல்லாம் ஐங்கோலத்துடன் பெருங்காயமும் விதைகளுக்கெல்லாம் ஐங்கோலத்துடன் ஐங்காயமும் சேர்த்து செய்துக்காட்டவேண்டும். ஒவ்வொரு வித்தைகளுக்கும் ஜாலக்காளை தியானிக்கவேண்டும்.

998 அஷ்டமாசித்து மை செய்யும் விதம்

இராஜதண்டனையால் கழுவேறி இறந்தவனைக் கொண்டுவந்து ஒரு தனியானயிடத்தில் வாசனை வீசாதபடி உலர்த்தி சருகுபோல் எடுத்துக்கொண்டு பின் காக்கை, மயில், கோழி, ஆந்தை, வல்லூறு இந்த பஞ்சபட்சிகளையும் கொண்டுவந்து ரோமத்தைப் போக்கி, முன்போல் சருகாக உலர்த்திக்கொண்டு அதன்பிறகு தேவாங்கு, நழுநரி, நாய், பூனை, குரங்கு இவைகளின் பிச்சையும் முன்போல் உலர்த்தி ஆக மொத்தம் பதினேறு சரக்கையும் சேர்த்து கல்லுரலில்போட்டு தூளாக யிடித்துப் புதியபாண்டத்தில் போட்டு சதுரத்திற்குச் சதுரம் ஒன்றரை கெஜம் குழி வெட்டி அக்குழியில் மேற்படிபானையை வைத்து ஒருவித விறகால் எரித்துக் குழித்தைலம் வாங்கி அத்தைலத்துடன்

சமயெடை ஏரழிஞ்சித் தைலம்விட்டு அதனுடன் காராவின் நெய் சமயெடை சேர்த்து இரும்புக் கடாயில் வைத்து வேப்பன் விறகால் காடாக்கினி ஒருசாமமும், கமலாக்கினி இரண்டு சாமமும், தீபாக்கினி மூன்று சாமமும் எரிக்க தைலமானது கடுகைப்போல் மெழுகுபதமாக வரும். அது சமயம் அதை ஓர்பீங்கானில் எடுத்து வைத்துக்கொண்டு சுத்த பூசையாக ஆஞ்சநேயரை வணங்கி லக்ஷத்தியெட்டுரு ஜெபித்து பூமியில் நாற்பதுநாள் புதைத்துவைக்க மைக்கு உயிருண்டாகும். அதை யெடுத்து ஆடும் வித்தையை சொல்லுகிறேன் கேட்பாயாக.

999 மணல் கடுகாகும் வித்தை

மணலை எடுத்து கடுகாகும்படி தியானித்து மையை தடவிப் போடப் பார்த்தவர்களுக்குக் கடுகாகத் தோன்றும்.

1000 மணல் மிளகாகும் வித்தை

மணலை எடுத்து மிளகாகும்படி நினைத்து மையைத் தடவிப்போட மிளகாகத் தோன்றும்.

1001 மணல் சீரகமாகும் வித்தை

மணலை எடுத்துச் சீரகமாகும்படி நினைத்து மையைத் தடவிப் போட சீரகமாகத் தோன்றும்.

1002 மணல் கடலைகளாகும் வித்தை

மேற்படி மணலை எடுத்து கடலையாகும்படி நினைத்து மையைத் தடவிப்போட கடலைகளாகத் தோன்றும்.

1003 மணல் சோளமாகும் வித்தை

மேற்படி மணலில் மையைத்தடவி இந்த மணலைச் சோளமாக்கு கின்றேன் பாருங்களென்று சொல்லிக் கீழேபோட சோளமாகத் தோன்றும். ஆச்சரியமாக யிருக்கும்.

1004 மணல் கம்பாகும் வித்தை

மேற்படி மணலில் மையைத்தடவி மணல் கம்பாகும் வித்தை யைப் பாருங்களென்று கீழேபோட பார்ப்பவர்களுக்குக் கம்பாகத் தோன்றும்.

1005 மணல் தினையரிசியாகும் வித்தை

மேற்படி மையை மணலில் தடவிக் கீழேபோட தினையரிசிக ளாகத் தோன்றும்.

1006 மணல் நெல்லாகும் வித்தை

மேற்படி மையை மணலில் தடவி இந்த மணல் நெல்லாகும் அதிசயம் பாருங்களென்று சொல்லி கீழேபோட பார்ப்பவர்களுக்கு உண்மையான நெல்லைப்போலத் தோன்றும்.

1007 மணல் உளுந்தாகும் வித்தை

அஷ்டமாசித்தி மையை மணலில் தடவிப்போட்டு உளுந்து வரும் வித்தையைப் பாருங்களென்று சொல்ல பார்ப்பவர்களுக்கு நிஜமான உளுந்தைப்போலவே தோன்றும்.

1008 கூழாங்கல்லு மோச்சைகோட்டையாகும் வித்தை

அஷ்டமாசித்தி மையை சிறிய கூழாங்கல்லுகளுக்குத் தடவிக் கீழேபோட மொச்சைக்கொட்டைகளாகத் தோன்றும்.

1009 புளியங்கோட்டை காட்டுமோச்சையாகும் வித்தை

அஷ்டமாசித்தி மையை புளியங்கொட்டைக்குத் தடவிப்போடக் காட்டுமொச்சையாகும்.

1010 ஊமச்சி முந்திரிப்பருப்பாகும் வித்தை

அஷ்டமாசித்தி மையை ஊமச்சிக்குத் தடவிப்போட முந்திரிப் பருப்பாகும்.

1011 வாழைக்காய் விரால்மீனாகும் வித்தை

அஷ்டமாசித்தி மையை வாழைக்காயின்மேல் தடவிப்போட விரால்மீனாகத் தோன்றும்.

1012 காகம் கோழியைப்போல் மேயும் வித்தை

அஷ்டமாசித்தி மையை காகத்தின்மேல் தடவித் திசைமயக்குப் பொடியையுங்கூடத் தூவி விட்டுவிட கோழியைப்போல் மேயும்.

1013 வேப்பங்கோட்டை நிலக்கடலையாகும் வித்தை

அஷ்டமாசித்தி மையைத்தடவி வேப்பங் கொட்டையைப்போட நிலக்கடலையாகும்.

1014 வேப்பிலை பூரானாகும் வித்தை

அஷ்டமாசித்தி மையை வேப்பிலைக்குத் தடவிப்போட பூரானாகும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

1015 புளியனிலை குளவிகளாகும் வித்தை

அஷ்டமாசித்தி மையை புளியனிலைக்குத் தடவிப்போடக் குளவி களாகிக் கொட்டும் விஷமிருக்கும்.

1016 சம்பா வைக்கோல் சாரைப்பாம்பாகும் வித்தை

அஷ்டமாசித்தி மையை சம்பாவைக்கோலில் தடவிப்போட சாரைப்பாம்பாகும்.

1017 கார்வைக்கோல் கரும்பாம்பாகும் வித்தை

அஷ்டமாசித்தி மையை கார்வைக்கோலில் தடவிப்போட கரும் பாம்பாகும்.

1018 வாடஞ்சம்பா வைக்கோல் நல்லசர்ப்பமாகும் வித்தை

அஷ்டமாசித்தி மையை வாடஞ்சம்பா வைக்கோலில் தடவிப்போட நல்லசர்ப்பமாகும்.

1019 சோளத்தட்டில் நீர்நாகனாகும் வித்தை

அஷ்டமாசித்தி மையை சோளத்தட்டில் தடவிப்போட நீர்நாக னாகி நீரைத் தேடியோடும்.

1020 வரகுவைக்கோல் சிறுபாம்புகளாகும் வித்தை

அஷ்டமாசித்தி மையை வரகுவைக்கோலில் தடவிப்போட சிறு பாம்புகள் வரும்.

1021 நாகமல்லியிலையில் தேளாகும் வித்தை

அஷ்டமாசித்திமையை நாகமல்லியிலையில் தடவிப்போடத் தேளா கும்.

1022 குண்டுமேணியிலையில் செய்யானாகும் வித்தை

அஷ்டமாசித்தி மையை குண்டுமணியிலையில் தடவிப்போட செய் யானாகும்.

1023 தென்னங்குருத்தில் தாழம்பூவாகும் வித்தை

அஷ்டமாசித்தி மையை தென்னங்குருத்தில் தடவிப்போட தாழம்பூவாகும்.

1024 பெருமணல் காராமணியாகும் வித்தை

பெருமணலாசத் தெள்ளியெடுத்து மையைத் தடவிப்போட பார் ப்பவர்களுக்குக் காராமணியாகத் தோன்றும்.

1025 விளாங்காய் உருளும் ஜாலம்

ஓர் விளாங்காயைக் கொண்டுவந்து அதை இரண்டாக உடைத்து உள்ளிருக்கும் பழத்தையெல்லாம் எடுத்துவிட்டு, அதில் சுண்டெலியை விட்டு மூடிப் பிறகு மஞ்சள் குங்குமம் முதலானதுகளைப்பூசி வாச லில்விட புரண்டுக்கொண்டே யிருக்கும். பார்ப்பவர்கள் ஆச்சரியப் படு வார்கள்.

1026 வேறு சுண்ணும்பு வேகாதஜாலம்

எட்டியின் வடவேரைக் கொண்டுவந்து கொளுத்தி எருமை மூத் திரத்தில் அவித்து கருவைத்தடவி சுண்ணும்புக்காளவாயில் புதைத்து விட சுண்ணும்பு வேகாது.

1027 வேறு சூளை வேகாத ஜாலம்

கழுதைமூத்திரம், எருமைமூத்திரம், நாய்மூத்திரம் இதுகளை சமமாகயெடுத்து அதில் ஆச்சாமரக் கட்டைப்போட்டுக் கொளுத்தி பிறகு சூளை போடும்போது காற்றுவாட்டமாக இக்கரிக்கு ஐங்கோலத் தைத் தடவி புதைத்துவிட எவ்வளவு கட்டைபோட்டாலும் சூளை வேகாது.

1028 வேறு மணலை மேல்லும் ஜாலம்

ஜாலமாடும் சபையில் ஒரு கூடைநிறைய மணலைக் கொண்டுவந்து நான் இதையெல்லாம் தின்றுவிடுகிறேன் பாருங்களென்று சொல்லி மாயாசத்தியைத் தியானித்து மாயாசத்திமையை நெற்றியில் இட்டுக் கொண்டு கையிலும் மையைப்பூசி மணலை வாரி வாரி வாயில் போடுகிற மாதிரி பின்புறம் போட்டுவிடக் கண்டவர்கள் நீ மணலைத் தின்னுகிரு யென்றே சொல்லுவார்கள்.

1029 வேறு கத்தியை விழுங்கும் ஜாலம்

ஒரு பெரிய கத்தியை சபையோர்களுக்குக் காட்டி நான் இதை விழுங்கி விடுகிறேன் பாருங்களென்று சொல்லி கணகட்டு மையைத் தடவி மாயாசத்தியை தியானித்து பின்புறம் போட்டுவிடவும். இதைப் பார்த்தவர்கள் நீ கத்தியை விழுங்கிவிட்டாயென்றே ஆச்சரியப்படு வார்கள்.

1030 வேறு கேட்டப்பாறையை விழுங்கும் ஜாலம்

முன்போல் கெட்டப்பாறைக்குச்செய்து கூட குறளிமந்திரத்தைச் செபிக்க கண்டவர்கள் அப்பா இவன் மிகவும் மந்திரவாதி இப்பேர்ப் பட்ட கெட்டப்பாறையை விழுங்கிவிட்டானே யென்று பார்ப்பவர்கள் பிரமிப்பார்கள்.

1031 உலக்கையை விழுங்கும் வித்தை

உலக்கைக்கு மாயாசத்திக் கருவைப்பூசி முன்போல் செய்துக் காட்ட ஆச்சரியப்படுவார்கள். ஆனால் இதற்கு அமாவாசையும் ஞாயிற்றுக் கிழமையுமாக இருந்தால் மிகவும் நலம்.

1032 இரும்புக்குண்டை விழுங்கும் வித்தை

இரும்பு குண்டிற்கு மாயாசத்தி மையைப்பூசி மாடனைத் துதித்து முன்போல் செய்ய ஆச்சரியமா யிருக்கும். ஆனால் மேற்படி மந்திரங்களை யெல்லாம் முன்னுடியே சித்திசெய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

1033 வேறு அஷ்டமாசித்து தைலம்

இப்புத்தகத்தில் சொல்லியிருக்கும் அஷ்டமாசித்து தைலத்துடன் ஐங்கோலஞ் சேர்த்துக் குழப்பி 40-நாள் சமாதிவைத்து எடுத்துக் கொண்டு மறுபடியும் முப்பூசுன்னம் ஒரு கழஞ்சி சேர்த்துக் குழைத்து சிமிழில் வைத்துக்கொள்ளவும்.

1034 பனந்தோப்பு உண்டாகும் வித்தை

சபையோர்களைப் பார்த்து ஓர் பனங்காயை யெடுத்து மேற்படி மையைத்தடவி எறிய பனந்தோப்பு உண்டாகும். பார்த்தவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

1035 நந்தவனம் உண்டாகும் வித்தை

பலவித புஷ்பங்களையும் ஒன்றுகச்சேர்த்து மையைத் தடவி நந்தவனமுண்டாக வேணுமென்று நினைத்து எறிய நந்தவனமுண்டாகும்.

1036 தென்னந்தோப்பு உண்டாகும் வித்தை

தேங்காய்க்கு மையைத்தடவி தென்னந்தோப்பு உண்டாக வேணுமென்று நினைத்து விட்டெறிய தென்னந்தோப்பு உண்டாகும்.

1037 வீடுகளாகும் வித்தை

முழுசெங்கல் ஒன்றை எடுத்து வீடு உண்டாக வேணுமென்று மாயா சத்தியை வணங்கி மையைத்தடவி விட்டெறிய வீடுகள் தோன்றும். அனைவரும் உனக்குக் குறளி வசியமென்று மெச்சுவார்கள்.

1038 ஆகாயத்தில் தேவர்களைக் காட்டும் வித்தை

பலகரையை யெடுத்து மந்திரத்துடன் மையைத்தடவி ஆகாயத்தில் எறிய சமஸ்தமான தேவர்களும் பார்ப்பவர் கண்களுக்குத் தோன்றுவார்கள். ஆனால் இதற்கு ரோகணிநாளாக இருக்கவேணும்.

1039 ரிஷிகளைக் காட்டும் வித்தை

பலாக்கொட்டையை யெடுத்து மையைத் தடவி பலரு மறியக் காட்டி நான் இதை எறிந்து ரிஷிகளை வரவழைக்கிறேன் பாருங்க ளென்று சொல்லி ஆகாயத்தில் விட்டெறிய அனைவர்களுக்கும் அநேக விதமான ரிஷிகள் தோன்றுவார்கள்.

1040 அரசமரம் உண்டாகும் வித்தை

நறுவிலிக் கொட்டைக்கு மேற்படி மையைத்தடவி ஆகாயத்தில் எறிய அரசமரம் தழைத்து ஓங்கி வளர்ந்ததைப்போல் தெரியும்.

104! ஆலமரம் உண்டாகும் ஜாலம்

வாழைப்பழக் கொட்டைக்கு மையைத் தடவி மோகினியைத் தியானித்து எறிய ஆலமரமுண்டாகும்.

1042 வாழைத்தோப்பு தோன்றும் வித்தை

கசகசாவை எடுத்து சத்தியைத் தொழுது ஜனங்களைப் பார்த்து வாழைத்தோப்பு உண்டாகும் வேடிக்கையைப் பாருங்களென்று எறிய அனைவர்களும் பிர்மிக்கும்படி வாழைத் தோப்பானது பூவும் பிஞ்சு டன் தோன்றும்.

1043 ஆலயம் உண்டாகும் வித்தை

சபையோர்களைப் பார்த்து நான் இங்கே ஒரு தேவாலயம் உண் டாக்குகிறேன் பாருங்களென்று சொல்லி ஆண் கெச்சக்காயிற்கு மேற் படி மையைத்தடவி சொர்ன பயிரவரைத் தியானிக்க தேவர்கள் ஆலயம் தோன்றும்.

1044 தடாகம் உண்டாகும் வித்தை

நெல்லிக்காயை மையில் நனைத்து ஆஞ்சநேயரைத் தொழுது எறிய வேஷ்டிதோய்க்கிறதும் குளிக்கின்றதும் ஜெபம் செய்கிறதுமா கிய பெரிய தடாகம் தோன்றும்.

1045 மாந்தோப்பு தோன்றும் வித்தை

மாங்கொட்டை ஒன்றை யெடுத்து மையைத்தடவி எறிய மாந் தோப்பானது காய் கனிகளுடன் தோன்றுவது வெகு விநோதமாக யிருக்கும். ஆனால் இவ்வேலைகளெல்லாம் மூன்றேமுக்கால் நாழிகைக் குள் தோன்றி மறையுமாகையால் வெகு சீக்கிரத்தில் வேலையை முடி த்துவிடவும்.

1046 வேறு முள்ளின்மேல் படுக்கும் வித்தை

சூரிய கிராணம் பிடிக்கும்போது வாழை வடக்கே போகிற வேருக்குக் காப்புகட்டி பிடுங்கிவந்து ஐங்கோலம் பூசி, மாயாசத்தியைத் துதித்து குளிசமாடிக் கட்டிக்கொண்டு எந்த முள்ளின் பேரிலாகிலும் தந்திரமாக உட்காரலாம் அல்லது படுத்துக் கொள்ளலாம்.

1047 எலுமிச்சம்பழம் குதிக்கும் ஜாலம்

சபையில் எலுமிச்சம் பழங்களைக் கொண்டுவந்து தந்திரமாகக் கருவையும் ஐங்கோலத்தையும்பூசி ஆஞ்சநேயரைத் தொழுது போட்டுவிட ஒன்றோடொன்று முட்டிக்கொண்டு குதிக்கும் கண்டவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

1048 வேறு கள்ளனை பிடிக்கும் வித்தை

வாசலில் சுத்தஞ்செய்து பிள்ளையார் பிடித்துவைத்து முறத்தை மெழுகிக் கத்தரிக்கோலை தலையில்சொருகி, இரண்டுபேரை ஆள்காட்டி விரலில் தாங்கச்செய்து வீட்டிலுள்ளவர்களைக் கூப்பிட்டு முறத்தின் பேரில் அக்ஷதையைப் போடச்சொல்ல தடையமுள்ளவர்களுக்குச் சுழலும் ஆனால் தூபதீபத்துடன் செய்யவும்.

1049 இரும்பொட்டாத ஜாலம்

கருமான் உலையில் கெந்தி, தாரம் இவை யிரண்டையும் தூவிவிடக் கருமான் எதைப் பத்தவைத்தாலும் ஒன்றோடொன்று ஒட்டாது.

1050 விதை விதைத்துப் பயிர்செய்துக்காட்ட உபயோகிக்கும் தைல வித்தை

அண்ணுதுளுத்தா, அடிவணங்கி, மதிமயக்கி, பாதாளமூலி, புலித்துடரி, கிரிமூலம் இதுகளின் மூலத்தை நிழலிலுலர்த்தி அதனுடன் ஏரழிஞ்சி விதையைக் கலந்துக் குழித்தைலமிறக்கிப் புட்டியில் வைத்துக்கொண்டு கீழ்சொன்னமாதிரி விரைகளைப் பிசரி காயவைத்துப் பயிர் செய்துக்காட்ட சகல ஜனங்களும் ஆச்சரியப்படுவார்கள்.

1051 நெல்பயிர் காட்டும் ஜாலம்

விதைநெல்லை பௌர்ணமிதினம் மேற்படி தைலத்தில் ஊறப்போட்டு நிழலிலுலர்த்தி எடுத்துக்கொண்டு பிறகு மண்ணில் பாத்திகட்டி ஜலம்விட்டு விதைத்துக் காட்ட நெல் பயிராகும் இதைக் கண்டவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

1052 துணியில் நெருப்பு பிடிக்காத வித்தை

கோழிமுட்டை வெள்ளை அம்பிலியும் படிகாரமும் உப்பும் சமயெடையாகக் கலந்து குட்டைக்குப்பூசி உலர்த்திக்கொண்டால் நெருப்புப் பிடிக்காது.

1053 பழத்தின் சாரங்கள் உண்டாகும் வித்தை

சில ஊர்களில் தேவையான பழங்கள் எப்போதும் அகப்படுகிறதில்லை. ஆகையால், அவர்களும் தமாஷாக வேடிக்கை செய்கிறவர்களும், பழ தினுசுகளை வாங்கி அதுகளின் தோலைப்போக்கி தனித்தனியாக ஒவ்வொன்றையும், (ஆல்கஹால்) என்னும் சாராயத்தில் ஊரப்போட்டு சாரத்தை யிறக்கி வைத்துக்கொண்டால் பிறகு எந்த பழம் ஊரில் அகப்படாதோ அதின் ரசத்தை சபையோர்களுக்குக் கிளாசில் ஜலத்தில் ஊற்றிக்கொடுக்க சாப்பிட்டவர்கள் ஆச்சரியப்பட்டு உனக்கு எக்ஷணி வசியமென்று சொல்லுவார்கள்.

1054 வேறுமுறை மை ஜாலம்

ஐங்கோலப் பிண்டத்தை சூரணித்து அதை சீலையில் வைத்து சுருட்டித் திரியாக்கி, தலைமண்டை யோட்டில், காராயின் நெய்விட்டு அதில் திரியைப்போட்டுக் கொளுத்தி மை யெடுத்துக்கொண்டு காளியைப் பூசைசெய்து நெற்றியில் இட்டுக்கொள்ள ஒருவர் கண்களுக்கும் தெரியமாட்டாய் மையைதுடைத்தால் தோற்றப்படுவாய் இது ரொம்பவும் ஆச்சரியமானது.

1055 வேறு சர்வ மூலிகைகளுக்கும் சாப நிவர்த்தி அறியும் வித்தை

எந்த மூலிகையா யிருந்தபோதிலும் அதின் எதிரில் நின்றுக் கொண்டு ஓம்மூலி, சர்வமூலி, சர்வ சாபமும் நசி நசி என்று நூற்றுயெட்டு உருகொடுத்து காப்புகட்டி பிடுங்கிவந்து வேலைகளுக்கெல்லாம் உபயோகித்துக் கொள்ளலாம்.

1056 சோளப்பயிர் ஜாலம்

சோளத்தை கிருத்திகைதினம் மேற்படி தைலத்தில் ஊறப்போட்டு விதைக்க சோளச்செடியாகும்.

1057 கம்புபயிர் ஜாலம்

கம்பை ஞாயிற்றுக்கிழமை தினம் மேல்கண்டபடி செய்ய செடி முளைக்கும்.

1058 காராமணி வித்தை

காராமணியை சுவாதிதினத்தில் மேற்படி மாதிரி செய்ய செடி முளைக்கும்.

1059 வரகு வித்தை

வரகை பூசத்தில் மேற்படி மாதிரிசெய்ய செடியாகும் ஆனால் இவ் விதைகளை எல்லாம் முன்னதாகவே தைலத்தில் ஊறப்போட்டுக் காய வைத்து, வைத்துக்கொண்டு பிறகு அதற்கு சொல்லியிருக்கும் நாட் களில் செய்ய பார்ப்பவர்கள் மனதைக் கவரும்படியான செடிகள் உடனே முளைக்கும். அதைக் கண்டவர்கள் உன்னை மெச்சிப் புகழ் வார்கள்.

1060 கேழ்வரகு செடி ஜாலம்

கேழ்வரகை அஸ்தத்தில் மேற்சொன்ன மாதிரி செய்து விதைக்க செடியாகும்.

1061 அரைக்கீரை ஜாலம்

அருக்கனில் அரைக்கீரையை முன்சொன்ன மாதிரி விதைக்க செடியாகும்.

1062 சிறுகீரை ஜாலம்

வியாழனில் சிறுகீரை விதையைச் செய்ய முளைக்கும். பார்ப்பவர் மனதை பிர்மிக்கச்செய்யும்.

1063 முளைக்கீரை விநோதம்

கேட்டையில் முளைக்கீரையை செய்ய மகா விநோதமான செடி கள் கிளம்பும்.

1064 காசினிக்கீரை வேடிக்கை

பூரத்தில் காசினி விதைக்குச் செய்ய செடி முளைக்கும். பார்ப்ப வர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

1065 மிளகாசெடியின் விநோதம்

மூலநக்ஷத்திரத்தில் மிளகாய் விதைக்குச் செய்து விதைக்கச் செடி யாகிப் பூ பூர்த்து காய் காய்க்கும்.

1066 பூசினிக்காய் வேடிக்கை

சுவாதியில் பூசனி விதையைப் பாத்தியில் விதைத்து முன்மாதிரி செய்ய வேடிக்கையாக செடி தோன்றும்.

1067 சுரை செடியின் விநோதம்

திங்கள்கிழமை கேட்டையும், அமாவாசையுமாகப் பார்த்து சுரை விதையை விரைக்க உடனே செடியாகிப் பூர்க்கும்.

1068 கத்தரிசெடி முளைக்கும் ஜாலம்

அமாவாசையில் கத்தரி விதையை முன்போல் விதைக்க முளைக்கும். பார்ப்பவர்கள் சந்தோஷப்படுவார்கள்.

1069 பீர்க்கன்செடி வேடிக்கை

பௌர்ணமி தினம் பீர்க்கன் விதையைக் கொண்டுவந்து முன் மாதிரிசெய்ய செடியாகி காய்க்கும்.

1070 புடலன்செடி வித்தை

செவ்வாய்க்கிழமை புடலன் விதையை முன்சொன்ன மாதிரி விதைக்க காய்க்கும்.

1071 பொது ஜாலம்

பொதுவாக இதில் சொல்லப்பட்டிராத விதைகளை யெல்லாம் அமாவாசையும் அருக்கனும் கூடியதினத்தில் விதைக்கவேண்டியதை விதைத்தும், நடவேண்டியதை நட்டும் செய்யவும். ஆனால் எந்த வேலைக்கும் ஜாலக்காளை தியானித்து செய்யவும்.

1072 வேறு தைலம் சேர்க்கும் வித்தை

முன்சொன்ன தைலத்தில் ஏரழிஞ்சியை நீக்கி, ஐங்கோலத்தைச் சேர்த்துக்கொண்டு கீழ்சொன்ன மாதிரி செய்ய ஆச்சரியமாயிருக்கும். தவிர இரண்டு தைலத்தையும் ஒரு பர்வம் வரை சமாதி வைத்து சத்திபூஜை செய்தால் மிகவும் நல்லது.

1073 நரியாகும் வித்தை

நரியின் விலாஎலும்பை எடுத்து மையைத் தடவிப்போட நரியாக ஓடும். பார்ப்பவர்கள் வெகு ஆச்சரியப்படுவார்கள்.

1074 நாயாகும் வித்தை

நாயின் தொண்டை யெலும்பை எடுத்து மையைத் தடவிப்போட நாயாக ஓடும்.

1075 எலியாகும் வித்தை

எலியின் முதுகெலும்பில் தடவிப்போட எலியாக ஓடும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

1076 அணிப்பிள்ளையாகும் வித்தை

அணிப்பிள்ளையின் காலெலும்பை எடுத்து மையைத் தடவிப் போட அணிப்பிள்ளைகளாகும்.

1077 பெருச்சாளியாகும் வித்தை

பெருச்சாளியின் தோலில் மையைத் தடவிப்போட பெருச்சாளியாகும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

1078 புலியாகும் வித்தை

புலியின் வலதுகால் எலும்பில் மையைத் தடவிப்போட புலி காணப்படும்.

1079 மாடாகும் வித்தை

மாட்டின் முதுகெலும்பில் மையைத் தடவிப்போட மாடாகும். பார்ப்பவர்கள் மனதை பிரமிக்கச்செய்யும்.

1080 முள்ளம்பன்றியாகும் வித்தை

முள்ளம்பன்றியின் சிரசில் மையைத் தடவிப்போட முள்ளம் பன்றியாகும்.

1081 கிளியாகும் வித்தை

கிளியின் மூக்கைக் கொண்டுவந்து மையைத் தடவிப்போட கிளியாகும்.

1082 மைனுவாகும் வித்தை

மைனு முதுகெலும்பில் மையைத் தடவிப்போட மைனுவாகும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

1083 காடையாகும் வித்தை

காடையின் கால்எலும்பை மையில்தொட்டுபோட காடையாகும். பார்ப்பவர்கள் மனதை பிரமிக்கச்செய்யும்.

1084 சிட்டுக்குருவியாகும் வித்தை

சிட்டுக்குருவியின் தொடை எலும்பில் மையைத் தடவிப்போட சிட்டுக்குருவியாகும்.

1085 வானம்பாடியாகும் வித்தை

வானம்பாடி வலது இறகில் மையைத் தடவிப்போட வானம் பாடியாகும்.

1086 வாத்தாகும் ஜாலம்

வாத்தின் பக்கவிலா யெலும்பில் மையைத் தடவிப்போட வாத்தாகும்.

1087 வான்கோழியாகும் ஜாலம்

வான்கோழியின் முதுகெலும்பில் மையைத் தடவிப்போட வான்கோழியாகும்.

1088 கோக்காகும் வித்தை

கொக்கின் முதுகெலும்பில் மையைத் தடவிப்போடக் கொக் காகும்.

1089 கோழியாகும் வித்தை

கோழியின் பிச்சை மையில் கலந்து முதுகெலும்பில் தடவிப் போட கோழியாகும்.

1090 கடம்பையாகும் வித்தை

கடம்பைத் தோலில் மையைப்பூசக் கடம்பையாகும். பார்ப்பவர் ஆச்சரியப்படுவார்கள்.

1091 காட்டெருமையாகும் வித்தை

காட்டெருமையின் காலெலும்பில் மையைத் தடவிக்காட்ட காட் டெருமையாகும்.

1092 பூனையாகும் வித்தை

பூனைத்தோலில் மையைத் தடவிப்போட பூனையாகும். பார்ப்ப வர்கள் பிரமிப்பார்கள்.

1093 முயலாகும் வித்தை

முயலெலும்பில் மையைத் தடவிக் காண்பிக்க முயல் ஓடும். பார் ப்பவர்கள் ஆனந்திப்பார்கள்.

1094 பன்றிதோன்றும் வித்தை

பன்றிமுதுகெலும்பில் மையைத்தடவி சபைமுன் போடப் பன்றி உறுமிக்கொண்டு நிற்கும்.

1095 மானாகும் வித்தை.

மான்தோலை சபையில் காட்டி மையைத் தடவிப்போட மான் துள்ளிக் குதிக்கும்.

1096 புள்ளிமானாகும் வித்தை

புள்ளிமான் எலும்பில் மையைத் தடவிப்போட புள்ளிமான் ஆகும்.

1097 பூர்வபக்ஷம் அக்ஷரப்பட்சி

அ-வல்லூறு, இ-ஆந்தை, உ-காகம், எ-கோழி, ஒ-மயில் என்ற ஐந்து எழுத்தும் பட்சிகளுக்குரிய எழுத்துகளாகும்.

1098 பஞ்சாட்சரப்பட்சி

ந-வல்லூறு, ம-ஆந்தை, சி-காகம், வ-கோழி, ய-மயில் இவை ஐந்தும் பஞ்சாட்சரப் பட்சியாம். இதை அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தெழுத்தைக் கொண்டு அந்தந்த சக்கரத்திற்கு ஏற்றவாறு மாறிப் பிரித்துக் கொள்ளவேண்டும்.

1099 பூர்வபக்ஷம் திதிப்பட்சி

பிரதமை, சஷ்டி, ஏகாதசி இது மூன்றும் வல்லூறு. துதிகை, சப்தமி, துவாதசி இது மூன்றும் ஆந்தை. திரிதிகை, அஷ்டமி, திரயோதசி இது மூன்றும் காகம். சதுர்த்தசி, நவமி, சதுர்த்தி இது மூன்றும் கோழி. பஞ்சமி, தசமி, பௌர்ணமி இது மூன்றும் மயில். இதுகளே திதிப்பட்சிகளாகுமென்று கூறினர்.

1100 பூர்வபக்ஷம் இராசிப்பட்சி

மேஷம், விருச்சிகம், சிங்கம் இவை மூன்றும் வல்லூறு. கடகம், மிதுனம், கன்னி இவை மூன்றும் ஆந்தை. தனுசு, மீனம் இவை இரண்டும் காகம். துலாம், ரிஷபம் இவை இரண்டும் கோழி. மகரம், கும்பம் இவை இரண்டும் மயில். இவையே இராசிப் பட்சிகளாகும்.

1101 பூர்வபக்ஷம் நட்சத்திரப்பட்சி

அஸ்வனி, பரணி, கிருத்திகை, ரோகணி, மிருகசீரிடம் இந்த ஐந்தும் வல்லூறு. திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயில்யம், மகம், பூரம் இந்த ஆறும் ஆந்தை. உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம் இவ்வைந்தும் காகம். அநுடம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம் இவ்வைந்தும் கோழி. திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி இந்த ஆறும் மயில். இவையே நட்சத்திரப் பட்சிகளாகுமென்று பெரியோர் கூறினர்.

1102 பூர்வபக்ஷம் பகல் பட்சிகளின் தொழில்காலம்

அ—வல்லூறு ஊண் (ஒண்ணரை) இ—ஆந்தை நடை (ஒண்ணே கால்) உ—காகம் அரசு (இரண்டு) எ—கோழி நித்திரை (முக்கால்)

ஒ—மயில் மரணம் (அரை) ஆக நாழிகை 6-க்கு ஜாமம்—1. இந்த ஜாமம் ஒன்றிலேயே பட்சிகளுக்கு எல்லா வேலைகளுந் தீருகிறதாகை யால் புத்திமான்கள் எந்தெந்தக் காலத்தில் எது எது செய்யத்தக்கதோ அந்தக் காலத்தில் அந்தந்த வேலைகளைச்செய்து சித்திபெறுவாயாக.

1103 மணிகளின் விபரம்

நாள் 1-க்கு மணி—12. மணி 12-க்கு நாழிகை—30. நாழிகை 30-க்கு ஜாமம்—5. ஜாமம் 1-க்கு நாழிகை—6. நாழிகை 6-க்கு மணி—2-ம் மினிட் 24-ம் என்று அறிக.

1104 பூர்வபக்ஷம் பகல் வாரம் 7-க்கும் ஊண்பட்சி

செவ்வாய், ஞாயிறு வல்லூறு. திங்கள், புதன் ஆந்தை. வியாழம் காகம். வெள்ளி கோழி. சனி மயில் இதுகள் ஊண்பட்சியாகும்.

1105 பூர்வபக்ஷம் பகல் வாரம் 7-க்கும் படுபட்சி

ஞாயிறு, வெள்ளி ஆந்தை. வியாழம், சனி வல்லூறு. திங்கள் காகம். செவ்வாய் கோழி. புதன் மயில் இவைகள் படுபட்சியாகும்.

1106 பூர்வபக்ஷம் பகல் வாரம் 7-க்கும் பஞ்சாட்சரபட்சி

செவ்வாய், ஞாயிறு நமசிவய. திங்கள், புதன் மசிவயந. வியாழம் சிவயநம. வெள்ளி வயநமசி. சனி யநமசிவ இதுவே ஐந்து பட்சிக்கும் ஐந்து எழுத்து. இதையே பஞ்சாட்சரமெனப்படும். தவிர,

1107 பஞ்சாட்சர சுருக்கம்

இப்பஞ்சாட்சரமானது எப்படிப்பட்ட தென்றால், நகார, மகார, சிகார, வகார, யகாரங்களாகிய இவ்வைந்தெழுத்தும் முறையே பிரிதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களையும், சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம் என்ற ஐந்து ஞானேந்திரி யங்களையும், வாக்கு, பாதம், பாணி, பாயுறு, உபஸ்தம் என்ற பஞ்ச கன்மேந்திரியங்களையும், சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்ற பஞ்சதன்மாத்திரைகளையும், நிவர்த்தி, பிரதிஷ்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை, என்ற பஞ்ச கலைகளையும், கன்மதாக்கியம், கர்த்துரு சாதாக்கியம், மூர்த்திசாதாக்கியம், அமூர்த்திசாதாக்கியம், சிவசாதாக் கியம் என்ற பஞ்ச சாதாக்கியங்களையும், கிரியாசத்தி, ஞானசத்தி, இச்சாசத்தி, ஆதிசத்தி, பாாசத்தி என்ற பஞ்சசத்திகளையும், சத்தி யோஜாதம், வாமதேவம், அகோரம், தற்புருடம், ஈசானம் என்ற பஞ்ச பிரமாக்களையும், பிரமா, விஷ்ணு, ருத்திரன், மகேச்சுரன், சதாசிவன் என்ற பஞ்ச கர்த்தாக்களையும், சிருஷ்டி, திதி, சங்காரம்,

திரோபவம், அநுக்கிரகம் என்ற பஞ்சகிர்த்தியங்களையும், அகாரம், உகாரம், மகாரம், விந்து, நாதம் என்ற பஞ்ச வர்னங்களையும், வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில் என்னும் பஞ்சபட்சிகளையும், பஞ்சாட்சரமானது தனக்குள் அடக்கிக் கொண்டிருத்தலால் எந்த மந்திரங்களுக்கும் இந்த பஞ்சபட்சிகளை முக்கிய பிராணாதாரமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

1108 பக்ஷிகளின் குறிப்பறிதல்

எதிராளியோ (அல்லது) வந்திருப்பவனையோ நோக்குவதோடு அவன் சொல்லும் முதலெழுத்தையும், அவன் நின்றதிசையையும், அவனுடைய பேதாபேதத்தையும் பார்ப்பதோடு நாள், நட்சத்திரம், இராசி, திதி இவைகளுடன் (ந ம சி வ ய) என்ற பஞ்ச அக்ஷரத்தையும் சேர்த்து பட்சி இன்னதென அறிந்து வேலை செய்வது உத்தமமென்று அறிவுடையோர் கூறினர்.

1109 பூர்வபக்ஷம் இரவு பட்சிகளின் தொழில்காலம்

உ—காகம் ஊண் (ஒண்ணேகால்) அ—வல்லூறு அரசு (ஒன்று) எ—கோழி மரணம் (ஒண்ணரை) இ—ஆந்தை நடை (ஒண்ணேகால்) ஒ—மயில் நித்திரை (ஒன்று) ஆக தொழில் செய்யும்.

1110 பூர்வபக்ஷம் இரவு வாரம் 7-க்கும் ஊண்பட்சி

ஞாயிறு - செவ்வாய் காகம், திங்கள் - புதன் கோழி, வியாழம் மயில், வெள்ளி வல்லூறு, சனி ஆந்தை இதுகள் ஊண் பட்சிகளாகும்.

1111 பூர்வபக்ஷம் இரவு வாரம் 7-க்கும் பஞ்சாட்சரப்பட்சி

ஞாயிறு-செவ்வாய் சிநவமய, திங்கள்-புதன் வமயசிந, வியாழம் யசிநவம, வெள்ளி நவமயசி, சனி மயசிநவ என்றதையே பஞ்சாட்சரப் பட்சி என்று மேலோர் கூறினர்.

1112 பக்ஷியின் சத்துரு அறிதல்

வல்லூறுக்கு-காகம் கோழியும், ஆந்தைக்கு - கோழி மயிலும், காகத்திற்கு-மயில் வல்லூறும், கோழிக்கு-வல்லூறு ஆந்தையும், மயிலுக்கு-ஆந்தை காகமும் சத்துருபக்ஷியாகும்.

1113 பக்ஷிகளின் மித்துரு அறிதல்

வல்லூறுக்கு-மயில் ஆந்தையும், ஆந்தைக்கு-வல்லூறு காகமும், காகத்திற்கு-ஆந்தை கோழியும், கோழிக்கு-காகம் மயிலும், மயிலுக்கு-கோழி வல்லூறும் மித்துரு பக்ஷியாகும்.

1114 சத்துரு பக்ஷியின் பலன்

சத்துரு பட்சியைச் சேர்த்துக்கொண்டு வித்தையாடில் வாராத இடுக்கணெல்லாம் வரும். மனதிற்குத் துயரமுண்டாகும். நாம் செய்யும் எந்த வேலைகளுக்கும் இடையூறு சம்பவிக்கும். எந்த காரியமும் பலியாது. நஷ்டத்தைக்கொடுக்கும். ஆதலால் சத்துரு பட்சியை நீக்கி, மித்துரு பட்சியை சேர்த்துக்கொண்டு வித்தைகளாடவும்.

1115 மித்துரு பக்ஷியின் பலன்

மித்துரு பட்சியைச்சேர்த்துக்கொண்டு வித்தையாட உலகிலுள்ள எல்லாப் பிராணிகளும், பொருள்களும் உன்வசமாகும். உன் எதிராளிகளெல்லாம் வணங்கி உன்னைக்கூடுவார்கள். எடுத்த காரியங்களெல்லாம் சித்தியாகும். சொல்லுமிடத்தில் கடல்சூழ்ந்த உலகில் உனக்கு நிகர் நீயேயன்றி உன்னை வெல்பவர்களும் உலகிலுண்டோ! ஆகையால் யாதொரு கர்மத்திற்கும் மித்துரு பக்ஷியைச் சேர்த்துக்கொண்டு வித்தையாடுவது நலமென்று ஆராய்ந்த மனதையுடைய பெரியோர்கள் கூறினர்.

1116 மச்சத்தைக்கொண்டு பக்ஷி அறியும் வகை

சாதாரணமாய் ஒரு மனிதனுடைய உண்மையான பக்ஷி இன்னதென அறியவேண்டில் வல்லூறுக்கு-முதுகிலும், ஆந்தைக்கு-உச்சி (அல்லது) கையின் கீழும், காகத்திற்கு-புயமும் மார்பும், கோழிக்கு-முகம் கண்டமும், மயிலுக்கு-துடை முழங்கால் இவைகளில் மச்சமிருக்குமென்று அறிந்து பட்சிகளைக் கண்டுகொள்ளவும்.

1117 உண்டியின் பலன்

போசனமாகில்பதிவாழும் போனூர்மீள்வர்போங்கவலை
காசினிவாழுமழைபொழியுங் களவுமில்லைக்கதிர்விளையும்
பேசில்கன்னிப்பேராகும் பிணியுந்தீரும்பெண்பெறுவர்
வாசிசெழும்பொன்வாணிபமா மன்னரைவெல்வாய்மாங்குயிலே.

1118 நடையின் பலன்

யாத்திரையாகில்நிலைகுலையு மொன்னூர்வெல்வரிருநிதிபோங்
காத்திரமில்லாக்கதிர்விளையுங் கன்னியர்வாழ்க்கைநன்றாகா
மாத்திரள்செல்லும்பொருள்கூடா வேட்கைதவிழ்ந்துமணங்கூடா
சூத்திரஞ்சொன்னபடியாலே சொன்னூர்பெரியோர்சுரிகுழலே.

1119 அரசின் பலன்

அரசேசெய்யும்புவிபோரா மரசராலேபலனெய்து
முரசமதிரும்வரிசையுடன் மூண்டகருமந்தான்விலகும்

பரிசம்பெரியோர்திறலிடுவர் பழையபிணிபோம்பயமில்லை
புரைபோங்களவுதான்காணும் போக்குமில்லைப்புரிகுழலே.

1120 நித்திரையின் பலன்

தூங்குமாகில்நோய்மாறு தூரம்போனூர்தாமீளார்
ஆங்கேகருமம்நன்ருகா வரிவைவாழ்க்கைதாழ்வாகுந்
தீங்கேயல்லால்மழைபொழியாச் செந்நெல்விளையாசெய்குமியீர்
ஓங்கிமணமுந்தாராதே வுண்மையாகவுரைத்தேனே.

1121 மரணத்தின் பலன்

துஞ்சுமாகிற்சாவுசொல்லுந் துலையாப்பிணியுந்தானெய்தும்
நெஞ்சினினைத்தப்பொருள்கூடா நிதியுங்காணூர்நிலைகுலைவார்
வஞ்சநோயுமிகவுண்டா மனையாள்வெறுக்கிலுறவாகாள்
கஞ்சமலராள்குழலாளே கருத்தாயுரைத்தபடியறியே.

1122 போது பலன்

தனதுபக்ஷி உண்டி, அரசு ஆகிய தொழில் செய்யுங்காலத்தில் பிரயாணம் பண்ணுதல், பயிர்செய்தல், பகைவெல்லல், அரசரைக்காணல், அரம்பாடல், ஆடு மாடு கொள்ளல், விற்றல், தர்க்கம் பண்ணுதல், பிரசங்கஞ் செய்தல், உத்தியோகஞ்செய்தல் வர்த்தகஞ் செய்தல் முதலிய சுபகாரியமெல்லாம் செய்ய உத்தமபலனைக்கொடுக்கும். நடை மத்திமபலனைக் கொடுக்கும். துயில், சாவு அதமபலனைக் கொடுக்கும்.

1123 வேர்பிடுங்கும் ஜாலம்

பட்சியானது ஊணில் இருக்கும்போது வேர்பிடுங்கிக் குளிசமாடிக் கட்டிக்கொண்டால் நினைத்த காரியங்களெல்லாஞ் சித்தியாவதுடன் கொடிய சத்துருவும் வணங்கி வருவான். நாம் எடுத்த காரியங்கள் யாவும் சித்தியாகி உலகில் ஒருவரும் நமக்கீடில்லை யென்று சொல்லும் படியான கீர்த்திவரும்.

1124 வேறு

பட்சியானது நடையில் இருக்கும்போது வேர்பிடுங்கி குளிசமாடிக் கட்டிக்கொண்டால் அய்யோ! பிரமனுடைய வாழ்நாள் பரியந்தம் சொல்லொணு துன்பமனுபவிப்பதுடன் எக்காரியங்களுக்கும் இடையூறுகள் நேரிடும்.

1125 வேறு

பட்சியானது அரசில் இருக்கும்போது வேர்பிடுங்கி குளிசமாடிக் கட்டிக்கொண்டால் அலை மோதுகின்ற கடல்சூழ்ந்த உலகில் உனக்கு நிகரொருவருமில்லை. தவிர நீ கோருகின்ற காரியங்களும் ஆகாமற் போகுமா?

1126 வேறு

பட்சியானது நித்திரையி லிருக்கும்போது வேர்பிடுங்கி குளிச மாடிக் கட்டிக்கொண்டால் பகையாளிகள் உன்னை வெல்லமாட்டார்கள். சகலகாரியமும் ஆகும். ஆனால் நீ வேர் பிடுங்கும்போதுமாத்திரம் பிற ருக்குக் கெடுதலையான காரியங்களை மனதில் நினையாமல் பிடுங்கவேண் டும். என் அப்படி செய்யவேணுமென்றால், அவ்வேளையினுடைய வலுவானது எதிரியைக் கெடுக்கும் அதனால் உனக்குப் பாபமும், பழி யும் சம்பவிக்கும்.

1127 வேறு

மரணவேளையில் வேர்பிடுங்கி குளிசமாடிக் கட்டிக்கொண்டால் உனக்கு எதிரிகளில்லையானாலும் சண்டாள வேளையானதால் ஜெயிக் காது. கேடுவரும். பொருள்போகும், உயிர்க்காபத்து இன்னும் அனு பவிக்காத துன்பத்தை அனுபவிக்கச் செய்யும். ஆகையால் எப்போ தும் ஆராய்ந்த மனதையுடைய விவேகிகள் ஊண் அரசு தவிர இதர காலங்களில் எக்காரியமும் செய்யமாட்டார்கள்.

ஞாயிறு, செவ்வாய் பூர்வபக்ஷம் பகல்ஜாமம் ஐந்திற்கும் பக்ஷிகளின் தொழில்

1128 முதல் ஜாமம்

வல்லூறு உண்ணும், ஆந்தை நடக்கும், காகம் அரசாளும், கோழி நித்திரைபோகும், மயில் மரணமாகும்.

1129 இரண்டாவது ஜாமம்

மயில் ஊண், வல்லூறு நடை, ஆந்தை அரசு, காகம் நித்திரை, கோழி மரணம்.

1130 மூன்றாவது ஜாமம்

கோழி ஊண், மயில் நடை, வல்லூறு அரசு, "ஆந்தை நித்திரை, காகம் மரணம்.

1131 நான்காவது ஜாமம்

காகம் ஊண், கோழி நடை, மயில் அரசு, வல்லூறு நித்திரை, ஆந்தை மரணம்.

1132 ஐந்தாவது ஜாமம்

ஆந்தை ஊண், காகம் நடை, கோழி அரசு, மயில் நித்திரை, வல்லூறு மரணம்.

ஞாயிறு, செவ்வாய் பூர்வபக்ஷம் இரவு ஜாமம் ஐந்திற்கும் பக்ஷிகளின் தொழில்

1133 முதல் ஜாமம்

காகம் ஊண், வல்லூறு அரசு, கோழி மரணம், ஆந்தை நடை, மயில் நித்திரை.

1134 இரண்டாவது ஜாமம்

மயில் ஊண், காகம் அரசு, வல்லூறு மரணம், கோழி நடை, ஆந்தை நித்திரை.

1135 மூன்றாவது ஜாமம்

ஆந்தை ஊண், மயில் அரசு, காகம் மரணம், வல்லூறு நடை, கோழி நித்திரை.

1136 நான்காவது ஜாமம்

கோழி ஊண், ஆந்தை அரசு, மயில் மரணம், காகம் நடை, வல்லூறு நித்திரை.

1137 ஐந்தாவது ஜாமம்

வல்லூறு ஊண், கோழி அரசு, ஆந்தை மரணம், மயில் நடை, காகம் நித்திரை.

திங்கள், புதன் பூர்வபக்ஷம் பகல் ஜாமம் ஐந்திற்கும் பக்ஷிகளின் தொழில்

1138 முதல் ஜாமம்

ஆந்தை ஊண், காகம் நடை, கோழி அரசு, மயில் நித்திரை, வல்லூறு மரணம்.

1139 இரண்டாவது ஜாமம்

வல்லூறு ஊண், ஆந்தை நடை, காகம் அரசு, கோழி நித்திரை, மயில் மரணம்.

1140 மூன்றாவது ஜாமம்

மயில் ஊண், வல்லூறு நடை, ஆந்தை அரசு, காகம் நித்திரை, கோழி மரணம்.

1141 நான்காவது ஜாமம்

கோழி ஊண், மயில் நடை, வல்லூறு அரசு, ஆந்தை நித்திரை, காகம் மரணம்.

1142 ஐந்தாவது ஜாமம்

காகம் ஊண், கோழி நடை, மயில் அரசு, வல்லூறு நித்திரை, ஆந்தை மரணம்.

திங்கள், புதன் பூர்வபக்ஷம் இரவு ஜாமம் ஐந்திற்கும் பக்ஷிகளின் தொழில்

1143 முதல் ஜாமம்

கோழி ஊண், ஆந்தை அரசு, மயில் மரணம், காகம் நடை, வல்லூறு நித்திரை.

1144 இரண்டாவது ஜாமம்

வல்லூறு ஊண், கோழி அரசு, ஆந்தை மரணம், மயில் நடை, காகம் நித்திரை.

1145 மூன்றாவது ஜாமம்

காகம் ஊண், வல்லூறு அரசு, கோழி மரணம், ஆந்தை நடை, மயில் நித்திரை.

1146 நான்காவது ஜாமம்

மயில் ஊண், காகம் அரசு, வல்லூறு மரணம், கோழி நடை, ஆந்தை நித்திரை.

1147 ஐந்தாவது ஜாமம்

ஆந்தை ஊண், மயில் அரசு, காகம் மரணம், வல்லூறு நடை, கோழி நித்திரையாகும்.

வியாழம், பூர்வபக்ஷம் பகல் ஜாமம் ஐந்திற்கும் பக்ஷிகளின் தொழில்

1148 முதல் ஜாமம்

காகம் ஊண், கோழி நடை, மயில் அரசு, வல்லூறு நித்திரை, ஆந்தை மரணம்.

1149 இரண்டாவது ஜாமம்

ஆந்தை ஊண், காகம் நடை, கோழி அரசு, மயில் நித்திரை, வல்லூறு மரணம்.

1150 மூன்றாவது ஜாமம்

வல்லூறு ஊண், ஆந்தை நடை, காகம் அரசு, கோழி நித்திரை, மயில் மரணம்.

1151 நான்காவது ஜாமம்

மயில் ஊண், வல்லூறு நடை, ஆந்தை அரசு, காகம் நித்திரை, கோழி மரணம்.

1152 ஐந்தாவது ஜாமம்

கோழி ஊண், மயில் நடை, வல்லூறு அரசு, ஆந்தை நித்திரை, காகம் மரணம்.

வியாழம் பூர்வபக்ஷம் இரவுஜாமம் ஐந்திற்கும் பக்ஷிகளின் தொழில்

1153 முதல் ஜாமம்

மயில் ஊண், காகம் அரசு, வல்லூறு மரணம், கோழி நடை, ஆந்தை நித்திரை.

1154 இரண்டாவது ஜாமம்

ஆந்தை ஊண், மயில் அரசு, காகம் மரணம், வல்லூறு நடை, கோழி நித்திரை.

1155 மூன்றாவது ஜாமம்

கோழி ஊண், ஆந்தை அரசு, மயில் மரணம், காகம் நடை, வல்லூறு நித்திரை.

1156 நான்காவது ஜாமம்

வல்லூறு ஊண், கோழி அரசு, ஆந்தை மரணம், மயில் நடை, காகம் நித்திரை.

1157 ஐந்தாவது ஜாமம்

காகம் ஊண், வல்லூறு அரசு, கோழி மரணம், ஆந்தை நடை, மயில் நித்திரை.

வெள்ளி பூர்வபக்ஷம் பகல்ஜாமம் ஐந்திற்கும் பக்ஷிகளின் தொழில்

1158 முதல் ஜாமம்

கோழி ஊண், மயில் நடை, வல்லூறு அரசு, ஆந்தை நித்திரை, காகம் மரணம்.

1159 இரண்டாவது ஜாமம்

காகம் ஊண், கோழி நடை, மயில் அரசு, வல்லூறு நித்திரை, ஆந்தை மரணம்.

1160 மூன்றாவது ஜாமம்

ஆந்தை ஊண், காகம் நடை, கோழி அரசு, மயில் நித்திரை, வல்லூறு மரணம்.

1161 நான்காவது ஜாமம்

வல்லூறு ஊண், ஆந்தை நடை, காகம் அரசு, கோழி நித்திரை, மயில் மரணம்.

1162 ஐந்தாவது ஜாமம்

மயில் ஊண், வல்லூறு நடை, 'ஆந்தை அரசு, காகம் நித்திரை, கோழி மரணம்.

வெள்ளி பூர்வபக்ஷம் இரவுஜாமம் ஐந்திற்கும் பக்ஷிகளின் தொழில்

1163 முதல் ஜாமம்

வல்லூறு ஊண், கோழி அரசு, ஆந்தை மரணம், மயில் நடை, காகம் நித்திரை.

1164 இரண்டாவது ஜாமம்

காகம் ஊண், வல்லூறு அரசு, கோழி மரணம், ஆந்தை நடை, மயில் நித்திரை.

1165 மூன்ருவது ஜாமம்

மயில் ஊண், காகம் அரசு, வல்லூறு மரணம், கோழி நடை, ஆந்தை நித்திரை.

1166 நான்காவது ஜாமம்

ஆந்தை ஊண், மயில் அரசு, காகம் மரணம், வல்லூறு நடை, கோழி நித்திரை.

1167 ஐந்தாவது ஜாமம்

கோழி ஊண், ஆந்தை அரசு, மயில் மரணம், காகம் நடை, வல்லூறு நித்திரையாகுமென்று கூறுவர் பெரியோர்.

சனி, பூர்வபக்ஷம் பகல்ஜாமம் ஐந்திற்கும் பக்ஷிகளின் தொழில்

1168 முதல் ஜாமம்

மயில் ஊண், வல்லூறு நடை, ஆந்தை அரசு, காகம் நித்திரை, கோழி மரணமாம்.

1169 இரண்டாவது ஜாமம்

கோழி ஊண், மயில் நடை, வல்லூறு அரசு, ஆந்தை நித்திரை, காகம் மரணம்.

1170 மூன்ருவது ஜாமம்

காகம் ஊண், கோழி நடை, மயில் அரசு, வல்லூறு நித்திரை, ஆந்தை மரணம்.

1171 நான்காவது ஜாமம்

ஆந்தை ஊண், காகம் நடை, கோழி அரசு, மயில் நித்திரை, வல்லூறு மரணம்.

1172 ஐந்தாவது ஜாமம்

வல்லூறு ஊண், ஆந்தை நடை, காகம் அரசு, கோழி நித்திரை, மயில் மரணம்.

சனி பூர்வபக்ஷம் இரவுஜாமம் ஐந்திற்கும் பக்ஷிகளின் தொழில்

1173 முதல் ஜாமம்

ஆந்தை ஊண், மயில் அரசு, காகம் மரணம், வல்லூறு நடை, கோழி நித்திரை.

1174 இரண்டாவது ஜாமம்

கோழி ஊண், ஆந்தை அரசு, மயில் மரணம், காகம் நடை, வல்லூறு நித்திரை.

1175 மூன்ருவது ஜாமம்

வல்லூறு ஊண், கோழி அரசு, ஆந்தை மரணம், மயில் நடை, காகம் நித்திரை.

1176 நான்காவது ஜாமம்

காகம் ஊண், வல்லூறு அரசு, கோழி மரணம், ஆந்தை நடை, மயில் நித்திரை.

1177 ஐந்தாவது ஜாமம்

மயில் ஊண், காகம் அரசு, வல்லூறு மரணம், கோழி நடை, ஆந்தை நித்திரையாகுமென்று ஆராய்ந்த மனதையுடைய பெரியோர்கள் கூறினர்.

1178 அமரபக்ஷம் அக்ஷரப்பக்ஷி

அ—கோழி. இ—வல்லூறு. உ—ஆந்தை. எ—மயில். ஒ—காகம். இதுவே அமரபட்சத்திற்குரிய பக்ஷிகள்.

1179 அமரபக்ஷம் திதிப்பக்ஷி

பிரதமை-சஷ்டி-ஏகாதசி இது மூன்றும் மயில், துதிகை-சப்தமி-துவாதசி இது மூன்றும் கோழி, திரிதியை-அஷ்டமி-திரயோதசி இது மூன்றும் காகம், சதுர்த்தி-நவமி-சதுர்த்தசி இது மூன்றும் ஆந்தை,

பஞ்சமி-தசமி-அமாவாசை இது மூன்றும் வல்லூறு இதுவே அமரபட்சத் திதிப்பக்ஷிகளாகும்.

1180 அமரபக்ஷம் இராசிப்பக்ஷி

கடகம்-மயில், மேஷம்-விருச்சிகம் இதுகள் கோழி, கன்னி-சிங்கம்-மகரம் இதுகள் காகம், தனுசு-கும்பம்-மிதுனம் இதுகள் ஆந்தை, துலாம்-மீனம்-ரிஷபம் இதுகள் வல்லூறு இவைகளே அமரபக்ஷ இராசிப்பக்ஷிகளாகும்.

1181 அமரபக்ஷம் நக்ஷத்திரப்பக்ஷி

அஸ்வனி-பரணி-கார்த்திகை-ரோகணி-மிருகசீரிடம் இது ஐந்தும் மயில். திருவாதிரை-புநர்பூசம்-பூசம்-ஆயில்யம்-மகம்-பூரம் இது ஆறும் கோழி. உத்திரம்-அஸ்தம்-சித்திரை - சுவாதி-விசாகம் இது ஐந்தும் காகம். அனுடம்-கேட்டை-மூலம்-பூராடம்-உத்திராடம் இது ஐந்தும் ஆந்தை. திருவோணம்-அவிட்டம்-சதயம் - பூரட்டாதி-உத்திரட்டாதி-ரேவதி இது ஆறும் வல்லூறு இவைகளே நக்ஷத்திரப்பக்ஷிகளாகும்.

1182 அமரபக்ஷம் பகல் பக்ஷிகளின் தொழிற்காலம்

அ—கோழி ஊண்-2, இ—வல்லூறு மரணம்-$1\frac{1}{4}$, உ—ஆந்தை நித்திரை-$\frac{1}{2}$, எ—மயில் அரசு-$\frac{3}{4}$, ஒ—காகம் நடை-$1\frac{1}{2}$, ஆக நாழிகை 6-க்கு ஜாமம்-1. இந்த ஜாமம் ஒன்றிலேயே பக்ஷிகளுக்கு எல்லாவேலைகளுந் தீருகிறதாகையால் புத்திமான்கள் எந்தெந்தக் காலத்தில் எந்தெந்த வேலைகளைச் செய்யவேணுமோ அந்தந்தக் காலத்தில் அந்தந்த வேலைகளைச் செய்து சித்திபெறவும்.

1183 அமரபக்ஷம் பகல் வாரம் 7-க்கும் ஊண்பட்சி

திங்கள்-சனி மயில், ஞாயிறு-செவ்வாய் கோழி, புதன்-காகம், வியாழம்-ஆந்தை, வெள்ளி-வல்லூறு இதுகள் அமரபக்ஷம் பகல் ஊண பக்ஷியாகும்.

1184 அமரபக்ஷம் பகல்வாரம் 7-க்கும் படுபட்சி

திங்கள்-ஆந்தை, செவ்வாய்-வல்லூறு, ஞாயிறு-காகம், வெள்ளி-புதன் மயில், வியாழம்-சனி கோழி இதுகள் அமரபக்ஷ படுபட்சியாகும்.

1185 அமரபட்சம் பகல்வாரம் 7-க்கும் பஞ்சாட்சரப்பட்சி

ஞாயிறு-செவ்வாய் வமயசிந, சனி - திங்கள் யசிநவம, வெள்ளி-நவமயசி, வியாழம்-மயசிநவ, புதன்-சிநவமய இதுவே அமரபக்ஷ பஞ்சாட்சரப்பக்ஷியாகும்.

1186 அமரபட்சம் இரவு பக்ஷிகளின் தொழிற்காலம்

அ-கோழி ஊண் $1\frac{3}{4}$, இ-வல்லூறு நித்திரை $\frac{3}{4}$, உ-ஆந்தை நடை $1\frac{3}{4}$, எ-மயில் மரணம் 1, ஒ-காகம் அரசு $\frac{3}{4}$ இதை அறிந்து தொழில் செய்யவும்.

1187 அமரபட்சம் இரவு வாரம் 7-க்கும் ஊண்பட்சி

சனி-திங்கள்-கோழி, வெள்ளி-மயில், புதன்-ஆந்தை, வியாழம்-காகம், செவ்வாய்-ஞாயிறு-வல்லூறு இது அமரபக்ஷ ஊண் பட்சியாகும்.

1188 அமரபட்சம் இரவுவாசம் 7-க்கும் பஞ்சாட்சரப்பக்ஷி

சனி-திங்கள்-வசிமநய, வெள்ளி-யவசிமந, ஞாயிறு-செவ்வாய் நயவசிம, புதன்-மநயவசி, வியாழம்-சிமநயவ இது அமரபட்ச பஞ் சாட்சரப் பட்சியாகும்.

1189 அமரபட்சம் சத்துருப்பக்ஷி அறிதல்

வல்லூறுக்கு-கோழி ஆந்தை, ஆந்தைக்கு-வல்லூறு மயில், காகத் திற்கு-மயில் கோழி, கோழிக்கு-காகம் வல்லூறு, மயிலுக்கு-ஆந்தை காகமும் சத்துருப்பட்சியாகும்.

1190 அமரபட்சம் மித்துருப்பக்ஷி அறிதல்

வல்லூறுக்கு - காகம் மயில், ஆந்தைக்கு - கோழி காகம், காகத் திற்கு-ஆந்தை வல்லூறு, கோழிக்கு-மயில் ஆந்தை, மயிலுக்கு-வல் லூறு கோழியும் மித்துருப் பட்சியாகும்.

1191 அமரபட்சத்தில் கோழியாக அறிதல்

அ, ஆ, ஐ, ஔ இவ்வுயிர்களுடன் க, கா, கை, கௌ, ச, சா, சை, சௌ, த, தா, தை, தௌ, வ, வா, வை, வௌ, ந, நா, நை, நௌ, ப, பா, பை, பௌ, ம, மா, மை, மௌ முதலிய இவ்வுயிர் மெய்களுக்கும் பூர்வபக்ஷத்தில் வல்லூறாகவும், அமரபக்ஷத்தில் கோழியாகவும் வரும்.

1192 அமரபட்சம் வல்லூறாக அறிதல்

இ, ஈ இவ்வுயிர்களுக்கு கி, கீ, சி, சீ, தி, தீ, நி நீ, பி, பீ, மி, மீ, வி, வீ முதலிய உயிர்மெய்களுக்கு பூர்வபக்ஷம் ஆந்தையாகவும் அமர பக்ஷம் வல்லூறாகவும் வரும்.

1193 அமரபட்சத்தில் ஆந்தையாக அறிதல்

உ, ஊ இவ்வுயிர்களுக்கு, கு, கூ, சு, சூ, து, தூ, நு நூ, பு பூ, மு, மூ முதலிய உயிர் மெய்களும் பூர்வபக்ஷத்தில் காகமும், அமரபக்ஷத்தில் ஆந்தையாகவும் வரும்.

1194 அமரபட்சத்தில் மயிலாக அறிதல்

எ, ஏ இவ்வுயிர்களுக்கு, கெ, கே, செ, சே, தெ, தே, நெ, நே, பெ, பே, மெ, மே, வெ, வே முதலிய உயிர்மெய்களுக்கு பூர்வபக்ஷத்தில் கோழியாகவும், அமரபக்ஷத்தில் மயிலாகவும் வரும்.

1195 அமரபட்சத்தில் காகமாக அறிதல்

ஒ, ஓ இவ்வுயிர்களுக்கு, கொ, கோ, சொ, சோ, தொ, தோ, நொ, நோ, பொ, போ, மொ, மோ முதலிய உயிர்மெய்களுக்கு பூர்வ பக்ஷத்தில் மயிலும், அமரபக்ஷத்தில் காகமுமாக வருமென்று எழுத்துக்களை அறிந்து பக்ஷிகளைக்கொண்டு தொழில்களைச் செய்யவும்.

1196 பக்ஷிகளின் நிலம் அறிதல்

பக்ஷம் இரண்டிற்கு வல்லூறுக்கு பாலை, ஆந்தைக்கு குறிஞ்சி, காகத்திற்கு மருதம், கோழிக்கு முல்லை, மயிலுக்கு நெய்தலென்று அறியவும்.

1197 பக்ஷிகளின் லோகமறிதல்

பக்ஷம் இரண்டிற்கு வல்லூறுக்கு பொன், ஆந்தைக்கு வெள்ளி, காகத்திற்கு செம்பு, கோழிக்கு வெண்கலம், மயிலுக்கு இரும்பென்று அறியவும்.

பூர்வபக்ஷம் பக்ஷிகளின் ஜாதிபேதம்

திங்கள், சனி அமரபட்சம் பகல்ஜாமம் ஐந்திற்கும் பக்ஷிகளின் தொழில்

1198 முதல் ஜாமம்

மயில் ஊண், காகம் மரணம், வல்லூறு நித்திரை, கோழி அரசு, ஆந்தை நடை.

1199 இரண்டாவது ஜாமம்

ஆந்தை ஊண், மயில் மரணம், காகம் நித்திரை, வல்லூறு அரசு, கோழி நடை.

1200 மூன்றாவது ஜாமம்

கோழி ஊண், ஆந்தை மரணம், மயில் நித்திரை, காகம் அரசு, வல்லூறு நடை.

1201 நான்காவது ஜாமம்

வல்லுறு ஊண், கோழி மரணம், ஆந்தை நித்திரை, மயில் அரசு, காகம் நடை.

1202 ஐந்தாவது ஜாமம்

காகம் ஊண், வல்லுறு மரணம், கோழி நித்திரை, ஆந்தை அரசு, மயில் நடை.

திங்கள், சனி அமரபக்ஷம் இரவுஜாமம் ஐந்திற்கும் பக்ஷிகளின் தொழில்

1203 முதல் ஜாமம்

கோழி ஊண், காகம் நித்திரை, ஆந்தை நடை, வல்லுறு மரணம், மயில் அரசு.

1204 இரண்டாவது ஜாமம்

மயில் ஊண், கோழி நித்திரை, காகம் நடை, ஆந்தை மரணம், வல்லுறு அரசு.

1205 மூன்றுவது ஜாமம்

வல்லுறு ஊண், மயில் நித்திரை, கோழி நடை, காகம் மரணம், ஆந்தை அரசு.

1206 நான்காவது ஜாமம்

ஆந்தை ஊண், வல்லுறு நித்திரை, மயில் நடை, கோழி மரணம், காகம் அரசு.

1207 ஐந்தாவது ஜாமம்

காகம் ஊண், ஆந்தை நித்திரை, வல்லுறு நடை, மயில் மரணம், கோழி அரசு.

ஞாயிறு, செவ்வாய் அமரபக்ஷம் பகல்ஜாமம் ஐந்திற்கும் பக்ஷிகளின் தொழில்

1208 முதல் ஜாமம்

கோழி ஊண், ஆந்தை மரணம், மயில் நித்திரை, காகம் அரசு, வல்லுறு நடை.

1209 இரண்டாவது ஜாமம்

வல்லுறு ஊண், கோழி மரணம், ஆந்தை நித்திரை, மயில் அரசு காகம் நடை.

1210 மூன்றாவது ஜாமம்

காகம் ஊண், வல்லூறு மரணம், கோழி நித்திரை, ஆந்தை அரசு, மயில் நடை.

1211 நான்காவது ஜாமம்

மயில் ஊண், காகம் மரணம், வல்லூறு நித்திரை, கோழி அரசு, ஆந்தை நடை.

1212 ஐந்தாவது ஜாமம்

ஆந்தை ஊண், மயில் மரணம், காகம் நித்திரை, வல்லூறு அரசு, கோழி நடை.

ஞாயிறு, செவ்வாய் அமரபக்ஷம் இரவுஜாமம் ஐந்திற்கும் பக்ஷிகளின் தொழில்

1213 முதல் ஜாமம்

வல்லூறு ஊண், மயில் நித்திரை, கோழி நடை, காகம் மரணம், ஆந்தை அரசு.

1214 இரண்டாவது ஜாமம்

ஆந்தை ஊண், வல்லூறு நித்திரை, மயில் நடை, கோழி மரணம், காகம் அரசு.

1215 மூன்றாவது ஜாமம்

காகம் ஊண், ஆந்தை நித்திரை, வல்லூறு நடை, மயில் மரணம், கோழி அரசு.

1216 நான்காவது ஜாமம்

கோழி ஊண், காகம் நித்திரை, ஆந்தை நடை, வல்லூறு மரணம், மயில் அரசு.

1217 ஐந்தாவது ஜாமம்

மயில் ஊண், கோழி நித்திரை, காகம் நடை, ஆந்தை மரணம், வல்லூறு அரசு.

புதன் பகற்ஜாமம் ஐந்திற்கும் தொழில்முறைச்சக்கரம்

1218 முதல் ஜாமம்

காகம் ஊண், வல்லூறு மரணம், கோழி நித்திரை, ஆந்தை அரசு, மயில் நடை.

1219 இரண்டாவது ஜாமம்

மயில் ஊண், காகம் மரணம், வல்லூறு நித்திரை, கோழி அரசு, ஆந்தை நடை.

1220 மூன்றாவது ஜாமம்

ஆந்தை ஊண், மயில் மரணம், காகம் நித்திரை, வல்லூறு அரசு, கோழி நடை.

1221 நான்காவது ஜாமம்

கோழி ஊண், ஆந்தை மரணம், மயில் நித்திரை, காகம் அரசு, வல்லூறு நடை.

1222 ஐந்தாவது ஜாமம்

வல்லூறு ஊண், கோழி மரணம், ஆந்தை நித்திரை, மயில் அரசு, காகம் நடை.

புதன் இரவுஜாமம் ஐந்திற்கும் தொழில்முறைச் சக்கரம்

1223 முதல் ஜாமம்

ஆந்தை ஊண், வல்லூறு நித்திரை, மயில் நடை, கோழி மரணம், காகம் அரசு.

1224 இரண்டாவது ஜாமம்

காகம் ஊண், ஆந்தை நித்திரை, வல்லூறு நடை, மயில் மரணம், கோழி அரசு.

1225 மூன்றாவது ஜாமம்

கோழி ஊண், காகம் நித்திரை, ஆந்தை நடை, வல்லூறு மரணம், மயில் அரசு.

1236 நான்காவது ஜாமம்

மயில் ஊண், கோழி நித்திரை, காகம் நடை, ஆந்தை மரணம், வல்லூறு அரசு.

1227 ஐந்தாவது ஜாமம்

வல்லூறு ஊண், மயில் நித்திரை, கோழி நடை, காகம் மரணம், ஆந்தை அரசு.

வியாழம் பகல்ஜாமம் ஐந்திற்கும் தொழில்முறைச்சக்கரம்

1228 முதல் ஜாமம்

ஆந்தை ஊண், மயில் மரணம், காகம் நித்திரை, வல்லூறு அரசு, கோழி நடை.

1229 இரண்டாவது ஜாமம்

கோழி ஊண், ஆந்தை மரணம், மயில் நித்திரை, காகம் அரசு, வல்லூறு நடை.

1230 மூன்றாவது ஜாமம்

வல்லூறு ஊண், கோழி மரணம், ஆந்தை நித்திரை, மயில் அரசு, காகம் நடை.

1231 நான்காவது ஜாமம்

காகம் ஊண், வல்லூறு மரணம், கோழி நித்திரை, ஆந்தை அரசு, மயில் நடை.

1232 ஐந்தாவது ஜாமம்

மயில் ஊண், காகம் மரணம், வல்லூறு நித்திரை, கோழி அரசு, ஆந்தை நடை.

வியாழம் இரவு ஜாமம் ஐந்திற்கும் தொழில்முறைச்சக்கரம்

1233 முதல் ஜாமம்

காகம் ஊண், ஆந்தை நித்திரை, வல்லூறு நடை, மயில் மரணம், கோழி அரசு.

1234 இரண்டாவது ஜாமம்

கோழி ஊண், காகம் நித்திரை, ஆந்தை நடை, வல்லூறு மரணம், மயில் அரசு.

1235 மூன்றாவது ஜாமம்

மயில் ஊண், கோழி நித்திரை, காகம் நடை, ஆந்தை மரணம், வல்லூறு அரசு.

1236 நான்காவது ஜாமம்

வல்லூறு ஊண், மயில் நித்திரை, கோழி நடை, காகம் மரணம், ஆந்தை அரசு.

1237 ஐந்தாவது ஜாமம்

ஆந்தை ஊண், வல்லூறு நித்திரை, மயில் நடை, கோழி மரணம், காகம் அரசு.

வெள்ளி பகல்ஜாமம் ஐந்திற்கும் தொழில்முறைச்சக்கரம்

1238 முதல் ஜாமம்

வல்லூறு ஊண், கோழி மரணம், ஆந்தை நித்திரை, மயில் அரசு, காகம் நடை.

1239 இரண்டாவது ஜாமம்

காகம் ஊண், வல்லூறு மரணம், கோழி நித்திரை, ஆந்தை அரசு மயில் நடை.

1240 மூன்றாவது ஜாமம்

மயில் ஊண், காகம் மரணம், வல்லூறு நித்திரை, கோழி அரசு, ஆந்தை நடை.

1241 நான்காவது ஜாமம்

ஆந்தை ஊண், மயில் மரணம், காகம் நித்திரை, வல்லூறு அரசு, கோழி நடை.

1242 ஐந்தாவது ஜாமம்

கோழி ஊண், ஆந்தை மரணம், மயில் நித்திரை, காகம் அரசு, வல்லூறு நடை.

வெள்ளி இரவு ஜாமம் ஐந்திற்கும் தொழில்முறைச்சக்கரம்

1243 முதல் ஜாமம்

மயில் ஊண், கோழி நித்திரை, காகம் நடை, ஆந்தை மரணம், வல்லூறு அரசு.

1244 இரண்டாவது ஜாமம்

வல்லூறு ஊண், மயில் நித்திரை, கோழி நடை, காகம் மரணம், ஆந்தை அரசு.

1245 மூன்றாவது ஜாமம்

ஆந்தை ஊண், வல்லூறு நித்திரை, மயில் நடை, கோழி மரணம், காகம் அரசு.

1246 நான்காவது ஜாமம்

காகம் ஊண், ஆந்தை நித்திரை, வல்லூறு நடை, மயில் மரணம், கோழி அரசு.

1247 ஐந்தாவது ஜாமம்

கோழி ஊண், காகம் நித்திரை, ஆந்தை நடை, வல்லூறு மரணம், மயில் அரசு.

1248 மணல் துவரையாகும் ஜாலம்

ஜாலமாடும் சபையில் ஆற்றுமணலைக் கொண்டுவந்து ஓர் பாத்திரத்தில் போட்டு சபையோர்களைப் பார்த்து நான் இந்த மணலை துவரையாகச் செய்கிறேன் பாருங்களென்று சொல்லிக்கொண்டே மாயா சத்திக் கருவைத்தடவி மூடி சற்றுநேரம் பொறுத்து திறந்துக்காட்ட

துவரையாகத் தோன்றும். மறுபடியும் மேலே துணியைமூடி சல் மலை யாளபகவதி எப்போதும்போல் மணலாய்விடு என்று சொல்லித் திற ந்துக்காட்ட மணலாகத் தோன்றும்.

1249 உளுந்தாகும் ஜாலம்

ஆற்றுமணலை சபையில் கொண்டுவந்து எல்லோருக்கும் காட்டி இந்த மணலை உளுந்தாகச் செய்கிறேன் பாருங்களென்று சொல்லி கரு வைத்தடவிப் பாத்திரத்தில் போட்டு மூடித் திறந்துகாட்ட உளுந்தா கத் தென்படும். அதை மறுபடியும் மூடி சல் மலையாளபகவதி எப்போ தும்போல் மணலாய்விடு என்று தியானித்து திறந்துக்காட்ட வெறும் மணலாயிருக்கும். அனைவரும் ஆச்சரியப்பட்டு உன்னைப் புகழ்வார்கள்.

1250 கோதுமையாகும் ஜாலம்

சபையில் முன்போலவே மணலை பாத்திரத்தில் போட்டு கருவை மோகினி மந்திரத்தை செபித்து திறந்துக்காட்ட கோதுமையாகத் தோன்றும். அதை மறுபடியும் பாத்திரத்தில்போட்டு ஜலந்தெளித்து திறந்துக்காட்ட மணலாகத்தோன்றும்.

1251 சோளமாகும் ஜாலம்

தெள்ளினமணலைக் கொண்டுவந்து சபையோர்களுக்குக் காட்டி இந்த மணல் சோளமாகும் வேடிக்கையைப் பாருங்களென்று சொல்லி பாத்திரத்தில் கொட்டி முன்போல் மையைத்தடவி மூடி சற்றுநேரம் பொறுத்து திறந்து காண்பிக்க அசல் சோளமாகத் தோன்றும். மறுபடியும் மலையாள பகவதியை தியானித்து மாயாமா கும்படி நினைத்து மூடித்திறக்க வெறும் மணலாகத்தோன்றும். ஒவ் வொரு வேடிக்கைக்கும் கருவைத் தடவும்போதும் தேவதையைத் தியானிக்க வேண்டும். மறுபடியும் மறையும்போதும் தியானிக்க வேண்டும்.

1252 காராமணியாகும் ஜாலம்

மணலை அனைவர்க்குங்காட்டி இது காராமணியாகும் அதிசயத் தைப் பாருங்களென்று முன்போல் செய்ய காராமணியாகும் மறுபடி யும் மறைத்து விடவும்.

1253 குண்டுமணியாகும் ஜாலம்

மணலை முன்போலவே செய்துக்காட்ட குண்டுமணிகளாகத்தோன் றும். ஆனால் எந்த வஸ்துவேணுமோ அதை நீ மனதில் தியானித் துக் கொள்ளவேண்டும். அப்படி தியானிக்காவிட்டால் வெறும் மண

லாகவே தோன்றும். ஆகையால் ஒவ்வொன்றையும் குருமுகாந்தர மாய் சந்தேகமற கற்கவேண்டும்.

1254 மணல் மிளகாவிரைகளாகும் வித்தை

மணலை முன்போல செய்துக்காட்ட மிளகா விரைகளாகத் தோன் றும்.

1255 மணல் கொத்தமல்லிகளாகும் வித்தை

மணலை முன்போல செய்துக்காட்ட கொத்தமல்லிகளாகத் தெரி யும் மறுபடியும் மறைத்து விடவும்.

1256 மணல் புதியகேழ்வரகாகும் வித்தை

முன்போல மணலைச் செய்துக்காட்டித் திறக்க புதிய கேழ்வர காகும்.

1257 மணல் வரகாகும் வித்தை

முன்போல மணலுக்குச்செய்து வரகாகவேணுமென்று தியானித் துக்காட்ட வரகாகும்.

1258 மணல் தினையாகும் வித்தை

முன்போல மணலைச்செய்து தினையாகும்படி தியானித்துக்காட்ட தினையாகும்.

1259 மணல் கடலையாகும் வித்தை

முன்போலவே மையை மணலுக்குத்தடவி தியானித்துக் காட்டக் கடலையாகும்.

1260 மணல் கருஞ்சீரகமாகும் வித்தை

முன்போல மையை மணலுக்குத்தடவி தியானித்துக்காட்ட கருஞ் சீரகமாகும்.

1261 மணல் சீரகமாகும் வித்தை

முன்போல மையை மணலுக்குத்தடவி சீரகமாகும்படி தியானித் துக்காட்ட சீரகமாகும்.

1262 மணல் வெந்தயமாகும் வித்தை

முன்போல மையை மணலுக்குத்தடவித் தியானித்துக்காட்ட வெந்தயமாகும்

1263 மணல் மிளகாகும் வித்தை

முன்போல மையை மணலுக்குத்தடவித் தியானித்துக் காட்ட மிளகாகும்.

1264 மணல் கம்பாகும் வித்தை

முன்போல மையை மணலுக்குத் தடவித் தியானித்துக் காட்ட கம்பாகும்.

1265 மணல் கோள்ளாகும் வித்தை

மையை மணலுக்குத்தடவித் தியானிக்க கொள்ளாகும். பார்ப்பவர்கள் மனதை பிரமிக்கச்செய்யும்.

1266 மணல் எள்ளாகும் வித்தை

மையை மணலுக்குத்தடவித் தியானித்துக்காட்ட எள்ளாகத் தெரியும்.

1267 மணல் மலைத்துவரையாகும் வித்தை

பெரிய மணலாகத்தெள்ளி மையைத்தடவி சபையோர்களுக்குக் காட்ட மலைத்துவரைகள் தோன்றும்.

1268 மணல் பட்டாணியாகும் வித்தை

பெரிய மணலாகத்தெள்ளி மையைத்தடவித் தியானிக்க பட்டாணியாகும்.

1269 மணல் நெல்லாகும் வித்தை

சாதாரண மணலைத்தெள்ளி மையைத்தடவிக் காண்பிக்க நெல்லாகத்தோன்றும்.

1270 மணல் கீரைவிரையாகும் வித்தை

மணலைத்தெள்ளிப் பாத்திரத்தில்போட்டு மையைத் தடவிக் கீரைவிரையாக வேணுமென்று தியானித்துக்காட்ட கீரைவிரைகள் தோன்றும்.

1271 மணல் கடுகாகும் வித்தை

மணலைத்தெள்ளி மையைத் தடவிக்காட்ட கடுகாகும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

1272 மணல் வெள்ளைக்கடுகாகும் வித்தை

மணலைத்தெள்ளி மையைத்தடவித் தியானித்துக்காட்ட வெள்ளைக் கடுகுகள் தோன்றும்.

1273 மணல் அரிசியாகும் வித்தை

பெரிய மணலை செவ்வையாகக் கொழித்து மந்திரத்துடன் மையைத் தடவி மூடித் திறந்து காட்ட அரிசியாகத் தோன்றும்.

1274 போது

மேற்சொன்ன வேலைகளுக்கெல்லாம் பகல் காலமே ரொம்பவும் நல்லது. ஒவ்வொரு வேலைகளுக்கும் அப்போதைக்கப்போது மனதில் இன்னது தோற்றவேணுமென்று நினைத்துதான் மையைத் தடவவேண்டும். மூன்றேமுக்கால் நாழிகைக்குள் அனைவர்களுக்குங் காட்டிவிட்டு மாயமாகும்படி மனதில் தியானிக்கவேண்டும். ஒவ்வொரு தடவையும் மூன்றுவிசை திறந்து மூடியபின்பே சபையோர்களுக்குக் காட்டவேண்டும்.

1275 கரடியாகும் வித்தை

கரடியின் எலும்பு தோல் இதுகளில் எதையாகிலும் எடுத்து மையைத் தடவிப்போட கரடியாகிக் கத்தும்.

1276 குரங்காகும் வித்தை

மேற்படி மையில் குரங்கு பிச்சை கலந்துக் குரங்கின் தோலில் தடவி சபைமுன்போட குரங்காகி கூத்துகளாடும்.

1277 குதிரையாகும் வித்தை

குதிரையின் எலும்பில் மையைத்தடவி ஜாலக்காளை துதிக்க குதிரை தோன்றி கனைக்கும்.

1278 தேங்காய் நடக்கும் ஜாலம்

சபையில் தேங்காய் ஒன்றை எடுத்து அதற்கு மஞ்சள் குங்குமம் முதலானதும் பூசிக் காளியைத் தியானித்து ஐங்கோலக்கருவை ஒருவருக்குந் தெரியாமல் தடவி பூமியில்விட புரண்டுக்கொண்டேயிருக்கும். அனைவரும் ஆச்சரியப்பட்டு உன்னைப் புகழ்வார்கள்.

1279 தேங்காய் வெடிக்கும் ஜாலம்

விபூதியுடன் நீர்முள்ளிவிரைத் தூளைக்கலந்து தேங்காய்க்கு மந்திரஞ் 'சொல்லி விபூதி பூசுவதுபோல் தடவி ஐங்கோலத்தையும் ஒருவர்க்குந் தெரியாமல் பூசித் தரையில்வைக்க சூரைவிட்டதுபோல் பொடிப் பொடியாக சிதரிவிடும். அனைவர்களும் ஆச்சரியப்படுவார்கள்.

1280 பாம்பாட்டும் ஜாலம்

அமாவாசையும் ஞாயிற்றுக்கிழமையுங் கூடிய சுபதினத்தில் பாம்பு கொல்லி செடிக்கு காப்பு கட்டி தூபதீபங் கொடுத்து வேரைப் பிடுங்கிக் குளிசமாடி கடயத்தில் போட்டு முன்கையில் தள்ளிக்கொண்டு

எவ்விதமான பாம்பா யிருந்தாலும் நம் இஷ்டம்போல் ஆட்டலாம் ஆனால் வேர் பிடுங்கும்போது நம்பக்ஷி அரசாயிருக்கவேண்டும்.

1281 விஷமேருதிருக்கும் ஜாலம்

அமாவாசையதினம் கிராணம் பிடித்திருக்கும்போது கருஊமத்தன் செடிக்குக் காப்புகட்டி பொங்கலிட்டு தூபதீபங் கொடுத்துக் குளிசமாடி கையில் கட்டிக்கொண்டு எவ்விடமும் பயமில்லாது போகலாம். எப்படிப்பட்ட விஷஜெந்துவா யிருந்தாலும் கடித்தால் விஷமேறுது.

1282 திருடு பிடிக்கும் ஜாலம்

திருடுபோன வீட்டில் ஓர் அறையை காலிசெய்து மெழுகி கோல முதலிய சடங்குகள் செய்துப் பிறகு ஓர் செம்பில் ஜலம் வார்த்துக் கலசம் வைத்து கலசத்தின்மேல் வைக்கும் தேங்காய்க்குப் பெருங்காயத்தைப்பூசி மஞ்சள் குங்குமம் முதலானவைகள் இட்டு வைத்துவிட்டுப் பிறகு வெளியில்வந்து சபையோரைப் பார்த்து இந்த வீட்டிலுள்ள ஆண் பெண் குழந்தை முதலானவர்களும் கலசம் வைத்திருக்கும் இந்த வீட்டிற்குள்ளேபோய் கலசத்தைத் தொட்டு சுவாமியைக் கும்பிட்டுவிட்டு வரவேண்டும் என்று சொல்ல, எல்லோரும் போய் கும்பிட்டு கலசத்தைத் தொட்டுவிட்டு வருவார்கள். அப்படி வருகிறவர்களை நீ வெளியில் நின்றுக்கொண்டு ஒவ்வொருவர் கையிலும் பெருங்காயம் வாசனை வீசுகிறதா என்று அனைவர்கள் கையைப் பிடித்துக் கண்ணிலொத்துகிற பாவனையாய் வாசனை அறியவும். ஏனென்றால் திருடினவன் எல்லாரைப்போல் கலசத்தை தொடமாட்டான். தொட்டால் அதில் ஆவாகனம் பண்ணி யிருக்கும் தேவதை நம்மை யென்ன செய்யுமோ என்று பயப்பட்டு தொடாமலே தொடுகிறமாதிரி பாவனை செய்து சும்மா வந்து விடுவான். அவன் கையில் வாசனை வீசாது. அந்த சூக்ஷத்தைக் கண்டு திருடினவனை நீ கண்டுக் கொள்ளவும்.

1283 வேறு

முன்மாதிரி வீட்டை சுத்தஞ்செய்து பிள்ளையார் பிடித்து வைத்து புஷ்ப முதலானதும் சூட்டி அவல், கடலை, தேங்காய், பழம், முதலியவைகளை வைத்துப் பூசித்துப் பிறகு பிள்ளையார் எதிரில் துவஜஸ்தம்பமாதிரி ஓர் பெரிய இருப்பாணி யடித்து அதற்குக் கற்பூரத்தைப் பூசிவைத்துவிட்டு மேற்படி மாதிரி எல்லோரையும் பார்த்து நீங்கள் இந்த வீட்டிற்குள்போய் விநாயகரை சேவித்து அவர் எதிரிலிருக்கும் ஸ்தம்பத்தைப் பிடித்து நான் ஒன்றும் அறியமாட்

டேன் என்று சொல்லிவிட்டு வரவேணுமென்று அனுப்ப சந்தேகமில்லாதவர்கள் அப்பா கணேசா! நான் ஒன்றும் அறியமாட்டேன் எனக்கு நீதான் துணை என்று சொல்லி தொட்டுவிட்டு வருவார்கள். சந்தேக முள்ளவன் பாசாங்கு செய்துவந்து விடுவான் அதைமுன் போல் நீ கண்டுக் கொள்ளவும்.

1284 வேறு

முன்மாதிரி வீட்டைமெழுகி கோல முதலானதுகளிட்டுப் பதி சிங்காரித்துப் பதியின்மேல் ஆட்டுத்தலை யொன்றை வைத்து அதற்கு மஞ்சள் குங்குமம் முதலானதும் பூசி பொட்டு வைத்துக் கஸ்தூரியை முகத்திற்குபூசி சுற்றிலும் விளக்கு வைத்துப் பதி யெதிரில் வாழை யிலையில் அவல், கடலை முதலானதுகளை வைத்து சத்திபூஜை செய்து தூபதீபங் கொடுத்துவிட்டு வெளியில் வந்தபிறகு நீ வாசற்படியில் குந்திக்கொண்டு மந்திரம் செபிக்கின்றமாதிரி கையில் துளசிமாலையோ (அல்லது) வேறெந்தமணியோ வைத்துக்கொண்டு ஜெபித்துக்கொண்டே அங்கிருக்கும் ஜனங்களைப்பார்த்து நீங்களெல்லோரும் வீட்டிற்குள்போய் திருடுபோனபொருள் எனக்குத் தெரியாதென்று ஆட்டுத் தலையைத் தடவிக் கொடுத்துவிட்டு வாருங்களென்று உள்ளே யனுப்பினுல் அவர்கள் எல்லாரும்போய் தலையைத் தொட்டுத்தடவி நாங்கள் எடுக்கவில்லை யென்று பிரமாணிக்கம்பண்ணி வெளியே வருவார்கள். எடுத்தவன் மாத்திரம் தானும் தடவுகிறமாதிரி நடித்து தடவினுல் நம் திருட்டு வெளியாய் விடுமேயென்று சும்மா வந்து விடுவான். அதை நீ முன்போல் வாசனையால் கண்டு பிடித்துக் கொள்ளவும்.

1285 வேறு

திருடுபோன வீட்டு வாசலை சுத்தமாக மெழுகிக் கோலமிட்டு பிள்ளையார் பிடித்துவைத்து தூபதீபங் கொடுத்து அந்த வீட்டிலுள்ளவர்கள் சாம்பலைக்கொட்டி சாம்பலின் நடுவில் சந்தேகமுள்ள ஓலை சொருகிவிட்டு மற்றதையெல்லாம் கும்பலாகச் சாம்பலின்மேல்வைத்து அங்கிருப்பவர்களைப் பார்த்து நான் இந்த ஓலைகளை யெல்லாம் மந்திர பூர்வமாக விநாயகருக்கு அர்ப்பணஞ் செய்யப் போகிறேன். அதில் பொருளை எவரெடுத்தாரோ அந்த ஓலை மாத்திரம் விநாயகரின் சத்தியாலும் மந்திரத்தின் வலுவாலும் வேகாது என்று சொல்லிச் சூடத்தைக்கொளுத்தி ஓலையில் நடுவில்வைக்க ஓலைகளெல்லா மெரிந்துவிடும். சந்தேகமுள்ளவன் ஓலைமாத்திரம் சாம்பலின் மத்தியில் நாம் வைத்த மாதிரியேயிருக்கும். பிறகு அந்த சட்டியில் ஜலத்தை ஊற்றிக் சுரை

க்க சொருகின வேலை வெளிக்கிளம்பும் பார்த்தவர்களெல்லாம் இது மகா மந்திரமென்று உன்னைமெச்சி அவனிடத்தில் பொருளை வாங்கி விடுவார்கள். இது மகா தந்திரமான வேலை.

1586 வேறு

திருடுபோன வீட்டில் திருடைக் கண்டுபிடிக்க வேணுமென்றால் ஆழாக்கு பச்சரிசியை யெடுத்துக் கையில் வைத்துக்கொண்டு மந்திரம் செபிப்பவன்போல் முண முணவென்று வாயில் வந்ததை சொல்லிக் கொண்டே அங்கிருப்பவர்களுக்கெல்லாம் மேற்படி மந்திரித்த அரிசி யைக் கொடுத்து மென்று வாசலில் ஒவ்வொருத்தராக முழியும்படிச் செய்ய எடுக்காதவர்களெல்லாம் நன்றாய்க் குழப்பி மென்று உமிழ்ந்து விடுவார்கள். எடுத்தவர் மாத்திரம் மெல்லாமல்படி ஒன்றிரண்டு மாகத் துப்புவார்கள். அதைக்கண்டு தந்திரமாகப் பிடித்துக் கொள்ள வும். எல்லாம் தந்திரத்தில் இருக்கின்றதே யொழிய மந்திரத்தி லில்லை.

1287 மீன் உற்பத்தி செய்யும் ஜாலம்

முத்தித்தெரின மீன்சினையை எடுத்துக்கொண்டு அதற்கு பனி நீரை அன்றாடம் சுருக்குக் கொடுத்து சூரியரவியில் வைத்துக்கொண்டு வர சினையிலுள்ள மணியெல்லாம் பனிநீரைக் குடித்ததினால் சூரியரவிக் குத் தாளாது உதிர்ந்துவிடும். அதை எடுத்து கசகசாவினுடன் கலந்து வைத்துக்கொண்டு ஜாலமாடும் சபையில் அனைவர்களையும் பார்த்து நான் என்னுடைய மந்திரசக்தியினால் கசகசாவை மீனாகச் செய்கிறேன் பாருங்களென்று சொல்லி ஒருவனை அழைத்துப் பொக ணியில் தண்ணீர்கொண்டு வரச்செய்து அதில் மேற்படி கசகசா சினையைப்போட்டு மந்திரஞ் சொல்ல உண்மையான மீன்குட்டிகள் மேயும். அதைப் பார்த்த ஜனங்கள் உன்னை மகா மந்திரவாதியென்று மெச்சுவார்கள். மேற்படி மீனை சமையல் செய்தும் சாப்பிடலாம் மந் திரமில்லை; தந்திரந்தான்; செய்து பார்த்தால் தெரியும்.

1288 வேறு பழத்தில் உதிரம் வரும் வித்தை

ஒரு கூருள்ள கத்திக்கு செம்பருத்திப்பூ, சப்பாத்திப்பூ, செம் பசளைப்பூ இதுகளின் சாற்றைப்பூசிக் காயவைத்துப் பத்திரமாக முன்னாடியே வைத்துக்கொண்டு ஜாலமாடும் சபையில் ஜனங்களைப் பார்த்து நீங்கள் ஏதாகிலும் ரசமொழுகும்படியான பழமொன்றைக் கொடுங்கள். அதை அறுத்து உதிரங் காட்டுகிறேனென்று கேட்க அவர்கள் சமயத்திற்கு எலுமிச்சம்பழந்தான் கொடுப்பார்கள். அல்லது அறுத்தால் ரசமொழுகும்படியான வேறு என்ன பழமாயிருந்தாலும்

சரி அதை வாங்கி மேற்படி கத்தியால் அறுக்க அதில் வரும் ரசமெல்லாம் ரத்தமாக யிருக்கக்கண்டு ஆச்சரியப்படுவார்கள்.

1289 பசு பால் கறவாதிருக்கும் வித்தை

கரும்புலியின் கொழுப்பை பசுக்கள் கூட்டமாக யிருக்குமிடமாகப் பார்த்துக் காற்று வாட்டத்தில் வைக்க அந்த வாடைபட்ட பசுக்களெல்லாம் பால் கறவாது. கோனுனைக் கண்டு ஓட்டமெடுக்கும் அவன் என்னபாடு பட்டாலும் பால் கறவாது உதைத்துக்கொள்ளும். அது சமயம் அவன் படாதபாடுபட்டு கஷ்டப்படுவான். அப்போது நீ அவனை யழைத்து இது ஏதோ தெய்வக்குற்றமென்றுசொல்லி விளக்கு வைத்துப் பார்த்து இதற்கு சாந்தி செய்தால்தான் தீரும். இல்லாவிட்டால் தீராது என்று உனக்கு வேண்டியமட்டும் பணத்தை வாங்கிக் கொண்டு நீ முன்வைத்த கொழுப்பை யெடுத்து புதைத்துவிட்டு வேப்பிலையால் மந்திரித்துப் பால் கறக்கும்படி செய்யவும்.

1290 மீன்பிடிக்கும் வித்தை

முத்தின பேன் கொட்டையைக் கொண்டு வந்து வறுத்து அரைத்து அதனுடன் நாகப்பூச்சி சாதம் இதுகளை கலக்கி ஜலம் விட்டுக் கொதிக்கவைத்து எடுத்துக் குளம் (அல்லது) மடுவு இதுகளில் எதிலாகிலும் போட மீன்கள் மயக்கமேறி வெளிக் கிளம்பி மிதந்துவிடும். அது சமயம் நீ வேண்டிய வரைக்கும் பிடித்துக் கொள்ளலாம்.

1291 வேறு உடுக்கையை உடைக்கும் வித்தை

பூசாலிகள் உடுக்கையை யடித்துக்கொண்டு பல தெய்வங்களுக்குப் பூசைகள் போடும்போதும் அல்லது பதிவைத்து பேய்கள் ஓட்டும்போதும் அவர்களை அவமானம் செய்யவேணுமென்றால் ஒருவருக்குந் தெரியாது அவர்கள் அடிக்கும் உடுக்கையில் கெந்தகத் திராவகத்தைச் சுப்பலில் தொட்டு ஒருகோடு கிழித்து வைத்துவிட அதை அவர்கள் தெரியாது எடுத்து அடிக்கும்போது அது உடைந்துவிடும். அது சமயம் அங்கிருப்பவர்கள் என்னமோ தெய்வகுற்றம் நேர்ந்துவிட்டதென்று திகில் படுவார்கள்.

1292 வேறு உடுக்கை உண்டாக்கும் வித்தை

முன்சொன்ன மாதிரி வீரத்தைக் குழப்பி சுப்பலில் தொட்டுக் கோடு கிழித்து வைத்துவிட அடிக்கும்போது நீ என்னமாக கோடு கிழித்து வைத்தாயோ அந்த மாதிரியே உடைந்துவிடும். இந்த மாதிரி

டவுல் தவண்டை முதலிய தோல்கருவிகளெல்லாவற்றிற்கும் செய்ய லாம். ஆனால் இது மகா பாதகமானது.

1293 வேறு பேர்சோல்லி வேர்பிடுங்குதல்

எதிராளியின் பேரால் நெல்லிமர வேருக்கு காப்புக்கட்டி (வங்-சிங்-யங்) என்று லக்ஷமுருசெபித்து வேரைப் பிடுங்க எதிராளியான வன் வெகு துன்பப்படுவான்.

1294 திகைப்பூண்டேக்கு காப்பு கட்டுதல்

ஞாயிற்றுக்கிழமை நடுமத்தியானத்தில் திகைப்பூண்டு செடியின் முன்னின்று எதிராளியின்பேரால் காப்புகட்டி (வங்-சிங்-யங்) என்று லக்ஷமுரு செபித்து வேரைப்பிடுங்க எதிராளி பயித்தியம் பிடித்தவன் போலாகி ரொம்பவும் துன்பப்படுவான்.

1295 தேள்விஷம் ஏறாதிருக்கும் வித்தை

ஞாயிற்றுக்கிழமை சூரிய உதயத்திற்குமுன் கருங்கணேச் செடிக்கு காப்புகட்டி தூபதீபங்கொடுத்து உன்னிஷ்ட தெய்வத்தைத் தொழுது வேரைப் பிடுங்கி குளிசமாடி மோதிரம்போல் விரலில்போட்டுக்கொண்டு எவ்வளவு தேளைக் கொட்டவிட்டாலும் விஷமேறாது.

1396 வேறு நெருப்பில்லாமல் சாதம் சமைக்கும் ஜாலம்

சபையில் அடுப்புவொன்றை வைத்து பானையில் அரிசியைப் போட்டு சபையோர்களைப் பார்த்து நான் இந்த அரிசியை நெருப்பில்லாமல் சமைக்கிறேன் பாருங்களென்று சொல்லித் தந்திரமாகத் தண்ணீர்க்குப்பதில் கள்ளிப்பாலை அதில்விட்டு இருபது முப்பது நிமிஷம் பொறுத்துத் திறந்துக்காட்ட சாதம்போல் வெந்திருக்கும். அனைவர்களும் ஆச்சரியப்படுவார்கள்.

1597 வேறு கிணற்றிலிறங்கி சாதம் சமைக்கும் ஜாலம்

அரிசியை ஓர் துணியில் முடிந்து சுண்ணும்புக்காளவாயின்கீழ் புதைத்து வைத்து இரண்டு மூன்றுநாள் சென்றதும் எடுத்து வந்து வைத்துக்கொண்டு ஜாலமாடும் சபையில் சபையோர்களைப் பார்த்து நான் இந்த அரிசியை நெருப்பில்லாமல் கிணற்றிலிறங்கி சமைத்து வரும் வேடிக்கையைப் பாருங்களென்றுசொல்லிக் கிணற்றிலிறங்கிஅரிசிக்குத் தகுந்த ஜலத்தைவிட்டுக் குடுவையை ஜலத்தின்மேல் வைத்துப் பிடித்துக்கொண்டிருக்க வெகுசீக்கிரத்தில் அரிசியானது சாதம் போல் வெந்துவிடும். அதைப்பார்த்தவர்கள் உனக்கு அக்கினிதேவன்

வசியமென்று சொல்லுவார்கள். T இதேமாதிரி சகலமான தானியங்க ளையும் செய்யலாம். ஆனால் வேகக்கூடிய பதத்திற்கேற்றவாறு காளவா யில் வைத்து எடுத்துக்கொள்ளவேண்டும்.

1298 எதிரியைத் துன்பப்படுத்தும் ஜாலம்

எதிரியின் காலடியின்மண், ஆதிவாரமிரவில் கழுதைப்புரண்ட மண், நண்டுக்குழிமண், சுடலைமண் இதுகளை புதுவோட்டிவிட்டு புளி யன் விறகால் நசி மசி என்று சொல்லி துழாவி எரிக்க எதிரிதேகம் புகைக்கும்.

1299 வேறு

சுடலைமண், நண்டுக்குழிமண், காலடிமண் இதுகளுடன் கடை யில் 21-மிளகைவாங்கி இது நான்கையும் புதிய சட்டியில் போட்டு அத னுடன் பெருங்காயம் சேர்த்து ஒரு மரத்துவிறகால் தீயை எரித்துக் கொண்டே நசிமசியென்று செபிக்க, எதிரிதேகம் புகைத்து ரொம்பவும் பாதைப்படுவான். தீயை நிறுத்த அது நிற்கும்.

1300 இதற்கு சாந்தி

முத்திந்தேரின புளியன்பட்டையைக் கியாழம்வைத்து மூன்று நாள் காலைமாலை கொடுக்க நிவர்த்தியாகும்.

1301 எக்ஷணி வசிய மை

பச்சை ஓணான் பிச்சுடன், திசைமயக்குப் பொடியும், மதிமயக் குத்தூளுஞ் சேர்த்துக் கூட ஐங்கோலம் விட்டரைத்து சிமிளில் வைத் துக்கொண்டு ஸ்ரீம், இரீம், கிலீம் என்று நாற்பது நாளைக்கு காலை மாலை தவராமல் உருகொடுக்க சித்தியாகி சகல வேலைகளையும் செய்யும்.

1302 வேறு எக்ஷணி வசியம்

ஸ்ரீம், இரீம், கிலீம், அவ்வும், மவ்வும், சவ்வும், நமசிவய என்று நாற்பது நாளைக்கு இடைவிடாமல் சுத்தமாக செபித்துவர சித்தியாகி வேண்டுமான வேலைகளைச் செய்யும்.

1303 வேறு சாதம் வேகாத ஜாலம்

நிலவேம்பு வேரைச் சிறிய துண்டாய் நறுக்கி சாதம் வேகும்போ தாவது அரிசி அரிக்கும்போதாவது கொஞ்சம் போட்டுவிட்டால் சாத மானது எவ்வளவு கட்டையைப்போட்டு வேகவைத்தாலும் வேகாது. அதைபார்த்தவர்கள் உனக்கு அக்கினிதேவன் வசியம் என்று சொல்லு வார்கள்.

1304 பாலைத் தயிராக்கும் வித்தை

பசும்பாலில் வாழைக்கட்டையை உலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ் செய்த தூள் அரை ஆழாக்கு போட்டு கலக்க தயிராகும்.

1305 வேறு முறை

இதுவும் பசும்பாலுக்கு நாணற்புல்லைப் போட்டுக்கலக்கத் தயிராகும்.

1306 வேறு பேயாட்டும் வித்தை

சாதாரணமான மனிதனையாவது அல்லது பேயாடுவோரையாவது தலைமுழுகிவிட்டு வரச்சொல்லி ஈரத்தலையில் மருளூமத்தன்காயைப் பொடித்த தூளில் கொஞ்சமெடுத்துத் தேய்க்க தலைசுற்றி ஆடிவாய்ப்பிறப்பு சொல்லும்.

1307 வேறு முறை

அபினியை வெல்லத்தில் வைத்து பேயாடுவோருக்குத் தெரியாமல் உள்ளுக்குக் கொடுத்துவிட தலைசுற்றியாடி முடிகொடுப்பார்கள்.

1308 வேறு சாதம் வேகாத ஜாலம்

வெள்ளைக்காந்திவேர், கஞ்சாவிரை, அழிஞ்சிவிரை, ஐங்கோலம் இதுகளை உலையரிசியில் போட்டால் எவ்வளவு நேரமானாலும் சாதமும் வேகாது இதற்கு மாற்றுமில்லை.

1309 வேறு நெருப்பு சுடாத ஜாலம்

மணத்தக்காளிச்சாறு, சாதாதக்காளிச்சாறு, வசளைச்சாறு இதுகளை ஒன்றாய்க்கலந்து கைகளில் தளும்பப் பூசிக்கொண்டு நெருப்பைக் கையிலள்ள சுடாது.

1310 மணலை அரிசிபோல் மேல்லும் ஜாலம்

குண்டுமணியிலையை மென்றுக் குதப்பி வாயில் அடக்கிக்கொண்டு எவ்வளவு மணலை வேணுமென்றாலும் அரிசிபோல் மெல்லலாம். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

1311 சகலரும் ஆடும் ஜாலம்

சாம்பிராணித் தயிலம், ஐங்கோலம் இதுகளில் முத்தின கெச்சக்காயைப் போட்டு ஊரவைத்துக் காய்ந்த பிறகு நமசிவய என்று காலைமாலை விடாது நாற்பதுநாள் உருகொடுத்து வைத்துக்கொண்டு சபையில் புகைபோட அந்த புகைபட்ட மனிதர்களெல்லாம் ஆடுவார்கள்.

1312 கையில் பந்தமேந்தும் ஜாலம்

சோற்றுக் கற்றாழையை பில்லையாக அறுத்து உள்ளங்கையில் வைத்துக்கொண்டு மேலே துணியைமூடி எண்ணெய்ப்பந்தங் கொளுத்தி கையில் வைத்துக்கொள்ள நன்றாக யெரியும். கை சுடாது.

1313 முள்ளின்மேல் படுக்கும் ஜாலம்

ஓரிலைத்தாமரைவேரும், செப்புநெரிஞ்சிவேருங் கொண்டுவந்து கிராணத்தில் தலைமாற்றிக் குளிசமாடிக் கட்டிக்கொண்டு முள்ளின்மேல் படுத்தாலும், நடந்தாலும் முள் தைக்காது.

1314 வலையில் மீன்படாத ஜாலம்

பெருங்காயத்தைச் செருப்படைச் சாற்றில் கரைத்து வலைகளின் பேரில் தெளித்துவிட்டால் அந்த வலையில் மீன்படாது. மறுபடியும் அதை வெள்ளாயில் வைத்து வேகவைத்தால்தான் மீன்படும்.

1315 வேறு நெருப்பு மிதிக்கும் ஜாலம்

கொத்தான் சமூலம், தாளி சமூலம், மருக்காரை உப்பு இதுகளைச் சமயெடையாகப் பசும்பாலில் அரைத்து உள்ளங்காலிரண்டிலும் பூசிக் கொண்டு நெருப்பை மிதிக்கச் சுடாது. பார்ப்பவர்கள் உனக்கு அக்கினிதேவன் வசியமெனச் சொல்லுவார்கள்.

1316 மரபொம்மை நடக்கும் ஜாலம்

மரபொம்மைக்கு சகலவித நகைகளையும்பூட்டி வைத்துக்கொண்டு பின்பு புலிதொடக்கி செடிக்கு அமாவாசையும் ஆதிவாரமும் கூடின தினத்தில் காப்புகட்டி அதற்கு நேர் பத்தாம்நாள் முப்பெலியுடன் பொங்கலிட்டு வேரைப் பிடுங்கி பொம்மைகாலுக்குச் சரியாய் வளையம் செய்து ஐங்கோலம்பூசி அதன்மேல் பொன் வெள்ளி இதுகளில் செய்த கம்பியைச்சுற்றி பூசித்துப் பொம்மைகாலில் மாட்டி சபையோர்களைப் பார்த்து இந்த மரபொம்மை நடக்கும் வேடிக்கையைப்பாருங்களென்று சபையில் விட்டுவிட மகாஜெயிலுடன் நடக்கும். அதைப் பார்த்தவர்கள் இது என்ன வசியமென்று உன்னை மெச்சுவார்கள்.

1317 மரத்தை குத்தினுல் பழங்கள் உதிரும் ஜாலம்

ஆமணக்கெண்ணெயில் இரங்கழிஞ்சி விரையைப்போட்டு மை போலரைத்து சல்லாத்துணியில் தடவி திரியாக்கி தலைமண்டையோட்டில் ஆமணக்கெண்ணெய் நல்லெண்ணெய் நெய் இம்மூன்றையும்விட்டு திரியைப்போட்டுக் கொளுத்தி தயிலம் வாங்கி அதனுடன் ஜாமற்கிலத்

தைலஞ் சேர்த்துக் கலக்கி சிமிளில் வைத்துக்கொண்டு ஜாலக்காளேயும் மல்லம்மாளேயும் செபித்து மையைக் கையில் தடவிக்கொண்டு எந்த மரத்தைக் குத்தினாலும் பலபலவென்று பூ பிஞ்சுடன் உதிரும். பார்ப்பவர்கள் உனக்கு ஆஞ்சநேயர் வசியமென்று சொல்லுவார்கள்.

1318 ஏத்தம் முறிந்துவிழும் ஜாலம்

கோட்டான் இரத்தத்தில் ஜெகஜாலக் கருவைக்கலந்து இறைக்கும்படியான ஏத்தமரத்தில் தடவ ஆளுடன் முறிந்து கீழேவிழும் கருவைத் தடவும்போது எக்கலாதேவி மந்திரத்தை செபித்துக்கொண்டே தடவவும்.

1319 எதிரியை வெல்லும் ஜாலம்

ஆராகிலும் தனியாக உனக்கு இக்கட்டுகள் செய்ய வந்தாலும் அல்லது வருகிறார்களென்று தெரிந்தாலும் உடனே ஜெகஜாலக் கருவைத்தொட்டு மந்திரஞ் செபித்துக்கொண்டே அவர்கள்மேல் தெளிக்க அவர்கள் மரம்போல் அசைவற்று நின்று விடுவார்கள்.

1320 இதை நிவர்த்தி செய்யும் ஜாலம்

எதிரி வணங்கி வந்தால் ஐங்கோலத்தில் ஐங்காயம் கலந்து வாலையைப் பூசித்துத் தெளிக்க அவர்கள் மருள்நீங்கிப் பயந்து வந்தவழி பிடித்து ஓடிவிடுவார்கள்.

1321 மரம் பற்றி யெரியும் ஜாலம்

பச்சைமரத்தின்மேல் ஜெகஜாலக் கருவைத் தொட்டுத் தெளிக்க குபீலென்று பற்றியெரியும், பார்த்தவர்கள் ஆச்சரியப்படுவார்கள். மறுபடியும் ஐங்கோலமும் ஐங்காயமும் கலந்துத்தெளிக்க எப்போதும்போலாய்விடும்.

1322 மரம் இரண்டாய் பிளக்கும் ஜாலம்

கோட்டான் இரத்தத்தில் ஜெகஜாலக் கருவைத்தொட்டு மந்திரஞ் சொல்லிக்கொண்டே மரத்தின்மேல் தெளிக்க மரம் இரண்டாய்ப் பிளக்கும். பார்த்தவர்கள் அப்பா இவன் மகா மந்திரவாதியென்று சொல்லுவார்கள்.

1323 மரம் ஒன்றாய் ஒட்டும் ஜாலம்

ஐங்கோலமும் ஐங்காயமும் சேர்த்துக் குழப்பி வாலை புவனியைத் தியானித்து மரத்தின்மேல் தடவ எப்போதும்போல் ஒன்றாக சேர்ந்துவிடும்.

1324 சிலம்பு உடையும் ஜாலம்

நுழுநரியின் பித்தில் ஜெகஜாலக் கருவைச்சேர்த்துக் கலந்துவைத்துக்கொண்டு சமயம்பார்த்து சிலம்பின்மேல் தெளித்து மந்திரம் செபிக்க உடைந்துவிடும்.

1325 வேறு சிலம்பு உடையும் ஜாலம்

மேற்படிகலந்த மையை பானைஓட்டில்பூசி, எட்டியிலையினால் மூடி எதிரியின் காலடிமண்ணைச் சேர்த்துப் பெயரைமாறி அவன் இருக்கும் வீதிகோடியில் புதைத்து வைத்துவிட அவன் சிலம்பாடி வரும்போது பளீலென்று உடைந்துவிடும். அனைவர்களும் இது என்னமோ தெய்வ குற்றமென்று சொல்லுவார்கள்.

1326 தம்பூர் உடைக்கும் ஜாலம்

அரணையின் பிச்சில் ஜெகஜால மையைக் கலந்து மண்டை யோட்டில்பூசி ஊமத்தன் இலையால்மூடி, எதிரிபெயரைமாறி பூமியில் புதைத்துவைக்க தம்பூர் உடைந்துவிடும்.

1327 புள்ளாங்குழல் உடையும் ஜாலம்

மேற்படி மையை ஒருவருக்குந் தெரியாது முன்போல் செய்து பூமியில் புதைக்க புள்ளாங்குழல் உடைந்துவிடும்.

1328 கின்னரி உடையும் ஜாலம்

நரியின் இரத்தத்தில் கருவைக் கலந்து நாயின் மண்டையோட்டில் பூசி பேய்மிரட்டிஇலையால் மூடி மந்திரம் செபித்து கின்னரி வாசிக்கும் படியான இடத்தில் புதைத்துவைக்க கின்னரி உடையும்.

1329 உடுக்கை உடையும் ஜாலம்

தேவாங்கு பிச்சில் ஜெகஜாலக் கருவைக்கலந்து மண்டையோட்டில் எதிரி பெயருடன் கலந்துப் புதைத்துவைக்க எவ்வளவு உடுக்கைகளானாலும் உடைந்துவிடும். பூசாலிகளும் எவனோ எதிரி வேலைசெய்தானென்று மிரளுவார்கள்.

1330 பம்பை உடையும் ஜாலம்

பூனைரத்தத்தில் கருவைக்கலந்து பம்பை வாசிக்கும் இடத்தில் புதைத்துவிட பம்பை உடைந்துவிடும்.

1331 மேளம் உடையும் ஜாலம்

காட்டுப்பூனை இரத்தத்தில் கருவைக் கலந்து மண்டையோட்டில் தடவி கருவூமத்தன் இலையால் மூடி எதிரி பெயரை எழுதி நசிமசி

என்று 1008-உருகொடுத்து பூமியில் புதைத்துவிட எதிரியின் மேளம் உடைந்துவிடும்.

1332 தாளம் உடையும் ஜாலம்

ஆட்டு இரத்தத்தில் கருவைக் கலந்து தலைப்பிள்ளை மண்டையோட்டில்பூசி அழிஞ்சி யிலையால் மூடி எதிரிபெயரை மாறிப்புதைக்க தாளம் உடைந்துவிடும்.

1333 மத்தளம் உடையும் ஜாலம்

கோட்டான் இரத்தத்தில் கருவைக்கலந்துபூசி ஊமத்தன் இலையால் மறைத்து முன் சொன்னமாதிரி புதைத்துவைக்க மத்தளம் உடைந்துவிடும்.

1334 பேரிகை உடையும் ஜாலம்

கட்டுக்காடை இரத்தத்தில் கருவைக்கலந்து பானை ஓட்டில் பூசி கருங்காலியிலையால் மறைத்துப் பெயரைமாறி புதைத்துவிட எதிரியின் பேரிகை உடைந்துவிடும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

1335 பிட்டீல் உடையும் ஜாலம்

தேவாங்கு இரத்தத்தில் கருவைக் கலந்து மண்டையோட்டில் பூசி வாழையிலையால் மறைத்து எதிரியின் பெயரைமாறி பூமியில் புதைத்துவிட பிட்டீல் உடைந்துவிடும்.

1336 துத்தி கிழியும் ஜாலம்

வலியான் இரத்தத்தில் கருவைக்கலந்து மண்டையோட்டில் பூசி நசிமசியென்று செபித்து பூமியில் புதைத்துவிட எதிரியின் துத்தி உடைந்துவிடும்.

1337 நாகசுரம் உடையும் ஜாலம்

நரியின் இரத்தத்தில் கருவைக்கலந்துப் பானையோட்டில் பூசி மருளூமத்தன் இலையால் மறைத்து எதிரியின் பெயரை ஓதி நசிமசியென்று செபிக்க நாகசுரமானது உடைந்துவிடும்.

1338 போது ஜாலம்

மேற்சொல்லிவந்த வேலைகளுக்கெல்லாம் ஜெகஜாலக் கருவே பிராணுதாரமானது. அத்துடன் சேர்மான கருவாகிய பிச்சோ இரத்தமோ சேர்த்துப்பூசி ஒவ்வொரு வேலைகளுக்கும் நசிமசி யென்று மந்திரம் செபித்துதான் புதைக்கவேண்டும். ஆனுல் கருவில்லாத வித்தையென்று அனேகருக்குத் தெரிந்திருந்தாலும் இந்த வேலைகளெல்லாம்

பிழைக்கும் பிழைப்புக்குப் பங்கம் செய்கிறதாகையால் அறிவாளிகள் இதை நீக்குவார்களென்று நம்புகிறேன். நீக்கும்படியான பாவத்தொழிலை ஏன் எழுதினார்களென்று சிலர் நினைக்கவுங்கூடும். ஏன் எழுதினதென்றால் நல்லதும் கெட்டதும் உலகத்தில் இருக்கவேண்டியது. பாவமே அதினால் எழுதும்படி நேரிட்டது. தவிர புதைத்திருப்பதை உடனே எடுத்துவிட்டால் நல்லது இல்லாவிட்டால் எதிரியானவன் எவ்வளவு ஆயுதங் கொண்டுவந்தாலும் எல்லாம் உடைந்துக்கொண்டேயிருக்கும். அதினால்தான் உடனே எடுக்கும்படி சொல்லுகிறது. நீங்கள் பூமியில் புதைத்தவுடன் அதை இடது உள்ளங்காலால் அரக்கிவிடும் பக்ஷத்தில் இன்னமும் சுருக்காக வேலைசெய்யும்.

1339 எதிரியைப் பேதிக்கும் ஜாலம்

கருச்சிலையில் சமுதைக் குளம்பும், ஏரண்டவித்து ஐந்தும் சேர்த்துக்கட்டி பகைவர்வீட்டில் வைக்கப் பதினைந்து நாளில் பேதிக்கும்.

1340 வேறு

மேற்படி சிலையில் சுற்றின சாமானை எதிரில் வைத்துக்கொண்டு கண்ணை சிமிட்டாது முக்கோணமிட்டு மூன்று மூலைக்கும் சூலமிட்டு முக்கோணத்தைச்சுற்றி வட்டமிட்டு, முக்கோணத்தினுள் நசி-மசி-மசி நசி என்று கண்ணால் ஸ்தாபித்துக் கும்பிட்டு நூற்றியெட்டு உருகொடுக்க பதினைந்து நாளில் பேதிக்கும்.

1341 வேறு

சுட்ட நாயைத் தின்றவனே ஓம் படு சுவஹா யென்று ஆணுக்கு வலது காலும், பெண்ணுக்கு இடது காலுமாக கைபடாமல் ஆதிவாரம் ராகுகாலத்தில் ஆட்டுத்தும்மட்டிக்காய்க்குச் சொல்லி காலாலேயே வேரைப் பிடுங்கிப்போட்டு காலாலேயே ஓர் கல்லை யெடுத்து அதின் மேல் வைக்க சுரம், தலைநோய் முதலிய வியாதிகளால் நலிவர். உருவு 108-கொடுக்கவும்.

1342 வேறு

குடியோட்டிப் பூண்டின்வேரில் முள்ளம்பன்றியி னிறகைச் சொருகி எதிரியின் பெயரை தலைகீழாக மாறி ஐங்காயம்பூசி வீட்டிரைப்பில் வைக்கப் பேதிக்கும்.

1343 வேறு

கொல்லைபல்லி செடிக்கு ஆதிவாரத்தில் அம்மணமாக நின்றுக் காப்புக்கட்டி பலிகொடுத்து வேரைப் பிடுங்கிவந்து அதினுடன் தாளிப்

பனையோலையில் எதிரியின் பெயரைமாறி வீட்டிரைப்பில் வைக்கப் பதினைந்துநாளில் பேதிக்கும்.

1344 வேறு

குடியோட்டிப் பூண்டின்வேரில் ஐங்கோலம் பூசிவைத்தாலும் ஒரு மண்டலத்தில் பேதிக்கும்.

1345 வேறு

நாய், மனிதன், கழுதை, பூனை, பன்றி இந்த பஞ்சமலங்களைப் பானையில்போட்டுக் கூட மண்டையோட்டைப் போட்டுக் குழித்தயில மிறக்கி எதிரியின் வீட்டில் புதைக்க அவனுடைய சம்பத்துகளை நாசஞ் செய்யும்.

1346 வேறு

மேற்சொன்ன கருவில் பச்சைஓணான் இரத்தத்தைவிட்டு நசி மசி என்று செபித்து எதிரியின் விளைவுகளில் வைக்க விளைவுகள் நாச மாகும்.

1347 வேறு

மேற்படி கருவை எட்டிமுளைக்குத் தடவி எதிராளிபெயரை மாறி அவன் வாயற்பாடியில் புதைத்து வைத்தால் கூடிய சீக்கிரம் பேதன மாக்கி ஓட்டிவிடும்.

1348 மோடி எடுக்கும் ஜாலம்

எந்தவிதமான மோடி வைத்திருந்தாலும் ஐங்கோலக் கருவை நெற்றியி விட்டுக்கொண்டு ஜாலக்காளை தியானித்தபடியே சண்டாளக் கருவை மோடிப் பந்தலின்மேல் தெளித்துவிட்டு கொஞ்சமாவது பயம் இல்லாமல் அனைவர்களும் பார்க்கும்போதே எடுத்துக்கொண்டு வந்து விடலாம். ஆனால் முன்ஜாக்கிரதையாகக் கருவுகளைச் சேகரித்துக்கொள் வதுடன் சரியானகாலத்தில் பூசைசெய்து உருகொடுத்து வைத்துக் கொள்ளவேண்டும்.

1349 சண்டாளக்கருவு செய்யும் விதம்

நாய், மனிதன், கழுதை, பூனை, பன்றி இதுகளின் மலத்தில் இற க்குவதுதான் சண்டாளக் கருவென்று சொல்லப்படும். மேற்சொன்ன ஐந்து ஜீவன்களின் கண்களிலோ அல்லது கொழுப்புகளிலோ இறக்கு வது மகா வேலைகளைச் செய்யும்.

1350 வியாபாரம் விருத்தியாகும் ஜாலம்

ஆதிவாரமும் பௌர்ணமியுங் கூடியதினம் சிறியாநங்கைச் செடி க்கு காப்புகட்டி மறு ஆதிவாரத்தில் பிடுங்கிவந்து காளபைரவர் மந்தி

ரத்தை லக்ஷத்தியெட்டுரு செபித்துக் குளிசமாடி பூசையில் வைத்துக் கட்டிக்கொள்ள எவ்வித வியாபாரமும் பலிதமாகி விருத்தி யடையும்.

1351 வேறு

குப்பைமேனி செடிக்கு மேற்சொன்னமாதிரி காப்புகட்டி வேரை பிடுங்கி குளிசமாடி கட்டிக்கொள்ள வியாபாரம், உத்தியோகம் முதலானதும் வசியமாகிப் பலக்கும்.

1352 வேறு

அருகன் கட்டைக்கு ஆதிவாரத்தில் காப்புகட்டி வேரறுமல் பிடுங்கிவந்து அத்துடன் மிளகு ஒன்பது சேர்த்துப் பூசித்துக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள எவ்வளவு கொடிய பகையாளியா யிருந்தாலும் வணங்கி வார்த்தையாடுவார்கள். வியாபாரம் உத்தியோகம் முதலிய எக்காரியங்களும் நன்மையாகவே முடியும்.

1353 வேறு

புல்லுருவி செடிக்கு சிம்மலக்னமும் செவ்வாய்க்கிழமையுங்கூடின தினம் காப்புகட்டி வேரறுமல் பிடிங்கி வந்துக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள உலகில் சகலமான பேர்களும் வசியமாவார்கள்.

1354 வேறு கடைகள் வியாபாரமில்லாத ஜாலம்

ஜெகஜாலக் கருவை வியாபாரங்கள் ஆகும் கடையில் வைத்து விட்டால் வியாபாரமில்லாது போகும். உடனே நீ சென்று யாரோ என்னமோ செய்துவிட்டார்களென்று கடைக்காரனிடத்தில் பணத்தைப் பெற்றுக்கொண்டு கருவைத் துடைத்துவிட்டுப் பரிகாரமாக எருமைக்கோமியத்தைத் தெளிக்க எப்போதும்போல் வியாபாரமாகும்.

மனிதனைப்பற்றிக் காணும் கனவின்பலன் அறியும்வித்தை

1355

மனிதன் தான் காணும் கனவில் பிராமணனைப்பார்த்தால் வியாதி சம்பவிக்கும்.

1356

மனிதன் தான் காணும் கனவில் மடிகட்டிய புரோகிதனைக்கண்டால் நெருப்புபயம் உண்டாகும்.

1357

மனிதன் தான் காணும் கனவில் க்ஷத்திரியனைக் கண்டால் க்ஷேமம்.

1358

மனிதன் தான் காணும் கனவினில் கோமுட்டியைக்கண்டால் லாபம்.

1359

மனிதன் தான் காணும் கனவில் சூத்திரனைக் கண்டால் சௌக்கியம்.

1360

மனிதன் தான் காணும் கனவினில் துலுக்கனைக் கண்டால் பயம்.

1361

மனிதன் தான்காணும் கனவில் பறையனைக் கண்டால் வருத்தஞ் சம்பவிக்கும்.

1362

மனிதன் தான்காணும் கனவில் சங்கரஜாதியைக் கண்டால் கஷ்டம்.

1363

மனிதன் தான்காணும் கனவில் தன் தேசபரிபாலனைக்கண்டால் க்ஷேமம்.

1364

மனிதன் தான்காணும் கனவில் அன்னியதேச பரிபாலனைக் கண்டால் நூதனவஸ்துவும் விருந்தும் கிடைக்கும்.

1365

மனிதன் தான்காணும் கனவில் குள்ளமாகிய மனிதனைக் கண்டால் துக்கசமாச்சாரம் சம்பவிக்கும்.

1366

மனிதன் தான்காணும் கனவில் மந்திரவாதியைக் கண்டால் மோசமுண்டாகும்.

1367

மனிதன் தான்காணும் கனவில் தாய், தந்தை, தமையன், குரு, இவர்களைக் கண்டால் செல்வம் விருத்தியாகும்.

1368

மனிதன் தான் காணும் கனவில் சிறுகுழந்தைகள், புருடர்களைக் கண்டால் வியாதியுண்டாகும்.

1369

மனிதன் தான் காணும் கனவில் அப்சரஸ்திரீகளைக் கண்டால் நஷ்டம் வருவதுடன், கன்னிகைகளுக்கு விவாகமும், ஸ்திரீகளுக்கு ஐஸ்வரியமும் உண்டாகும்.

1370

மனிதன் தான் காணும் கனவில் நீண்ட மயிருள்ள புருஷரைக் கண்டால் க்ஷாமம், தரித்திரம், வியாதி முதலியது சம்பவிக்கும்.

1371

மனிதன் தான் காணும் கனவில் மொட்டைத் தலையனைக்கண்டால் வியாதி சம்பவிக்கும்.

1372

மனிதன் தான் காணும் கனவில் படைத்தலைவனைக் கண்டால் தனத்துடன் சுகங்கிடைக்கும்.

1373

மனிதன் தான் காணும் கனவில் அழகுள்ள குழந்தைகளைக் கண்டால் சிநேகிதத் துரோகம் நேரும்.

1374

மனிதன் தான் காணும் கனவில் குழந்தைப் பிரசவங்கண்டால் சுகஜீவன முண்டாகும்.

1375

மனிதன் தான் காணும் கனவில் குழந்தை மரணங்கண்டால் ஆபத்துநேரும்.

1376

மனிதன் தான் காணும் கனவில் பாடையைக் கண்டால் சீக்கிரம் விவாகம் நேரும் அல்லது அன்னியருக்கு ஆபத்துநேரும் அதுவுந் தவறினால் தன் தாய்வர்க்கத்தில் பொருள் கிடைக்கும்.

1377

மனிதன் தான்காணும் கனவில் சிநேகிதன் மரணமடைந்ததாகக் கண்டால் சந்தோஷ வார்த்தை வரும்.

1378

மனிதன் தான் காணும் கனவில் விவாகஞ் செய்ததாகக் கண்டால் சாவுசமாச்சாரம் வரும்.

1379

மனிதன் தான் காணும் கனவில் சகாயஞ்செய்ததாகக் கண்டால். ஜயம், சுப சமாச்சாரம் வரும்.

1380

மனிதன் தான் காணும் கனவில் தான் ஒரு தோட்டத்தில் நடமாடுவதாகக் கண்டால் போகபாக்கியங் கிடைக்கும்.

1381

மனிதன் தான் காணும் கனவில் ஒரு வீட்டின் மத்தியில் உலாவுவதாகக்கண்டால் தூரதேசப் பிரயாணம் வரும்.

1382

மனிதன் தான் காணும் கனவில் தான் காட்டில் திரிவதாகக் கண்டால் தரித்திரமும், காரியஆனியு முண்டாகும்.

1383

மனிதன் தான் காணும் கனவில் தான் ஒரு சத்திரத்தில் இருப்பதாகக்கண்டால் தரித்திர இம்சையும் சிறைவாசமும் நேரிடும்.

1384

மனிதன் தான் காணும் கனவில் வியாதியஸ்தர்களைக் கண்டால் வருகின்ற வியாதி தீராது.

1385

மனிதன் தான் காணும் கனவில் பூஞ்செடிகள்வைத்த தொட்டில்களைக் கண்டால் தன் ரகசியம் வெளியாகும்.

1386

மனிதன் தான் காணும் கனவில் சுவர், மாளிகை, வீடு இதுகளின் மேல் ஏறியதாகக் கண்டால் உத்தியோகம் விருத்தியாகும்.

1387

மனிதன் தான் காணும் கனவில் சுவர், கால்வாய், ஆறு முதலியவைகளைத் தாண்டியதாகக் கண்டால் வருகின்ற ஆபத்து நீங்கும்.

1388

மனிதன் தான் காணும் கனவில் சுவர், மாளிகை, வீடு இதுகளிலிருந்து தவறி விழுந்ததாகக் கண்டால் தன் உத்தியோகத்திற்கு ஆனியுண்டாகும்.

1389

மனிதன் தான் காணும் கனவில் பயிரேறிய நிலத்தில் நடப்பதாகக் கண்டால் மிகுதியாகிய ஐஸ்வரிய முண்டாகும்.

1390

மனிதன் தான் காணும் கனவில் புல்சுமை கொண்டு வரவாவது அல்லது ஓரிடத்தில் இருக்கவாவது கண்டால் நன்மை யுண்டாகும்.

1391

மனிதன் தான் காணும் கனவில் புல்சுமை உலர்ந்ததாகக் கண்டால் கெடுதியுண்டாகும்.

1392

மனிதன் தான் காணும் கனவில் நிலத்தில் கதிர்கள் ஓங்கி வளர்வதைக்கண்டால் தான் கஷ்டத்தினுல் சம்பாதித்த திரவியத்தைக் கொண்டு சுகமடைவான்.

1393

மனிதன் தான் காணும் கனவில் தான் ஏர் உழுவதாகக் கண்டால் நல்ல கௌரவங் கிடைக்கும்.

1394

மனிதன் தான் காணும் கனவில் தான் நடக்கும் வீதி பெரிதாகக் கண்டால் தன் வெள்ளாண்மை பலித்து கௌரவமாக வாழ்வான்.

1395

மேற்படி பாதைகள் சிறிதாயும், குறுக்கு நெடுக்குமாகவுமிருப்பதாகக் கண்டால் சொல்லொணுத நஷ்டங்கள் நேரிடும்.

1396

மனிதன் தான் காணும் கனவில் தனியாக குகைக்குள் நடப்பதாகக் கண்டால் கஷ்டங்கள் நேரிடும்.

1397

மேற்படி குகையில் சிநேகிதனைக் கண்டால் சிநேகிதமனஸ்தாபமுண்டாகும்.

1398

மேற்படி குகையில் விகாரரூபமுள்ள மிருகங்களைக்கண்டால் தன் சிநேகிதர்களுக்கு விரோதம் நேரிடும்.

1399

மேற்படி குகையிலிருந்து தானாகிலும், வேறு யாராகிலும் வெளி யே போவதாகக் கண்டால் எப்பேர்ப்பட்ட ஆபத்துகளும் விலகும்.

1400

தான் நடக்கும்போது தவறி குழியில் விழுவதாகக் காணில் பொல் லாத ஆபத்துவரும்.

1401

மேற்படி குழி குயவர் வெட்டியதாக யிருந்து விழுந்தால் அமங் கலி சம்போகங் கிடைக்கும்.

1402

மனிதன் தான் இரவில் காணும் கனவில் தான் அறியாத தேசப் படத்தைக்கண்டால் பிரயாணம் நேரிடும்.

1403

மனிதன் தான் காணும் கனவில் கடற்கரையைப் பார்த்தால் அபி விர்த்தி உண்டாகும்.

1404

தன்மனை அல்லது இதரமனை மெழுகியிருப்பதாகக் கண்டால் சொத்து களவுபோகும்.

1405

மனிதன் தான் காணும் கனவில் வீடுகட்டுவதாகக் கண்டால் நினை த்தகாரியஞ் சித்தியாம்.

1406

அதைத் தன் வீடென்று எண்ணி உள் நுழைந்தால் தடையின்றி தனலாபங் கிடைக்கும்.

1407

தனக்குத் தெரிந்த நகரம் பூகம்பமானதாகக் கண்டால் தன் நக ரத்திற்கு கேடு நேரிடும்.

1408

மேற்படி நகரம் தனக்குத் தெரியாததாகில் பந்துக்களுடைய நக ரத்திற்கு கெடுதி நேரிடும்.

1409

மனிதன் தான் காணும் கனவில் தன் நிலம் விளைச்சலாக இருப் பதைக்கண்டால் தனலாபங் கிடைக்கும்.

1410

தன் பெண்சாதியானவள் தோட்டத்தில் காய் கறி செடிகளைப் பயிரிடுவதாகக் கண்டால் ஆபத்து சம்பவிக்கும்.

1411

தன் தோட்டத்தில் கிணறு பூஞ்செடி முதலிய பலவிருக்ஷங்கள் இருக்கக் கண்டால் தான் நல்ல நாயகியை யடைவதுடன் பல புதல்வர் களைப்பெற்று உலகத்தில் மேன்மையான கீர்த்தி யடைவான்.

1412

கரம்பாயிருக்கும் நிலத்தை உழு திருப்பதாகக்கண்டால் புதல்வர், உறவினர் அல்லது அந்நியர்களோடு சச்சரவுண்டாகும்.

1413

மேற்படி கினவை விவாகஞ் செய்துக் கொள்ளப் போகும் ஆண் பெண் இவர்கள் கண்டால் மேற்படி விவாகமானது தடையாகிவிடும்.

1414

மேற்படி கினவை விவாகமானவர்கள் கண்டால் துயரமும் துஷ் டப்பிள்ளைகளு முண்டாகும்.

1415

மேற்படி கினவை வியாபாரிகள் கண்டால் வியாபார நஷ்டம் வரும்.

1416

பூதானம் வாங்கியதாகக் கனவிற் கண்டால் நல்ல பெண் கிடை த்து விவாகமாகும். இதை விவாகமானவர்கள் கண்டால் பெண்களி னுடைய சீதனப்பொருள்களும், மூலதனமுங் கிடைக்கும்.

1417

தன் சொந்த நிலம் எல்லையற்றிருப்பதாகக் காணில் சந்தோஷத் துடன் திரவியங் கிடைக்கும்.

1418

மனிதன் தான் இரவில் காணும் கனவில் கருநிற பூமியைக் கண் டால் நஷ்டங்கள் சம்பவிக்கும்.

1419

மனிதன் தான் காணும் கனவில் பூமி அசைவதாகக் காணில் நினைத்த காரியம் கெடுதியாக முடியும்.

1420

பூமி அசைந்து அழுந்தியதாகக் காணில் சகல வருணத்தினருக்.கும் கெடுதி சம்பவிக்கும்.

1421

தான் நின்று இருந்து பூமி பாதத்தினிட மசைந்தால் கோரிய வழக்கும் பலியாது (அல்லது) கைப்பொருள் நஷ்டங் காட்டும்.

1422

மனையானது குவிந்ததாகக் கண்டால் தன்னைச் சார்ந்த பெரிய மனிதனுக்கு கெடுதியுண்டாகும்.

1423

ஒரு மரத்தின்மேல் யேறுவதாகக் கண்டால் விருந்து தனலாப முண்டாகும்.

1424

ஏறுகிறதற்கு வழியில்லாத மலையின்பேரில் யேறுவதாகக் கண்டால் ஆபத்துவரும்.

1425

மலையின்மீது கஷ்டப்பட்டு ஏறிவிட்டதாகக்கண்டால் ஆபத்து சம்பவித்து மறுபடியும் ஐஸ்வரியமுண்டாகிப் பலன் கொடுக்கும்.

1426

மலையின்பேரில் ஏறும்போது தவறவிழுந்ததாகக் கண்டால் ஈன திசை சம்பவிக்கும்.

1427

மலையின்பேரில்யேற யோசனை செய்யும்போதே தவறவிழுந்ததாகக் கண்டால் படமுடியாத துன்பங்களெல்லா மனுபவிக்க நேரிடும்.

N. B. மேற்சொல்லிவந்தகனவுகளில் முதற்சாமமும் ஒருவருடத்திலும், இரண்டாஞ்சாமம் எட்டுமாதத்திலும், மூன்றுவதுசாமம் நாலு மாதத்திலும், நான்காஞ்சாமம் ஒரு மாதத்திலும், ஐந்தாஞ் சாமம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உடனேயும் பலிக்குமென்று கற்றறிந்தோர் சொல்லுவாராயினர்.

1428 விநாயகர் வசிய ஜாலம்

வில்வமரத்திற்கு சுக்கிரவாரமும் சித்திரை நக்ஷத்திரமுங்கூடின தினத்தில் சூரியோதயத்திற்குமுன் பொங்கலிட்டுக் காப்புகட்டி

தூபதீபத்துடன் விநாயகமூலமந்திரத்தைச் செபித்து மறு ஆதிவாரத்தில் வேரறுமல் எடுத்துக் குளிசமாடி கட்டிக்கொள்ள விநாயகர் வசியமாவார்.

1429 சுப்பிரமணியர் வசிய ஜாலம்

மயில்கொன்றை மரத்திற்கு செவ்வாய்க்கிழமையும் அஸ்த நக்ஷத்திரமுங்கூடிய சுபதினத்தில் பொங்கலிட்டுக் காப்புகட்டி சுப்பிரமணியர் மந்திரத்தைச் செபித்து தூபதீபங்கொடுத்து வேரை குளிசமாகக் கட்டிக்கொள்ள சுப்பிரமணியர் வசியமாகும். இதனுல் சரஸ்வதிகடாட்சமுண்டாகி வாக்குப்பாடுந் திறமையுமுண்டாகும்.

1430 மும்மூர்த்திகள் வசிய ஜாலம்

அரசமரத்திற்கு அஸ்தநக்ஷத்திரமும் ஆதிவாரமுமாகப்பார்த்து பொங்கலிட்டுக் காப்புகட்டி தூபதீபங்கொடுத்து வேரைப்பிடுங்கிக் குளிசமாடி கட்டிக்கொள்ள மும்மூர்த்திகளுடைய கிருபையினுல் சகல காரியங்களும் நிறைவேறும்.

1431 சகல தேவர்களின் வசிய ஜாலம்

கஸ்தூரிமஞ்சள் செடிக்கு செவ்வாய்க்கிழமையில் காப்புகட்டி பொங்கலிட்டு தூபதீபங்கொடுத்து வேரறுமல் மறு செவ்வாய்க்கிழமையில் எடுத்துக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள சகல தேவர்களும் வசியமாவார்கள்.

1432 அட்டதிக்குப் பாலகர்களின் வசியஜாலம்

மஞ்சள்செடிக்கு சுக்கிரவாரம் நடுமத்தியானத்தில் காப்புகட்டிப் பொங்கலிட்டு தூபதீபங்கொடுத்து வேரைக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள அட்டதிக்குப் பாலகர்களும் வசியமாகி நன்மையைக் கொடுப்பார்கள்.

1433 சூரியன் வசியஜாலம்

முருங்கைச்செடிக்கு செவ்வாய்க்கிழமையதினம் பொங்கலிட்டுக் காப்புகட்டி சூரியமந்திரத்தைச் செபித்து வேரறுமல் பிடுங்கிக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள சூரியன் வசியமாகும.

1434 சந்திரன் வசியஜாலம்

புல்லுருவிச் செடிக்குப் பூரணையும் திங்கட்கிழமையுமாக காப்பு கட்டி பொங்கல் முதலிய பூசைபோட்டு வேரைப்பிடுங்கி குளிசமாடிக் கட்டிக்கொள்ள சந்திரன் வசியமாகும்.

1435 செவ்வாய் வசியஜாலம்

செவ்வாய்க்கிழமையதினம் சிவனார்வேம்புக்குக் காப்புகட்டிப் பொங்கல் முதலிய பூசைகளைச்செய்து வேரைப்பிடுங்கிவந்து குளிச மாடிக் கட்டிக்கொள்ள செவ்வாய் வசியமாகும்.

1436 புதன் வசியஜாலம்

ஆவின் புல்லுருவிச்செடிக்கு அமாவாசையும் ஆதிவாரமுங்கூடிய சுபதினத்தில் காப்புகட்டி பொங்கல்முதலிய தூபதீபங்கொடுத்து வேரைப்பிடுங்கி குளிசமாடி அதில் ஐங்காயத்தைத் தடவிக்கட்டிக் கொள்ள புதன் வசியமாகும்.

1437 வியாழபகவான் வசியஜாலம்

துளசிச்செடிக்கு வியாழக்கிழமையதினம் பொங்கலிட்டு காப்பு கட்டி தூபதீபங்கொடுத்து வேரைப்பிடுங்கி குளிசமாடிக் கட்டிக்கொள்ள வியாழபகவான் வசியமாவார்.

1438 சுக்கிரன் வசிய ஜாலம்

குடியோட்டிப்பூண்டுக்கு வெள்ளிக்கிழமையதினம் காப்புகட்டி பொங்கலிட்டு தூபதீபம் கொடுத்து வேரையெடுத்துக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள சுக்கிரன் வசியமாகும்.

1439 சனிபகவான் வசிய ஜாலம்

அலரிச்செடிக்கு ஆதிவாரத்தில் காப்புகட்டிப் பொங்கலிட்டு மறு ஆதிவாரத்தில் தூபதீபங்கொடுத்து வேரைப்பிடுங்கிக் குளிசமாடி கட்டிக்கொள்ள சனிவசியமாகி சகலமான இக்கட்டுகளையும் விலக்குவர்.

1440 ராகு வசிய ஜாலம்

காஞ்சிரைக்கு கார்த்திகை நக்ஷத்திரமும் அமாவாசையுங் கூடிய தினத்தில் காப்புகட்டி பொங்கலிட்டுப் பலிகொடுத்து மறுவாரஞ்சென்று வேரருமல்எடுத்துக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள ராகுவசியமாம்.

1441 கேது வசிய ஜாலம்

வேப்பமரத்திற்கு வெள்ளிக்கிழமையதினம் காப்புகட்டிப் பலி கொடுத்து பொங்கல் முதலிய தூபதீபத்துடன் வேரைக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள கேதுவசியமாம்.

1442 காளி வசிய ஜாலம்

வெள்ளைக்குன்றிமணி செடிக்கு வெள்ளிக்கிழமை காலையில் காப்பு கட்டிப் பலிகொடுத்து தூபதீபத்துடன் பூசை முதலியதுகளை செய்து வேரைக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள காளிவசியமாம்.

1443 துர்க்கை வசிய ஜாலம்

ஊமத்தன் செடிக்கு செவ்வாய்க்கிழமையதினம் காப்புகட்டிப் பலி கொடுத்து வேரைப்பிடுங்கிக் குளிசமாடிக் கட்டிக்கொண்டால் துர்க்கை வசியமாகும்.

1444 ருத்திரி வசிய ஜாலம்

வேளைக்கு வெள்ளிக்கிழமையும் கிராணமுமாகப் பார்த்துப் பொங் கலிட்டு தூபதீபத்துடன் பலிகொடுத்து மறுவாரம் வேரை குளிசமா டிக் கட்டிக்கொள்ள ருத்திரி வசியமாகி நம் காரியங்களை அனுகூலஞ் செய்யும்.

1445 மயானருத்திரி வசிய ஜாலம்

நாய்வேளைச்செடிக்கு பௌர்ணமியும் ஞாயிற்றுக் கிழமையுமாகப் பார்த்து காப்புகட்டி பொங்கலிட்டு பலியுடன் தீபதூபங் கொடுத்து வேரைப்பிடுங்கிவந்து குளிசமாடிக் கட்டிக்கொள்ள மயானருத்திரி வசி யமாவாள்.

1446 சாமுண்டீஸ்வரி வசிய ஜாலம்

உத்தாமணிச்செடிக்கு கிராணத்தில் காப்புகட்டி தீபதூபங்கொடு த்து பயபக்தியுடன் வேரறுமல் பிடுங்கிவந்து குளிசமாடி ஐங்காயந் தடவி கட்டிக்கொள்ள சாமுண்டி வசியமாகும்.

1447 சரஸ்வதி வசிய ஜாலம்

சண்பகச்செடிக்கு சனிவாரம் சூரியோதயத்திற்குமுன் பொங்கல் இட்டு தீபதூபத்துடன் காப்புகட்டி வேரையெடுத்துக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள சரஸ்வதி வசியமாவாள்.

1448 சாமளா வசிய ஜாலம்

மல்லிகைச்செடிக்கு செவ்வாய்க்கிழமை காலை காப்புகட்டிப் பொங் கலிட்டு பலிகொடுத்து வேரைப்பிடுங்கிக் குளிசமாடி அதில் ஐங்காயந் தடவிக் கட்டிக்கொள்ள சாமளா வசியமாவதுடன் நாம் நினைத்த காரி யங்களும் கைகூடும்.

1449 ஜாலக்காள் வசிய ஜாலம்

ஞாயிற்றுக்கிழமை தும்பைச்செடிக்குக் காப்புகட்டி பொங்கல் பலியுடன் தூபதீபங்கொடுத்து வேரைக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள ஜாலக்காள் வசியமாகி சகல வித்தைகளுக்கும் முன்னிற்பாள்.

1450 மலையாள பகவதி வசிய ஜாலம்

குடியோட்டிப் பூண்டுக்கு குருவாரம் சிம்மலக்கினத்தில் பொங்கல் பலியுடன் காப்புகட்டி தீபதூபங்கொடுத்து மறுவாரம் வரை மலையாள பகவதி மூலமந்திரத்தைச் செபித்து வேரைக் குளிசமாடி ஐங்காயஞ் சேர்த்துக் கட்டிக்கொண்டால் மலையாள பகவதி வசியமாவாள்.

1451 மலையாள தூமாதேவி வசிய ஜாலம்

பிரமதண்டிச் செடிக்கு கிராணமும் ஞாயிற்றுக்கிழமையுமாகப் பார்த்து பொங்கல் பலியுடன் காப்புகட்டி வேரையெடுத்துக் குளிசமாடி கட்டிக்கொள்ள வசியமாம்.

1452 பத்திரகாளி வசிய ஜாலம்

கிராணமும் ஆதிவாரமுமாக எட்டிமரத்திற்கு காப்புகட்டி பொங்கல் பலிமுதலிய தூபதீபத்துடன் மறு ஆதிவாரத்தில் வேரையெடுத்துக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள பத்திரகாளி வசியமாகும்.

1453 வாலை வசிய ஜாலம்

மங்களவாரத்தில் கொத்தான் செடிக்குப் பொங்கலிட்டு காப்புகட்டி தீபதூபங்கொடுத்து வேரையெடுத்துக் குளிசமாடி கட்டிக்கொள்ள வாலை வசியமாகும்.

1454 வராகி வசிய ஜாலம்

சோமவார சதுர்த்தியில் மஞ்சள்செடிக்கு காப்புகட்டிப் பலிகொடுத்து வராகி மந்திரத்தை ஆயிரத்தியெட்டு செபித்து வேரையெடுத்துக் குளிசமாடி கட்டிக்கொள்ள வராகி வசியமாகும்.

1455 வைரவர் வசிய ஜாலம்

வில்வமரத்திற்கு வெள்ளிக்கிழமையில் காப்புகட்டி பொங்கல் பலிகொடுத்து வேரையெடுத்து வந்து குளிசமாடி கட்டிக்கொள்ள வைரவர் வசியமாகும்.

1456 அஞ்சனாதேவி வசிய ஜாலம்

கொண்ணைமரத்திற்கு ஆதிவாரத்தில் காப்புகட்டிப் பொங்கல் பலி முதலிய தூபதீபங்கொடுத்து வேரைக் குளிசமாடி கட்டிக்கொள்ள அஞ்சனாதேவி வசியமாகும்.

1457 ஆஞ்சநேயர் வசிய ஜாலம்

சரக்கொன்றை மரத்திற்கு ஆதிவாரத்தில் காப்புகட்டி பூசைமுதலானதும் போட்டு ஆஞ்சநேயரைத் துதித்து வேரைப்பிடுங்கி குளிசமாடிக் கட்டிக்கொள்ள வசியமாம்.

1458 வீரபத்திரர் வசிய ஜாலம்

வில்வமரத்திற்கு வியாழக்கிழமையில் தாமரை நூல்கொண்டு காப்புகட்டி பொங்கல் பலிமுதலிய பெரும்பூசையை விமரிசையாகச் செய்துப் பிறகு சோடசோபசாரத்துடன் தூபதீப நைவேத்தியங்கொடுத்து வேரை குளிசமாடி கட்டிக்கொள்ள வீரபத்திரர் வசியமாம்.

1459 அகோரவீரபத்திரர் வசிய ஜாலம்

இருவேலிச்செடிக்கு வெள்ளிக்கிழமையில் காப்புகட்டி பொங்கல் இட்டு நேமநிட்டையுடன் வேரைப்பிடுங்கி குளிசமாடி கட்டிக்கொள்ள அகோர வீரபத்திரர் வசியமாகும்.

1460 வீரமாங்காளி வசிய ஜாலம்

அரசமரத்திற்கு ஆதிவாரத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி பொங்கவிட்டுப் பலிகொடுத்து பூசைமுதலானதும் போட்டு வேரைப்பிடுங்கி வந்து குளிசமாடி கட்டிக்கொள்ள வசியமாம்.

1461 குறளி வசிய ஜாலம்

ஊமத்தன் செடிக்கு ஆதிவாரத்தில் சிங்கலக்கின வேளையாகப் பார்த்து மஞ்சள்நூல் காப்புகட்டி பொங்கலிட்டுப் பலிகொடுத்து பூசைமுதலானதும்போட்டு வேரைப்பிடுங்கிவந்து குளிசமாடிக் கட்டிக்கொள்ள குறளி வசியமாகும்.

1462 கோள்ளி வசிய ஜாலம்

ஆடுதின்னுப்பாளைக்கு ஆதிவாரத்தில் காப்புகட்டிப் பொங்கல் பலி முதலிய தீபதூபங்கொடுத்து, வேரைக் குளிசமாடி ஐங்காயந் தடவி கட்டிக்கொள்ள கொள்ளி வசியமாகும்.

1463 மலக்குட்டி வசிய ஜாலம்

எட்டிமரத்திற்கு சோமவாரத்தில் காப்புகட்டி பொங்கலிட்டு பலி முதலிய தீபதூபத்துடன் பூசைமுதலானதும்போட்டு மலக்குட்டியை மனதினிடந் தியானித்து லட்சத்தியெட்டு உருகொடுத்து வேரைப்பிடுங்கி குளிசமாடிக் கட்டிக்கொள்ள மலக்குட்டி வசியமாகி உன்னிஷ்டம்போல நடந்து மேன்மையைத்தரும்.

1464 லாடக்கன்னி வசிய ஜாலம்

வேளைக்கு வெள்ளிக்கிழமையில் மஞ்சள்நூல் காப்புகட்டி பொங்கவிட்டுப் பலிகொடுத்து தூபதீபத்துடன் லாடகன்னியைத் தியானித்து

வேரைப்பிடுங்கி குளிசமாடி ஐங்காயஞ்சேர்த்து கட்டிக்கொள்ள வசியமாகும்.

1465 விஷ்ணு வசிய ஜாலம்

துளசிச்செடிக்கு சனிவாரத்தில் காப்புகட்டி பொங்கலிட்டு தீபதூபத்துடன் அஷ்டாட்சர மந்திரத்தை லட்சத்தியெட்டு உருகொடுத்து மறுவாரம் சூரியோதயத்திற்குமுன் வேரறுமல் பிடுங்கிவந்து குளிசமாடி ஐங்காயஞ்சேர்த்து கட்டிக்கொண்டால் ஸ்ரீ மகாவிஷ்ணு வசியமாகி நலங்கொடுப்பார்.

1466 ஸ்ரீ லட்சுமி வசிய ஜாலம்

மஞ்சள்செடியின் வடவேருக்கு வெள்ளிக் கிழமையில் காப்புகட்டிப் பொங்கலுடன் தீபதூபங்கொடுத்து ஸ்ரீ லட்சுமியை மனதில் தியானித்து அஷ்டாட்சர மந்திரத்தை மறுவாரம்வரை இடைவிடாது தினமொன்றுக்கு லட்சத்தியெட்டு உருகொடுத்து பயபக்தியுடன் வேரைக்குளிசமாடி கட்டிக்கொள்ள லட்சுமிவசியமாம்.

1467 எக்கலாதேவி வசிய ஜாலம்

வேலிப்பருத்திச்செடிக்கு வெள்ளிக்கிழமையில் காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி எக்கலாதேவியை மனதில்நினைத்து வேரைப்பிடுங்கிவந்து குளிசமாடி ஐங்காயந்தடவி கட்டிக்கொள்ள எக்கலாதேவி வசியமாகும்.

1468 குட்டிச்சாத்தான் வசிய ஜாலம்

காஞ்சோரிசெடிக்கு கிரணமும் ஆதிவாரமுஞ்சேர்ந்த தினத்தில் காப்புகட்டி பொங்கல் பலிமுதலிய பூசைகளுடன் தீபதூப ஆராதனைச் செய்து வடக்குபோகும் வேரையெடுத்துக் குளிசமாடி அதன்மேல் ஐங்கோலக்கருவைப்பூசி பூசையில்வைத்து குட்டிச்சைத்தான் மந்திரத்தை ஆயிரத்தியெட்டு செபித்து கட்டிக்கொள்ள வசியமாகி நம்மிஷ்டம்போல் எக்காரியங்களையும் செய்யும்.

1469 பூதவசிய ஜாலம்

வேம்புக்கு அமாவாசையும் ஆதிவாரமுங்கூடிய தினத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி பொங்கலிட்டு பலி பூசைமுதலியதைச் செய்து வேதாளமந்திரத்தைச் செபித்து வேரை குளிசமாடி கட்டிக்கொண்டால் நமக்கு ஆகாதகாரிய மொன்றுமில்லை.

1470 வேறு எக்ஷணி வசிய ஜாலம்

ஸ்ரீம், இரீம், கிலீம், அவ்வும், மவ்வும், சவ்வும், நமசிவய என்று நாற்பது நாளைக்கு இடைவிடாமல் சுத்தமாக செபித்துவர சித்தியாகி வேண்டுமான வேலைகளைச் செய்யும்.

1471 எக்ஷணி வசியமை

பச்சை ஓணான் பிச்சுடன், திசைமயக்குப்பொடியும், மதிமயக்குத் தூளுஞ் சேர்த்துக்கூட ஐங்கோலம் விட்டரைத்து சிமிளில் வைத்துக் கொண்டு ஸ்ரீம், இரீம், கிலீம் என்று நாற்பதுநாளைக்கு காலை மாலை தவ றாமல் உருகொடுக்க சித்தியாகி சகல வேலைகளையும் செய்யும்.

1472 வேதாள வசிய ஜாலம்

கருங்காலிச்செடிக்கு கிராணமும் அமாவாசையும் சேர்ந்த தினத் தில் காப்புகட்டி பலிகொடுத்து பூசைமுதலானதும் பெலமாகச்செய்து உச்சாடனமந்திரத்தைச் செபித்து வடக்குவேரைவாங்கி ஐங்கோலக் கருவையும் ஐங்காயமும்பூசி பூசைசெய்து கட்டிக்கொள்ள பூதம் வசிய மாகி உன் காரியத்தையெல்லாம் முடிப்பதுந்தவிர நீ நினைக்கும்போது உன்னெதிரில்வந்து நிற்கும்.

1473 புருட வசிய ஜாலம்

குண்டுமணிசெடிக்கு சோமவாரமும் பருவமுங்கூடிய சுபதினத் தில் மஞ்சள்நூல் காப்புகட்டி தூபதீபத்துடன் பலிமுதலானதும் போட்டு வடவேரைவாங்கி மோகினிமந்திரத்தை ஆயிரத்தெட்டுரு செபித்துப் பூசையில் வைத்து கட்டிக்கொள்ள புருட வசியமாகும்.

1474 ஸ்திரீ வசிய ஜாலம்

கீழாநெல்லிச் செடிக்கு வெள்ளிக்கிழமைதினம் மஞ்சள்நூல் காப்புகட்டி பொங்கலிட்டுப் பலிகொடுத்து தூபதீபத்துடன் பூசை போட்டு மறுவெள்ளிக்கிழமையதினம் சூரியோதயத்திற்குமுன் வேரை யெடுத்துக் குளிசமாடி அதனுடன் ஐங்காயஞ்சேர்த்து கட்டிக்கொள்ள ஸ்திரீவசியமாகி நீ கேட்டதைக் கொடுப்பார்கள்.

1475 புலி வசிய ஜாலம்

சிவதைச்செடிக்கு ஆதிவாரமும் கிராணமுங்கூடிய தினத்தில் சாதாநூல் காப்புகட்டிப் பொங்கல் முதலிய சோடசோபசார பூசைகளை நடத்தி குளிசமாடி கட்டிக்கொள்ள புலிவசியமாகும்.

1476 ஆனை வசிய ஜாலம்

மேனிச்செடிக்கு ஆதிவாரம் கும்பலக்னத்தில் காப்புகட்டி பொங் கல் பலிமுதலிய தூபதீபங்கொடுத்து விநாயகரைத் தியானித்து மறு வாரம் ஷ லக்கினத்தில் சென்று வேரையெடுத்து குளிசமாடி கட்டிக் கொள்ள ஆனைவசியமாகி நம்மைப்பணியும்.

1477 கரடி வசிய ஜாலம்

சிந்தில்கொடிக்கு செவ்வாய்க்கிழமை காப்புகட்டிப் பலிகொடுத்து தூபதீபத்துடன் பூசைமுதலாகியதைச்செய்து வேரைப்பிடுங்கி அத ற்கு கருவைத்தடவி குளிசமாடி கட்டிக்கொள்ள கரடி வசியமாகி உன் னுடன் திரியும்.

1478 குரங்கு வசிய ஜாலம்

காட்டாத்திச்செடிக்கு அமாவாசையில் காப்புகட்டிப் பொங்கலி ட்டு மறுவாரம் கும்பலக்னத்தில் சென்று தூபதீபத்துடன் பலிகொடு த்து வேரைக்குளிசமாடி கட்டிக்கொண்டால் குரங்குகள் வசியமாகும்.

1479 நாய் வசிய ஜாலம்

புல்லுருவிச்செடிக்கு செவ்வாய்க்கிழமையில் காப்புகட்டி பலிகொ டுத்து பொங்கல் தூபதீபத்துடன் வேரைக் குளிசமாடி கட்டிக்கொள்ள நாய் வசியமாகும்.

1480 செந்நாய் வசிய ஜாலம்

கருங்காலிமரத்திற்கு பொங்கலிட்டு காப்புகட்டி வேரறுமல் பிடு ங்கிவந்து ஐங்கோலத்தைத்தடவி குளிசமாடி கட்டிக்கொள்ள நாய்களெ ல்லாம் வசியமாகும்.

1481 மரநாய் வசிய ஜாலம்

சிறுபுள்ளடிச்செடிக்கு ஆதிவாரமும் அமாவாசையுங்கூடிய தினத் தில் கன்னியாலக்னமாகப்பார்த்து பொங்கலிட்டு காப்புகட்டி பைரவமந் திரஞ்செபித்து வேரைக் குளிசமாடிக் கட்ட மரநாய் வசியமாகும்.

1482 எக்கலாதேவி வசிய ஜாலம்

நிண்ணூல்வாடிச் செடிக்கு ஞாயிற்றுக்கிழமையில் பொங்கல் பலி முதலிய தீபத்துடன் சோடசோபசாரமாகப் பூசைசெய்து வேரையெ டுத்துக் குளிசமாடி கட்டிக்கொள்ள எக்கலாதேவி வசியமாகும்.

1483 பூனை வசிய ஜாலம்

அழிஞ்சி செடிக்கு ஆதிவாரத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டிப் பொங்கல் பலிமுதலான பூசைகளைச்செய்து வேரைப்பிடுங்கி வந்து

ஐங்காயத்தையும் கருவையுங் கலந்து குளிசமாடி கட்டிக்கொள்ள பூனை வசியமாகும்.

1484 கரும்பூனை வசிய ஜாலம்

காட்டலரிச்செடிக்கு ஞாயிற்றுக்கிழமையில் காப்புகட்டிப் பலி கொடுத்து வேரைப்பிடுங்கிவந்து குளிசமாடிக்கட்டிக்கொள்ள கரும் பூனை வசியமாகும்.

1485 காட்டுப்பூனை வசிய ஜாலம்

தொட்டால்வாடிச் செடிக்கு செவ்வாய்க்கிழமை நடுமத்தியானத் தில் காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து வேரைக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள காட்டுப்பூனை வசியமாகும்.

1486 புனுகுபூனை வசிய ஜாலம்

பிரமதண்டிச் செடிக்கு சூரியகிராணத்தில் காப்புகட்டிப் பலி கொடுத்து வேரைக் குளிசமாடி கட்டிக்கொள்ள புனுகுபூனைகள் வசியமாகும்.

1487 சவ்வாதுபூனை வசிய ஜாலம்

கீழாநெல்லிச் செடிக்கு கிராணமும் செவ்வாய்க்கிழமையுங் கூடிய தினத்தில் காப்புகட்டி பொங்கலிட்டு தீபதூபத்துடன் பலி கொடுத்து வேரைக் குளிசமாடி கட்டிக்கொள்ள சவ்வாதுபூனைகள் வசியமாகும்.

1488 மான் வசிய ஜாலம்

சிறுபுள்ளிடி என்னும் மூலிகைக்கு கிராணமும் செவ்வாய்க்கிழ மையுமாகப் பார்த்து சிம்மலக்கினத்தில் காப்புகட்டி பொங்கல் பலி முதலிய பணிவிடைகளைச்செய்து வராகி மந்திரத்தை மறுவாரம் வரை செபித்து தனுசுலக்கினத்தில் வேரைப் பிடுங்கி குளிசமாடிக் கட்டிக் கொள்ள மான் வசியமாகும்.

1489 நரி வசிய ஜாலம்

மல்லிகைச்செடிக்கு அமாவாசை தினம் காப்புகட்டி பொங்க லிட்டு பலிகொடுத்து வேரையெடுத்துவந்து குளிசமாடி கட்டிக்கொள்ள நரி வசியமாகும்.

1490 சுக்கிர வசிய ஜாலம்

மாலை வேளையில் ஸ்நானம் செய்து உன் ஜபதபங்களை முடித்துக் கொண்டு மேற்கு முகமாகத் திரும்பி உட்கார்ந்து கொண்டிருக்க, உன் நற்கதியால், ஏதாகிலுமோர் நக்ஷத்திரம் எரிந்து கீழே விழும்போது

இதே சமயத்தில் காலத்தை வீணே கழிக்காது கீழே கிடக்கும் யாதா மொரு சிறிய கல்லே எடுத்துக்கொண்டு விடவேண்டும். இந்தக் கல் உன்னிடமே இருக்க நீ இதன் மூலமாய் எட்சணியம் சொல்லலாம். இதை பார்த்தவர்கள் உனக்கு குரளி வசியமென்பார்கள்.

1491 ஷை கல்லின் வசிய வித்தை

மேற்படி கல்லே பத்திரமாக வைத்திருந்து காலே வேலேகளில் நீ புலங்களின் பக்கமாக போகும் சமையத்தில் மீன்குத்திபட்சி பறந்து உன் எதிரில் வருமாயின் உடனே நீ மேற்கு முகமாகத் திரு ம்பி நின்று இதைக் குறிப்பிட்டு உன்னிடமிருக்கும் மேற்படி கல்லே விசிறிப்போட மேற்படி பட்சியானது கீழே விழுந்துவிடும். இதைப் பார்த்தவர்கள் உனக்கு பட்சி வசியமென புகழ்ந்துக் கொண்டாடு வார்கள்.

1492 ஷை பட்சியின் இஷ்டசித்தி ஜாலம்

மேற்படி பட்சியை நீ உடனே எடுத்து இதன்மீதுள்ள சிறகு களேப்போக்கி, மாமிசத்தைப் பட்சித்துவிட நினேத்த காரியங்கள் நக்ஷத் திரப் பிரகாசமாகப் பலிதமாகும்.

1493 ஷை மீன்குத்தி சிரசின் வசியம்

நீ மேற்படி பட்சியின் இறகில் யாதாமொரு ஒரு இறகை யெடுத் துக்கொண்டுபோய், ஓடும் ஜலத்தில்போட இது எதிர் முகமாக எதிர் த்துஓட வாரம்பிக்கும். இந்த சமயத்தில் இதை எடுத்து பதனப் படுத் திக்கொள்ள வேண்டியது. இதனுல் யாவரையும் உன் மனேவசிய மாகும்படிசெய்து சித்திபெறலாம்.

1494 இதுவுமது

நீ இந்த இறகை சுக்கிலபட்சம் பஞ்சமிதிதியன்று காலே 7-மணிக் குள் சனிவாரத்தன்று விநாயகரைப் பிடித்துவைத்து தூபதீபங்கள் கொடுத்து பூஜையை முடித்து குளிசமாடி வைத்துக்கொள்ள நீ நினேத்த ஸ்திரீகள் வசியமாவார்கள். வேண்டாமெனினும் உன் இஷ் டம்போல் நிற்பர். இது சமையம் உன்னே மகா மந்திரவாதி யென்று சொல்லுவார்கள்.

1495 சூரிய வசிய ஜாலம்

நீ காலேயில் எழுந்திருந்து தினே தினே ஒரு மண்டலம் சூரிய னேக் குறித்து உன் இஷ்டமாக ஸ்தோத்தரித்து 40-வது நாள் வெள் ளிக்கிழமை பார்த்து மேற்படி தினத்தில் சூரியனிட பிரகாசத்தை

கங்கையிடமாகப் பார்த்து நமஸ்கரித்து சூரிய கிரகணத்தன்று 108-உரு செபித்து பூஜை முதலியவைகளை முடித்து நீ முன்கங்கையில் பார்த்த வண்ணமாக வரைந்து 1008-உரு திரும்ப செபித்து குளிச மாடி கையில் அணிய இஷ்டானுகூல சித்திபெறலாம்.

1496 இதுவுமது

மேற்படி மாதிரியாக நிர்ணயமாக இருந்து முடித்து சந்திரகிரகணத்தில் 1008-உரு, (நசி, மசி, கசி, வசி, நமோ, கம்பனம்) செபித்து சித்திபெற மேலும் மேலும் நீ நினைத்த மாதிரியாகவும் சித்தி பெறலாம்.

1497 இதுவுமது

ஷை குளிசத்தை அணிந்து எந்த சமையத்தில் வேண்டுமோ அதேசமயத்தில் மாடன் முதலிய தேவதைகளை நினைத்து பூஜை செய்து, பேய் பிசாசுகளை ஓட்டி மந்திரவாதியெனவும் பேர் பெறலாம்.

1498 மாங்கனியில் உதிரம்காட்டும் ஜாலம்

செம்பருத்தி புஷ்பம் 5 அல்லது 6 பறித்துக்கொண்டுவந்து சாறு பிழிந்து மேற்படி சாற்றை ஒரு கத்தியில்பூசி வெயலில் உலர்த்தி பிறகு எடுத்து திரும்ப முன்மாதிரியாகவே செய்து உலரவைத்து நீ ஜாலமாடு மிடத்திற்கு கொண்டுபோய் சபையோரைப்பார்த்து ஓ சபையோர்களே! யாவரும் எலுமிச்சம்பழத்தைஅறுத்து உதிரம் காட்டுவார்கள். நான் அந்தமாதிரி செய்யாமல் மாம்பழத்தை அறுத்து உதிரம் காட்டுகிறேன் பாருங்களென்றுச்சொல்லி நீ முன்னதாக தயார் செய்து வைத்திருக்கும் கத்தியால் அறுத்துக் காண்பிக்க உதிரம்போல் ரசம் ஒழுகும். இதை சபையோர்கள் பார்த்து குட்டிச்சாத்தான் வசியமென்பார்கள்.

1499 ஸ்திரீ வசியஜாலம்

கடைக்குச்சென்று தேறின பாக்கு பலம் ஒன்று வாங்கிக்கொண்டுவந்து இதில் அகன்றும் ஆழமுள்ளபாக்கும் ரகம்ஒன்று தேர்ந்தெடுத்து இதில் மானிட எந்திரம் ஒரு ட்ராப் ஊரவைத்து ரவியில் உலரவைத்து திரும்பவும் மேற்படி மாதிரியாகவேசெய்து உலரவைத்து இந்தப்பிரகாரம் 1-வாரம்செய்து மோகினி வசியம்செய்து அத்தேவதையிடத்தில் வரம்பெற்று மேற்படி பாக்கை நினைத்திருக்கும் ஒரு ஸ்திரீயை சாப்பிடும்படிசெய்தால் அன்றையதினத்திலிருந்து அவள் உன்னிஷ்டத்திற்கு இணங்கி உன்னிஷ்டம்போல் நடப்பாள்.

1500 கருடன் உண்டாக்கும் சண்டை

கருடன் கூடுகட்டியிருக்கும் இடத்தின் கீழே தற்செயலாக விழுந்து இறந்துகிடக்கும் கருடன் குஞ்சை எடுத்து அதன் வாயில் முத்துக்கொட்டை 20 அல்லது 25 வைத்து அடைத்து அதை ஒரு ஜாண் ஆழத்தில் புதைத்து மக்கவைத்துவிட பிறகு முத்துக்கொட்டைச்செடி பயிராகி காய் காய்க்கிறது. இதை செக்கிலிட்டு எண்ணெய் எடுத்து மேற்படி எண்ணெயை இரவு 7-முதல் காலை 4-மணிக்குள் விளக்கேற்ற மேற்படி விளக்கின் வெளிச்சத்தில் வீடெங்கும் கருடனாகத்தோன்றும் பார்ப்பவர்கள் பிரமித்துவிடுவர். உடனே வேறே ஒரு விளக்கேற்ற மேற்படி கருடன்களெல்லாம் மறைந்துவிடும். இதைப் பார்ப்பவர்கள் யாவரும் உனக்கு பட்சிவசிய மென்பார்கள்.

1501 பல்லுவிழும் ஜாலம்

ரவியின் உஷ்ணத்தால் நீராவியாக மரபனிக் கட்டியாக மாரியிருக்கும் கட்டிகள் யாவும், சில காலங்களில் மழையுடன் கலந்து பெய்வதையெல்லாம் ஒருங்குசேர்த்து எடுத்து ஒரு புட்டியில் காற்றுப்போகாமல் பதனம்செய்து மேற்படி ஜலத்தில் காப்பி, டீ முதலியது காய்ச்சிக் கொடுக்க இதைக் குடித்தவர்களுக்கு பல்விழுந்து போவதைப்போல் தென்படும். ஆயினும் பல்விழாது. யாவரும் தந்திரமுள்ள மந்திர வாதியெனப் புகழ்வார்.

1502 மணல் வெடிஜாலம்

ஜாலமாடுமிடத்தில் வந்திருக்கும் சபையோரைப்பார்த்து ஓ சபையோர்களே! பாருங்கள் இந்த மணலைக்கொண்டு வெடிக்கும்படி செய்கிறேன் என்று சொல்லி ஒரு உச்சிக்கரண்டி மணலை எடுத்து ஒரு காகிதத்தில் காலணாஅளவில் பொட்டளம்செய்து ரவியில் காயவைத்து பிறகு எடுத்து கல்சுவற்றில் ஓங்கி அடிக்க வெடிசத்தம்போல் கேட்கும். சபையோர் உன்னை அக்கினிபகவானே வசியமென்பார்கள்.

1503 சீலையை ஒட்டவைக்கும் ஜாலம்

நீ ஜாலமாடும் சபைக்குச்சென்று சபையோரைப்பார்த்து 3 அங்குலம் 4 அங்குலம் அளவு அகல நிகளமுள்ள சிறு துண்டுகளாக சீலையைக்கிழித்து ஒவ்வொன்றாக எடுத்து அரைவீசம்படி மணலைக்கொட்டி மூட்டைபோல் சுருட்டி கையில் எடுத்து பிறகு அடிப்பக்கத்தை கொஞ்சம் ஜலம் ஈரமாகும்படி செய்து சுருட்டிய மூட்டையின் பக்கமாகத்திரும்பி ஓங்கி மாடியின்மேல் பின்புரம் அடிக்க மணல்கள் யாவும்

கீழே விழுந்துவிடும். துண்டுத்துணி மேலேயே ஒட்டிக்கொள்ளும். இதே பிரகாரம் ஒவ்வொன்ருகச் செய்துக்காட்டலாம். ஆயினும் முன்னதாகவேசெய்து பழகிக்கொள்ளவேண்டும். இதைப்பார்த்தவர்கள் யாவரும் உனக்கு வாயுபகவான் வசியமென்று மெச்சிக்கொள்வார்கள்.

1504 சுடாத மண்பாண்டத்தின் ஜாலம்

நீ குயவன் வீட்டிற்குச்சென்று ஒரு சிறிய குடம்போன்ற ஓட்டைச் சப்தமில்லாத வெடி மண்பாண்டத்தை வாங்கிக்கொண்டுவந்து இதில் நெருவளிமரத்தின்பழம் ரசம்விட்டு உள்புரம் பூசி 3 அல்லது 4 தரம் ரவியில் உலர்த்தி பிறகு எடுத்துக்கொண்டு ஜாலமாடுஞ் சபையில் சென்று ஓ சபையோர்களே! இந்த ஈரப்பாண்டத்தில் ஜலத்தைவிட்டு காய்ச்சிக் கொடுக்கிறேன் பாருங்களென்று சொல்லி ஒரு அடுப்பைக் கொண்டுவரச்செய்து இதில் மேற்படி பானையை வைத்து, மேல்பக்கம் ஜலம் படாதபடி ஜலத்தை உள்புரம் விட்டுக்காய்ச்ச ஜலம் கொதிப்புண்டாகும். உடனே எடுத்து யாவருக்குங் காண்பிக்கலாம். பானையை ஜாக்கிரதையாகப் பாதுகார்க்கவேண்டும். இதுசமையம் உனக்கு அக்கினிபகவானும், இந்திரபகவானும் வசியம்என்று புகழ்ந்து கொண்டாடுவார்கள்.

1505 வேறு கோழி மாரணம்

மாலைவேளைகளில் ரவியின் உஷ்ணத்தால் வேலெசெய்து கிளைத்து வேர்வை வேர்த்திருப்பவர் திரேகத்தில் வரும் அழுக்குகளை ஒன்ருகத் திரட்டி பதனம்செய்து வைத்துக்கொண்டு, வேண்டும்போது கோழிக்கு இரையுடன் கலந்து தந்திரமாகக்கொடுக்க கோழி மாரணமாகும்.

1506 இதற்கு நிவர்த்தி

கடைக்குச்சென்று கால்பலம் சுக்கைக் கொண்டுவந்து இடித்த தூளை சாதத்துடன் கலந்து ஒரு உண்டைகொடுக்க நிவர்த்தியாகும்.

1507 வேறு காகங்கள் தியங்கும் வித்தை

பலம் கெச்சக்காயை உடைத்தெடுத்த பருப்பில் ரசகள்ளிப்பால் அரைவீசம்படி கலந்து சாதத்துடன் சேர்த்து, கா, கா வென்று கூப்பிட்டுப்போட காகங்கள் யாவும் ஒவ்வொன்ருகப் புசிக்கும். பிறகு கொஞ்சம் நேரத்திற்குள் மயக்கங் கொண்டு தியங்கும். பிறகு கொஞ்சம் ஜலம் தெளிக்க யாவும் பறந்து ஓடும்.

1508 எலுமிச்சம்பழம் கூத்தாடும் வித்தை

ஒரு எலுமிச்சம்பழத்தைக் கொண்டுவந்து ஒருபக்கம் துவாரம் செய்து கொஞ்சம் மெர்க்குரிவிட்டு மூடி வெயிலில்வைக்க சற்று நேரத்

திற்கெல்லாம் மேற்படி பழம் கூத்தாடும். இது சமையம் உனக்கு மாடன் வசியமென்பார்கள்.

1509 வேறு முட்டை பறக்கும் வித்தை

நீ வாத்துமுட்டை ஒன்று கொண்டுவந்து மேற்படி முட்டையின் சத்துக்களை யாவும் போக்கி மேலேசொன்ன மாதிரியாக மெர்க்குரிகொஞ்சம் விட்டு மூடினதுதெரியாமல்மூடி ரவியில்வைக்க சூடேறினவுடன் மேலே பறக்கும். இதைப் பார்த்தவர்கள் குட்டிச்சாத்தான் வசியம் என்பார்கள்.

1510 சண்டைசெய்யும் வித்தை

காகம் கூண்டு கட்டியிருக்கும் கூண்டைத்தேடி காக்கைக்குத் தெரியாமல் மேற்படி கூண்டிலுள்ள 3-முட்டைகளையு மெடுத்து தினம் ஒரு முட்டையாக மூன்றுநாள் உட்கொண்டு யாரிடத்திலாவது சண்டை செய்தால் ஜெயமுண்டு.

1511 சங்கிலி அறுக்கும் வித்தை

கொல்லனுலைக்குச்சென்று கடுந்துகையலிட்ட சங்கிலியை வைத்துக்கொண்டு ஜாலமாடு மிடத்திற்குச் சென்று மனோதைரியமாக உட்கார்ந்து பலமாகப்பிடித்து இழுத்துஅறுக்க சங்கிலிஅறுபடும். ஆயினும் இது முன்னதாகவே சாதகமிருக்கவேண்டும்.

1512 வேறு சாதம் வேகாதிருக்கும் வித்தை

மீனலக்கினத்தில் சூரியநத்தைச் சூரியின்வேரைக் காப்புகட்டினால் பானையிலுள்ள சாதம் வேகாது.

1513 நரியை ஓட்டும் வித்தை

நீ நடுராத்திரியில் ஊரைவிட்டு ஊருக்குப் போகவேண்டியிருந்தால், போகும்போது ஒருகனத்தவேஷ்டியில் பெருமணலை கட்டி சாதமளவு மூட்டையாக கட்டிக்கொண்டு போகவேண்டும். இதுசமையம் உன்னை அணுகி வருங்கூட்டத்தை மேற்படி மூட்டையைக்கொண்டு மாவளி சுற்றுவதுபோல் சுற்றிக்கொண்டுபோக மேற்படி நரிக்கூட்டங்கள் உன்னை அணுகாது ஓடிவிடும்.

1514 சத்துருவை மயங்கவைக்கும் வித்தை

வண்ணான்துறையுள்ள ஏரிக்குட் சென்று மேற்படி துறைக்கல் லின்கீழ் ஒரு தவளையைப் பிடித்து, துவாதசியும், சந்திரகிரகணமுமாகவும் அல்லது கார்த்திகை சோமவாரமாவது துவாதசிவரும் தினத்

தன்று, உன் எதிரியின் பெயரையும், அவன் உனக்கு ஐக்கியமாக வேண்டியதைக் குறிப்பாக ஒரு சிறு கடிதத்தில் எழுதி சுப்பிரமணியருக்குத் தூபதீபங்கொடுத்து பொங்கலிட்டுக் கையில் காப்புகட்டி அத்துண்டுக்கடிதத்தை மேற்படி தவளையின் வாயில் பதனம்செய்து, உயிருடனிருந்த மேற்படி கல்லின் கீழேயேவைத்து ஜாலமாடும் இடஞ்சென்று உன்னெதிரியை எவ்விதம் செய்யவேண்டுமோ அவ்விதமெல்லாம் செய்து சித்திபெறலாம். ஆயினும் மூன்றேமுக்கால் நாழிகைதான் பலிதமாகும்.

1515 பஞ்சாட்சர வசியம்

கிருத்திகையும் சனிக்கிழமையுமாகக் கூடிய தினத்தன்று ஆறுமுக சுவாமிக்கு, ஓம் தத் சத் காரணு பரிபூரணு வென்று 6000-உரு செபித்து கடைசியாக தூப தீபங்காட்டுந் தினத்தன்று தட்டிலுள்ள பஞ்சாட்சரத்தை எடுத்து வெள்ளிச் சிமிளில் பதனம் செய்துவைத்துக்கொண்டு நீ ஜாலமாடுமிடஞ் சென்று சுரம், குளிர், தோஷமுள்ள குழந்தை, ஆண், பெண் முதலியோர்க்குக் கொடுக்க சுகமடைவார்கள். இது சமையம் உனக்கு முருகர் வசியமென்பார்கள்.

1516 மயேஸ்வர வித்தை

ரோகணியும் ஆதிவாரமும் கூடிவரும் தினத்தன்று பகல் 12-மணிக்கு மயேஸ்வர பூசைசெய்து, ஸ்படிகமணிகளால் கோர்க்கப்பட்ட மாலையைக் கொண்டு ஓம், ரீம், சு சு சு, க க க, ட ட ட, லை லை லை யென்று 108-உரு செபித்து ஆராதனை தேனைப் பதனஞ்செய்து வைத்துக்கொண்டு, நீ ஜாலமாடுமிடஞ்சென்று சபையோர்களைப்பார்த்து நான் ஒருவித தைலம் தருகிறேன். இதை நீங்கள் சாப்பிடுங்கள் என்று சொல்லி பலருக்கும் கொடுத்த பிறகு ருசியைப் பற்றி அவர்களைக் கேழ்க்க ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரியாகச் சொல்லி உன்னைக் கண்டு பிரமிப்பார்கள்.

1517 மனோன்மணி வசியம்

சூரியக்கிரகணமும் சந்திரக்கிரகணமும் பிடிக்கும் தினத்தன்று மனோன்மணி அம்மனை வணங்கி மனதிலும் சதா தியானஞ் செய்து தூபதீபங்கொடுத்து 40 - நாள் அறுசுவை உண்டிகளோடு கூடிய உணவை 4-பேருக்குக் கொடுத்து மனமகிழ்ந்து 40-வதுநாள் விநாயகரை உச்சாடனஞ் செய்து குளிசமாடி உன் கரத்திலணிய எக்காரியத்திற்கும் யாவரையும் வசியம் செய்யலாம்.

1518 குஸ்தி வித்தை

நீ ஜாலமாடுமிடஞ் சென்று சபையோரைப் பார்த்து, சபையோர்களே! இந்த சபையில் இந்த சிறுவன்மீது குஸ்தி செய்ய இஷ்டப்படுபவர்கள் வந்து செய்யலாமென்று சொல்ல ஒருவன் வந்து உன் மீது செய்யும்போது உன் கட்டைவிரலில் பூனைக்காய்ஞ்சின் இலைத் தூளை நகத்திடுக்கில் பதனம் செய்து வைத்திருந்து மேற்படி ஆசாமியின்மீது சமையம் பார்த்து கால் முட்டியின் பின்புறமாக துடையில் தெளித்துத் துடைக்க அவன் உன் கைக்கு அடங்கிவிடுவான். பார்ப்பவர்கள் ஆ! இவன் மிக்க கெட்டிக்காரன் என்று மெச்சிக் கொள்வார்கள்.

1519 ஜெகவசியம்

மார்கழி மாதம் கரிநாளில் நல்லவேளை பார்த்து கருமூலிக்குக் காப்புக்கட்டி ஒருநாள் தவறாது பன்றியைப் பலிகொடுத்து, பட்சம் சென்றதும் காப்பை வாங்கி மேற்படி வேரை வெள்ளிக் குளிசமாடி உன் காத்தில் அணிய யாவும் சித்தியாகும்.

1520 இதுவுமது

மேற்படி வேரை மேற்படி மாதிரி வடக்குத் திக்கிலுள்ள வேரை வாங்கி 1000-உரு கொண்டு பஞ்சாட்சரத்தைப் பதனம் செய்து வேண்டியவர்களுக்குக் கொடுக்க யாவும் சித்தியாகும்.

1521 இதுவுமது

மேற்படி மூலிகையை மேற்படி மாதிரிச் செய்து பஞ்சலோகங்களைக்கொண்டு அமைத்த குளிசத்தில், குளிசமாடி அமரபட்சம் பஞ்சமி திதியில் உன் கரத்தில் அணிந்துகொள்ள ராஜாக்களும், துரைத்தனத்து உத்தியோகத்தினரும் சாகும் தருணத்தாரும், மூலிகையினது இஷ்டசித்திப் பெறுவார்கள்.

1522 இதுவுமது

மேற்படி மூலிகையை செப்புத்தகட்டில் குளிசமாடி சித்தயோகம் சோமவாரம் கூடிய தினத்தன்று காலை 7-மணிக்கு உன் கரத்தில் அணிந்து கொள்ள துன்மார்க்கமான மிருகங்களெல்லாம் உனக்கு அடங்கி நடக்கும்.

1523 பீங்கான் ஓடு மேல்லும் ஜாலம்

ஒரு சிறு அக்கிராகாரத் துண்டை வாயினால் மென்று தாடையிலடக்கி பீங்கான் ஓட்டை மென்றால் அரிசிபோல் மசியும். வாய் அறுக்காது.

1524 கரைத்த சீக்காய்த்தூளை எடுக்கும் வித்தை

சீக்காய் அரைத்த உருண்டையை, ஒரு குண்டானில் ஜலம் வைத்து, நீர்முள்ளி விதையை தூளாய் நறுக்கி, விபூதியுடன் கலந்துக்கொண்டு, ஓம், மாடா, ஓடிவா, ஓடிவந்து கரைத்த சீக்காயை கொண்டுவா வென்று சொல்லி மேற்படி விபூதியைப் போட்டு வழிக்க உருண்டைபோல் வரும்.

1525 பனைஓலை தோன்னையில் பணியாரஞ் சுடும் ஜாலம்

மூத்தின ஓலையை தொன்னைபோல் ஒழுகாவண்ணம் செய்து மூத்தின பிரண்டையை அரைத்து பின்பக்கம் நான்குதரம் பூசி காய வைத்து மூன்று கற்களில் அடுப்பை அமைத்து மேற்படி தொன்னையை எடுத்து எண்ணெய் வார்த்துக் காய்ந்த பிறகு பலகாரஞ்சுட சபையோர் உன்னைப் பார்த்து புகழ்வார்கள். அக்கினிபகவானே வசியமென்பார்கள். பிரண்டையை அரைப்பதற்கு முந்தியே விரல்களில் விளக்கெண்ணெயைத் தேய்த்துக்கொள்ள வேண்டும்.

1526 தயிரை கட்டவைக்கும் ஜாலம்

நருவலிப்பழத்தைக் கொண்டுவந்து பிசைந்து ஒரு பச்சைத் தோண்டியின் உள்ளே மூன்றுதரம் பூசி, ரவியில் காய்ந்தபிறகு தயிரை நிறைய வார்த்து சிக்கம்போட்டு கட்டி மேலே தூக்கியபிறகு ஓட்டையெல்லாந் தட்டிவிட்டால் அந்தரமாக நிற்கும்.

1527 பாலைக் கட்டவைக்கும் ஜாலம்

கறந்தபாலை குடத்தில்விட்டு, கட்டுக்கொடியை துண்டுதுண்டாக அறுத்துப்போட்டு சர்க்கரையும் கலந்து கலக்கி மூடிவைத்து சற்று நேரம் பொறுத்து எடுத்துப்பார்க்க பால் அல்வாவாகத் தென்படும். இதைக் கத்தியைக்கொண்டு அறுத்து யாவருக்குங் கொடுக்க சந்தோஷங் கொள்வார்கள்.

1528 பாலில் தீபமேற்றும் ஜாலம்

துல்லிதமான மெல்லிய வெள்ளைக்கந்தையை திரியாகத் திரித்து அத்திமரத்தின் பாலில் நனைத்து பிறகு ஆழமானகலசத்தில் கால்பங்கு ஜலம் வார்த்து, பிறகு ஜலத்தின் மட்டத்திற்குமேல் பானைஓட்டை வைத்து மேற்படி திரியைப்போட்டு கொளுத்திக்காட்ட எரியும்.

1529 ஜலத்தில் விளக்கேற்றும் ஜாலம்

திருகுகள்ளிப்பாலைக் கரண்டிஅளவு எடுத்து, கர்ப்பூரமும் ஷை எடையே எடுத்து குழைத்து வெள்ளைச்சீலையில் தடவி யுலர்த்தி திரியா

கச் செய்து அகலில் கொஞ்சம் ஜலம்விட்டு மேற்படி திரியைப்போட்டு விளக்கேற்ற எரியும், பார்ப்பவர்கள் உன்னை மெச்சிக்கொள்வார்கள்.

1530 ஜலத்தை ஊற்ற விபூதி உண்டாகும் ஜாலம்

நீ ஜாலமாடுமிடத்திற்குப் போவதற்குமுந்தி கொடிக்கள்ளிப்பாலை கறந்து உனக்கு வேண்டியஇடத்தில் பூசி ரவியில் உலர்த்திக்கொண்டு ஒன்றுந்தெரியாது அனைவர்க்குங்காண்பித்து பிறகு ஒருகுடம் ஜலத்தை தைஊற்றினால் உடனே பனிச்சென்று தோன்றும். பார்ப்பவர்களெல்லாம் சிவபகவானே வசியமென்று சொல்லுவார்கள்.

1531 சிறு மணலை மெல்லுஞ் ஜாலம்

வெள்ளைக்குண்டுமணி இலையை மென்று தவடையி லடக்கிக்கொண்டு மணலை மென்று தின்னலாம்.

1532 விளாம்பழம் நடக்கும் ஜாலம்

நீ ஒரு விளாம்பழத்தை எடுத்து அதின் மேல்புரம் ஆக்கரால் துளைத்துஅதில் பாதிபழத்தைஅப்புறப்படுத்திவிட்டு சிறியமூஞ்சூரை உள்ளே உயிருடன் விட்டு மேல்பில்லையை மூடி மஞ்சள் குங்குமம் முதலியது பலமாகப்பூசி முன்னமேவைத்துக்கொண்டு சபையோரைப் பார்த்து யாராகிலும் ஒரு விளாம்பழத்தைக் கொண்டுவந்து கொடுத்தால் அதை நடக்கச்செய்கிறேன் பாருங்களென்று சொல்லி வாங்கிக்கொண்டு, மஞ்சள் குங்குமம் முதலியவைகளை முன்மாதிரியாகவே பூசி தூபதீபங்கொடுத்து தந்திரமாகவே இதை உன் கள்ளஅறையில் மறைத்துவிட்டு முன் விளாம்பழத்தை விட்டால், அது ஒரு இடத்திலும் நிற்காது. உருண்டுகொண்டே இருக்கும் பார்ப்பவர்களெல்லாம் மிரளுவார்கள்.

1533 மணிலா குதிக்கும் ஜாலம்

கடைக்குச்சென்று மணிலாபழம் ஒன்று வாங்கிக்கொண்டுவந்து எழுத்தாணியால்குத்தி $1\frac{1}{4}$-பாதரசம் விராகனிடை வாங்கிக்கொண்டு வந்துவிட்டு மெழுகினால் ஷை துவாரத்தை யடைத்து ரவியில்வைக்க சூடு ஏறினமாத்திரத்தில் தரையில் நிற்காது.

1534 கடலை வேகாதிருக்கும் ஜாலம்

பேயத்திமரத்தின் கரியை கழுதைமூத்திரத்தால் அவித்து சனிக்கிழமை மீனலக்கினம்பார்த்து நத்தைச்சூரி செடிக்கு மஞ்சள்நூலினால் காப்புகட்டி வரவேண்டும். பிறகு மறுவாரத்தில் மேற்படிதினத்தன்றே துலாலக்கினம் பார்த்து பிறந்த ரூபத்துடன் செடிக்குக் காயம் படாம

லும் உச்சிவேர் அறுபடாமலும், பிடுங்கி வைத்துக்கொண்டு, மேற்படி கரியைஅடுப்பிலும் எத்தைச்சொன்னாலும் கேட்கும் மேற்படி நத்தைச் சூரியை பாண்டத்திலும்போட்டு வேகவைத்தால் வேகாது.

1535 இதன் பரிகாரம்

மேற்படி அடுப்பை சாணத்தால் மெழுகி மேற்படி கடலையையும் கழுவி திரும்ப வேகவைக்க வேகும்.

1536 குருவிமுட்டை பறக்கும் ஜாலம்

சிட்டுக்குருவிகளின் முட்டைகளைச் சேகரித்து சிறுதுவாரஞ் செய்து பாதி அம்பிலியையும் போக்கிவிட்டு இதற்குப் பதிலாக சீமை காடி விட்டு ஊசிகாந்தமும் கொஞ்சங் கூட்டி, அதின் துவாரத்தை காகிதத்தில் ஒட்டி ரவியில் வைக்க சூடேறிய பிறகு கீழே நிற்காது பறக்கும். உன்னையும் மந்திரவாதி என்று சொல்லுவார்கள்.

1537 கிணற்றிலிரங்கி காராமணியை வேகவைக்கும் ஜாலம்

மூன்றுவீசம் படி காராமணியை 4-புறையாக வஸ்திரம் போட்டு மூட்டை கட்டி சுண்ணாம்புக் காளவாயின் கீழே வைத்து கால் வாய் வெந்தபிறகு எடுத்து பதனம் செய்து வைத்துக் கொண்டு ஜாலமாடுமிடத்தில் ஒருகுடுவையை வைத்து இதில் பாதி நிறையும்படி மேற்படி கடலையைப்போட்டு இதை கிணற்றிலிறங்கிச் சமைக்கிறேன் பாருங்களென்று சொல்லி கடலைக்குத் தகுந்த ஜலம் விட்டு குடுவையை ஜலத்திற்கு மேலே பிடித்து வைத்திருந்து கொஞ்சநேரம் பொறுத்து வரும் சமையத்தில் சிரசுமுதலானதுகளை நனைத்துக்கொண்டு வந்தால் சபையார் ஜலத்திற்குள் இறங்கி சமைத்தானென்று உன்னை மெச்சிக்கொள்ளுவார்கள்.

1538 கூடை சாதம் தின்னும் ஜாலம்

குப்பைமேனி, சிறுபூளை என்ற இரண்டுவேர்களையும் வாயிற்போட்டு மென்று அடக்கிக்கொண்டால் கூடைசாதமும் இதற்கு தகுந்த பதார்த்த வகைகளையும் உண்ணலாம்.

1539 பசுவின்பாலை உதிரமாக்கும் ஜாலம்

இந்திரகோபன்பூச்சியைக் கொண்டுவந்து தீனியிற்கலந்து பசுவுக்குக் கொடுக்க, பிறகு பாலைக்கறந்தால் இரத்தநிறமாகவிருக்கும். ஆச்சரியப்படுவார்கள்.

1540 இதற்கு நிவர்த்தி

தொட்டியில் சுக்குத்தூளைப்போட்டு ஜலம்விட்டுக் கலக்கி பசுவிற்கு ஜலம் காட்ட, பிறகு கறந்தால் பழையமாதிரியாக இருக்கும். இதைப் பார்ப்பவர்கள் உன்னை மகா மந்திரவாதி என்பார்கள்.

1541 காய்ந்தசங்கிலியை உருவும் ஜாலம்

கத்தாழைச்சோறும், வெந்தயமும், உப்பும், விளக்கெண்ணெயும், வங்காயச்சாறும், தவளை நெய்யும், கரைத்து உன்னுள்ளங்கையில் தடவிக்கொண்டு நெருப்பினால் காய்ந்த சங்கிலியை கையினாலுருவ குபீலென எரியும். ஆயினும் கை வேகாது.

1542 நரி துடரும் ஜாலம்

நந்தவனத்திலிருக்கும் கோவச்செடியின் வடகிழக்கேபோகும் வேர் கொஞ்சமும் இலை கொஞ்சமும் கொண்டுவந்து பனிநீரைவிட்டு நன்றாய் அரைத்து, உன்னிரண்டு கரங்களிலும் பூசிக்கொண்டு நரிகள் இருக்கும் இடத்திற்குச்சென்று உன்கையைத்தட்ட பின்னால் துடரும்.

1543 கிளிஞ்சலை மெல்லும் ஜாலம்

கடைக்குச்சென்று சங்கம்விதையை வாங்கிக்கொண்டுவந்து ஜாலமாடுமிடத்தில் உன் வாயில் பப்பிரமெட்டுகளுடன் கலந்து கொட்டிக்கொண்டு கிளிஞ்சலை நறநறவென்று மென்று தின்னலாம் உள்ளுக்கு விழுங்கக்கூடாது.

1544 நிவர்த்தி

மஞ்சளை வாயிலிட்டு கசகசவென்று மென்றால் காரந்துலையும் பார்த்தவர் மகாகெட்டிக்காரனென்று சொல்வார்கள்.

1545 தேங்காய் ஓட்டை கடிக்கும் ஜாலம்

வேளைச்செடியின் வேரை உன் வாயிலிட்டு அடக்கி தேங்காய் ஓட்டைப் போட்டு கடிக்கலாம் அரிசிபோல் மாவாகிவிடும்.

1546 கோழிமுட்டை புரளும் ஜாலம்

குண்டுமணிச் செடியின் வடகிழக்கே ஓடும் வேரும், மாடப்புரு வெச்சமும், பொன்னரிதாரமும் பாவையிலையும் சேர்த்து அரைத்து முட்டைமீதில் தடவி வாசலில்விட புரண்டுக்கொண்டே யிருக்கும்.

1547 அரைக்கீரையில் வாய் சிவக்கும் ஜாலம்

காடுகளிலிருக்கும் கொட்டாங்கச்சியிலை ஒருபிடியும், குருவியிலை ஒருபிடியுமாகப் பறித்து அரைக்கீரையில் கலந்து வைத்துக்கொண்டு ஜால

மாடுமிடஞ்சென்று சபையிலுள்ளோரைப் பார்த்து இந்த அரைக் கீரையை என் வாயில் போட்டு மென்று தாம்பூலம் மாதிரியாக காண்பிக்கிறேன் பாருங்களென்று சொல்லி மேற்படி அரைக்கீரையுடன் கலந்த மேற்படி இரண்டுதினுசு கீரைகளையும் எடுத்து உன்வாயில் போட்டு மென்று ஜனங்களுக்காட்ட உனக்கு லட்சுமி வசியமென்பார்கள்.

1548 நெருப்பில்லாமல் கோதுமையை வேகவைக்கும் வித்தை

ஒரு சிறு குடுவையில் கொஞ்சம் கோதுமையைப் போட்டு தரையின்மீது வைத்து ஜலம் விடுவதுபோல் நடித்து சதுரக்கள்ளிப்பாலை வெகு தந்திரமாகவிட்டு பிறகு கொஞ்சம் பொறுத்துப்பார்க்க கோதுமை வெந்திருக்கும். பார்ப்பவர்கள் உனக்கு அக்கினிதேவனே வசியமென்பார்கள்.

1549 சீசாவில் பலவித கலர் புஷ்பங்களைக் காட்டும் வித்தை

ஒரு வெண்மையான புட்டியை எடுத்து இதில் அரை புட்டி ஜலம் ஊற்றி ஈயபஸ்பம் கொஞ்சம் போட்டு, துத்திநாகத்தை கயிற்றிலாவது கம்பியிலாவது கட்டி ஜலத்தில் படும்படி தொங்கவிட்டு கார்க்கு மூடி 4-அல்லது 5-நாள் பொறுத்து ஷை மூடியைஎடுத்துப் பார்க்க மகா விநோதமாக இருக்கும்.

1550 இரகசிய பிம்பம் எழுதும் வித்தை

படிகாரத்தைத் தூளாக்கி எலுமிச்சம்பழத்தில் சேர்த்துக்கலக்கி எழுதி காய்ந்தபிறகு காகிதத்தைப் பார்த்தால் ஒன்றுந்தெரியாது. பிறகு ஜலத்தில் தோய்த்துப்பார்க்க நன்றாகத் தெரியும். இதனால் பலவித நன்மைகள் உண்டு.

1551 மூங்கில்குழாய் ஜலத்தில் வேடிக்கும் ஜாலம்

ஒரு மூங்கில் குழாயில் ஜலம் வைத்து அனைவருக்குங் காட்டி (பிபாஸ்ப்றயிட் ஆப்லயின்) என்னும் மருந்தை கொஞ்சம் மேற்படி ஜலத்தில் போட்டு மூடி குளத்தில் போட பொனை பாணம் போல் கிளம்பும்.

1552 தீபத்தை ஏற்றிப் பார்த்தால் மஞ்சள் நிறமாகும் ஜாலம்

வெத வெதவென்று கொதிக்க வைத்த சாராயத்தில் உப்பு பௌடர் கொஞ்சம் போட்டு கொளுத்த வீடெங்கும் மஞ்சள் நிறமாகத் தோன்றும்.

1553 நூலைக் கொளுத்த வேகாதிருக்கும் ஜாலம்

கஞ்சித்தண்ணியும் உப்பும் கரைத்து நூலில் பூசி ரவியில் உலர வைத்து பிறகு விளக்கெண்ணை பூசி கொளுத்த நூல் எரியும் ஆயினும் மேற்படி நூல் வேகாது.

1554 இதுவுமது

ஸ்பிரிட்டு திராவகத்தில் நூலை தோய்த்துக் கொளுத்த எரியும். நூல் வேகாது.

1555 வேறுமுறை திருடனைக் கண்டுபிடிப்பது

நீ திருடுபோன வீட்டிற்குச் சென்று இந்த வீட்டில் திருடு போனதைக் கண்டு பிடித்துக் கொடுக்கிறேன் பாருங்களென்று சொல்லி விநாயகரை சாணத்தினால் பிடித்து வைத்து, அவல், கடலை, தூபதீபங்களுடன் நைவேத்தியஞ் செய்து மந்திரவாதியைப்போல் நடித்து மேற்படி வீட்டிற்கு வருவதற்கு முந்தியே ஒரு முழு காகிதத்தில் முத்தின பிரண்டையை அரைத்து 3-தரம் தனித்தனி காலங்களில் தடவி நிழலிலுலர்த்தலாக உலர்த்தி வைத்துக் கொண்டிருக்கும் காகிதத்தை எடுத்து எத்தனை பேர்களுக்கு வேண்டுமோ அத்தனை துண்டுகளாக ஒரே அளவில் கிழித்துக்கொண்டு மேற்படி பிள்ளையார் அருகில் வைத்து ஒவ்வொருவராகத் தனித்தனியே அனுப்பி இரண்டு சீட்டுகளையும் கொடுத்து தங்கள் தங்கள் கையால் கொண்டுவரச் செய்து, கடைசியில் நீ ஒரு அரைக்குச் சென்று ஒவ்வொருவர்களால் எழுதப்பட்ட இரண்டு சீட்டுகளையும் எடுத்துப் பார்க்க இதில் உண்மையில் திருடினவர்கள் கையெழுத்து நன்றாக இராது. இதில் மேற்படி பிரண்டை தடவிய காகிதத்தில் எழுதினதையும் மற்றவர்களால் எழுதிய வெத்துக் காகிதத்தையும் போட்டுக் கொளுத்த மேற்படி துண்டு மாத்திரம் வேகாது. மற்றத் துண்டுகளெல்லாம் வெந்திருக்கும். இதைக்கொண்டு பத்திரகாளியால் திருடனைக் கண்டு பிடிக்கலாம்.

1556 தேவாங்கு வசியஜாலம்

ஒரு மலைக்குச்சென்று ஆண் பெண் தேவாங்கு இரண்டு கொண்டு வந்து 40-நாள் வளர்த்து 40-வது நாளாகிய அன்று ஒவ்வொன்றையும் ஒவ்வொரு புதிய பாண்டத்திலிட்டு, ஒரு ஆற்றின்கரைக்குச் சென்று 2-பக்கங்களிலும் 2-தேவாங்கை காளி உபவாசனையில்108-உருவுடன்உயிருடன் பதனம்செய்து 40-வதுநாள்போய்ஆண்தேவாங்கைத்தோண்டிப் பார்க்க பெண்தேவாங்கும் மேற்படி பாண்டத்திலுள்ளாகவே அகப்படும். மேற்படி தேவாங்குகளை எடுத்து காளிக்குப் பலிகொடுத்து மேற்

படி தேவாங்குகளை குழித்தைலமிறக்கி காளி உபவாசனையில் நெற்றியில் திலர்தமிட்டு ஒரு காரியத்திற்குப் பிரவேசிக்க அனுகூல முண்டாகும்.

1557 காகிதபுட்டி பறக்கும் ஜாலம்

ஒரு புதிய காகிதத்தை எடுத்து இங்கிபுட்டி யளவில் செய்து இதன்மீது மெல்லிய துல்லிதமான காகிதத்தில் காற்றுப்போகாமல் மூடி இதில் பாதரசம் கொஞ்சம்விட்டு ரவியில்வைக்கச் சற்றுநேரத்திற்கெல்லாம் பறக்கும் பார்ப்பவர்களெல்லாம் ஆச்சரியப்படுவார்கள்.

1558 பாம்பு மயங்கும் ஜாலம்

கல்சர்க்கரை $\frac{1}{2}$-வீ சம்படியை 5-பலம் வெங்காயத்தில் விட்டுச்சேர்த்து இடித்து இச்சாற்றை ஒரு புட்டியில் பதனம் செய்து வைத்துக்கொண்டு பாம்பு இருக்கும் இடத்தில் கொஞ்சம் இதன் எதிரில் மேற்படி நீரைக்கொஞ்சம் தெளித்து மனதில் (தடையாக இருக்கவேண்டும்) என்று நினைத்து ஆணை வைக்க சர்ப்பம் தடைப்படும். இது சமையம் உன்னையாவரும் மகாமந்திரவாதி என்று மெச்சிக்கொள்ளுவார்கள்.

1559 பழகமல்லிச்சேடியில் ரோஜா புஷ்பிக்கும் ஜாலம்

பழகமல்லிச்செடியில் மூத்தின கிளையைப்பார்த்து கிராசாகவெட்டி இதில் பதியும்படி ரோஜாகிளையையும் கிராசாக அறுத்துவைத்து இதன்மீது செம்மண்ணும், சாணமும், குழப்பிப்பூசி ஈரம்படும்படிச் செய்து 40-வது நாள் பொறுத்துப்பார்க்க களை ஒன்றோடொன்று கூடியிருக்கும். பிறகு இந்தக்கிளை புஷ்பிக்கும்போது பழகமல்லியும் ரோஜாவின்குணமும் கலந்தமாதிரியாய் புஷ்பங்களாகப். புஷ்பிக்கும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

1560 கலர் சரக்குக் கட்டிகள் செய்யும் ஜாலம்

கடைக்குச்சென்று சீமை பிளாஸ்டரிஸ்மாவு 2-பவுன் வாங்கிக்கொண்டுவந்து இதில் பலவித பௌடர்களைத் தனித்தனியாக எடுத்துக் கலந்து நிதானமாக ஜலம் விட்டுப்பிசைந்து, உண்டை செய்து நிழலுலர்த்தலாக உலர்த்தி பிறகு எழுத பலவித வருணங்களாக எழுதும்.

1561 பசுவின்மீதிருக்கும் பேனைப் போக்கடிக்கும் வித்தை

குப்பைமேனி, தும்பை இந்தச் செடியின் சாற்றை வகைக்கு கால்படி சேகரித்து ஒன்றாகக்கலந்து பனியிலும் வெளியிலும் வைத்து 3-நாள் பொறுத்து புட்டியில் பதனம் செய்து வைத்துக்கொண்டு மேற்படி மாடுகளுக்கு விட்டு தேய்க்க பேன் மாரணமாகும்.

1562 மோட்டுப்பூச்சி வசியம்

நொச்சிலிச்சாற்றையும், தும்பைச் சாற்றையும் வகைக்கு 1-படி சேகரித்து இதில் தினம் வீடெங்கும் தெளிக்க மோட்டுப்பூச்சி மாரணமாகும்.

1563 கீரியின் வசியம்

நீ ஒரு காட்டிற்குச் சென்று கீரியை ஒன்று பிடித்துக்கொண்டு வந்து வளர்த்து 40-வது நாளன்று சர்ப்பத்தின் எதிரில்விட்டு கடிக் கச்செய்து சங்கிலியுடன் புதர்களில் விட 2, 3, நிமிஷம் பொறுத்து வெளியே வரும். வந்ததும் பிடித்து இதன் வாயை உன் வாயண்டை வைத்து சுவஹா என்று 9-தரம் சொல்லி முத்தமிட உன் வாக்கு எவரிடத்திலும் பலிதமாகி காரியம் நிறைவேறும்.

1564 விபூதியை நீராக மாற்றும் ஜாலம்

கடைக்குச்சென்று படிகாரம் அரைபலம் வாங்கிக்கொண்டு வந்து இதை தூளாக வஸ்திரகாயம்செய்து பையில்போட்டுவைத்துக்கொண்டு ஜாலமாடு மிடத்திற்கு வந்து சபையோரைப் பார்த்து அடுப்புக்கரி யைக் கொண்டுவரச் செய்து கொளுத்தியபின் ஒரு கரண்டிக்காம்பைப் பழுக்கக் காயவைத்து வெளியே யெடுத்து சபையில் ஒருவரைக் கூப் பிட்டு கொஞ்சம் உண்மையான விபூதியைப் போட்டு ஜலமாகும்படிச் செய்கிறேன் பாருங்களென்று சொல்லி கள்ள அரைப் பையிலுள்ள மேற்படி தூளை எடுத்து முன்மாதிரி மந்திரமோதி போட ஜலமாக மாறி தென்படும். இதைப் பார்ப்பவர்கள் சுப்பிரம்மணியரே வசிய மென்பார்கள்.

1565 சாராயத்தை உதிரமாக்கும் ஜாலம்

கடைக்குச்சென்று ஒருதிரான் சாராயத்தை வாங்கிவந்து சபையி லுள்ளோரைப் பார்த்து, சபையோர்களே! நான் இந்த சாராயத்தை உதிரமாகவே மாற்றுகிறேன் பாருங்களென்று சொல்லி, உன் விபூதி பையில் உள்ள கள்ள அரையில் இருக்கும் சுண்ணாம்புநீரை விபூதி யாக நடித்து ஒரு சிட்டிகை போட உதிரமாக மாறும். இதை பார்ப் பவர்களெல்லாரும் பிரமிப்பார்கள்.

1566 சிரங்கைப் போக்கடிக்கும் வித்தை

பயிர் வேலிகளிலிருக்கும் பிரம்மதண்டு விதையை வீசன் படி சேகரித்துக் கொண்டுவந்து தூளாக்கி விளக்கெண்ணெயில் போட்டு சூரியபுடம் வைத்து 4-நாள் பொறுத்தெடுத்து சிரங்குள்ளவர்கள் கைகளில் போட்டுத் தேய்க்க சிரங்குகள் யாவும் நீங்கும்.

1567 செம்பு நாணயத்தை சவரன்களாக மாற்றும் ஜாலம்

நந்தவனத்திலிருக்கும் சிறு பனைமரத்தின் இளம் பட்டையைக் கொண்டுவந்து இடித்துச் சார்பிழிந்து ஜாலமாடும் சபைக்குச்சென்று சபையோர்களைப் பார்த்து நான் செம்பு நாணயங்களை சவரன்களாக மாற்றுகிறேன் பாருங்களென்று சொல்லி மேற்படி சாற்றை ஒரு புட்டியில் வைத்திருந்து, ஜாலமாக நடித்து செம்புநாணயங்களை சூடுண்டாக்கி இதில்விட குபீலென பொன்னிறமாக மாறும். பார்ப்பவர்களெல்லாம் லட்சுமி வசியமென்பார்கள்.

1568 மானிடர் வசிய ஜாலம்

சபையில் விட்டு ஜெயித்த வெள்ளை பெருஞ்சாவல் ரத்தத்தை மாடனுக்கு 108-உரு செபித்து தைலமிறக்கி வேண்டிய சமையத்தில் புருவத்தில் திலர்தமிட்டு விரோதிகளிடம் போக உன்னை சரணமாக கொள்வார்கள்.

1569 இதற்கு மந்திரம்

புருவத்தில் திலர்தமிட்டு தீட்டியபோது வசி, நசி என 108-உரு செபித்தல் வேண்டும்.

1570 மோகனம்

உனக்கு விரோதமுள்ளவர்களிடம் போவதற்கு முந்தி ம, ந, ய, வசி என்று இரண்டு அக்ஷரத்தை 108-உரு செபித்துப்போக இவர்கள் உன்னை மோகித்து உன்னிஷ்டப்படியே நடப்பார்கள்.

1571 வாயில் நெருப்பு கக்கும் வித்தை

காட்டிற்குச் சென்று முசலொன்றைக் கொன்று அதன் உதிரத்தில் பாசா கற்களையும் போட்டு வற்றவைத்து இரவில் உன்வாயில் மேற்படி கற்களைப்போட்டு வாயைக் கக்க நெருப்புண்டாகும். பார்ப்பவர்கள் உனக்கு அக்கினி பகவானே வசியமென்று சொல்லுவார்கள்.

1572 பசியில்லாமலிருக்கும் வித்தை

மூங்கில் புதரின் கீழே சென்று கணுக்களிலிருக்கும் அரிசியை கண்டெடுத்துச் சேர்த்து சாதமாக வேகவைத்து பாலிலிட்டு புசிக்க 4-அல்லது 5-நாள் வரையில் சாப்பிடாமலிருக்கலாம்.

1573 தோல்பந்து ஆகாயத்தில் பறக்கும் ஜாலம்

செம்மறி ஆட்டில் மூத்திரக் குட்டையை எடுத்துக் கொண்டு வந்து உள்ளே சுத்தம்செய்து பிறகு பாதரசத்தை உள்ளே விட்டு

வாய்ப்புரத்தைமூடி ரவியில்வைக்க பறக்கும் பார்ப்பவர்களெல்லாம் பிரமிப்பார்கள்.

1574 பூட்டுத் திறக்கும் வித்தை

கடைக்குச்சென்று பலகை ஸ்காந்தத்தை கொண்டுவந்து பூட்டிய பூட்டின்மீதுவைக்க பூட்டு திறந்துகொள்ளும் ஆயினும் இதை சதாகாலமும் செய்யக்கூடாது. செய்யினும் இதை சொல்லக்கூடாது.

1575 அல்பநாத்தியை ஜலத்தில் மிதக்கவைக்கும் வித்தை

மோட்டுப்பூச்சியின் உதிரத்தில் அல்பநாத்திமுனையை தோய்த்து குத்தியமாதிரி ஜலத்தில் எரிய மிதக்கும். பார்ப்பவர்கள் பிரம்மிப்பார்கள்.

1576 வேப்பெண்ணையை நல்லெண்ணையாக்கும் ஜாலம்

குன்றுமணி இலையைத்தேடி அரைத்து அடைதட்டி வைத்திருந்து நீ ஜாலமாடும் சபைக்குச்சென்று வேப்பெண்ணையை கொஞ்சம் கொண்டுவரச் செய்து அடுப்பில்விட்டுக் காய்ச்சி மேற்படி எண்ணையில் மேற்படி அடையைப்போட்டு காச்சல்வேண்டும். பிறகு இதில் பலகாரஞ்சுட நல்லெண்ணையைப்போ லிருக்கும். பார்ப்பவர்கள் பிரமிப்பார்கள்.

1577 பாலைத் தண்ணீராக்கும் வித்தை

தாமரைமணியை இடித்துப் பொடியாக்கி சபைக்குச்சென்று கொஞ்சம் பாலைக் கொண்டுவரச்செய்து இதில் ஷை தூளைப்போட்டு பார்க்க நீராக இருக்கும் அதிகமாகப்போட வெருந் தண்ணீராகிவிடும்.

1578 பாம்பு மாரணம்

படமெடுத்திருக்கும் சர்ப்பத்தின் சூலத்தின் நடுவில் ஒரு துடப்பச் சுப்பலால் குத்த உடனே சர்ப்பம் கீழேவிழுந்து இறந்துவிடும்.

1579 இதுவுமது

படிகாரத்தூளை கொஞ்சம் விபூதியையும் கள்ளரையில் வைத்து ஜாலமாடுமிடஞ் சென்று சபையிலுள்ளோரைப் பார்த்து ஒரு சர்ப்பம் கொண்டுவரச்செய்து இதை நான் சாகடிக்கிறேன் பாருங்களென்று சொல்லி சாமார்த்தியமாக சர்ப்பத்தின் வாயைத்திறந்து விபூதிபோடுவதாகச் சொல்லி மேற்படி தூளைப்போட உடனேசர்ப்பம் இறந்துவிடும்.

1580 மோகினி விலகும் ஜாலம்

ஒருவனை மோகினிபிடித்து தொந்தரவு செய்யும்பட்சத்தில் இரவில் படுக்கும்போது உள்ளங்காலில் ஒரு ரூபாயளவு தடவிக்கொண்டு படுக்க மோகினி மெரிக்காது.

1581 மயிர் உதிரும் ஜாலம்

எவ்விடத்தில் மயிர் உதிரவேண்டுமோ அவ்விடத்தில் தாளகமும் கற்சுண்ணும்பும் கலந்து அரைத்துத்தடவி 4-5 மணிநேரம் பொறுத்து கழுவி துடைக்க சுத்தமாக க்ஷெளரத்தைப்போல் இருக்கும்.

1582 வைக்கோலை பற்றவைக்கும் வித்தை

நீர்மேல்நெருப்பை யுலர்த்தி வஸ்திரகாயஞ் செய்து வைத்துக் கொண்டு ஜாலமாடுமிடஞ்சென்று கொஞ்சம் எடுத்து வாயில் போட்டு மென்று காற்றுவாடை பக்கமாகத் திரும்பி ஊதபோட்டிருக்கும் வைக் கோல்களெல்லாம் குபீலென்று பற்றியெரியும். பார்ப்பவர்கள் பிரமிப் பார்கள்.

1583 வேறு எலிகளை ஓட்டும் ஜாலம்

எலிகள் நிறைந்த வீட்டில் ஒருபுறமாகத் தெரியும்படி அரிஸ்மக்கீ புஷ்பத்தைவைக்க இதைப்பார்த்த எலிகளெல்லாம் விலகி நெடுந்தூரம் ஓடிவிடும்.

1584 அவிந்துபோன விளக்கை எரியவைக்கும் ஜாலம்

ஜாலமாடும் சபைக்குச்சென்று ஒரு அகலில் எண்ணெயை வார்த்து தீபமேற்றி ஒருவரை வாயினால் ஊதச்செய்து, உடனே ஆகாசத்தாம ரையைக்கொண்டு தூளாக இடித்து வைத்திருக்கும் தூளை கொஞ்சம் போட குபீலென திரும்ப எரியும். பார்ப்பவர்கள் திடுக்கிட்டுப்போவா ர்கள்.

1585 செடியில் பலவர்ண புஷ்பமாக்கும் ஜாலம்

தனக்கிஷ்டமான கலர்களில் வேண்டிய விதைகளை ஊரவைத்து பிறகு எடுத்து விதைத்து முன்னர் ஊரவைத்த ஜலத்தை வார்த்துக் கொண்டேவர பல வர்ணங்களாகப் பூர்க்கும்.

1586 இருட்டறையிற் செல்ல வெளிச்சமாகத் தெரிய வைக்கும் ஜாலம்

ஒருதாய்க்கு தலைப்பெண்ணின் முலைப்பாலில் சுறுமீன் தலையிலு ள்ள ஒரு கல்லை எடுத்து உறைத்து நெற்றியில் திலர்தமிட்டு அல்லது முகத்தில் தடவிக்கொண்டு இருட்டறையில் செல்ல வெளிச்சமாகத் தோன்றும்.

1587 வேறு வசிய ஜாலம்

மேற்படி கல்லையும் கோரோசனையையும் தேன்விட்டரைத்து உள்ளங்காலிற் றடவ, உனக்கு யாவரும் வசியமாகி உன் சத்துருக்க ளும் உன்னை வணங்குவார்கள்.

1588 பூத பிசாசுகளை பயப்படுத்தும் ஜாலம்

முன்னே சொன்ன கல்லை கோழிப்பிச்சத்துடன் கலந்தரைத்து நெற்றியில் திலர்தமிட்டு இருட்டில் வெளியிற்செல்ல பூதபிசாசுகள் யாவும் பயந்தோடும்.

1589 போன எலுமிச்சம் பழத்தை மறுபடியும் வரவழைக்கும் ஜாலம்

மேல்சொன்ன மாதிரியாக கோழிப்பிச்சுடன் ஷை கல்லை உறைத்து நெற்றியில் திலர்தமிட்டுச்செல்ல உன்னைப்பார்த்து பயந்தோடும் பேய் பிசாசுகளின்பேரில் படும்படி ஒரு எலுமிச்சம்பழத்தைப்போட்டு விட்டு திரும்பிப் பார்க்காமல் வீட்டிற்குவந்து படுத்து நித்திரைசெய்து பிறகு எழுந்துப்பார்க்க ஷை கனியானது உன் தலைமாட்டில் இருக்க உனக்கே பெரும் வியப்பை உண்டாக்கும்.

1590 பழங்களை தித்திப்பாக்கும் ஜாலம்

பழங்களின் விதைகளை 2-நாள் கட்டித் தேனில் ஊரவைத்து பிறகு, காய்காய்த்து பழுத்திருக்கும் தருவாயில் முன்னிருந்ததைக் காட்டிலும் பன்மடங்கான இனிப்பாக இருக்கும்.

1591 மாதுளஞ்சேடி விர்த்தியாகும் ஜாலம்

ஆட்டு இரத்தத்தை தினம் தினம் மாதுளை மரத்தின்கீழ் வார்த்து பாத்திக்கட்டி மரத்திற்கு யேறும்படிச்செய்ய கனிகள் பெருத்து ருசியாக இருக்கும்.

1592 சுத்தநீரை பலவிதங்களாக்கும் ஜாலம்

ஆங்கிலர்கள் வளர்க்கும் அகன்று வெத்திலை வடிவமாக இருக்கும் இலைகள் 4-5-பரித்து இடித்து சார்பிழிந்து ஜலத்தில்விட வேண்டிய கலர்களெல்லாம் உண்டாகும்.

1593 புளிப்பு மாதுளத்தை தித்திப்பாக்கும் ஜாலம்

ஆறு அல்லது 7-மாதம் வரைக்கும் மனிதர்கள் மூத்திரத்தை விட்டுக்கொண்டுவர புளிப்புத் தித்திப்பாகும்.

1594 செல்லு பிடிக்காதிருக்கும் ஜாலம்

தாமரை இலையை செல்லுபிடிக்கும் இடத்தில் வைக்க செல்லெரிக்காது.

1595 பேய்பிசாசு ஓட்டும் ஜாலம்

கொம்புக்கள்ளியின் மேலிருக்கும் ஒரு ஓணானை ஒரேவெட்டில் இரண்டு துண்டுகளாகச்செய்து சாணி உருண்டையில் வைத்து விநாயகர் பூசைசெய்து புடம்வைத்தெரித்து குறிப்பாக தலைச்சாம்பலைவேருகவும், வால்சாம்பலை வேருகவும் பதனம் செய்துக்கொண்டு பேய் பிசாசாடுபவர் தலைமேல் தலைச்சாம்பலைப் போட அவர்கள் தலையைச்சுற்றி ஆடுவார்கள். பிறகு ஓட்டும்போது முடியறுத்து வால்சாம்பலைத் தலைமேல்போட பிசாசு நீங்கி சொஸ்தமடைவார்கள். பார்பவர்கள் உன்னை மகா மந்திரவாதி யென்பார்கள்.

1596 வசிய திலர்த வித்தை

அவுரிச்சாற்றில் வெள்ளைச்சார்வேலைவேரை உறைத்து உன் புருவத்தின் நடுவில் திலர்தமிட்டுச் செல்ல, உனக்கடங்காத சத்துருக்கள் யாவரும் மயங்கி உன்னிஷ்டம்போல் வசியமாவார்கள்.

1597 உப்புஜலத்தை நல்லஜலமாக்கும் வித்தை

கோரைக்கிழங்கு, பீர்க்கன்விரை, வெட்டிவேர், வளைவு, மருதம் பட்டை, புளியங்கொட்டை, நெல்லிக்காய், இவ்வித தினுசுகளை பொடித்து கிணறுகளில் போட நல்ல ஜலமாக மாறும்.

1598 இதுவும் வேறு

நீண்ட கோரை, சுக்கு, அஞ்சனக்கல், நெல்லிக்காய், பீர்க்கன் விரை, இலுப்பக்காய் முதலியவைகளை சூரணஞ்செய்து முன்மாதிரி போட குடித்தண்ணீராக மாறி திரேகாரோக்கியத்திற்கு சுகப்படும்.

1599 கருங்கல்லை உடைக்கும் ஜாலம்

வேலன் விறகு, முருக்கன் விறகு இவ்விரண்டையும் உடைக்க வேண்டிய கல்லின்மீது போட்டு வேண்டியமட்டும் சுட்டு பின்பு சுண்ணும்பு ஜலத்தினல் குளிரச்செய்து பிறகு உடைக்க இலேசாக உடையும்.

1600 பாலை சர்க்கரையாக்கும் ஜாலம்

துத்திவேர்களைக் கத்தையாகக் கட்டி பசுவின்பாலை பழுக்கக் காய்ச்சி மேற்படி கத்தையால் துழாவிக் கொண்டிருக்க சர்க்கரை யாக மாறும். இதை காரகமுள்ளவர்களும் புசிக்க குணம் அடைவார்கள்.

1601 அன்னுசிப்பழம் அதிகமாகும் ஜாலம்

கொஞ்சம் பாலில் வெல்லத்தை குழம்பாகக் கரைத்து இதில் எந்த மாமிசத் துண்டையாகிலும் போட்டு வேரின் அடியில் வேராருமல் செடிக்கு சத்தானது பெரும்படி புதைத்துப்போட கனிகள் அதிக மாகப் பழுத்தும் இனிப்பாகவும் இருக்கும்.

1602 மாம்பழங்கள் விர்த்தியாக்கும் ஜாலம்

மாமரங்களின் வேர்களில் நாகப்பழங்களைப் புதைத்துவிட காய்கள் காய்த்து பழுத்து அதிக இனிப்பைத் தருவதுடன் அதிகமாகவும் பெருத்ததாகவும் இருக்கும்.

1603 நாய்கடி தீர்க்கும் ஜாலம்

மனத்தக்காளிஇலை ஒரு சிறுகூடையளவு கொண்டுவந்து சாறு பிழிந்து ஒரு புட்டியில் பதனம் செய்துக்கொண்டு இதை ஜாலமாடு மிடத்திற்குக் கொண்டுபோய் ஜாலமாக நடித்து கடியுண்டவனுக்குக் கொடுக்க குணமுண்டாகும். மேற்படி திப்பியையும் அரைத்து கடியுண்டவாயின்மீது பூசல் வேண்டும்.

1604 ஜலத்தில் பலவித வர்ணங்களாக்கும் ஜாலம்

ஆங்கில நாகரீகத்திற்கு உரித்தான சேப்பன் இலையைப்போன்ற அகன்ற இலைகள் இரண்டு அல்லது மூன்று கொண்டுவந்து இடித்துச் சாறுபிழிந்து சீசாவில் பதனம் செய்துக்கொண்டு ஜாலமாடும் சபையை நாடி அவ்விடமுள்ள ஜனங்களின் எதிரில் ஒரு பொகனி குளிர்ந்தஜலத்தில் மேற்படி நீரை பொறைகுத்துவதுபோல் குத்த ஜலம் அநேக விதமாகமாறி பார்க்க பிரம்மையுண்டாகும்.

1605 சூது வெல்லும் ஜாலம்

காஷ்டத்திலிருக்கும் கையாந்தகரைச் சமூலத்தை எருக்கம்பாலிலரைத்து உருண்டையாகச்செய்து முலைப்பாலில் உறைத்து திலர்தமிட ஜெயமடைவர்.

1606 காகிதபுஷ்பத்திற்கு மெருகிடும் ஜாலம்

கெரோஸின் எண்ணெயில் ரோசினம் சேர்த்துக்கரைத்து சூடுண்டாக்கி சரியான பதத்தில் காகிதபுஷ்பத்தை தோய்த்தெடுக்க மெரு கொடுத்ததுபோல் இருக்கும். பார்ப்பவர் பிரம்மிப்பர்.

1607 கையில் ஊசியில்லாமல் நூல்கோர்க்கும் ஜாலம்

நீ ஜாலமாடுமிடத்திற்குச்சென்று சபையோரைப்பார்த்து ஒரு ஊசியை எடுத்து ஒரு கதவின்மீது குத்தும்வண்ணம் விட்டெறிய

ஊசி கதவில் குத்திக்கொள்ளும். அதுசமயம் கையில் ஊசியில்லாமல் நூலை ஊசியில் வெகு சுலபமாகக்கோர்க்க சாமர்த்தியத்தை மெச்சுவார்.

1608 நெருப்பில் விளையாடும் வித்தை

மருக்காரைப்பூவும், உப்பும் பசும்பாலிலரைத்து உள்ளங்கால் விரல்களில் தடவிப்பூசி நடக்க கால்கள் சுடாது. வேறு தாளியுங்கொடுத்தான் சமூலமும் அரைத்து தனது கால்களிற்றடவி நெருப்பின்மேல் நடக்க கால்கள் சுடாது.

1609 நாய்கள் குலையாதிருக்கும் வித்தை

முதலையின் பல்லும் அரிதாரமும் சேர்த்து முடிந்து குளிசமாடிக் கட்டிக்கொள்ள நாய்கள் குலைக்காது.

1610 சிகப்புமை செய்யும் வித்தை

ஸ்பிரிட் ஆப்ஓயின் 19-பலமும், மஜிண்டா பௌடர் 2-பலமும், நல்லஜலம் 125-பலமும், விளாம்பிசின் 8-பலமும் எடுத்து இவைகளில் மஜிண்டாபௌடரை ஸ்பிரிட்ஸ் ஆப்ஓயினிற் கலந்து 4-மணி நேரம் மூடியிருக்க அது கரைந்துவிடும். பிறகு விளாம்பிசினியை ஜலத்தில் போட்டு கொஞ்சம் வேகவைத்து இறக்கி இளஞ்சுடரா யிருக்கையில் மஜிண்டா பௌடர் போட்டு கரைத்துவைத்திருக்கும் ஒயினைவார்த்து கலக்கி வடிகட்டி தைலம் செய்துக்கொள்ளவும்.

1611 கண்ணுடிமேல் எழுதும் மை செய்யும் ஜாலம்

சோடியம் ஸிலிகேட் அல்லது 4-லம்சைனின் ஒயின் $1\frac{1}{2}$-பலமுஞ் சேர்த்து பதனம் செய்துக்கொள்ளவும்.

1612 இரகசிய கடிதம் எழுதும் மைவித்தை

நைட்ரேட் ஆப்பிஸமத் என்பதை தண்ணீர் கலந்து எழுதிவிட உலர்ந்தபின் ஒன்றுந் தெரியாது. பிறகு படிக்கும்போது ஜலத்தில் தோய்த்துப் பார்க்க நன்ருய்த்தெரியும்.

1613 கனவில் விந்துநஷ்டத்தை நிறுத்தும் வித்தை

காரீயத்தை அரை கழஞ்செடை யுருக்கி, உண்டையாக்கி இதை இடுப்பில் கட்டிக்கொள்ள கனவில் இந்திரியம் ஸ்கலிதமாய் விடுவது நின்றுவிடும்.

1614 உடைந்த கருங்கல்லை ஒட்டவைக்கும் ஜாலம்

பழைய சிட்டக்கற்களை சேராங்கொட்டைப்பாலில் அடைத்து உடைந்த கற்களின்வாயில் பொருந்த தடவி படியவைத்து 10-நாள்

நிழலுலர்த்தலில்வைத்து பிறகு ஆனையைக்கட்டி இழுத்தாலும் உடையாது.

1615 அலை மிகுதியாக அடிக்கும் வித்தை

கோழிமுட்டை யோட்டை நவாச்சாரத்துடன் பொடித்து (பா) 108-உரு செபித்து விநயகரைப் பூசித்து அதைத் தண்ணீரில் போட மிகுதியாக அலை அடித்துப் பொங்கும்.

1616 புட்டிநீரைப் புழுவாக்கும் ஜாலம்

ஓர் வாயகன்ற சீசாவின் கார்க்கினுள்ளே கொஞ்சம் குடைந்து இதில் தந்தத்தூளையும், ரப்பர் தூளையும் நிரப்பி யடக்கிவைத்து புட்டியில் காலணு சர்க்கரையைக்கொட்டி சூடான ஜலத்தில்விட்டு காய்ச்சி பிசிந்து சபையோரைப் பார்த்து குலுக்கிவிட மேற்படி கார்க்கின்கீழ் யிருக்கும் தூளெல்லாம் ஜலத்தில்விழுந்து புழுக்களைப்போல் நெளியும்.

1617 அலுமினியப்பாத்திரம் வெளுக்கும் ஜாலம்

சோடாவுப்பும் சீமை அப்பளாக்காரமும் சேர்த்து வெண்ணீரில் போட்டு தேய்க்க பளபளப்பாக இருக்கும்.

1618 வேறு பச்சைப்பாலை கட்டவைக்கும் ஜாலம்

குட்டிப்பாலாச் செடியின் இலையை கொஞ்சம் பரித்தும் பாலில் வைத்துப் பிறகு எடுக்கப் பால் கட்டியிருக்கும்.

1619 வேறு கோழி மாரணம்

வெள்ளை வெங்காயத்தை எருக்கன்பாலில் தோய்த்து உலர்த்தி கோழிக்குக்கொடுக்க 2-தினத்தில் மடிந்துவிடும்.

1620 இதற்கு நிவர்த்தி

சுக்குத்தூளை கொஞ்சம் வாயில் கொட்டி நல்லஜலம்விட நிவர்த்தியாகும்.

1621 வீடுகளில் சுண்ணும்பு அடிக்கும் வித்தை

இரண்டவுன்ஸ் வஜ்ஜிரத்தை 2-நாள் ஊரவைத்து நன்ருய்க் காய்ச்சி சுண்ணும்புஜலத்தில் விட்டு அடிக்க சீக்கிரத்தில் அவிந்துபோகாமலும் வெண்மையாகவும் இருக்கும்.

1622 கற்சிலை பால்குடிக்கும் ஜாலம்

கோயில் வைக்கும் கருங்கற்களால்செய்த சிலைக்கு, வயரைத்துளைத்து இதற்குவழியானது பின்பக்கம் இருக்கச்செய்து, கோயிலுக்கு வரும் அடியார்களிடம் கறந்தப்பாலைக் கொண்டுவரச்செய்து சாமார்த்தி

யமாக கொண்டிருக்கும் பக்கமாகப் பாலை ஊற்ற பால் யாவும் கீழே விழாமல் விநாயகரிடமே தங்கிவிடும். இதைப் பார்த்தவர்கள் மகாசத்தி விநாயகர் என்று போற்றுவார்கள்.

1623 உருவத்தை பேதிக்கவைக்கும் ஜாலம்

வீட்டின்மேல் மூடும் ஓட்டைப்போல் செப்புத்தகட்டில் செய்து அதின் உட்புரத்தில் வெள்ளிக்கில்ட்டு பூசி, அதனை மேலே தூக்கிக் கட்டிவைத்திருக்க அதைப் பார்ப்பவர் வதனங்கள் யாவும் பலவிதமாகத் தோன்றும்.

1624 சாவல் சாக

செந்தகரைவேரை கோழிகளின்மூக்கின்மீதுதடவ உடனே சற்று நேரத்தில் சாகும்.

1625 இதற்கு நிவர்த்தி

பசுங்கொன்றைவேர் அல்லது ஆளிவிரைவேர் இவைகளை முன் மாதிரி மூக்கின்மீது தடவ உயிர்பிழைக்கும்.

1626 தட்டோடு குலையவைக்கும் ஜாலம்

தன் எதிரியின்வீட்டில் மூடியிருக்கும் ஓட்டின்பேரில் பொரிகளை இறைத்துவிடவேண்டும். அவ்வூரில் குரங்குகள் இருந்தால் ஓடுகளையெல்லாம் பிரித்துவைத்துவிடும்.

1627 கிளாசுகருவிற் பித்தளை யோட்டவைக்கும் ஜாலம்

காஸ்டிக்சோடா பலம்-1, காலோபோனியம் என்பதை 3-பலம் பிசினியில், 5-பலம் தண்ணீரில் சேர்த்துக்கலக்கி, கொதிக்கவைத்து $4\frac{1}{2}$-பலம் பிளாஸ்டர் ஆப் பாரிஸ்மாவைக்கொட்டி பிசைய லப்பமாகும். இதைக்கொண்டு பித்தளைகளை கண்ணாடியில் பதியவைக்கலாம்.

1628 அவரையில் அசரையைப்போக்கும் ஜாலம்

செப்புக்கம்பியொன்றும், அலமினியம் கம்பி ஒன்றும், எடுத்து மேற்படி செடிகளின் ஆணிவேர் பக்கமாக புதைத்துவைக்க 4-5-தினத்திற்குள் பூச்சிகள் யாவும் நசித்துவிடும்.

1629 பிரசவவளைய மந்திரம்

கீழ்வாய்நெல்லி பூமியைப்பார்த்து வளைந்திருக்கும் செடிக்கு நசி, மசி என்று 108-உரு செபித்து வேரறுமற் பிடுங்கிவந்து சமூலத்தை வளையமாடி பிரசவ வேதனைப்படும்சமையத்தில் கர்ப்பணியின் இடது கால் பெரியவிரலில் போட்டுவைக்க பிரசவம் சுகமாக முடிவடையும்.

1630 வேறு நெருப்பு மிதிக்கும் ஜாலம்

கொத்தான்சமூலம், தாளிசமூலம், மருக்காரைப்பூ, உப்பு இவைகளை பசும்பாலில் அரைத்து இரண்டுள்ளங்காலிலும் பூசி ஒவ்வொருவரும் நெருப்பின்மீது நடக்கலாம். கால்சுடாது பார்ப்பவர்கள் அக்கினி பகவானே வசியமென்பார்கள்.

1631 தண்ணீர்மீது பிரகாசமாக்கும் வித்தை

ஜாலமாடும் சபையில் ஒருடம்ளர் ஜலத்தில் பொட்டாஸியமென்னும் உலோகத்தைப்போட மிதந்துகொண்டே பிரகாசமாக பற்றியெரியும் மாதிரி ஜொலிக்கும். இராக்காலங்களில் செய்ய மின்னலைப்போல் இருக்கும் பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

1632 அம்மியை எழும்பவைக்கும் ஜாலம்

வெள்ளைச்சார்வேளை, சிறுபிடியுடன் சேர்த்தரைத்து, அம்மியின் மீது அப்பி, அதின்மீது ஒரு செம்பைவைத்து மேற்படி பாத்திரத்தின் உதட்டைப்பிடித்துத்தூக்க அம்மியே அடியோடு கிளம்பும்.

1633 நீரைப் பாலாக்கும் ஜாலம்

தேத்தான்கொட்டையை பசும்பாலிலரைத்து, நிழலிலுலர்த்திய பின்னர் ஜலத்தில் கரைக்க பாலாகும். இதை வெய்யலில்வைக்க ஜலமாகும். திரும்பவும் சுக்குத்தூளைப்போட பாலாகும். இதைப் பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

1634 ரோஜாபுஷ்பத்தை மஞ்சளாக்கும் வித்தை

சபையில் ரோஜாபுஷ்பங்களைக் காண்பித்து, பயர்பாக்ஸ்களைக் கொளுத்தி புகையைக்காட்ட மஞ்சள் நிறமாகும்.

1635 கர்ப்பூரச்செடி உண்டாகும் ஜாலம்

எரியும் அடுப்பின்மீது ஒரு செப்புச்சட்டியைவைத்து இதில் கொஞ்சம் சாராயத்தை ஊற்றி இதில் எவ்வளவு கர்ப்பூரத்தைப்போட்டால் கரையுமோ அவ்வளவும்போட்டு கரையவைத்துக் குழம்பை குளிர்ச்சிபொருந்திய ஒரு கண்ணாடி பில்லையின்மீது ஊற்றி கொஞ்சம் கழித்துப்பார்க்க பலவிசித்திரமான செடிகளைப்போல் தோன்றும்.

1636 கண்ணாடிபுட்டியில் கல் சுழலும் வித்தை

பெப்பர்மென்டுகள் போட்டுவைத்து காலியான புட்டியில் எலுமிச்சன்கனி ரசத்தை நிறையவிட்டு இதில் கல்தாரியஸ்டோன்போட்டு வைத்தால் கல்லானது சதா சுழன்றுகொண்டேயிருக்கும்.

1637 வர்ணப்பாம்புண்டாகும் ஜாலம்

பேரோஸர்பெனட் என்னும் வர்ணபாஷாணத்தைக்கொண்டுவந்து தரையில் வைத்துக்கொளுத்த, பாம்புபடம்போற் றலையெடுத்து எழும்பி நின்றாடுவதில், பார்க்க பிர்ம்மானந்தமாக இருக்கும்.

1638 தண்ணீரை நெய்யாக்கும் வித்தை

தூள்செய்த சப்ஜாவிரையை ஜலத்திலிட்டுகலக்க நெய்யைப்போல் இருக்கும். தவிர துளசி, ஸ்கூல்விரை முதலியவைகளிலும் சேர்த்துக் காட்டலாம்.

1639 இரும்பிற் பொன்கிலிட்டிடும் ஜாலம்

குளோரைட் ஆப் கோல்ட்டை கொஞ்சம் அளவாக ஜலத்தில் விட்டு, சுத்தமான பளபளப்புள்ள எஃகுதுண்டை தோய்த்து பிறகு நல்ல ஜலத்தில் கழுவிப்பார்க்க பொன்னைப்போல் இருக்கும்.

1640 குளிசம் குதிக்கும் ஜாலம்

எதிலேனும் ஒரு தாயித்தைச்செய்து இதில் நிரம்ப பாதரசம் விட்டு பதனம் செய்து காற்றுப்போகாமல் மூடி ஜாலமாடும் சபைக்குச் சென்று இதை கொஞ்சம் நெருப்பு கொண்டுவரச் செய்துபோட குளிசம் நெருப்புடன் சேராமலிருக்க மேலே கிளம்பும். இதன் பன்முறை எடுத்துப்போட குதிக்கும்.

1641 சீசாவின் ஜாலம்

கெரோசின் அரைபுட்டி பிடிக்கும் புட்டியை ஒன்று சேகரித்து இதற்கு கார்க்கிட்டு கழுத்தில் ஒரு கயறு கட்டி ஆழமான ஒரு கிணற்றிலாகிலும், ஒரு குளத்திலாகிலும் விடுத்து 10-நிமிடம் பொறுத்து எடுக்க புட்டிக்குள் கார்க்கும் ஜலமுமாக இருக்கும் பார்ப்பவர் பிரம்மானந்தமடைவர்.

1642 அக்கினியைத் தணியவைக்கும் ஜாலம்

வெங்காரமல்லது நவாசாரத்தை ஒரு தோலா அளவு நல்ல ஜலத்தில் கலந்துவைத்துக்கொண்டு ஜாலமாடுமிடத்தில் சபையின் எதிரில், எரிந்துகொண்டிருக்கும் அனலின்மீது வார்க்குமிடத்தில் குளிர்ந்து போகும்.

1643 குங்குமம் செய்யும் ஜாலம்

உலர்த்த மஞ்சளாகிலும், பச்சை மஞ்சளாகிலும் ஒரு வீசை கொண்டுவந்து தூளாக்கி 40 அல்லது 50 எலுமிச்சம் பழசாற்றில் பிசைந்தும், மேற்படி பழத்தின் திப்பியை ஒருங்குசேர்த்து உறலிலிட்டு

இடித்துச் சாறுபிழிந்து கொஞ்சம் படிகாரம் இடித்துக் கலந்து இதை யும் அனலிலிட்டு கொதிக்கவைத்து இதையும் மேற்படி தூளில் கலந்துபிசைந்து ஒரு இரவுவைத்து மிகுதியிருக்கின் மறுபடியும் விட்டுப் பிசைந்து மறுநாள் பகலில் காயவைத்து மறுபடியும் இடித்து வஸ்திரகாயம் செய்து பதனம் செய்ய அருமையான ஸ்ரீ சூரண மாகும். வெண்காரமும் படிகாரமும் சமனுகச் சேர்க்க இன்னமும் நன்ருக இருக்கும்.

1644 மஞ்சள் ஸ்ரீசூரணஞ் செய்யும் வித்தை

முன்மாதிரி செய்த தூளுடன் பாதி பச்சரிசி சேர்த்து சூரணஞ் செய்ய மஞ்சளாகும்.

1645 கந்தான் சேகப்புகுங்குமம் செய்யும் வித்தை

மேற்படி மாதிரியாகச் செய்து கொஞ்சம் எண்ணெய் கலந்து செய்ய மேற்படி மாதிரியாகும்.

1646 பனிக்கட்டி செய்யும் வித்தை

ஆறு புட்டி சலம்பிடிக்கும் வாயகன்ற ஒரு சாடியில் நான்கு புட்டி ஜலத்தை நான்குதரம் வஸ்திரத்தில் வடிகட்டி வார்த்து, மெழுகுபோ லரைத்து இரண்டு அவுன்சு பொட்டிலுப்பை அந்த ஜலத்திற்போட்டு சாடி வாய்க்குச் சரியான மூடியொன்றைப் போட்டு காற்றேருமற் செய்வதில், இதன் வாய்மேல் இருக்கும்படி கயிற்றிறுற்கட்டி ஆழ முள்ள கிணற்றுநீரில் விடுத்து அந்த ஜலத்தின் மேல்மட்டம் வரைக் கும் வரும்வாறு மேலே தூக்கவேண்டும். அதை மறுபடியும் மூழ்த்தி மேலே தூக்க இந்தப்படி அடிக்கடி செய்யுமிடத்திலது மூன்று அல்லது நான்குமணி நேரத்துக்குள் ஜலம் பனிக்கட்டியாக மாறும்.

1647 உடம்பு யெரிக்கும் ஜாலம்

நண்டு குழி மண்ணும், எதிரியின் காலடி மண்ணும், சுடலை மண்ணும் இம்மூன்றினுடன் பெருங்காயமுஞ் சேர்த்து 21-மிளகு எடுத்து யாவையும் ஓர் சட்டியிலிட்டு புளியின் விறகு தவிர மற்றைய விறகுகளில் ஓர் தினுசில் எரிக்க, அவர்கள் எலும்புகளெல்லாம் அதிகமாக எரியும். இப்படி எரிப்பதை நிறுத்திவிட உடம்பெரிவு நிற்கும்.

1648 இதற்கு நிவர்த்தி

புளியன்வேர் பட்டையை நறுக்கி கியாழம் வைத்து அதில் சர்க் கரை சேர்த்து உட்கொள்ள நிவர்த்தியாகும்.

1649 சித்தி மோதிரம்

சூரியன், சுக்கிரன், சந்திரன், இம் மூவரும் ஒருகாற்றங்கி யிருக் கையில் வெள்ளி, செம்பு, பொன், தினுசுக்கு கால்தோலா யிடை யுருக்கி அக்கிரகங்கள் மாறிடு முன் ஒரு மோதிரஞ் செய்து அதில் பெயர் வீதம் பவழம் பதிந்து மந்திரம் (உறம்பந்தே ஐம்பதே வைகு ண்டபந்தே நாமஹம்மது) என 5-உரு செபித்துப் பூசித்து, கரத்தி லணிந்து கொள்ள, தேவதைகள், சத்துருக்கள், மிருகங்கள், கிரகங் கள், பிசாசுகள் வசியமுண்டாகி சம்பத்துண்டாகும்.

1650 தாளுகப் பேயாடும் ஜாலம்

ஜாலமாடும் சபைக்குச் சென்று ஒரு சொம்பு நிறைய ஜலம் கொண்டுவரச் செய்து இதை ஒரு ஸ்திரீக்குக் கொடுக்க அவள் தலை சுற்றி பேயாடுவாள். இதற்கு பெருங்கிழங்கின் மேற்றோலை வெதுப்பி பொடி செய்து பேயூமத்தையை சூரணித்து ஒன்றாய்க் கலந்து விபூதியிற் சேர்த்து வைத்துக்கொண்டு ஷை ஜலத்தில் கலந்து கொடுக்கவேண்டும்.

1651 நெருப்பு ஜாலம்

வசம்பினுடன் கற்றாழைமடலின் மணியும் சேர்த்தரைத்து ஜால மாடுபவர் கைகளில் பூசிக்கொண்டு அனல் நிறைந்த தணலை கைகளில் எடுக்க கைவேகாது. கையும் சுடாது. ஆயினும் வெகுநேரம் எடுக்கக் கூடாது.

1652 மழுவெடுக்கும் வித்தை

மிளகுடன் வெள்ளிக்குன்றுமணி யிலையைக் கலந்தரைத்து ஜாலமாடுபவர் கைகளில் பூசிக்கொண்டு முன்போல எத்தாக மழுவை காய்ச்சி எடுக்கச் சுடாது. வேகாது. இதைக் கண்டவர் இன் புறுவர்.

1653 மெழுகுவத்தி ஜாலம்

ஜாலமாடு மிடத்திற்கு ஒரு மெழுகு வத்தியைக் கொண்டுவந்து தீக்குச்சியினுல் கொளுத்தி சற்றுநேரம் பொறுத்து அவித்துவிட்டு உடனே மற்றொரு தீக்குச்சியினுல் தணலை விளக்கின் சற்று அருகிற் காற்றுவாட்டமாகக் காட்ட குபீலென பற்றி யெரியும்.

1654 புட்டி வாத்தியம் வாசிக்கும் ஜாலம்

ஒரு தச்சனை அழைத்து அவனிடம் ஒரு மரத்துண்டில் 8-அரைபுட்டிகளை பதியும்படி செய்து இவைகளில் படித்தரமாக

நிரம்ப ஜலத்தை ஊற்றி சபைக்குச் சென்று வேறே ஒரு தொட்டியில் பாதி ஜலம் கொண்டுவரச் செய்து மேற்படி புட்டிகளை இதில் விழும்படி கழிக்க ஜலம் விழும். ஓசையானது வாத்தியம் வாசிக்கும் கீதம்போல் இருக்கும்.

1655 காகிதம் அனலை வசியம்செய்யும் ஜாலம்

படிகாரத்தைப் பொடித்து ஜலத்திற்போட்டு ஒரு காகிதத்துண்டு கலக்கிய மேற்படி ஜலத்தில் இரண்டு மூன்றுதரம் தோய்த்துலர்த்தி பிறகு கொளுத்த கடிதம் வேகாது பற்றியெரியும். ஆயினும் அதிக நேரம் கொளுத்தி வைக்கக்கூடாது.

1656 முட்டை பறக்கும் ஜாலம்

சௌகாரத்தை வெந்நீரிற் கலந்து கொதிக்கவைத்து இதைகொஞ் சம் கிண்ணத்திலூற்றி சுங்காணேதோய்த்து வாயுதட்டண்டைவைத்து ஊத முட்டைகள் பறக்கும்.

1657 மஞ்சள் இங்கி செய்யும் வித்தை

ஜாலமாடும் சபைக்குச் சென்று சபையோரைப்பார்த்து கொஞ்சம் மஞ்சள்பொடி கொண்டுவரச்செய்து, இதைக்கொண்டு மஞ்சள் இங்கி செய்கிறேன் பாருங்களென்று சொல்லி, கொஞ்சம் வெந்நீர் கொண்டு வரச்செய்து இதில் மஞ்சள்நீறைமரைத்து காம்போஜிபௌடரை எண் பித்து ஜலத்தில் 1-அவுன்ஸ் சேர்த்து சற்று பொறுத்து எழுத எக்கா லமும் மஞ்சள் இங்கியாக மாறும் இதுவெகு அதிசயமானது.

1658 ஜலத்தில்தோய்த்து படிக்கும் கடிதவித்தை

நைட்ரேட்ஆப் பிஸ்மத்தை ஜலத்திற்கலந்து பேனுவினல் ஒருகடி தத்தில் எழுதி காயவைத்து படிக்க ஒன்றுந்தோன்ருது. பிறகு-இதை சபையில் ஜலத்தில் தோய்த்துப்படிக்க வெகு விநோதமாக இருப்பது டனும் இரகசிய கடிதம் எழுதவும் ஏதுவானது.

1659 பாலைத் தயிராக்கும் வித்தை

நீ ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப்பார்த்து இந்த பஞ்சாக்ஷ ரத்தை யெடுத்து இந்தப்பாலில் போடுகிறேன் என்று சொல்லிப்போ ட்டு, சற்றுநேரம் பொறுத்து எடுத்துப்பார்க்க பால் தயிராக இருக்கும். இதற்கு படிகாரத்தை நுணித்து விபூதியுடன் கள்ளஅரையில் மடித்து வைத்து இருக்கவேண்டும். இது மிகவும் விநோதமானது.

1660 விசேஷவெண்ணை எடுக்கும் வித்தை

நீ ஜாலமாடுமிடம் போகுமுன்னர் ஒருபடிபாலில் 5-பலம் நெய்யைக்கலந்து காய்ச்சி பொரைக்குத்தி வைத்திருந்து சபையில் கடைய வெண்ணை அபரிமிதமாக இருக்கும். இது உடம்பிற்கு ஒருகேடும்செய்யாது.

1661 பசும்பாலைக் கட்டவைக்கும் ஜாலம்

பசுவின்பாலை நுரையுடன்கலந்து குட்டிபலாசெடியின் இலைகளை கிள்ளிப்போட்டு சற்று ரவியில்வைக்க அல்வாவைப்போலாகிவிடும்.

1662 வேஷ்டிகளுக்கு சாயமேற்றும் ஜாலம்

நல்ல சன்லைட்சோப் ஒருகேக்வாங்கி இதை சிலேஸ் சிலேஸாக அறுத்து, நல்ல ஜலத்தை கொதிக்கவைத்து மேற்படி துண்டுகளைப் போட்டு மறுபடியும் கொதிக்கவைத்து வேண்டிய சாயத்தூளையும்தூவி கொஞ்சம் படிகாரத்தூளையும் கலந்து வேஷ்டிகளை துவைத்து காயவைத்து எடுக்கவேண்டும். இம்மாதிரி மூன்றுமுறை செய்ய எவ்விதத்திலும் சாயமகலாது.

1663 குருத்துகளில் புழுவரும் வித்தை

நின்றவிடம் மீஞ்சானுக்கு ஆதிவாரம் காப்புகட்டி வேரறுமற் பிடுங்கிவந்து கா என்று 108-உருசெபித்து மேற்படி வேரை அறுத்து தெளிக்க புழுக்கள் ஒழியும்.

1664 சாராயம் ஊற்றி புட்டியை வெடிக்கவைக்கும் வித்தை

நீ ஜாலமாடும் சபைக்குச் செல்லுமுன்னர் ஒரு புட்டியில் கடுகுகளை கொஞ்சம்போட்டு எடுத்துக்கொண்டு போகவேண்டும். பின்னர் சபையிலுள்ள ஒருவனை அழைத்து சாராயம் கொஞ்சம் கொண்டுவரச் செய்து மேற்படி புட்டியில் ஊற்றும்படி செய்து கார்க்கிட்டு மேஜையின்மீது வைக்க சற்றுநேரத்திற்கெல்லாம் புட்டி வெடித்துவிடும்.

1665 புத்தகங்களுக்கு கிலிட்டிடும் வித்தை

எந்தபுத்தகம் கிலிட்டிடவேண்டுமோ அந்த புத்தகத்தை ஓரம் வெட்டி ஒரு பிரசில்வைத்து கிலிட்டிடவேண்டிய இடத்தை அழுத்தி அதின்மீது கோழிமுட்டையையுடைத்து வெள்ளை அம்பலியால் பூசி, மெருக்காகிதத்தை அளவுடன் எடுத்து மேற்படி யிடத்தில் வைத்து தந்தத்தால் தீத்த மெருகு பதிந்துவிடும்.

1666 தலையிற் கல்லுடைக்கும் வித்தை

ஆதிவாரம் சூரியோதயத்திற்கு செம்முள்ளிக்கு பஞ்சவர்ண நூலால் காப்பு கட்டி உச்சிவேர் அருமற் பிடுங்கி குளிசமாடி வாயிலடக்கி தன்தலையில் ஒருசிறிய செங்கல்லை உடைத்துக்காட்டலாம்.

1667 வெண்ணெயுடன் கலந்த ஜலத்தை பிரித்தெடுக்கும் ஜாலம்

எண்ணெயும் தண்ணீரும் கலந்த ஜலத்தை ஒரு டம்ளரில் வார்த்து இதில், நீளமாக இருக்கும் ஒரு துணிக்கந்தையை வெந்நீரில் தோய்த்து ஒரு முனையை, டம்ளரில் உள்ளே அடிபாகத்தில் வைத்து மற்றொரு முனையை, டம்ளருக்கு வெளிபுறத்தில் வேறுபாத்திரவாயின் மேல்வைக்க ஜலமானது துணியினுல் உருஞ்சப்பெற்று மறுமுனையில் சொட்டு சொட்டென்று விழுந்துவிடும். இதைப் பார்ப்பவர்கள் வெகு சாமர்த்தியவான் என்பர்.

1668 லட்சுமி வசியம்

தாளி, அறுபுள்ளிவெண்டு, ஆனைவணங்கி, பொற்றலைக்கையான் குழியானை, சீதேவி, செங்கழுநீர், கருநாக்கு, ஆறுபுள்ளி வண்டு வெள்ளெருக்கு பச்சோந்தி இவைகளை 5-பலங்கூட்டி, பூர்ணபஞ்சமி நாளில், கோயிலினுள் உள்ள கெந்தகமுஞ் சேர்த்து பொடி செய்து, திரியிலிட்டு, வீட்டினுள் தீபமேற்றிவைக்க எந்த சர்ப்பமும் சேராது. லட்சுமியும் வசித்திருப்பாள்.

1669 ஸ்திரீகள்தேகம் தழைக்கும் ஜாலம்

சிரியாநங்கை, கோரோசனை, ஆண்கழஞ்சி, மண்டுகெப்பிச்சு, சீதேவி, செங்கழுநீர், கருநா நாக்கு, பேய்தும்மட்டி இந்திரகோபன் வெள்ளெருக்கு, பச்சோந்தி இவைகளை பூர்ண அமாவாசை சித்தயோகத்தி லரைத்து தங்கள் தேகத்திற் பூசிவிடவும். இவளைப் புணரும் புருஷருக்கினியவராக அவன் தேகம் சமமாயிருக்கும்.

1670 வெள்ளைசெம்பு செய்யும் ஜாலம்

நீ கடைக்குச் சென்று நாகம் 3-பங்கு, செம்பு 4-பங்கு, நிக்கல் 2-பங்கு, நிறுத்து வந்து, முதலில் நிக்கலை ஒரு கெட்டியான மூசையில் இறுக்கி, பின்னர் செம்பையும் போட்டு, நன்றாக யுருகிய பின்னர் நாகத்தையும் போட்டு யாவும் கலந்து உருகிய பின்னர் அதிக சீக்கிரமாக யிறக்கி தனக்கு இஷ்டமானவைகளில் வார்க்க பிறகு வெள்ளை செம்பாக இருக்கும்.

1671 இரத்தக்கரை எடுக்கும் ஜாலம்

நீ ஜாலமாடும் சபையில் ஒரு உதிரம்பட்ட துணியை எடுத்து கெரோசின் எண்ணெயை ஜலம்போல் நடித்துத் தோய்த்து சற்றுப் பொறுத்து வெந்நீரால் தோய்க்க கரை விட்டுவிடும்.

1672 வசிய சந்தனம் வித்தை

சிரியாநங்கை, கோரோசினை, வெள்ளெருக்கு, பச்சோந்தி, பிரமதண்டு, வெள்ளாட்டுநாக்கு, தேவாங்கு, சீதேவி, செங்கழுநீர், கருநாக்கு, இவைகளை சூரணம் இருத்தி கையில் அரைத்து சந்தனத்தில் கொடுத்து பூச அவர்கள் சதாகாலம் உன்னை விடாது வணங்கியிருப்பர்.

1673 இருளில் வாசிக்க மைவித்தை

பிரமதண்டு, வெள்ளாட்டுநாக்கு, அழுகண்ணி, கரும்பூனை, பஞ்சாங்கம், சிரியாநங்கை, கோரோசினை, சத்திக்காட்டரணை, சூதிக்கொடி, சீதேவி, செங்கழுநீர், கருநாக்கு, வெள்ளெருக்கு, பச்சோந்தி, இவைகளை சித்தயோகநாளிற் பொடிசெய்து, சீலையிற் திரியாகத்திரித்து, நெய்யும் நல்லெண்ணெயும் கூட்டி, விளக்கெரித்து ஓட்டிற் பற்றவைத்த மையை நெய்யிலிழைத்து கண்களில்தீட்ட இருளில் வாசிப்பார்.

1674 கர்ப்பம்தரிக்கும் வித்தை

வெண்கொழுஞ்சி, அண்டங்காக்கைத்தலை, வாழை, தேவாங்கு, சீதேவி, செங்கழுநீர், கருநாக்கு, 3 - சத்திக்காட்டரணை, வெள்ளெருக்கு, பச்சோந்தி இவைகளை நல்லயோகம்பார்த்து தீயிலெரித்து நோயுள்ளயிடங்களில் மாதர்கள்பூச நோயகன்று கர்ப்பந்தரிக்கும்.

1675 கையில் ஜலம் ஒட்டாதிருக்கும் வித்தை

நீ ஜாலமாடும் சபைக்குச்சென்று சபையோருக்குத் தெரியாவண்ணம், உன்கையில் லைக்கோபொடி என்னும் தூளை பூசிக்கொண்டு, சபையிலுள்ள ஒருவரை ஒருடம்ளர் நிரம்ப ஜலம் கொண்டுவரச்செய்து இதில் காலணா, அரையணாவைப்போட்டு, நான் இதை எடுக்கும் விசித்திரத்தைப் பாருங்களென்று சொல்லி, உன் கையைவிட்டு எடுக்க ஜலம் உன் கைவிரல்களில் ஒட்டாது, இதைப் பார்ப்பவர்கள் உன்னை மிகப் புகழ்ந்துக்கொண்டாடுவார்கள்.

1676 இலைகட்டும் மூங்கில்கட்டும் சாயம்போடும் வித்தை

இஷ்டமான சாயப்பௌடரை படிகாரம், வெண்காரம் முதலியவைகளை துணித்து இவைகளிற் கலந்து ஒரு பானைஜலத்தில் கலக்கி

அதில், பனைவோலைகளையும், மூங்கிற்கசங்குகளையும், போட்டுக்காய்ச்சி, பிறகு எடுத்துப்பார்க்க சாயம் கெட்டியாகபிடிக்கும். இது வெகு விசித்திரமானது.

1677 கண்ணாடி புட்டிகளை கத்திரிக்கும் வித்தை

ஒரு கண்ணாடிபுட்டியில் வேண்டிய அளவிற்கு லின்ஸிட்எண்ணெயைவார்த்து இதில் ஒரு இரும்புகம்பியை பழுக்கக்காய்ச்சி நுழைத்து விட எண்ணெமட்டத்திற்கு கத்திரித்ததுபோல் ஒழுங்காக உடைந்துவிடும். இது விநோதகரமானது.

1678 கிருக்கிய எழுத்தை தெரியவைக்கும் வித்தை

சிலர் தஸ்தாவேஜுகளிலுள்ள எழுத்துக்களைச் சுரண்டி வேறு எழுத்துகளை எழுதுகிறார்கள். இது தெரியவேண்டுமாகில், இதை அயோடைன் திராவகத்தின் அடியிற் பிடித்துபார்க்கின், முன்சுரண்டியது நன்றாக ஏற்படும்.

1679 கெரோஸின் எண்ணெ அதிக பிரகாசமாக ஜோலிக்கும்வித்தை

கெரோசின் எண்ணெயுடன், கற்பூரத்தூளாகிலும், உப்புத்தூளாகிலும்சேர்த்து விளக்கில்விட்டு எரியவைக்க மட்டஎண்ணெயாக இருந்தபோதிலும் அதிக பிரகாசமாக ஜொலிக்கும்.

1680 கலியாணவீடுகளை சோபிதம் செய்யும் வித்தை

கொஞ்சம் வெள்ளை அபிரேக்குகளை சிறுகக்கத்தரித்து தூளாக்கி உரல்களில் விட்டு ஜலத்துடன் ருப்பி, இம்மொத்தையை சுண்ணாம்புடன் சேர்த்து கலியாணவீடுகளுக்கு பூச இரவில் வெளிச்சத்திற்கு வெகு வேடிக்கையாக இருக்கும்.

1681 அச்சுப்படத்தை மறுபடியும் எடுக்கும் ஜாலம்

ஒரு அச்சுப்படத்தின்பேரில் பொட்டாஷினைத் தண்ணீரிற்கலந்து பூசி ஊரவைத்து, திரும்பவும் டார்டாரிக் ஆசிடை தண்ணீரில் கலந்து மேற்படி காகிதத்தைத் தோய்த்து, ஊரவைத்து, கண்ணாடியின்மேல் பரப்பி, நான்குமூலை பக்கங்களில் பிசினியால் ஒட்டவைத்து அச்சு எந்திர ரோலரில் மையுடன் உருட்டிவிட அச்சுப்படத்தின்பேரில் மாத்திரம் மேற்படி மைபடும். மற்றவிடங்களில் கிஞ்சிற்றேனும் மைபடாது. பின்னர் இதன்மீது நல்ல காகிதத்தைப்போட்டு, அழுத்தி எடுக்கவும், மேற்படி படத்தைப்போலவே இருக்கும் இது என்கிறேவர்களுக்கும் ஒரு தகுதியான வழியாகும்.

1682 கற்குறி சொல்லும் ஜாலம்

ஒருவன் வலதுகையில் எவ்வளவு வைத்திருக்கிறானோ அதை 3-லும், இடதுகையில் வைத்திருப்பதை 2-லும் பெருக்கச்சொல்லி, இரு கையிலுள்ளதையும் கூட்டி, யாவும் ஒத்தையா இரட்டையா என்று கேட்க, ஒத்தையாகில் வலதுகையில் இரட்டையும், இடதுகையில் இரட்டையும் இருக்கின்றதெனச் சொல்ல சரியாகஇருக்கும்.

1683 திமிர்பிடிக்கும் காலை குணப்படுத்தும் ஜாலம்

நீ ஜாலமாடும் சபைக்குச்சென்று இந்தசபையில் இருக்கும் மனுஷர்களில் யாருக்காகிலும் கால் திமிர்பிடித்து இருக்கிறதா என்று கேட்க எவனேனும் ஒருவன் வருவான். அவனைப்பார்த்து உன்காலில் திமிர்பிடித்திருப்பதால் பாதையாக இருக்கிறதாவென்றும், குணப்படுத்தவேண்டுமா என்றுகேட்டு கொஞ்சம் பச்சைஜலத்தை அவன்காலில் ஊற்ற கால்திமிர் நீங்கப்பெற்று வெகு சந்தோஷப்படுவான். உன்னை மகாதந்திரவாதி யெனவும் நினைப்பான்.

1684 எழுத்துகளை மறையவைக்கும் வேடிக்கை ஜாலம்

கொஞ்சம் ஜலத்துடன், முபூரியேட் ஆப் அமோனியாவும், மயில் துத்தமும், சமனாய் ஜலத்திற்கலந்து பேனாவினால் தொட்டு எழுத அவ்வெழுத்துகள் தோன்றுமேவொழிய பிறகு தெரியாது. பிறகு இதை ஜாலமாடுமிடத்தில் இந்த காகிதத்தை அக்கினியருகில் சூடுபடும்படி காண்பிக்கவும். இதுசமையம் இவ்வக்ஷரங்கள் மஞ்சள் வர்ணமாகத் தோன்றும். இதைப்பார்க்கும் ஜனங்கள் பிரம்மைகொள்ளுவார்கள்.

1685 ஜலத்தில் தோய்த்துக்காண்பிக்கும் இரகசிய கடித ஜாலம்

கொஞ்சம் ஜலத்துடன் னைட்ரெட் ஆப்பிஸ்மத்தை கலந்துக் கலக்கி எழுத ஈரமுள்ளளவும் நன்றாகத் தெரியும். பிறகு திரும்ப படிக்கவேண்டுமாகில் ஜாலமாடும் சபையில் டம்ளர்ஜலத்தில் தோய்த்துப்படிக்க பார்க்கும் ஜனங்கள் வெறுங்காகிதத்தில் எழுத்துகளுடன் படிக்கும் அதிசயத்தைப்பற்றி பிரம்மானந்தங் கொள்வார்கள். இதை ஜாலமாடுபவர்கள், ஜாலமாடும் இடத்திற்கு ஏற்றவாராக எழுதிக்கொண்டுபோய் இம்மாதிரி செய்து படித்தல் நலம்.

1686 தலையிலுள்ள பேனை போக்கடிக்கும் வேடிக்கை ஜாலம்

புதிய புகையிலை 10-பலம் கொண்டுவந்து ஜலத்தில் 1-மண்டலம் ஊரவைத்த இந்த ஜலத்தைக்காய்ச்சி ஒரு புட்டியில் பதனம் செய்துக்

கொண்டு ஜாலமாடுமிடத்தில் பேன்கள் நிறைந்துள்ள ஒருவர் தலையில் கொஞ்சம் ஊற்றித்தேய்க்க உடனே பேன்கள்யாவும் மாரணமாகும்.

1687 அம்மியை எழுப்பவைக்கும் ஜாலம்

வேளைச்சாறு வேளையுடன் சிறுபுள்ளடியும் சேர்த்தரைத்துஅம்மியின்மீது அப்பி இதன்மீது ஒரு செம்பை அழுத்தி இருங்கச்செய்து செம்புவாயைப்பிடித்து தூக்க, கீழேயிருக்கும் அம்மியும் கூடவே எழும்பி மேலுக்கு வரும்.

1688 பாம்புக்குட வேடிக்கை ஜாலம்

கள்ளிப்பாலுடன், வசம்பும், பெருங்காயமும் கலந்து அரைத்து கைகளிற் பூசிக்கொண்டு ஜாலமாடுமிடத்தில் ஒரு பாம்பை ஒரு குடத்தில் விட்டு அதில் உன் கையைவிட்டுத்துழவ பாம்பு உன்னைக் கடிக்காது இது வெகு வேடிக்கையானது.

1689 வெண்கல ஓசை வித்தை

அசல் வெண்கலத்தினால்செய்த ஒரு கிண்ணியை உன்னெதிரில் ஒரு மேசையின்மீது கவிழ்த்து மேல்புரத்தில் தேன்மெழுகால் ஒரு சிறிய அடைதட்டி அதை இதில் பதியச்செய்தும், சற்றேறக்குறைய 2-அடி நிகளமுள்ள ஒரு மெல்லிய பிரம்பின் மேல்புரத்தின்மீதும் மேற்படி மெழுகை இலேசாகத்தடவி அப்பிரம்பின் ஒரு முனையை மேற்படி பாத்திரத்தின்மீது பதியவைத்திருக்கும் மெழுகின்மீது பதிய ஊன்றிவைத்து இரண்டு உன் கை பெருவிரல்களையும் கட்டுவிரலாலும் மாற்றி மாற்றி பால்கறக்கும் வண்ணம் பிரம்பின்மேலிருந்து அடிவரையிலும் விடாது உருவவும். இத்தகையானது, இனிமையான சங்கீத நாதம்போல் கேட்கும்.

1690 குருவிக்கூச்சல் உண்டாகும் ஜாலம்

ஒரு புதிய கார்க்குத்துண்டை ஜலத்தில் சற்றுநேரம் ஊரவைத்து எடுத்துக்கொண்டும், கண்ணாடிக்குழாய் இவைகளொன்றின்மேலூரிய கார்க்குத்துண்டால் சரசரவென்று தேய்க்க குருவிகளெல்லாம் கூட்டமாகக்கூடி கூச்சலிடுவதுபோல் தோன்றும். இது வேடிக்கையிலும் வேடிக்கையே.

1691 மரம் தந்தமாகும் வித்தை

சாரமுள்ள பிராந்தியில் ஐசிங்கிளாசும், கோழிமுட்டையின் ஓட்டையும் துணித்து அரைத்துக் கரைத்துவைத்துள்ள குழம்பில் சித்திர

பணிமரத்திருல்செய்த கருவியை நீஜாலமாடும் சபையில் இவர்கள்முன் னிலைக்கு மேற்படி குழம்பில்போட்டு அவர்களால் பதனமாக மூன்று நாள் ஊரவைத்துப்பார்த்து பிறகு எடுக்க தந்தமாகக் காணப்படும்.

1692 சிவந்தபுஷ்பத்தை மஞ்சளாக்கும் வேடிக்கை ஜாலம்

சில சிகப்பு புஷ்பங்களை ஒரு ஜாலமாடும் சபையில் கொண்டு வந்து சபையோருக்குக் காண்பித்து இந்த புஷ்பங்கள் யாவையும் நான் மஞ்சள் நிறமாக மாற்றுகிறேன் என்றுசொல்லி பயர்பாக்ஸ் குச்சியைக் கிழித்து புகையைக்காட்ட மேற்படி சிகப்பு புஷ்பங்கள் மஞ்சளாக மாறும். இது வேடிக்கையானது.

1693 வேடி வித்தை

நீ கடைக்குச்சென்று சலாட் என்னும் உப்பு 2-பங்கும், குழாய் கெந்தகம் 1-பங்குமாகவும், அதிக ஜாக்கிரதையாகவும், வெவ்வேருக வும் அரைத்து பிறகு ஒன்ருய்க்கலந்து கொஞ்சம் மிளகுபிரமாணம் எடுத்து ஒரு கருங்கல்லின்மீது, மற்ருெரு கல்லாகிலும், சுத்தியாலா கிலும் தட்ட வெடிசப்தம் உண்டாகும்.

1694 தகரவேடிக்கை ஜாலம்

நீ கடைக்குச்சென்று, முறியாடிக்ஆசிட் திராவகம் 6-அவுன்சும், நைட்ரிக்ஆசிட் திராவகம் ½-அவுன்சும், தண்ணீர் 2-அவுன்சும் சேர்த்து நெருப்பிலிட்டுக்காய்ச்சி சூடுள்ள தகரத்தின்மேலூற்ற அத்தகட்டின் மேல் விநோத விநோதமான உருவங்களாய்த்தோன்றும்.

1695 திலர்த வசியம்

கோரோசனையை, சனியில் தயிரிலும், புதன், செவ்வாயில் பாலி லும், திங்கள், வியாழத்தில் நெய்யிலும், ஞாயிறு, வெள்ளிக்கிழமைக ளில் தேனிலும் இழைத்து முகத்தில் திலர்தமிட்டு செல்ல தேவர்முத லிய யாவரும் வசியமாகி இஷ்டசித்திபெற்று வாழ்வார்.

1696 கற்பூர வேடிக்கை ஜாலம்

ஸ்பிரிட் ஆப் ஒயின் சாராயத்தில் எவ்வளவு கரையுமோ அவ்வ ளவு கற்பூரத்தையும்போட்டு கரையவைத்து ஒரு செப்புப்பாத்திரத் தில் இட்டுக் காய்ச்சி பிறகு ஒரு குளிர்ந்த கண்ணுடிபில்லையில் ஊற்ற சற்றுநேரத்திற்கு எல்லாம் பல விசித்திரமான செடிகளைப்போல் தோன்றும்.

1697 தண்ணீரில் நீந்தும் வாத்து வேடிக்கை

ஒருபுட்டியில் அடைக்கக்கூடிய கார்க்குதகுண்டை வாத்து உருவ மாகச் செய்து இதன்மூக்கில் காந்தஊசி ஒன்று நீண்டிருக்குமாதிரியாக

வாயில் சொருகி ஜலத்தில் மிதக்குமாறு வாயிலிட்டபின்னர், வேறே இன்னொரு காந்த ஊசியை தன்கையில் எடுத்துக்கொண்டு இதன் தென் முனை பட்சியின் மூக்கருகில் கொண்டு காண்பிக்க, இதைக்குத்த வருவதுபோல் அந்த கார்க்கில்செய்த வாத்தானது வர வேடிக்கையாக இருக்கும். காந்தத்தின் வடமுனையைக் காண்பிக்க அப்பட்சி விலகிப் போகும்.

1698 நீர்க்குமிழி பந்து ஜாலம்

தேங்காயெண்ணை சோப்பில் $\frac{1}{2}$-அவுன்ஸ் எடுத்து சிறுசிறு பில்லையாக அறுத்து $\frac{1}{4}$-பயின்ட் ஜலத்திற்போட்டு அது நன்றாய்க் கரைந்தபின் அனலில் விட்டு 2-நிமிஷம் பொறுத்து இரக்கி, 5-அவுன்ஸ் கிளிஸ்ரைன் திராவகங்கூட்டி 4-மணிநேரம் பொறுத்து, ஒரு சிறுவைக்கோற் காம்பின் ஒரு முனையை மேற்கண்ட நீரில் தோய்த்து மற்றொருமுனையை வாயில்வைத்துஊத, நீர்க்குமிழிகள்போல் நீருண்டைகள் புறப்பட்டு ஆகாயத்திற் செல்லும் இக்குமிழியானது நெடுநேரம் அழியாது நிலையாய் நிற்கும்.

1699 செடிகளை உலரவைக்கும் ஜாலம்

மரத்தினது உச்சிவேரை துளைசெய்து 1-பலம் பாதரசத்தை விட்டு மெழுகால் வாய்மூட ஒருமாதத்திற்குள் மரமானது பட்டுப் போகும்.

1700 காற்றில் விளக்கேரியும் ஜாலம்

மெல்லிய வெள்ளைக் கந்தைத்துணியில் உப்புத்தூளைப்போட்டு எவ்வித எண்ணையிலாகிலும் நனைத்துக்கொளுத்த எவ்வித காற்றிலும் அவியாது.

1701 புட்டியில்காட்டும் முட்டை ஜாலம்

நீ கடைக்குச்சென்று ஒருமுட்டையைக் கொண்டுவந்து இதை பத்திரமாக ஒரு ஊசியால் குத்தி உள்ளிருக்கும் அம்பிலிகள் யாவையும் போக்கி இந்தமுட்டையை ஒருவாரபரியந்தம் பச்சைஜலத்தில் ஊரவைத்து எடுக்க, ஓடுகள் வெடித்திருக்கும். இதை வெகு பக்குவமாக உரித்துவிட்டு, உள்ளிருக்கும் ஜவ்வை பதனமாக எடுத்து ஒரு புட்டிக்குள்போட்டு ஜலம் கொஞ்சம் ஊற்ற புட்டிக்குள் முட்டை தென்படும்.

1702 முட்டையை மேஜைமீது நிறுத்திக்காட்டும் ஜாலம்

ஒரு முட்டையின் உள்ளிருக்கும் அம்பிலிகள்யாவும் ஒன்றாய்க் கலக்கும்படி குலுக்கி இதை அப்படியே ஒரு சமமான மேஜையின்

மீது அடிப்பருத்ததை கீழ்நோக்கியும், முனைசிறுத்ததை மேல் நோக்கியும்வைக்க அம்முட்டையானது அவ்வாறேஅசையாது நிற்கும்.

1703 ஆகாதஜலம் ஆகும் வித்தை

சில இடங்களில் விளக்கெண்ணையைப்போலிருக்கும் ஜலத்தினல் உண்டாகும் வியாதியஸ்தருக்கு மேற்படி ஜலமிருக்கும் இடத்தில் ஒரு கெஜம் ஆழம்தோண்டி மேற்படி மண்ணை மேற்படி ஜலத்துடன் போட்டுக் காய்ச்சி 4-5, ஆவர்த்திக்குடிக்க எந்த நோவும் உண்டாகாது.

1704 இரும்பில் செப்புகிலிட்டிடும் ஜாலம்

அரை ஆழாக்கு வெந்நீர் ஜலத்துடன் 4-பலம் மயில் துத்தத்தை போட்டுக் கரைத்தவுடன், அதிற் பளிங்குபோல் தேய்த்து இரும்பை அந்நீரிற் ரேய்த்துவைத்து அதை 5-நிமிஷம் பொறுத்து எடுக்கவும். பிறகு செம்புகிலிட்டிட்டதுபோலிருக்கும்.

1705 ஜோதிபுட்டி ஜாலம்

ஒரு கடலைபிரமாணம் பாஸ்பரஸ்சை துண்டு துண்டாகத் துணித்து புட்டியில் அடைத்துப் பாதி குளிர்ந்தஜலம்விட்டு, அடுப்பு மூட்டி, வெத்துப்பானையில் இந்த புட்டியை வைத்து அனலிவிட்டு உடனே மற்ரொரு சிறு வாயுள்ள நீண்டபுட்டியில் வெந்நீரைவிட்டு மறுபடியும் அதை தீயிலிட்டு புட்டியின் முன் கொதிப்பித்த ஜலத்தை அதிற்புகட்டிக் கார்க்கிட்டு மூடிச் சீல்செய்து பத்திரப்படுத்தி இருட்டில் வைக்க எங்கும் பிரகாசமாக இருக்கும்.

1706 பசாசு வித்தை

ஆதிவாரத்திற் கொம்புகள்ளியின் மேலிருக்கும் ஓணானை ஒரு வெட்டிலிரண்டு துண்டாக்கி அவ்வுதிரத்தோடு சாணியினுள் வெவ்வேருகப்பதிந்து உருண்டைசெய்து சுட்டுப் பத்திரப்படுத்தி இதன் தலைச் சாம்பலை ஆடாத பேய்மேற்போட தலைசுற்றியாடும் வாலின் சாம்பலைப் போட சொல்லாமலே ஓடிப்போகும்.

1707 நீர்மேல் நடக்கும் ஜாலம்

சுரைக்காய் ஓட்டைத் தூள்செய்துக்கொண்டு அதன்பின் குன்றுமணியை அரைத்து மேலேயிருக்கும் தோலைப்பிரித்து தண்ணீரில் போட்டு இரவு வைத்து காலையிலெடுத்து அதை உரலிலிட்டு ருப்பி மழுணமாகிய பின் சுரையோட்டுப் பொடியைக்கலந்து பிசைய பிசினியாகவரும். இவ்வித பிசினியை இரண்டு பாதக்குரடுகளின்மீதும் பூசி

நிழலிலுலர்த்தி இருகாலிலும்போட்டு ஆழமான ஜலத்தின்மீதும், நடக்கலாம். நடந்து செல்லும்போது வெகு எத்தாக நடத்தல் அவசியமானது.

1708 பழம் வெட்டும் ஜாலம்

ஒரு எலுமிச்சங்கனியை நான்குமூலை சதுரமுள்ள சிறுமுட்டை நடுவில்வைத்துத் தடர்த்திப் பக்குவமாய்கட்டி அதை மண்ணின்மீது வைத்து கனத்த கத்தியால் வெட்டவும். மேற்படி பழமானது இரண்டு துண்டாகிவிடும் குட்டையும் வெட்டுப்படாது கிழியவும்மாட்டாது மண்ணில்லாவிடின் வெட்டாது.

1709 நீர்மேல் மிதக்கும் ஜாலம்

இதை யோக அப்பியாசமுள்ளவர்களேதான் செய்தற்குரியது. அதாவது எந்தவிதமான ஜலத்திலாகிலும், தான் மல்லார்ந்துபடுத்து இரண்டு கைகளையும், இடுப்பில்வைத்து தண்ணீருக்குமேற்றாக்கி நிறுத்தி அவ்விருகரங்களையும், இருபக்கமாக நீட்டிவைத்து தான் மிதந்திருப்பதில் மூச்சு (தம்) பிடிக்கவும் நெடுநேரம் அசையாமலிருப்பர் பார்ப்பவருக்கு இறந்துபோனதாகவே தென்படும்.

1710 வேடி ஜாலம்

கெந்தகம் 1-அவுன்ஸ், பொட்டிலுப்பு அவன்ஸ்-1, கிரீம் ஆப்டாரீடார் அவுன்ஸ்-1, அம்மூன்றையும் தனித்தனியே துணித்து தூளாக்கி பிறகு ஒன்றாய்க் கலந்து அதிற் கெனவெடுத்ததுபோலாக இருக்கும் நாணல்குச்சி முதலியவைகளில் அடைத்து கொளுத்த இது பீரங்கிசப்தம்போல் காணும்.

1711 பூமியில் அடிக்கும் ஜாலம்

வெடியுப்பும் மனோசிலையும் சமனாய் தனித்தனியே பொடிசெய்து சேர்த்து சுமார் மிளகளவு பொடியை காகிதத்தில்வைத்து இதனுடன் 4-5, சிறிய துறுக்கற்களை வைத்துப் பதமாய் கந்தைத்துணியால் சுருட்டி இதை பூமியில் அடிக்க பீரங்கிசப்தம்போல் கேட்கும். ஆயினும் வெடியுப்பு அதிகமாகச் சேர்த்தல் தகுதியன்று. சாக்கிரதையாகவும் செய்தல்வேண்டும்.

1712 பட்டாஸ் ஜாலம்

கெந்தகம் ஒருபாகமும், பொட்டிலுப்பு மூன்றுபாகமும், கார்போனேட் ஆப்பொட்டாஸ் 2-பாகமுமாகக் காயவைத்து உரலிற்போட்டு இடித்து தூள்செய்து கொஞ்சம் எடுத்துக் கரண்டியில் வைத்து

நெருப்பிற் காய்ச்சினால் உரத்த சப்தமாகக்கேட்கும். தவிர கருங்கற்களின்மீது வைத்து சுத்தியினால் தட்டினாலும், வெடிசப்தம் கிளம்பும். ஆயினும் துரைத்தனத்தாரின் உத்திரவின்மீதுதான் செய்தல் நலம்.

1713 எவ்வித வர்ணஜலம் காட்டும் கைபிரட்டு ஜாலம்

ஓர் படிகபாத்திரத்தில், நிரம்ப குளிர்ந்தஜலம் விட்டு, இதில் கொஞ்சம் சிகப்புஇங்கி தூளைப்போட்டு ஒருகைகுட்டையால் சற்றுநேரம் மூடவைத்து பின்புதிறக்க அத்தண்ணீர் யாவும் சிகப்பு வர்ணமாக இருக்கும்.

1714 ஜோதிபிரகாச ஜாலம்

சர்க்கரையும், குளோரேட் ஆப்பொட்டாசும் சரிபாகமாக யெடுத்து இரண்டையும் தூள்செய்து, மேற்படி பௌடரில் ஒருதுளி கெந்தகத்திராவகத்தை ஊற்றினால் அது உடனே அதிக பிரகாசமாக யெறியும். அவ்வாறே மறுபடியும்செய்ய உண்டாகும்.

1715 கெந்தகத்தீப ஜாலம்

கொஞ்சம் பொட்டிலுப்பை கரண்டியிற்போட்டு வறுத்து சூடாயிருக்கும்போது கொஞ்சம் கெந்தகத்தூளைப்போட, அது உடனே பற்றி யெரியும். மறுபடியும் அவிந்துபோனவுடனே, அக்கந்தகத்தை போட்டுவர எரியும்.

1716 தேக்கரண்டி கரையும் வித்தை

ஒரு மூசையில் 4-டிராம், பிஸ்மத்தைப்போட்டு உருகும்போது 2-அவுன்ஸ் ஈயமும், 1-அவுன்ஸ் சுத்ததகரமும் சேர்த்துருக்கினால், அது ஒருமாதிரி லோகமாகும். அவ்வுலோகமானது வெந்நீரிற்பட வுருகிவிடும். ஆகையால் அதில் ஒருதேக்கரண்டிசெய்து ஒருவன் கையிற் கொடுத்து கொதிப்பித்ததண்ணீரில் போட்டு இதினாற் கலக்கச்சொன்னால் அக்கரண்டியானது கரைந்துவிடும்.

1717 தண்ணீர் சிந்தா வித்தை

ஒரு டமளர் நிரையத்தண்ணீரை நிறையவைத்த பின்பு, அதன் மீது ஒரு கடிதத்துண்டைவைத்து எத்தாய் கவிழ்த்துவிட அந்நீரானது சிந்தாதிருக்கும். அதையப்படியே ஒருமேசையின்மேல்வைத்து அதில் ஒரு துளி தண்ணீர் எடுக்கச்சொன்னால் எவராலும் முடியாது.

1718 சுவர்களில் கடிதம் ஒட்டிக்காட்டும் ஜாலம்

திக்காகவும், பழுப்புநிற முள்ளதாகவுமுள்ள ஒரு சிறு கடிதத்துண்டை எடுத்து, கொஞ்சம் காய்ச்சியபின்னர், இதை கம்பளி சொக்

காய்மீது தேய்த்து இதை இவ்வாறே கவர்களின்மீது ஒட்ட ஒட்டிக் கொள்ளும். ஆயினும் இவைகளின்மீது ஈரமின்றி சூடாக இருத்தல் வேண்டும்.

1719 தேங்காய் உடைக்கும் கைபிரட்டு ஜாலம்

மயிர்கனத்தில் நேத்திரத்திற்கு தெரியாவண்ணம் உடைத்து இருக்கும் ஒரு தேங்காயை வாங்கிக்கொண்டுவந்து தரையின்மீதுவைத்து ஒரு மொக்கையான வெட்டுக்கத்தியை மேலேநோக்கி கைதனில் பிடித்து, எத்தாய் காயின்மீது தட்டி மேற்படி கத்தி கீழே இறங்காவண்ணம், மேலே தூக்கிக்கொள்ள அக்காயானது இருபிளவாய் அறுத்தது போலிருக்கும் ஆயினும் இவ்வாறு செய்ததற்கு தட்டுவதே முக்கிய காரணமாகும்.

1720 ஏவல்தீர்க்கும் ஜாலம்

ஏவல் சூன்யம் முதலியவைகட்கு, உன் இஷ்டதேவதையின் மூல மந்திரத்தை உருகொடுத்து பன்றியின் உதிரத்தை தெளிக்க எவ்வித சூன்யமாக இருக்கினும் நீங்கப்பெறுவர். இதை அநேகமாக துலுக்கர் கையாண்டு வருகிறார்கள்.

1721 பெயர் சீட்டுக்காட்டும் கைபிரட்டு ஜாலம்

பனஓலையை சிறுசிறு துண்டுகளாகக் கத்தரித்து சில பெயர்களை எழுதிக்கொள்ளவேண்டும். இவைகளில் ஒரு சீட்டைமாத்திரம் சாம்பல் நிறைந்த கும்மட்டியில் புதைத்துவிடவேண்டும். பின்னர் மேற்படி சட்டியை சபையிற்கொண்டுவந்து இந்த கும்மட்டியைவைத்து இதில் மற்ற சீட்டுகளைக்காண்பித்துப்போட்டு கொளுத்திவிடவேண்டும். இவ்வாறு ஆனவுடனே யே கொஞ்சம் ஜலம்தெளித்து மேற்படி கும்மட்டியைக் கிளறிப்பார்க்க வேறே ஒரு சீட்டு உன் கையில் அகப்படுவதைப் பார்த்து ஜனங்கள் பெரும் வியப்பை அடைவார்.

1722 நீரை நெருப்புமாதிரியாகத் தோன்றவைக்கும் ஜாலம்

ஈதர்திராவகத்தில், வெள்ளைச் சர்க்கரை, பாஸ்பரஸ் கலந்து அகன்ற ஒரு சட்டியில் கொஞ்சம் ஜலம்விட்டு இதை அதில்போட ஜலமெல்லாம் நெருப்பாகத்தோன்றும் இதில் பிரகாசமுண்டாகும் இதை வெகு ஜாக்கிரதையாய்ச் செய்யவேண்டும்.

1723 பலவித புஷ்பங்களுண்டாக்கும் ஜாலம்

ஒரு புஷ்பச்செடியில், ஒரு பூபூர்க்கும் கிளையை, முனையைத் தரித்து, அங்கு நாலுபாகமாகப் பிளந்து இதனடியில் வேறெவ்வித விதைகள் ஆனாலும் சரி நடுவில்வைத்து ஒன்றாய்க்கட்டி வாயைமூடி, சந்து

வாய்க்கு சாணம் கனமாகத்தடவிவைக்க, அச்செடி பூர்க்கும்போது கிளைக்கொரு வர்ணமாகத் தோற்றமுள்ள புஷ்பங்கள் தோற்றும்.

1724 பொம்மைகள் குதிக்கும் ஜாலம்

ஒரு அகன்ற கனத்தகண்ணாடியை காய்ச்சி, 3-அடுகு புத்தகத்தின்மேல்வைத்து இதன் கீழே சடைபொம்மைகளைப்போட பொம்மைகள் குதித்துக்குதித்துக் கூத்தாடும்.

1725 காரலும் இனிப்பும் உண்டாக்கும் ஜாலம்

உன் கையில் அதிமதுரமும், அதிவிடயமும் வெவ்வேறாக வைத்துக்கொண்டு, ஒருவனுக்கு முன்னதாக அதிமதுரத்தை இவன்வாயிற் போட்டு மெல்லும்படிச்செய்ய தித்திக்கும். பிறகு அதிவிடயத்தை மேற்படி மாதிரிச்செய்ய காரல் உண்டாகும்.

1726 எள்ளெண்ணை ஆடவைக்காத ஜாலம்

ஒருபிடி கள்ளை சட்டியிலிட்டுக்கருக்கி இடித்துவைத்துக்கொண்டு செக்கில் எள்ளைக்கொட்டும்போதே மேற்படி தூளைப் போட்டுவிட எந்நேரமும் செக்கு ஆடினாலும் எண்ணை இறங்காது.

1727 இதற்கு நிவர்த்தி

செக்கில் எள்ளைப் போட்டு தயிர் கொஞ்சம் ஊற்றி ஆட எண்ணை உண்டாகும்.

1728 கோலில் இரத்தங்கக்கும் ஜாலம்

2-முழநிகளத்தில் வெட்டிய ஒரு பிரம்பை உன்வாயில் வைத்துக் கொள்ளல்வேண்டும். இதற்குமுந்தியே உன்வாயில் நாகத்தாளிபழச்சாற்றைஅடக்கிக்கொண்டு மேற்படி பிரம்பில் ஊத மேற்படி ரத்தம் பிரம்பில் ஏறும். பின் ஜாலமாடும் சபையில் திரும்ப வாயில் வைத்து ஊத இரத்தம் கக்கும்.

1729 தன்னுருவை மேலேகாட்டி இதன் பலனை அறியும் வித்தை

நல்ல பௌர்ணமி காலத்தில், வானத்தில் களங்கமற்றிருக்கத் தன் நிழல் 5-அடிக்குமேலும், 10-அடிக்கு உள்ளாகவும் இருக்கும்சமையத்தில் நின்று தன்னடி, கழுத்து கைகால், சிரம் இவைகளைப் பார்த்து இதில் மனதையூன்றிச் சற்றுபொறுத்து வானத்தைப்பார்க்கில் தன் நிழலைப்போல் மேலேஒன்று காணப்படும். அவ்வாறு காண்பதில் மஞ்சள்நிறம்கண்டால் செல்வம், வெண்மையாக இருக்கில் சிரஞ்சீவி, சிகப்பாகயிருக்கின் உயிர்ச்சேதமெனவும், கறுப்பாகஇருக்கின் நோயெனவும்,

கைகால் குறைந்துதெரியின் 6-மாதத்திற்குள் சாவுஎன்றும், தலைகாணு முண்டமாக இருக்கின் 3-மாதத்திற்குள் மாண்டுவிடுவான் என்றும் அறிந்துகொள்ளல்வேண்டும். இதைத்தான் சாயல்புருஷன் தரிசனமென்பார்கள்.

1730 வாய்நீரில் தெரிந்துகோள்ளும் ஜோதிட வித்தை

தாழ்வாரநிழலில் சற்று ஒத்தி வெய்யலில் நின்று வாய்நிரம்பத் தண்ணீரை ஊற்றிக் கொப்பளித்து, அந்நிழலில் உமிழ்ந்தால், 5-நிறம் வர்ணங்களுடையவான வில்போல்தோன்றும், தவறினால் அவ்வாண்டி விறந்துவிடுவான், வில்லில்லாமல் பெண்ணுருகாணில் அவன் 6-மாதத்தில் இறப்பன்.

1731 ஓட்டமாக ஓடும் வித்தை

ஒருவன்ஓட ஆரம்பம் செய்வதற்குமுந்தி விழுதியிலையை வாயிற் போட்டு கொஞ்சம்தின்று வாயில்தாடையிலடக்கி வைத்துக்கொண்டு ஓடவேண்டும். எவ்வளவு தூரமானபோதிலும் ஓடலாம் நிற்கவேண்டின் ஒரு மரத்தைப் பிடித்துக்கொண்டுதான் நிற்கவேண்டும்.

1732 பல்லில் புழுவுள்ளவருக்கு புழுவிழும் ஜாலம்

நந்தவனங்களிலுள்ள கண்டங்கத்திரியின் வேரை பொடிசெய்து நெருப்புப்படையின்மேற்றூவி, பக்கங்களில் புகைப்பிடிக்க புழு கீழே விழும், இதனுடன் பல்நோயும் தீரும்.

1733 செப்புப்பாத்திரம் தூக்கும் ஜாலம்

ஒரு தாம்பாளத்தட்டைஎடுத்து இதில் ஒரு செப்புசொம்பில், ஒரு காகிதத்துண்டைக் கொளுத்திப்போட்டு உடனே தட்டின்மீது கவிழ்த்து கால்மணிநேரம் பொறுத்துத் தூக்க சொம்புடன் தட்டும் கூடவே வரும். பத்திரமாகத் தூக்கவும்.

1734 தலைநோய் புழுவெடுக்கும் ஜாலம்

தீராத தலைநோய்க்காரருக்கு எருமுட்டையை தூளாகச்செய்த பொடியில், வெண்ணெயைக்கலந்து புகையச்செய்து, காதுக்குள்ளேற்ற 2-3 புழுக்கள் விழும். உடனே தலைவலியும் தீரும்.

1735 நீர்பாங்கு தெரியவைக்கும் வித்தை

அஸ்தமிக்கும்வேளையில் மல்லிகை முதலிய எவ்விதமான வெள்ளை புஷ்பங்களைக் கொஞ்சம்கொய்து வைத்துக்கொண்டு, நினைத்தவிடங்களில் இம்மலர்களைத்தூவி, காற்றினால் வேறுஇடம்போகாமல் பக்குவம்செய்து விட்டு அடுத்தநாள் சூரியோதயத்திற்கு வந்து மேற்படி

மலர்களைப்பார்க்க, அவைகள் அவ்விடத்தில் வாடாது வதங்காது இருக்கின் அவ்விடத்தில் கிணறுதோண்ட ஜலம் உண்டாகும்.

1736 மஞ்சள்சாறு ஜாலம்

கொஞ்சம் மஞ்சளை அரைத்து ஜலத்துடன் கலக்கி யாவருக்கும் காண்பித்து பிறகு சுண்ணும்புநீர் கொஞ்சம் போட்டால் சிகப்பாக மாறும். திரும்ப இதிற்கொஞ்சம் எலுமிச்சங்கனியின் ரசத்தை கலக்க பழைய மஞ்சள் நிறமாக மாறும். இது வேடிக்கையானது.

1737 நீரில் அரிசி மிதக்கும் வித்தை

ஒரு சுண்டைக்காய் அளவு காதுகுரும்பியை சேகரித்து அரைத்து ஜலத்துடன் பிசைந்து பிறகு கொஞ்சம் அரிசியை இதனுடன் கலந்துப் பிசைந்து இந்த அரிசியை ஒரு ஜோடுதவலையில் ஜலம் கொண்டு வரச்செய்து போட அரிசிகள் யாவும் மிதக்கும். இதைப் பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள். ஆனால் கொஞ்சநேரம் இவ்வாறு போட்டுவைத்திருந்தால் அரிசிகள் யாவும் ஜலத்தில் ஊறி அமிழ்ந்துபோகும்.

1738 புஷ்பச்செடி வித்தை

வாயகன்ற ஒரு புட்டிக்குள் முக்கால் பாகம் ஜலம் விட்டு இதில் கொஞ்சம் சோடாவைப் போட்டு குலுக்கி ஒரு சிறிய துண்டு கண்ணுடியை ஒரு சிறு கம்பியிற்கட்டி, மத்தியில் அந்தரமாக கார்க்கிட்டுத் தொடுத்து, அப்புட்டிவாயிற் புகுத்து மூடி அசையாது வைக்க, இதில் புஷ்பச் செடியாகி, இலை, பூ, காய், கனி முதலியவைகளுடன் இருப்பதுபோல் தோன்றும். இது எத்தனை தினங்கள் இருந்தாலும் விசித்திரமே.

1739 பிள்ளைப்பூச்சி வேடிக்கை வித்தை

மஞ்சள் கொஞ்சம் அரைத்துக் கரைத்து இதில் பிள்ளைப்பூச்சியை விட இறந்துபோகும். திரும்ப இதை உயிர்ப்பிக்கவேண்டுமாயின், இதன் தலையில் கீழாநெல்லியைக் கசக்கி, ரசத்தைப்பிழிக்க, தூங்கி யெழுந்தாற்போல் ஓடும். சுண்ணும்புநீரைக் கலக்கி இதில் விட்டாலும் மேற்படி மாதிரியாகவே இறந்துபோகும். இதற்கு நிவர்த்தியும் முன்மாதிரியேதான் செய்தல் வேண்டும்.

1740 ஈயின் வித்தை

ஒரு ஈயைப்பிடித்து இதைப் பின்னப்படுத்தாது ஜலத்தில் போட்டுவிட்டு சற்றுநேரம் பொறுத்துப் பார்க்க இறந்துபோகும்.

திரும்ப இதை உயிர்ப்பிக்கவேண்டுமாயின் உள்ளங்கையில் வைத்து மூடி வாயினுல் ஊத உயிர்வரும். இதுவும் தவிர சாம்பலில் கொஞ்சம் மேலேபோட்டு வைக்க உயிர்வரும்.

1741 பச்சிலேபுகை வித்தை

கடைகளில் விற்கும் பயர்பாக்ஸ் மருந்து சுரண்டியெடுத்து, வெற்றிலேயிலாகிலும், மற்றெவ்வித பச்சிலேயிலாகிலும் வைத்து, உன் உள்ளங்கையில் அறக்கி காண்பிக்க புகைகள் செண்டு செண்டாக எழும்பும்.

1742 வேப்பிலே வித்தை

இந்த பச்சிலேயைக்கொண்டு ஒருவருக்கு மந்திரித்தால் பிணி நீங்கும் என்பது உண்மை. இதை நம்பிக்கையுடன் செய்தல் நன்று.

1743 கரகமெடுத்தாடும் வித்தை

இஷ்டமான குடங்களில், தண்ணீரை நிரைய தளும்பும் வண்ணமாக வார்த்து பழங்கலங்கள்போல் அடுக்கி, வாய்களுக்கெல்லாம் உதட்டின்மேலே சாணத்தையொட்டி மேற்குடத்தை தூக்க, மற்றய அடிக்கலங்களெல்லாம் கூடவே எழும்பும். இம்மாதிரியே தலே மீது வைத்து கரகமாடினுலும், நழுவிக் கீழே ஒன்ருகிலும் விழாது.

1744 கடிதமெழுதும் புகையெழுத்து வித்தை

வெள்ளேவெங்காயச் சாற்றினுல் பேனுவைத் தொட்டு வெருங் கடிதத்தின்மீது எழுதி, எருமுட்டையைக் கொளுத்தின தீப்புகையைக் கடிதத்தில் காட்ட இங்கியில் எழுதியதுபோல் இருக்கும்.

1745 பச்சைகுத்தும் வேடிக்கை வித்தை

இலுப்பமரத்தின் பாலில் பேனுவினுல் தொட்டு வேண்டியதை யெழுதி, அடுப்புக்கரியைத் தூளாக்கி இதன்பேரில் தூவி, தேய்த்து பிறகு துணியினுலும் துடைத்து விட்டுப்பார்க்க குறத்தி குத்திய பச்சையைப்போலிருக்கும்.

1746 ஓலேத்தேள் ஓடும் சாமர்த்திய வித்தை

ஒரு அங்குல நிகளத்தில் ஒரு தேளேப்போல் ஒரு பனேஓலேயில் கத்தரித்து இதன் வாலே தேளேப்போல் மேலே தூக்கி வளேத்து விட்டு இதனடியில் சப்பை நாயுணியை மெழுகுடன் பதிந்து, சுவர் முதலிய இடங்களில் விட்டுக் காண்பிக்க வெகு விசித்திரமாக இருக்கும். வேறே ஒருவர் பார்க்கச் செய்தல் கூடாது.

1747 உள்ளங்கையில் தீபமேற்றிக்காட்டும் வித்தை

ஒரு கொப்பரைத் தேங்காயை உடைத்து இதன்மீது பருத்தியும் விளக்கெண்ணெயும் சேர்த்து துவைத்து மொத்தையாக்கி உன் உள்ளங்கையில் வைத்து எண்ணெயைவிட்டு கொளுத்த எரியும். கைகள் சுடாது.

1748 பச்சைப்பாம்பு வேறு வித்தை

முத்தின தேங்காயில் ஒரு பச்சைப்பாம்பை விட்டு அந்த ஓட்டிலேயே மூடிப் புதைத்து, 20-நாள் பொறுத்து தோண்டியெடுத்து எண்ணெய்ஆடி விளக்கேற்றினால் வீட்டின் சுவர்களெல்லாம் பச்சைப் பாம்பாகத் தோன்றும்.

1749 நீரில் எழுதும் இரகசிய வித்தை

ஒரு டமளர் ஜலத்தில் பொட்டிப் பொடியை வஸ்திரகாயமாகச் செய்து ஜலம் தெரியாவண்ணம் தூவி, பிறகு உன்கைவிரல் ஒன்றில் உன் காதுகுரும்பியால் பூசி, ஷை தூள்போட்டிருக்கும் ஜலத்தில் ஷைவிரலால் எழுத்துக்களை கீறியெழுத எழுத்துக்கள் ஜலத்தில் தென்படும்.

1750 காட்டாமணக்கு செடியில் உதிரம்காட்டும் வித்தை

ஒரு எழுத்தாணியின் முனையில் சப்பாத்திரசமாகினும், செம்பருத்தி புஷ்பச்சாறாகினும், பூசிப் பூசி உலரவைத்து பிறகு ஷை செடியை மேற்படி எழுத்தாணியால் ஜாலமாடுமிடத்தில் குத்திக்காட்ட உதிரமாக வருவதுகண்டு கண்கூசுவார்.

1751 கெச்சக்காய் வித்தை

ஒரு கூடைகெச்சக்காய் சேகரித்து இதை ஏககாலத்தில் பூமியில் கொட்டவேண்டும். இது சமையம் குவியல்போலிருக்கும். இதில் ஒரு காய் மேலே உயரத்தில் இருத்தல் விதியன்றோ. இவ்வாறு இருக்கும் காயை எடுத்து ஒரு அடையாளமிட்டு, திரும்பவும் மேற்படி கெச்சக்காய்களில் 4-5-பிடிவாரி இவைகளில் மேற்படி கெச்சைக்காயைப் போட்டு குலுக்கி தரையில் முன்மாதிரி கொட்ட மேற்படி காயே மேலே வந்திருக்கில் இதற்குத்தான் ஆண்கெச்சைக்காய் என்று சொல்லவேண்டும். இவ்வாறான காயை பரீக்ஷைசெய்து எடுத்து ஜாலமாடும் சபையில் பத்து கெச்சைக்காய் கொண்டுவரச்செய்து மேற்படி ஒரு காயை யாவருக்கும் அடையாளத்துடன் காண்பித்து, மற்ற காய்களுடன் கலந்து கும்பலாய் கொட்ட மேற்படி காயே மேலே வந்து நிற்கும்.

இதை எம்மாதிரி செய்தாலும் இம்மாதிரியாகவே இருக்கும். இது விசித்திரமானது.

1752 சோக்குபோடி செய்யும் ஜாலம்

மூன்று வருஷமாக பூச்சி, புழுக்கள், பிடித்திராத செடியின் அடி வேரை தோண்டி, வெயிலிலுலர்த்தி, வஸ்திரகாய பொடிசெய்து பஞ்சாக்ஷரத்துடன் கலந்து உன் நகக்கண்ணிடுக்கில் வைத்துக்கொண்டு ஒருவர்மீது தூவி மூட மயங்கி, நீ கேட்பதையுங்கொடுத்து சொற்படி நாய்போலிருப்பர். இதற்கு முறிப்பு பச்சை ஜலத்தைத் தலையிலூற்ற மயக்கந்தெளிந்து சுகமடைவர். இது கையாண்ட முறை.

1753 செடிகளை காய்க்கச்செய்யும் வித்தை

காய்கள் காய்க்காத செடியின் வேரைக்கிள்ளி இதனுடன் பெருங்காயத்தை வைத்து புதைத்துவிட சிலநாளைக்குள் காய்கள் அதிகமாகக் காய்க்கும்.

1754 மட்டிக்கிளிஞ்சில்கள் உண்டாகும் ஜாலம்

பால்பானையை சுரண்டுகிற மட்டிக்கிளிஞ்சலானது வையகத்தில் உலர்ந்து மக்கிப்போனதை யெடுத்து தூளாகச்செய்து ஒரு பாத்திரத்தில் ஜலம் விட்டு இதில் கொஞ்சம்போட 5-6-நிமிஷத்திற் கெல்லாம் சிறு சிறு கிளிஞ்சல்களாக ஓடும். இதைப் பார்க்கப்பார்க்க வேடிக்கையாக இருக்கும். இதை இப்படியே நாளடையில் வைத்திருந்தால் கிளிஞ்சல் விருத்தியாகும்.

1755 வெள்ளைத்தேள் உண்டாக்கும் ஜாலம்

ஆவினது சாணத்தை கொஞ்சம் ஜலத்தால் குழப்பி, ஒரு பாணத்தில் விடுத்து வாய்மூடி, மண்சீலை செய்து பூமியில் புதைத்து 4-6-நாள் கழித்து எடுத்துப்பார்க்கில் வெள்ளைத்தேளாக இருக்கும்.

1756 குளிர்ந்த ஜலம் சுடும்வித்தை

ஆகாசதாமரையை பொடித்து (ஈ) என்று 108 உருஜெபித்து பூசித்துத் தண்ணீரிற்போடவும். குளிர்ந்த நீர் கொதிப்பேறி விடும். அந்த மூலிகை ஜலத்தில் தானேயிருப்பது. இதன் சாற்றை தண்ணீரில் பிழிய இதில் புகை எழும்பும்.

1757 ஆட்டுமேந்தை கிளம்பா வித்தை

ஆடுதின்னுப்பாளையை அரைத்து செருப்பின் பின்பக்கத்தில் தடவிக்கொண்டு ஆட்டுமந்தையை மூன்றுதரஞ் சுற்றி செருப்பை

விட்டு வந்து விடவும். இது சமையம் ஆடுகள் தன் இடத்தைவிட்டு பெயராது.

1758 இதற்கு நிவர்த்தி

சுராக்கருவாடை அரைத்து முன்மாதிரி செருப்பின் கீழே பூசி செய்ய ஆடுகள் எழுந்துநடக்க ஆரம்பிக்கும்.

1759 மறைவு ஜாலம்

சிறுத்தவிரை இரண்டு பிளந்தரிந்து ரவியில் வைத்து உலர்த்தி அல்லது சட்டியிலிட்டு எரித்துவர தைலமிரங்கும். இதில் ஏரழிஞ்சி வலதுபக்கத்துவேரைச் சுட்டு கருக்கி இதிலிழைத்து நெற்றியிலிட்டுக் கொண்டுச்செல்லவும்.

1760 பேதனம்

கழுதைக்குளம்பும், பேரண்டமும் சுட்டு, கறுப்புத்துணியிற் சுருட்டி இரும்பிற்சொருகிவைக்க தீராவிரோதமும், நலியும், இடத்தின் பேதமும் பலதுன்பங்களும் அனுபவித்து நாசமடைவார்.

1761 சூனியமகலவைக்கும் ஒருவித ஜாலம்

அமாவாசையாகவும், ஆதிவாரமுமாகவும், இருக்கும் தினத்தினன்று வெள்ளெருக்கன் காய்களை காகத்தின் கூண்டினுடைய விறகுகளைப்போட்டு சுட்டுக்கொளுத்தி சாம்பலாக்கி, இதனுடன் மயானசாம்பலையும் சேர்த்து வெறுகடித்தூள் பேய், பிசாசு, சூனிய முதலியவைகளுக்குத் தூவ யாவும்நீங்கி குணமுண்டாகும்.

1762 ஊதுகாமாலையைத் தீர்க்கும் ஜாலம்

நீ வெள்ளிக்கிழமையன்று பேய்தும்பைச் செடியருகிற்போய் அன்னவன் பெயரைச்சொல்லி, வானத்தை யிரங்க நன்றாய்த் துடைத்து தூபதீப நைவேத்தியங்கள் கொடுத்தபின்னர் இவன் நோய் போகல்வேண்டும் என்று செடியின்வேர் அறுவண்ணம் பிடுங்கி, அச்செடியைத் தலைகீழாய் போட்டுவிடவும். இதுசெய்த 3-ம் நாள் ஊதுகாமாலை தாளுகநின்று சுகமுண்டாகும்.

1763 குன்மம் அகற்றும் வித்தை

தும்பைச்செடியருகினில் போய் கதிரவனை பிரதக்ஷண நமஸ்காரம்செய்து உன் இரண்டுகைகளில் அவ்விலைகளைப் பதித்து, ஒருபிடி கீழேபோட்டு மற்றொருபிடி இலையை கல்வத்திலிட்டு அரைத்து 12-உருண்டைகளாகச் செய்து 3-உருண்டைவிகிதம், 4-நாள் தவிட்டிற்பிரட்டி உட்கொள்ள ஷை நோயானது நீங்கி சுகமடைவார்கள்.

1764 பார்வையை கெடவைக்கும் வித்தை

அரசன்பாலில் குளத்திலுள்ள அட்டைகளைப்போட்டு, பேர்சீட்டு எழுதி இதையாவும் கொளுத்தி எதிரியின்வீட்டில்தூவ பார்வைகெடும்.

1765 இதற்கு நிவர்த்தி

சர்க்கரையை நெய்யுடனும், தேனுடனும் குழைத்து சாப்பிட்டுவர பார்வையுண்டாகும்.

1766 இராஜவஸ்யம்

பசுமாட்டு வயிற்றிலிருந்து எடுக்கும் கோரோசனையுடன், குங்குமப்பூ, பச்சைகற்பூரம், கஸ்தூரி, புனுகு, தேன், இவைகளை நெய்யில் ரேசித்து பானையில் பதனம்செய்துக்கொண்டு நெற்றியில் திலர்தமிட்டுச் செல்ல வஸ்யமாகி கேட்டதை இல்லையென்னாது கொடுப்பார்கள்.

1767 தேள்விஷ மிறக்கும் ஜாலம்

எருக்கன்பாலில் தேற்றான்கொட்டையை தோய்த்து வுலர்த்தி வைத்துக்கொண்டு, தேள் கொட்டுண்டவாயில் வைக்க விஷமிரங்குமளவும் கொட்டை கீழேவிழாது. பிறகு இவர்களுக்கு நோய் கிஞ்சிற்றேனும் இராது.

1768 பொடி ஜாலம்

பூனைப்புடுக்குக்காயை இடித்து வஸ்திரகாயம் செய்து பதனம் செய்துகொண்டு வேண்டிய சமையத்தில் பகைவர்மீது தூவிவிட ரணமாகிவிடும். இது கொஞ்சத்திலாறாது.

1769 இதற்கு நிவர்த்தி

கோவைச்சாற்றை உட்கொண்டு இதையே மேலே பூசிவர ஷெரணம் தீர்ந்துவிடும்.

1770 மலடர்களாக்கும் வித்தை

மூஞ்சூரை ஞாயற்றுக்கிழமைகளில் பிடித்து அடித்து உலர்த்தி இடித்து சூரணஞ்செய்து இத்துடன் காஷ்டத்தின் சுடுகாட்டு எலும்பும், கொஞ்சம் மயானச் சாம்பலும், சேர்த்துக் கலந்து மாதர்கள் மேல் தூவ, இது பட்டவர்களுக்கு எக்காலத்திலும் சந்தான முண்டாகாது. இதற்கு நிவர்த்தியே கிடையாது. இதை செய்தால் காசினியில் ஆவைக்கொன்ற பாவத்திற்கு ஆளாவர்.

1771 தேள் வித்தை

அருக்கன் வாரத்தில் அரைஞாண் கயறின்றி ஒரு தேளைப் பிடித்து அதின் கொடுக்கு 3-மணி வரையில் வெட்டி எடுத்துக்கொண்டு, பகைவர் நீர்க்குழி மண்ணிற் புதைக்கவும். உடனே இவர்கள் அதிக பாதைபடுவர். இதை எடுத்துப்போட நீங்கும். எடுக்கவும் வைக்கவும் (ஜிம்) என்று 108 உரு செபிக்கவும்.

1772 சர்வஜன வசிய வித்தை

தேவாங்கினது மண்டையோட்டை விளக்கின் மேலே வைத்து மை உண்டாகும்படி செய்து காராம்பசுவின் நெய்யினிலிழைத்து நெற்றியில் திலர்தமிடவும். முகவசியமுடன் சகல ஜனங்களும் வசியமாவார்கள். இதில் மாதர்களும் வசியமாவார்கள்.

1773 பட்சி, மிருகம், மனிதர் முதல் யாவரும் வசியமாகும் வித்தை

கொண்டலாத்திக் குருவியின் கூண்டில் இருக்கும் ஒரு விறகுத் துண்டை எடுத்து குளிசமாடி உன் கரத்திலிட்டு எவ்விடம் போகினும், அவ்வவ்விடங்களிலுள்ள பட்சி, மிருகம், முதலிய யாவும் வசியமாகும்.

1774 கண்ணோய் வராத வித்தை

எள்ளுச் செடியின் இளம்புஷ்பத்தை வாயிலிட்டு பல்லிற்படாது விழுங்கி விடவும். ஒரு பூவிற்கு ஒரு ஆண்டு கண்ணோய் அணுகாது. இது சைகண்டமுறை.

1775 போன நாணயம் வரும் வித்தை

எந்த ஜலத்திலேனும் புணர்ச்சி செய்துக் கொண்டிருக்கும் ஆண் பெண் பச்சை தவளைகள் இரண்டு கொண்டு வந்து இவைகளின் வாயில் ஒவ்வொரு ரூபாயை போட்டு அடைத்து, ஒரு ஆற்றங்கரைகளின் இருபுறத்திலும் வெவ்வேறாக புதைத்து 4-5-நாள் பூசை செய்து ஓம்-சும்-உம்-ஆக்ரசய-ஆக்ரசய-சீக்ரமாக்ய, சயக்ஷிப் பிரமேல் ஒன்று ஆயிரத்தெட்டு உரு செபித்து, 46-நாள் பரியந்தம் பால் பழத்துடன் தூபதீப நைவேத்தியங் கொடுத்து ஆண் தவளையின் வாயைத்திறக்க, பெண்ணின் வாயிலுள்ள ரூபாயும் அதில் வந்திருக்கும் பெண்வாய் ரூபாயை குறிவைத்து பத்திரப்படுத்தி மற்றொரு ரூபாயை மாற்றிவிட மறுபடியும் அந்த ரூபாய் வந்திருக்கும்.

1776 அந்தரச்சேடி வித்தை

தண்ணீர்விட்டான் கிழங்கை மேலே அந்தரமாகத் தூக்கிக்கட்டி விட்டால், சில நாளைக்குள் வெள்ளிக்கம்பியைப்போல் ஒரே கொடியாக நீண்டு இலை முதலியன துளிர்க்கும்.

1777 முள்ளின்மீது நடக்கும் வித்தை

முத்தெருக்கன் செவியை ஞாயிறும் புனர்பூசமுமாகக் கூடிய நாளில் காப்புகட்டி வேர் அறுமற் பிடுங்கி, குளிசமாடி தலைகுடுமியுடன் கட்டிக்கொண்டு எவ்வித முள்ளின்மீதும் நடக்கலாம்.

1778 போகா செல்லுகளை போக்கடிக்கும் வித்தை

நவாசாரத்துடன் சர்க்கரையைச் சேர்த்து செல்லு வளையில் போட்டு விட எல்லா செல்லுகளும் இருந்த இடம் தெரியாது ஓடும்.

1779 கடிதம் வரும் வித்தை

ஒருபுறம் வாயும், மற்றொருபுறம் வாயில்லாததுமாகிய ஒரு கண்ணாடிக்குழாயை எடுத்து பட்டுத்துணியின்மீது நெருப்புப்பொறி பறக்கும் வண்ணம் தேய்த்து ஒரு சிறு கடிதத்தின் அருகில் வைக்க அக்கடிதம் அக்குழாயுடன் போய் ஒட்டிக்கொள்ளும். இதைப் பார்ப்பவர் ஆனந்த மடைவார்கள்.

1780 தண்ணீரில் முட்டைமிதக்கும் வித்தை

தலையும் வாலும் ஒரே அளவுள்ள டமளர்போல் இரண்டு செய்து, ஒன்றில் சுத்த ஜலமும், மற்றொன்றில் அடிப்பாதியிற் காரமுள்ள காடியை விட்டு, மற்ற பேர்பாதிக்கு சுத்த ஜலம் மெதுவாகவும் அசையாமலும் வார்த்து ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு முட்டையைப்போட சுத்த ஜலத்தின் முட்டையானது உள்ளழுந்தியிருக்கும். மற்றதில் இன்னொரு முட்டை நடுப்பாதியிலிருக்கும் டமளரில் ஜலம் வார்ப்பதை ரகசியமாகச் செய்யவேண்டும்.

1781 புருஷன் மனைவியை பிரியாதிருக்கவைக்கும் ஜாலம்

இலவமரத்தின் புல்லுருவியை, தூபதீபத்துடன் அனுஷ நக்ஷத்திரத்திற்கொண்டுவந்து, புனுகு, அழவணி விரையுடன், தேனைக் கலந்தரைத்துக்கொண்டுவரும் சமையத்தில் மேற்படி புல்லுருவியையும் சேர்த்து அரைத்து தண்டிற்பூசி புணர, மனைவி சாகும் பரியந்தம் உன்னை விட்டுப்பிரியாள்.

1782 மனைவி புருஷனை பிரியாதிருக்கவைக்கும் ஜாலம்

உத்திராடநக்ஷத்திரத்தில் முந்திரிமரத்தின் புல்லுருவியைதூப தீபத்துடன் கொண்டு, கோரோசனை, குங்கமப்பூ, கடுக்காய், புனுகு, சேர்த்து தேன் கலந்தரைத்து உண்டைசெய்து உலர்த்தி வைத்துக் கொண்டு, தன் இஷ்ட சமையத்தில், தேனுடன் புல்லுருவிற்பூசி, புருஷனைச் சேர எக்காலத்தும் செய்தவள் தம்மைவிட்டு பிரியான். இவ்வாறு 3-நாள் செய்துவர வசியமாகும்.

1783 பகைவரைப் பிரிக்க வைக்கும் ஜாலம்

அவிட்ட நக்ஷத்திரத்தன்று முறையுடன் வெட்பாலை மரத்தில் புல்லுருவியை கொண்டு, கொத்தான், ஆடுதின்னாப்பாளையையும், வேப்பெண்ணெயிலரைத்து, அதிற்பூசி பகைவர் தெருவாசல்படியண்டை வைக்க, அப்பகைவர் பிரிந்து வெவ்வேறாய் விடுவார்கள்.

1784 உறவாகவேண்டிய பகைவர்களுக்கு ஜாலம்

அஸ்வனி நக்ஷத்திரத்தில், மருதமறத்தின் புல்லுருவியை முறையுடன் கொண்டு, இரட்டைப் பிறமட்டை, சீதாசெங்கழுநீர் சேர்த்து, பன்னீருடன் உண்டைசெய்து தனக்கு வேண்டியபோது பகைவர்பேர்களை ஒரு ஓலைத்துண்டில்மாறி எழுதி தேனிலரைத்து அதிற்பூசி பகைவர் நடக்கும் வழியிற் புதைக்க உறவாவர்.

1785 பேய்பிசாசு அகல ஜாலம்

அஸ்தமி நக்ஷத்திரத்தில் கோங்குமரத்தின் புல்லுருவியைக் கொண்டு, தேங்காயையுடைத்து தூபதீபங்காட்டி சடாமாஞ்சி, நரிவிரட்டி சேர்த்து, பேய்கருப்பன் சாற்றிலரைத்து உண்டைசெய்து வேண்டியபோது சந்தனநீரில் உறைத்து நெற்றியில் திலர்தமிட பேய்பிசாசுகள் ஓடிப்போகும்.

1786 சிலந்திவிஷ கடி மாறும் ஜாலம்

கடைக்குச்சென்று பெயர் சொல்லாது ஜாடைகாட்டி வாரென்றுச் சொல்லி நல்லெண்ணெயைக்கொண்டு வந்து கோழியிறகால் தொட்டு தடவ குணமுண்டாகும்.

1787 உடம்பை ஊதவைக்கும் ஜாலம்

சமனெடையாக பலமும், படியுமாக பாஷாணமும், உப்பும் தூள்செய்து நடுவில்வைத்து மேல்சட்டிமூடி குப்பையிற்புதைத்து

20-நாள் அல்லது 30-நாள் பொறுத்தெடுத்து பண்டுபலகாரத்துடன் மேற்படி உப்பைக்கலந்ததாகச் செய்து கொடுக்க உடம்பு ஊதிப் போகும்.

1788 பேதன மூலிகை

சனிவாரம் சாயந்திரம் அரசுமாரண வேளையில் தும்பைச்செடிக்கு மஞ்சள்நூல் காப்புக்கட்டி, இருவர் பேர்களையும் தலைமாற்றியெழுதிக்கட்டி, சிவ, சிவ, சித்து, சிவசித்து, மாயாசித்து, மாயேஸ்வரி சித்து, இன்னானையும், இன்னாரையும் பிரி, பிரி என்று 1008-உரு செபித்து மறுநாள் ஞாயறு உதயத்தில் 1008-உரு செபித்து வேர் அருவணம் பிடுங்கி, இதை இரண்டாகக்கிழித்து 2-ல் 2-சீட்டை வைத்து சுருட்டி, 1-உள்ளூர் பிடாரிகோவில் பலி பீடத்தண்டை புதைத்து, மற்றொன்றை தொலைதூரத்துள்ள தானினைத்த பிடாரி கோயிலின் பலிபீடத்தண்டை புதைக்க பின்னவன் அங்கே செல்வான்.

1789 பலரும் கூத்தாடவைக்கும் ஜாலம்

வாதுமை மரத்தின் புல்லுருவியை பூச நக்ஷத்திரத்தில் தூப தீபத்துடன் கொண்டுவந்து, இந்திரகோபன், ஏழிஞ்சில் விதைசேர்த்து சிறுநீரில் அரைத்து உண்டைசெய்து வேண்டியபோது பசுநெய்யிலரைத்து நல்லெண்ணெயிற் கலந்து தூபம் ஏற்றிவைத்து எரிய அங்குள்ள யாவரும் கும்பிட்டு கூத்தாடுவார்கள்.

1790 இதற்கு நிவர்த்தி

இந்தவிதமான விளக்கை அணைத்து வேறே ஒரு விளக்கை ஏற்றி வைக்க கூத்தாடுவது நிற்கும்.

1791 வழக்கு வெல்லும் ஜாலம்

அத்திமரத்தின் புல்லுருவியை மிருகசீரிட நக்ஷத்திரத்தில் முறையுடன் கொண்டு, வெண்குன்றி வித்தை, கோரோசனையும் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்து உண்டைசெய்து தனக்கு வேண்டியபோது தேனுடன் உழைத்து திலர்தமிட, வழக்குகள் யாவும் ஜெயமடையும்.

1792 ஸ்திரீ வசிய ஜாலம்

காட்டுவாகையின்புல்லுருவியை மூலநக்ஷத்திரத்தில் கருங்கோழி பலிதந்து முறையுடன்கொண்டு, கோரோசனை கிராம்பு மினிமினிப் பூச்சியுடன் பசுநெய்யிலரைத்து உண்டைசெய்து இஷ்டகாலத்தில்

பசும்பாலிலரைத்து திலர்தமிட்டு நினைத்த ஸ்திரீயுடன் செல்ல அவள் தனக்கு வசியமாவதுமன்றி தன் சொற்படியுங் கேட்பாள்.

1793 பாதரசத்தால் நோயைப் போக்கடிக்கும் ஜாலம்

நோயுள்ளவன் கையில் அரை விராகனிடை பாதரசத்தைவிட்டு, இதனுடன் முள்ளங்கியின் சாறும் விடுத்து வலதுகை பெருவிரலால் அரக்கித் தேய்க்கவும் ரசம் இடது உள்ளங்கையிலிரங்கிவிடும், உடனே வெளிக்கு கொண்டுவரவும் இம்மாதிரி செய்வதால் நோயானது நின்று விடும்.

1794 நாக்குப்பூச்சிகளை கரையவைக்கும் ஜாலம்

கொஞ்சம் நாக்குப்பூச்சிகளை சேகரித்து ஒரு பாத்திரத்தில்விட்டு இதில் துணித்த இந்துப்பை போட்டு மூடி சற்று பொறுத்தெடுத்துப் பார்க்க கரைந்துபோகும் இவ்வித தைலத்தைக்கொண்டு வைத்தியர்கள் உபயோகப்படுத்தலாம்.

1795 களவைப் பிடிக்கும் சாமர்த்திய வித்தை

களவுபோனவீட்டில் ஒருஅரையில் ஒருஇரும்புக்கம்பியில் பெருங் காயத்தை தளும்பும்படிபூசி அதை புதைத்து கதவைமூடி சந்தேகமுள் ளவரை அதனுள் தனியாக நுழைந்து அந்தக்கம்பியை உருவி விபூதி எடுத்து நெற்றியிலணிந்துக்கொண்டு வரும்படிசெய்து, அவாள் வெளி வருகையில் கைகளைமுகர்ந்துப்பார்த்து பெருங்காயநாற்றமுடையவர்கள் எடுக்காதவர் என்றும் அன்னாற்றமில்லாதவன் களவாடியவன் என்று கண்டுபிடித்து வைக்க உன்னை மகா மந்திரவாதி என்று சொல்லு வார்கள்.

1796 இரசவெள்ளி செய்யும் ஜாலம்

பலன்சொல்லிய வாயால் 1-பலம் பாதரசத்தை விட்டு ஓட்டில் வைத்து மேலே ஒரு ஓட்டைமூடி, ஒருமுழ ஆழமும் அகல நிகளமு ள்ள குழியாகவெட்டி அதில் வைத்து புடமிட வெள்ளியாகும். இதை சீமைவெள்ளி எனவும் சொல்லலாம்,

1797 நிலம்புரண்டியால் செய்யும் வேடிக்கை

நிலம்புரண்டிச்செடியை, ஞாயிறு, செவ்வாய், வியாழம் முதலிய தினங்களில் (பௌர்ணமி) காலத்தில் செடியைத்தோண்டி முறையுடன் வேர் அறுவண்ணம் பிடுங்கிக்கொண்டுவந்து சுருக்கி $1\frac{1}{2}$-படி நீரிற்கரை த்து அன்று மாலை நேரத்தில் சந்தேகமுள்ள (புதையல்) விடத்தில்

தெளித்துவந்து மறுநாள் காலையில் பார்க்க பாளமாக வெடித்திருந்தால் தோண்டிப்பார்க்க புதையல் அகப்படும்.

1798 கோத்தான் கிழங்கு வேடிக்கை ஜாலம்

கொத்தான் கிழங்கு துணித்து குடுவையில்போட்டு குழித்தைல மிறக்கி, இத்துடன் வேப்பாலை கொட்டையைக் கருக்கிய தூளைக்கலந்து மர்த்தித்து அதை அஞ்சனம் பார்க்க, புதை, பொருள் முதலிய சகலமும் தெரியும். இத்துடன் ஆஞ்சநேயர் உபவாசமிருத்தல் நன்று.

1799 உடைந்தபுட்டியை ஒட்டவைக்கும் சாமர்த்திய ஜாலம்

கோழிமுட்டைகள் கொஞ்சம் உடைத்து பனியில் ஒருவாரம் வைத்து, கொஞ்சம் நவாச்சாரம் தூள்சேர்த்து மயனமாக்கி, இதை உடைந்த பிளவுகளின்மேல் கீற்றாய்தடவி, பயர்பாக்ஸ் குச்சியின் அனலைக் காண்பித்துவர ஒட்டிக்கொள்ளும்.

1800 தாயில்லாமுட்டை போரிக்கும் ஜாலம்

சில கோழிமுட்டைகளை, பெட்டிக்குள் பஞ்சைப் பரப்பி அதன் மீது வைத்து மூடி காற்றோதபடி இடுக்குகளில்வைத்து மூடி பாதுகார்க்க 30-நாளைக்கு மேல்படாது குஞ்சுகள் பொரித்துவிடும். இது சமையம் இவைகளை குருவிகளுக்கு இறை கொடுப்பதுபோல்கொடுத்து காப்பாற்றல் வேண்டும். அவ்வாறு செய்தால்தான் பிழைக்கும்.

1801 மச்சங்களை மிதக்கவைக்கும் ஜாலம்

வேர்க்கடலை, இரு, கஞ்சா, பேன்கொட்டை இவைகளை சமனுக தூள்செய்து மீன் உள்ள குளம், குட்டைகளில் தூவிவிட 4-5-மணி நேரத்திற்குள் மேற்படி இடங்களில் உள்ள மச்சங்களில் சிலவைகள் மிதந்துபோகும்.

1802 கிணற்றில் தண்ணீர் மோள்ளவைக்காத ஜாலம்

தோண்டியொன்று புதிதாகக்கொண்டுவந்து அதின் கீழ்புறத்தில் பச்சோந்தியை அரைத்து நன்றாய்த் தடவிவிட்டு, அதில் தாம்புகயறு போட்டு கட்டக் கிணற்றில் தண்ணீர்மொள்ளாது குடமுந் தண்ணீரில் அழுந்தாது என்னேரமொண்டாலும் கொஞ்சம்தண்ணீர்கூட அதில் ஏறாது.

1803 கையில் தாம்பூலம் கசக்கிக்காட்டும் ஜாலம்

கருவேலங்கொழுந்தைக் கொஞ்சம் பரித்துத் தன்கையில்வைத்து கசக்கி சாறுவந்தபிறகு கீழே போட்டுவிட்டு, ஜாலமாடுமிடஞ் சென்று

வெற்றிலையும் சுண்ணும்பும் உன்கையில்வைத்து கசக்கிக்காட்ட தாம்பூலம்போட்ட நிறம்போலாக இருக்கும்.

1804 குடத்துநீரைக் கவிழ்த்துகாட்டும் ஜாலம்

நாறுகரந்தைவேர், அரசன்வேர், கோரைக்கிழங்கும், ரோசினமும் சமனிடையாக நிறுத்துக்கொண்டு அரைத்து குடத்திற்குள் பூசிவிட ஜலத்தை அதில்விட்டு கீழ்மேலாய்க் கவிழ்த்துக்காட்டினுல் ஒரு துளி தண்ணீர்கூட கீழேவிழாது.

1805 ஜலத்தின் பாணவேடிக்கை ஜாலம்

ஒரு படிகாரபாத்திரத்தில் தண்ணீரைவிட்டு அதை பலருக்குங் காட்டி பாஸ்பரயிட்டு ஆப்லயின் என்னும் இங்கிலீஷ் மருந்தை கொஞ்சம் எடுத்து ஜலத்துடன்போட அது பாணம்போற் கிளம்பும். இது ஷாப்புகளில்தான் கிடைக்கும்.

1806 வைக்கோலில் இரும்புக்கம்பியின் விசித்திர வேடிக்கை ஜாலம்

ஒரு அடி நீளமுள்ள இரும்புக்கம்பி ஒன்றை எடுத்து உலையிற் சிவக்கக்காய்ச்சி, குறடினுல் தூக்கிவைத்து ஒரு வைக்கற்பிரியை முன்னுதாய் தவளைநெய்யில் தோய்த்து வைத்திருந்து கம்பியை அதன் மேல் எடுத்துப்போட்டு சுற்ற வைக்கோல் கொஞ்சங்கூட வேகாது. வேறே வைக்கோல் சுமைமீதுபோட குபீலென பற்றி எரியும்.

1807 சர்ப்பத்து செய்யும் ஜாலம்

ஒட்டைநீக்கி ஆலகஹால்என்னுந் திராவகத்தில் பழத்தைக் கரைத்து பிறகு வடிகட்டி வைத்துக்கொள்ளவும்.

1808 விளக்கேரிய தவளைமேயும் ஜாலம்

தவளைநெய்யில் வெள்ளைக்கந்தையை நனைத்து காயவைத்து பிறகு எடுத்து திரித்து இரவில்விளக்கேற்ற வீட்டின் சுவர்களெல்லாம் தவளையாக மேயும்.

1809 சுண்ணும்பு காளவாயை வேகவைக்காத ஜாலம்

எட்டிமரத்தின் சிறுதுண்டை எரித்து எருமை மூத்திரத்தால் அவித்து கரியை சுடப்போகும் சுண்ணும்புகாளவாயின் உள் மண்ணின் அடியில் புதைத்துவிட எவ்வளவு தீயிட்டாலும் வேகாது. இதை எடுத்து கோமயம்தெளித்து திரும்பிப்போட பற்றியெரியும்.

1810 மற்றொருவித ஸ்திரீ வசியம்

நீண்டிருக்கும் இரட்டை பரமட்டையிலையுடன் வெள்ளைப்பூண்டு திரியையும் உன் உள்ளங்கையில் வைத்துக் கசக்கி வந்த சாரை உன் இஷ்ட ஸ்திரீயின் சிரசின் உச்சியில் பிழிந்து தேய்க்க உன்வசமாவாள். இவள் தூங்கும்போது இவ்வண்ணம் செய்தல் நன்று.

1811 பச்சிலை மேல்லா ஜாலம்

அவலை சுரையோடு கொட்டிக்கிடக்கும் மாதிரியாக உள்ளே படர்ந்திருக்கும் இருப்பவல்செடியின் இலையைப்பறித்து ஒருவனுக்குகொடுத்து மெல்லும்படிச்செய்ய அவனால் ஒருமணிநேரமானாலும் மெல்ல முடியாது. இந்த இலையைக் கொடுக்கும்போது மந்திரவாதிபோல் நடித்தல் அவசியம்.

1812 சுரையில் மாதுளவிதை காட்டும் ஜாலம்

ஒரு மாதுளைமரத்தின்கீழ் பயிராகி இருக்கும் இளமைப் பருவமுள்ள சுரைசெடியின் அடிமுனையை அறுத்து மேற்படி மரத்தின்கீழ் துளைசெய்து மேற்படி செடியை இதில்விட்டு மரத்தூளால் மூடி சாணியைப்பூசி பக்குவமாக காப்பாற்ற மேற்படி செடியில் காய்க்கும் சுரைக்காயை அறுத்துக்கொண்டு ஜாலமாடும் சபைக்குச்சென்று அறுத்துக் காட்ட மாதுளவித்துகள் இருக்கக்கண்டு அதிசயிப்பார்கள்.

1813 கேட்ட கார்டை குத்திக்காட்டும் ஜாலம்

ஒரேமார்க்குள்ள இரண்டு கடிதபாக்கட்டுகளில் ஒரு கட்டில் யாவையும் அயத்தூளால் ஒவ்வொருமுனையில் பார்ப்பவர்க்குத் தெரியாவண்ணம் வைத்துக்கொண்டு ஒரு ஜோல்னாவில் போட்டு வைத்து ஜாலமாடும் சபையில் வெறும் கட்டை எடுத்து உதறிவிட்டு ஒருவரை ஒரு கார்டு எடுக்கச்செய்து காண்பித்து இந்தகார்டை அடையாளம் வைத்து ஜோல்னாவை மூடி இதேமாதிரியாயுள்ள அயபொடியின் காகிதத்தைக்கலந்து வெருங்கார்டை எடுத்து மறைத்து ஜோல்னாவை திறந்துவிட்டு முனையில் ஸ்காந்தம் வகித்த பட்டாக்கத்தியால் இரைத்துள்ள கார்டுகளை குத்திக்கிளறி தூக்க முன் நினைத்த கார்ட்டு கத்தியுடன் ஒட்டிக்கொண்டு நிற்கும்.

1814 பழங்களை நாள்பட வைத்திருக்கும் வித்தை

பழங்களை அலம்பி துடைத்து வாய் அகன்றபுட்டியில் போட்டு அதன் நிறைய அப்பட்டதேனை ஊற்றி கார்க்கிட்டு காற்று போகா வண்ணம் வைக்க எத்தனைநாள் இருந்தாலும் பழம் கெடாது.

1815 எரும்பின் வசிய வித்தை

எத்தைச்சொன்னாலும் கேழ்க்கும் நத்தைச்சூரியின் வேரை கொஞ்சம் துணித்து சூரியகிரகணத்தில் அஸ்தமி நக்ஷத்திரத்தில் புத்தின் வாயில்வைத்து தூபதீப நைவேத்தியம் கொடுத்து காளி உபாசனையில் பூசை செய்துவந்து ஜாலமாடும் சபையில் 3-நாளைக்குள்ளாக ஒரு எறும்பைப் பிடித்து உன் எதிரில்வை நீ எந்தப்பக்கம் போகும்படி சொன்னாலும் அந்தப்பக்கம் போகும் பார்க்க பிர்மை உண்டாகும்.

1816 கோலியை ஒருபுறம் அடிக்க ஒருபுறம் போகும் ஜாலம்

ஜாண் நிகளமுள்ள ஒரு இரும்பு முனையில் கடையில் காந்தத்தை பதிந்து அடித்துவிட்டு இதன் அருகில் ஒரு கோலியைவைத்து அயத்தூள் பூசிய மறுகோலியால் மற்றொரு கோலியைப்பார்த்து வேகமாக அடிக்க கோலியானது இரும்பு முளையினண்டை வரும் எத்தனைதரம் செய்யினும் இவ்வாறே ஆகும்.

1817 ரப்பர்பந்து ஒட்டிக்கொள்ளும் வித்தை

ஒரு ரப்பர்பந்திற்கும் அயத்தூளை முழுதும்பூசி உலரவைத்து பிறகு ஸ்காந்தம் பதிந்திருக்கும் இடத்தில் அடிக்க ஒட்டிக்கொள்ளும்.

1818 பித்த மயக்கத்தை தெளியவைக்கும் ஜாலம்

வாழைத்தோட்டங்களில் வெட்டியிருக்கும் காவாய் ஜலங்களின் அசரை மீன்களை பிடித்து கொஞ்சம் உலர்த்தி, பொடிசெய்து வைத்துக் கொண்டு மயக்கமுள்ளவர்களின்மீது தூவ மயக்கம் தெளிந்துவிடும்.

1819 மனோவஸ்ய ஜாலம்

ஒரு இருட்டரையில் உட்கார்ந்து கண்ணை மூடி பார்க்கில் பலவித உருவங்கள் தென்படும். இது சமையம் ஒருவஸ்துவை நினைத்து துதி செய்து சூரியகிரகணத்திலும் இவ்வாறே முடித்து எதிரியிடம்போக உன் வசியமாவான்.

1820 பொம்மை வேடிக்கை

ஒரு பொம்மைசெய்து இதற்கு கண்களில் ரேடியம் மருந்தைப் பூசி காயவைத்து இருட்டு அரையில் கொண்டுபோய் காண்பிக்க இதன் கண் பிரகாசமாகத் தெரியும் பிறகு மறைத்தல் வேண்டும்.

1821 ஜாலக்காள் பூசைமந்திரம்

மஞ்சள் கிழங்கை கொண்டுவந்து இதனால் பெண்பாவையைப் போல் ஒரு உருவம் செய்து அதற்கு மையிட்டு, பொட்டிட்டு, துணி,

மணிகள் கட்டி ஆதிகொடிச்சமூலம் மேலே சுற்றி மானசபூசை செய்து பின்பு ஓம் சாகினி டாகினி ஜாலக்காள் தேவி ராமாவென்று இலட்ச முருசெபித்து தியானிக்க ஜாலக்காள் வசியமாகி சித்தியாகும். அப்போது தாங்கள் செய்யும் எவ்விதஜாலங்களும் பலவிதமாய் நடத்திவர யாவும் நடந்தேறிவரும்.

1822 பீங்கான் தட்டில் முத்துகள் உண்டாகும் ஜாலம்

சென்னையில் உள்ள அட்டீஷன் அண் கோவிற்குச் சென்று ஏதாகிலும் ஆர்டிஸ்டுகள் எழுதும் ஆயில் கலரில் ஒரு டியூப் கிரயம் கொடுத்து வாங்கிக்கொண்டு வந்து இரண்டு பிரஷ்களிலும் பூசிக்கொண்டு கிரோசின் எண்ணெயில் வைத்துத்தோய்த்து தோய்த்து எடுத்து திரும்பவும் ஒருபிரஷ் கீழாகவும் மற்றொரு பிரஷ் அடி பிரஷின்மீது படும்வண்ணம் எத்தாகத்தட்ட தட்ட தட்டில் முத்துகள் புதயல்புதயலாக வருவது விசித்திரமாக இருக்கும்.

1823 திருஷ்டிபோக்கும் வித்தை

ஒருவனுக்குத் திருஷ்டி அதிகமாக இருந்தால் சாயந்திரவேளையில் கட்டி படிகாரத்துண்டை சுற்றி அடுப்பில்போட்டு காலையில் எடுக்க திருஷ்டியும் கழியும் யாரால் திருஷ்டியுண்டாயிற்றோ அவன் உருவமும் மேற்படி துண்டில் தென்படும்.

1824 தாதுபுஷ்டி லேகியம் செய்யும் வித்தை

சிறந்த பூமிச்சர்க்கரைக்கிழங்குடன் சந்தனமும், தேற்றான்கொட்டையும், பூனைக்கால் வித்தையும் முருங்கன்வேர் பட்டையையும் வகைக்கு விராகனிடையாக எடுத்துச் சேர்த்து அரைத்து தேங்காய்ப்பாலில் கரைத்து இத்துடன் சீனிசர்க்கரையையும் சேர்த்து 12-நாள்சாப்பிட்டு வர தாதுபுஷ்டி உண்டாகும்.

1825 சிநேகத்தை பிரியவைக்கும் வித்தை

செத்தஆட்டின் நாக்குடன், முத்தின ஆலன்பட்டையைக் கூட்டி, கண்ணின் ஜலத்தில் அரைத்து, குளிகையுடன் பதனம்செய்து வைத்துக்கொண்டு, வேண்டியசமயத்தில், பண்டத்துடன் கலந்து கொடுக்க பிரிந்துபோவார்கள்.

1826 பல்லியினுல் உண்டாகும் அக்கியைப் போக்கடிக்கும் வித்தை

ஊமத்தன் இலையை அரைத்து எருமைவெண்ணெயிற் குழைத்து, அக்கியின்மேல் பூசிவர ஆறும்.

1827 தலைப்பேனை தலையைவிட்டு உதிரவைக்கும் வித்தை

குப்பைமேனிச்சாற்றினாலாவது, இரத்தை கருஊமத்திலைச்சாற்றினாலாவது கொஞ்சம் பழந்துணியிலாவது நூலினாலாவது தடவி நிழலில் உலர்த்தி சுற்றிவைக்க மூன்று சாமத்திற்குள் பேனெல்லாம் உதிர்ந்துவிடும்.

1828 நெஞ்சித்தமேனக்கை போக்கடிக்கும் வித்தை

காற்படி ஆவின்பாலில், முசுமுசுக்கைவேர் சாறுபிழிந்து விராகனிடை 1-ம், முக்காவளைவேர் - $\frac{1}{4}$ - விராகனிடையும், தட்டிப்போட்டு, காய்ச்சி வைத்துக்கொண்டு கொடுக்க நிவர்த்தியாகும்.

1829 மாதுளம்பழச் சர்ப்பத்து செய்யும் வித்தை

$1\frac{1}{2}$-பங்கு சீனியும், 1-பங்கு மாதுளம்பழம் ரசமும் சேர்த்துக்காய்ச்சி பாகுசெய்து சீசாவிலடைத்துக்கொண்டு 1-க்கு 2-பங்குஜலம் கலந்து கொடுக்க ஆனந்தமாக இருக்கும்.

1830 எலுமிச்சம்பழ சர்ப்பத்து

எலுமிச்சன்பழம் சாறு கால்படியில் $\frac{1}{2}$-படி சீனிசர்க்கரைசேர்த்து பாகுபதத்தில் காய்ச்சி பதனம் செய்துக்கொண்டு முன்மாதிரி செய்ய வேண்டும்.

1831 விக்கலைப் போக்கடிக்கும் ஜாலம்

ஒரு விளாம்பழத்தில் வறுத்ததிப்பிலியை பொடிசெய்துக்கொண்டும், அமுக்கனுவேர் சுட்டக்கரியையும், வகைக்கு கால் கச்சை அளவு எடுத்துப் பாலைவிட்டு அரைத்து தேனில் குழைத்துக்கொடுக்க விக்கல் தீர்ந்துவிடும்.

1832 இடுப்புவலியைத் தீர்க்கும் ஜாலம்

நல்லெண்ணையும், விழிச்சாறும் ஒரே அளவாக மத்தித்து 3-வேளை கொடுக்க தீரும்.

1833 நீரடைப்பு போக்கும் வித்தை

அகண்டஇலையில் பசுமோர்விட்டரைத்து ஊரவைத்து பிழிந்து கொடுக்கத்தீரும்.

1834 ஈளை இருமலை போக்கும் வித்தை

ஆடாதோடைஇலையை இடித்து பிட்டவித்து அரைக்கால்படி சாற்றுடன் திரிகடுகு, திப்பிலிபொடி தூவி உட்கொள்ள தீரும்.

1835 பித்தத்தை போக்கும் வித்தை

எலுமிச்சங்கனிரசத்தில் சீனியை கலந்து கொடுக்க நிவர்த்தியாகும்.

1836 வாயுசூலை போக்கும் வித்தை

திரிகடுகு, இந்துப்பு, ஓமம் இவைகள் வெதுப்பி பொடித்து திரிகடிப்பிரமாணம் தேனிற்கொள்ள சௌஸ்தமாகும்.

1837 சுளுக்கு காய்ச்சலை போக்கும் வித்தை

கொத்தமல்லி, திரிகடுகு, பேராமுட்டி வகைக்கு கச்சைக்காய் 3-விதம் இடித்து பழஜலத்தில் கால்படியாக வற்றவிட்டு 3-தரம்கொடுக்க நீங்கும்.

1838 முகவசிய ஜாலம்

வெள்ளெருக்கு, ஆலவிழுது, வேலன் இக்குச்சிகளிலொன்றினால் தந்தசுத்திசெய்து வென்னீரில் முகங்கழுவி காலையில் ஒருவரிடம் போக நன்மையுண்டாகும்.

1839 கண்வலிதீரும் வித்தை

கரியுப்பைப்பொடித்து பொட்டளம்கட்டி சீராகார நீரில் ஊரவைத்து இரண்டு நாழிகைக்கு ஒருவிசை நேத்திரத்திற்பிழிய கண்வலி நீங்கும்.

1840 சாம்பல்தின்ற குழந்தைகளின் ரோகத்தை நீக்கும் ஜாலம்

கீழ்க்காய்நெல்லிவேர் 1-விராகனிடையும், 2-விராகனிடை கடுக்காய்த்தோலும், 3-விராகனிடை மிளகும், புளித்த மோரிலரைத்து கலக்கி சங்களவு கொடுக்க நிவர்த்தியாகும்.

1841 வண்டுகேடி நிவர்த்தி ஜாலம்

சம்பிளிசுட்ட சாம்பலையும், புகையூரலையும் வேப்பெண்ணெயில் குழைத்து அபானத்திற்வைக்க தீரும்.

1842 உண்ணுக்கு வுற்பத்தி வித்தை

கற்சுண்ணம், நவாச்சாரம் இரண்டும் எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்து உண்ணுக்கில்தடவ நீங்கும்.

1843 காதில் ஈ புகுதலால் உண்டாகும் நோய்க்கு நிவர்த்தி

குப்பைமேனியிலை சிறுநீர்விட்டு காதிற்பிழிய ஈயும் செத்து கீழே விழுந்து உள்நோயும் நிவர்த்தியாகும்.

1844 காதுநோய் தீர்க்கும் ஜாலம்

சதுரக்கள்ளியை அனலில் வெதுப்பி சாறுபிழிந்து காதிலடைக்க காதுநோய் தீரும்.

1845 அமரத்தை நிவர்த்திக்கும் வித்தை

கடுக்காயைத்தட்டி துணியில் முடிந்து ஆமணக்கெண்ணெயுடன் போட்டு, சூரியபுடம் வைத்து கண்ணில்பிழிய நிவர்த்தியாகும்.

1846 தண்ணீரில் நெருப்பு நீந்தும் ஜாலம்

சோடியம் துண்டு ஒன்றை ஒருதொட்டி ஜலத்தில் போட நெருப்பு எரிவதுபோல் எரிந்துக்கொண்டு ஓடும் இது விசித்திரமானது.

1847 நீல கடிதாசியை சிகப்பாக செய்யும் வித்தை

நீல லிக்மக் கடிதாசியை சிறிதளவு காஷ்டிக்சோடா கலந்த நீரில் தோய்த்தெடுத்துக் காட்ட சிகப்பாக இருக்கும்.

1848 முன்மாதிரியாக்கும் வித்தை

சிகப்பாகமாறிய கடிதத்தை செல்பியூரிக் ஆஸிட் அல்லது மருடிக் ஆஸிட் சிறிதளவு கலந்த ஜலத்தில் தோய்த்துக்காட்ட முன்காட்டிய நீலமாக மாறும்.

1849 நெருப்பின்றி ஜலத்தை கோதிக்கவைக்கும் ஜாலம்

கிளாஸ் பிளாஸ்க்கில் பாதிக்கு குறைவாக ஜலம்வைத்து நன்றுக கொதிக்கும் சமயத்தில் கார்க்கிட்டுமூடி தலைகீழாகக் கவிழ்த்து அதின்மீது குளிர்ந்த ஜலத்தைவிட கிளாஸ் பிளாஸ்க்கில் ஜலம் கொதிக்கும் ஆனல் கிளாஸ் பிளாஸ்க்கில் காயவைக்கும் மாதிரியை முன்னதாக செய்துக்கொள்ளவேண்டும்.

1850 பச்சை ஜலத்தில் வெண்ணை எடுக்கும் வித்தை

மிர்தார்சிங்கைக் கொண்டுவந்து ஜலத்திற்கலக்கி சபையில் கொண்டு வந்து கையினுல் சிலுப்ப வெண்ணெய் உண்டாகும்.

1851 திடீலென சபையோரை இரும்ப வைக்கும் வித்தை

சாதாரண உப்பை ஒரு கிளாஸ் பாத்திரத்தில் சிறிதளவு ஆஸிட்டை அதன்மீது தெளிக்க சபையோர் யாவரும் இரும்பவும், தும்பவும், ஆரம்பிப்பார்கள்.

1852 செம்பை வெள்ளியாக்கும் வித்தை

செம்பை புளியிட்டு நன்றுக அழுக்கறத் தேய்த்து எடுத்துக் கொண்டு, ரெட்ஆக்சைட் மெர்க்குரியை திரும்ப இதன்மீது தேய்க்க வெள்ளியாக மாறும்.

1853 இங்கியால் எழுதும் எழுத்துக்கள் மறையும் வித்தை

ஒருகிளாஸ் பாத்திரத்தில் சாதாரண உப்பைப்போட்டு அதன் மீது செல்பியூரிக் ஆசிட்டை வார்த்து இங்கியால் எழுதி காகிதத்தை தண்ணீரில் நனைத்து அந்த பாத்திரத்தின்மீது மூடியமாத்திரத்தில் எழுத்துக்கள் மறைந்து வெரும் காகிதமாகும்.

1854 கிளாஸில் பொம்மை செதுக்கும் ஜாலம்

கிளாஸ் முழுவதும் மெழுகுதடவி வேண்டிய உருவத்தை மெழு கின்மீது எழுதி செதுக்கி (ஐடோர் ஜன்பிளோரைட்) என்பதை ஒரு பாத்திரத்தில்வைத்து அதன்பேரில் மேற்படி கிளாஸை மூடிய 5-நிமி ஷத்திற்கெல்லாம் மேற்படி உருவம் மேற்படி கிளாஸின்மீது செதுக் கியதுபோல் நன்ருக பதிந்துவிடும்.

1855 கை முதலிய இடங்களில் திமிரை போக்கடிக்கும் ஜாலம்

திமிர் உள்ள இடத்தில் வைக்கோலைச் சிறிதளவு கிள்ளி மெதுவா கக் கீறிக்கொண்டிருக்க திமிர் நீங்கும்.

1856 சுலபமாக வெள்ளிமுலான் பூசும் வித்தை

காஸ்டிக் அமோனியா 5-பாகமும், சோடியம் ஐபோசெல்பேட் 20-பாகமும் அமோனியம் 10-பாகமும் ஜலம் 200-பாகமுமாகச் சேர் த்து எந்த வஸ்துவின்மீது முலான் பூசவேண்டுமோ அவ்வஸ்துவை நன்ருகத்தேய்த்து பிறகுஅதில் 10-நிமிஷம் ஊரவைத்து காலதாமதம் செய்து சபையோருக்கு எடுத்துக்காட்ட வெள்ளிமுலான் பூசினது போல் இருக்கும்.

1857 நீலமான ட்ராயிங்பேப்பர் செய்யும் வித்தை

பெரிக் அமோனியம் சிட்ரேட் 6-பாகமும் டாடாரிக் ஆசிட் 4-பா கமும், கோந்து 4-பாகமுமாக எடுத்து 40-பாகம் ஜலத்தில் கலந்து, தெளிந்தவுடன் 3-பாகம் அமோனியா, 5-பாகம் பொடாசின் பெரசி ஊட், 20-பாகம் ஜலமுமாக எடுத்துக் கலந்து முன்சொன்ன ஜலத்து டன்விட்டு $\frac{1}{2}$-மணிநேரம் இருட்டறையில் வைத்தபின்னர் ஒரு பிரஷால் சாதாரண வெள்ளைக்காகிதத்தில் தடவி முன்மாதிரியான இருட்டறையி லேயே வைத்திருந்து பிறகு எடுத்து வெய்யலில் சற்று காண்பித்து ஜலத்தில் கழுவ நீலநிறமாக மாறும்.

1858 மஞ்சள் மெழுகை நல்லமெழுக்காக ஆக்கும் வித்தை

தேன்மெழுக்கை ஜலம் சேர்க்காத செல்பியூரிக் ஆஸிட்டுடன் கல ந்து நன்ருகக்காய்ச்சி கிளறிக்கொண்டேயிருந்தால் அரைமணி நேரத்

திற்கெல்லாம் ஆரவைக்கவும். பிறகு நன்றாக ஆறினவுடன் திரும்ப வெருஞ்ஜலத்துடன் சேர்த்துக்காய்ச்சவும். உடனே மெழுக்கு வெண் மைநிறமாகி மேலேமிதக்கும். இதை எடுத்து பச்சைஜலத்தில் சுத்தி செய்துக்கொள்ளவும்.

1859 கேடியாரங்களுக்குப் போடும் எண்ணை செய்யும் வித்தை

துத்திகைத்துண்டு சிறிதளவும் ஈயத்துண்டுகள் சிறிதளவுமாக எடுத்து ஆலிவ் ஆயில் என்னும் எண்ணெயில் ஊரவைத்து மேற்படி எண்ணை சுத்தமானவுடன் தனியாக வேறொருபுட்டியில் பதனம்செய்து வைத்துக்கொள்ளவும். இது வெகு உபயோகமானது.

1860 பௌண்டன்பேனு இங்கி செய்யும் வித்தை

ஒரு அவுன்ஸ் பர்ஷியன் புளுவை $1\frac{1}{2}$-அவுன்ஸ் ஐட்ரோகுளோ ரிக் ஆசிட்டுடன் நன்றாகக்கலந்து 2-நாள் வைத்து எடுத்து வேண்டிய ஜலத்துடன் கலந்து பேனுக்களுக்கு உபயோகப்படுத்தும்படிச் செய் யலாம்.

1861 கிழிந்த ரப்பர்களை ஒட்டவைக்கும் ஜாலம்

நீ சபைக்கு போகுமுன்னர் நன்றாக உருகவைத்த வஜ்ஜிரத்தில் ஒருபாகம் வென்னிஸ்டார்பன்டைனை விட்டு நன்றாகக்கலக்கி ஒரு புட்டி யில் பதனம் செய்துக்கொண்டு, செல்யூஷனாலும் ஒட்டமுடியாத ரப்பர் களை இதனால் ஒட்டவைத்து கௌரவப்படலாம்.

1862 காகித பஞ்சு செய்யும் ஜாலம்

கந்தல் காகிதத்தை நன்றாக ஜலத்தில் ஊரவைத்து சிங்குளோ சைடை போட்டரைத்து கொஞ்சம் உப்புடன் சேர்த்து ஆல்க்காலில் ஊரவைத்து சற்றுபொறுத்து கூர்மையான ஊசிகளால் பதியப்பெற்ற பிரசில்வைத்து அழுத்தி எடுக்க கடல்பஞ்சாகமாறும். ஜலத்தில் கரை யவும் கரையாது. கெடவும் கெடாது.

1863 பவழம் செய்யும் விதம்

சிறுசிறு ஒரேஅளவுள்ள மாசிக்காய்களை பொறுக்கி, இரண்டுபக் கத்து நுனிகளைசீவி, நடுவில் சந்துகுத்தி கம்பியில் கோர்த்துவிடவும். சீல்வைக்கும் சிகப்புஅரக்கை நன்றாகக் கொதிக்கவைத்து மேற்படி கம் பியை தோய்த்து சுற்றிக்கொண்டேயிருந்தால் எல்லாப் பக்கங்களிலும் படியும். பிறகு எடுத்து மற்றொருகம்பியில் கோர்த்துப்பார்க்க நல்பவள மாதிரியாகவே இருக்கும்.

1864 ரசகுண்டுகள் செய்யும் விதம்

கிளாஸ்குண்டுகளை எடுத்து முதலில் நன்றாக சுத்திசெய்துக்கொள்ளவும். பிறகு 1-அவுன்ஸ் சில்வர்நைட்ரேட் என்பதை 3-அவுன்ஸ் ஜலத்துடன் கலந்துக்கொண்டு அமோனியாவை பொட்டு பொட்டாக விட ஒருவிதமான வண்டல்படியும். அதில் 5-அவுன்ஸ் (ஆல்காகாலே) விட்டு கொஞ்சநேரம் வைத்து வடிகட்டிக்கொள்ளவும். மற்றொருபுட்டியில் சுத்தம்செய்த சர்க்கரையை ஒருஅவுன்ஸ் ஜலத்தில் கரைத்துவைத்துக் கொள்ளவும். இவ்விரண்டையும் ஒன்றாகச்சேர்த்து கிளாஸ்குண்டில்விட்டு நன்றாகக்குலுக்க ரசகுண்டாகமாறும்.

1865 டிரேசிங்பேப்பர் செய்யும் ஜாலம்

டர்பன்டைன் எண்ணெ 2-பாகமும், பாதம்கொட்டை எண்ணெய் 2 - பாகமும் ஒன்றாகச் சேர்த்து நன்றாகக் குலுக்கிய பின்னர் அகலமுள்ள பாத்திரத்தில் கொட்டிக்கொண்டு காகிதத்தை தோய்த்துத் தோய்த்து ரவியில் காயவைக்கவேண்டும். அவ்விதமான காகிதம் அநேக காரியங்களுக்கு அதிமுக்கியமானது.

1866 பால் பொடி செய்யும் வித்தை

ஒரு டிராம் கார்பினேட்டை ஜலத்துடன் கலந்துக்கொண்ட பின்னர் $\frac{1}{2}$-படி பாலுடன் கலந்து 5-பலம் சர்க்கரையைப் போட்டு, சுத்தமான இரும்பு பானையில் வைத்து நன்றாகக்காய்ச்சிக் கொண்டேயிருக்க ஜலமெல்லாம் வற்றி பால் பொடிப்பொடியாக மாறும். இதை பால் அகப்படாத இடங்களில் ஒரு கரண்டியளவிற்கு ஆழாக்கு ஜலம் கலந்து உபயோகப்படுத்த உடம்பிற்கு ஆரோக்கியத்தை உண்டாக்கும்.

1867 மழை காலங்களில் தேங்காய் எண்ணெயை கட்டாதபடி செய்யும் வித்தை

கல்லுப்பு 2 அவுன்ஸ் பொடித்து 8 அவுன்ஸ் தேங்காய் எண்ணெயுடன் கலந்துக் குலுக்கி ஒரு புட்டியில் வைத்துக் கார்க்கிட எந்தக் காலத்திலும் கட்டாது.

1868 பூட்ஸ்களுக்கு பாலீஷ் கோடுக்கும் வித்தை

தேன்மெழுக்கு 3 அவுன்சும், பாம் ஆயில் சோப் அரிக்கால் அவுன்சும் எடுத்து இவ்விரண்டையும் உருக்கி பொட்டில் ஆஷ் 60-கிரைன் பிஸ்மார்க் பிரௌன் 120-கிரையினுமாகத் தண்ணீரில் கரைத்துக் கொண்டு இவ்விரண்டையும் ஒன்றாகச் சேர்த்துக்கொண்டு நன்றா

கக் காய்ச்சி கல்வத்திலிட்டாட்டி புட்டியில் பதனம் செய்துக் கொள்ள சிரேஷ்டமான பாலீஸாக உபயோகப்படும்.

1869 கோசுவை போக்கடிக்கும் வித்தை

லவுங்கப்பட்டைத் தைலம் 1-அவுன்சும், பட்செளலி தைலம் 1-அவுன்சும், சந்தனுதி தைலம் 4-அவுன்சுமாகவும், ஆல்கோ ஆல் 40-அவுன்சுமாகச் சேர்த்து புட்டியில் வைத்துக் கொண்டு ஒரு சிறி தளவு எடுத்து கையிலோ காலிலோ தடவிக் கொண்டு படுக்க கொசு நமதிடம் நெருங்காது.

1870 இரும்பு பாத்திரத்தின்மீது வெள்ளி கிலிட்டிடும் வித்தை

ஒரு இரும்பு பாத்திரத்தை அழுக்கறத் தேய்த்து சுத்தி செய்த பின்னர் நவாச்சாரத்தை பொடித்து ஜலத்துடன் கரைத்த நீரில் ஷை பாத்திரத்தை ½ மணி நேரம் ஊரவைத்து, திரும்ப எடுத்து நன்ருக தேய்த்து அலம்பவேண்டும். பிறகு துத்திஞகத்து தண்ணீர் பதமாக காய்ச்சிய பாத்திரத்தில் தோய்த்த மாத்திரத்தில் வெள்ளி கிலிட்டிட்டதுபோல் இருக்கும்.

1871 மாங்கோட்டையிலிருந்து கறுப்பு வருணம் செய்யும் வித்தை

மாங்கொட்டையின் உள்ளிருக்கும் பருப்பை எடுத்து சுத்த மான மெல்லிய பொடி செய்து வஸ்திரகாய பதத்தில் ஜலத்திற் போட்டு ஒரு இரும்பால் ½ மணி நேரம் நன்ருகக் கலக்கவும். கொஞ்சம் இரும்புப் பொடியையும் சேர்த்து ரவியில் வைத்து அடிக்கடி இரும்புத் துண்டினுல் கலக்கி இரண்டு நாள் சழித்த பிறகு இரும்புத் துண்டுகளை எடுத்துப் போட்டு வடிகட்டி, திரும்ப ரவியில் வைத்து ஜல மெல்லாம் வற்றச்செய்து வழுமண பொடி செய்து எடுத்துக் கொள்ளவும். இது வெகு நேர்த்தியானதாக இருக்கும்.

1872 மயிர் சிரைக்கும் வித்தை

பேரியம் செல்பைட் 2 தோலாவும், கோதுமை மாவு 2 தோலா வும், தேங்காய் எண்ணெயில் கலந்து கொஞ்சம் வாசனை திரவியம் சேர்த்து கட்டி வைத்துக்கொண்டால் வேண்டிய சமையத்தில் கொஞ் சம் ஜலத்துடன் எந்த இடத்தில் தேய்க்கினும் க்ஷவரம் செய்ததாக இருக்கும்.

1873 கிரோசின் நாற்றம் போகச் செய்யும் வித்தை

பொடாசின் பாமானினேட் 1-அவுன்ஸ், செல்பியூரிக் ஆசிட் 1-அவுன்சுமாகக் கலந்து 4-அவுன்ஸ் ஜலத்துடன் சேர்த்து 1-புட்டி கிரோசினுடன் கொட்டி நன்ருகக் குலுக்கி 2-நாள் வைத்திருந்து பிறகு ஜலத்தை இருத்துக் காண்பிக்க நாற்றமானது போய் சுத்த ஜலமாக மாறும்.

1874 விடாதகறைகளை அகல வைக்கும் வித்தை

கறைபட்ட இடத்தை ஜலத்தில் தோய்த்துப் பிழிந்து, வத்திக் குச்சியைக்கிழித்து இதனிடமாக வரும் புகையை துணிபற்ற வண்ண மாக புகையைக் காட்டி, பிறகு வெருஞ் ஜலத்தில் கசக்கிப் பிழிய கறைவிட்டுப் போகும்.

1875 வெள்ளை இங்கி செய்யும் ஜாலம்

(சிங் ஓயிட்) ஈயவெள்ளை 2-டிராமும், வெள்ளை பிரதி பிடேட் 5-டிருமும், அக்கேஷியா நியுசிலேஜ் 1-டிருமுமாகச் சேர்த்து 6-டிரும் ஜலத்துடன் நன்ருக இழைத்து புட்டியில் பதனம் செய்துக்கொண்டு எழுத வெள்ளை இங்கி ஆகும்.

1876 உடைந்த கிளாஸை ஒட்டவைக்கும் ஜாலம்

வஜ்ஜிரம் 4-பாகமும், டர்பன்டைன் 1-பாகமும் சேர்ப்பதற்கு முந்தி வஜ்ஜிரத்தை நன்ருகக் காய்ச்சிக்கொள்ளவேண்டும். இம்மாதிரி ஒன்ருகச்சேர்த்ததை எடுத்து உடைந்த கண்ணுடியில் வைத்து ஒட்ட ஒட்டும்.

1877 பொம்மைத்தலை ஜாலம்

ஒரு அழகுள்ள பொம்மைத்தலை ஒன்று செய்து உயர்ந்த வர்ணங் கள் பூசி நிழலில்வைத்து இதற்கு நேராக சூரிய கிரஹணம் படும்படி ஒரு கண்ணுடியைக் காண்பித்துப்பார்த்தால் உயிருள்ளதைப்போல சிரித்தவண்ணமாக இருக்கும் அதிவிச்சித்திரமானது.

1878 இருட்டறை பற்றி எரியும் வித்தை

குங்கிலியத்தையும் கெந்தகத்தையும் ஒன்ருய்க்குழைத்து அதை இரு ட்டறையில் வாசற்படியின் எதிர் சுவரில் வேண்டிய விசித்திரபொம்மை களை எழுதி ஒருவன் உள்ளிருந்தே சபையோருக்கு கதவைத்திறந்து இருட்டாய்க்காண்பித்து மூடி உடனே வத்திக்குச்சியை கொளுத்தி மறுபடி பலருக்குக் திறந்துகாட்ட உள்ளே எழுதிவைத்திருக்கும் பிம் பங்கள் பற்றி எரிவதைப்போலிருக்கும்.

1879 சடைப்பொம்மைகள் கூத்தாடும் ஜாலம்

பாதரசம்பூசிய கண்ணாடியை பலவிதமாக உடைத்து இந்தக் கண்ணாடியில் ஒருவர் முகம் பார்க்கச்செய்ய சின்னாபின்னமாகத் தெரியும்.

1880 இதுவும் வேறு

ஷாப்பிற்குச்சென்று ஒரு கண்ணாடியில் ஸ்பெஷலாக ரசத்தை அளவு கடந்து மேடும்பள்ளமாக பூசி பிரேமிட்டு (Frame) சபையோர் முன்னிலையில் மேற்படி கண்ணாடியைக்கொடுத்து முகம் பார்க்கச்செய்ய விகாரமாய்த்தோன்றும் உடனே வேறு ஒரு கண்ணாடியைக்கொடுத்து முகம் பார்க்கச்செய்ய முகம் நன்றாகத்தெரியும். இதைப் பார்ப்பவர்கள் உன்னை மஹா மந்திரவாதி என்று சொல்லுவார்கள்.

1881 புலவர்களை ஏமாற்றும் ஜாலம்

ஒருவன் மற்றொருவனைப்பார்த்து இது என்னமரம்? என்று கேட்க அவன் மா மரம் என்பான் (மா என்றால் வீசம்) இது மா மர மானால் இதன் முழு மரத்தை எப்பொழுது காண்பாய் என்றான்.

1882

ஒரு வித்துவான் தனது வேலைக்காரனை கூப்பிட்டுக் கடைக்குப் போய் மேகம் பசுரத்னம் வாங்கிக்கொண்டு வாவென்றார். அவன் அப் படியேகேட்கக் கடைக்காரனுஞ் சந்தேமின்றி மேகம்-கார், பசு-ஆ, ரத் னம்-மணி யெனப்பரியாயப் பெயர்கொண்டு சேர்த்து உச்சரித்துக் காரா மணியெனக் கொடுத்தனுப்பினான்.

1883

ஒரு வைத்தியன் தன் குமாரனைக் கடைக்குப்போய்த் (தவ்வைக் கோலம்) வாங்கிவாவென்று ஓராணை கொடுத்தனுப்பினான். அவன் அப் படியே கடைக்காரனைக்கேட்டு வாங்கிவந்தான். அஃது முன் சொன் னதுபோலவே பரியாயப் பெயர்களைக்கொண்டு தவ்வை-மூதேவி, கோலம்-பன்றி, என்பதில் நடுவெழுத்துதேன் என்று கொடுத்தான்.

1884

ஓர்புலவி, தனது மாணவியையனுப்பி கடைக்காரனைப் புகழ் மனை யென்னும் வஸ்துவை அரையணாவுக்கு கொடென்று கேட்டு வாங்கி வாவென்றாள். அவள் அங்ஙனமே வாங்கிவந்தனள் புகழ்-சீர்மனை-அகம், சீர்+அகம்-சீரகம்.

1885

ஒருவன் மற்றொருவனை நோக்கிப் பிச்சைக்காரன் ஊதுவது என்னவென்று கேட்க அவன் (பரிமளம் பகீரதி முதனிலை) என்றான் பரிமளம்-வாசனை, பகீரதி-கங்கை, முதனிலை-பகுதி சங்கு என்று நடு வெழுத்தாலறியவும்.

1886

ஒருவன் மற்றொருவனைப் பார்த்து நீ எந்த ஊருக்குப் போகிறா யென்று கேட்க அவன் யான் போகும் ஊரின் பெயர் (பேர் மணந்துரிதம்) என்றான். பேர்-நாமம், மணம்-வதுவை, துரிதம்-விரைவு நடுவெழுத்துக்களைச் சேர்க்க மதுரையெனவரும்.

1887

45-ல் 45 போனால் என்ன வென்று ஒருவனைக்கேட்டால் அவன் விழிப்பான். அதாவது 45-ல் 45 போனால் 45 என்றே சொல்ல வேண்டும். அதாவது:—

987654321	—45	
123456789	—45	இவ்விதம்
864197532	—45	

1888

ஒருவரை ஆயிர முறம் ஒன்றரையணாவானால், இரண்டு முறம் என்ன விலை என்று கேட்க அவர் ஆயிர முறம் என்று கருதி விழிப் பார். ஒரு வஸ்துவை போட்டு ஆயிரமுறம் என்று எண்ணவே மாட் டார்கள்.

1889

ஒருவன் தன் வீட்டிற்குவந்த விருந்தாளியை தையல் இலையில் சாப்பிடுவாயா? என்றான் அதற்கு அவ்விருந்தாளி தையல் என் இலை யில் சாப்பிடுவாளே யன்றி அவள் இலையில் யான் சாப்பிடேன் என் றான். (தையல்-பெண், இங்கு மனைவியைக் குறிக்கின்றது.)

1890

ஒருவன் பிறனைப்பார்த்து ஏதாவது, ஒருபுத்தகம்கொடு, படித்து விட்டுதருகிறேன் என்றான். அதற்கு அவன் உன்னிடம் புத்தகம் இருக்கிறதா என்று கேட்க என்னிடம் புத்தகமிருந்தால் உன்னை ஏன்

கேட்கிறேன் என்று கோபித்து பதிலளித்தான். இதற்கு மற்றவன் உனக்கு புத்தியில்லையாயின் என் புத்தகம் பயனைத்தருது. போ என்று பங்கப்படுத்தினன். (புத்து-அகம்-புதிய அகம், அகம்-அறிவு-புதிய அறிவு.)

1891

ஒருதாசி ஒருபுலவரைப் பங்கப்படுத்தக்கருதி இவ்வூர் வேளாளப் பெண்களுக்கு யான் அடிமை என்று எழுதிக் கொடுத்தீரானால் நீர் என்னோடு கூடிமகிழலாம். இன்றேல் முடியா. என அப்புலவர் "வேளாளப்பெண்களுக்கு யான் அடிமை'' என்று எழுதிக்கொடுத்தார். புலவர் கருத்து:—வேள்-முருகக்கடவுள், ஆள்-மனைவிகளாய் ஆள்கின்ற, அம்-அழகிய பெண்களுக்கு வள்ளி, தெய்வயானை என்னுமிருவர்களுக்கும் யான் அடிமை நான் அடிமை என்பதே யாகும்.

1892 சர்க்கரையை லேகியமாக்கும் வித்தை

நீ கடைக்குச் சென்று ஆளிவிதையைக் கொண்டுவந்து இதை இடித்துப் பொடித்து வஸ்திரகாயம் செய்து 10-பங்கு சர்க்கரையில் 1-பங்காகக்கலந்து இதில் அளவுடன் ஜலம் ஊற்றி சற்று பொறுத்து பார்க்க லேகியம் போலாகும்.

1893 புங்கன் எண்ணையை நல்லெண்ணெய் ஆக்கும் வித்தை

இப்புவியில் புங்கன்எண்ணெய் மிகக்கசப்பாகையால், கசப்புமாறி நல்லெண்ணெயாக மாறவைப்பதற்கு மேற்படி எண்ணெயைக்காய்ச்சி இதிற் கொஞ்சம் அரைத்த குன்றுமணி இலையில் சிறிதளவு போட்டு எடுக்க நன்ருக மாறும்.

1894 ஜலத்தை விளக்கெண்ணெயைப்போலாக்கும் ஜாலம்

ஜாலமாடும் இடத்திற்குப் போவதற்கு முந்தி ஆனைநெறிஞ்சி செடியின் இலைபறித்து உலர்த்தி தூளாக்கி வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு கொஞ்சம் ஜலத்தில் ஒரு பிடி மேற்படி தூளைப் போட்டு துழாவி சற்று பொறுத்துக்காட்ட வழவழப்பாக இருக்கும்.

1895 விசித்திரக்கோடிதீப ஜாலம்

வெள்ளை அபிரேக்கை சிறு சிறு துண்டுகளாகக் கத்தரித்துக் கொண்டு, சுவர் முள்ளங்கியின் சாறு பிழிந்து மேற்படி துண்டுகளைப் போட்டு ஓர் இரவு முழுதும் ஊரவைத்து காலையில் ஜலத்தால் 3-தரம் அலம்பி, மறுபடியும் முன் சாற்றைவிட்டுப் பிசைந்து ஜலத்தால் அலம்பி எடுக்க மிக வெளுத்து சுத்தமாகும் தருணத்தில்,

இதைப்பொடித்து சுண்ணாம்பு நீருடன் கலந்து வெள்ளையடிக்கும் மாதிரி, வீடு, கூடம் முதலிய இடங்களுக்குப்பூசி, உலர்ந்தபின், மிக பிரகாசமான வால்ஷேட் முதலிய உயர்ந்த கண்ணாடி விளக்குகளை நடுவில் மாட்டி பார்க்க எந்தபுறம் பார்க்கினும் கோடானுகோடி விளக்காகத்தெரியும்.

1896 விஷக்கடியை நிவர்த்திக்கும் ஜாலம்

வெண்மையான கம்பளிச் சகலாத்தைச் சிறிது கத்தரித்து பஞ்சாக்கி காசெடை எடுத்து நல்ல வெல்லத்தினுள் வைத்து மறைத்து (நசி மசி) என்று 108-உரு கொடுத்து கடிபட்டவன் வாயிற்போட்டு, மற்ற வெல்லத்தை விநியோகம் செய்யவும். அது ஒரே வேளையில் தீரும்.

1897 கக்குவான் வராதிருக்க ஜாலம்

கணபதிக்குப் பூசைசெய்து புங்கன்வித்தை உரித்து விடாமல் கொட்டையாகவே எடுத்து மந்திரத்தால் 108-உருகொடுத்து அண்ணாக்கயற்றில் கட்டியனுப்ப நோய் நெருங்காது.

1898 காகிதம் அறுக்கும் கத்தியை துவையலிடும் ஜாலம்

மோரிற்கொஞ்சம் வாழைச்சரகைப் பொடித்துக் கலக்கி இதில் டெம்பர்போட வெகு நன்றாக இருக்கும்.

1899 மரம் பலிதமாகும் ஜாலம்

பாக்குச்செடியில் இலைகளை மரங்களின் வேர்களில்பட புதைக்க கொஞ்சநாளைக்கெல்லாம் மரம் நன்றாகப் பலிதமாகும்.

1900 மலட்டு நிவர்த்தி ஜாலம்

9 9 8 1 அறைகளில் 9-அக்ஷரங்கள் சேர்ந்துவரும் பதங்களை எழுதி அதை பூசித்து அர்ச்சனைசெய்து மலடிகளுக்குக் குளிசமாடி கட்ட அவ்வகத்தாளிடம் கர்ப்பந்தரித்து நல்ல ரூபலாவணியமுள்ள குழந்தையாக பிரசவமாகும்.

1901 கிராக்கி தெளியவைக்கும் ஜாலம்

5 5 25 அறைகளில் 7-அக்ஷரங்கள் கொண்டுவரும் பதங்களை அமைத்து முருகக்கடவுளுக்கு உபவாசமிருந்து மூலமந்திரத்துடன் உருகொடுத்து மேற்படியான் கரத்தில்கட்ட தெளிவுண்டாகும்.

1902 அத்திக்காய் துவர்ப்புமாற ஜாலம்

வெந்நீரில் அரிசிமாவுகொஞ்சம் சுண்ணும்பு நீருடன் கலந்து அத்திக்காய்களை அதனுட்போட்டு வேகவைத்து எடுத்துக்கொண்டு நல்ல நீரில் அலம்பினமாத்திரத்தில் அக்காயின் துவர்ப்புநீங்கும்.

1903 சுளுக்கு பிடித்தவர்கள் பாதையை தீர்க்கும் ஜாலம்

ஒரு அம்மிக்கல்லின் குழவியை எடுத்து சுளுக்கு பிடித்தவனைச் சுற்றி ஒருபோணியில் ஜலம் நிரம்பவைத்து இதில் மேற்படி கல்லை குத்தாச நட்டுவிட நின்றுவிடும். சுளுக்கு விட்டவுடன் மேற்படி கல் கீழேவிழுந்துவிடும்.

1904 மற்றேரு வித்தை

சுளுக்கு பிடித்தவன் சுளுக்கில் ஒரு உலக்கையை எடுத்துநட்டு விட்டுவிட உலக்கை நிற்கும். உடனே சற்று நேரத்திற்கெல்லாம் நோய் தீர்ந்து உலக்கை கீழே விழுந்துவிடும்.

1905 பாலை உடனே தயிராக்கும் ஜாலம்

படிபாலைக்காய்ச்சி, 2-3-டிராப் கடல்புளிப்பு குத்த கொஞ்சநேரத்திற் கெல்லாம் தோய்ந்து போகும்.

1906 சாராயம் மஞ்சள் நிறமாக மாறும் வித்தை

கொதித்து வெதவெதவென்றிருக்கும் சாராயத்தில் சால்ட் பௌடர் போட்டுக் கலக்கிக் காட்ட மஞ்சள் நிறமாக இருக்கும்.

1907 சாராயம் ஊதா நிறமாக மாறும் வித்தை

முறியேட் ஆப்பொட்டாஷ் போட்டுக் கலக்க ஊதா நிறமாக மாறும்.

1908 சாராயம் செங்கல் நிறமாக மாறும் வித்தை

ஜலம் கொஞ்சம் போட்டு சாராயத்தில் கலக்க செங்கல் நிறமாக மாறும்.

1909 சாராயம் சிகப்பு நிறமாக மாறும் வித்தை

ஸ்டிராண்டியா என்பதை சாராயத்தில் போட்டுக் கலக்க சிகப்பு நிறமாக மாறும்.

1910 சாராயம் இண்டியன் ரேட்டு நிறமாக மாறும் வித்தை

லித்தியாவை சாராயத்தில் கலக்கிக் காட்ட இண்டியன் ரெட்டாக இருக்கும்.

1911 சாராயம் சிறு பச்சை நிறமாக மாறும் வித்தை

பார்டியாவைப் போட்டுக் கலக்கி சாராயத்தைக் காட்ட சிறு பச்சை நிறமாக மாறியிருக்கும்.

1912 சாராயம் டார்க்கு பச்சை நிறமாக மாறும் வித்தை

கொஞ்யம் காப்பர் பௌடர் போட்டு சாராயத்தில் கலக்கிக் காட்ட டார்க்கு பச்சையாக மாறும்.

1913 சபையிலுள்ளோரை சிரிக்க வைக்கும் வித்தை

சபைக்குச் சென்று ஓ சபையோர்களே! நான் ஒரு ஜாலமாடப் போகின்றேன் பாருங்களென்று சொல்லியும் இம்மாதிரியான வித்தையை நீங்கள் எங்கும் பார்த்தும், கேட்டும், இருக்கவும் மாட்டீர்கள். ஆயினும் நான் செய்யப்போவதில் குற்றம் ஏற்படின் மன்னித்து ஆட்கொள்ளாது ஆசீர்வதிக்கவும் என்று வாக்குச் சாதுர்யமாக பலவாறாக வீண்காலம் செய்து இதோ பாருங்கள். நான் கிழக்குமுகமாக நின்று என் தலையை மாத்திரம் மேற்கு முகமாக திருப்புகிறேன் என்று சொல்லி ஒரு குதிகுதித்துக் காட்ட சிரிக்காதவருங்கூட உன் வாக்குச் சாதுர்யத்திற்காக கைகொட்டி நகைப்பார்கள்.

ந	ம	சி	வ	ய
ம	ம	ந	ம	சி
சி	ம	சி	ம	வ
வ	ந	வ	வ	ம
ய	ம	ய	ய	ய

1914 கூத்திகளை விலக்கும் ஜாலம்

இம்மாதிரி சக்கரமெழுதி உள்ளன்புடன் அசட்டைசெய்யாது பஞ்சலோகத்தால் தகட்டை அடித்து ஸ்தாபனம் செய்து கையில் கட்டிக்கொள்ள முருகக்கடவுள் ஜயமுண்டாக்குவார்.

1915 பூ விழுந்தவர்கள் கண்ணை பார்வை உண்டாக்கும் ஜாலம்

ஆதிவாரத்தன்று உபவாசமிருந்து சூரியனை நமஸ்காரம் செய்து ஒரு செப்புக்கிண்ணம்நிறைய நந்தியாவட்டம் புஷ்பச்சாறு பிழிந்து ஒருவரை கண்ணில் விடும்படி 4-5, ஞாயிறுகளில்செய்ய அவன் அனுக்கிரகத்தால் பூமறைந்து கண்தெரியும்.

1916 கிளுவைப் பட்சிகளைப் பிடிக்கும் ஜாலம்

ஒருநுழையும் வாயையுடைய பானைக்கு சுற்றிலும் அடுப்புகரியை அரைத்துப் பூசி தன்தலையில் கவிழ்த்துக்கொண்டும் கண்பார்வைக்கு சந்துகுத்திக்கொண்டும் கிளுவைகள் இருக்கும் ஜலத்தில் மெதுவாக இறங்கி பானை மிதக்கும்மாதிரியாய்ப் போய் ஒவ்வொன்றாக தலையைக் காட்டாது பிடித்துபிடித்து உன் அரையில்உள்ள பையில் போட்டுக் கொள்ளலாம்.

1917 பனிதாங்கி செடியின் லக்ஷணம்

மணற்பாங்குகளில் பனிதாங்கி மூலிகை யென்பது தனித்தனியாய் கல்லிழைப்புபோல் கம்மல்வடிவமாக இருப்பதில் ஒரு குறுத்துபூ நடுவேயிருக்கும் இதன்பக்கத்தில் சுற்றிலும் ஒரு ஜல்லடை அகலம் ஜலம் ஓதமாக இருக்கும் செடியோ காலணா அகலந்தானிருக்கும்.

1918 இதன் சக்தி

இந்தச்செடியை ஒன்றெடுத்து எவர்மேலேனும் வைக்க மயக்கமான சோகத்திற்கு ஆளாவார்.

1919 இதுவுமது

மேற்படி செடியைப்பிடுங்கி பாதரசம்விட்டு அரைத்தால் மெழுகுபதமாகிவிடும் அதை சாபநிவர்த்தித்து வைத்துக்கொண்டும் வேறே ஒரு இந்தச்செடியையே பிடுங்கியும் எடுத்துக்கொண்டுபோக நினைத்துப்போகும் காரியம் ஜெயமடையும்.

1920 பூச்சிக்கடிகளை போக்கும் ஜாலம்

ஞாயிற்றுக்கிழமைகளில் தாமரை நிறைந்துள்ள தடாகத்திற்கு சென்று சூரியநமஸ்காரம் செய்து தாமரைசெடிகளை அறுத்து நூலை எடுத்து திரித்து வீடுவந்து பூச்சிக்கடி உள்ளவர்களுக்கு அரைகளில் கட்டி உபவாசம் இருக்கும்படி 4-வாரம் செய்யவேண்டும். இவ்விதம் செய்வதால் எவ்விதகடியாக இருந்தாலும் நீங்கும்.

1921 காகித வாத்திய ஜாலம்

உன் வாயின்அருகில் ஒரு காகிதத்துண்டை வைத்து உன் இரு உதடுகளிலும் படும்வண்ணமாக உன் முழுசாமர்த்தியமாக ஏதாகிலும் பாட்டுகளை மெலிந்த குரலில் பாடுவதுபோல் பாடி ஊதினால் வாத்தியத்தில் உயர்தரமாக இருக்கும்.

1922 இதுவுமது பணஞ்சம்பாதிக்கும் வழி ஜாலம்

பாட்டுபாடியும் ரயிலில் இதுசமயம் பணம் அகப்படாததால் ஒருவன்மேல் சொன்னமாதிரி பழகிக்கொண்டு துணியைப்போர்த்தி தெரியாவண்ணம் மூடிக்கொண்டு பாடிவிட்டு துட்டுகேட்டால் அதிகமாக அகப்படும்.

1923 காற்றில்லாமல் காகிதம் கீழேவிழும் ஜாலம்

தலையில்இருக்கும் காகிதத்தை காற்றில்லாமலும் வேறெந்த கருவியில்லாமலும் பறந்து கீழே விழவைக்கும்மாதிரி செய்வதற்கு உன் வாயினண்டை ஒரு காகிதத்துண்டை மூக்கின் கீழ்முகமாக வைத்து

மூடி அழுத்தி தலையைநோக்கி ஊத உன்தலையில் உள்ள காகிதம் கீழே விழும்.

1924 கோருக்குக்குச்சியின் வேடிக்கை வித்தை

முழுதும் துவாரமுள்ள ஒரு அரைஜான் நிகளமுமான கொருக்கத்தட்டை உன்வாயில்வைத்து ஊதுவதற்குமுந்தி, எலந்தம்பழத்தின் உலர்ந்தகொட்டை ஒன்றை மறுதுவாரத்தின்மீது வைத்து வானத்தை அண்ணார்ந்தவண்ணமாக எத்தாகஊத மேற்படிகொட்டை மேலே எழும்பியும், கீழிறங்கியும், திரும்பவும் மேலும்கீழுமாக ஏறிஏறி இறங்கும் மேற்படி தட்டின்துவாரத்தைவிட கொட்டை சற்று பெரியதாகவே இருக்கவேண்டும். இதைப்பார்க்க வெகு விசித்திரமாக இருக்கும்.

1925 விளக்கின் தகடு சுற்றும் வித்தை

சாமந்தி வடிவமாக 8-அல்லது 10-இதழ்களுடன் கூடியமாதிரியாக தகரத்தில் கத்திரித்து ஒவ்வொரு இதழ்களையும் சற்று திருகலாக முறுக்கி, மையத்தில் ஊசி நிற்கும்படி பொத்தல்செய்து மற்றொரு தகரத்தில் கயிறுபருமனில் கத்தரித்து எரியும் விளக்கின் சிமினியின் நுனியில் தகடு, தகரத்தின் மூலமாக அரைஅங்குல உயரத்தில் பூமியில் கிடத்திவைக்கும் வண்ணம் பதிந்துவிட்டுவிட கிறுகிறுவென்று சுழன்றுக்கொண்டே இருக்கும்.

1926 தெருவில் வண்டி தானாக ஓடும் வித்தை

6-அங்குலம் அகலமும், 8-அங்குலம் நிகளமுமாக மூங்கிலில் இலேசான சிறுசிறு குச்சிகளால் தடுக்குபோல் கட்டி இதன்மீது இருபுறங்களிலும் மெல்லிய வெரும்காகிதத்தால் குச்சிகள் தெரியாவண்ணம் பதிந்து, இதில் மிஷன் நூல்சுற்றி வரும் சக்கரங்களால் 4-சக்கர வண்டியைப்போல் செய்து, இதன் மேல்புற மையத்தில் இரண்டு ஓரங்களிலும் 2-குச்சிகளைக்கட்டி இதில் தடுக்குபோல் மெல்லியகாகிதத்தை இருபுறங்களிலும் ஒட்டி காயவைத்து ஜனங்களின் எதிரில் சமமாக உள்ள ரோட்டில் காற்றுவரும் சமையத்தில் மந்திரம் உச்சரிக்குமாதிரி நடித்து வண்டியை கீழேவிட காற்றுள்ளபக்கம் வண்டி ஓடும். இதைப் பார்ப்பவர் ஆச்சரியப்படுவார்.

1927 கோவை இலையில் இங்கி செய்யும்வித்தை

கோவையிலையை இடித்துச் சாறுபிழிந்து இதில் மயில்துத்தம் சேர்த்து ஊரவைத்துக் காய்ச்சி இங்கியை பதனம்செய்துக்கொண்டால் சுத்தமான கறுப்பு இங்கியாக இருக்கும்.

பீதாம்பரஐயரால் உபதேசிக்கப்பட்ட
ஜாலமுறையாகக் கையாண்டுவந்த

வைத்திய முறைகள் - 73

1928 இரத்த சூலையைப்போக்கும் வித்தை

பேய்குமட்டிக்காய் 2-படி சாற்றில் வெள்ளாட்டுநீர் தூணியைச் சேர்த்து, கரியுப்பு, வெர்க்காரம், இந்துப்பு, வலையலுப்பு, பாறையுப்பு, வெடியுப்பு, சீனிக்காரம், நாயுருவியுப்பு, அமுரியுப்பு, நவாச்சாரம், எவாச்சாரம், வெண்காரம், அன்னபேதி வகைக்குப் பலம்-1, கடுக்காய்ப் பொடி, மிளகுப்பொடி வகைக்கு ½-படியுமாக ஒரு பாண்டத்திலிட்டு கிளறி மூடி, ஏழு சீலைமண்செய்து நாலுசாமம் சிறுதீயாய் எரித்துக் கருக்கின வாசங்கண்டவுடன் பானையை இறக்கி, கல்வத்திலிட்டுமெழுகு போலாக அரைத்து சுண்டைக்காயளவு உட்கொள்ளத்தீரும்.

1929

கர்ப்பகாலத்தில் துவாலை கண்டால் அதிமதுரம் மந்திஷ்டிக்கிழங்கு செங்கிழங்கு காட்டாத்திப்பூ வகைக்கு ஒருகாசெடை யரைத்துப் பாலிற் கலக்கி சர்க்கரைகலந்து மூன்றுநாள் உட்கொள்ள நிவர்த்தியாகும்.

இதுவுமது

பற்பாடகமும், நெல்லிச்சாம்பலும் அரைத்துப் பாலிற்குடிக்கத் தீரும் புளி நீக்கவும்.

இதுவுமது

நெய்தற்கிழங்கு அதிமதுரம், வெள்ளிலோத்திரம் சந்தன நன்னாரி வேர் சமனாக எடுத்தரைத்து, பச்சரிசி, செங்கழுநீர் கொடுக்கத்தீரும். இச்சாபத்தியம்.

1930 குழந்தைகளின் இளைப்பு இருமலுக்கு

இரண்டுதூதுளை, கண்டங்கத்திரி வகைக்கு ஒரு பிடியிலையும், திப்பிலி, வெள்ளைப்பூண்டு வகைக்கு ஒரு துட்டு எடையும், ஒருபடி ஜலத்தில் தட்டிப்போட்டு காய்ச்சி, 10-நாளைக்கு, அந்தி சந்திபொழுதில் கொடுக்கத்தீரும்.

இதுவுமது

கால்படி ஆடாதோடையிலை சுக்குதிப்பிலி வகைக்கு விராகனிடை அரைத்துக் கலக்கி முரித்துத் துட்டெடை தேனில் கொடுக்கத்தீரும்.

குழந்தைகளின் தாகத்துக்கு ஏலம், அதிமதுரம், பற்பாடகம், சீந்தில், அறுகுவேர், சந்தனம், வில்வப்பழம், விலாமிச்சு, வேப்பீர்க்கு இவைகளை சமனாய் நறுக்கி 2-படி ஜலத்தில்போட்டு, கால்படியாக வற்றவைத்து சிறியோருக்கும் பெரியோருக்கும் கொடுக்கத்தீரும்.

1931 வண்டுகேடிக்கு

கம்பளிசுட்ட சாம்பலையும் புரையூரலையும் வேப்பெண்ணெயும் குழைத்து அபானத்திற்கட்ட தீரும்.

1932 சாம்பல்மண் தின்றதற்கு

கீழாநெல்லிவேர் விராகனிடை 1-ம் கடுக்காய்த்தோல் விராகனெடை 2-ம், மிளகு விராகனிடை 2-ம்புளித்த மோரிலரைத்துக் கலக்கி சங்குபிரமாணம் 3-நாள் கொடுக்க ஒன்றுஞ் செய்யாது நோய் தீரும்.

1933 குழந்தைகளின் விரைவாதத்திற்கு நிவர்த்தி

விரையைப்பற்றி பக்கத்தில் உப்பிசமாய்க்கண்டதாகில், அடித்தொண்டையை கையினால்நிமட்டி நரம்புத்தடிப்பைபார்த்து கதிரை வெதுப்பிக்கொண்டு, விரைக்கு 8-விரற்கடைக்குக் கீழ்கட்டிப் பணவிடை பெருங்காயத்தை வெள்ளைப்பூண்டில் வைத்துச்சுட்டு 3-நாள் கொடுத்து விளக்கெண்ணெயில் மஞ்சள் பொடியைப்போட்டு மத்தித்துப் புண்ணிற்போட்டு பொங்கிப்புண்ணாகி ஆறும்போது விரைவீக்கம் அண்டவாயு வாதமும் தீரும்.

கரியுப்பைப் பொடித்துப் பொட்டணங்கட்டி நீராகார ஜலத்திற்றுவைத்து இரண்டு நாழிகைக்கு ஒருவிசை நேத்திரத்திற்பிழிய கண்வலி உடனே மாறும்.

1934 நேத்திரத்தில் நெருப்புப்பட்ட புண்ணிற்கு

பசுநெய்யில்இறைச்சிநீர், பனைமட்டைச்சாறு, நல்லதண்ணீர் இவைகளை ஒன்றாய்க்கலந்து காய்ச்சி விழியிற்கட்டிவர நீங்கும்.

1935 நீர் வடிதலுக்கு

தெள்ளைச்சாரணை வேர் தேனிலரைத்து விழியிற்றீட்டி வர நீங்கும்.

1936 நேத்திர வளர்த்திக்கு

ஈருள்ளி குருஞ்சாவும் ஓர் நிறையாய் சிதைத்து 3-நாள் நேத்திரத்தில் வார்க்க நிவர்த்தியாகும்.

1937 தந்தசுத்தி செய்வதற்கு

ஆலவிழுது, புலாநாயுருவி, வெள்ளெருக்கு உகா இவைகளினும் வேம்பு முதலிய குச்சிகளிலொன்றினால் பல் தேய்த்து முகங்கழுவிவர நன்று.

1938 சுளுக்கு காய்ச்சலுக்கு

திரிகடுகு, கொத்தமல்லி, பேராமுட்டி வகைக்கு கழஞ்சு 3-வீதம் இடித்து 10-படி ஜலத்தில்போட்டு கால்படியாக வற்றவைத்து 3-நாள் கொடுக்க தீரும்.

1939 விஷக்காய்ச்சலுக்கு

நெல்லிதான்றி, வேப்பன்ஈர்க்கு, சீந்திற்றண்டு,மல்லி முதிதக்காசு இவைகள் வேளை ஒன்றுக்கு $\frac{1}{4}$-பலம் வீதம் இடித்து 2-படி ஜலத்திற் போட்டு கியாழஞ்செய்து கொடுக்கத்தீரும்.

1940 குழந்தைகளின் நீர்க்கழிச்சலுக்கு

ஜாதிக்காய், ஜாப்பத்திரி,கிராம்பு, சாதிலிங்கம், ஊசிகாந்தம்,அபினி வகைக்கு ஒரு கச்சைக்காயளவு, மூன்றுநாளாட்டி செப்பிலடைத்துக் கொண்டு அனுபானங்களில் நாழி யொன்றிற்கு விராகனிடை வீதம் கொள்ளத்தீரும்.

1941 கழிச்சலுக்கு

விளாம்பிசினியைப் பொடித்து எருமைத்தயிரில் 3-நாள் கொடுக்கத்தீரும்.

1942 புளியேப்பத்திற்கு

வசம்பு சுட்டசாம்பல், வறுத்த கரியுப்பு, பெருங்காயம் இவைகளை ஓரிடையாய்பொடித்து திரிகடிப் பிரமாணம் மோரில் உட்கொள்ளத் தீரும்.

1943 உஷ்ண வாயுவுக்கு

பிரண்டை, ஓமம், கருவேப்பீர்க்கு, கரியுப்பு வகைக்கு 1-பலம் வறுத்து 3-படி எருமைமோர் விட்டு ஒருகொதி வந்தபின்னர் இறக்கி வைத்துக்கொண்டு சாப்பிட்டுவர நிவர்த்தியாகும்.

1944 அஜீரண வாயுவுக்கு

மிளகை வறுத்துப் பொடித்து திரிகடிப்பிரமாணம் தேனிற் கொள்ள சொஸ்தமாகும்.

1945 வாயுச்சூலைக்கு

திரிகடுகு, இந்துப்பு, ஓமம், இவைகள்வெதுப்பி பொடித்து திரிகடுகு பிரமாணம் உட்கொள்ள தீரும்.

1946 சகல வாயுவுக்கும் பொதுப்பிரயோகம்

சுக்கு, திப்பிலி, மிளகு, வெள்ளுள்ளி, ஓமம், வாலுளுவை அரிசி, இவைகளை ஒரு நிறையாக வெதுப்பி பனைவெல்லங் கூட்டி மெழுகு போல் அரைத்துக்கொண்டு சாப்பிட்டுவர நிவர்த்தியாகும்.

1947 இதுவுமது

மிளகு, ஓமம், வெந்தயம், சீரகம், தைவேளைவேர் இவைகளை வெதுப்பி பொடித்து தேனிற் கொள்ள சொஸ்தமாகும்.

1948 வலி குன்மத்திற்கு

அரைப்படி தேங்காய்ப்பாலில் 1-பலம் இந்துப்பும், 2-பலம் பூண்டும், சாரம் 2-கெஜ்ஜைக்காய் அளவும், பொடித்துப் போட்டுக் கள்ளிப் பால் 2 கெஜ்ஜைக்காய் அளவும், விட்டுக் காய்ச்சி நெய் வடித்து அதை ஒரு கரண்டி வீதம் கொடுக்கத் தீரும்.

1949 எரிகுன்மம் நிவர்த்தி

வெள்ளாட்டுப்பால், தேங்காய்ப்பால், வகைக்குப் படி அரிக்கால் ஒன்றாய்க் கலந்து அதில் இந்துப்பு, திப்பிலி வகைக்கு விராகனிடை 1-ம் பொடித்துப் போட்டுக் காய்ச்சி 6 பொழுது உண்ணத் தீரும்.

1950 முழங்கால் வாதத்திற்கு

வீழியிலை பிண்ணாக்குப் பூண்டு, ஆவாரையிலை, திரிபலை இவைகளில் ஒரு இடையாக இடித்து ஒருதுண்டில் முடிந்து விளக்கெண்ணெயில் வெதுப்பி ஒத்தணஞ் செய்து 6-நாட்கள் கொள்ளத் தீரும்.

1951 தொண்டைகாவத்திற்கு

மாஞ்செவிக் கள்ளியிலைச் சாற்றை 3-தடவை தடவி பின்பு வெந்நீரில் குடிக்க நீங்கும்.

1952 இடுப்புவலி கால் அசதிக்கு

வீழிச்சாறும் நல்ல எண்ணெயும் ஒரே எடையாக மத்தித்து வேளை ஒன்றுக்கு அரிக்கால்படி விகிதம் 3-நாள் கொள்ளத்தீரும்.

1953 எரிவாதத்திற்கு

இலந்தை இலையை அரைத்துக் காடியிற் கரைத்து மத்தாற் கடைந்து இதில் வரும் இலையை உடம்பில் பூச எரிச்சல் தீரும்.

1954 நரம்பு பிடிப்பிற்கு

நண்டு கொழுப்பும், விளக்கெண்ணெயும் ஓர் நிறையாகக் கலந்து காய்ச்சி நரம்பு பிடிப்பிற் பூசி வழித்துவிட தீரும்.

1955 உள்ளங்கால் குத்தலுக்கு

நல்ல அபினைக் குளிர்ந்த தண்ணீரில் அரைத்து உள்ளங்காலில் தடவிவிட தீரும்.

1956 ஈளை இருமலுக்கு

விளாவிலை, நீர்முள்ளியிலை வகைக்கு ஒரு பிடி இடித்து சாறுபிழிந்து 3-நாள் கொள்ள தீரும்.

1957 இரத்தப் பிரமியம் கல்லடைப்புக்கு

அரிக்கால் படி எலுமிச்சன் பழச்சாற்றில் ஐந்து சோகி சுட்ட சாம்பலையும் ஒரு கழஞ்சு பொரித்த வங்காரத்தையும் ஒரு பாக்களவு பசுவின் வெண்ணெயும் கலந்து இந்தப்படி 5-வேளை சாப்பிட நீங்கும்.

1958 நீர்க்கடுப்பு எரிவுக்கு

ஈருள்ளிசாறு நாழி அரைக்காலில் வங்காரம் விராகனிடை பொரித்துப் போட்டு 2-நாள் 6-வேளை சாப்பிடத்தீரும்.

1959 சதையடைப்புக்கு

முள்ளிலவு நாவல், பூலாவெட், பூலாமுத்தகாசு, நன்னாரி, முல்லை, சீந்தில், செந்தாமரை முற்றுமுட்டி, சீராசெங்கழுநீர், சிறுகீறவிராலி, வெட்டிவேர், விலாமிச்சம்வேர், பொன்னாங்கண்ணி, வகைக்கு 1-பலமும், 4-படி இளநீர் போட்டு அரைப்படி கியாழஞ் செய்து கொடுக்கத் தீரும்.

1960 நீர் அடைப்புக்கு

கற்றாழைச் சாற்றில் கடுக்காயை பொடித்துப்போட்டு கொஞ்ச நேரம் வைத்திருந்து பிழிந்து வடிகட்டின தண்ணீர் $\frac{1}{4}$ - படியில் பொரித்த வங்காரம் 1-விராகனிடையும், வெல்லம் $\frac{1}{4}$-பலம் சிதைத்துப் போட்டுக் கொடுக்க மாசி ஜலமிறங்கும்.

இதுவுமது

பசலி நீலக்கத்திரியிலை, வகைக்குப் பலம்-10 இடித்து கியாழஞ் செய்து $\frac{1}{4}$-படி விகிதம் உட்கொள்ளத்தீரும்.

இதுவுமது

ஆகண்டன் இலையை ஆவின்மோர் விட்டரைத்து ஊறவைத்துப் பிழிந்து கொடுக்கத்தீரும்.

இதுவுமது

சுறுமீன் தலையிலிருக்கிற காண்டுகல்லை யெடுத்துலர்த்தி இளவெந்நீரிலூறவைத்துக் கொடுக்க உடனே ஜலமிறங்கித் தீரும்.

1961 விக்கலுக்கு

ஒரு விளாம்பழச்சதையில் வறுத்த திப்பிலிபொடி அமுக்கரை வேர்சுட்ட கரி வகைக்கு கெஜ்ஜைக்காய்1-அளவும்,இந்துப்பு கழஞ்சு-$\frac{1}{4}$ இவைகளைப் பால்விட்டரைத்துத் தேனில்மத்தித்துச் சாப்பிடத்தீரும்.

இதுவுமது

தாமரைவிரைப்பருப்பு வெந்நீரிலரைத்துக் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

இதுவுமது

இந்துப்புதிப்பிலியும் பொடித்துத் தேனில்மத்தித்துக் கொடுக்க நீங்கும்.

1962 சண்டமாருத லேகியம்

கண்டங்கத்திரி, தூதுளை, மிளகு, தக்காளி, சங்கிரு,ஆடாதோடா, துளசியிலை, வகைக்கு கால்படி ஒன்ருய்க்கலந்து அதில் 5-பலம் கருப் புக்கட்டியை கரைத்து பாகுசெய்து திப்பிலி அரைத்து சுக்கு வகைக்கு 10-கச்சை அளவும் இடித்துச் சூரணஞ்செய்து தூவி மாகாணிபடி நெய் விட்டு பிசைந்துகொண்டு தான்றிக்காய் பிரமாணம் பத்தியமாய்க்கொ ள்ள சகலஇருமலும் நீங்கும்.

1963 மதனகாமேசுர நெய்

திரிகடுகு, சிறுநாகப்பூ, கிரும்பு பத்திரி, வால்மிளகு, சீரகம், தக் கோலம் வகைக்கு 5-கெச்சை அளவும் ஆவின்பாலில் அரைத்து முக் கால்படி நெய்யில் வேகவைத்து நெய்யைவடித்து ஒருகரண்டி சாப்பிட்டு வர புளியைநீக்கி பாலும்அன்னமும் பருக இந்திரியம் ஸ்கலிதமாகாது.

1964 தம்பன வெண்ணை

சிவந்த பசுவின்பால் படிஒன்றில் 60-வெள்ளெருக்கன் பூவைப் போட்டுக்காய்ச்சி பூ குழைந்தபின்னர் எரித்துப்போட்டு நன்ருய்க் காய்ச்சிப் புரைகுற்றியபின்பு கடைந்தவெண்ணை, பச்சைப்புனுகு கோரோசனை, இவைகளை ஒரேநிரையாகஎடுத்து மத்தித்து லிங்கத்திற் பூசிவர புண்ணுறும்.

1965 இஞ்சி ஷர்பத்து

ஒரு $\frac{1}{4}$-ரூபாயெடையில் இஞ்சியை துண்டுதுண்டாய் நறுக்கி மும் மாகாணிப்படி சுடுதண்ணீரில் 4-மணிநேரம் ஊரவைத்து வடிகட்டி 75-ரூபாயெடை சர்க்கரையைக்கரைத்து பாகுசெய்து சீசாவில்அடைத்துக் கொண்டு சாப்பிட்டுவரவும்.

1966 காடி ஷர்பத்து

ஒரு சீசா காடியை பீங்கானில்விட்டு 64-ரூபாயெடை சர்க்கரையைப்போட்டு காய்ச்சி பாகுபதத்திற் சீசாவில் அடைத்துக்கொண்டு சாப்பிடவும்.

இதுவுமது

மேற்படி ஷர்ப்பத்துகள் நாள்படவிருந்தால் புளித்துக் குணத்தில் வேறுபட்டு போகுமாதலால் தேவையானல் அப்போதைக்கப்போது செய்து உபயோகிக்கவேண்டும்.

1967 நீரடைப்பு எண்ணே

விளக்கெண்ணே படிபாலில் ஈருள்ளிபலம் ஒன்றும் சிதைத்துப் போட்டு பொன்னிறமாகக் காய்ச்சி வடித்து பொரித்தவெங்காரம் கடுகமரத்தூள் வகைக்கு கழஞ்சு 1-ம்போட்டு கலக்கிக்கொடுக்க மூன்மாமிசம் நீரடைப்பு கல்லடைப்பு தீரும்.

1968 கரியுப்பு செந்தூரம்

கரியுப்பை எருக்கம்பால் திருகுகள்ளிப்பால் தும்பை கரிதும்பை மருதம்பட்டை குமரி எலுமிச்சம்பழம் பொடுதலே இவைகளின் சாற்றில் வகைக்கு இரண்டுபுடம்போட செந்தூரமாகும். அதை 3-பணவிடை தேனிற்கொடுக்க குன்மம் உதரரோகம் கூடிய குலேவீக்கம் வாயுவு கிராணி முதலியது தீரும்.

1969 சங்குதிராவகம்

அஞ்சாங்காய்ச்சல் வெடியுப்பு பலம்-9, இனம் இந்துப்பு வகைக்கு பலம்-2ம், காரம், பூனீர் வகைக்குப்பலம் 1-ம் பொரிகாரம் பலம் $\frac{1}{2}$-ம் இவைகளேப் பொடித்து மூன்றுபங்குசெய்து முன்போல் திராவகம் வடித்து அனுபானங்களிலிட மேற்படி வியாதிகள் தீரும்.

1970 குருந்தோட்டித் தைலம்

குருந்தொட்டிவேர் துலாம்-$\frac{1}{4}$, இடித்து கியாழம்செய்து அதில் சுக்கு, மிளகு, ஏலம் வகைக்குப் பலம்-1-ம்,அரைத்துப்போட்டுகாய்ச்சி வடிகட்டி முழுகிவர வாதம் 80-ம் தீரும்.

1971 கோடிவேலி எண்ணே

கால்படி நல்லெண்ணேயில் வில்கொடி, வேலிவேர்ப்பட்டை, பாலமறைக்கருப்புக்கட்டி பலம் $\frac{1}{4}$-ம் அரைத்துப்போட்டு மெழுகுபதத்தில் காய்ச்சி குருகுடன் வேளேஒன்றுக்கு ஒருகரண்டிவீதம் பத்தியமாய் 5-பொழுது சாப்பிட்டு நான்குதாம் ஸ்நானம்செய்து உப்பை வறுத்து கூட்ட அரையாப்புத்தீரும்.

1972 ரசகர்ப்பூரக்கட்டு

நாலுவிராகனிடை ரசகர்ப்பூரத்துக்கு முலைப்பால் நண்டையிடித்துச் சாறுபிழிந்து, முசுமுசுக்குச்சாறு இவைகளை வகைக்கு 2-சாமம் சுருக்குக் கொடுக்க கட்டும்.

1973 சிரங்கிற்கு

சங்கங்குப்பச்சாற்றிற் கொடுக்க கிரந்தி, அரையாப்பு, பவுத்திரத்திற்கும் சிறுசெருப்படைச் சாற்றிற்கொடுக்க சிரங்கு சொரி தீரும்.

1974 லிங்க செந்தூரம்

ஒருபல லிங்கத்தை அயச்சட்டியிலிட்டு அதற்குக் கீழும் மேலும் ஒருபலம் கெந்தியைப் பொடித்துப்போட்டு காற்படி கழுதைப்பாலைச் சிறுகசிறுக மெழுகுபோல் உருவும்படி விட்டுக்கொண்டு 4-சாமம் எரித்தெடுத்து கழுவிப்பொடித்து பணவிடை இஞ்சிச்சாற்றிலும் திரிகடுகு சூரணத்திலும் கொடுவேலி கஷாயத்திலும் கொடுக்க சன்னி, சூலை, வாதம் 80-ம் வாயுந்தீரும்.

இதுவுமது

கெந்தகமும், சீனிக்காரமும் ஓர் நிறையாய் பொடித்துக் கலசத்திலிட்டு சிறுகின்னிச்சாறுவிட்டு பிசறி ரவியிலுலர்த்தி மேலோடு மூடி முன்ரொரு விற்புடம்போட்டு நீறும் அனுபானங்களிலிட மேற்படி வியாதிகள் தீரும்.

1975 முத்து பஸ்பம்

முத்தைச் சங்கம்பழச்சாற்றி லிரண்டுநாள் ஊரவைத்து முள்ளிப் பழச்சாற்ருல் மெழுகுபோலரைத்து பில்லைசெய்து காயவைத்து ஓட்டிலிட்டு சீலைசெய்து முப்பது எருவிற் புடம்போட்டு தங்கபறற்பத்துடன் சாப்பிட தாதுகட்டும் மேகவியாதியும் தீரும்.

1976 அயபற்ப செந்தூரம்

கல்நார் துண்டுகளாய்வெட்டி ஓட்டில்வைத்து அதற்கு கீழ்மேலும் எருக்கம்வேரை யிடித்த தூளைப்போட்டு மூடி கெஜபுடம்போட்டு அனுபானத்திலிட மேற்படி வியாதிகள் தீரும்.

1977 வேடியுப்பு திராவகம்

வெடியுப்பு பலம்-20, சீனம் பலம்-19, இவைகளைப் பொடித்து எட்டுபலம் கடலை புளிப்பிற்கலந்து திராவகம் வடித்து தண்ணீரில் 5-துளிவிட்டு நீடித்த சுரத்தினல் பலயீனமுடையவர்களுக்கு கொடுத்தால் பலமுண்டாகும். காச்சல்கட்டியும் கரையும்.

1978 குடிநீர்

தேங்காய்பூவும் முடக்கொத்தான்இலையும் ஒரு நிறையாய் பிட்டவித்து ஆழாக்கு சாறுபிழிந்து வடிகட்டி உட்கொள்ள விரோசனமாகும். ஒருபடி முடக்கொத்தான்இலையை அவித்து பிழிந்து ஜலத்திற் கொஞ்சம் பழம்புளியும், கடுகும், சீரகமும், மிளகும்சேர்த்து ரசம் செய்து ஆழாக்குபடியில் அரைபடி சிற்றுமணக்கெண்ணெய் விட்டு மத்தித்து சாப்பிட விரோசனமாகும். குளித்து அசனஞ் செய்யவும்.

இதுவுமது

சிறுசெருப்படையையும், ஈருள்ளியையும் இடித்துச் சாறுபிழிந்து 6-விசை வடிகட்டி சாப்பிட பேதியாகும். இதனுல் மேகசிரங்கு யாவும் தீரும்.

இதுவுமது

சிறுசெருப்படையையும், ஈருள்ளியையும் இடித்துச் சாறுபிழிந்து 6-தரம் வடிகட்டி சாப்பிட பேதியாகும் முன் சொன்னவைகளேதீரும்.

1979 சூரணம்

கரிவேப்பலையும், நிலாவரையிலையும் ஓர் நிறையாய் பொடித்து துத்திரிசடி தேனில் மத்தித்து அசனத்தின்மீது சாப்பிட்டுவர வாயுவும் மலக்கட்டும் தீரும்.

1980 கிருமி விரோசனம்

கிருமிகள் பந்துபந்தாய் விழும் மாதுளேவேர் கஷாயத்தில் கிருமிகள் விழும்.

இதுவுமது

வழுமிளகு மிதிபாகயிலையும் அரைத்து ஒருகொட்டைப்பாக்கு பிரமாணம் கொடுக்க பொடிகிருமிகள் கட்டோடு விழும்.

இதுவுமது

சரக்கொன்றை கொழுந்தை அவித்துப் பிழிந்து தண்ணீரில் சீனி கலந்து அரைக்காற்படி சாப்பிட கிருமிகள் விழும்.

இதுவுமது

ஒரு விராகனிடை பேய்ப்பீர்க்கம் விதைப் பருப்பை யரைத்து வெந்நீரில் கலக்கி விரோசிக்க கிருமிகள் நீங்கும்.

1981 இதற்கு எண்ணெய்

ஈருள்ளி, கண்டங்கொழுந்து, கடுக்காய்த்தோல் இவைகளேச் சிதைத்து விளக்கெண்ணெயில் போட்டெரித்து சிறு குழந்தைகளுக்கு ஒரு சங்கு கொடுக்க விரோசனமாகி கிருமிகள் விழும்.

2.93
13-63

1982 நாபி ரோசனம்

வெள்ளைக் குங்கிலியத்தை கழிக்குள் வைத்து ஒரு புட்பச் செண் டெடுத் துலர்த்திப் பொடித்து அனலிலிட்டு புகையில் அலரிப்பூ செண் டிற் பிடித்து முகர்ந்துபார்க்க பேதியாகும்.

1983 மாத்திரை

சுத்திசெய்த தாளகம், திரிகடுகு, திரிபலை, சிவிதை, வகைக்கு விராகனிடை-3, நேர்வாளம் விராகனிடை-9, இரசம், கெந்தகம் வகைக்கு விராகனிடை-1, இஞ்சிசாற்றில் ஒருநாள் ஆட்டி குன்றுபோல் உண்டை செய்து இஞ்சி சாற்றிலாவது, வெல்லத்திலாவது, கொடுக்க விரோசனமாகும்.

1984 மிதிபாகல் தைலம்

மிதிபாகல், கருநொச்சி, துளசி, நொச்சி இவைகளி னிலைச்சாறு 7-க்கும் குகப்பழுப்புச்சாறும் ஆதண்டம் பழுப்புச்சாறு வகைக்குப் படி $\frac{1}{4}$-ம், நல்லெண்ணெய் படி கலந்து அதில் திரிசாதம், கருஞ்சீரகம், நல்லசீரகம், மிளகு, அபின், சுக்கு, அதிமதுரம், அதிவிடயம், ஜன்னி நாயகம் வகைக்கு கெஜ்ஜைக்காய் 1-ம் தேவதாரம் கழிஞ்சி 1-ம் இவைகளை அரைத்து போட்டுக் காய்ச்சி வடித்து முழுகிவர தலையிடி பீனிசம் வாயுவு கபாலவாயுவும் தீரும்.

1985 பல ரோகநிவாரணம்

சிரசுபுழுவெட்டு முதலானவைகளினால் மயிர் உதிர்ந்தால் யானைத்தந்தத்தைச் சுட்டு பொடித்துத் தேனில் மத்தித்து எட்டுநாள் பூசி வைத்தால் புழுவெட்டு நீங்கி மயிர் முளைக்கும்.

1986 காது வளர

நிலப்பனங்கிழங்கு, அமுக்கனாங்கிழங்கு, ஆனைத்திப்பிலி, செங்கழுநீர்க் கிழங்கு இவைகளை ஒரு நிரையில் எருமை வெண்ணெயில் களிம்புபோலாக அரைத்து காசி தடவிவர காது நன்றாக வளரும்.

1987 மயிர் வளர்வதற்கு

மயிரைக் கருக்கி எருமைவெண்ணெயிற் குழைத்துப் போட்டாலும் பசலிஇலை அரைத்து எருமைவெண்ணெயில் குழைத்துப் போட்டாலும் மஞ்சளைச் சுட்டு நல்லெண்ணெயில் அரைத்துப் போட்டாலும் நீங்கும்.

1988 நெருப்புப் புண்ணுக்கு

வேப்பன்கொழுந்தைச் சிதைத்து ஆமணக்குஇலையிற் பொதித்து உமிக்காந்தலிற் புதைத்து வெந்த பதத்திலெடுத்து கட்டிவர தீ சுட்ட புண் நீங்கும்.

1989 பித்த வேடிப்புக்கு

...ாசுவின்பால்விட்டு இடித்து பிழிந்தசாறு ¼-படி
...லையில் கொடுத்து பத்தியம் பாலும் அன்னமுங்
...தலைக்கு தண்ணீர் வார்க்கத் தீரும்.

1990 கன்ன வீக்கத்திற்கு

...யும், வசம்பு, அரிசியும், ஒரு நிறையாக அரைத்து

இதுவுமது

...ரும், அரிசியும், ஒரு நிறையாக அரைத்து பூசவும்

...ு பிடித்தவர்களுக்கு ஸ்நானம் செய்யும் விதி

...தும்பைப்பூ, புழுங்கலரிசி முதலியவைகளில் ஒரு
...கரண்டி நிறைந்த நல்லெண்ணெயிலிட்டுக் காய்ச்சி
...யும்.

இதுவுமது

...வுடன், சாம்பிராணி தூபம் பிடித்தல் அவசியம்.

...992 வியாதியஸ்தர்கள் ஸ்நானம்

...கள் அவரவர்கள் வியாதிக்கு ஏற்றவாறு தைலங்
...ப்தல் வேண்டும்.

1993 மிளகு ஸ்நான தைலம்

...ணிசாறு படி சேகரித்து இதில் 5-பலம் மிளகை விட்டு
...டு பிறகு எடுத்து ரவியில் உலர்த்தி திரும்ப ஊர
...மாதிரி சாறுயாவும் வற்ற வேண்டும். பிறகு ஷெ
...ணய் 10-பலம் காய்ச்சும்போது போட்டு எடுத்து
...த எண்ணெயை பதனம்செய்து வைத்துக்கொள்ள
...போகம் உதவாது.

...94 பொன்னுங்கண்ணித் தைலம்

...படி மாதிரியே செய்தல் வேண்டும்.

1995 மிளகு சூரணம்

...ணெயில்போட்டு காய்ச்சின மிளகுகளை துணித்து
...ு சாதத்தில் மேற்படி பொடிபோட்டு செய்யுடன்
...வெகு நன்று.

பீதாம்பர ஐயர் ஜாலம்-2000

1996 சீதபேதி கட்டவைக்கும் லேகியம்

வெள்ளைவெங்காயம் பலம்-10 உரித்தும், 5-பலம் பனங்கற்கண்டும் பசுநெய் 10-பலமும், திராக்ஷை 5-பலமும், சாதிக்காய் 2-பலமும், லவங்கம் 1-பலமுமாகசேர்த்து லேகியம்கிண்டி 4-5தரம் உட்கொள்ள தீரும்.

1997 நாக்கு அச்சரத்திற்கு

சீமை வாதுமைப்பருப்பு பலம் 5-ம், கெசகெசா பலம் 5-ம், முந்திரிப்பருப்பு பலம் 2-ம் கற்கண்டு பலம் 2-மாக எடுத்து தனித்தனியே அரைத்து $\frac{1}{2}$-படியை $\frac{1}{4}$-படி பாலை வற்றவைத்துஅதில் கலக்கி உட்கொள்ள உடனே நீங்கும்.

இதுவுமது

தேங்காய் 2-உடைத்து திருகலால் திருகி எடுத்து மேற்படி மாதிரி செய்து 2-தரம் உட்கொள்ள எந்தகாலத்திலும்வராது மேற்படி வியாதி நீங்கிவிடும்.

1998 மார் அடைப்புக்கு

ஒருவர் மார்புநோயால் வருந்துகையில் மான் கொம்பும், செம்மரமும் உறைத்து சந்தனபதமாக 1-பலம் உட்கொண்டு 1-பலம் நோயுள்ளவிடத்தில் பத்துபோட நிவர்த்தியாகும்.

1999 சதா தாகசாந்தியை நிவர்த்திப்பதற்கு

சீந்தல்கொடியைக் கொண்டு கியாழம் செய்து பருக நிவர்த்தியாகும்.

2000 சிரசு நோயிற்கு

காகிதம் கொளுத்திய தைலம் தடவ நிவர்த்தியாகும்.

வாழ்த்து

எண்சீர் விருத்தம்

ஐந்துகரன் ஆறுமுகன் அந்தி வண்ணன்
அம்பிகையிவ் வனைவருமே வாழி தெய்வ
சிந்தூரமும் வள்ளியுஞ்செவ் வேலுந் தோகச்
சிகியுங்கோ ழிக்கொடியும் வாழி வாழி
நந்துகரன் போற்றியருள் பெற்ற கச்சி
நகரனும் ஆறுமுகன் எனும் நான் செய்த
தந்திரமார் பீதாம்ப ரையர் ஜாலம்
தாரணியில் எந்நாளும் வாழி வாழி.

முற்றிற்று.

75862